"

A collection of reflections, comments and conversations posted on Facebook from January to June 2026.

On politics and society, economy and education, literature and history, Gandhi and Marx, pensioners' rights and people's struggles.

These posts are not just opinions, but a record of our times and a journey of questioning and learning.

– R. Pattabiraman



ISBN 978-81-987654-0-6
9 788198 765406

FB Posts of PATTABI • Jan-Jun 2026 R. Pattabiraman

FB Posts of PATTABI

Jan-Jun 2026



R. Pattabiraman

JAN 2026

jan 1 2026

Matang Gomke- பெருந்தலைவர் ஜெய்பால் சிங் முண்டா

'ஜார்கண்டின் தந்தை' என கொண்டாடப்படும் ஜெய்பால் சிங், ஆதிவாசி பின்னணியில் பிறந்து வளர்ந்த பெரும் அறிவுஜீவி போராளி. இந்தியாவின் ஹாக்கி முன்னோடி. அரசமைப்பு உருவாக்கத்தில் குறிப்பிடத்தகுந்த பங்குபணியாற்றியவர். பீகார், ஜார்கண்ட் நீங்கலான பகுதிக்கு அறிமுகம் என்கிற அளவில் கூட எடுத்துச் செல்லப்படாத பெயர் ஜெய்பால் சிங்.

அன்று ஒன்றுபட்ட பீகாரின் பகுதியாக, இன்று ஜார்கண்ட் மாநிலத்தின் பகுதியான குத்ரா என்கிற இடத்தில் ஜனவரி 3, 1903ல் பிறந்தவர் பிரமோத் பஹான். சிறுவனாக கால்நடை மேய்ப்பது வாய்த்தது. ராஞ்சி தூய பால் பள்ளி முதல்வர் காஸ்கிரேவ் கண்ணில் பட்ட பஹான் வாழ்க்கை மாறுதலைப் பார்த்தது. தன்னுடன் செயிண்ட் அகஸ்டின் கல்லூரியில் போதகர் பயிற்சிக்கு, பிரமோத்தை அவரது 15 வயதில் காஸ்கிராவ் அழைத்துச் சென்றார். இங்கிலாந்து வாழ்க்கை அவரை ஆக்ஸ்போர்ட் கல்வியை பெறவைத்தது. போதகராக சென்றவரை PPE- Politics Philosophy Economics படிக்க வைத்தது.

உரைவீச்சால் பிரமோத் என அறியப்பட்டவர், புதிய ஜெய்பால் சிங்காக கல்லூரி வளாகத்தில் பேசும் பொருளானார். தோலின் நிறம்பாராது, ஆக்ஸ்போர்ட் இந்திய மஜ்லி பிரிவின் தலைவரானார்.

ஹாக்கி வீரர் என்கிற விளையாட்டு ஆர்வம் ஒருபுறம், அய்சிஎஸ் கனவு தேர்ச்சி என்கிற மற்றொரு வாழ்க்கை தொழில்..எதில் என்கிற மனப்போராட்டம் ஜெய்பாலுக்கு ஏற்பட்டது. மனசு ஹாக்கி விளையாடு கோப்பையை தட்டு என்றது. 1928 ஆம்ஸ்டர்டாம் ஹாக்கியில் இந்தியா ஜெய்பால் தலைமையில் 'கோல்ட்' பெற்றது.

வாழ்க்கை பல அபூர்வங்களை சில நேரம் கொடுத்து கண்சிமிட்டும். காங்கிரஸ் தலைவர் W C பானர்ஜியை அறிவோம். அவரது பேத்தியான தாராவை ஜெய்பால் 1931ல் மணமுடித்தார். பின்னர் வாழ்க்கையில்

இலங்கை தமிழ் பெண் ஜகனாரா ஜெயரத்னத்தை மணந்தார். பர்மா ஷெல் அதிகாரியாக இருந்தவர் ஜெய்பால்சிங். கானா நாட்டில் பேராசிரியப் பணி செய்தவர்.

ஜெயபாலின் திறமையைப் பார்த்த பிகானீர் சமஸ்தானம் அவரை வருவாய் உயர் அதிகாரியாக்கியது. சொந்த ஆதிவாசி மக்களின் துயர்களை கண்ட ஜெய்பால் , இனி வாழ்க்கை அவர்களுக்காக என முடிவெடுத்தார். 1939ல் ஆதிவாசி மகாசபாஎன அவர்களை திரட்டி, அவர்களின் உரிமைக்காக போராட ஆரம்பித்தார். Tribal State என்கிற முழக்கமும்- தனித்த மாநிலம் கோரிக்கையும் உருவானது. 2000 ஆம் ஆண்டில்தான் ஜார்கண்ட் என்கிற அவரது கனவு பலித்தது.

இந்திய அரசியல் அசெம்பிளியில் பீகாரிலிருந்து 1946ல் ஜெய்பால் சிங்கும் நுழைந்தார். அரசமைப்பு அவையில் அவர் ஆற்றிய உரைகள் மிக அற்புதமானவை. இந்தியர் அனைவராலும் இன்றும் உற்று நோக்கப்பட வேண்டிய உரைகள். ஆதிவாசி மக்கள் அவரை தங்கள் மொழியில் ‘மராங் கோம்கே’- சந்தாலி மொழியில் பெருந்தலைவர் எனக் கொண்டாடினர். ஏன் இந்தியா அவரை எடுத்து கொண்டாடவில்லை எனத் தெரியவில்லை.

ஜெய்பால் சுயசரிதையும் எழுதியுள்ளார். அவர் குறித்த சரிதைகள் வந்துள்ளன. அவரது சிறந்த உரைகளும் தொகுக்கப்பட்டுள்ளன. ஆனால் ஆதிவாசிகளின் முன்னோடி அறிவுஜீவியை, நாடு ஏன் பரவலாக எடுத்துச் செல்ல தவறியது என அறியமுடியவில்லை. நமது பாரபட்சங்களுக்கு அளவே இல்லையா என்கிற வருத்தம் மேலிடுகிறது. பெரியார் கூட இந்தி மொழிபெயர்ப்பு வழியாக பீகாருக்கும் , உபிக்கும் செல்ல முடிந்தது.

ஜெய்பாலின் அரசமைப்பு உரைகள் புகழ் வாய்ந்தன. அவற்றை நாம் முழுமையாக படித்து உணர்தல் நலம். நேருவின் நோக்கத்தீர்மானம் மீது- objective resolution- ஜெய்பால் ஆற்றிய உரை பேசப்படக்கூடிய ஒன்று.

ஆதிவாசி என அழைப்பதில்தான் அவர் பெருமையை உணர்ந்தார். செட்யூல்ட் டிரைப் என்பது கூட அவருக்கு தயக்கமாக இருந்தது. தங்களை காட்டுவாசி எனச் சொல்வது குறித்து அவர் பேசியுள்ளார். 6000 ஆண்டுகள் வாழ்க்கை என்கிற பாரம்பரியம் கொண்ட எங்களுக்கு வாழ்வியல் குறித்தோ, ஜனநாயகம் குறித்தோ எவரும் சொல்லவேண்டியதில்லை- ஆனால் எங்களை தொடர்ந்து

சுரண்டாதீர்கள் என்ற குரலை அவர் எதிரொலித்தார். சிந்துவெளியின் உண்மையான வாரிசு நாங்களே என அவர் உரக்க உரிமைகோரினார்.

ஒரிஸ்ஸா இன்னும் பிற பகுதிகளில் சுரங்கத்தொழிலாளர்களை திரட்டி, தொழிற்சங்க தலைவராக டாட்டாவை எதிர்க்க அவரால் முடிந்தது.

1969ல் லண்டன் செல்லும்போது, memoirs- நினைவு குறிப்புகளை ஜெய்பால் எழுதினார். 1970 மார்ச் 20ல் அவர் மறைந்தார். அக்குறிப்புகள் பல ஆண்டுகள் இத்தாலி பேராசிரியர் என்ரிகோ பசனாவிடமே பத்திரமாக இருந்தது. மறைந்த Father Stanswamy முயற்சியால் பழங்குடி ஆய்வு மய்யம் அதை 'லோ பிர் செண்ட் ரா' என வெளியிட்டனர். எரியும் காட்டின் வேட்டைக்காரன் என இதற்கு பொருளாம்.

அரசமைப்பு பாதுகாப்பாக இட ஒதுக்கீடு மட்டுமின்றி, பழங்குடியினரின் நிலம், கலாச்சாரம் பாதுகாக்கப்பட தனித்த செட்யூல்களாக 5th and 6th Schedules உருவாக பெரும் பங்களிப்பை செய்தவர் ஜெய்பால் சிங். அரசியலமைப்பு அவையில் எங்களிடமிருந்து ஒரு பெண் கூட உங்கள் எவருக்கும் கொணரவேண்டும் எனத் தோன்றவில்லையா என்கிற மனசாட்சியை உலுக்கும் குரலை வெளிப்படுத்தினார். அவர் ஆதிவாசிகளுக்கான வாராந்தரி ஒன்றையும் கொணர்ந்தார்.

நேருவின் மீதும், அவையின் தலைவராக இருந்த பிரசாத் மீதும் தன் உரையில் நம்பிக்கை கொண்டிருப்பதை சொன்னாலும், ஆதிவாசிகளின் நலன் என்பதில் அவர் உறுதியாக பேசியிருப்பதைக் காணமுடிகிறது. காந்தி மீது மரியாதை இருந்தது. ஆனாலும் வேறுபடும் இடங்களை அவர் சுட்டலானார். காந்தியால் நம் எல்லோருக்கும் சுதந்திரத்தை பெற்றுத்தரமுடியும். ஆனால் எங்கள் அடையாளத்தை நாங்கள் தானே பெறவேண்டும் என்கிற உணர்வு ஜெய்பாலிடம் இருந்தது. மது தங்களின் குலப்பழக்கம் என அவர், மது விலக்கு எனப் பேசும்போது எதிர்த்தவர்.

அதேபோல் தீண்டாமை குறித்து சொல்லும்போது, ஜெய்பால் நாங்கள் தீண்டப்படாதவர்கள் அல்லர், நிலச் சொந்தமே எங்கள் பிரச்சனை- SC க்கள் பிரச்சனையிலிருந்து மாறுபடும் ஒன்றை சுட்டிக்காட்டினார். அம்பேத்கர் ST என்றபோது, ஆதிவாசி என்ற பெயரே வேண்டும் என ஜெய்பால் போராடிப் பார்த்தார். இந்தியனா ஆதிவாசியா என்றால் ஆதிவாசி பெயருக்கே நிற்பேன் என்றார். பழங்குடி மக்கள் மற்ற எல்லோருக்கும் முன்னர் கொடியை கண்டவர்கள். இந்தியர்

அனைவருக்குமான தேசியக்கொடி என்பதை நாங்கள் ஏற்றுவிட்டால், உதிரம் சிந்தி உயர்த்திப்பிடிக்க ஆதிவாசிகள் தயங்கோம் என்கிற உறுதியையும் அவரிடம் காணமுடிகிறது.

விடுதலைக்குப் பின்னர் 1950ல் ஜார்கண்ட் கட்சி என்றே அவர் கட்சி தொடங்கினார். அங்கும் வெளியாரை வெளியேற்றுவோம் முழக்கம் வந்தது. ஆனால் அவரால் தொடர்ந்து கட்சியை நடத்த முடியாமல், காங்கிரசுடன் இணைத்தார். விமர்சனத்திற்கு உள்ளானார்.

ஜார்கண்ட் மாநிலம் உருவான பின்னர், அம்மாநிலத்தின் தந்தையாக ஜெய்பால் சிங் உயர்த்தப்பட்டார். அவர் பெயரில் நலத்திட்டங்கள் உருவாயின.

நாகா தலைவர்கள் தனிநாடு எனக் கேட்டு காந்தியை ஜூலை 1947ல் சந்தித்தபோது, ஜெய்பால் சிங் அங்கிருந்தார். காந்தி நாகா தலைவர்களுக்கு அறிவுரை கூறினார். தனித்து ஜெய்பால் சிங்கும் இந்தியாவில் இருந்து உரிமைப் போரை நடத்துவோம் எனச் சொன்ன செய்தியையும் காண்கிறோம்.

இந்திய விடுதலை காலத்திலும் பின்னரும் ஆதிவாசிகளுக்கான தனித்த குரலாக ஜெய்பால் சிங் விளங்கினார். அவரின் புகழ்மிக்க வாசகம்

You cannot teach democracy to tribal people, you have to learn democratic ways from them

Most of you are here intruders. It is you who have driven my people away from the fertile Indus Valley into jungle fastness. And yet you have the audacity to talk to us about ‘safeguards’ ‘protection’ as if you are giving us a gift.

ஆதிவாசிகளுக்கு ‘to reclaim their land’ என்பதற்கான அடையாளமாக அவர் வாழ்ந்து சென்றார் என புரிந்துகொள்ளலாம்..

1-1-2026

jan 7

The Tamil Nadu Pension Rules

தமிழ்நாட்டில் அரசு பென்சன் விதிகள் The Tamil Nadu Pension Rules 1978 என்பதாகும். ஜனவரி 1, 1979 முதல் அதன் அமுலாக்கம் தொடங்கியது. 2003ல் பங்களிப்பு ஓய்வூதியமுறை வந்ததால், தொடர்ந்து ஊழியர்கள் போராடி வந்தனர். தற்போது தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களின் ஏற்பில் புதிய TAPS என்கிற Tamil Nadu Assured Pension Scheme என்பது அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான தமிழ்நாடு அமைச்சரவை ஒப்புதலும் ஜனவரி 6 அன்று கொடுக்கப்பட்டுள்ளது.

சங்கங்கள் பொதுவாக வரவேற்று தங்கள் மகிழ்ச்சியை, நன்றிதனை முதலமைச்சரை நேரில் பார்த்து சொல்லியுள்ளனர். அரசாங்கம், குறிப்பிட்ட நிதி மற்றும் நிலவும் பொதுச்சூழலில் இணக்கத்தை கொணர விரும்பியது வரவேற்கத்தகுந்தது. வருகிற தேர்தல் என்கிற அரசியல் சூழலையும் சங்கங்கள் சாதகமாக்கிக்கொள்ள முயலாமல் இல்லை.

இந்த பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் தொடர்பான செய்தி வெளியீடு எண் 15, கடந்த ஜனவரி 3, 2026ல் பொதுவெளியில் வைக்கப்பட்டுள்ளது. ‘பழைய ஓய்வூதியத்தின் பலன்களை வழங்கக்கூடிய புதிய திட்டம்’ எனச் சொல்லியுள்ளனர். அச்செய்திக் குறிப்பு அரசின் பல்வேறு நலத்திட்டங்களை பட்டியலிட்டுள்ளது.

ஓய்வூதியம் குறித்து பரிந்துரைகளை வழங்கிட அரசு கூடுதல் தலைமைச் செயலர் திரு ககன்தீப்சிங் பேடி அவர்கள் தலைமையில் குழு அமைத்து அதன் அறிக்கையையும் அரசாங்கம் பெற்றுள்ளது. பேடி குழுவும் , சுமார் 200 சங்கங்களுடன் , ஓய்வூதியம் நிர்வகிக்கும் எல் அய் சி போன்ற நிருவனங்களிடமும் கருத்துக்கேட்பு கூட்டங்களையும் நடத்தினர். 2025 டிசம்பர் 30 அன்று தனது இறுதிசெய்யப்பட்ட அறிக்கையை முதல்வரிடம் கமிட்டி கொடுத்தது.

பிப் 2025ல் அமைக்கப்பட்ட பேடி குழு பெரும் பணியை செய்ய வேண்டியிருந்தது. 10 லட்சம் ஓய்வூதியர் (குடும்ப ஓய்வூதியர் உட்பட) தொடர்பான ஆவணங்களை சரிபார்க்கவேண்டியிருந்தது. ஜனவரி 6 வேலைநிறுத்தம் என்கிற சங்கங்களின் அழைப்பையொட்டி, பேச்சுவார்த்தை நடந்து, செய்திகுறிப்பு வெளியானது.

மார்ச் 2025 காலப்படி அரசாங்க பென்சன் என்கிற Defined benefit- OPS பெறும் ஓய்வூதியர்கள் 6,94,174 . இன்னும் இத்திட்டப்படி ஓய்வு

பெறக்கூடியவர்கள் 1,98331. இவர்கள் அனைவரும் 1-4-2003க்கு முன்னர் பணியில் சேர்ந்தவர்கள். மார்ச் 2025ல் அந்த ஆண்டில் மட்டுமான ஓய்வூதிய செலவு 7591 கோடி. குடும்ப ஓய்வூதியம் 287.22 கோடி. அரசு பென்சனுக்கு ஒதுக்கிய நிதி 46214 கோடி. 2021ல் இது 27115 கோடியாக இருந்தது.

அரசாங்க ஓய்வூதியம் பெற தகுதி ஆண்டுகள் 10 வருடங்கள். முழு ஓய்வூதியமான 50 சதம் பெற 30 ஆண்டுகள் சேவை போடவேண்டும் என்கிற நிபந்தனை இன்னும் இருக்கிறது. 30 ஆண்டுகளுக்கு குறைந்தால் அதற்கேற்ப பென்சனும் குறையும். அக் 2017 முதல் குறைந்தபட்ச பென்சன் ரூ 7850. (பி எஸ் என் எல்லில் 2007 முதல் ரூ 3850.) . 81-101 வயது வந்தோர் ஒரு லட்சத்திற்கு மேற்பட்டோர் கூடுதல் பென்சன் 20-100 சதம் எனப் பெறுகிறார்கள். குடும்ப ஓய்வூதியம் 30 சதம் கணக்கீடு என்பது இருக்கிறது. கம்யூடேஷன் 40 சதமில்லை- 33 1/3 தான். Treasuries ல் pension wing செயல்படுகிறது.

1-4-2003க்குப் பின் வந்தவர்க்கு அரசாங்க ஓய்வூதியம் இல்லை. கருவூலத்திலிருந்து என்பது இல்லை. இவர்களின் சம்பளம் கிராக்கிப்படியில் 10 சதம் பிடிக்கப்பட்டு, அரசாங்கம் அதே அளவு போட்டு ஓய்வூதிய நிதி எல் அய் சியில் முதலீடு செய்யப்பட்டு வருகிறது. இதற்கு பங்களிப்பு ஓய்வூதியதிட்டம் எனப் பெயர். இத்திட்டத்தில் 6,24, 140 பணியாளர் உள்ளனர். இவர்களுக்காக சேர்ந்த நிதி மார்ச் 2025 படி 84507 கோடி. இது LIC யில் முதலீடாக்கப்பட்டுள்ளது. ஓய்வூக்கால பலன்கள் இந்த நிதியத்திலிருந்தே இப்பணியாளர் பெறமுடியும். இதுவரை 45625 பேர் ஓய்வுபெற்றுள்ளனர். இவர்களுக்கான settlement 4381 கோடி என மாநில அரசு சொல்கிறது.

‘இந்த திட்டத்தை மாற்று ஓபிஎஸ் திட்டத்தை கொண்டுவா’ என்றுதான் தொழிலாளர் போராடி, ஜனவரி3, 2026 TAPS என்கிற திட்ட அறிவிப்பை தோழர்கள் பெற்றுள்ளனர். இதற்கான கமிட்டி அறிக்கை பொதுவெளியில் இருக்கிறதா எனத் தெரியவில்லை. பேடி குழு முழு அறிக்கையையும் பார்த்தால் புதிய திட்டத்தை சரியாக புரிந்துகொள்ள முடியும். அரசாங்க GO வந்தால்தான் சரியாக சொல்லமுடியும்.

செய்திவெளியீட்டில் 50 சதம் பென்சன், கிராக்கிப்படி, குடும்ப ஓய்வூதியம் என்றால் 60 சதம் எனச் சொல்லியுள்ளனர். ஊழியர் பங்களிப்பை செய்யவேண்டும். அரசாங்க பங்களிப்பு தேவைப்படும் முழு கூடுதல் நிதியும் எனச் சொல்லியுள்ளனர். இந்த assured pension scheme 2027ல் அமுலாகும் என்றால் உடனடியாக செலவு 13000கோடி

கூடுதல் என்றும், தொடர்ந்து ஆண்டுக்கு 11000 கோடி தேவை என்றும் செலவு மதிப்பீட்டை செய்துள்ளனர். அரசாங்க G.O என்றிலிருந்து எனச் சொல்கிறதோ அதற்கு முன்னால் ஓய்வுபெற்ற 46000 ஊழியர்களுக்கு கருணைத்தொகை எனச் சொல்லியுள்ளனர். அது எவ்வளவு என இனித்தான் தெரியவரும். இப்போது தமிழ்நாடு அரசாங்கம் கொடுத்துவரும் exgratia pension ரூ 645 மற்றும் கிராக்கிப்படி- சேர்த்தால் ரூ 1100க்குள் வரலாம்.

புதிய திட்டம் எல் அய்சியாலா அல்லது PFRDA செய்யுமா என்கிற கேள்வி வரலாம். மத்திய அரசு அறிவித்த UPS விட மேலான திட்டம் TAPS எனலாம். ஆனால் இது அரசாங்க ஓய்வுதிய முறை திட்டமல்ல. பென்சன் நிதியத்திலிருந்து பெறும் திட்டம். அதற்கு அரசாங்கம் உத்தரவாதமளிக்கும் என்று சொல்லியுள்ளனர்.

பி எஸ் என் எல் வந்தபோது இந்த ‘நிதியம்’ என்பது கூடாது. ‘பென்சன் பேமெண்ட் அதாரிட்டி அரசாங்கமே’- budgeted consolidated Fund என்கிற சாதனையை O P குப்தா செய்தார். இதனால் 4.5 லட்சம் ஓய்வூதியர் நிம்மதி பெற்றனர்.

2003க்கு பின்னர் சேர்ந்த தமிழ்நாட்டு அரசுப் பணியாளர்களால் ops முறையை பெறமுடியாமல் போவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. குறிப்பிட்ட அரசியல், பொருளாதார சூழலில் எவ்வளவு உத்தரவாதங்களை பெறமுடியுமோ அதைப் பெற முயற்சித்துள்ளனர். பாராட்டும் வாழ்த்தும்..

அரசாங்க ஆணை வந்தால் மேலும் விவரங்களை உணரலாம்...

7-1-2026

jan 12

Tamil Nadu TAPS

தமிழ்நாடு அரசாங்கம் தான் அறிவிப்பு செய்த TAPS என்கிற ஓய்வூதிய திட்டத்திற்கான ஆணையை கடந்த ஜனவரி 9 , 2026 அன்று வெளியிட்டுள்ளது. காந்தி செண்டர் சரவணன் அனுப்பி உதவினார்.

அந்த ஆணையில் TAPS with the objective of providing assured and sustainable pensionary benefits to the Govt employees எனச் சொல்லியுள்ளனர். ஆரம்பத்தில் மிக உற்சாகமாக வரவேற்ற சங்கங்கள், ஊழியர்கள் காட்டும் அதிருப்தியை சில இடங்களில் சந்திக்க வேண்டியுள்ளது.

வந்திருப்பது own your pension scheme தான். அரசாங்க ஊழியர் தன் சொந்த பங்களிப்பின்றி பென்சன் பெறமுடியாது என்கிற திட்டம்தான். மத்திய அரசின் UPS விட சற்று மேலான திட்டம். தமிழ்நாடு அரசு முழு rules procedures வெளியிட்டால் வேறு விவரங்கள் தெரிய வரலாம். அரசாங்கம் ஆணை வெளியிட்டுவிட்டது.

OPS தான் வேண்டும், இந்த ஆணையை திரும்பப்பெறு என போராட முடிந்தால் அது வேறு ஸ்டோரி. இல்லையேல் 1-4-2003க்குப் பின்னர் வந்த ஊழியர், தங்களின் இருக்கிற CPC- இப்போது வந்துள்ள TAPS இரண்டில் எது நிதிப் பலன்களை மட்டுமின்றி, வாழ்க்கை ஓட்டத்தில் உத்தரவாதமாக நிலைக்கும் என சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

சிபிசி யில் சாதாரண நிலை ஊழியர் 50 ஆயிரம் சம்பளம் கிராக்கிப்படிப் பெற்றால், அவரிடம் மாதம் ரூ 5000 பிடிப்பர். 20- 25 ஆண்டுகள் சேவையில் அவரது 'கார்ப்பஸ் பண்ட்' 15 லட்சம் எட்டலாம். அல்லது சற்றுக் கூட எட்டலாம்.அதை வைத்து மீதி வாழக்கூடிய சராசரி 15 ஆண்டுகளை அவர் சமாளிக்க வேண்டும்.

புதிய திட்டத்தில் அவரிடம் இந்த ரூ 5000 பிடிக்கப்படவே செய்யும். அவருக்கு கிராஜுட்டி என 10-12 லட்சம் கிடைக்கலாம். மாதம் பென்சன் என 25 ஆயிரம் கிடைக்கலாம். இதற்கு கிராக்கிப்படி என்றால் மேலும் கிடைக்கும். அவர் சராசரி வாழ்க்கை 15 ஆண்டுகள் எனில் மாதந்தோறும் பென்சனைப் பெறுவர். குடும்ப ஓய்வூதியமும் 60 சதம் வரை- என மேம்படுத்தியுள்ளனர்.

பிற எல்லா அரசாங்கங்களைப் போலவே 1-4-2003 க்கு முன்னர் பென்சனர் என்றால் அவருக்கு 1978 பென்சன் விதிகள் படி ஓய்வ்வூதியம் என்பதும்,post April 2003 என்றால் அரசாங்க உத்தரவாதத்தில்(1978 விதிகளில் வரமாட்டார்கள்) பென்சன் என்கிற TAPSயை-

‘பென்சனர்களை வேறுபடுத்தி distinct செய்தே’ தமிழக அரசாங்கமும் செய்துள்ளது. இவ்வளவிற்கும் தமிழ்நாடு தன்னிடம் எந்தவித validation act இல்லாமலேயே இதை அரசாணை மூலம் செய்துள்ளது.

ஒருவேளை இனியும் OPSக்கு போராடுவதற்கு bargaining capacity குறையலாம் என மாநில அரசு ஊழியர் சங்கங்கள் கருதினால், bsnl அனுபவத்தில் ஒன்றைச் சொல்லலாம்.

TAPS திட்டத்தில் pension payment authority (not sanctioning authority- அது appointing authority ஆகவே இருப்பர்) , அதாவது pension disbursement authority 1978 பென்சன் விதிப்படியான பென்சனர்களுக்கு எவரோ- கருவூலம்- அவரே TAPS படி வருங்காலத்தில் ஓய்வு பெறுபவர்க்கும் எனக் கேட்டு பெறமுடிந்தால், இந்த assured என்பதற்கு உண்மையான அர்த்தம் வரும். அரசாங்க நிதி ஏற்பாடு என்கிற உத்தரவாதத்தை ஆணை கொடுக்கிறது. ஆனால் தடையின்றி அரசாங்கமே பென்சனைத் தரும் என்கிற கருவூல வழி - பென்சன் விங் இலாகா வழி - பென்சன் கிடைக்கும் என வந்தால் , மேம்பட்ட உத்தரவாதமாக அது அமையக்கூடும்.

பார்க்கலாம்..

12-1-2026

jan 12

கல்வி கரையில- கற்பவர் நாள் சில

2025க்கு நன்றி- 2026 அருளட்டும் !   பொங்கல் நல்வாழ்த்துகள்!

எழுத்து என்பது பெரும் உழைப்பைக் கோருகிற ஒன்று. புத்தகம் எழுதுபவர், அதற்கான தேர்ந்த உழைப்பை நல்கவே செய்கிறார். எழுத்தாளர் எழுதிமுடித்தவுடன் அந்த கச்சாப்பொருளுக்குள் அவரது உழைப்பு தாகம் தணிந்து உள்ளடங்கி நிற்கிறது. ஒருவகையான உள்ளுறை உழைப்பு- dead labour அதில் இருக்கும்.

வெளியீட்டாளர் தன் தேவை- முதலீட்டுபலம்- ஆர்வம் அடிப்படையில் எழுத்தாளனின் பிரதியை multiple செய்து வாசகர்களுக்கு கிடைக்கச் செய்கிறார். வாசகன் வாங்கிச் செல்லும் பிரதியில் இருக்கும் எழுத்தாளனின் dead labour- வாசிப்பின் வழி தன் மீள் விழிப்பைப் பெறுகிறது. எழுத்தாளர் கொண்டாடப்படலாம் - விமர்சிக்கப்படலாம் - கண்டனத்திற்கும் உள்ளாகலாம். வாசகன் வழி எழுத்தாளர் தன்னை விரிவுபடுத்திக்கொள்ள முடிகிறது. அதற்கான சமூக இயக்கம் நடக்கலாகிறது.

இப்படி எழுதப்படுகிற ஒவ்வோரு நூலும் வாசகனுக்காக காத்துக்கிடக்கிறது. புத்தகங்கள் படிக்கப்படும்போது வாசகனும் விரிவடைகிறான். இந்த பரஸ்பர பலன்களை ஆசிரியரும்- வாசகரும் பெறுகின்றனர். மோதல்- கசப்பும் உருவாகவும் கூடும். எழுதப்படும் நூல் தன் value addition யைப் பெறுகிறது.

மருத்துவ மனையில் கிடந்தபோது value rejection- value diminishing என்கிற கருத்தாக்கம் தோன்றியது. உதாரணமாக தமிழ்நாட்டில் மனுஸ்மிருதி நூலுக்கு இப்படியான rejection தொடர்ந்து கூடுதலாவதைக் காண்கிறோம்.

Value addition பெறக்கூடிய எழுத்தாளர்கள், அவர்களது கருத்தாக்கத்தை உயிர்ப்புடன் நீட்டிக்க ஏராள சக ‘உடன்படும் அல்லது மறுக்கும்’ புதிய புதிய எழுத்தாளர்களைப் பெறுவர். எழுதுவது- வாசிப்பது என்பது வெறும் பீற்றலுக்கான விஷயமல்ல. அதுவும் உழைப்பு- இன்னும் சமூக இயக்கமும் கூட. இந்த வகையில்தான் ஆண்டுதோறும் பலர் தாங்கள் எவ்வளவு வாசித்தோம் எனச் சொல்வதைப் பார்க்கிறேன். அவர்கள் உழைப்பிற்கு வணக்கம் சொல்கிறேன். வாசித்தல் என்பது எழுத்தாளர் ஒருவருடன் ’மைக்’ சத்தமில்லாமல்(ஆஹா ஆடியோ புக்) மேற்கொள்ளப்படும் உரையாடலும் கூட. இருவர் இடையேயான,

இன்னும் தொடர்புகொண்ட பல சிந்தனைகளின் சந்திப்பும் கூட. நமரி அடிக்கடி சொல்வது போல when doing is a reading, reading is also a doing.

2025ல் 157 நூல்களை வாசிக்க வாய்ப்புக் கிட்டியது. ஆங்கில நூல்கள் 55, தமிழில் 102 . 2024ல் 146 நூல்களையும் 2023ல் 116 நூல்களையும் வாசித்தப் பதிவை முகநூல் காட்டியது. அவ்வப்போது படித்தவற்றில் சிலவற்றை முகநூலில் தொட்டுக்காட்டி அறிமுகம் செய்ய முடிந்தது. வேறு ஒன்றும் பெரிதாக கிழிக்கவில்லை (நோட்டுத்தாள் தவிர). சில நூல்கள் மீள்வாசிப்பு வகையில் , நினைவூட்டிக்கொள்ள அமைந்தன. சென்ற ஆண்டைவிட நூல்கள் அதிகம் என்றாலும், வாசிப்பு பக்கங்கள் 2000 அளவாவது குறைந்திருக்கலாம். 2024ல் தினம் சராசரி 100 பக்கங்கள் இருந்தன. இப்போது வேகம் சற்றுக் குறைந்துள்ளது. களைப்பு மேலீட்டால் இன்னும் குறையவே வாய்ப்பிருப்பிருக்கிறது.

வழக்கம்போல் எனது வாசிப்பு பன்முகத் தன்மை வாய்ந்தது. பெரிய நூல்கள்- சிறிய அளவிலான நூல்கள் எனக் கலந்தே இப்பட்டியல் அமைந்துள்ளது. என்னால் வாசிக்க முடிந்த அனைத்து எழுத்தாளர்களுக்கும் என் வணக்கம். வாசித்த பட்டியலைத் தந்துள்ளேன். வாரம் 4 நூல்கள் படிக்கமுடிந்தவர்களை நான் அறிவேன். ஒப்பீட்டில் என் உழைப்புக் குறைவானதே.

2025ல் வாசித்த ஆங்கில நூல்கள்

1. Jan 10 Karl Marx David McLellan pages 110

2. Jan 11 How India Became Democratic Ornit Shani pages 270

3. Jan18 This was Bapu R K Prabhu pages 208

4. Jan 18 Marxism and other western fallacies An Islamic critique by Ali Shariati pages 149

5. Jan 24 Nationalism Tagore pages 120

6. Jan 27 Rajah Moonje Pact compiled by Devendra Swarup and Meenakshi Jain pages 194

7. Jan 29 India After Gandhi updated 2023 by Guha pages 802

8. Jan 29 Iconoclast reflective bio of Dr Babasaheb Ambedkar by Anand Teltumbde pages 600

9. Grandson Nandan book The Cricket

10. Feb 2 V V S Aiyar R A Padmanabhan pages 230

11. Feb 8 Capital Culture and the Commons Akeel Bilgrami பக் 107

12. Feb 16 Mahatma Gandhi Essays and Reflections Dr Radhakrishnan pages 565

13. Feb 20 The Road to Pakistan B R Nanda pages 380

14. Feb 21 Gandhi's India -Unity in diversity pages 82

15. March 4 Gandhi and Revolution by Devi Prasad pages 175

16. March 4 The case for India will Durant pages 238

17. March13 India that is Bharat Sai Deepak pages 460

18. March 14 Gandhi and the Environment by Khoshoo, John Moolakkattu pages 150

19. March 15 My encounter with Gandhi RR Diwakar pages 82

20. March 19 Worshipping false Gods Arun Shourie pages 500

21. March 21 Rajani Palme Dutt Panchannan Saha pages 150

22. March 22 CA Debates first 3 volumes pages 533

23. March 29 The Gandhian Way J C Kumarappa pages 44

24. April 5 The political and social Doctrine of Fascism by Mussolini 35

25. April 5 I am an ordinary Man Gandhi by Gopalakrishna Gandhi pages 443

26. April 6 Goodness The Gandhi way of life Nisha Bala pages 120

27. April 12 Tagore A Life Krishna Kripalani pages 275

28. AP 20 The New Icon Savarkar and the facts Arun Shourie pages 540

29. AP 21 The political Marx Aijaz Ahmad Vijay Prashad pages 110

30. Ap 28 Gandhi in his time and ours David Hardiman Pages 330 31. Ap 30 Kamaladevi Jasleen Dhamija Pages 125

32. AP 30 The Art of Freedom Kamaladevi and making of modern India by Nico Slate 340 pages

33. May 1 SarojiniNaidu Nimeran Page 60

34. May 23 Agnostic Khushwant Singh pages 240

35. June 1 Patel A Life Rajmohan Gandhi pages 550

36. June 4 India after 1947 Rajmohan Gandhi pages 113

37. June 14 Walking with Lions Natwar Singh pages 213

38. June 14 Maisaheb Ambedkar P V Suhadeve pages 240

39. June 29 The Undying Light Gopalkrishna Gandhi 600

40. July 28 Rajaji letters to Gandhi, Devdaas, Gopalakrishna Gandhi 312 pages

41. Aug 4 Reflections of an Extraordinary Era Tara Gandhi pages 115

42. Aug 5 Ambedkar A Part Apart Ashok Gopal Pages 800

43. Sep 10 Strictly Personal Manmohan- Daman Singh 410 pages

44. Sep 11 Pranab My Father Sharmistha Pages 370

45. Oct 12 The Good BoatMan Gandhi, Rajmohan pages 495

46. Oct 23 Conversations with Nehru Tibor Mende

47. Oct 24 Interview Mohan Bhagawat

48. Oct 26 Golwalkar Millennial Vision by S Gurumurthy pages 75

49. Nov 2 one woman's India Anna Varki pages 134

50. Nov 14 The Discovery of India Nehru 580 pages

51. Nov 21 RSS 100 years Prafulla Ketkar 52. Nov 26 Looking For The Nation Manash Firaq

53. Dec 7 Gandhi Then and Now pages 270

54. Dec 20 Inheriting Gandhi pages 325

55. Dec 30 Mao A short Introduction Delia Davin pages 142

2025ல் வாசித்த தமிழ் நூல்கள்

1. ஜனவரி 4 பாரத ஜன சபை இரு பாகம் பாரதியார் பக் 416

2. ஜன 6 ரஸிகமணி டி கே சி தொ மு பாஸ்கரத் தொண்டைமான் பக் 198

3. ஜன 8 சீர்திருத்தம் (நவ 26, 1928 தென்னிந்திய சீர்திருத்த மாநாடு பெரியார் உரை) பக் 70

4. ஜன 8 கம்பர் யார்? டி கே சி (1941 வானொலி உரைகள்) பக் 133

5. ஜன 12 தமிழ் நாட்டவரும் மேல் நாட்டவரும் மற்ற கட்டுரைகள் பக் 76

6. ஜன 14 முத்தமிழ்க் காவலர் கி ஆ பெ வி சுப்புரெட்டியார் பக் 186

7. ஜன 23 திருக்குறள் அதிகார விளக்கம் திருக்குறளார் வீ முனிசாமி பக் 233

8. ஜன 24 அரசியல் நினைவலைகள் ஆக்கூர் அனந்தாச்சாரி பக் 127

9. ஜன 26 புதுவையில் தேச பக்தர்கள் என் நாகசாமி பக் 159

10. பிப் 3 பாரதியார் சரித்திரம் செல்லம்மா பக் 96

11. பிப் 3 சித்திர பாரதி ரா அ ப பக் 192

12. பிப் 3 வ உ சி யும் பாரதியும் சலபதி பக் 160

13. பிப் 5 தமிழும் பிற பண்பாடு தெ பொ மீ பக் 108

14. பிப் 7 பழங்காலத் தமிழர் வாணிகம் மயிலை சீனி வேங்கடசாமி பக் 163

15. பிப் 13 வ வே சு ஐயர் அரசியல் இலக்கியப் பணிகள் பெ சு மணி பக் 280

16. பிப் 13 பாரதியும் தாகூரும் பி ஸ்ரீ பக் 102

17. பிப் 13 தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும் கார்த்திகேசு சிவத்தம்பி பக் 175

18. பிப் 22 பாரதி புதையல் 1 ரா அ ப பக் 90

19. பிப் 23 அன்னை கஸ்தூரி எம் எஸ் சுப்பிரமணிய அய்யர் பக் 106

20. பிப் 24 மக்களின் சமய நெறி டாக்டர் எஸ் ஆர் கே பக் 139

21. பிப் 25 தமிழ் இலக்கிய வரலாறு எம் ஆர் அடைக்கலசாமி பக் 325

22. மார்ச் 1 பின் காலனியம் ராபர்ட் யங் பக் 200

23. மார்ச் 14 தாகூர் தரிசனம் கல்கி பக் 102

24. மார்ச் 15 ஹோசிமின் யெவ்கனி கொபலவ் பக் 382

25. மார்ச் 16 கவியரசர் தாகூர் பக் 115 கலைமணி

26. மார்ச் 19 வரகவி தாகூர் சுத்தானந்த பாரதியார் பக் 185

27. மார்ச் 21 திருக்குறளார் திருக்குறள் தெளிவுரை பக் 580

28. மார்ச் 21 ஹிந்தி அவசியமா சுத்தானந்த பாரதி

29. மார்ச் 29 தென்னாடு கா அப்பாத்துரை பக் 160

30. ஏப் 6 முசோலினி வெ சாமிநாத சர்மா பக் 150

31. ஏப் 8 இன்பத் தமிழகம் ம பொ சி பக் 112

32. ஏப் 13 இனிய தமிழ் இலக்கணம் சுத்தானந்த பாரதி பக் 307

33. ஏப் 17 நானறிந்த ராஜாஜி மபொசி பக் 370

34. மே 1 வரதராஜுலு நாயுடு சிற்றரசு பக் 90

35. மே 3 மறைமலையம் - 18 கட்டுரைகள் பக் 320

36. மே 5 சரோஜினி நாயுடு பத்மினி சென் குப்தா பக் 120

37. மே 10 செல்வம் க.சந்தானம் பக் 96

38. மே 10 தேசிய இலக்கியம் பெரியபுராணம் அ சா ஞா பக்215

39. மே 24 பத்தினி தெய்வங்களும் பரத்தையர் வீதிகளும் பிரேமா பக் 270

40. ஜூன் 1 பேசாத பேச்சு கி வா ஜ பக் 150

41. ஜூன் 13 தி ஜ ர பழ அதியமான் பக் 140

42. ஜூன் 14 இந்திய இலக்கியம் க நா சு பக் 148

43. ஜூன் 20 தி ஜானகிராமன் கட்டுரைகள் பக் 243

44. ஜூன் 21 கண்ணதாசன் பாலசுப்பிரமணியன் பக் 150

45. ஜூன் 23 ஓர் இலக்கியவாதியின் கலையுலக அனுபவங்கள் ஜெயகாந்தன் பக் 394

46. ஜூன் 27 ஒரு குடும்பம் சிதைகிறது பைரப்பா பக் 472

47. ஜூன் 27 வாஸவேச்வரம் கிருத்திகா பக் 182

48. ஜூன் 28 உபபாண்டவம் எஸ் ராமகிருஷ்ணன் 311

49. ஜூலை 2 என் பெயர் ராமசேஷன் ஆதவன் 200

50. ஜூலை 5 அறம் நேர்காணல்கள் பீட்டர் துரைராஜ் பக் 188

51. ஜூலை 6 ஸ்ரீரங்கத்து தேவதைகள் சுஜாதா பக் 122

52. ஜூலை 6 கி ரா கட்டுரைகள் பக் 220

53. ஜூலை 8 சாணக்ய மந்திரம் அஷ்வின் சாங்கி பக் 530

54. ஜூலை 8 அமிர்தம் தி ஜா பக் 192

55. ஜூலை 11 உடலெனும் வெளி அம்பை 200

56. ஜூலை 12 நிழல்கள் நகுலன்

57. ஜூலை 12 பதினைந்து ஐரோப்பிய நவீனவாதிகள் பிரம்மராஜன் பக் 150

58. ஜூலை 16 ஸீரோ டிகிரி சாரு நிவேதிதா பக் 282

59. ஜூலை 20 மௌனி சச்சிதானந்தம் பக் 92

60. ஜூலை 23 க நா சு சுந்தர ராமசாமி பக் 112

61. ஜூலை 24 நா பார்த்தசாரதி திருப்பூர் கிருஷ்ணன் பக் 80

62. ஜூலை 25 மரப்பசு தி ஜா பக் 320

63. ஜூலை 29 மௌனியுடன் கொஞ்ச தூரம் திலீப் குமார் பக் 104

64. ஆக 4 ராதையுமில்லை ருக்மணியுமில்லை அமிருதா பிரீதம் பக் 120

65. ஆக 9 எழுத்து தொகுப்பு வல்லிக்கண்ணன் பக் 330

66. ஆக 9 மண்ணில் தெரியுது வானம் ந சிதம்பர சுப்பிரமணியன் பக்297

67. ஆக 15 இதயநாதம் ந சிதம்பர சுப்பிரமணியன் பக் 190

68. ஆக 18 திறனாய்வு பிரச்சினைகள் க நா சு முன் வைத்து கைலாசபதி பக் 85

69. ஆக 20 சத்தியமேவ கிருத்திகா பக் 295

70. ஆக 20 க நா சு தஞ்சை பிரகாஷ் பக் 112

71. ஆக 22 கிருஷ்ணன் நம்பி சுந்தர ராமசாமி பக் 103

72. ஆக 30 விமர்சனக் கலை க நா சு பக் 170

73. செப் 1 ராஜம் அய்யர் சரிதை கஸ்தூரி பக் 120

74. செப் 1 முற்போக்கு இலக்கியத் திறன் பக் 120

75. செப் 3 முதல் 5 நாவல்கள் க நா சு பக் 130

76. செப் 4 இவை என் உரைகள் சுரா பக் 285

77. செப் 8 கு ப ரா கட்டுரைகள் பக் 635

78. செப் 9 எங்க உப்பப்பாவுக்கு ஆனை யிருந்தது பஷீர் பக் 120

79. செப் 10 நடைவழிக் குறிப்புகள் சி மோகன் பக் 119

80. செப் 11 பாலையும் வாழையும் வெ சா 332 பக்

81. செப் 14 நவீன தமிழ் இலக்கிய அறிமுகம் ஜெயமோகன் பக் 296

82. செப் 27 தமிழின் நவீனத்துவம் பிரமிள் பக் 220

83. அக் 2 இலக்கியச் சிந்தனைகள் கைலாசபதி பக் 100

84. அக் 4 கம்பராமாயண ரசனை வ வே சு பக் 100

85. அக் 9 நகுலன் கட்டுரைகள் பக் 320

86. அக் 17 நேருவின் இந்தியா மானஷ் பிராக் பக் 240

87. அக் 18 தமஸ் பீஷ்ம ஸாஹ்னி பக் 380

88. அக் 20 மரபும் மார்க்சியவாதிகளும் சிவசேகரம்

89. நவ 6 அழகிரிசாமி கடிதங்கள் கி ரா பக் 186

90. நவ 15 சத்திய சோதனை காந்தி பக் 600

91. நவ 21 மழையும் புயலும் வ ரா பக் 225

92. நவ 24 இலக்கிய நேர்மை ரகுநாதன் கட்டுரைகள் பக் 336

93. நவ 27 வார்த்தையின் ரஸவாதம் பிரம்மராஜன் பக் 230

94. டிச 4 தணியாத தாகம் உஸ்மான் அலி பக் 210

95. டிச 6 நீதிக்கட்சி வரலாறு முத்துசாமிப்பிள்ளை பக் 80

96. டிச 6 திராவிடம் என்றால் என்ன? ந சி கந்தையாபிள்ளை

97. டிச 20 புதுமைப்பித்தன் எனும் பிரம்மராட்சஸ் ராஜ்கௌதமன் பக் 140

98. டிச 20 மார்க்சியமும் இலக்கியத் திறனாய்வும் எம் ஏ நுஹ்மான் பக் 225

99. டிச 25 வீழ்ச்சி ஆல்பர் காம்யு பக் 120

100. டிச 27 இடமும் இருப்பும் மனுஷ்ய புத்திரன்

101. டிச 28 மணல் பிரதி போர்ஹே

102. டிச 29 அனந்தசயனம் காலனி தோப்பில் முஹம்மது மீரான் பக் 152

12-1-2026

jan 14

இரு நூல்கள்

A Sixth of Humanity குறித்து சில செய்திகளை சென்ற ஆண்டு இறுதியில் தந்திருந்தேன். சமீபத்தில்நடந்த, மாணவர்களுக்கான மடி கணிணி விழாவில் கூட அர்விந்த சுப்பிரமணியன் கலந்துகொண்டு தனது இந்நூலைக் குறிப்பிட்டுச் சொன்னார். தமிழ் மாநில வளர்ச்சியை சீனா வளர்ச்சியுடன் ஒப்பிட்டு உயர்வாகப் பேசியிருந்தார்.

அக்டோபர் 2025 இறுதியில் என்னிடம் வந்து சேர்ந்த அவ்வாண்டின் நூலை, தட்டுத்தடுமாறி மெல்ல மெல்ல படித்து 2026 ஜனவரி 13ல் ஒப்பேற்றினேன் எனச் சொல்லலாம். ஏராளசெய்திகள். 700 பக்கங்களுக்கு மேலான பெரிய நூல்.நிதித்துறை செயல்பாடு உள்ளவர்கள் இந்தியாமுழுதும் வாங்கி படித்திருக்கக்கூடும்.

உலக மக்களில் ஆறில் ஒரு பங்கு கொண்ட இந்திய அரசியல் பொருளாதார சமூகத்தின்- 75 ஆண்டுகால பயணத்தின் தடங்கள்- குறித்த அறிஞர் இருவரின் ஆய்வு என சுருங்க புரிந்துகொண்டேன். ஏராள அலசல்கள்(analysis) , டேட்டாக்கள், ஆங்காங்கே நச்சென தீர்ப்பிடல்கள்,சில எதிர்ப்பார்ப்புகள்- ஏமாற்றங்கள் என 5 பாகங்களில் 18 இயல்கள் நகர்கிறது. வைத்து வைத்துதான் இயல்களின் நகர்வுகள் எனக்கு இருந்தன.

இந்திய வளர்ச்சி குறித்த ஆய்வுலகிற்கு தேவைப்படும் நூல். கண்டிப்பாக படித்தே ஆகவேண்டும் என்கிற பரிந்துரைக்கும் எண்ணத்தை, ஆர்வத்தை உருவாக்கியதா எனச் சொல்லத் தோன்றவில்லை. கொஞ்சம் அகடமிக் ஆர்வம் இருப்பவர் சமாளித்துப் பார்க்கலாம். நேரு முதல் மோடிவரை வந்த பாலிசி , சமூகப் போராட்டங்கள், விழைவுகள், சாதி சமய சழக்குகள், கார்ப்பரேட் வளர்ச்சிகள், பில்லியனர்கள், அசமத்துவம் என பல கண்ணாடிகளின் அறைக்குள் நின்று வந்த உணர்வு நூலை முடித்தவுடன் வந்தது.

India’s Indias என்கிற இயல் முழுமையாக வளர்ந்த மாநிலங்கள், தடுமாறும் மாநிலங்களைப் பற்றிப் பேசுகிறது. தமிழ்நாடு, குஜராத், மகராஷ்ட்ரா என வளர்ந்தவை பற்றிய விவரங்கள் உள்ளன. 1990களில் low skilled migrants அதிகம் நடந்த பகுதி தென்னிந்தியா. இப்போது அதிகமாக வட மாநிலங்களிலிருந்து தென்பகுதிக்கு புலம்பெயர் தொழிலாளர்.

இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் , நாம் அனைவரும் நன்கு உணரக்கூடிய ஒன்று - இதில் left centre right எல்லோரும் ஒன்றாக கருதக்கூடிய ஒன்று-default ideology Statism அரசாங்கவாதம்- அல்லது பாப்புலர் மொழியில் mai baap sarkar. இதனால் காந்தி தூரப்படுத்தப்படுவதை உணர்கிறேன்.

அநேகமாக அரசியல் கட்சிகளில் பல , குடும்ப கம்பெனிகளாகியுள்ளன. தேர்தலில் self financed candidates, often have to buy tickets at a hefty premium…if elections are fundamental to democracy, money is fundamental to elections என்கிற நாம் உணர்ந்தவைகளை ஆசிரியர்கள் அழுத்தமாக சொல்லியுள்ளனர்.

இன்று நிலவும் அரசியல் கலாச்சாரம் குறித்து இந்நூல் இவ்வாறு சொல்கிறது

The political culture has become polarised, opponents treated as enemies, discourse coarsened, dialogue reduced to sound bites and common courtesies, decencies have eroded

பகிர்வு நியாயம் பெரும் பிரச்சனையாகியுள்ளது. The measure of distributional performance is inequality. 1996ல் பில்லியனர் 3 பேர் எனில் 2024ல் 200 பேர்கள் என உயர்ந்துள்ளனர். அமெரிக்கா, சீனாவிற்கு அடுத்து அதிக பில்லியனர்கள் உள்ள நாடு இந்தியா.

இந்த நூல் இருக்கின்ற அம்சங்களை ஆராய்ந்து தன் மதிப்பீடுகளை தந்துள்ள நூல். என்ன தேவை என்கிற ‘லாண்டரி லிஸ்ட்டை’ தாங்கள் தரமுடியாது எனக்கூட பேசும் நூல். மல்லுக்கட்டி படிக்க விரும்புபவர்கள் முயற்சிக்கலாம். 2026ல் ஆங்கிலத்தில் படித்து முடித்த முதல் நூல் என்றளவில் என்னிடம் சேர்ந்த நூல்.

2026ல் அமேசன் வழி என்னிடம் வந்த முதல் ஆங்கில நூல் ‘ I witness- India from Nehru to Narendra Modi’ by Shahid Siddique. வந்தவுடனேயே ஒத்திப்போடாமல் படிக்க விழைகிறேன். சாகித் சித்திக் பத்திரிகையாளர். எம்பியாக இருந்தவர். காங்கிரஸ், சமாஜ்வாடி என அரசியலில் பயணித்தவர். ஆழமானவர். ‘நேருவிலிருந்து மோடிவரையான இந்தியா- சாட்சியம்’ என்கிற தலைப்பிலே , 400 பக்கங்களில் 5 பகுதிகளில் 15 இயல்களுடன் இந்நூலாக்கத்தை சித்திக் செய்துள்ளார். வாசிக்க வாசிக்க பேசலாம் எனத் தோன்றும் நூல்..

பார்க்கலாம்..வாழ்வின் ஓட்டத்தை..

14-1-2026

jan 15

Shahid Siddiqui Book

Shahid Siddiqui இப்படித்தான் தன்னை அடையாளப்படுத்திக்கொள்கிறார்.

Muslim by Faith

Hindu by culture

Indian by conviction

Global by outlook

‘ஏய் குட்டி மெளலானா, உன் ஷெர்வானி ரொம்ப நல்லாயிருக்கே, எங்கே தைச்ச’ என 5 வயது சித்திக்கை, அப்பாவுடன் உரையாடிக்கொண்டிருந்த நேரு கேட்கிறார். நேருவை வழுக்கைத் தலையுடன், எவ்வித பிரதமர் பந்தா அலட்டல் இல்லாமல் பார்த்த குட்டி சித்திக் மனதில் அவ்வுருவம் சாச்சா நேருவாக.. அதேநேரத்தில் ஆசாத் அவர்களை அப்பாவுடன் பார்க்கச் சென்ற குட்டிக்கு வேறு அனுபவம். நல்ல உடையுடந்தான் குட்டி. ஆனாலும் அப்பாவுடன் ஆசாத் ‘சீரியசாக ’ , குட்டியை பார்த்தும் ஏதும் சொல்லாமல் உரையாடிக்கொண்டிருந்த குழந்தையின் மனப்பதிவு. இந்திய முஸ்லீம்களை இனி எவர்தான் காப்பாற்றுவாரோ என்கிற கவலையை ஆசாத் வெளிப்படுத்திய மனநிலை..

மெளலான குடும்பத்தில், நாட்டுப்பிரிவினையின் கோர வலிகள் நிறை சூழலில் , பழைய டெல்லி வட்டாரத்தில் 1950 ஆகஸ்ட் 15 ல் பிறந்தவர் சித்திக். சித்திக் மண்ணிற்கு வந்தபோது, மெளலானாவான அப்பா சாந்தினி செளக்கில் தேசியக்கொடியை உயர்த்தி விடுதலைப் போரின் மாண்புகளை, பிரிவினையின் ஆறாத்துயரத்தைப் பேசிக்கொண்டிருந்தார்.

சித்திக் தந்தையின் வழியைப் பின்பற்றி புகழ் வாய்ந்த உருது பத்திரிகையாளராக மிளிர்ந்தார். பிரதமர்களை பேட்டியெடுக்கும் அளவு பத்திரிகைத் துறை செல்வாக்கு பெற்றிருந்தார். குடும்பம் ‘காங்கிரஸ்- மோதல்’ எனச் சென்ற பின்னணி கொண்டது. சித்திக்கும் காங்கிரஸ், சமாஜ்வாடி எனப் பயணித்தவர்தான்.

தான் பிறந்த 1950 முதல், இன்றைய 2025 வரையிலான 75 ஆண்டுகால தன் நேசமிகு இந்தியாவில், முஸ்லீம் குடும்பமாக தனிநபராக, பத்திரிகையாளராக, அரசியல்வாதியாக தான் உற்று நோக்கிய இந்தியா பற்றி சித்திக் பேசும் நூல் தான் ' I , witness India from Nehru to Narendra Modi'. ஆகஸ்ட் 2025ல் வந்த நூல். இதுவரை பார்த்த பக்கங்கள் சுவையாகவும், அதேநேரத்தில் முஸ்லீம் மனம் ஒன்றின் அவஸ்தையையும் சேர்த்தே சொல்கிறது. மனசு நூலைச் சுற்றியே போய்க்கொண்டிருக்கிறது. எவ்வளவு என்னால் சித்திக்கின் உணர்வுகளை கடத்த முடியும் எனத் தெரியவில்லை. முயற்சித்தால் தவறில்லை..என் சைத்தான் தாவிப்பார்க்கவே முயலும் அல்லவா..

Shahid என்பது பெருமைமிகு அல்லாவின் 99 பெயர்களில் ஒன்றாம். அதற்கு 'சாட்சி' எனப் பொருளுண்டாம். சித்திக் பிறந்த பகுதி சாந்தினி சௌக்கில் ஹவேலி ஹெசாமுதீன் பள்ளிமாரன். 8 குழந்தைகள் பெரிய குடும்பம். அம்மா நயீமா பேகம், அப்பா புகழ் வாய்ந்த அப்துல் வாகித் சித்திக். அவர் தேவ்பந்தி மௌலானா. உருது பத்திரிகையாளர். ஜின்னாவின் இரு தேசக் கொள்கையை கடுமையாக விமர்சித்த தேசிய முஸ்லீம் பிரிவில் இருந்தவர். பாகிஸ்தான் என்பது முஸ்லீம்களுக்கு இழைக்கப்படும் நீதியல்ல என மிக உரக்கப்பேசியவர். சர் சையத் அகமதுகான் பிரிட்டிஷ் கல்வி முறையை ஏற்கமுடியாது எனச் சொல்லி, இஸ்லாமிய கல்வி தேவ்பந்த் மதர்ஷாவில் பயின்று மௌலானாவாக ஏற்கப்பட்டவர். தேவ்பந்தில் மூத்த ஆசிரியராக மௌலானா ஹூசைன் அகமது மதானி அவர்கள் இருந்தார். மதானிக்கு காந்தி, ஆசாத், நேருவிடம் நெருக்கமிருந்தது.

அப்பா அப்துல்வாகித், சந்திரசேகர் ஆசாத்- பகத்சிங் கொள்கைகளாலும் ஈர்க்கப்பட்டார். புகழ் வாய்ந்த மௌலான ஹஸ்ரத் மொகானியுடன் அப்துல் வாகித்திற்கு நெருக்கம் ஏற்பட்டது. மாணவர் இயக்கம், மகஜிர் எனும் பத்திரிகை பணி தொடர்ந்தது. டெல்லியில் 'ஜமியா மில்லியா இஸ்லாமியா' தொடங்க உதவிய மௌலானா உஸ்மானி பழக்கம். தேசிய முஸ்லீம் தலைவர்களென அறியப்பட்ட ஹக்கிம் ஹஜ்மல் கான், டாக்டர் எம் ஏ அன்சாரி ஆகியோருடன் இணைந்து பணியாற்ற வாய்ப்பு கிட்டியது.

இன்னும் காங்கிரஸ் தலைமையிடும் கட்டளைகளை செய்து முடிப்பவராக அப்துல் வாகித் உருவானார். டெல்லியிலிருந்து லாகூர், கராச்சி சென்று கூட இதழிய பணிகளை, முஸ்லீம் லீகிற்கு எதிரான கருத்துப்போரை செய்யலானார்.

இப்படிப்பட்ட குடும்பத்தில் இந்தியாவை தனது தாயகமாக பெருமிதமாகக்கொண்டு வளர்ந்த குடும்பத்து குழந்தைகள், பிரிவினையின் சூட்டைக் கண்டன. பள்ளிக்கூடங்களில் குழந்தை சித்திக் ஏசப்பட்டான். ஏ முல்லா, பாகிஸ்தான் போடா என பிஞ்சு குழந்தைகள் கூட ஏசும் அளவு டெல்லிச் சூழல் நஞ்சானது. ‘சுன்னத்’ எப்படி காட்டு என பள்ளிவகுப்பறையிலேயே கூனிக்குறுக வைக்கும் கேலி அவமானங்கள் நடந்தன.

அப்பா வாகித், ஜாகீர் ஹுசைன், கித்வாய், பக்ருதீன் அலி எனப் புகழ் வாய்ந்த அனைவருடனும் நெருக்கமாகவும், பளிச்சென வேறுபாடுகளை காட்டுபவராகவும் இருந்தார். கடைக்குட்டி சித்திக் அப்பா மடியில் அமர்ந்து உரையாடல்களை கவனிக்கும் வாய்ப்பு. அம்மாவோ, பள்ளிக்கூட படிப்பு ஏதுமில்லாவிடினும், வாழ்க்கையின் மேம்பட்ட புரிதல் திறன் கூடியவர். எந்த மனிதரையும், எந்த மதத்தினரையும் எப்பொழுதுமே புண்படுத்தக்கூடாது எனச் சொல்லித்தந்தவர். உருது இலக்கியத்தைப் படிக்கச் சொல்லி கேட்பவர். மாண்டோ, இஸ்மத், பேடி போன்றவர்களை சித்திக் படிக்கத் தூண்டியவர்.

குழந்தையாக இருக்கும்போதே அருணா ஆசப் அலியின் ஈர்ப்பு சித்திக்கிடம் இருக்கலானது. 1952ல் அப்பாவை பார்க்க சரளா என்கிற பட்டதாரி இளம்பெண் வந்தார். கம்யூனிஸ்ட் என்றார். இப்பகுதி முனிசிபல் தேர்தலில் நிற்க ஆதரவு கேட்டார். அப்பா ஏதும் யோசிக்கவேயில்லை. அருணாவை , சுபத்ரா ஜோஷியை வைத்துக்கொண்டு சரளாவை காங்கிரசை எதிர்த்து வெற்றிபெற வைத்தார். சரளா, அருணா தொடர்பால் சோவியத், கம்யூனிஸ்ட் இலக்கியங்கள் கிடைத்தன.

ஈத் மூன்றாம் நாள் மசூதிகளில் பெண்கள் நாள். அப்படி சகோதரிகள் சகிதம் சிறுவன் சித்திக் தொழுகைக்கு...முகம் தெரியா மனிதர் வண்ணப்பரிசு எனக் கொடுக்க வந்தார். சித்திக்கை முந்திக்கொண்டு நீலச்சட்டை பையன் பரிசை வாங்கிவிட்டான். டமால் பெரும் சத்தம். வெடிகுண்டு வெடித்து அப்பையன் மண்ணில் சாய்ந்தான். எங்கும் புகை. சித்திக் நடுங்கி பயந்து உளவியல் பாதிப்பை அடைய நேர்ந்தது. பிரிவினை என்ன செய்யுமோ என எங்கும் அச்சச் சூழல்...

சாந்தினி சௌக் பகுதியில் கலவரம். அருணா, சுபத்ரா முன் நின்று மோதல் தணிப்புகளை செய்தனர். இந்து பெண் ராஜ் ஷர்மாவை, முஸ்லீம் பையன் சிக்கந்தர் பக்த் காதலித்தார். எதிர்ப்பு பலமாக

இருந்தது. அருணா ஆசப் அலியை மணமுடித்த நாடுதான். லியாகத் அலி கூட ஷீலா பந்தை மணம் செய்துகொண்ட தேசம்தான். ஒருபுறம் இந்து மகாசபா, மறுபுறம் அருணா சுபத்ரா என கருத்துப்போர்கள். இந்த சிக்கந்தர் பக்த் வேறுயாருமல்ல. வாஜ்பாய் ஆட்சியில் அமைச்சரானவர். பாஜக தலைவருள் ஒருவர்.

ரபி அகமத் கித்வாயும் , அப்பா வாகித்தும்நெருக்கமானவர். பந்த் அல்லது கித்வாய் எவர் என மோதல் வந்தபோது, பந்தை பொதுவெளியில் கடுமையாகப் பேசியவர் வாகித். அப்பா தன்னை 'இஸ்லாமிக் சோசலிஸ்ட்' என்பார். கித்வாய் 'சோசலிஸ்ட் முசல்மான்' என்பார். சிலநேரம் நேரு வெறுத்துப்போய், ராஜினாமா எனச் சொல்வார். பொறுத்துப்பார்த்த கித்வாய், ராஜினாமா செய்ங்க நேரு. வேறு ஆளே இல்லை என நினைக்காதீங்க. நான் கூட better secularist என நிருபிப்பேன் என முகத்துக்கு நேராக பேசக்கூடியவர் கித்வாய்.

நேருவிற்கு, அரசாங்கம் என்பது காங்கிரஸ் ஸ்தாபனத்தைவிட மேலானது. படேலுக்கோ ஸ்தாபனம் மேலானது. அதை அவர் கட்டுக்குள் வைத்திருந்தார். படேல், பிரசாத்,முன்ஷி லாபியிருந்தது. கித்வாய், அசோகா வேறு லாபி. டாண்டனை நிறுத்தி கிருபளானியை படேல் குழு தோற்கடித்தனர். கித்வாய்க்கு படு கோபம். ராஜினாமா செய்துவிட்டு போய்விட்டார். அப்பாவையையும் காங்கிரஸ் ஆதரவு இதழ்களிலிருந்து விலக வைத்தார். படேல் மறைவிற்குப் பின்னர்தான், அரசாங்கம்- ஸ்தாபனம் முழுமையாக நேரு வசம் வந்தன. கித்வாய் மீண்டும் பொறுப்பேற்றார். ஆனால் முஸ்லீம்களுக்கு குரல் கொடுக்கும் இதழாளராக இரு என அப்பா வாகித்திற்கு அறிவுரை வழங்கினார். நயி துனியா வந்தது.

பார்க்கலாம்..ஷாகித் சாட்சியம் எப்படிப் போகிறதென...

15-1-2026

jan 16

உடல்களின் ஆட்டம்தான்...

உடல்களின் ஆட்டம்தான் மானுட உலகம். பிறந்த ஒவ்வோரு உடலும் தன்னை ஸ்திரப்படுத்திக்கொள்ள நடைபெறும் போராட்டமே அன்றாட வாழ்க்கை. ஓர் உடல் தன்னை எவ்வளவு விஸ்தீரணப் படுத்திக்கொள்ள வேண்டுமோ- பிரதேச , பரதேசப் படுத்திக்கொள்ளவேண்டுமோ அதற்கான அசைவுகள முனைப்புகளைச் செய்கிறது.

சுய உடல், பிற உடல்களையும் சேர்த்து சமூகமாகிறது. அமைப்பாக்கி தேசமாக்கி , அரசாங்கமாக்கி , இன்னும் அதிகாரவெளிகள் எவ்வளவுண்டோ அவ்வளவு வழிகளிலும் உடல் தன்னை நிலைநிறுத்தப்பார்க்கிறது. அதற்கு அணைத்துக்கொள்ள, நேயம் வழியச்செய்ய ஒத்த உடல்கள் தேவைப்படுகின்றன. விலக்க, விமர்சிக்க, இல்லாமல் செய்திட உடல்கள் தேவைப்படுகின்றன. எந்த உடல் எதற்காக , எத்தகைய , பிற உடல் மீதான எதிர்வினகளை செய்கிறது - நியாயப்படுத்துகிறது என்கிற பெரும் விளயாட்டைக் காண்கிறோம். தான் செய்வதே 'புனிதம்' என அது எப்படியெல்லாம் உறுதிப்படுத்தப்பார்க்கிறது எனக் காணமுடியும்.

உடல் மீதான சர்வநேர சதா விழிப்புணர்வு, அது குறித்த பெருமிதம்- இகழ்ச்சி என கணங்கள் நகரும். அதுவும் பெண் உடல் எனில் அது குறித்த ஆணின் ஈர்ப்பு வேட்கைகள்- கொண்டாட்ட விவரணைகள்- உறுப்புகளின் விவரிப்புகள்- ஆபத்து விலக்கு எனப்பேசும் அறிவுரைகள் என தமிழ் இலக்கிய உலகு அமைந்திருக்கும். இப்படி அரவாணி உடல், பெண் உடல் குறித்தெல்லாம் தமிழ் இலக்கியம் என்னதான் பேசியுள்ளது என்கிற ஆய்வுக் கட்டுரைகளை ' மறுவாசிப்பில் மரபிலக்கியம்' என ந. முருகேசபாண்டியன் எழுதியுள்ளார். தமிழ் இலக்கியம் மட்டும்தானா இப்படியிருக்கிறது?

பல ஆண்டுகளுக்கு முன்னர், ஒருமுறை அவரை சுந்தரராமசாமி முகாமில் நாகர்கோயிலில் சந்தித்த நினைவு. சரியான நினைவுதானா என இப்போது ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை. இலக்கிய இதழ்களில் அவர் எழுதிய 9 கட்டுரைகள் இடம் பெற்ற அந்நூல் வந்து 15 ஆண்டுகள் ஆகின்றன. இன்றும் படிக்கக்கூடிய, பொருத்தமான ஆய்வுச் செய்திகளைக் கொண்ட கட்டுரைகள்தான்.

சங்க இலக்கியத்தில் பாலியல், சங்கப் பெண் கவிகள், திருக்குறள் சொல்லாடல்கள், பழந்தமிழ் இலக்கியத்தில் ஒடுக்கப்பட்டோர்,

பழந்தமிழ் இலக்கியத்தில் அரவாணிகள், அறநூல்கள் தரும் பெண் மதிப்பீடுகள், தமிழகத்தில் ஜைனம், மணிமேகலை மறுவாசிப்பு, பாரதிதாசன் ஆளுமை என்கிற பொருட்களில் ஆய்வுகள் இடம் பெற்றுள்ளன.

பெண்ணின் மனவுணர்வுகள், பாலியல் விருப்பம் சிதைத்து, வெறும் உடலாக மாற்றி, ஆணின் மேலாதிக்கத்தினுக்கேற்ப மாற்றும் முயற்சிக்கான தடயங்களை, அக வாழ்வில் பெண்ணை வெல்வது- புற வாழ்வில் நிலத்தை வெல்வது என இலக்கிய வாழ்வு காட்டும் ஓட்டங்களை நூல் நெடுக காண்கிறோம். இது தமிழரின் தனிச்சிறப்போ ஏகபோகமோ அல்ல, உலக முழுதுமான ஆண் உடலின் ஆதிக்க ஆட்டம்தான் என எனக்குத் தோன்றியது.

சங்க இலக்கியங்களில் 41 பெண் கவிஞர்கள் எழுதிய 181 கவிதைகள் கிடைத்தது குறித்து நூல் பேசுகிறது. காதலை, காமத்தை வெளிப்படையாகப்பேசி, பெண்ணுறுப்புகளின் மீதான இழிவு அவலமும் பேசப்பட்டுள்ளதாக ஆசிரியர் காட்டுகிறார். ஆணின் காமம் ஓரிடத்தில் மட்டும் குவிந்திருக்கும் நிலையில், பெண்ணின் காமம் அவள் உடல் முழுக்கப் பரவிக் கிடக்கிறது எனப் பாடல்கள். சில இடங்களில் பெண்ணின் எதிர்க்குரல், தனித்தன்மை பதிவானதாகவும் நூல் சொல்கிறது.

திருக்குறளின் அறக்கருத்துகள் தேவ வாக்கியங்கங்கள் என நம்பும் போக்கு மீது ஆசிரியர் விமர்சனம் வைக்கிறார். உலகப் பொதுமுறை என ஏற்றிச் சொல்வதும் புனைவே என்கிறார் ஆசிரியர்.

1800 ஆண்டுகாலத் தமிழிலக்கத்தியத்தில் ஒடுக்கப்பட்டோரின் குரல்கள் இல்லை என்கிற விமர்சனம் நூலில்.. தமிழில் இதிகாசம் ஏன் இல்லை என்கிற கேள்வி பல்லாண்டுகளாக என்னிடம் உண்டு. இந்நூலாசிரியர் கொஞ்சம் விடை தேடுவதைப் பார்த்தேன். புராணங்கள் வழி தமிழ் சமூக வரலாறு புனையப்படவில்லை. தொன்மங்கள், தொன்மக் கதைகள் தமிழ் பண்பாட்டில் இடம்பெறவில்லை. பூர்வீகம் பற்றி நம்பமுடியா இட்டுக்கதைகள் இல்லை , தமிழ் புராணம் என ஏதுமில்லை என ஆசிரியர் சொல்லிச் செல்கிறார்.

புலையன், இழிசினன் என்கிற குறிப்பீடுகள் இருந்தன. உணவுப் பழக்க வழக்கம், மண உறவு, தோலின் நிறம் , தொழில்கள் வைத்து நால்வருணப் பாகுபாட்டிற்குள் அடக்கும் முயற்சியை காப்பியக்கால செல்வாக்கில் காண்கிறோம் என்கிறார் ஆசிரியர். பெரியபுராணம்,

இறைவன் முன் அனைவரும் சமம் எனப்பேசியதாகச் சொல்வதை இந்நூல் விமர்சிக்கிறது.

அரவாணிகள் கட்டுரை விரித்து தனி நூல் எழுதும் அளவு அடர்த்திக்கொண்டுள்ளது. ஆண் பெண் சிதைவில் இரண்டும் கலந்த உடலினை எதிர்கொள்வதில் சமூகம் குழம்புவதை ஆசிரியர் இலக்கியப் பாடல் வழி விவரிக்கிறார்.

தன்னிச்சையாக வாழ்ந்த பெண்ணின் இருப்பினை மறுத்து தனி அடையாளத்தை அழித்திடும் வகையில் அனைத்து அறநூல்களும் ஆண் அறம்பாடிகளாக இருக்கின்றன என்ற விமர்சனத்தைக் காணலாம்.

ஆர்வமுள்ளவர் 150 பக்க இந்நூலை வாசித்துப் பார்க்கலாம்..

16-1-2026

Jan 17

modern western poets

முருகுசுந்தரம் எழுதிய புதுக்கவிஞர்கள்- modern western poets சிறிய நூல்தான். போதலேர், ரெம்போ, ரெய்னர், பவுண்ட், எலியட், மாயகோவ்ஸ்கி, லார்கா, ப்ரெக்ட், நெருடா எனச் சிறு சிறு அறிமுகங்களை செய்திருப்பார்.

ஸ்பெயினின் கவி லார்கா பாடல் Song of the withered Orange tree. அதை முருகுசுந்தரம் தந்துள்ளார்

கோடாலிக்காரா

என் நிழலைக் கூட

வெட்டி எறிந்துவிடு.

பயனற்று நிற்கும்

பரிதாபநிலையிலிருந்து

எனக்கு விடுதலை கொடு...

....

என்னையே நான்

காணமுடியாத

வாழ்க்கை

எனக்கு வேண்டும்

கோடாலிக்கார

என் நிழலைக் கூட

வெட்டி எறிந்துவிடு...

ப்ரெக்டின் கவிதைகளிலிருந்து

ஒருவன்

தன்னைப் பற்றி

மிகையாக

நினைத்துக்கொண்டிருப்பதாகப்

பிறர் கருதக்கூடாது

பாதையோரத்தில்

உட்கார்ந்திருக்கிறேன்

காரோட்டி

சக்கரத்தை

மாற்றிக்கொண்டிருக்கிறான்

எங்கிருந்து

நான் புறப்பட்டேன்?

எங்கு

போய்க்கொண்டிருக்கிறேன்?

எதைப்பற்றியும் விருப்பமில்லை

பின் ஏன்

அவன் சக்கரம் மாற்றுவதைப்

பதற்றத்தோடு

பார்த்துக்கொண்டிருக்க வேண்டும்?

நெருடா எழுதிய ஒன்று

நூலே

என்னைப் போகவிடு

நான்

உறைபோட்ட

பெரிய தொகுதிகளை

எழுதமாட்டேன்

நான் பிற தொகுதிகளிலிருந்து

உருவாவதில்லை

என் கவிதைகளும்

பிற கவிதைகளைத்

தின்று வளர்வதில்லை

அவை உணர்ச்சியூட்டும்

நிகழ்ச்சிகளையே

விழுங்குகின்றன

மாயகோவ்ஸ்கி வரிகள்

என்னைக் குறிக்கும்

நான்

எனக்கு

மிகச் சிறியதாக

நான் கருதுகிறேன்.

பொறுத்திருந்து பாருங்கள்

என்னிலிருந்து

எவனோ ஒருவன்

வெடித்துக் கிளம்ப

காத்திருக்கிறான்

மெரினா ஸ்வெட்டாவா வரிகள்

உனது பேனா எழுதும்

பக்கம் நான்

நான் ஒரு வெள்ளைப் பக்கம்

எல்லாவற்றையும்

ஏற்றுக்கொள்கிறேன்

நீ வழங்கும் பொருள்களுக்கு

நானே பொறுப்பாளி

நூறு மடங்காகத்

திருப்பிக் கொடுப்பேன்

நான் ஒரு சிற்றூர்

கறுப்பு மண்

எனக்கு ஒளியும்

ஈரமழையும் நீதான்

நான் கறுப்பு மண்

வெள்ளைப் பக்கம்

போதலேர் வரிகள்

சாவே

தெய்வீகப் பெரும்புகழே

தேடலுக்குப் புலப்படாத

கற்பனைக் களஞ்சியமே

ஏழை விரும்பும்போது

எடுத்துச் செலவிடும்

பரம்பரைச் சொத்தே

புரிந்து கொள்ள முடியாத

வானுலகின் வாயிற்கதவே...

ஆண்டவனே

என் உடம்பையும்

இதயத்தையும்

வெறுப்பில்லாமல் பார்க்க

எனக்கு ஆற்றலைக் கொடு..

டி எஸ் எலியட் தன்னைப் பற்றி

எழுத்தரின் சாயல்

கடுகடுப்பான புருவம்

போலிப் புன்னகை உதடுகள்

கனவான் எலியட்டைக்

காணச் சகிக்கவில்லை

இனிய பேச்சு

ஆனால் ..என்ன...கச்சிதம்.

இருந்தாலும் இருக்கலாம்

என்ற இடை வெட்டுகள்

17-1-2026

jan 19

ஷாகித் சித்திக்கின் சாட்சியம்-2

'I , Witness by Shahid Siddiqui' குறித்து அறிமுகப்படுத்தியிருந்தேன். இஸ்லாமிய டெல்லி வாழ் குடும்பத்திலிருந்து, இந்திய அரசியலை கண்ணுற்ற பயணித்த மனிதரின் பிரதிபலிப்பு. நினைவுகளும் வரலாறும் என பின்னிக்கொள்ளும் நூல்வகையெனலாம்.

சித்திக், நேருவைப் பார்த்த சிறுவனாக, லால்பகதூர் பற்றியும், இந்திரா குறித்தும் அறிந்த மாணவனாக பதிவைச் சொல்கிறார். 1969ல் பின் நாட்களில் புகழ் வாய்ந்தவர்களாக உருவான அருண் ஜேட்லி, யெச்சூரி ஆகியவர்களுடன் டெல்லி பல்கலை மாணவனாக சித்திக்கும் சேர்ந்து இயங்கியதைக் குறிப்பிடுகிறார்.

பிரகாஷ் காரத்வெளிநாட்டு கல்வி முடித்து வந்த சூழலும் கூட. அவர் இங்கிலாந்தில் தாரிக் அலி போன்றவருடன் மாணவர் இயக்கத்தில் அனுபவம் பெற்று வருகிறார். அங்கு சப்தர் ஹஷ்மி, சோகயில் ஹஷ்மியும் செயல்பட்டு வந்தனர். சாகித்திற்கு புகழ் வாய்ந்த மார்க்சிய அறிஞர் ரந்திர்சிங் பேராசிரியராகவும் வாய்த்தார். ஆங்கிலம் எடுத்த குமரேஷ் சக்கரவர்த்தி டெல்லி கல்லூரி ஆசிரியர் சங்கப் பொதுச்செயலர். பேரா ரந்திர் , மாணவர்களிடம் துணிந்து கேள்வி கேள்- கடவுளோ, காந்தியோ - முல்லாவோ மார்க்சோ எவரையும் கேள்விக்கு உட்படுத்து எனச் சொல்லி விவாதச் சூழலை வளப்படுத்தினார். மாணவர்கள் , கன்னாட் பிளேஸ் இந்தியா காபி ஹவுசை முழுநேர விவாதக்களமாக்கிய தருணமது. காபி 15 பைசா காலமது.

1970 ஆம் ஆண்டில் டெல்லி இஸ்லாமிய மாணவர் மூவர் சகிதம் சித்திக் , இந்தியாவை அறிதல் என்கிற சாகச நடை பயணத்தில் ஈடுபட்டார். தினம் 40 கி மீ நடை- 5 மாதங்கள் தொடர்ந்து.சாகசம், ஆபத்து என புதிய அனுபவங்களைப் பெற்றனர். தமிழ்நாட்டில் நுழைந்தபோது, பையில் இருந்த இந்தி எழுத்து ஆபத்தானது. சில இடங்களில் ஊர்க்காரர்கள் சந்தேகப்பட போலீஸ் ஸ்டேஷன் அவதிகள். வழிப்பறி திருடர்கள் கூடி பயமுறுத்திய அனுபவம். எல்லோரிடமும் டெல்லி மாணவர்கள் என்கிற அடையாளத்தை புரியவைத்து அதிக வதையின்றி வெளிவந்த அனுபவங்கள். பணம் பிடுங்கிய போலீசாரும் உண்டு, இரக்கப்பட்டு உணவு கொடுத்து அனுப்பிய திருடரும் உண்டு, ஊர்க்காரர்களும் உண்டு. ஓரிடத்தில் என்ன பாகிஸ்தானியரா எனக் கேட்டு துன்புறுத்திய நிகழ்வும் இருந்தது.

சித்திக்கிற்கு அப்பா வாகித்தின் உருது பத்திரிகையை தொடர வாய்ப்பு மாணவப் பருவத்திலேயே கிடைத்தது. சிபிஎம் கட்சியின் முக்கிய தலைவராக அப்போது தோழர் சுர்ஜித் இருந்தார். அன்போடு பழகக்கூடியவர். 1930 களிலேயே உருது பத்திரிகைகளுடன் தொடர்பு கொண்டவர். சித்திக் எப்போதும் சுர்ஜித்தை ‘பாபாஜி’ என அழைப்பார். 1971 முதல் SFIல் சித்திக் மற்ற தோழர்களுடன் செயல்படலானார். சில மாதங்களில், துடிப்பாக இருந்த யெச்சூரி, சித்திக் இருவரையும் சுர்ஜித் அழைத்து இருவரும் ஒரே நாளில் சிபிஎம் கட்சியில் சேரலாம் வாருங்கள் என அழைத்தார்.

சித்திக்கிற்கு உருது பத்திரிகை முக்கியம். அந்த சுதந்திரம் இருந்தால் கட்சிக்கு வருகிறேன் எனப் போய் நின்றார். சுர்ஜித் மற்றவர்களுடன் ஒருவேளை கலந்து பேசியிருப்பாரோ, தெரியவில்லை. சித்திக், நீ இப்போது சேரவேண்டாம், உருது இதழில் செயல்பட, முஸ்லீம்கள் மத்தியில் பணியாற்ற நீ ஒப்படைத்துக்கொள், பின்னர் பார்க்கலாம் என்றார். கட்சியில் என்றால் கட்டுப்பட்டுத்தான் எழுத வேண்டியிருக்கும் என்கிற அறிவுரையும் சுர்ஜித் தராமல் இல்லை. பேரா ரந்தீர் மிகப் பெரும் மனிதாபிமான மார்க்சிஸ்ட் எனச் சொல்லும் சித்திக், சுர்ஜித் பற்றி

I have known many communists, but none as pragmatic, realistic, open and down to earth as com Surjeet என எழுதுகிறார்.

சித்திக் கட்சியில் சேர அழைக்கப்பட்டது, என் சொந்தக் கதைக்கு என்னை அழைத்துச் சென்றது. 1977 டிசம்பரில் பணியில் சேர்ந்த சில நாட்களிலேயே, தொழிற்சங்கத் தலைவர் கே எஸ் கே என்னிடம் சோவியத் பப்ளிகேஷனான Dialectical and Historical Materialism என்கிற பெரிய நூலைக் கொடுத்து படி என்றார். ஆங்கிலம் படிக்கத் தெரிந்தால் போதுமா, ஒன்றும் புரியவில்லை. 1978 ஜனவரியா, பிப்ரவரியா நினைவில் இல்லை. தோழர் ஞானையா (தொழிற்சங்கத் தலைவர், மார்க்சிய எழுத்தாளர்) தஞ்சை வருகிறார். மூன்று புதிய தோழர்களை கட்சிக்குள் கொணர்கிறோம், நீயும் ஒருவன் என தஞ்சைக்கு வரச்சொன்னார் கே எஸ் கே. நான் போய் நின்றேன். மற்ற இருவரும் தஞ்சாவூர் தோழர்கள்தான். அவர்களை அழைத்து அழைத்துப் பார்த்து கொணரமுடியவில்லை. ஒருவர் சிபிஎம், மற்றவர் எம் எல் லிபரேஷன் எனப் போனதை பின்னர்தான் அறிந்தோம்.

தோழர் ஞானையாவை அப்போதுதான் முதலில் பார்க்கிறேன். எனக்கு வயது 22 முடியவில்லை. அவருக்கு 58 இருக்கலாம். அவர் உதட்டில்

வெளிநாட்டு சிகரெட். முதல் காட்சி எனக்கு அப்படித்தான். ஏன் சிகரெட் என கே எஸ் கேவிடம் கேட்ட நினைவு. பிறகு ஓரிரு மாதங்களில் திருவாரூர் ரயில்வே பிளாட்பார்மில் தொழிற்சங்கத் தலைவர் தோழர் ஆர். கே, திருவாரூரில் புகழ் வாய்ந்த தோழர் ராமதுரையை கட்சிக்கு கொணர்ந்தார். ராமதுரை மணமானவர்- 24 வயது -அவ்வூரின் அழகுப் பெட்டகம். எம் ஜி ஆர் என்கிற பரோபகாரி. இருவரும் சேர்ந்து கட்சி கூட்டங்களுக்கு மாதமாதம் தஞ்சாவூர் சென்று, விடியற்காலை ஊர் திரும்புவோம்.

எங்கள் குடும்பத்தில் தாத்தா, மாமா காங்கிரஸ்காரர்கள். தாத்தா நேரு, காமராஜ் மீது அபார பற்றுக் கொண்டவர். நேரு இறந்த செய்தியை ரேடியோ அறிவித்தபோது அவரின் அதிர்ச்சியை குடும்பத்தார் பார்த்தோம். தஞ்சை கரந்தை சந்நதி தெருவில் இருந்தபோது அமைச்சராக கக்கன் வீட்டிற்கு வந்து ஸ்வீட்- காரம்- காபி எடுத்துக்கொண்டது சிறுவனாக நினைவிற்கு வருகிறது. கரந்தை பரசுராமர் தெருவில் மாமா காங்கிரசிற்காக தன் நண்பர்களை சேர்த்துக்கொண்டு, ஊர் பெரிய மனிதர் ராஜாஜியின் நண்பரை எதிர்த்து தேர்தல் வேலைகள் செய்தது நினைவில்.. அக்குடும்பத்திலிருந்து முதல் முறையாக ஒருவன் கம்யூனிஸ்ட் கட்சிக்கு அழைத்து வரப்பட்டவனானேன். தெருவில் கலகக்கார நாகராஜ் என்கிற இளம் உழைப்பாளி இளம் கம்யூனிஸ்ட் தலைவர் ஒருவரை அழைத்து வந்து (பெயர் நினைவில் இல்லை) கொடியேற்றி பலருக்கும் கோபத்தை கிளர்த்தினார். சிறுவர்களாகிய எங்களுக்கு நாகராஜன் ஸ்வீட் கொடுத்தது நினைவில்.. பின்னர் அவர் மதுரை பென்னர் கம்பெனிக்கு போய்விட்டார்..

சித்திக்கின் நூல் இந்த நினைவுகளை என்னிடம் கிளர்த்தியது. சரி , நூலுக்கு வருகிறேன்.

சித்திக் குடும்பம் நிதி நெருக்கடியில் சிக்குகிறது. பத்திரிகை கடன் உயர்ந்துவிட்டது. வீட்டுச் சாமன்களை விற்றுத்தான் அன்றாட ‘போஜனம்’ நிலை. மாணவன் சித்திக் அப்பா கணக்கில்லாமல் சேர்த்து வைத்திருந்த புத்தகங்களை பூட்டியிருக்கும் பழைய புத்தகக் கடை முன் நின்று, எட்டணாவிற்கு கூட விற்ற வறுமை. சற்று எளிய மக்கள் வாழும் பகுதிக்கும் குடிபெயர்தல் நிகழ்ந்தது. அங்கு புகழ் வாய்ந்த ஓவியர் எம் எப் ஹுசைனுடன் பழக்கம் ஏற்பட்டது.

பார்க்கலாம்..சித்திக்கின் இந்திய சாட்சியம் மேலும் எப்படி அழைத்துப்போகிறதென.. 19-1-2026

jan 22

சித்திக்கின் சாட்சியம் 3

துர்கா மாகாளியான கதை

அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் நீதிபதி ஜக்மோகன்லால் சின்ஹா, ஜூன் 12, 1975ல் ராஜ் நாரயண் எதிர்த்த இந்திராகாந்தி தேர்தல் செல்லாது எனத்தீர்ப்பளிக்கிறார். இந்திராவிற்கு ஆறு ஆண்டுகள் தேர்தலில் நிற்கத் தடை என்றும் சொல்லப்பட்டது.

ஜூன் 25 , 1975 இரவில் படுக்கைக்குச் சென்ற பக்ருதீன் அலி குடியரசுத் தலைவர் எழுப்பப்பட்டு, எமர்ஜென்சி அறிவிப்பு ஒப்புதல் பெறப்படுகிறது. ஜூன் 26 காலை அறிவிக்கப்படுகிறது. அனைத்து எதிர்கட்சித் தலைவர்களும் கைதாகின்றனர்.

சித்திக்கின் அப்பாவிற்கு வயது 80. அலகாபாத் தீர்ப்பு வந்தவுடன், நயா துனியாவில் சித்திக் கட்டுரை ஒன்றை எழுதுகிறார். பதவி விலகுதலா அல்லது சர்வாதிகாரமா, இந்திரா எதை தேர்ந்தெடுக்கப்போகிறார் என்று. சித்திக் அப்போதுதான் கல்லூரி விரிவுரையாளராக டெல்லியில் சேர்ந்த சமயம். ஜூன் 26 காலை , நயாதுன்யா கதவு தட்டப்படுகிறது. வெளியில் அப்பாவை சுற்றி 12 போலீசார். சீக்கியர் இன்ஸ்பெக்டர். சோதனைப்போட்டு அனைத்தையும் எடுத்துச் செல்கின்றனர். எடிட்டரில் அப்பா பெயர் இருந்ததால் அப்பாவிற்கு சோதனை. 80 வயதுக்காரரை உட்காரக்கூட சொல்லாமல் பலமணிநேரம், காவல் நிலையத்தில் நிற்கவைத்து களைப்பாக்கி, சிறைக்கு அனுப்புகின்றனர்.

காஷ்மீர் பிரச்சனைக்காக, நேரு ஆட்சியில் அப்பாவை சிறை அனுப்பியபோது மிகவும் கண்ணியமாக நடத்திய போலிசா இது என சித்திக் எழுதுகிறார். Pre censor என்கிற வகையில் தினம் சென்று , அவர்கள் அடித்து நீக்குவதை போடமுடியாத தடை. எச் என் பகுகுணா நேரிடையாக இந்திராவிடம் சென்று , அப்பா வாகித்தின் வயது மற்றும் சேவைகளை மனதில் கொண்டு விடுவிக்கக் கோரினார். வாகித் வெளிவந்தார். என்ன நினைத்தனரோ , மீண்டும் வழக்கு கைது. இம்முறை தில்லான் தலையிட்டு, வாகித்தை வெளிவரச் செய்தார்.

மாணவர் கிளர்ச்சி பீகாரில் எழுந்தது. ஜேபி பெருந்தலைவராக வழிகாட்டிக்கொண்டிருந்தார். இக்கிளர்ச்சியில்தான், லல்லு- நிதீஷ்- பாஸ்வான் போன்றவர் வளர்ந்தனர்.

கல்லூரியில் சித்திக்கி அருகே கூட பிற ஆசிரியர் வர அஞ்சினர். எமர்ஜென்சி தவறு என நினைத்த சிலர் மட்டும் ஆறுதலாக நின்றனர். சஞ்சய் காந்தி, மேனகா புதிய power centre ஆக மாறினர். துர்க்மேன்கேட் துப்பாக்கி சூடு, ஆயிரக்கணக்கில் மக்கள் வெளியேற்றம் நடந்தது. கட்டாய குடும்பக்கட்டுப்பாட்டில் பலர் தொல்லைக்குள்ளாயினர். துர்க்மேன்ன்கேட் பகுதி பக்ருதீன் அலி இருந்து வாழ்ந்த பகுதி. அவர் துயரப்பட்டு, அப்பகுதிக்கு சென்று பார்த்தார். இந்திராவை அழைத்து, உடனடியாக சஞ்சயை கட்டுப்படுத்தவில்லையெனில், துர்க்மேன் இடிபாடுகளை நிறுத்தவில்லையெனில், பதவி விலகி மக்களிடம் பேச ஆரம்பிப்பேன் என கடும் கோபத்தை வெளிப்படுத்தினார்.

பக்ருதீன் , இக்காலத்தில் பெரும் மன உளைச்சலில் இருந்த நிலையை, பின் நாட்களில் சித்திக்கி சந்தித்தபோது, அலி அவர்களின் துணைவியார் அபிதா பேகம் சொல்லியுள்ளார். பிப்ரவரி 1977ல் பக்ருதீன் மறைவையும் பார்க்கிறோம். எமர்ஜென்சி அறிவிப்பு செய்தவுடன், தான் ராஜினாமா செய்துவிடலாமா என நெருங்கியவர்களிடம் பக்ருதீன் கேட்டாராம். ஜெகஜீவன் ராம், கூடவே கூடாது, கொஞ்சம் பொறுமை காப்போம் என ஆறுதல் சொன்ன செய்தியையும் அபிதா பேகம் சித்திக்கிடம் சொல்லியுள்ளார்.

சஞ்சய் நண்பர், சட்ட அமைச்சர் பரத்வாஜை அழைத்து நல்ல ‘டோஸ்’ இந்திரா விட்டார், உடனடியாக அனைத்து மீறல்களும் நிறுத்தப்படவேண்டும், எனக்குத் தெரியாமல் எதுவும் செய்யக்கூடாது என எச்சரிக்கை செய்து அனுப்பிய செய்தியை சித்திக்கி சொல்கிறார்.

இந்திராவின் தோல்வி, ஜனதா கட்சி சோதனைப் பற்றி சித்திக்கி எழுதுகிறார். மத்தியில் காங்கிரசல்லாத சர்க்கார் என்கிற காட்சியை நாடு கண்டது. ஜனதாவில் உட்சண்டையே அதனை வீழ்த்திவிட்டது. நிதி அமைச்சராக இருந்த எச் என் பகுகுணா, பிரதமர் மொரார்ஜி பற்றி சித்திக்கியிடம் இவ்வாறு சொன்னாராம்

Governance in a democracy is the art of creating a consensus and our PM (Morarji) has not even heard the word.

எமர்ஜென்சியில் பழிவாங்கப்பட்டோர் நிர்ப்பந்தத்தால், சரண்சிங் அதிரடியாக இந்திராவை கைது செய்ய உத்தரவிட்டார். சஞ்சய், மேனகா பேட்மிட்டன் விளையாடிக்கொண்டிருந்தனர். கிரண்பேடி போலீசார் சகிதம் நுழைகிறார். சஞ்சய் தன்னைத்தான் பிடிக்க வந்துள்ளனர் எனக் கருதி, 5 நிமிடம் வருகிறேன் என்றார். கிரண், இல்லை இல்லை மேடம் இந்திராவை என்கிறார். சஞ்சய் சத்தம்

போடல்..எமோஷனல் காட்சிகள். இந்திரா கைவிலங்கிடு என்கிறார். இல்லை என மிக மரியாதையுடன் அழைத்துச் செல்லவே வந்துள்ளோம் என்கிறார் கிரண்பேடி.

எங்கோ ஹரியானா பக்கம் வண்டி செல்கிறதே, நம்மை இல்லாமல் ஆக்க சதியா என இந்திரா மனதில் சந்தேகம். ரயில்வே கேட் ஒன்றில் வண்டி நிற்க, இந்திரா இறங்கி தெருவில் நின்று வர மறுக்கிறார். மக்கள் சேர்ந்துவிட்டனர். டெல்லி என்றால் வருகிறேன் என்கிறார். மக்களிடம் கைகூப்பிவிட்டு, வண்டியை டெல்லிக்கு திரும்ப வைக்கிறார். மாஜிஸ்ட் ரேட் இந்திராவை விடுவிக்கிறார். இக்காட்சிகளை சித்திக்கி தேர்ந்த பத்திரிகையாளராக வர்ணித்திருப்பார்.

அப்பா வாகித்திடம், சித்திக்கி சொல்கிறார்- இந்திராவிடம் பேட்டிக்கு நேரம் கிடைத்துள்ளது என்று. சரி நல்லபடியாக நேர்மையாக செய். இந்திரா எங்களை சிறையில் அடைத்தது, நாங்கள் அவரை எதிர்த்தது என்கிற மனநிலையில் பேட்டி எடுக்கப் போகாதே. பத்திரிகையாளன் நேர்மையை மனதில் வைத்துக்கொள் என்றார். சித்திக்கி நினைத்ததைவிட, இந்திரா மிக மிக எளிமையாக, பொறுமையாக பதில்களை தந்தாராம். இவ்வளவிற்கும்முன்கூட்டியே கேள்விகளை அனுப்பவில்லையாம்.

சஞ்சய்யும் தன் நண்பர்களுடன், முதியவர் வாகித்தை வீடுதேடி வந்து, ஏதாவது அதிகப்படியாக நடந்திருந்தால் அதற்கு வருத்தம், தங்களின் ஆசிவேண்டி வந்தேன் என வணங்கினாராம். அப்பா வாகித்தும், நீ நன்றாக வளர வேண்டும் என வாழ்த்தி அனுப்பினாராம். எவர்தான் தவறு செய்யாதவர்..வாழ்க்கைதான் நமக்கு நல்ல பாடம் என்றாராம். ஜனதா ஆட்சி வந்தாலும் வாகித் போன்றோர் மீதான வழக்கு விசாரணைகள் இருந்தன. பகுகுணாவால் ஏதும் செய்யமுடியவில்லை. சித்திக்கி கல்லூரி நண்பர், அத்வானியைப் பார்- உதவலாம் என்றார். சித்திக்கியை நன்கு வரவேற்ற அத்வானி, எல்லாவற்றையும் கேட்டுவிட்டு, தொலைபேசியில் எவரிடமோ உரையாடினார்.வாகித் கேஸ் பற்றிச் சொன்னார். பார்க்கலாம் எனச் சொல்லி அனுப்பினார். 10 நாட்களில் வாகித் மட்டுமல்ல, இன்னும் எமர்ஜென்சி கால பல நண்பர்களின் வழக்குகளை டெல்லி போலீசார் திரும்பப் பெறுவதாக அறிவித்தனர். வாகித் தள்ளாத வயதில் அடைந்த தொந்தரவிலிருந்து விடுவிக்கப்பட்டார்

இந்திராவிற்கு மாந்திரீக தாந்தீரிக நண்பர்கள் பிரம்மச்சாரி, சந்திராசாமி, மௌலான இல்யாசி போன்றோர் கிடைத்தனர். அவர்கள்

சொல்லக்கூடிய சடங்குகளையெல்லாம் இந்திரா ஏன் செய்து வந்தார் என்கிற கேள்வி சித்திக்கிடம். தர்கா சென்று அங்கு தரை கூட்டி 'மாப்பு' போட்ட சடங்கு கூட செய்தார் எனத் தகவல் வந்ததாம்.

ஜனதாவில் ஜெகஜீவன் பிரதமர் ஆகும் கனவை, அவரது மகன் சுரேஷ் ராம் 'செக்ஸ் ஸ்காண்டல்' காணடித்துவிட்டது என சித்திக்கி எழுதுகிறார். சஞ்சய் - ராஜ் நாரயண் சந்திப்பு மொரார்ஜியை கவிழ்த்து, சரண்சிங் பிரதமராக வழி வகுத்தது. சரண்சிங் சுய மரியாதை, சஞ்சய் ஆட்டுவிப்புகளை ஏற்காமல், தேர்தல் மீண்டும் இந்திரா என்ற அரசியல் காட்சிகளை உருவாக்கின..

பார்க்கலாம்..மேலும் சித்திக்கி சொல்வதை.. history cum memoirs..

22-1-2026

jan 23

Leftism in India

Leftism in India 1917-1947 by Prof Satyabrata Rai Chowdhuri மற்றும் The Battle of the Left- Comrades Comebacks by Saira ShahHalim என்கிற இடதுசாரிகள் குறித்த இரு நூல்கள் கண்ணில்பட்டன.

மறைந்த சத்யபிரதா ராய் அவர்களின் முதல் நூலை இணையத்தில் பார்த்த நினைவு இருக்கிறது. பேரா ராய் சௌத்ரி 1977ல் எழுதி பின்னர் 2007ல் இந்தப் பெயரில் மாக்மில்லன் லண்டன் வெளியீடாக வந்தது. நூலின் ஆழம் அடர்த்தி கருதி மீண்டும் 2017ல் sage பதிப்பகம் கொணர்ந்துள்ளது. இது அமேசான் வழி கிடைக்கிறது.

இரண்டாவது நூல் சாய்ரா ஷா ஹலீம் எழுதியது. பெண்ணியவாதி, பத்திரிகை எழுத்தாளர், போராளி, 2022 தேர்தலில் சிபிஎம் சார்பில் போட்டியிட்டு காங், பாஜக விட அதிகம் வாக்குகளைப் பெற்றவர் சாய்ரா. TMC வேட்பாளர்க்கு சவாலாக நின்றவர். வெற்றிபெற முடியவில்லை. கார்ப்பரேட் உலகில் பணியாற்றிய அனுபவமும் கொண்டவர் சாய்ரா. அவர் எழுதி 2025ல் வெளியான நூல்தான் Comrades Comback.

ராய் சௌத்ரியின் நூல் மிக ஆழமான ஒன்று. ஆனால் 1947 உடன் அவர் தன் ஆய்வை நிறுத்திக்கொண்டநூலது. இந்தியாவில் இடதுசாரி சிந்தனை உருவாக்கம், எம் என் ராய் உள்ளிட்டோர் செயல்பாடுகள், காங்கிரசில் நேரு சுபாஷ் போன்ற இடது பார்வை கொண்டோர், காங்கிரஸ் சோசலிஸ்ட்கள், இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி அதன் செயல்பாடுகள் என்கிற விரிவான இடதுசாரிகள் என்கிற பரப்பில் இந்நூல் செல்கிறது. Conceptually strong எனச் சொல்லக்கூடிய அழுத்தமான கருத்தாக்க மதிப்பிடல்கள் இந்நூலின் சிறப்பு எனலாம். இரண்டாவது இயலான Ideologies and Orientations இந்த எண்ணத்தை எனக்கு நல்கியது.

மூன்றாவது இயலில்தான் ராய் சௌத்ரி, communism in India என மிக விரிவாக விவரங்களுடன் பேசுவார். எம் என் ராய் அதிகமான இடத்தை எடுத்துக்கொள்கிறார். அதேபோல் CPI- CPSU, CPI- CPGB, கோமிண்டர்ன், இந்தியாவில் INC- CPI, CPI- CSP உறவுகள் பேசப்படும். காங்கிரசிற்குள் வலது- இடது போராட்டம், இடதின் வளர்ச்சி என்பதும், இக்காலத்தில் நடந்த விவசாய- தொழிலாளர் இயக்கங்கள் குறித்தும் ராய் தன் பார்வையை வைத்துள்ளார். இக்காலத்தில் தனியே

செயல்பட்ட பார்வர்ட் பிளாக், ஆர் எஸ் பி , எம் என் ராயின் ராடிகல் கட்சி பற்றியும் ஆசிரியர் பேசுகிறார். நீள அகல உயர 200 பக்க நூல்.

Comrades Comeback விரிவான நூலாகத் தெரிகிறது. படிக்கப் படிக்க அதன் தன்மையை உணரமுடியும் என நம்புகிறேன். சோவியத் தாக்கத்தில் உருவான இந்திய இடதுசாரிகள் கடந்த நூற்றாண்டாக செய்தவற்றை, கேரளா- மேவ- திரிபுரா அனுபவங்களை அசைபோட்டுப் பார்த்து, இன்றுள்ள தேர்தல் சூழலில் இடதுசாரிகள் வீழ்ச்சிக்கு உட்பட்டு நிற்பதையும் சொல்லி, எழுக தோழர்களே மீண்டும் வருக தோழர்களே என்கிற நம்பிக்கையை முன் வைக்க விரும்பும் நூலாகத் தெரிகிறது.

ராய், முன்னர் தலைமுறை பேராசிரியர் என்றால், சாய்ரா இன்று வளரும் இளம் அறிஞர், செயல்பாட்டாளர். பார்க்கலாம் ..இரண்டு நூல்களும் எப்படி என்னிடம் விவாதிக்கப் போகின்றன என..

23-1-2026

jan 25

Cambridge Companion- Periyar

தமிழ்நாட்டைச் சார்ந்த தலைவர் ஒருவரின் சிந்தனைத்திறன் வியக்கப்பட்டு, அவருக்கு Cambridge Companion நூல் வருவது பெருமைக்குரிய ஒன்று. பெரியார் அவர்களுக்கு இப்படி ஒரு நூலை அறிஞர்கள் ஆய்வாளர்களான வேங்கடாசலபதி, கார்த்திக் ராம்மனோகரன் உழைத்து உருவாக்கியிருக்கிறார்கள். அவர்களின் உழைப்பிற்கு வாழ்த்தும் வணக்கமும்.

மார்க்ஸ், காந்தி போன்றவர்க்கு வந்த Cambridge companion பரவலான கவனத்தைப் பெற்றதைப் பார்க்கமுடியும். உலகம் பெரியாரைப் புரிந்துகொள்ள இந்நூல் துணையாக நின்றால், நூல் அதற்கான பயனைப் பெற்றுவிடும். காலம்தான் இதற்கு பதிலளிக்க வேண்டும்.

பெரியாரை thematic ஆக கொண்டு செல்ல, எடிட்டர்கள்- எழுத்தாளர்கள் துணையுடன் முயற்சி செய்துள்ளனர். தமிழ்நாட்டில் பெரியார் குறித்து கடந்த 90 ஆண்டுகளில் எப்படியான பார்வை, விவாதம் நடைபெற்றதோ, கடத்தப்பட்டதோ அந்த topics பொதுவாக இந்நூலில் விளக்க கட்டுரைகளாகியுள்ளன.

எப்படி, லெனினின் சோவியத் புரட்சி -ஆட்சி என்கிறவாய்ப்பால் பெருமளவு உலகம் முழுக்க மார்க்ஸ் எடுத்துச் செல்லப்பட்டாரோ- மார்க்சியம் சென்றதோ, அப்படியொரு வாய்ப்பை தமிழ்நாட்டில், அண்ணாவின் திமுக ஆட்சியால் பெரியார் பெறமுடிந்தது. திராவிட இயக்க 50 ஆண்டுகளுக்கு மேலான ஆட்சி அதிகாரம், உலக அரசியல் படத்தில் முக்கிய சோதனைச்சாலையாகவும் பார்க்கப்பட ஆரம்பித்தது. உலகநாடுகளுடன் இந்தியாவின் வளர்ச்சி என்று மட்டும் பொதுவாகப் பார்க்காமல், சீனாவுடன்- அய்ரோப்பிய நாடுகளுடன் கேரளாவளர்ச்சி, தமிழ்நாட்டின் வளர்ச்சி என்கிற ஒப்பீடுகள் அமர்த்யாசென், ஜான் டிரேஸ், அரவிந்த் சுப்பிரமணியன் போன்ற பலரால் செய்யப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

திராவிட மாடல் வளர்ச்சி என்கிற சொல்லாடலில் ‘நீதிக்கட்சியிடமிருந்து புறப்பாடு’ என்பது இருந்தாலும், அதன் சித்தாந்தப் புள்ளியாக பெரியாரிடமிருந்தே அதன் புறப்பாடு அமையும். அண்ணா அதனை ஜனநாயக அரசியல் சூழல் சோதனையாக- பொருளாதார சமூக சிந்தனைகளை எந்த அளவு தேர்தல் அதிகார அரசியலில் உள்வைத்து மடிக்க முடியுமோ அதனை ஆட்சி அதிகாரம் மூலம் முயற்சித்தார். கலைஞர், எம்ஜிஆர்,

ஜெயலலிதா என விரிந்து இன்று ஸ்டாலின் என இந்த மாடல் - சமூக நீதி , மொழிப்போர், வர்ணாஸ்ரம எதிர்ப்பு, மாநில சுயாட்சி அதிகார விரிவாக்கம் போன்ற அம்சங்கள் வழி தொடர் போராட்டமாக அமைகிறது. பெரியாரின் பிராமண எதிர்ப்புக்கான கருத்தமைவுகள், இந்தி மொழி திணிப்பு எதிர்ப்பு உணர்வுகள் இன்றும் தமிழ்நாட்டில் உயிர்ப்புடன் இருக்கவே செய்கின்றன. கடவுள் குறித்த நாத்திக சிந்தனைகள் பரவலாக்கம் - மக்கள் திரளாக்கச் சிந்தனைகளாகவில்லை என்கிற சூழலும் நிலவாமல் இல்லை. பெருமாளும் பெரியாரும் சேர்ந்தே- தனித்தனி டிராக்கில் மக்களிடம் பயணிக்கிறார்கள். மக்களின் பொதுப்புத்தி முரணாக அதைப் பார்க்கவில்லை. உலகில் பலநாடுகளின் நிலைமையும் இதுவாகவே இருப்பதையும் உணர்கிறேன்.

இங்கு இந்தியாவில் இந்துத்துவா அரசியல் என்கிற புதிய அரசியல் ஒத்திகை - ஆட்சி அதிகார வெளியில் பலமாக்கப்பட்டுள்ள புதிய சூழல் உருவாகியுள்ளது. உலக நாடுகளில் ஆங்காங்கே வலது அரசியல் வலுவான மோதல் களத்தை உருவாக்கி வளரவும் செய்கிறது. அதற்கு பல்வேறு versions with commonality இல்லாமல் இல்லை. வலது அரசியலுக்குள்ளும் முரண்பாடுகள் இல்லாமல் இல்லை.

தமிழ்நாட்டில் ஆட்சி அதிகார வழி பெரியாரிய சிந்தனைகளின் அமுலாக்கம் என்கிற சூழலில், பெரியாரியம் பற்றிய ஆய்வுகளின் இந்தியத்தேவையும், உலக அளவில் அறிமுகம் என்கிற அளவிலாவது எடுத்துச் செல்லல் என்பதும் உணரப்பட்டு, பெரியார் எழுத்துக்கள் இந்தி உள்ளிட்ட இந்திய மொழிகளிலும், ஆங்கிலத்திலும் செல்லத்தொடங்கின. வெளிநாட்டவர் , உள்ளூர் எழுத்தாளர்களின் ஆங்கில நூல்களின் வரவால் பெரியார் scholarship என்கிற அமைவு ஒன்றும் தெரியலானது. அதன் வளர்ச்சிப் பரிமாணத்தின் விளைவாக பெரியாருக்கான ‘கேம்பிரிட்ஜ் கம்பானியன்’ நூலைப் பார்க்கமுடியும்.

வேங்கடாசலபதியும் கார்த்திக்கும் விரிவான முன்னுரை ஒன்றை எழுதியுள்ளனர். எழுத்தாளர் தமிழில் எழுதிக்கொடுத்த கட்டுரைகளை ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கும் உழைப்பையும் வேங்கடாசலபதி செய்துள்ளார்.

‘தீம்கள்’ தமிழ்நாட்டில் பலமுறை பேசப்பட்டவைதான். சில உள்ளூர் அரசியல் அழுத்தங்கள் சார்ந்தவையாகவும், வேறு சில (பெண்ணுரிமை, சுயமரியாதை, நாத்திகம், ஒடுக்கப்பட்டோர்

முன்னேற்றம் etc) உலகளாவிய மதிப்புகள் கொண்டவையாகவும் இருக்கும்.

ஒரு தலைவரின் மேன்மையை பேசும்போது, அவர் எதிர்த்த வேறு தலைவரை சற்று இறக்குவது என்பது நடந்துவிடுகிறது. இந்நூல் எழுத்தாளர்களுக்கு காந்தி குறித்த ஸ்காலர்ஷிப் எவ்வளவு தேர்ச்சியானது என்பதை என்னால் ஊகிக்க முடியவில்லை. மைசூரில் 1927ல் பெரியார் - காந்தி சந்திப்பு தொடர்பானவை பெரியார் கூற்றை மட்டுமே அடிப்படையாக வைத்து பேசுவதாகவே பெரியார் நூல்களில் நமக்குக் காணக் கிடைக்கிறது. காந்தி தரப்பு குறித்து என்ன சொல்லப்பட்டது- முக்கியத்துவம் இருந்ததா, இல்லை காந்தியின் புரிதல் அத்தருணத்திலும்- evolutionary ஆகவும் என்ன என்கிற விவாதம் அங்கு பொதுவாக இல்லாமல் போகிறது. பெரியார் அப்படியெதையும் மிகைப்படுத்தி பேசாதவர் அல்லர் என்பதை என் வாசிப்பு எனக்குச் சொல்வதால், இதை நான் தெரிவிக்க வேண்டியுள்ளது.

அதேபோல் கம்யூனல் அவார்ட் குறித்த கட்டுரையிலும் ஒன்றை நான் பார்த்தேன். ஆய்வாளர் தன் ஆய்வு அடிப்படையில் நேராகச் சென்று , தான் இப்பக்கம்தான் எனச் சொல்வதில் தவறில்லை. அப்படிச் சொல்லாமல் தன் bias மட்டும் சன்னமாகக் காட்டுவதையும் எழுத்தாளர் செய்ய நேரிடும். உதாரணமாக இக்கட்டுரையில் separate electorates- Joint electorates issue வில் எம் சி ராஜாவும் தன் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டிருப்பார். அம்பேத்கரும் மாற்றிக்கொண்டிருப்பார். எம் சி ராஜாவின் மாற்றம் என்கிறபோது renege (எனக்கு Renegade Kautsky என லெனின் எழுதியது நினைவிற்கு வந்துவிட்டது) என்கிற பதமும், அம்பேத்கர் பற்றிச் சொல்லும்போது shifting stance என்பது போல் சொல்லப்படுவதைக் காண்கிறேன்..

இன்னும் படிக்க இந்நூலில் பல கட்டுரைகள் மீதமிருக்கின்றன. படித்த அளவில் தோன்றியதைச் சொல்லியுள்ளேன். வேங்கடாசலபதி, கார்த்திக் ராம்மனோகரன் மற்றும் எழுதியுள்ள அனைவருக்கும் பாராட்டும் வாழ்த்துகளும். நூல் நின்று பேசட்டும்.. தமிழக அரசியல் சூழலில் விற்பனை பலமிருக்கும். உலக விற்பனைப் பொருத்து அதன் வாசிப்பும் வீச்சும் அமையலாம்.. நல் வாழ்த்துகள்..

25-1-2026

jan 26

சித்திக்கி சாட்சியம்-4

ஷாகித் சித்திக்கி எழுதிய 'I Witness' குறித்து கொஞ்சம் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இருதலைமுறை தேர்ந்த டெல்லிவாழ் உருது பத்திரிகை குடும்பம், அரசியல் குடும்பத்தின் அனுபவங்கள், பார்வைகளை இந்நூல் சுட்டிக்காட்டும். கொஞ்சம் வரலாறு- கொஞ்சம் நினைவுகள் என கலந்து போகும்.

அருண் நேரு எப்படி இந்திரா குடும்பத்தில்- அரசியல் ஆலோசகராக இருந்து ஆட்டிப்படைத்தார் என்பதை சித்திக்கி கடுமையான விமர்சனப் பார்வையுடன் எழுதியுள்ளார். காஷ்மீர், பஞ்சாப் பிரச்சனைகளில் மிகத் தவறாக இந்திராவிற்கு போட்டுக்கொடுத்து, எல்லாம் சரியாக செல்கிறது என்கிற நம்பிக்கையை ஏற்படுத்தினார் என்பது சித்திக்கி சொல்லும் குற்றச்சாட்டு.

பிந்தரன்வாலா- ஆப்பரேஷன் புளூ ஸ்டார்- இந்திரா படுகொலை- ராஜிவ் பிரதமராதல் என அனைத்து அம்சங்களிலும் அருண் நேரு சொன்னபடியே டெல்லி அரசியல் நகர்ந்து கொண்டிருந்தது. முடிந்தால், இந்திராவிற்கு அடுத்து தானே பிரதமர் ஆகிவிடலாமா என்கிற 'நப்பாசையும்' அருணுக்கு இருந்ததாக சித்திக்கி எழுதுகிறார். சித்திக்கி பார்வையில் மிகவும் ஆணவம், திமிர் பிடித்த அதிரடி அரசியல் ஆட்டக்காரர் அருண்.

அருண் நேரு, ராஜிவ்- ஜெயில் சிங் மோதலையும் சாதகமாக்கிக்கொள்ள விழைந்ததாகவும், சில இராணுவ அதிகாரிகள் துணையுடன்- ஜெயில் சிங் ஒப்புதலுடன் ராஜிவ் ஆட்சியை கவிழ்க்கும் அளவு சதித்திட்டங்கள் இருந்தன என்றும், இறுதி நேரத்தில் ஜெயில் சிங் தயங்கியதால், வி பி சிங் காய் நகர்த்தப்பட்டு ராஜிவ்க்கு எதிரான அரசியல் அரங்கேறியதாகவும் சித்திக்கி எழுதுகிறார். சித்திக்கி எழுதியதில் மிகையிருக்கிறதா என என்னால் இன்னும் தெரிந்து கொள்ள முடியவில்லை.

ஒருமுறை சித்திக்கியை அழைத்து காஷ்மீர் பரூக் அப்துல்லாவின் காதல் விவகார படங்களைக் கொடுத்து பத்திரிகையில் எழுது, என்ன வேண்டுமானாலும் பெற்றுக்கொள் என பேரம் பேசியதாகவும், இப்படியான பத்திரிகையை தாங்கள் நடத்தவில்லை என மறுத்ததால், தொடர்ந்து அருண் நேரு தொல்லை கொடுத்த தனிப்பட்ட அனுபவத்தையும் சித்திக் சொல்கிறார். மேனகா கூட, ராஜ்யசபா எம்பி ஹெக்டே மூலம் கிடைக்கலாம் என ஒத்துழைப்பைக் கேட்டதை சித்திக்கி பதிவு செய்கிறார். தேர்தல் அரசியல்- ஆட்சி- அதிகாரத்தின்

பல விகார முகங்கள் பயமுறுத்துகிற செய்திகளாக இருப்பதை என்னால் உணர முடிந்தது.

அய் கே குஜ்ரால் , சித்திக்கி அப்பா வாகித்தை சந்தித்தபோது, என்ன செய்வது , இந்திரா மிக அதிகமாக அருண்நேரு- பூட்டா சிங்- ஜெயில் சிங்கை நம்பிப் போகிறார்- கவலைக்குரிய நிலை பஞ்சாபில் எனச் சொன்னதை சித்திக்கி பதிவிடுகிறார்.

ராஜிவ் பதவியேற்ற (இந்திரா படுகொலையடுத்து) தருணத்தில் சீக்கியர் மீதான பெருந்தாக்குதலுக்கு ராஜிவை மட்டும் பிரதமராக இருந்தார் என்பதால் முழுப் பொறுப்பாக்குவதை சித்திக்கி ஏற்கவில்லை. நரசிம்மராவ், டெல்லி போலீஸ், அருண் நேரு போன்றோருக்கும் பொறுப்புண்டு என்கிறார்.

ஷாபானு வழக்கு, அயோத்தி ராமஜென்மபூமி போன்றவற்றில் ராஜிவ் தடுமாற்றத்திற்கும் அருண் நேரு போன்றவர்களை சித்திக்கி குறை சொல்கிறார். ராஜிவ் இயல்பில் shy reserved குணம் உடையவர். சஞ்சய் மறைவுவரை அரசியல் பக்கம் வராதவர். வந்தபோதும் தயக்கத்துடன் வந்தவர். Pizza , Ice cream கடைகளில் எந்த வித அடையாளத்தையும் காட்டிக்கொள்ளாமல், வரிசையில் நின்று வாங்கிச் சென்று சோனியா குழந்தைகளுடன் டேபிள் பிடித்து சாப்பிடக்கூடிய காட்சிகளை பார்த்ததுண்டு என சித்திக்கி சொல்கிறார். ஆனால் அதிகாரச் சூழல், நட்பு குழாம்- போதனைகள் எல்லாம் எவரையும் எப்படி வேண்டுமானாலும் மாற்றிவிடுமே..

சித்திக்கி ஒருமுறை திகார் சிறைக்கு செல்ல நேர்ந்தது. ஆர்வக் கோளாறில் லண்டனில் காலிஸ்தான் அதிபர் என அறிவித்துக்கொண்ட ஜக்சித் சிங் சௌகானை பேட்டி எடுத்துவிட்டார். பேட்டியில் காலிஸ்தானுக்கு எதிரான கேள்விகளை கேட்டிருந்தாலும், தேச விரோத குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு தடா சட்டத்தில் திஹாருக்கு சித்திக்கி அனுப்பப்பட்டார். சல்மான் குர்ஷித் மற்றும் மானக்ஷா மகளான மஜா தாருவாலா வாதாடி வெளிக்கொணர்ந்தனர். பகுகுணா, ஹெக்டே, எம் ஜே அக்பர், இன்னும் ராம்ஜெத்மலானி போன்றோர் குரல் கொடுத்தனர்.

ராஜிவ், சித்திக்கியிடம் நட்பு பாராட்டினார். அமெரிக்க அதிபர் ரீகன், சீனாவின் டெங் சந்திப்பில் வைத்திருந்த சில முக்கிய பத்திரிகையாளர் சிலரில் சித்திக்கும் ஒருவர். ரீகனிடம் , ராஜிவ் சூப்பர் கம்ப்யூட்டர் ஒன்றைப் பார்த்து , தனக்கும் அது போல் ஒன்று அமெரிக்க வழங்க முடியுமா எனக் கேட்டதாகவும், தரலாம் ஆனால் அதற்கு விலை- நியூக்கிளியர் சோதனை நிறுத்தம் என ரீகன் சொன்னதாகவும், ராஜிவ்

ஏற்கவில்லை எனவும் சித்திக்கி எழுதுகிறார். இந்த அவமதிப்பால்தான், ராஜிவ் இந்தியாவில் பெரும் கம்ப்யூட்டர் புரட்சியை உருவாக்கி அமெரிக்காவை திகைக்க வைப்போம் என நடவடிக்கைகளில் இறங்கியதாகவும் சித்திக்கி செய்தி சொல்கிறார்.

பெனாசிர் பூட்டோவுடன் நட்பு பாராட்டி இந்தியா பாக் நல்லுறவிற்கு நல்ல முயற்சிகளை ராஜிவ் எடுத்ததாகவும் சித்திக்கி சொல்கிறார்.

வி பி சிங்கை தேர்ந்த்தெடுத்து, இந்தியா ஒரு ராஜாவை பிரதமர் ஆக்கிவிட்டது என்கிறார் சித்திக்கி. வி பி சிங் குறித்து நல்ல மதிப்பீடுகளை சித்திக்கி எழுத்தில் பார்க்க முடியவில்லை. அவரை அருண் நேரு, ஜெயில் சிங்கின் ஆள் என்கிறார். வி பி சிங் தேர்வை deception manipulation falsehood என்றே சித்திக்கி சித்தரிக்கிறார். இப்படி சித்திக்கி எழுத்துக்களில் bias இல்லாமல் இல்லை என்பதைக் காணமுடிகிறது.

சித்திக்கியின் 400 பக்க நூலில், 170 பக்க அளவிற்கான செய்திகளை மட்டுமே இதுவரை தந்துள்ளேன்.. பார்க்கலாம்..

அனைவருக்கும் குடியரசு தின நல்வாழ்த்துகள்!

26-1-2026

jan 27 2026

Feb 12 General strike

Various trade union organizations have issued a call for a nationwide strike on February 12, and have begun serving notices to their respective managements.

Massive organizational and preparatory meetings are currently underway.

This protest has been announced not only against the Labour Codes but also to demand the withdrawal of government policies such as the Seed Act, Electricity Act, private participation in Nuclear Energy, and issues surrounding MGNREGA. Kisan unions are attempting to organize a 'Rural Bandh'. Simultaneously, Industrial Federations are issuing strike notices based on their specific sectoral demands.

Following the Gazette notification stating that the Labour Codes would be implemented starting November 21, 2025, trade unions challenged the government in the Delhi High Court and the Supreme Court regarding the Industrial Relations (IR) Code. In response, the Central Government has stated that implementation rules will be placed in the public domain and the Labour Codes will be fully operational from April.

There are reports of advisories issued by the Ministry of Home Affairs. However, the specifics of the Home Ministry’s advisory to State Governments and vigilance institutions remain unclear as nothing has been made public. There is also news that the case might come up for hearing in the Supreme Court on February 5.

When a new law is introduced, the status of the preceding laws—whether they are repealed having the clauses to state so- and if only the new Labour Codes will remain in force—was not clarified by the government on November 21, 2025, leading to significant confusion. The Delhi High Court also raised questions regarding this legal vacuum. I understand that the mandatory 14-day prior notice period has also become a point of contention if the transition is not fully prepared. The Central Government has stated that existing Industrial Courts and Tribunals will remain until new tribunal rules are announced. We must wait and see what the Supreme Court decides.

I just glanced news reports that a bench comprising Justices Surya Kant, B.V. Nagarathna, and Vikram Nath may hear the case on February 5. Senior advocates like Prashant Bhushan and Sanjay Hegde are expected to represent the labor side. A key point of debate may be whether the notification of the IR Code in November 2025 automatically extinguishes the protections of the Trade Unions Act of 1926. Consequently, the 'legality' of the February 12 strike might be questioned by the government.

The affidavits from the trade unions and the counter-affidavits from the Home and Labour Ministries are not yet accessible. Those documents likely detail the specific needs and urgencies of each side.

Trade unions have been highlighting their areas of concern in the IR Code:

* Exploitation through Fixed-Term Employment (FTE).

* The fact that 90% of employment exists in establishments with fewer than 300 persons, increasing the risk of arbitrary firing.

* De facto bans on strikes and the abolition of Labour Courts.

* The ability to close industries without prior government approval.

In this climate, the credibility of the government's explanations is being questioned.

The government, however, is projecting this as a major achievement. They claim to have consolidated 1,436 rules from 29 laws into just 351 rules across 4 Labour Codes. This is met with the rebuttal that in the name of "simplifying" rules, they have "shrunk" labor welfare. While the government campaigns on the ease of doing business—such as replacing 31 different returns with a single electronic filing—unions see it differently.

In the 11 years of the Modi administration, the Indian Labour Conference (ILC) has been convened only once. We saw that during Manmohan Singh's tenure, the ILC met regularly, leading to discussions and resolutions. The Labour Ministry should set aside its ego and consistently engage with trade unions, listen to their apprehensions, and provide assurances regarding necessary amendments. Without a common meeting point, the environment will only lead to further protests.

Governments cannot afford to ignore the demands of millions of workers and farmers. Notably, Gig and Platform workers observed a separate "Online Strike" on Republic Day by switching off their apps. This is a new segment of the workforce, reliant on digital technology, and thus their protest took the innovative form of a digital strike.

Let us wait and see the message the country delivers on February 12. Best wishes.

January 27, 2026 See less

Jan 30

பொருளாதார ஆய்வறிக்கை

பொருளாதார ஆய்வறிக்கையை அரசாங்கம் வெளியிட்டுள்ளது. 700 பக்கங்களுக்கும் மேற்பட்ட ஆவணம். என் போன்றவர்க்கு பக்கங்கள் பல புரிந்துவிடும் எனச் சொல்லமுடியாது. கண்ணில் தெரிவதை, அப்படியா நிலைமை எனத் தோன்றுவதைக் கொஞ்சம் சொல்லலாம்.

சில நேரம் 'அசட்டுத்தனம் அஞ்சாமல் பேசும்' என்கிற வகைப்பட்டு இவ்விஷயத்தில் என்னைப் பார்த்துக்கொள்கிறேன்.

புவிசார் அரசியல் சூழலில் இந்தியா பாதிக்கப்பட்டுள்ளதை எகனாமிக் சர்வே ஏற்றுள்ளது. ரூபாய் செயல்பாட்டின் பாதிப்பு, அந்நிய மூலதனத்தை நம்பி நிற்கும் செயல்பாடுகள் ஏற்கப்பட்டுள்ளன. அவுன்சு தங்கம் 2025ல் மட்டும் 2607 டாலரிலிருந்து 4315 டாலராகியுள்ளதைச் சொல்கிறார்கள்.

Fiscal populism, current account deficits , high cost of capital போன்ற அம்சங்களை சர்வே கவலையுடன் பேசுகிறது. இந்தியாவின் வளர்ச்சி வழக்கம்போல் அய்டி செக்டார் சார்ந்த ஒன்றாகவே இந்த சர்வேயிலும் பிரதிபலிக்கிறது.

Economic policy vs Economic statecraft பற்றி சர்வே சொல்லித்தருகிறது. ஆர்வமுள்ளவர் state of economy என்கிற சாப்டரில் இது குறித்து தெரிந்துகொள்ளலாம். எல்லா நெருக்கடிகளையும் சமாளித்து இந்தியா ஜிடிபி வளர்ச்சி 7.4 சதம் இருக்கும் என சர்வே மதிப்பிடுகிறது.

இந்தியா சமாளிப்பதில் முக்கிய காரணியாக அதன் உள்நாட்டு நுகர்வு பொருளாதாரம் அமைந்துள்ளது. இம்முறையும் அது ஜிடிபியில் 61 சதத்திற்கு மேலாக இருக்கிறது. தடுமாறினாலும் வீழாமல் காக்கும் காரணியாக இதை ஆய்வாளர் பார்க்கின்றனர். நபார்டு நவ 2025 அறிக்கையில் ஊரக நுகர்வில் 79 சத குடும்பங்கள் கூடுதலைக் காட்டுகின்றன . இச்செய்தியில் நம்பகத்தன்மை இருந்தால் அதை ஆரோக்கியமான திசையாகப் பார்க்கலாம்.

விவசாய நெருக்கடி தொடர்ந்து பேசப்பட்டாலும், முக்கிய உணவுப் பயிர்கள் supply prospects supportive ஆக இருப்பதாக சர்வே சொல்கிறது. விவசாய நிபுணர்கள்தான் நமக்கு இது குறித்து சொல்லவேண்டும். அதேபோல் தொழில் வளர்ச்சி கொரானோ கால ஒப்பீட்டைவிட நன்றாக என்று மட்டுமே சொல்லப்பட்டுள்ளது. இன்னும் போகவேண்டிய தூரம் இருக்கலாம். சுரங்கத்தொழில் சுருக்கம்

பேசப்பட்டுள்ளது. சிமெண்ட், ஸ்டீல் கட்டுமானம் பாசிட்டிவ் ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

Cash transfers குறித்த கவலை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தொழிலாளர் சந்தை குறித்து சர்வே சொல்வது

India has witnessed improvements in the labour market, by a combination of regulatory reforms, expanded social protection , targeted skill development initiatives.. implementation of labour codes marks a significant reform in the regulatory framework..

இதை தொழிற்சங்கங்கள் ஏற்கமாட்டார்கள். இந்த frameworkல் சுரண்டல் தீவிரமாகலாம் என்கிற கணிப்பை தொழிற்சங்கங்கள் செய்துள்ளதால், பிப்ரவரி 12 பொதுவேலைநிறுத்த அறிவிப்பை வெளியிட்டுள்ளனர். Social protection விரிவாக்கம் என்பது எவ்வாறு எந்த கதியில் எப்படியான பொருளாதார பாதுகாப்புடன் என்பன குறித்து விரிவாக தனி சர்வே வந்தால் தான் உணரமுடியும். இல்லையெனில் நல்ல அறிவிப்பு என்றளவில் நிற்கும்.

உலகவங்கிப்படி முன்னர் தினம் 2.5 டாலர், தற்போது 3 டாலர் இருந்தால் வறுமைக்கோட்டில் அவர் இல்லை என்றாகிறது. அதாவது இப்படிச் சொல்லலாம். ஏறக்குறைய மாதம் ரூ 9000 இருந்தால் வறுமைக்கோட்டிற்கு மேலே என்ற கணக்கு போலும். இந்த சர்வேயில் இந்தியாவில் extreme poverty estimate 5.3 % என்றும், lower middle income poverty 23.9 % என்றும் தங்களால் மூடி மறைக்க முடியும் ஜிம்மிக்குகளை செய்துள்ளதாக எனக்குத் தோன்றுகிறது. இதற்கெல்லாம் நுகர்வு-துய்ப்பு வரையறைகள் என்ன்னென என எனக்குத் தெரியவில்லை. ஒன்று சொல்லலாம் அவர்களே ஏற்றுக்கொள்ளும் இந்த extreme poverty பகுதியினர் எவரெவர், எங்கே எனப் பட்டியலிட்டு வெளிப்படையாக அவர்கள் முன்னேற்றத்திற்கான செயல்களுக்கு முன்னுரிமை கொடுக்கலாம்.

நேரடி வரிகள் வீதம் கடந்த சில ஆண்டுகளில் உயர்ந்து 58.8 சதமாகிவிட்டதாகச் சொல்கின்றனர். இதில் கார்ப்பரேட் அல்லாதார் வரிதான் அதிகம் என்பதை அரசாங்கம் ஏற்கவே செய்கிறது. வருமான வரி கட்டுவோர் 6.9 கோடியிலிருந்து 9.2 கோடியாக உயர்ந்துள்ளனர். Tax base expansion நடந்துள்ளது என சர்வே சொல்கிறது.

ரிசர்வ் வங்கி தரும் விவரம் ஒன்றில், லிஸ்டெட் கம்பனிகளின் மொத்த கார்ப்பரேட் லாபம் 2021ல் 2.5 டிரில்லியன் ரூ என்பதிலிருந்து 2025ல் 7.1 டிரில்லியன். இதற்கேற்ப வரி பெறுமானம் இருக்கிறதா?

ஜி எஸ் டி மூலம் formalisation of economy நடந்துள்ளது. 2017ல் 60 லட்சம் இந்த வளையத்தில் இருந்தனர். தற்போது 1.5 கோடி வந்துள்ளனர்.

வருவாய் செலவினங்கள் பகுதியில்தான் சம்பளம், பென்சன் , மான்யம் போன்றவையும் வருகின்றன. சம்பளம் அலவன்ஸ்கள் செலவு 2022ல் 2.49 லட்சம் கோடி என்றால், 2025ல் 3.52 கோடி. இந்த உயர்வு பெரும்பாலும் inflation ஆல் வந்த ஒன்று. 8 வது ஊதியக்குழு சம்பள உயர்வு கொடுத்தால் மேலும் உயரலாம். இதேபோல் பென்சனைப் பார்த்தால் 1.99 லட்சம் கோடியிலிருந்து, 2.77 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. இதுவும் inflation , ஓய்வூதியர் எண்ணிக்கை பெருக்கம் காரணமாக ஏற்பட்டுள்ளது. 8 வது ஊதியக்குழு, இவர்களுக்கும் உண்டு என அரசாங்கம் முடிவெடுத்தால் 2027ல் இச்செலவினம் மேலும் உயரக்கூடும்.

வட்டியாக மட்டும் அரசாங்கம் 8.05 லட்சம் கோடி- 12.76 லட்சம் கோடி என்று கட்டி வருகிறது. உணவு மான்யம் 2.89 லட்சம் கோடி, 2.03 கோடியாக இக்காலத்தில் வீழந்துள்ளது.

ரயில்வே, சாலை, பாதுகாப்பு, வீடு போன்ற கட்டுமான மூலதன செலவு உயர்ந்தாலும், டெலிகாமில் மூலதன செலவு குறைக்கப்பட்டுள்ளது. மாநிலங்களுக்கு நிதிப் பகிர்வு- share in central taxes, Central sponsored schemes, Finance commission grants, other grants loans என்கிற வகையில் இக்காலத்தில் உயர்ந்துள்ளது.

பொதுவாக வங்கிச் செயல்பாடுகளின் ஆரோக்கியம் சொல்லப்பட்டுள்ளது. இந்தியாவில் ஓரப்பகுதிகளின் வளர்ச்சியில் மைக்ரோ பைனாஸ் தாக்கம் சொல்லப்பட்டுள்ளது. கடன் பெறுவோரில் பெண்கள் 95 சதம் என்கிற பாசிட்டிவ் தன்மை சொல்லப்பட்டுள்ளது. வங்கிக் கணக்கு 89 சதத்தினருக்கு என்கிற பெருமிதம் பேசப்பட்டுள்ளது.

இந்தியாவில் ஏறத்தாழ 47 சதம் விவசாயத்தை நம்பியுள்ளனர். ஆனால் வருவாய் எனப்பார்த்தால் அதில் 20 சதம் கூட இல்லை என்பது நிதர்சன உண்மை. வருவாய் உதவி என கொஞ்சம் அரசு செய்கிறது. உற்பத்தி உயர்வு, கொள்கை தலையீடுகள் வேண்டும் என சர்வே சொல்கிறது. தொழிற்துறை குறித்து விரிவாக தனி இயலாக பேசியுள்ளனர்.

எந்தவொரு அரசாங்கமும் எல்லாம் போச்சு என்கிற செய்தியையா தரும். நம்பிக்கையைத்தான் அதிகம் பெருக்கும். அந்த வகையில் சர்வே சொல்லும் வரிகள்

Domestic economy stable, inflation moderated, balance sheets of households, firms, banks healthier, public investments supportive, consumption demand resilient, private investment intentions good. இதனால் வெளி அதிர்ச்சிகளை சமாளித்து 2026 ல் முன்னேறலாம்..

நான் துறைவாரியாக பார்க்கவில்லை. பொது trends குறித்த சில பக்கவாட்டு செய்திகளைப் பார்த்தேன்..அதில் பட்டதை இங்கு பிட்டு தந்துள்ளேன்..அம்புடுதான்..

30-1-2026

FEB 2026

feb 17 2026

எல்லோருக்குமான காந்தி – அணிந்துரை

ஆர். பட்டாபிராமன்

காந்தி ‘கருவிலேயே திருவுடையவர்’ அல்லர். வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்திலும் கற்றுத் தேற முயற்சித்தவர். நன்னெறிகளின் வழியாக அரசியல், சமூக, பொருளாதாரக் கட்டமைப்பு என்ற பெருங் கனவு காந்தியிடம் இருந்தது. அகிம்சை அன்பு வழியில் உலகு மாறவேண்டும் என்ற பேரவா அவரிடம் இருந்தது. தனது கனவு இந்தியா அப்படியே உலகில் எழ வேண்டும் என நினைத்தார். அரசியல் புரட்சி, சமூகப் புரட்சி, பொருளாதாரப் புரட்சி என்கிற உரத்த குரல்களின் நடுவில், மென்மையாக அவர் ‘நன்னெறிகளின் புரட்சி’ என வாழ்ந்து காட்ட முயற்சித்தார். நடந்துகாட்டலில் நல்வாழ்க்கை என்பது அவரது செய்தி.

உரிமை போராட்டங்களின் உயர்வு என்கிற பொதுபுத்தியிடம், கடமைசார் கடப்பாடு என அவர் பேசிப்பார்த்தார். நடைமுறைவாழ்வில் Vanguardism என்பதில்லாமல், Exemplariness என தன் முன்மாதிரியை வாழ்க்கைச் செய்தியாக்கினார். ‘பிறர் இருந்தால் நான் இல்லை’ என ஒதுக்கி உயர நினைக்கும் சமூகத்தில் ‘பிறரின்றி நான் இல்லை’ என்பதைக் கொண்டுபோனார்.

‘அறிவு சமூகத்திற்கே ஏற்றம்’ என்கிற இந்திய வாழ்க்கை முறையில் ‘உழைக்காமல் உண்ணல் திருட்டு’ என்று உடலுழைப்பின் மேன்மையை கண்ணியத்தை காந்தி உயர்த்தினார். முடி திருத்துபவன் உழைப்பும் வழக்கறிஞர் உழைப்பும் சம மதிப்புடையதே என்று நூற்றாண்டுக்கு முன்பே ‘இந்திய சுயராஜ்யத்தில்’ பேசியவர். மனிதனுக்கு இடையே உயர்வு தாழ்வு வேற்றுமை பாவம் என்றவர். இந்த பூமியால் அனைவரின் தேவையையும் கொடுக்க முடியும், ஆனால் எவரின் பேராசைக்கும் அதனால் ஈடுகொடுக்கமுடியாது என்றவர்.

காந்தி பேசிய வர்ணாஸ்ரமத்தில் உயர்வு தாழ்வு பார்வையோ, அப்படியான நடைமுறை அனுசரிப்புகளோ இல்லை. அவர் இந்து மதத்தின் பலவீனக் கண்ணியான தீண்டாமையை தன் வழியில் அசைத்துப் பார்க்கலானார். 'Caste Must Go' என 1935லேயே அவர் பேசினார். மனுஸ்மிருதியை அபத்தங்களின் கட்டுக்கதை என்று கூட சொன்னவர் காந்தி. அவரின் முயற்சியை குறித்து திபோர் மெண்டேவிடம் உரையாடிய நேரு, காந்தியின் மேதமை - தீண்டாமை ஒழிப்பில் வெளிப்பட்டதாக பதிவு செய்தார். 'சாதிக்கு எதிராக காந்தி' என்கிற அற்புத ஆய்வு நூலை நிஷிகாந்த் கோல்கே படைத்துள்ளார்.

பிராமணர்கள் மீது காந்திக்கு விமர்சனமில்லாமல் இல்லை. விவேகானந்தரைப் போலவோ, ஆரிய சமாஜிகள் போலவோ அவர் மேல்நிலையாக்க முன்மொழிவுகளை வைக்கவில்லை. ஒரே ஒரு வர்ணம் என்றால், உடல் உழைப்பு சூத்திர வர்ணமாக மாறுவோம் என்றே அவர் பேசினார்.

காந்திக்கு எவ்வளவு புகழ் மாலைகள் சூட்டப்பட்டனவோ, அவ்வளவு கண்டன விமர்சனங்கள், பழிப்புகள், வசவுகளும் வந்தன. தேசப்பிதா என்கிற அழைப்புகளும் இருந்தது. பத்தாம்பசலி, ரீஆக்ஷனரி, பூர்ஷ்வாவாதி, என்ன கிழித்தார் காந்தி என ஏராள சொல்லடிசூடல்களும் வரவே செய்தன.

பிரிட்டிஷ் ஆளும் வர்க்கம் காந்தி மீது வைத்த விமர்சனம் - அவர் காங்கிரஸ், சாதி இந்து 'சுப்ரீமசிக்கு' நிற்கிறார் என்பதே. சுதந்திரமே அவரது இலக்கு, தீண்டாமையோ, இந்து - முஸ்லீம் ஒற்றுமையோ அல்ல என்றனர். இதை எதிரொலித்த இந்தியர்களும் உண்டு. காந்தி எந்த போராட்டத்தையும் தனித்த ஒன்றாக நடத்தவில்லை. அவருக்கு விடுதலை, இந்து முஸ்லீம் ஒற்றுமை, தீண்டாமை, நிர்மாண திட்டம் என்பவை ஒருங்கிணைந்த போராட்டமாகவே இருந்தது.

காந்தி மீது பலருக்கும் அச்சமும் சந்தேகப் பார்வையும் இருந்திருக்கக்கூடும். தங்கள் வழியில் தங்கள் கனவை அவர்களின் சொந்த பலத்தில் நிறைவேற்ற முடியாமல் போவதற்கு, காந்தியை அவர்கள் தடையாகப் பார்த்தனர். தங்களின் எதிர்பார்ப்புகளை அவர் மீது ஏற்றி, ஏமாறும் போது விமர்சித்தனர். காந்திக்கு எவர் மீதும், எக்கருத்து மீதும் ஒவ்வாமையில்லை. அவர் எதிரி தரப்பு என எவரையும் பார்க்கவில்லை. எதிர்தரப்புடன் உரையாடலை நடத்திக்கொண்டேயிருந்தார். உண்மை எவரின் ஏகபோகமல்ல என்கிற தெளிவு காந்தியிடமிருந்தது.

அம்பேத்கர், இந்து முஸ்லீம் பிரச்சனையில், நிலவிய இந்திய யதார்த்தத்தை கணக்கில்கொண்டு, ‘Divided Divinity’ என விமர்சித்தார். காந்தி இந்தியாவிற்கு என்ன தேவையோ அதை மனதில் வைத்து ‘United Divinity’ எனப் பேசினார். வரலாற்றில் இதுவரை ஒன்று நடக்கவில்லையென்பதால், இனியும் நடவாது என கருத வேண்டியதில்லை என்கிற மானுடத்தின் மீதான அபார நம்பிக்கை காந்தியிடம் இருந்தது. ஜின்னாவால் அவர் முன்வைத்த பாகிஸ்தான் கோரிக்கையை நடைமுறையாக்க முடிந்தது. காந்தியால் ஜின்னா முன்வைத்த ‘இருதேச’ கொள்கையை உறுதியாக நிராகரிக்க முடிந்தது.

இந்துக்களால் பிறர் உதவியின்றி விடுதலை பெறமுடியும் என்பது பெரும் கற்பனை, இந்தியா இந்துக்களுக்கு மட்டும் சொந்தம் என்று பேசுவது பைத்தியக்காரத்தனம் என்றார் காந்தி. இந்தியாவோ பாகிஸ்தானோ அங்குள்ள சிறுபான்மையினரை எப்படி நடத்தப்போகிறார்கள் என்பதில்தான் அவர்களின் கண்ணியம் இருக்கிறது என்றார்.

என்னை ‘எவர் ஆள நினைக்கிறார்’ என்பதைவிட, என்னை நானே ஆளமுடியுமா என்பதையே முக்கிய சோதனையாக்கினார். சுதந்திரம் என்பதை சுயக்கட்டுப்பாட்டுடன் கூடிய ‘self rule’ என காந்தி விரிவுபடுத்தினார். இப்படி காந்தியை குறித்து எவ்வளவு பேசினாலும் பேசப் பேச அவர் விரிவடைவார்.

இந்நூலாசிரியர் சிவகுருநாதன், மற்றும் ஒரு ‘காந்தி சரிதையை’ மிக மிக எளிய வகையில் எழுதியுள்ளார். ‘எல்லோருக்குமான காந்தி’ என்கிற தலைப்பே அதன் விசாலத் தன்மையை பறை சாற்றுகிறது. சிவகுருநாதன் கல்வியாளர். மாணவர்களின் உளவியல் உணர்ந்தவர். பல ஆண்டுகளாக நான் அறிந்த அறிஞர். தேர்ந்த பன்முக சிந்தனைகளின் வாசிப்பாளர். இந்திய, குறிப்பாக தமிழ்ச் சமூகச் சூழலை உள்வாங்கி நூல்களை எழுதி வருபவர். அவரின் காந்தி குறித்த இந்நூல் தமிழ் வெளியில் நன்கு பேசப்படக்கூடிய நூலாக அமையும்.

காந்தியின் வாழ்க்கையின் அனைத்து முக்கிய புள்ளிகளையும் சிவகுருநாதன் இணைக்க பெருமுயற்சி எடுத்துள்ளார். அவரின் விரிவான வாசிப்பனுவமும், உள்வாங்கும் திறனும் ‘எல்லோருக்குமான காந்தியில்’ வெளிப்படும். பிறப்பு, குடும்பச்சூழல், கல்வி, லண்டன் பாரிஸ்டர், தென்னாப்பிரிக்கா போராட்டம், இந்தியா திரும்பி 1915லிருந்து, கோட்சேவின் குண்டு சாய்த்த காலம்வரை ஓயாத

பணிகள் என இந்நூலில் காலவரிசையில், ஆசிரியர் கூற்றுவழி 18 இயல்களில் பதிவாகியுள்ளன. காந்திக்கு பின்னரான இந்தியாவும் தொட்டுக்காட்டப்பட்டுள்ளது.

வேதாரண்யத்தில் உப்புசத்தியாகிரக காலத்தில் முடிதிருத்தும் தொழிலாளி வைரப்பன் குறித்து கூட சிவகுருநாதன் சொல்லும்போது, நுணுக்கமாக செய்திகளை சேகரித்து வெளிப்படுத்தும் உழைப்பைக் காணலாம். காந்தி காலத்தில் ஊடாடிய வடபுலத்து தலைவர்களை மட்டுமின்றி, தமிழக தலைவர்களின் ஊடாட்டத்தில் உடன்படும்-எதிர்வினையாற்றும் செய்திகளையும் சிவகுருநாதன் தரமுயற்சித்துள்ளது பாராட்டிற்குரியது.

"இந்துமதம், சனாதன வர்ண தர்மம் குறித்து காந்தி அளித்திடும் விளக்கங்கள் ஆழமான புரிதலின்றி சற்று மேம்போக்காக அமைந்திருந்தன" என்கிற மதிப்பீடு ஒன்றிற்கும் சிவகுருநாதன் இந்நூலில் வந்துள்ளார். காந்தி குறித்து தீவிர வாசிப்பாளர்கள் இதில் உடன்படமாட்டார்கள். காந்தியிடம் அளப்பரிய சமய உரையாடல்கள் இருந்தன. சமயம் குறித்த விரிவான வாசிப்பை காந்தி மேற்கொண்டவர். அவரின் மதம் சார்ந்த scholarship, intellectual capital அசாதரணமானது. மத நல்லிணக்கம் சார்ந்த மதச்சார்பின்மையை அவர் தொடர்ந்து பேசிவந்தவர். அவரின் ஆசிரம வாழ்க்கை, காலை - மாலை வழிபாட்டு முறைகள் தனித்த நடைமுறை அனுசரிப்புகளானவை.

காந்தி சமய ஆய்வாளர் அல்லவே தவிர, நிலவும் சமூகத்தில் செயல்பாட்டாளர் ஒருவரின் 'text- context' என்பதில் ஆக உயர் தேர்ச்சி கொண்டவராக இருந்தார். காந்திக்கு எதிலும் இணக்கப்புள்ளிகளே தேவைப்பட்டன. 'அழித்தொழிப்பு' என்பது அவர் நிகழ்ச்சி நிரலில் அறவேயில்லை. அவரின் செயல்பாடு உடனடி பலன்களுக்கானதா - நீண்டகாலத்திற்கானதாக இருக்கிறதே என்கிற கேள்வி வந்தபோதெல்லாம், அதைவிட குறுக்கு வழி என ஏதுமில்லை என்றே அவர் சொல்லிக்கொடுத்தார். என்ன நிலவுகிறதோ அதன் தீங்குகள் உணரப்படும்போது, அதை களைந்து 'சமூக நல்லிணக்கம்' கொணர உழைத்தார். நம்மில் எவரும் உயர்ந்தவரும் இல்லை - தாழ்ந்தவருமில்லை என்கிற சிந்தனையை அவரவர் தன்னிடத்திலிருந்தே தொடங்கித் தொடர்வது என்பதை அவர் பயிற்சித்தார். ஓர் அடியானாலும், முடிந்தால் அனைவருடனும்,

இல்லையேல் தான் மட்டுமாவது என்பது அவரின் அன்றாட தொழிற்பாடாக இருந்தது.

காந்தி குறித்த எந்த நூலும் படிக்காத ஒருவருக்கு, சிவகுருநாதன் நூல் கிட்டுமெனில், ‘எல்லோருக்குமான காந்தி’ நல்ல நுழைவாயிலாக இருக்கும் என்றே சொல்லத்தோன்றுகிறது. சிவகுருநாதன் இந்நூலை இவ்வாறு முடித்திருப்பார் “உண்மை, அன்பு, எளிமை, அகிம்சை, சகிப்புத்தன்மை, நல்லிணக்கம், அறம்சார் வாழ்வு, மது உள்ளிட்ட போதை விலக்கு, தனிமனித ஒழுக்கம் போன்றவை காந்தியத்தின் கூறுகளாகும்.”

சமூகத்திற்கு பயன்படத்தகுந்த ஏராள நூல்களை வெளியிட்டு வரும் நன்னூல் பதிப்பகம் தோழர் காதர், இந்நூலையும் கொணர்ந்து பெருங்கடமையை செய்துள்ளார். பாராட்டுகள். சிவகுருநாதனின் அரிய உழைப்பால் வந்துள்ள ‘எல்லோருக்குமான காந்தி’ காந்தி இலக்கியக் கிடங்கில் முக்கிய சேர்மானம். வாசிப்போர் காந்தியை கண்டறியமுடியும். சிவகுருநாதனுக்கு நல்வாழ்த்துகள்!

நன்றி: தோழர் ஆர். பட்டாபிராமன்

நூல் விவரங்கள்:

எல்லோருக்குமான காந்தி (மகாத்மாவின் கதை)

மு.சிவகுருநாதன்

முதல்பதிப்பு: டிசம்பர் 2025

பக்கங்கள்: 198 விலை: ரூ. 220

ISBN: 978-93-48900-21-0

நூல் வெளியீடு மற்றும் கிடைக்குமிடம்:

நன்னூல் பதிப்பகம்,

மணலி – 610203,

திருத்துறைப்பூண்டி,

திருவாரூர் – மாவட்டம்.

அலைபேசி: 9943624956

feb 20

My Years with Indira Gandhi

இந்திரா காந்தி அம்மையார் குறித்து பல நூல்கள் உள்ளன. P C அலெக்சாண்டர் எழுதிய My Years with Indira Gandhi சற்று மாறுபட்ட நூல். அலெக்சாண்டர் அதிகாரவர்க்கத்தின் உச்சியில், பிரதமராக இருந்த இந்திரா அம்மையாருடன் உடனிருந்து , அவரது ஆளுமை பணிகளை பார்த்த அனுபவத்தை இந்நூலில் நினைவு கூர்ந்துள்ளார்.

முதன்மைச் செயலராக அன்றாட விவாதங்கள், முடிவுகள், சந்திப்புகள், சுற்றுப்பயணங்கள் ஆகிய ஏராள பெரும் பணிகளின் ஊடே வியக்கவைக்கும் ஆளுமையாக இந்திரா செயல்பட்ட சுறுசுறுப்பை மிகையின்றி அலெக்சாண்டர் பதிந்துள்ளார் என்றே எனக்குத் தோன்றியது.

பெரும் தனிமை விரும்பியான இந்திரா, வாழ்வின் சுகம் சோகம் என பல தருணங்களில் தன்னை எப்படி வெளிப்படுத்திக்கொண்டார் என்பதை அலெக்சாண்டர் வெளிப்படுத்தியுள்ளார். 4 மணிநேரம் கூட உறங்க முடியாமல் போகின்ற நாட்கள் ஏராளம். ஆனாலும் சோர்வைக் காட்டாத பொலிவை, நேர்த்தியைக் காட்டும் சுறுசுறுப்பை அவர் தரவேண்டியிருந்தது.

ஏராள நாடுகளின் சுற்றுப்பயணத்தில் , அந்தந்த நாட்டு தலைவர்கள்- டெலிகேஷன்- விருந்துகளில் ஏற்பட்ட பல அனுபவங்களை அலெக்சாண்டர் தந்திருப்பது இந்நூலின் சிறப்பு. என்ன அற்புத மனிதர் என வியக்க வைக்கும் ஆளுமையாக இந்திரா அங்கெல்லாம் பரிணமித்தார் என்பதே அலெக்சாண்டர் தரும் செய்தி. அதே நேரத்தில் ரீகன் உட்பட , சில நாடுகளில் எப்படி இவர்கள் எல்லாம் இப்படி பொறுப்போ ஞானமோ இல்லாமல் ஆக உயர் பதவிகளை அலங்கரித்துக்கொள்கிறார்கள் என்கிற வியப்பையும் அலெக்சாண்டர் மூலம் பார்க்கிறோம்.

சவுதி மன்னர் பெரும் luxury உடன் இந்திராவை வரவேற்று விருந்தளித்தார். விருந்தில் 300 பேர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். அதில் இருந்த ஒரே பெண்மணி இந்திரா மட்டுமே. வேறு தருணம் ஒன்றில் பிலிப்பைன்சில் திருமதி மார்கோசஸ் அளித்த விருந்தில் 1000 பெண்களை மட்டுமே அழைத்து இந்திராவிற்கு வரவேற்பு நல்கப்பட்டது. இப்படி பல அனுபவங்கள் இந்நூலில் சொல்லப்பட்டுள்ளன.

ரீகன் அவர்களை சந்திக்கும்போதெல்லாம், விவாதங்களில் ஆர்வமோ, உரிய ஞானமோ இல்லாமல் ரீகன் இருந்தார் என்கிற செய்தியைப் பார்க்கிறோம். அதேபோல் பிரஷ்னேவ் உடல்நிலை பாதிக்கப்பட்டு, விவாதங்களில் பாதி காதில் விழாமல்- நடை பிணமாக அமர்த்தப்பட்டிருந்தார் என்கிற செய்தியை- மாஸ்கோவில் பார்த்த உயர் luxuryயை அலெக்சாண்டர் சொல்கிறார்.

இந்தியாவிலும் கூட கட்சி ஆட்சி அதிகாரம், அமைச்சராதல், உயர் அதிகார பொறுப்புகள் அடைய முயற்சிகள், கார்ப்பரேட்களின் அழுத்தங்கள் என ஏராள உள் விவகாரங்களையும் அலெக்சாண்டர் தொட்டுக்காட்டுகிறார். பல நேரங்களில் இவ்வளவு மோசமான 'மண்டுக்களை', பொறுப்பற்றவர்களை ஏன் இந்திரா அமைச்சர்களாக வைத்துள்ளார் எனக்கூட அலெக்சாண்டருக்கு தோன்றியுள்ளது. குறிப்புணர்ந்து, சில நேரம் இந்திரா அலெக்சாண்டரை அழைத்து , ஒவ்வொருவரின் தேவை இந்த மாதிரி வேண்டியிருக்கிறது என்று கூட வெளிப்படையாக பேசினாராம்.

அமைச்சரவை மாற்றம் என்றால் , மிக இரகசியமாக இந்திரா வைத்திருப்பாராம். கேபினட் செயலருக்குக்கூட இரண்டு அல்லது மூன்று மணி நேரம் முன்னர்தான் உணர்த்தப்படுமாம். வெங்கட் ராமன் நம்பத்தகுந்தவராக இருப்பாராம். இந்திராவிற்கான மிகக் குறைந்த ஆலோசகர்களிடம் பேசிவிட்டு, அலெக்சாண்டரை அழைத்து உன் கருத்தென்ன எனக் கேட்டுத்தான் பல முடிவுகளை எடுத்ததாக இந்நூலில் அலெக்சாண்டர் சொல்லியுள்ளார்.

பிரணாபை நிதி அமைச்சராக்கி, வெங்கட் ராமனை பாதுகாப்பு அமைச்சராக்க நினைத்தபோது, அதை எப்படி ஆர்வி யிடம் சொல்வது என இரண்டு நாட்கள் அலெக்சாண்டரிடம் கவலைப்பட்டாராம் இந்திரா. அதேபோல் ஆர்வியை பாதுகாப்பிலிருந்து விடுவித்து, துணை குடியரசு தலைவராக்குவது என்கிற முடிவையும் தயங்கியே, tea break ஒன்றில் தனியே அழைத்துச் சொன்னாராம். நல்லவேளையாக, ஆர்வி எந்த மறுப்பும் சொல்லாமல், இந்திரா சொல்படி நடந்துகொண்டாராம்.

தன்னுடன் பயணிக்கும் ஒவ்வொருவரின் தங்குமிடம், உணவு வசதிகளை கேட்டு அறிந்துகொள்வாராம் இந்திரா. அவருடைய ஆஸ்தான speech writer சாரதா பிரசாத் முழுமையான விஜிடேரியன். விருந்துகளில் அவருக்கு ஏதும் கிடைக்காமல் போய்விடக்கூடாது. தயிராவது கிடைக்குமா எனப் பார்த்துக்கொள்வாராம் இந்திரா.

தன் மீது வரலாறு பல பழிகளை சுமத்தியுள்ளதை வருத்தத்துடன் அலெக்சாண்டர் போன்றவர்களுடன் இந்திரா விவாதிப்பாராம்.அப்படியொரு பழியாகத்தான், முதல் கேரளா கம்யூனிஸ்ட் இ எம் எஸ் ஆட்சி கவிழ்ப்பும் தன் மீது போர்த்தப்பட்டது என இந்திரா மனம் திறந்தாராம். உண்மையிலேயே நேரு உட்பட எவரும் விரும்பாத அந்த dismissal க்கு அழுத்தம் தந்தது பண்டிட் பந்த் அவர்கள்- அவர்தான் உள்துறையின் அமைச்சர் அப்போது என்றாராம் இந்திரா. அதேபோல் என் டி ராமராவ் டிஸ்மிசலும் தன் மீதே விழுந்தது. ஆனால் கவர்னர் ராம்லால் நடவடிக்கையது- IB மூலம்தான் இந்திராவிற்கே தெரிய வந்த நடவடிக்கையாம் அந்த டிஸ்மிசல்.

ஏன் இந்த பழியை சுமக்க வேண்டும், உண்மையை வெளிப்படுத்தி clarify செய்யலாமே என அலெக்சாண்டர் கேட்டபோது, வரலாறு சில அம்சங்களை எடுத்துக்கொண்டு போகும்போது, என்ன சொன்னாலும் எடுபடாமல் போகும். நம் மீது விழும் ஒவ்வொரு அவதூறையும் அவிழ்க்கவே நமக்கு நேரம் போய்விடும். எனவே சரியென பட்டதை செய்து செல்வோம் என்பாராம்.

இந்திரா எம்ஜிஆர் உறவு எனத் தனி இயல் ஒன்று இதில் இருக்கிறது. இந்திரா குறித்து மிக மோசமாக எம்ஜிஆர் அமைச்சர்கள் பேசி வருகிறார்கள் என்ற செய்தி இந்திராவிற்குச் சென்று அவர் செம கடுப்பில் இருந்தாராம். சென்னை வந்தபோது வரவேற்க வந்த எம்ஜிஆரை திடிரென பிரதமர் காரில் நீங்களும் எனச் சொல்லி surprise கொடுத்தனர். காரில் பயணித்த எம்ஜிஆரிடம் , இந்திரா தன் கோபத்தைக் காட்டி, பிரதமரை இப்படித்தான் உங்க அமைச்சர்கள் பேசுவார்களா என கடிந்துகொண்டாராம். இதைச் சற்றும் எதிர்பாராத எம்ஜிஆர் பொறுமையாக எந்தப் பதிலும் சொல்லாமல் அமைதியாக இருந்தாராம். இறங்கியவுடன் அலெக்சாண்டரை அழைத்து, இந்திரா மீது தனக்கு நல்ல மரியாதையுண்டு, எவர் எனப்பார்த்து நான் கண்டிக்கிறேன். ஆனால் இந்திரா அப்படி என்னிடம் பேசியிருக்கக் கூடாது. நல் உறவை நான் விழைகிறேன் என்றாராம் எம்ஜிஆர். பின் நாட்களில் அலெக்சாண்டர் முயற்சிகளால் நல் உறவும் வளர்ந்ததாம்.

இந்திரா- சஞ்சீவ ரெட்டி, இந்திரா- ஜெயில்சிங் உறவுகள் விவாதிக்கப்பட்டுள்ளன. உண்மையிலேயே இந்நூல் an account about many sensitive matters in the corridors of power…

இப்படி ஏராள உள் விவகாரங்கள் பற்றி திறப்புகளைத் தரும் நூலாக அலெக்சாண்டர் நூல் செல்வதைக் காண்கிறேன்.. 20-2-2026

feb 23

Much ado about Nothing

The issue is minimum pension 9000 to lower categories in bsnl..

CG pensioners' associations with their para friendly associations are in their war path to fight against the validation portions of FA Act 2025 and seeking inclusion of their pension revision in the 8th CPC.

The shouting matches are going on with all vigour and good show of participation of pensioners felt. The bsnl pensioners' associations are more vocal and even leading these marches.

There is a case for S30 seniors, who fought and won the case in favour of them, now struggling to overcome this ACT. The implementation is got struck by this ACT. For others there is no cause that pained them, only the apprehension that troubles them about the future , ensuring parity between pre and post pensioners.

Distinction has been there all along between pre and post pensioners, though court interventions were also then and there. The distinction is exhibited in the OMs of the GOI- a type of executive orders. Frequent court cases and especially the S30 case made the GOI to find a way to strengthen its position through an ACT, and so GOI brought that FA 2025 .

This FA 2025 has validated all the existing ccs rules, procedures of CPCs etc and empowered the GOI to distinguish pensioners as per the terms of this 'validation - Expenditure' portions. Even the distinction of 37 A inserted for bsnl absorbed in that rules is also validated.

No part of CCS Pension Rules was amended, not a single beneficiary availed the OMs or judgements regarding CPCs got affected by this FA Act. Those cases still not implemented as on March 29,2025 may feel the impact of this ACT. Now an act is there to distinguish the pensioners and so the courts should take that also and pronounce any future judgements.

The CG associations with their friendly bsnl associations have gone to court to challenge the ACT. Let them get their success.

Even after Nakara case, the subsequent CPCs made nothing like complete parity, they did only modified parity as per the new pay scales while deciding minimum pension. There was a distinction between the post and pre pensioners in each CPC, till even 7 th CPC. No court did pronounce any judgment to cancel the OMs of the CPCs. Parity extensions were only sought and given. First time, the 7 th CPC after its OM of 2016 that had distinction with modified parity, also issued another OM on 2017 for complete parity to the Pre 2016 on pay matrix manner as given to post - who were employees on that date of effect, here 1-1-2016. 7 th CPC issued both the modified parity (distinction) and complete parity OMs. This opened a pandora box.

BSNL pensioners have been enjoying a distinction comparing their counterpart CG pensioners. Their pension is fixed as per PSU wages and IDA as per PSUS. This distinction was made by amending the CCS pension rules through 37 A , and for the last 25 years, they have been with this distinction only.

There is another distinction till this date existing- in the minimum pension between bsnl and CG pensioners. This distinction has been there since 2016. Govt has settled the discrimination in the ceiling of gratuity but this minimum 9000 pension discrimination-distinction is yet to be settled. It is strange that this bsnl retired section is more vocal in these struggles without highlighting the distinction of settling the minimum pension RS 9000 since 2016. This may, if settled, give good arrears to the lower section in some thousands.

The 8th CPC is now setup only for the CG Employees. If it gets implemented from the date of 1-1-2026 by issuing DOE Om at least by some months in 2027, then only the question of pension revision comes. The question of pension revision comes first to those retired on or after 1-1-2026 till the date of DOE OM. For this section, a smaller one, DOPPw may issue OM. This cannot be avoided by GOI.

Then the question of pre 2026 bulk CG pensioners issue would crop up. This time from the speeches of FM in the Lok Shaba, GOI is intended to consider , it seems, the modified parity of earlier 6 th CPC terms. It is my inference only. GOI may or may not extend the complete parity as did in the case of 7 th CPC. I don’t think GOI would leave the lakhs of pre 2026 pensioners in lurch and would not take that position of ‘no pension revision to pre 2026 pensioners’ . There will be distinction as one is employee on 1-1-2026 and another is pensioners on that day. But time only will tell what I feel right or wrong.

Till that time the Pensioners’ associations have that luxury of spending lakhs of rupees to the dare advocates, and luxury of spending time in meetings. It seems that , BSNL associations have more luxury and trying to steward things on their highlights but not addressing the minimum pension distinction. The real and need based issue (of distinction) is minimum pension 9000 to those voiceless lower categories.

23-2-2026 R. Pattabiraman

feb 25

மனித பக்குவம் தோழர் ஆர் என் கே

An Exemplary Leader com RNK

நிறை வாழ்க்கை வாழ்ந்து, மனித வாழ்வின் உன்னத சிகரம் தொட்டு மறைந்துள்ளார் தலைவர் தோழர் நல்லகண்ணு அவர்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் உயர் தலைவராக நின்று நிலைத்தது மட்டுமின்றி, தமிழக அரசியலின் கண்ணியமிகு பேரடையாளமாக வாழ்ந்து சென்றுள்ளார் தோழர் ஆர் என் கே. Com RNK a dignified exemplary leader என்பதை தமிழ் உலகம் உணர்ந்து பேசிக்கொண்டிருக்கிறது.

தனது கொள்கைகள் என்பதற்கும், மனித உறவுகளை பேணுதல் என்பதற்குமான முரண்களை அனுமதிக்காமல்- அதில் சிக்கி அவதிப்படாமல்- அவதிப்படுத்தாமல், தனி மனித உறவுப் பண்புகளின் உளவியலை மிக நேர்த்தியாக அன்றாட அனுசரிப்புகளில் காட்டிச் சென்றுள்ளார் தோழர் ஆர் என் கே.

எவரையும் பாரட்டுவதில் சிக்கனம்- கஞ்சத்தனம் வஞ்சனை அவரிடம் இருந்ததில்லை. அதுவும் பிற கட்சிக்காரர்கள், தன் இயக்கம் சாரா வேறு தனி ஆளுமைகள் என்றால் இந்த தாராளம் அவரிடம் கூடுதலாகவே தொழிற்படும். மேடையில் பேசியவர்களை அழைத்துப் பாராட்டி உற்சாகப்படுத்துவார். கட்டுரைகள் எழுதியவரை அழைத்து அதில் தான் உணர்ந்த, ரசித்த செய்தியை, அவருக்கு தெரிந்த கூடுதல் தகவல் எதையாவது சொல்லி பாராட்டுவார்.

தன்னிடம் புத்தகம் தந்து செல்பவர்களை பொருட்படுத்தி, நேரம் ஒதுக்கி செலவிட்டு, அழைத்து பாராட்டுவார். பொருத்தமான இடங்களை விவாதித்து தன் அக்கறையை வெளிப்படுத்துவார். இப்படி அவரால் எல்லோரையும் கேட்க முடிந்தது. எல்லோருக்கும் ஏதோ சொல்ல அவரிடம் ஏதாவது இருந்தது. அவர் நல்ல உரையாடல் மனிதர்- always dialogical என்பதை உணரமுடியும்.

தோழர் ஆர் என் கே வின் 80 ஆண்டுகள் போராட்ட வாழ்வு தமிழ் நாட்டின் பெரும் பேசுபொருளாகியுள்ளது.

எந்த கட்சி அமைப்பிலும் நீண்ட வாழ்க்கை என்பது பெருமிதங்களை கூட்டுவது போலவே, கொஞ்சம் கசப்புகளையும் ஒருவருக்கு தராமல் இருக்காது. கசப்புகளை பெரிதுபடுத்தாது விழுங்கி, தோழமை உறவுகளை கோர்த்து இணக்கப்படுத்தி அழைத்துப்போவது பெருங்கலை. அது சிலருக்கு மட்டுமே வாய்க்கும்.

நாங்கள் பணிபுரிந்த அமைப்பில் ஓயாமல் பிடிவாத சண்டைகளில் ஈடுபட்டு, எங்களில் சிலர் ஆர் என் கே மாநிலச் செயலராக இருந்தபோது வருத்தத்தைக் கொடுத்தோம். நிறைய எங்களுக்கு கால அவகாசம் கொடுத்து சரிசெய்து கொள்ள அறிவுரை நல்கி வந்தார். நாங்கள் சற்று மிதமிஞ்சி போனபோது, கட்சி விதிகளை சுட்டிக்காட்டி சற்று கறாராகவும் அவரால் நடக்க முடிந்தது. நல்ல தோழர்களை இழந்துவிடக்கூடாது என்ற அவரின் தாட்சண்யத்தை எங்களில் சிலர் சோதித்துவிட்டோம்.

அவருக்கு எவ்வளவுதான் தெரிந்து இருந்தாலும், எங்கள் துறை சார்ந்த செய்திகளை கேட்டு எங்களில் எவரிடமாவது தெரிந்து கொண்டு, கூட்டங்களுக்கு செல்வார். அவர் பாணியில் அதை கூட்டத்தில் எடுத்துச் சொல்வார். அவர் அலங்கார பேச்சுக்காரரர் அல்ல. பேச்சு முறையும் சக உள்ளங்களுடன் உரையாடி உறவு கட்டுவதாக இருக்கும்.

ரயில் பயணங்களில் அலுப்பின்றி அக்கம் பக்கத்தாருடன் பேசி அவர்களின் மனநிலையை அறிய முயற்சிப்பார். எங்கள் துறை சார்ந்த பயணியாக இருந்தால், எங்களைப் போன்ற சிலர் பேர்களை சொல்லி தெரியுமா எனக் கேட்டு வைத்துக்கொள்வார்.

முதலில் அவரை நான் சந்தித்தது, திருவாரூரில் தேர்தல் பொறுப்பாளராக அவர் வந்து இருந்த நேரத்தில்தான். புபேஷ் குப்தாவை அனுப்ப அவர் வெளியே வந்தபோது, இளைஞர்களாக தேர்தல் வேலை என்ன எனக் கேட்க சிலர் கூடியிருந்தோம். கட்சித் தலைவர் ஒருவர் ஆ ர் என் கே என அறிமுகம் செய்தார். என் சி பி எச் கூட்டங்களில் பங்கேற்போர் அனைவர் சொல்வதையும் கேட்டு, என்ன titles அவசியம் என்பதை தன் அனுபவத்திலிருந்து சொல்வார்.. எனக்கு மிகக் குறைந்த அனுபவம்தான்.

தோழர் ஆர் என் கே வுடன் நெருக்கமாக கட்சி வாழ்க்கை நடத்தியவர்கள், தாங்கள் உணர்ந்ததை அற்புதமாக சொல்லக்கூடும். தோழர் சங்கரையாவும், ஆர் என் கேவும் வாழ்ந்து காட்டியுள்ளனர். பெரும் அனுபவங்களை ஏனோ அவர்களால் எழுத்தில் பதிவு செய்ய முடியாமல் போய்விட்டது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பிறந்த நாளில் ஆர் என் கேவும் பிறந்து, அதனுடன் வளர்ந்து , அதனை வளர்த்து, கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றுடன் இரண்டறக் கலந்து விட்டார். தோழர் நல்லகண்ணு தமிழகத்திற்கான கண்ணியமான பிரதி (a dignified text). இதயம் நெகிழ் அஞ்சலி. வணக்கமும் மரியாதையும் தோழர்... 25-2-2026 R. Pattabiraman

feb 26

Economy of permanence

தஞ்சாவூர்காரரான ஜே சி குமரப்பா குறித்த வாசிப்பு என்பது தமிழக பொது புத்தியில் அதிகம் உட்காரவில்லை. காந்தியர்கள் மற்றும் சில ஆய்வாளர்கள் மட்டும் செல்லும் இடமாக குமரப்பா மறைந்து கிடக்கிறார்.

குமரப்பா ஏராளம் எழுதிச் சென்றவர். அவர் குறித்தும் நூல்கள் உள்ளன. அவரின் நிலைத்த பொருளாதாரம் - Economy of permanence புகழ் வாய்ந்தது. முதலாளித்துவம், பாசிசம், கம்யூனிசம் குறித்த விளக்கங்களும், காந்தியம் குறித்த அறிமுகங்களும் வாசிக்கப்பட வேண்டியவை. அவரின் concept of work அற்புத தெறிப்பு. காந்தி கல்வி நிலைய புதன் கூட்டங்களில் குமரப்பா குறித்த சில உரைகள் தேடுவோருக்கு கிடைக்கும்.

குமரப்பாவை அவ்வப்போது refresh செய்துகொள்ளத் தோன்றும். ஏதாவது ஒன்றை எடுத்தாலும் அவர் பேசும் மய்யப் புள்ளியான அழியா பொருளாதார நிலைப்பாட்டை அங்கு அவர் சொல்லி விடுவார். அப்படியான நூல்களில் ஒன்றுதான்

'Christianity Its Economy and Way of Life'. இந்நூலை The Practice and Precepts of Jesus என்கிற இணை நூலுடன் சேர்ந்து வாசிக்க குமரப்பாவே பரிந்துரைத்திருப்பார். ஏசு பெருமானின் சிந்தனைகளை எப்படி குமரப்பா பார்த்தார்- சர்ச் களின் செயல்பாடுகள் குறித்த அவரது விமர்சனங்கள் என இந்நூல்களை எடுத்துக்கொள்ளலாம்.

'கிறிஸ்துவ பொருளாதாரம்- வாழ்க்கை முறை' என்கிற நூல் 1945 ல் வந்த ஒன்று. இப்போது 2024ல் அதன் மறுபதிப்பைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஏறத்தாழ 80 ஆண்டுகள் கழித்து மீண்டும் பதிப்பைக் கண்டுள்ளது. க்யான் பிரஸ் டெல்லி கொணர்ந்தனர்.

முதல் பகுதியில் The Economy of Cross, Acceptable Worship, Swords or Ploughshares, Proselytising, Religion of Jesus, some letters to Church authorities போன்றவை இருக்கின்றன. இரண்டாவது பகுதியில் நீண்ட கட்டுரையான An Outline of a Planned Economy என்பது விவாதிக்கப்பட்டுள்ளது.

குமரப்பாவை வாசித்தவர்களுக்கு இந்நூல் புதிய செய்திகளை தராமல் இருக்கலாம். Refresher ஆக இருக்கும். ஏசுவின் மதம் என்கிற ஆக்கம் ‘மதங்களின் நாடாளுமன்றத்தில்’ வாசித்த ஒன்று. மற்றவை, கிறிஸ்துவ பெருமக்களிடம், மாணவர்களிடம் பேசிய உரைகள்.

ஏசு என்ன சொல்லித்தந்தார், அதன் தாத்பரியத்தில் நிலைத்த பொருளாதாரம், காந்தியின் போராட்ட முறைகள் எப்படி அவசியமாக இருக்கின்றன, சர்ச்சுகள் செய்ய வேண்டியவை என்ன- இப்படி செய்வதெல்லாம் சரியா- அரசாங்கத்திற்கு ஒத்தூதும் கருவியா மதம், சட்ட ஒழுங்கை காக்க அரசாங்கமா, அரசாங்கத்தை காத்துக்கொள்ள சட்டமா போன்ற பல கேள்விகளின் ஊடே குமரப்பா இந்த உரைகளை நகர்த்தியிருப்பார்.

Unabated greed மனிதனை எப்படி பாடாய்படுத்தி வாழ்க்கையை சீர்குலைக்கிறது என பேசியிருப்பார். கடினமான சோதனையை அவர் நுகர்வோருக்கு தருகிறார்- do not buy any article of whose conditions of production you are not aware. இங்கு தான் கிராமப் பொருளாதாரத்தின் மேம்பாட்டை அவர் வலியுறுத்துகிறார்.

ஆதாம் காலத்திலிருந்து சொல்லப்படுவதை கவனியுங்கள் என்பார் குமரப்பா- in the sweat of thy brow shalt thou eat bread..

வேலை மீது ஏன் அலட்சியம்..எவரிடமாவது தள்ளிவிட்டு சௌகரியம் தேடும் சுரண்டல் வாழ்க்கை முறை மீது பெரும் விவாதத்தை குமரப்பா இதிலும் செய்திருப்பார். Work drudgery இல்லாமல் pleasurable part தனியாக இருக்காது. அன்றாட அலுப்புகள் இல்லாமல் மகிழ்ச்சி எழாது.

இந்நூலில் தொடர்ந்து அவர் எழுப்பும் மிக முக்கிய கேள்வி

‘What matters if the soul is lost as long as the whole world is gained’ attitude குறித்து

...

இப்படித்தான் - இதுதான் மதம் என ஏசுநாதர் பேசவில்லை எனச் சொல்லும் குமரப்பா, ஏசு சக மனிதர்கள்பாற் காட்டும் அன்பு, கடமை குறித்து இந்நூலில் அதிகம் சொல்கிறார். குமரப்பா அருமையான கருத்தாக்கத்தை முன் வைத்தார்

Religion is a personal contact with God. What form it should take remains with the devotee. What suits one person will not help another. It is futile to lay down set forms and ceremonies..

சகோதரத்துவம் என்பதை குமரப்பா பேசுவார். உயர்வு தாழ்வு, சேவகன் அடிமைத்தன சுரண்டல் குறித்து கவலையை வெளிப்படுத்தியிருப்பார். ஒவ்வொரு மனித ஆளுமையும் அவரவர் கோணத்தில் முக்கியமானவரே என்பார். சீனியர் ஜூனியர் ஏன் என்பார்.

The seniors should know that it is not their due to obtain servile obedience from their juniors. The personality of each individual is sacred and has to have its development. There can be no human authority which can claim unquestioning obedience..

We cannot serve God and mammon…

எல்லாவற்றிற்கும் மேலாக மனித வாழ்க்கையில்

The personality of an individual counts, above all traditions and customs..

இப்படி குமரப்பாவின் சிந்தனை தெறிப்புகள் நிறைந்த நூல் கிறிஸ்துவ பொருளாதாரம்- வாழ்க்கை முறை...

26-2-2026

march 2026

mar 1 2026

Nehru's India- Past Present and Future

பேரா ஆதித்யா முகர்ஜியின் Nehru's India- Past Present and Future, நேரு சிந்தனை- செயல்திறன் குறித்த நல்ல refresher எனலாம். அளவில் 200பக்கங்கள் கூட இல்லாத சிறிய புத்தகம்தான். ஆனால் அடர்த்தியான உள்ளீடு கொண்ட நூல்.

இந்தியாவில் ஆட்சி அதிகாரத்தை சுற்றி வளைத்துள்ள 'இந்து கம்யூனலிசம்' என்கிற கவலையை வெளிப்படுத்தி, நேருவிய பார்வை தீர்க்கத்தில் போராடவேண்டிய தேவையை சுட்ட இந்நூல் வந்துள்ளதாக புரிந்துகொள்ளலாம். பெங்குவின் 2024ல் கொணர்ந்தனர்.

புகழ் வாய்ந்த இடது வரலாற்றாய்வாளர் பிபின் சந்திராவுடன் வளர்ந்தவர் பேரா ஆதித்யா. வேறு பல நூல்களையும் எழுதியவர். 'நேரு நீக்கம்' என்கிற நிகழ்ச்சி நிரலும், வேறு தலைவர்களை உள்வாங்கி இழுத்து 'தன்வயமாக்கல்' என்கிற கூடவே நடந்தேறிவரும் நிகழ்ச்சி நிரலையும் கூர்மையாக அவதானித்து, ஆதித்யா 'நேருவை கேளுங்கள் ' என நூல் முழுக்க சொல்ல வருகிறார். மதசார்பற்ற அரசியலுக்கு 'நேருவின் முக்கியத்துவத்தை' தூக்கிப் பிடிக்க வேண்டுகிறார் என நான் புரிந்து கொள்கிறேன்.

இந்நூலை 8 இயல்களாக பேரா ஆதித்யா பகுத்துக்கொண்டு விவாதிக்கிறார்.

Demonising Nehru, Nehru and the Discipline of History

Nehru and the idea of India, Nehru on the communal challenge

Building democracy, Economic development with democracy and sovereignty

Keeping the focus on poor, scientific temper

இயல்களின் தலைப்புகளே உள்ளடக்கத்தை நமக்கு சொல்லிவிடும். நேருவின் வரலாற்று புரிதல் என்ன- எப்படி உலக மற்றும் இந்திய வரலாற்றை புரிந்து கொள்ளப் பார்த்தார் என்பது இன்றும்

தேவைப்படுகிற விவாதப் பொருள். ஆதித்யா முகர்ஜி அதை செய்ய முயற்சித்துள்ளார்.

நேருவின் palimpsest புரிதல் மிக முக்கிய கருத்தாக்கம். Nationalist approach- imperialist euro centric approach என்கிற இருவகை கோணச்சாய்விலிருந்து வரலாறு நேர் செய்யப்பட நேரு விழைந்தார். முஸ்லீம் ஆட்சியாளர் இங்கேயே இரண்டறக் கலந்ததையும், பிரித்தானியர் தள்ளி நின்று வெளியாளாகவே ஆட்சி புரிந்ததையும் நேரு மாறுபடுத்தி காட்டுவார். முஸ்லீம்கள் ஆட்சியில், பிரிட்டிஷ் ஆட்சி போல இந்தியா காலனியாக இல்லையே என்ற கேள்வி அவரிடம் இருந்தது.

நேரு ஆய்வாளர் மானஷ் பிராக் உடனும், பெரி ஆண்டர்சனின் அய்ரோப்பிய மய்ய பார்வையுடனும் ஆதித்யா வேறுபடுகிறார். நேருவின் idea of Indiaவில் 5 மதிப்புகள் இருப்பதை பேரா ஆதித்யா சுட்டிக்காட்டுகிறார்.

Sovereignty, Democracy, Secularism, pro poor orientation, Scientific outlook என்பன அவை. இவை குறித்து ஆதித்யா விவரிக்கிறார்.

வகுப்புவாதம் எதிர்த்து இந்தியாவின் தலை சிறந்த போராளி நேரு எனச் சொல்ல முடியும். பெரும்பான்மை வகுப்புவாதத்தின் ஆபத்தை அவர் சொல்லிக்கொண்டேயிருந்தார். அதேநேரத்தில், ஒரு வகுப்புவாதத்தால் மற்றொரு வகுப்புவாதத்தை வீழ்த்திவிட முடியாது என்கிற எச்சரிக்கையையும் அவர் தந்தார். இந்தப் புரிதலும் அவசியம் என ஆதித்யா இந்நூலில் சொல்கிறார்.

நேருவின் சில வரிகள் தொடர்ந்து பேசப்படவேண்டியவை..

“ if any person raises his hand against another person on the basis of religion, all the resources at the command of the government will be used to put him down with an iron hand”

“ Generally you will find that those who talk loudly of Indian culture have really nothing to do with any culture in the world, Indian or otherwise. Those who talk of Indian civilisation in fact completely uncivilised…Indian civilisation has been so glorious in the past because it has not followed such communal methods..”

“ one communalism does not end the other, each feeds on the other and both fatten”

ஆதித்யா வேறு முக்கிய பார்வையையும் இந்நூலில் கொணர்கிறார். விடுதலை போராட்ட உயர் தலைவர்களான திலகர், அரவிந்தர், காந்தி,

நேரு, படேல் போன்ற பலரையும் இடதுசாரிகளில் பலர் பூர்ஷ்வாக்கள் என்றும், குறுகிய தேசியவாதிகள் என்றும், இன்னும் இந்து வகுப்புவாதிகள் , மேல்சாதி ரீ ஆக்ஷனரிகள் போன்ற முத்திரைகளையிட்டு, அவர்கள் வெகு மக்களை பிரதிநிதித்துவப் படுத்தினர் என்பதை குறைவாக மதிப்பிட்டுவிட்டனர்.

கம்யூனலிசம் , பாசிசம் என்கிற வடிவையே எடுக்கும் என்ற அளவில் நேருவின் புரிதல் இருந்தது.

ஜனநாயகம் வலுப்பட உயர்தர பலமான எதிர்கட்சியின் அவசியத்தை, பிறர் எவரையும் விட நேரு உணர்ந்தவராக இருந்தார். ஆனால் எதிர்கட்சிக்கு கோட்பாடு, தேர்ந்த நடைமுறை, ஆக்கபூர்வ விமர்சன தொழிற்பாடு வேண்டும் என வற்புறுத்தினார். Industrial transformation with overall growth with democracy என்பதில் நேருவின் சோசலிச புரிதல் அமர்ந்திருந்தது. நமது அரசியல் விடுதலை பொருளாதார விடுதலை நோக்கி பயணிக்க வேண்டும் என தொடர்ந்து சொல்லி வந்தவர் நேரு.

நேரு காலத்து பொருளாதார வளர்ச்சி மீதான விமர்சனங்களுக்கு ஆதித்யா இந்நூலில் ஓரளவு பதில் சொல்லியிருக்கிறார். 1991 வை , 1950 களில் நேரு செய்திருந்தால் இந்தியா banana republic ஆகியிருக்கும் என்கிற மதிப்பீட்டை பேரா ஆதித்யா வைக்கிறார்.

சிறிய சாரமாக சொன்னால் 150 பக்க நூல்தான். நேரு குறித்த நல்ல refresher…

mar 3

அமெரிக்கா எனும் அழித்தொழிப்பு எந்திரம்

இஸ்ரேலை வைத்துக்கொண்டு மத்திய கிழக்கை தரைமட்டமாக்கும் பெரும் மானுட விரோத நடவடிக்கையில் டிரம்பும் ஆயுத வியாபாரிகளின் குழுக்களும் இறங்கியுள்ளன. தலையாட்டும் பொம்மை அரசாங்கங்களை உருவாக்கி மரண வியாபாரிகளை வாழவைக்கும் பேராசை யுத்தம் அரங்கேறிவருகிறது.

இரான் அரசாங்கம் உள்ளூர் மக்களிடம் பிற்போக்காக நடந்தால், அதை எதிர்த்து போராடும் வல்லமையை, இறையாண்மை கொண்ட நாட்டு மக்கள் பெறவேண்டும். ஆனால் ஆட்சி மாற்றம் எனச் சொல்லி, ஆட்சித்தலைவர்களை தூக்குவது, கொல்வது என்கிற new normalயை அமெரிக்க டிரம்ப் உருவாக்கி வருகிறார். இரான் மீது இஸ்ரேலும் அமெரிக்காவும் சொல்லும் குற்றச்சாட்டுகளை வான்வழி தாக்குதல்கள் தீர்த்துவிடுமா..அல்லது பொறுமையான விடாப்பிடியான ராஜதந்திர பேச்சுவார்த்தைகள் வழி சமரசமா என்கிற விவாதம் உலகம் முழுதும் போய்க்கொண்டிருக்கிறது.

இரானும் அமெரிக்க இஸ்ரேலை சமாளிக்க சுற்றி நிற்கும் 14 சிறு சிறு வளைகுடா நாடுகள் மீதான தாக்குதலை, எண்ணெய் பொருளாதார நெருக்கடியை அதிகப்படுத்தியுள்ளது. வட்டார யுத்தம் என பரவலாக்கி தனது strategyயை உருவாக்கி, அமெரிக்காவை திடுக்கிட வைத்துள்ளது.

அயத்துல்லா கமய்னியின் மரணம் எந்த அளவு உலுக்கியதோ அதே அளவு உலகின் பல நாடுகளால் கண்டுகொள்ளப்படா மவுனமாகியும் உள்ளது. இதெல்லாம் ராஜதந்திரமா- அமெரிக்காவை வெளிப்படையாக பகைத்துக்கொள்ள வேண்டாம் என்கிற அச்சமா.. அச்சம் இருப்பதை உலக நாடுகள் காட்டி வருகின்றன. வலுத்தவன் வகுக்கும் வாய்க்கால் என உலகம் போய்க்கொண்டிருக்கிறது.

இந்தியா தனது குரலை இழந்துவிட்டதா என நினைக்கத் தோன்றுகிறது. திரு மோடி அவர்களின் இஸ்ரேல் பயணம், ‘கட்டிப்பிடிகள்’ தர்மசங்கட நிலையையே இந்தியாவிற்கு உருவாக்கியுள்ளதாகத் தோன்றுகிறது. இஸ்ரேல் சிறந்த நண்பன் என்றால் , இந்தியா தன் அறிவுறுத்தும் தகுதியை கொண்டிருக்கவில்லையா என்கிற கேள்வி எழுகிறது.

இரான் இந்தியா போலவே 5000 ஆண்டுகள் பழமை வாய்ந்த நாகரிகம். அவர்கள் கடந்த பல ஆண்டுகளாக இஸ்லாமிய குடியரசு கட்டமைப்பு, அரசமைப்பை பெற்றுள்ளனர். மத்திய கிழக்கில் இஸ்ரேல் கை

ஓங்காமல் போராடுபவர்களுக்கு துணையாக பயங்கரவாதத்தை ஊக்குவிக்கிறது இரான் என இஸ்ரேலும் அமெரிக்காவும் தாக்கி வருகின்றன. இஸ்ரேல் state terrorism குறித்து இரானுக்கு வலியிருக்காதா?

இப்போரால் ஆயுத வியாபாரிகள் கொழிக்கலாம். யுத்த பிரதேசங்களின் பொருளாதாரம் மட்டுமல்ல எண்ணெய் எரிசக்தி உலகப்பொருளாதாரமே பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. இந்தியாவும் இந்த நெருக்கடியில் சிக்கும். வளைகுடாவில் வாழும் ஏறத்தாழ ஒரு கோடி இந்தியர் பாதிக்கப்பட்டால், இந்தியாவில் நேரடியாக 5 கோடி மக்களின் வாழ்வாதாரத்தை தாக்கும்.

அய் நா செயலிழந்து நிற்கிறது. சீனாவும் ரஷ்யாவும் அய்ரோப்பிய நாடுகளும் எப்படி தொடர்ந்து செயலாற்றப்போகிறார்கள் என்கிற கேள்வி ஆர்வமாகியுள்ளது. அமெரிக்காவின் தாண்டவத்தை தடுக்கும் institutional ஏற்பாடுகள் இல்லா உலகமாக கையறு நிலை தொடர்கிறது.

அமெரிக்க மக்களின் ஜனநாயக உணர்வும், மனிதாபிமான அமைதிக்கான வற்புறுத்தலும் பெருக வேண்டிய நிலை கூடுதலாக தேவைப்படுகிறது. போக்கிரிகள் நாடாள வந்தால், ரோடுகளில் சோடாபாட்டில் வீச்சே அன்றாடமாகிவிடும். இந்த நிலையில் உலகம் போக்கிரி ஆட்சியாளர்களின் மனோராஜ்யமாகி வருகிறது..

துவங்கிய போர் நிற்காமல் போகாது. மக்களை பொருளாதாரத்தை அழிவின் குப்பை மேடாக மாற்றிவிட்டா, சமயோஜிதமாக பேச்சு வார்த்தை மேஜையின் வழியாகவா என்கிற கேள்விக்கான பதிலை எதிர்ப்பார்த்து...

3-3-2026

mar 3

சித்திக்கியின் ‘நான் சாட்சி’

An unputdownable book, no doubt என்று தேர்தல் கமிஷனராக இருந்த குரைஷி, ஷாகித் சித்திக்கியின் I witness- India from Nehru to Narendra Modi நூல் பற்றி சொல்லியிருந்தார்.

400 பக்க இந்நூலை அப்படியென்னால் தொடர்ந்து படிக்க முடியாமல் உடல்நிலை தடுத்திருந்தது. எப்படியோ பலவீனத்தை சற்று புறக்கணித்து இந்நூலை படிக்க முடிந்தது. இந்தியாவின் ஆக உயர் பீட அரசியலை குறித்த, நெருக்கமாக மேலிடங்களில் உள்ளும் புறமுமாக பழகி புகுந்து புறப்பட்டு வந்த, விடுதலை போராட்ட இஸ்லாமிய குடும்ப பார்வையில் இந்நூல் முழுமையாக எழுதப்பட்டுள்ளது.

சித்திக்கியின் இந்த ‘நான் சாட்சி’ நூல் குறித்து ஆரம்பத்தில் சில இடுகைகளை செய்திருந்தேன். தொடர்ந்து செய்ய இயலாமல் போனது. இந்திய அரசியலின் உட்புற அலசல்களை, அலப்பறைகளை, அன்பு நேயத்தை, சதிகளின் வன்மத்தை, கால் வாரல்களை - ஆட்சி கவிழ்ப்புகளை, எதற்கும் விலை பேசும் உள் வட்டாரத்தை இந்நூலில் சித்திக்கி அவரின் பார்வை கோணத்தில்- நியாய நோக்கில் புட்டு புட்டு வைக்கிறார். சம்பந்தப்பட்டவர்களின் பதில் கிடைத்தால்தான் அதன் முழு authenticity யை உணரமுடியும்.

டெல்லியில் விடுதலைக்கால போராட்டக் குடும்பம் ஒன்று, எப்படி விடுதலைக்கு பின்னரான உருது பத்திரிகை துறையில், அரசியல் கட்சிகளின் ஊடே , செல்வாக்கைப் பெற்றது- அவ்வப்போது கைவிடப்பட்டது என்கிற accountம் கூட இந்நூலில் கிடைக்கும். என்னால் இந்நூலின் காணக்கிடைக்கும் ஏராள உயர் அரசியல் சழக்குகளை, வம்புகளை எழுத முடியாமல் போயுள்ளது. சித்திக்கி இந்நூலை முடிக்கும்போது சில மதிப்பீடுகளை வைக்கிறார். அதை மட்டும் சொல்கிறேன்.

“In most parties, decisions are made by a select few from specific castes and families. Aside from the Communist parties, including the BJP, operate in a fundamentally undemocratic manner..inner party democracy is non existent..any questioning is perceived as a threat, resulting those individuals being shown door..”

“ In six decades of interacting with Indian political figures, I have yet to encounter anyone who embodies the moral courage of Gandhi, the intellectual wisdom of Nehru or Azad, the bravery of Subhash or Patel, or the profound depth of Dr.Ambedkar “

“ The India that I have witnessed in the 75 years of my vibrant life gives me the confidence to agree with Iqbal “ yes, there is something unique in us that makes us richer and stronger than all cultures of the past”. Let me end with the famous words of Tagore “ If God so wished, he would have made all Indians speak with one language.. the unity of India has been and shall always be a unity with diversity “. “

2025ல் வந்த இந்நூலை ரூபா பப்ளிஷர் வெளியிட்டுள்ளனர். அமேசான் வழியில் ரூ 800க்கு கிடைக்கும்..

3-3-2026

mar 5

Employer decides pensioner status

All pensioners are not belonging to one single classification/ category. There may be different classified pensioners like CG pensioners, state Govt pensioners, bsnl absorbed pensioners and other varied pensioners as per 'own your pension scheme'.

Even amongst the CG pensioners there are now OPS- NPS- UPS classification as per their date of retirement. These groups form each a different category having their own terms for getting pension.

An employer , here CG decides pension differently for each group on the date of retirement of the employee. This was happened to BSNL absorbed employees way back to 2000 itself. The GOI made them a distinct category of getting pension from consolidated fund as per newly amended 37 A rules.

37 A rules in general are not for paying the pension from consolidated fund, it stands only for 'Pension Fund' of each PSU absorbed . Fortunately a special privilege was given , by an exemption clause to bsnl absorbed from the 'pension fund' . Here only we celebrate the wisdom of com O P Gupta, getting pension from GOI thro budgetary DFG.

On 1-10-2000 a grand distinction was made amongst the DOT employees, one as CG pensioners, the other bulk 4.5 lakhs as bsnl absorbed IDA pensioners. This distinction has been there for the last 25 years between CG pensioners and bsnl absorbed pensioners.

The fortunate CG pensioners all along got their CPC to decide their fortunes along the CG employees. This was the case till 7 th CPC. Unfortunately there is no such provision for BSNL absorbed, no rules for their 'pension revision', though good rules are there thro 37 A for fixing their pension. Fortunately in 2007 , though delayed , they got their pension revision , as the employees got their wage revision.

Now GOI has set up 8 th CPC. The TOR is not as expected by the CG pensioners and their morale is down on seeing the same. Their pension revision case is not found in the TOR. The 8th CPC is restricted to decide about the fortunes of 9 categories of employees ranking top with CG employees- to recommend emolument structure, bonus, allowances, promotions etc.

Regarding retirement benefits to the said 9 categories, the TOR speaks

2 e

1. To review the DCRG borne on NPS/ UPS and make recommendation

2. To review DCRG and pensions of employees not borne on NPS/ UPS and make recommendations keeping in view para iii below

See here. OPS wallahs are made as ‘others’ comparing NPS- UPS wallahs. That is ‘OPS employees are shrinking categories’ and the new employees since 2004 are ‘the growing NPS- UPS categories’. There is no rider for reviewing DCRG for NPS- UPS category in the TOR . Here you can find no mention of any review of pension to that category.

In the case of OPS employees, again note ‘employees’, the review is for two things - one DCRG and the other pension . Here no mention of ‘commutation or its formula’. So making the 8 th CPC difficult to say anything about restoration before 15 years. The review of DCRG and pension is having a rider for OPS employees .

2 f

iii the unfunded cost of non contributory pension schemes

This rider is directly involving the OPS employees still on CG service and so the calculation should be accordingly restricted one. The unfunded cost calculation may be , if decoded, stretched to the entire existing pensioners getting OPS pension as on date. I could not discern the intention of GOI to put this rider to the OPS employees case.

Now what is the case of the existing OPS pensioners... They are worrying about their non inclusion in the TOR, about the rider ‘unfunded cost’ and so should demand the amendment of TOR for the inclusion of their pension revision case also. During Indira Gandhi period , we got that type of amendment.

The CG employees have to start with a case- the unmentioned date of implementation of 8 th CPC. This is crucial for OPS pensioners. 8 th CPC recommendations are only to all the 9 categories of employees, irrespective of their pension schemes. But for the existing OPS pensioners of CG, the crucial issue is the date of implementation of CPC. If it becomes 1-1-2026, then they have a good case as Pre and post issue arises. If the date of OM of GOI is the date of implementation, then such issue becomes little complicated .

Let us try to understand the ‘context and text’ of each issue. By demanding 7 th CPC implementation or inclusion in 8 th CPC (nothing wrong to demand so) , the bsnl absorbed are demanding to wipe out the distinction made on 1-10-2000 and exhibiting the desire to join the 70 lakhs OPS CG pensioners mainstream category .

We need two things to be done for this apart from court cases.

Either

All the pensioners associations in the bsnl should in one voice prefer a memo to the DOT , DOE, DOPPW first for their inclusion in the 8th CPC . DOT should be convinced, there is a case for them, to refer the matter to 8 th CPC. All the associations should take a bold stand , taking the service unions also into confidence to give up IDA pattern to CDA pattern and bear the cost if any.

Or

all the associations should demand in one voice about the implementation of PRC and the connected pension revision.

It may be difficult to stretch the CPC recommendations to the absorbed employees of BSNL on roll on 1-1-2026. For this the best solution is the suggestion of DOT on 17-10-2022 (it's note sheet also).

Whether we win the case or not, at least the unity and one voice in demanding need to be settled first. Now different voices are there.

The other immediate issue is minimum pension RS 9000 to the low paid pensioners belonging to NE 1 to NE 6 categories. Their minimum pension is well below 9000. This distinction needs to be to be addressed, as GOI settled the distinction in the gratuity from the same date as that of CG pensioners.

I hope and wish that the bsnl associations should channelise their energy more on bringing unity amongst themselves on a common demand and on the issue of minimum pension Rs 9000.

Wishing good luck and success..

9 hrs 5 - 3 - 2026 R. Pattabiraman

mar 7

The Aurobindo Reader

பேராசிரியர் மகரந்த் பரஞ்சபே, ஜே என் யு வில் இருந்தவர், ஐ ஐஏ எஸ் ஆய்வாளர், ஆங்கில இலக்கியத்தில் தோய்ந்தவர், இந்திய சிந்தனைமுறைகள் குறித்த ஆய்வாளர், கவிஞரும் கூட.

மகரந்த் - காந்தி, விவேகானந்தர், அரவிந்தர் குறித்தும் நூல்களை வித்தியாச கண்ணோட்டத்தில் எழுதியுள்ளார். Decolonising the Indian Mind என்கிற நூலும் இருக்கிறது. இந்தியர்கள் அய்ரோப்பிய மய்ய பார்வை குறித்த விமர்சனம் மகரந்திடம் இருக்கிறது. ஆர் எஸ் எஸ் சாய்வில் போகிறார் என மார்க்சியர் அவரை குற்றம் சாட்டியுள்ளனர். மார்க்சியர்கள் இந்திய அறிவார்ந்த சிந்தனை தொகுப்புகளை வெறும் மதம் என சுருக்கி , தங்கள் உழைப்பை நல்காமல் புறக்கணிக்கின்றனர் என மகரந்த் , மார்க்சியர்கள் மீதான விமர்சனத்தை வைக்கிறார்.

‘கலாச்சார தேசியம்’ சார்ந்து நிற்கிறார் மகரந்த் என மார்க்சியர் அவரை விமர்சித்து வருகின்றனர். கலாச்சார ஆன்மீக பாரம்பரிய சிந்தனைகளை ஒதுக்கிவிட்டு இந்தியாவை மார்க்சியர் எப்படி சரியாக புரிந்துகொள்ளவியலும் என்கிற மாற்று விமர்சனத்தை மகரந்த் வைக்கிறார். காந்தியைக்கூட civilisational thinker என்கிறவகைப்பட்டு மகரந்த் பேசுவார்.

மகரந்தின் The Death and Afterlife of Mahatma Gandhi யை சில ஆண்டுகளுக்கு முன்னர் படித்தேன். விவேகானந்தர் படித்த நினைவு. Decolonising mind பாதியில் விட்ட நினைவு.

சரி. இப்ப பார்த்துக்கொண்டு இருப்பது பேரா மகரந்தின் The Aurobindo Reader by Penguin. மகரந்த் எடிட் செய்து வந்த நூல். 25 ஆண்டுகளுக்கு முன்னர் வந்த ஒன்று. அரவிந்தர் ஏராளம் வால்யூம்களாக எழுதி குவித்தவர். இந்திய ஞானமுறைகளை விளக்கியவர். விடுதலை போராட்ட வீரர், யோகி, கவிஞர், சிந்தனையாளராக , தத்துவவாதியாக உணரப்பட்டவர்.

ஒரே நூலில் அரவிந்தர் சிந்தனைகளின் சாரத்தை அறிய வேண்டுமானால்- precise sharp- மகரந்த் எடிட் செய்துள்ள ‘அரபிந்தோ ரீடர்’ நூலைச் சொல்லலாம். அரவிந்தர் என்றால் சாவித்திரி, The Life Divine, Human cycle, Essays on Gita, The ideal of Human unity போன்றவை நினைவிற்கு வரலாம்.

மகரந்த் இந்நூலை 8 பிரிவுகளில்- பல இயல்களாக, பிற்சேர்க்கைகளுடன் தேர்ந்து பார்த்து அரவிந்தர் எழுத்துக்களை தொகுத்துள்ளார். முதல் 50 பக்கங்கள் அவர் விடுதலை தாகம் நிறை இளைஞராக எழுதியவை- அவை Towards Swaraj and Regeneration of India என்கிற செக்ஷனில் 8 கட்டுரைகளாக இடம் பெற்றுள்ளன. இந்த இயல் இன்றும் விவாதிக்கப்பட வேண்டிய கருத்துக்களை கொண்டிருக்கின்றன. இந்து மகாசபா ஆரம்பித்தது குறித்த விமர்சன பார்வை கட்டுரை ஒன்றும் இதில் உள்ளது.

அரவிந்தர் அவரின் The ideal of human unity ல் , ‘அமைப்பு’ என்பது material well being சார்ந்து admirable என்றாலும், தனிநபர் பலரை தேங்கவும் வைத்துவிடுகிறது என்கிற கருத்தை முன் வைத்துள்ளார். எனது அனுபவத்தில் இதை நன்றாக உணரமுடிந்தது.

அரசு என்கிற கருத்தாக்கத்தின் போதாமை- the inadequacy of the state idea என்கிற இயலும் இந்நூலில் இணைக்கப்பட்டுள்ளது. அரசு, அரசியல்வாதிகள் குறித்த அரவிந்தர் மதிப்பீடுகளை இதில் பார்க்கலாம். Modern politician does not represent the soul of a people or its aspirations - what he does represent is the average pettiness, selfishness, egoism, self deception…என அரவிந்தர் சொல்வதைப் பார்க்கலாம். அரசு என்பதை மார்க்சியர் காந்தியர் போலவே ஒடுக்குமுறை கருவியாகவே அரவிந்தரும் பார்க்கிறார். காந்தி போலவே அரவிந்தரும் state has no soul or only a rudimentary one எனப் பேசியுள்ளார்.

மார்க்சியர் போலவே ‘அரசு ‘ குறிப்பிட்ட வர்க்கத்தின் சேவகன் என்கிற கருத்திற்கும் அரவிந்தர் வந்துள்ளார். The ‘state’ is a convenience, a rather clumsy convenience, for our common development, it ought never to be made an end in itself. மார்க்சும் அரசு உதிரவேண்டிய கனவை வைத்திருந்தார். State is not an organism, it is a machine, without tact, taste, delicacy or intuition - it always tends to uniformity, that is easy for it- but uniformity is dead, not life என அரசு எந்திரத்தை அரவிந்தர் கட்டுடைக்கிறார். சோசலிசத்தின் நோக்கம் உயர்ந்தது என அரவிந்தர் ஏற்றாலும், அதன் unnecessary interference with the freedom of man’s growth harmful என்கிறார். அரவிந்தர் விழைவது a form that gives sufficient scope for the principles of variation which is necessary for the free play of life and healthy progress of the race எனப் பார்க்கிறோம்.

மீதி பக்கங்களில், பிற இயல்கள் - வேதம், உபநிடதம், கீதை, யோகா, கவிதைகள் என்ற வகையில் செல்பவை. இந்திய அறிவுக் கிடங்கில் மூழ்கி தன் பார்வையில் அவற்றை அரவிந்தர் வெளிக்கொணரும் ஏராள

கட்டுரைகள் இதில் இடம் பெற்றுள்ளன. மதம் என சுருக்காமல் knowledge system என்கிற விவாத நோக்கை தரக்கூடியவை.

அரவிந்தர் 1950லேயே மறைந்துவிட்டார். அவருக்குப் பின்னரும் Mother பொறுப்பில் அவரது சிந்தனைகள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்தன. மேற்கு சிந்தனை முறைகள் போலவே- கிரேக்க சிந்தனை- இந்திய சிந்தனை- தமிழ் சிந்தனை மரபு என பன்முக சிந்தனை முறைகள் விவாத வெளியில் இருத்தப்படுவதன் அவசியத்தை மானுடம் அவ்வப்போது உணரவே செய்யும். இந்திய சிந்தனை முறையின் அறிவுத்தேடலாக, யோகித்தன்மையாக அரவிந்தர் மரபை புரிந்து கொள்ளலாம்.

அரவிந்தர் சிந்தனை தெறிப்புகளை அறிய மகரந்தின் நூல் துணையாக நிற்கலாம்.

7-3-2026

mar 8

மகளிர் தின நல்வாழ்த்துகள்!

மேதின வரலாறு போலவே சர்வதேச மகளிர் தினமும்தனக்கென தனித்த பெரும் போராட்ட வரலாற்றைக் கொண்டிருக்கிறது. இன்று மகளிர் தினம் கொண்டாடாத நாடுகள், நிறுவனங்கள், அமைப்புகள் இருக்காது என்றே கருதுகிறேன்.

சிறு துளிகள்தான் பெரும் நீரோடை பாதைகளாகின்றன. மகளிர் தினம் குறித்தும் அப்படியான சிறு சிறு புள்ளிகளை இணைத்து அதற்கான வரலாற்றுப் பாதையை பெண் போராளிகள்- கருத்தியல் செயல்பாட்டாளர்கள் செப்பனிட்டுள்ளனர்.

1857லேயே நியுயார்க் பஞ்சாலை துணி நெய்யும் பெண்கள் 12 மணிநேர உழைப்பு, குறைந்த கூலி எதிர்த்து போராடியுள்ளனர். அதன் 50ம் ஆண்டை நினைவு கூர்ந்து பிப் 23 ல் (பின் மாறிய கிரிகேரியன் காலண்டர்படி மார்ச் 1907 அமெரிக்க பெண்கள் வீதிக்கு வந்தனர். March 8, 1909ல் அமெரிக்க பெண் போராளிகளின் பிரதிநிதிகள் கூடி National Woman's Day என்ற வகையில் நடத்திக் காட்டினர். தங்களுக்கான வாக்கு உரிமையை முன்வைத்து universal suffrage பெண் போராளிகளுடன் நின்றனர்.

சோசலிஸ்ட்களும் மார்க்சிஸ்ட்களும் பெண்களின் பொருளாதார விடுதலை எனப் பேசிக்கொண்டிருந்தபோது, தனித்த குரலை ஜெர்மன் மார்க்சியர்களான கிளாரா ஜெட்கின், லூசி ஜியட்ஸ் போன்றவர் சோசலிச ஸ்டட்கர்ட் மாநாட்டில் அனைவருக்கும் வாக்குரிமை என்பதை ஏற்க வைக்கப் போராடினர்.

1910 கோபன்ஹேகன் மாநாட்டில் பெண் உரிமைகள் குரலை, பொதுவாக தொழிலாளர் உரிமைகள் என்று மட்டுமல்லாமல் பேசலாயினர். குறிப்பாக அடிமட்ட தொழிலாளியாக இருந்து, தலைமைக்கு நெருக்கமாக வந்த Luise Zietz மாநாட்டில் women's day என்கிற உரிமை தினம் வேண்டும் எனப் பேசினார். கிளாரா ஜெட்கின் தலைமையில் 100 பிரதிநிதிகள் பங்கேற்றனர். கிளாரா, லூசியின் குரலை தீர்மானகரமாக்கி ஒலிப்போம்- உலகம் உணரச் செய்வோம் என அதற்கு வடிவம் கொடுத்து, தீர்மானம் ஏற்கப்பட்டது. குறிப்பிட்ட நாள் என ஏதும் முடிவாகவில்லை. அந்த தீர்மானம் நடைபெற்ற இடத்திற்கு people's Houseஎனப் பெயராம். இன்று அது யூத் ஹவுஸ் என இருக்கிறதாம்.

அடுத்த 1911ல் அவர்கள் பிப்ரவரியில் மகளிர் தினம் அனுசரித்தனர். புகழ் வாய்ந்த மார்க்சிய பெண் போராளிகளான அலெக்சாந்தர் கொலந்தாய், ரோசா, ஏஞ்சலிகா, க்ருப்ஸ்காயா போன்றவர் கிளாராவின் கோரிக்கைக்கு வலு சேர்த்தனர்.

முதல் உலகப்போர் கொடுமையை ஜார் ஆட்சி கண்டது. பெட்ரோகிரேடில் உணவு விலைகள் உயர்ந்தன. வாடகை எகிறியது. 5 லட்சம் தொழிலாளர் வேலையிழந்தனர். போருக்குப் போன கணவர்களை திரும்பத் தா- down with arms -peace என குரல்களை எதிரொலித்தனர்.

1917 பிப் 23 (புதிய காலண்டரில் மார்ச் அன்று நேவா மில் பெண்கள் bread and peace என்ற முழக்கத்துடன் போராட வந்தனர். மேதினம் வரை காத்திருங்கள், ஒன்றாகப் போராடலாம் என போல்ஷ்விக் கூட சொல்லிப் பார்த்தனர். இல்லை, பெண்களின் தனித்தக் குரலை ஜார் கேட்கட்டும் என மெட்டல் பெண் தொழிலாளர்களும் இணைந்தனர். துப்பாக்கி சூடு நடத்த முடியாது என ஜாரின் கட்டளையை வீரர்கள் மீறி பெண்களுக்கு துணை நின்றனர். ஜார் ஆட்சி வீழ்ந்தது. பின்னர் அக்டோபர் புரட்சி நடந்து லெனின் தலைமையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

போராளி கொலந்தாய், லெனின் கேபினட்டில் நல்வாழ்வுத்துறை பெற்றார். பேறுகால விடுப்பு, போஸ்ட் கார்டில் கூட விவாகரத்து கோரும் உரிமை, கருகலைப்பு உரிமை, குழந்தைகள் பராமரிப்பு போன்ற பெரும் உரிமைசார் திட்டங்களை கொலந்தாய் கொணர்ந்தார். லெனினுடன் வாதாடி மார்ச் 8யை பெரும் கொண்டாட்டமாக உரிமை தினமாக அரசாங்க விடுமுறை தினமாக மாற்றியவர் அலெக்சாந்தர் கொலந்தாய். அப்படி 1920களில் red holiday எனப் புகழ் பெற்று , உலக முழுதும் மகளிர் தினம் எனில் மார்ச் 8 fixed date like May Day என உருவானது. அய் நா 1975ல் அங்கீகரித்தது. மார்ச் 8 என்கிற நிலைத்த தேதி உருவாக்கிய பெருமையை பெட் ரோகிரேட் பெண் தொழிலாளர்க்கு, கொலந்தாய்க்கு கொடுக்கலாம்.

இப்படி பல புள்ளிப் பொறிகளின் உணர் உஷ்ண வரலாறாக மகளிர் தினம் உருவாகி இன்று பெரும் கொண்டாட்டமாக நடைபெற்று வருகிறது. இன்னும் விடுமுறை என்கிற கட்டத்தை எட்டவில்லை. சம உரிமை, சம மதிப்பு, சம வாய்ப்பு என்கிற போராட்டங்கள் போக வேண்டிய வெகுதூரம் நிலவுகிறது.

அமெரிக்கா- இஸ்ரேல், ஈரான், மத்திய கிழக்கு நாடுகள், உக்ரைன்-ரஷ்யா எனப் போர்ச் சூழல் நாடுகளில் down with arms- bread and peace குரல்கள் வலுவாக வேண்டியுள்ளது.

2026 தீம் ஆக அய் நா Rights Justice Action for all girls and women என்பதையும், IWD Give to Gain என்பதையும் வைத்து பெண்களின் உரிமைக் குரலை வெளிப்படுத்தியுள்ளனர்.

மேதினம் போலவே, மகளிர் தினமும் போரற்ற உலகம் என்கிற விழைவை நோக்கிய peace - down with arms முழக்கத்தை ஒலிக்கட்டும்...
இந்தியாவில் religious harmony- secular outlook என்கிற திசையும் எட்டட்டும்..

நல்வாழ்த்துகள்..

8-3-2026

mar 9

பொதுவுடைமை இயக்கமும் சிங்காரவேலரும்

முனைவர் ஆய்வறிஞர் கோ கேசவன் எழுத்துக்கள் தமிழக இடதுசாரிகளிடம் ஈர்ப்பை ஏற்படுத்தக்கூடியவை. அவ்வகையில் 1988-89ல் வந்த அவரது நூல் ‘ பொதுவுடைமை இயக்கமும் சிங்காரவேலரும்’. இந்நூலை 2001ல் திரும்பக் கொணர்ந்தனர்.

இந்திய கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்றுக் குறிப்புகளை அறிந்தவர்களுக்கு, கேசவனின் நூல் refresher ஆக இருக்கும். அந்த நூலை சில ஆண்டுகளுக்கு முன்னர் படித்தபோது, அவரது உழைப்பு குறித்த பிரமிப்பு இருந்தது. இப்போது படித்தபோதும் அந்த மரியாதையை உணர்கிறேன்.

எந்த வரலாற்று குறிப்பும் தன்னளவில் absolute - beyond bias எனச் சொல்ல முடியாது. கேசவனின் இந்த நூலும் விதிவிலக்கல்ல. மனச்சாய்வுகளை ஆங்காங்கே என் பார்வையில் உணர்கிறேன்.

திருவிக- சிங்காரவேலர் தொழிற்சங்க பிரச்சனையில் , வேறுபாடுகளில் இருவர் மதிப்புக்கும் சேதாரம் தரும் செய்திகளை முத்து குணசேகரனும், கேசவனும் தந்திருப்பர். பிரிட்டிஷாரிடம் டாங்கே மன்னிப்பு கடிதம் என்பது சொல்லப்பட்டிருக்கும். கம்யூனிஸ்ட் கட்சி உடைவு காலத்தில் இது பெரும் அரசியலாக்கப்பட்டது.

விடுதலைப் போராட்டக் காலத்தில் இப்படி மன்னிப்பு கேட்டவர்களை சுட்டிக்காட்டி நடைபெறும் அரசியல் இங்குண்டு. சாவர்க்கர் கேட்டார், வ உ சி அவரது துணைவியார் கேட்டனர், சுப்பிரமணிய சிவா கேட்டார் என செய்திகள் சொல்லப்படுவதுண்டு. இந்நூலில் சிங்காரவேலர் கான்பூர் சதி வழக்கிலிருந்து உடல்நிலை கருதி விடுவிக்கப்பட்ட செய்தியுடன், அரசாங்கம் அனுமதிக்கும்வரை ‘போர்க்குணம் காட்டல்’ என்கிற வரையறை குறித்த செய்தியையும் கேசவன் காட்ட முனைகிறார். எவர் தான் கட்டற்ற வரையறை கொண்டவர் எனத் தெரியவில்லை. புரட்சிக்கு கூட வரையறை உண்டு. கட்டற்ற தினப் புரட்சி என ஏதுமிருக்காது. புரட்சிக்குப் பின்னர் கட்டுமானம் என்கிற வரையறை அதற்கும் தேவைப்படலாம்.

சிங்காரவேலர் குறித்த இந்நூலில் கடைசியில் இரு இயல்களில்தான் தொகுப்பாக பேசப்பட்டுள்ளது. 240 பக்கங்களில் அவை இறுதி 90 பக்கங்கள் இருக்கும். சிங்காரவேலர் பொதுவுடைமை கருத்துக்கள்

பற்றிய இயல், பொதுவுடைமை இயக்கமும் சிங்காரவேலரும் என்கிற இறுதி 9வது இயல் இந்நூலில் இருக்கும்.

"முன்னுரை, பொதுவுடைமை இயக்கம், 1921க்கு முன்னர், 1921-34 சமூக நிலைமைகள், குழுக்கள், குழுக்களும் அரசும்" என முன்னரான இயல்கள் அமையப் பெற்றிருக்கும். இடதுசாரி இயக்கம் குறித்து, வரலாற்றில் சொல்லப்படும் வழக்கமான சொல்லாடல்களுடன் இவ்வியல்கள் கட்டப்பட்டிருக்கும். சில பார்முலா வகைப்பட்ட definitions. மேலும் தங்கள் பார்வையில் மட்டுமே வெளிச்சம் இருக்கும் என்கிற அதீத சுய நம்பிக்கைகள்- காந்தி உள்ளிட்ட பிறர் கருத்துக்களை அபத்தம் என அலட்சியம் செய்யும் judgments இருப்பதை , இம்முறை வாசிப்பில் உணர்ந்தேன். புரட்சிக்கான முழு authority மனோபாவம் ஆங்காங்கே தெரியும். சாப்பா குத்தல்கள் இருக்கும்.

"காந்தியின் சிந்தனை எல்லை, சீர்திருத்தவாத முதலாளியத்தின் சிந்தனை எல்லையைத் தாண்ட இயலாது" - "சீர்திருத்தவாத முதலாளியம் ஏகாதிபத்தியத்தால் ஏற்படுத்தப்பட்டு வளர்க்கப்படுவது" என்பது போன்ற judgement . வழக்கமான சொல்லாடல்கள். பெரும் புரட்சியாளர் என்கிற நினைப்பிற்கு ஏற்பத்தான் வார்த்தைகளில் உஷ்ணம் ஏற்றப்படுதல் நிகழும். அவை பொதுவாக நேர் விகிதத்தில் அமையக்கூடும்.

சிங்காரவேலர் கருத்துக்கள் , பணிகள் குறித்து பெருமிதப்படுத்தும் குறிப்புகளை கேசவன் தரத்தவறவில்லை. போதாமை லிமிட்டேஷன் என சில விமர்சனங்களையும் வைக்கிறார். 1922 வரை தொழிற்சங்கம், அரசியலுக்கு அவர் புதியவராகவே தென்படுகிறார் என்பதை ராய்க்கு எழுதிய கடிதம் வாயிலாக கேசவன் சொல்கிறார். காந்தியம் பற்றி தெளிவற்ற புரிதல் அவருக்கு இருந்ததாக சொல்கிறார். "புத்தம் காந்தியம் பொதுவுடைமை என்கிற மூன்றையும் கோட்பாட்டளவில் இணைத்துப் பார்க்கும் 'அபத்தப் போக்கு'" சிங்காரவேலரிடம் இருந்ததாக கேசவன் மதிப்பிடுகிறார். கோட்பாட்டு புனித பூசாரிகளை ideological areaவில் தவிர்க்க முடியாது போலும். அவர்கள் சொல்வதுதான் பரிகாரம்..

சிங்காரவேலர் தொடங்கிய இந்திய லேபர் கிசான் கட்சி அறிக்கைப் பற்றியும் கேசவன் விமர்சனத்தை வைத்துள்ளார். இப்பகுதியில் திருவிக உடனான வேறுபாடுகளைச் சொல்கிறார். சிங்காரவேலர்

பற்றிய ராயின் பாராட்டுகள், ராயின் கடுமையான விமர்சனங்களையும் கேசவன் தந்துள்ளார்.

அமீர்கான் கட்சி கட்டுவதில் (ரகசிய குழு) செயல்பட்டதை விதந்து கேசவன் சொல்கிறார். பெரியார்- சிங்காரவேலர் நாத்திக பொதுவுடைமை பிரச்சாரமும்- அமீர்கான் ரகசிய குழு கட்டுதல் செயல்படுதல் என்பதற்கும் எவ்வித இணைப்பும் இல்லாமல் இருந்ததாக கேசவன் சொல்லியுள்ளார்.

அமீருக்குப் பிறகு சுந்தரையா பொறுப்பில் சென்னை மாகாண கட்சி செயல்பட்டதாகவும்- சென்னை, நெல்லூர், மேற்கு கோதாவரி, குண்டூர், கிருஷ்ணா பகுதிகள் எல்லாம் சேர்ந்து இரகசிய குழுவில் 24 உறுப்பினர்கள் கட்சி செயல்பாட்டில் இருந்ததாக கேசவன் சொல்கிறார்.

இந்திய கம்யூனிஸ்ட் இயக்கம் குறித்து ஏராள நூல்கள் உள்ள காலமிது. தமிழில் வந்த குறிப்பு நூல் என்ற அளவில் பேரா கேசவன் நூலும் முக்கிய பங்களிப்பு எனப் புரிந்துகொள்கிறேன். மனச்சாய்வுகள், அதீத கோட்பாட்டு நம்பிக்கைகள் தொழிற்பட்டிருக்கக்கூடும் என்பதை தள்ளி வைத்து பார்க்கும் போது, , முடிந்தவரை கிடைத்த ஆவணங்களின் சாட்சியங்களுடன் நூலை கட்டியமைத்துள்ளார் கேசவன் அவர்கள். Refresher எனலாம்.

9-3-2026

mar 10

The question of DA

Is Dearness Allowance a fundamental right? This question was taken up by the SC in their Feb 5th 2026 judgement , but kept and left the matter open to be decided in an appropriate case

But SC has categorically mentioned and affirmed that the question of DA being a legally enforceable right has already been put to rest.

(Feb 5th 2026 in the case of West Bengal Govt employees)

In the light of the recent SC judgment of Feb 5th, 2026- we can check BSNL IDA issue through Orders/ OM.

In the case of BSNL Executives vide BSNL Office Order dated 5th March, 2009

6. 100% DA neutralisation will be adopted for all the executives, who are on IDA pattern of scales of Pay w.e.f 1-1-2007. Thus DA on 1-1-2007 will become zero with link point of AICPI 2001=100, which is 126.33 as on 1-1-2007. The periodicity of adjustment will be once in three months, as per the existing practice for these categories. The quarterly DA payable from 1-1-2007 will be as per new DA scheme..

Here the Office order based on Presidential Directives(DOT dated 27th Feb 2009) is agreeing for DA payable from 1-1-2007 as per the new scheme. As there is no implementation of 3rd PRC , the same 2007 DA scheme is continued for the bsnl employees. As per the above SC Judgement, we can hope that the accepted scheme is legally enforceable. Another good thing here is, the 3 months periodicity is also mentioned in that order and so , that also I hope legally enforceable.

In the case of bsnl absorbed IDA pensioners, the respective OM of DOT dated 15-3-2011 speaks so about DR

4.6…..Therefore the Dearness Relief on the consolidated pension/ FP will be admissible only beyond index average 126.33 (2001=100) in accordance with the scheme of DA which is admissible on pay to serving employees of BSNL - that is the quarterly IDA rates notified by DPE…

Here in this OM, BSNL absorbed Pensioners were made eligible to DR as that of IDA ‘rates notified by DPE to the serving employees’ and the periodicity is quarterly.

These orders for employees and Pensioners have been implemented all these years(barring Covid period cut) with the said procedures- DPE notification with rates, then DOT endorsement and order, BSNL order. I do not know why the GOI / DOT is delaying order for Jan 2026 .

The DPE 3 rd PRC OM dated 3-8-2017 speaks about IDA , more or like in the same pattern of 2007 scheme.

7. 100% DA neutralisation would be continued for all the executives and non unionised supervisors, who are on IDA pattern of scales of pay w.e.f 1-1-2017. Thus DA as on 1-1-2017 will become zero with link point of AICPI 2001=100, which is 277.33 as on 1-1-2017. The periodicity of adjustment will be once in three months as per the existing practice.

Here again in the 3rd PRC OM also, DPE agreed the existing practice of 'AICPI 2001= 100' based calculations and issued OM to continue the practice of quarterly periodicity.

On seeing this SC judgment, We hope both DPE and DOT would find sense in implementing the 2007 scheme of IDA rates to the concerned employees of PSUs including BSNL. The delay causing to issue and endorse IDA since Jan 2026 is unfair. Hope better sense prevail at the respective administrative quarters.

12.30 hrs 10-3-2026 R. Pattabiraman

mar 11

டாங்கேவின் பார்வையில்...

தோழர் டாங்கேவின் இறுதி காலத்தில், அவரது எழுத்துக்களை தொகுத்து வெளியிடும் பணியை , டாங்கேவின் புதல்வி ரோஸா தேஷ்பாண்டேயும், மருமகன் பானி தேஷ்பாண்டேயும் செய்தனர்.

அப்படி தொகுப்பாக வந்ததுதான் " Problems of Indian Renaissance ". இந்த நூலில் டாங்கேவின் சில பெரும் கட்டுரைகள், உரைகளில் சில, பேட்டிகள் இடம் பெற்றுள்ளன. 'செலக்டட் ஒர்க்ஸ் ஆப் டாங்கே' வால்யூம்களும் வந்துள்ளன. அவை இப்போது பிரிண்டில் கிடைக்கிறதா எனத் தெரியவில்லை. முதல் வால்யூம் அவரது ஆரம்ப சோசலிஸ்ட் இதழ் கால எழுத்துக்களை உள்ளடக்கியவை. அது இணையத்தில் கிடைக்கலாம்.

இங்கே சொல்ல வந்தது

'இந்திய மறுமலர்ச்சிக்கான பிரச்சனைகள்' என்கிற தொகுப்பைப் பற்றி.. நூல் வந்து 25 ஆண்டுகள் முடிந்துவிட்டது. சில சுவையான செய்திகள் இதில் உண்டு. குறிப்பாக லாலாஜி, தாகூர், நேரு மீது காந்தி செல்வாக்கு, நேதாஜி சுபாஷ் போன்ற ஆளுமைகள் குறித்து டாங்கே பார்வைகள் கொஞ்சம் கிடைக்கும்.

பெரிய ஆய்வு கட்டுரைகள் எனப் பார்த்தால் மார்க்சிய கண்ணோட்டத்தில் எழுதப்பட்ட சிலவற்றைக் குறிப்பிடலாம். அவை

Driving forces of History, Shivaji the great, Rajwade A historian par excellence, Gadgil and the economics of Indian democracy எனச் சொல்லலாம். இலக்கியம், மராத்தி மொழி, சமூக வாழ்வில் இலக்கியம் போன்ற சிறு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

இங்கு நான் ஆளுமைகள் பற்றி டாங்கே என்ன வெளிப்படுத்தியிருந்தார் என்பதை மட்டும் சிறிது சொல்லப் பார்க்கிறேன்.

லாலாஜி, இதில் இடம் பெற்றுள்ள 14வது அத்தியாயம். டாங்கேவின் நினைவிலிருந்து லாலாஜி பற்றிச் சொல்கிறார். திலக்குடன் மாணவப் பருவத்திலிருந்தே கூட அலைந்தவர் டாங்கே. அவர் மூலம் தான் லாலாஜி அறிமுகம். லாலாஜியை அழைத்து மாணவர்கள் சார்பில் டாங்கே கூட்டம் நடத்துகிறார். முன்னதாக 1920ல் ஏ அய் டி யுசி தொழிற்சங்க துவக்கத்திற்கு லாலாஜிதான் தலைமையுரை தந்தார்.

அந்த உரையில் அமைந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு நேர்த்தியை துணிச்சலை டாங்கே நினைவு கூர்கிறார். ஆனால் மாணவர் கூட்டத்திற்கு அழைத்தபோது, புதிய சங்கடம் எழுந்தது. காந்தி அறிவித்த ஒத்துழையாமையை லாலாஜி எதிர்த்தார். மாணவர்களோ காந்தியுடன் நிற்க விழைந்தனர். எப்படி லாலாஜியை தவிர்ப்பது? இளம் டாங்கே அனுப்பப்பட்டு, வெளிப்படையாக லாலாஜியிடம் நிலைமையைச் சொல்கிறார். லாலாஜியும் , சரி அப்படியானால் ஆதரவாக பேசக்கூடியவரை அழைத்துக்கொள் என சங்கடத்திலிருந்து விடுவித்தாராம். பம்பாய் கிரானிக்கிள் எடிட்டர் மர்மதுக் பிக்தால் அழைக்கப்பட்டார்.

தாகூர் புரட்சியாளரா அல்லது சீர்திருத்தவாதியா- என்கிற கட்டுரை ஒன்றை 1952ல் 'Indian Literature' ல் டாங்கே எழுதியிருந்தார். இந்த Indian Literature காலாண்டிதழ், திருவாரூரில் ஹேமா படிப்பதற்காக வந்துகொண்டிருந்த நினைவும் வருகிறது. நான் பிரித்து பார்த்ததுடன் சரி.

தாகூரின் 'The House Unshakable' என்கிற நாடகத்தின் வர்க்கப் போராட்டப் போக்கை, அரசு என்கிற எந்திரத்தின் அவலக் கொடுமைகளை டாங்கே எடுத்துக்கொண்டு, தாகூர் வார்த்தைகளில் விவரித்திருப்பார். அப்படியான அரசை தூக்கியெறிய மக்கள் போராட்டம் என தாகூர் இதில் பேசியிருப்பார். தாகூர் புரட்சிக்காரர் என்றும், சீர்திருத்தவாதியே என்றும் போகும் விவாதத்தில் டாங்கே சிக்கிக் கொள்ளாமல், கவனமாக கீழ்கண்ட மதிப்பீட்டை தந்து விடுகிறார்.

Tagore in a way reveals himself as a true revolutionary bourgeois democratic in a backward country. தாகூர் 1911 அப்படியான நாடகமெ ஒன்றை எழுதினார் என்பதையும் சேர்த்துப் பார்க்க வேண்டும் என டாங்கே இக்கட்டுரையை முடித்திருப்பார்.

1977 அக்டோபரில் காந்தி ஜெயந்தியின் போது , 'நேரு மீது காந்தியின் தாக்கம்' என்கிற உரையை டாங்கே மும்பாயில் தந்தார். டாங்கேவின் கருத்து, இருவரும் ஒருவர் மீது மற்றவர் செல்வாக்கு செலுத்தி நிதானப்படுத்தி, புரிதலை மேம்படுத்தியுள்ளனர் என்கிற மதிப்பீட்டை தரும். ஆனாலும் எடுத்துக்கொண்ட தலைப்பிலிருந்து, நன்றாகவே விலகி, நேரு எப்படி முழுமையாக காந்தி செல்வாக்கு தாக்கத்தில் இல்லை என்கிற முறையில் டாங்கே உரை அமைந்தது.

காந்தியின் கனவு கிராமங்களோ, தீண்டாமை ஒழிந்த சமூகமோ சாத்தியமாகவில்லை என டாங்கே இந்த உரையில் வந்துள்ளார். அவரது உரை இப்படி முடிந்துள்ளது. ஆனால் என் பார்வையில் சற்று மெக்கானிக்கலாக அவர் உரை முடிந்ததாக தோன்றுகிறது. காந்தி நேரு போதாது- மார்க்ஸ் லெனின் வேண்டும் என டாங்கே சொல்லியிருப்பார்.

டாங்கே முடித்த வரிகள்

“ Not conversion of souls but revolution in economic and political structures and relationships are necessary, if we want to really understand the lessons of the life of Gandhiji and Nehru and for that one has to go further to Marx and Lenin”

சுபாஷ் குறித்து டாங்கே அளித்த பேட்டி 1981 நவம்பர்- கல்கத்தாவில்..சற்றுபி பெரிய பேட்டி. இடத்தை வைத்தும் உளவியல் இருக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். டாங்கேவிற்கு 1922 லேயே கயா காங்கிரசில் சுபாஷை பார்க்க வாய்ப்பு கிடைத்ததாம். தொடர்ந்து அவரை கூட்டத்திற்கு அழைப்பது மூலம் உரையாடல்களை பம்பாய் தோழர்கள் செய்து வந்தனர். 1939ல் ஜேபி, உஷாதாய் (டாங்கே மனைவி) தலைமையில் தொழிலாளர்களின் பெரும் ஊர்வலம். மழை பெய்யத் தொடங்கியது.சுபாஷ் கவலைப் பட்டார். டாங்கே தனது குரலால் கூட்டத்தையே வசியப்படுத்தினார். உங்கள் முகங்கள் சுபாஷ்க்கு தெரியட்டும். குடையை மடக்குவீர். கூட்டம் அப்படியே கட்டுப்பட்டது. இவ்வளவு கட்டுப்பாட்டுடன் இந்தியர்களை வைக்க முடியும் எனில் ஆயுதப் புரட்சி சாத்தியமே என நேதாஜி , டாங்கேவிடம் சொன்னாராம்.

காந்தியின் அகிம்சையா- நேதாஜியின் ராணுவ முயற்சியா எது சரி என்கிற கேள்வியை டாங்கே எடுத்துக்கொண்டாலும், மிக கவனமாக இன்று இதற்கு பதில் இல்லை- வரலாறு பின் நாட்களில் முடிவெடுக்கட்டும் என நகர்ந்து விடுகிறார். சுபாஷ்க்கும் கம்யூனிஸ்ட்களுக்கும் இடையே ஆன உறவை- வேறுபாட்டை டாங்கே பேட்டியில் சொல்கிறார். மார்க்சிய தியரி பக்கம் சுபாஷ் நகராவிட்டாலும், தேச உடைமை- இடது ஒற்றுமை என அவர் நெருங்க விழைந்தார். அவர் பேசிய ராணுவப் புரட்சி, மார்க்சியர் பேசிய ஆயுத மக்கள் எழுச்சியல்ல என்ற வேறுபாட்டையும் டாங்கே சொல்கிறார்.

இப்பேட்டியில் , தன் சொந்த வாழ்க்கையில் 1929 காலம் தொட்டு, இப்பேட்டிக்காலம்வரை (AiCPக்கு வந்துவிட்டார் 1981 பேட்டியின் போது) தான் உருவாக்கி வளர்த்த வளர்ந்த கட்சியினுடன் அவருக்கு ஏற்பட்ட வேறுபாடுகளை கட்டுப்பாடு என்ற பெயரில் விழுங்கிக்கொண்டது

குறித்தும் சொல்கிறார். ஏகாதிபத்திய எதிர்ப்பு, காந்தி மீதான பார்வை- துரோகி குற்றச் சாட்டு, 1942 குவிட் இந்தியா நிலைப்பாடு போன்றவற்றை டாங்கே இங்கு சுட்டிக்காட்டியிருப்பார். ஜோஷி- மாக்ஸ்வெல் கடிதம்- சந்திப்புகள் குறித்தும், தன்னை மட்டும் விடுதலை செய்யாமல் வைத்ததும், உஷாதாய் பம்பாய் தொழிலாளர்களை திரட்டி விடுவிக்க நடத்திய போராட்டத்தையும் குறிப்பிடுகிறார்.

1950ல் டாங்கே, பசவபுன்னையா, அஜாய், ராஜேஸ்வர் ராவ் ஆகியவர், மாஸ்கோ சென்று ஸ்டாலின் மற்றும் சோவியத் கட்சியுடன் ஆலோசனை நடத்தியது- அதன் கூட்டக் குறிப்பு முழுமையாக வந்திருந்தால் பல அம்சங்கள் தெளிவாகியிருக்கும் என டாங்கே சொல்லியிருப்பார். அக்குறிப்பு பின்னர் ரெவல்யூஷனரி டெமாக்ரசி வெளியிட்டது என்பது வேறு கதை.

கட்சியின் 1942 நிலைப்பாடு ஸ்டாலினுடன் விவாதத்திற்கு வந்ததாம். நீங்கள் people's war தீர்மானம் போடாவிட்டாலும், சோவியத் படைகளின் தியாகத்தால் பாசிசம் தோற்கடிக்கப்பட்டிருக்கும். மக்களிடமிருந்து நீங்கள் ஏன் தனிமைப் பட்டீர்கள் என ஸ்டாலின் கேட்டதாக டாங்கே இப்பேட்டியில் சொல்லியுள்ளார்.

சரி ஆயுத புரட்சி என்கிறீர்களே (1948 ரணதிவே- 1950 ஆந்திரா தோழர்கள் தீசிஸ்) எவ்வளவு ரைபிள்ஸ் இருக்கிறது என்று ஸ்டாலின் கேட்டாராம். 200 வைத்திருந்தோம் என்றோம். அப்பா, நாம் சோவியத் புரட்சி 1917ல் நடத்தியபோது எவ்வளவு வைத்திருந்தோம் என அருகேயிருந்த தோழரிடம் ஸ்டாலின் கேட்க அவர்கள் சொன்னது போல் ஆயிரம் மடங்கு என்றாராம். அதாவது 2 லட்சம். இதுவே போதாது என அப்போது லெனின் தயங்கியதாகவும், ஸ்டாலின் குறிப்பிட்டாரம். எனவே அந்த childish idea வை விட்டு விடுங்கள் என்றாராம். இதற்கு பின்னர்தான் இந்தியா திரும்பிய தோழர்கள் 1951 programatic statement- 1952 தேர்தல் பங்கேற்பு என்கிற பாதைக்கு திரும்பினர் என்பதையும் வரலாறு உணர்ந்தோர் அறியலாம்.

காந்தி philosophically anarchist என்றால், சுபாஷ் political anarchist என டாங்கே மதிப்பிட்டார். சுபாசின் பேயுடன் ஆனாலும்- பாசிசத்துடன் சேர்ந்தாலும்- கூட்டு வைத்து பிரிட்டிஷ் எதிர்ப்பு என்பதை டாங்கே ஏற்க முடியவில்லை எனச் சொல்கிறார். அவரது தேசப்பற்று உயர்ந்தது என்றாலும் வழிமுறைகள் மீது விமர்சனமுண்டு என்கிறார்.

Subhash's idea of Indian revolution had shortcomings and defects like many of his contemporaries என டாங்கே மதிப்பிடுகிறார்.

நீள்வது கருதி நிறுத்துகிறேன். டாங்கேவை தொழிலாளி வர்க்க பீஷ்ம பிதாமகர் , the high priest of Indian communism எனச் சொல்வோர் உண்டு.இந்திய கம்யூனிச இயக்கத்தின் முன்னோடியான டாங்கேவின் அனுபவங்கள், இந்திய அரசியல் திசைக்கே கூட முக்கியமானவையே என புரிந்துகொள்ளலாம்.

11-3-2026

mar 12 TN Election

Horizontal solidarity of alliance parties with vertical superiority of DMK

Vs

Horizontal solidarity of alliance parties with tussle on vertical superiority between ADMK and BJP NDA, visibly comfortable superiority of ADMK

Vs

Horizontal solidarity of a section of new youth forces with vertical superiority of Vijay's popularity

Vs

Horizontal solidarity of the lovers of demagogue and Tamil romanticism with vertical superiority of oratory loving Seeman

Let us wait to see which hotizontals gain what , with super gains of which Vertical . Is it the election again to give absolute majority to a particular vertical or divided gains to the superior verticals?

Absolute power to the verticals or sharing of power with horizontals- also a question before Tamil voters to show their wisdom

12-3-2026

mar 13

அரவிந்தர் ரீடர்

அரவிந்தர் ரீடர் குறித்து முன்னர் கொஞ்சம் சொல்லியிருந்தேன். அவரின் கவித்துவம் பற்றி விதந்து பேசப்படுகிறது. அவரை seer- poet என மதிப்பிடுகிறார்கள். அவரின் புகழ் வாய்ந்த சாவித்திரி (1946ல்) படைப்பாக்கத்திலிருந்து என்னால் ரசிக்க முடிந்த சில வரிகள்.. வாழ்வின் அழகோ அழகு..பிடித்தவர்கள் படித்துப் பாருங்களேன்..வாழ்வின் துரத்தல்களை அரவிந்தர் நம் முன் கண்ணாடியாக காட்டுவார்..

...Man sole awake in an unconscious world

Aspires in Vain to change the cosmic dream…

He is a stranger in the mindless vasts

A traveller in his oft shifting home..

He has pitched a tent of life in desert space..

In the house of Nature a perturbing guest..

A hunter of unknown and beautiful powers

A nomad of the far mysterious Light

Around him hungers the unpitying Void

The eternal Darkness seeks him with her hands

Inscrutable Energies drive him and deceive

Immense implacable deities oppose

He knows not his own greatness nor his aim

He has forgotten why he has come and whence..

Freedom he asks but needs to live in bonds

He has need of darkness to perceive some light

And need of grief to feel a little bliss

He has need of death to find a greater life

All sides he sees and turns to every call

He has no certain light by which to walk

His life is a blind man’s buff, a hide and seek

He seeks himself and from himself runs

Meeting himself, he thinks it other than he.

Always he builds, but finds no constant ground

Always he journeys, but nowhere arrives

He would guide the world, himself he cannot guide

He would save his soul,his life he cannot save

The light his soul had brought his mind has lost

All he has learned is soon again in doubt (ஆஹா அற்புத ..)

Unknowing what he does or whither he tends..

He leaves the world to end where it began

His work unfinished he claims a heavenly prize

Thus he has missed the creation's absolute

Half way he stops his star of destiny..

Ever repeating its habitual walk

Ever retreating after marches long (ஆஹா..)

And hardiest victories without sure result

Drawn endlessly an inconclusive game..

There is no end to the world's stupendous March

There is no rest for the embodied soul

It must live on…

He lays his hands sometimes on the Unknown

He communes sometimes with Eternity

A strange and grandiose symbol was his birthday

An alchemy of heaven on Nature's base

சாவித்திரியின் நூற்றுக்கணக்கான வரிகளை படிக்கவே தனியான மனநிலை வேண்டும் போல... மனித ஆற்றலின் சாம்பிள் பல வடிவங்களில்..அரவிந்தர் அப்படியான ஒரு மெய்யறிவு சாம்பிள் எனத் தோன்றுகிறது..

13-3-2026

mar 14

பரண் நினைவுகள்

மனது சும்மா இருப்பதில்லை..அவ்வப்போது எதையாவது அசைபோட்டுக்கொண்டேயிருக்கும். கற்பனையாக அது யோசிக்கும்போதும், பல நிஜங்களின் சாயல்களை ஏற்றிக்கொள்ளாமல் இருக்காது. ஏற்கனவே சேர்த்துக்கொண்ட பல விஷயங்களின் ‘சரிகளை’ சமாதானம் சொல்லி உறுதி செய்துகொள்ளவோ, இல்லை இல்லை கஷ்டமப்பா என சற்று தள்ளி நிற்கவோ மனம் போராடிக்கொண்டேயிருக்கும். திடிரென ஏதோ ஒரு வெளிச்சத்தைப் பார்த்தது போல பரவசமடையும். இப்படி மங்கிக் கிடக்கிறதே என சோகத்தை அப்பிக்கொள்ளும்.

மனது புதிய தேடல்களை செய்வது போலவே, பரண் கால நினைவுகளையும் அசைபோடும். பரணை எட்டிப்பார்த்து தூசு நிறைந்த காலத்தை தும்மலுடன் எடுத்தும் அசைபோடும். வரலாற்றில் வாழ்தலோ கரைந்து போதலோ தனிநபருக்கே கூட சாத்தியமா..தெரியவில்லை..

அமைப்புகளும் தங்கள் வரலாற்றின் ஒளிவீசும் பக்கங்களையே எடுத்து வாரிசுகளுக்கு கொடுத்துக்கொண்டிருக்க முடியும். எவராவது இருட்டு பக்கங்கள் எனக் காட்டினால், அதற்கு தகுந்த பதிலைத் தந்து தங்களின் நீண்ட நெடிய நியாயத் திசையை உணர்த்த வேண்டியிருக்கும். Absolute days of history என ஒன்றை எவராலும் stich செய்துவிடமுடியாது. எத்தனையோ நாட்களும் ஆண்டுகளும் வரலாற்று காலத்தில் நைந்து கிழிந்துகூட போயிருக்கும். அவை ஒளிபடாமல் புதைந்து போகக்கூடும். எல்லா வரலாறுகளும் தொகுப்பவர் செய்திடும் புள்ளிகளின் கோலம் தான்.

இந்த நினைப்பு ஏன் என சொரணையை கிள்ளிக்கொண்டேன். 45 ஆண்டுகளுக்கு முன்னரான இரு சிறு நூல்களை பரணில் இருந்து தும்மல் சேர பார்த்ததால் தான். இன்று தூசி படிந்து இருக்கலாம். அவை வந்தபோது , எழுதியவர் உழைப்பு அவரவர் சார்பினரால் மெச்சப்பட்டிருக்கும்.

மார்க்சிஸ்ட்கள் சிந்தனைக்கு- மின்சாரம் 1980ல் வந்தது. திராவிட இயக்கம் ஒரு மார்க்சிய ஆய்வு அருணன் 1981ல் வந்த சிறு நூல். திராவிட கழக தோழர்கள் சிறு கடை வைத்திருந்தார்கள். நூல்கள் அங்கு கிடைக்கும். திருவாரூர் சிபிஎம் மாவட்டக்குழு சார்பில், தோழர் ஜி வீரையன் முயற்சியால் காவிரி புத்தக நிலையம் திறந்தனர். திறப்பு

நிகழ்விற்கு அழைப்பும் கொடுத்தனர். அங்கே நான் வாங்கிய முதல் நூல் அருணன் அவர்களின் மேற்குறித்த நூல். விற்பனைக்கு வரும் நூல்களில் ஒன்றை எனக்கு அவர்கள் எடுத்து வைத்தனர். தோழர் வீரையன் மருமகன் சேகர் கணக்கு நோட்டில் எனக்கும் பக்கம் போட்டு, மாதாமாதம் சம்பளம் வந்த பின்னர் வாங்கிக்கொள்வார். அப்படி சலுகையை வேறு கட்சித் தோழருக்கும் அன்று கொடுத்தனர்.

சென்னை வந்தும் கூட சிபிஎம் பத்திரிகைகளை இங்கே இருந்த தொழிற்சங்கத் தோழர்கள் ராஜசேகரன், சீனிவாசன் தந்தனர். ஆனால் திக வெளியீடுகளை ஜனவரி கண்காட்சியில் அல்லது அமேசான் வழி பெறுவது என்றானது.

நூல்களின் உள்ளடக்கத்தை பெயர்களே சுட்டிவிடக்கூடும். அப்போது திராவிட இயக்கம் பற்றி மார்க்சியர்கள் விமர்சனமாக கருதியதின் சாரமாக அருணன் நூலும், மார்க்சிஸ்ட் கட்சி மார்க்சியர் குறித்து திகவின் விமர்சன சாரமாக மின்சார எழுத்தும் இருக்கும்.

இன்றுள்ள அரசியல் சூழலில் 1980கள் போல பேசமுடியாது. ரீபிரிண்ட் கூட போட முடியாமல் போகலாம். ஆனால் இரு தரப்பும் எழுதி வைத்துக்கொண்ட விமர்சன ஆவணங்கள். தேவையான போது , அரசியல் அப்படியான நிர்ப்பந்தத்தை தரும்போது, இந்நூல்கள் போன்றவை ஆயுதங்களாகலாம்.

வரலாறு தன் எல்லா பக்கங்களுக்கும் எல்லா நேரத்திலும் சிம்மாசனங்களை போடுவதில்லை..அது சாத்தியமும் ஆகாது..

14-3-2026

mar 19

எம் எல் ஏக்கள்- சாதிகள் டேட்டா (1967 வரை)

திராவிட இயக்கம் குறித்து ஏராள ஆங்கில நூல்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக நீதிகட்சி, பெரியார் திராவிடர் கழகம், அண்ணா- கருணாநிதி திமுக, எம் ஜி ஆர்- ஜெயலலிதா அதிமுக என - கட்சி, கொள்கை, பங்களிப்புகள், ஆட்சி அதிகாரமென நூல்கள் வந்துள்ளன.

இந்த வரிசையில் 2025ல் வந்துள்ள புதிய நூல் 'The Dravidian Pathway- How DMK Redefined Power and Identity in South India'. இளம் ஆய்வறிஞர் Kings College சார்ந்த விக்னேஷ் ராஜாமணி நூலாசிரியர். புகழ் வாய்ந்த ஜாபரிலே செல்வாக்கில் விக்னேஷ் வளர்ந்தவர்.

தனக்கு முன்னர் திராவிட இயக்கம் பற்றி ஆய்வு செய்த ஆங்கில நூல்களையெல்லாம் எடுத்துக்கொண்டு, அவர்கள் சொல்ல வந்த அம்சத்தையும்- அவர்கள் சொல்ல முடியாமல் இடைவெளியாக வைத்துப்போன அம்சத்தையும் எடுத்துக்கொண்டு தன் ஆய்வை நகர்த்தியுள்ளதாக விக்னேஷ் சொல்கிறார்.

முன்னோடி ஆய்வாளர்கள் வரிசையில் - Hardgrave, ,Irschick, Jafferelot, Baker, Barnett, Diego, - பாண்டியன், கீதா- ராஜதுரை, கலையரசன், கார்த்திக் மனோகரன், சுப்பிரமணியன் என சிலரையாவது குறிப்பிடலாம்.

இந்நூல், 1967ல் திமுக ஆட்சி அதிகாரத்தை மக்களின் செல்வாக்கில் பெற்றதுவரையிலான காலத்திற்குரியது. நீதிகட்சி முதல் திமுகவரை நடத்திய உயர் சாதி எதிர்ப்பு போராட்டங்கள்- socio economic uplifting of marginalised communities- finally DMK's transformation into a powerful electoral force - போன்ற சாரங்களை இந்நூல் தன் ஆய்வுப் பரப்பாக்கிக்கொண்டுள்ளது.

விருதுநகரை கள ஆய்வுக்கு எடுத்துக்கொண்டுள்ளார் ஆசிரியர். திமுக, தமிழ்நாட்டில் ஊரெங்கும் ஏற்படுத்திய வாசகசாலை- மன்றங்கள், அவர்கள் கொணர்ந்த ஏடுகள் ஆகியவை உருவாக்கிய பெரும் மாற்றத்தை தனித்த இயலாக விக்னேஷ் ஆய்ந்துள்ளார்.

பிராமணர்- பிராமணர் அல்லாதார் முரணில் திராவிடர்- தமிழ் அடையாள நெருக்கத்தை அவர்கள் எப்படி உருவாக்கினர் என்பதை நூல் பேசுகிறது. சமூக கலாச்சார இயக்கம் , தேர்தல் ஆட்சி அரசியல்

என்கிற உருமாற்றத்தை எத்தகைய பின்புல செல்வாக்கில் பெற முடிந்தது என்பதை நூல் ஆய்வு செய்யப் பார்க்கிறது.

பெரியாரின் பங்களிப்பு தனி இயலாக செல்கிறது. பெரியாரின் சமத்துவ விளிப்பான 'தோழர்களே' என்பது , அண்ணாவிடம் உடன் பிறப்பே- தம்பிக்கு என்கிற பந்தப்படுத்தும் உரையாடலாக விரிந்து மக்கள் நெருக்கத்தை திமுகவிற்கு கொணர்ந்த கதையாடல் நூலில் இருக்கிறது.

விக்னேஷின் வரிகள்

I seek to explain why and how the DMK's distinctive brand of regionalism is rooted more in the politics of solidarity among marginalised castes. The socio economic advancement of these caste groups, rather than just the linguistic assertion of dominant communities, shaped the DMK's political agenda

விக்னேஷின் உரிமை கோரல் இவ்வரிகள் வழி

This book explores how Periyar and Annadurai forged the Dravidian- Tamil identity as an ethno- nationalist platform and aimed to serve the interests of a variety of communities united under Dravidian- Tamil banner.

நூலாசிரியர் திராவிட அடையாளம் எனத் தனியாகவோ- தமிழர் அடையாளம் எனத் தனியாகவோ காட்டாமல் திராவிட- தமிழ் என்கிற அடையாளத்தை நூல் முழுவதும் எடுத்துச் செல்கிறார்.

நூலில் 4 பெரும் இயல்கள், அறிமுகம் மற்றும் முடிப்புரை - 275 பக்கங்களில் நெய்யப்பட்டுள்ளது. இயல்கள் பெரியார்- திமுக, படிப்பகங்கள், திராவிட தமிழ் பேனரில் திமுக, விருதுநகர் ஆய்வு எனக் கட்டப்பட்டுள்ளன.

The DMK's Manoeuvre in Madras State- thro Dravidian Tamil Repertoire முக்கிய இயல். பெரியார் திகவிடமிருந்து மாறுபட்டு பிரிந்த அண்ணாவின் திமுக- விடுதலை, பின்னர் உருவான அரசியல் சூழல்களை எப்படி உள்வாங்கி தன்னை மக்கள் பிணைப்பில் வலுவாக்கிக்கொண்டது என்பதை இந்த இயல் பேசுகிறது.

Some key political issues that DMK managed for his growth என இந்நூலாசிரியர் சொல்வன

Constitution First amendment 1951 about reservation

Modified Scheme of Elementary Education (குலக்கல்வி என விமர்சிக்கப்பட்ட ஒன்று) 1953

State Reorganisation 1956

Anti Session Act 1963

Anti Hindi agitation 1965

மேற்கூறிய ஒவ்வொரு நிகழ்வு வழியாகவும் திராவிட- தமிழ் அடையாளத்தை பரவலாக எடுத்துச் சென்ற திமுகவின் செயல்பாடுகளை இந்த இயல் விரிவாகப் பேசுகிறது.

இந்நூலில் இடம் பெற்றுள்ள சில டேட்டாக்கள் புரிதலுக்கு முக்கியமானவை . கல்வி பெற்றவர் எனில் 1951- 21.9 சதம், 1961- 31.4 சதம், 1971- 39.5 சதம். 2011சென்சஸ் படி தமிழ்நாட்டின் கல்வி அறிவு 80 சதம். 1951ல் பெண்கள் கல்வி 11.5 சதம் என்றால், 2011ல் 73 சதம்.

படிப்பகங்கள் 1957ல் 9239 எனில், 1967ல் 19988 என உயர்ந்தன.

வயது வந்தோர் வாக்குரிமைப் படியான முதல் தேர்தல் 1952ல் மதராஸ் அசெம்பிளியில் சட்டமன்ற உறுப்பினர் சாதி தட்டு சதம்-

உயர்சாதி 17.3 சதம்- இதில் பிராம்மணர் 5.23 சதம்,

பிற்பட்டவர் 39.8 சதம்- இதில் கொங்கு வெள்ளாளர் 8.4, முக்குலத்தோர் 8.4, வன்னியர் 14.7 , இதர பிசி க்கள் 8.4

செட்யூல்ட் இனத்தவர் 20.4 சதம்

முஸ்லீம் 1 சதம், கிறிஸ்துவர் 0.5 சதம் மற்ற பிரிவுகள் என 20 சதம்

பெரிய கட்சி என்கிற வகையில் காங்கிரசில் 50.8 சத MLAக்கள். சிபிஅய்க்கு 7.3 சதம், நீதிக்கட்சி 0.5

1957 தேர்தலிலும் சட்டமன்றத்தில் உயர் சாதியினர் அதே அளவு 17.6 சதமாகவும், பிசிக்கள் 42 சதம், எஸ்சிக்கள் 18 என்றிருந்தனர். பிசிக்களில் அதேபோலவே வன்னியர், முக்குலத்தோர், கொங்கு கவுண்டர் பெருவாரியான இடங்களில் இருந்தனர். சிபிஅய்க்கு 2 சத எம் எல் ஏக்கள், காங்கிரஸ் 73 சதம் பெற்றனர்

1962 தேர்தலில் மொத்தMLAக்களில் சிபிஎய் 1 சதம், திமுக 24 சதம், காங்கிரஸ் 67.5 சதம் பெற்றனர். உயர்சாதியில் 18.9 சதம், பிசிக்களில் 42.2, எஸ்சிக்களில் 18 சதம், முஸ்லீம் 1.9 சதம் என எம் எல் ஏக்கள். பிசிக்களில் கொங்கு கவுண்டர்கள், முக்குலத்தோர் மிக அதிக இடங்களையும் வன்னியர் சற்று குறைந்த இடங்களையும் பெற்றனர்.

1967 தேர்தலில் மொத்த எம் எல் ஏக்களில் சிபிஅய் - 0.9 சதம், சிபிஎம் 4.7 சதம், திமுக 58.5 சதம், காங்கிரஸ் 21.8 சதம் பெற்றனர். உயர்சாதி 10.3

சதம் என இறக்கம். பிசிக்கள் 47.4 என சற்று உயர்ந்தனர். எஸ்சி 18.3, எஸ்டி 0.9, முஸ்லீம் 1.7 என இருந்தனர்.

பிசிக்களில் முக்குலத்தோர், வன்னியர் சமமாகி, கொங்கு கவுண்டர் சற்று குறைந்தனர்.

தொடர்ந்த தேர்தல்களின் டேட்டாக்கள் பிசிக்களின் அதிகார பெரும் வளர்ச்சியை, பெரும்பான்மை மக்கள் என்கிற வகையில் பிரதிபலிக்கும். அதிலும் மூன்று பெரும் பிரிவுகளின் dominance தெரியவும் செய்யும். பிசிக்களிடம் , எஸ்சிக்களை இஸ்லாமியர்களை துணை சக்தியாக வைத்துக்கொண்டு , எவர் செல்வாக்கு பெறுவது என்பதாக தமிழ்நாட்டின் அரசியல் திசைவழியாக கடந்த 50 ஆண்டுகளாகச் செல்கிறது.

இந்தியாவில் சாதிவாரி கணக்கெடுப்பு என்பதில் கட்சிகள் ஒத்த கருத்திற்கு வந்துள்ளன. தமிழகத்தில் என்பது முழு கருத்தொற்றுமை வரவில்லை. சாதி கணக்கு தெரிந்துவிட்டால் ஒவ்வொரு அமைப்பிலும் அதன் தாக்கம் பிரதிபலிக்கும். சாதி கணக்குடன் சொத்து கணக்கும் சேர்ந்து ஓரளவிற்கு நியாயமாக தெரிந்து விட்டால், எப்பகுதி ஓரமாகி வளராமல் நிற்கிறது- போஷாக்கு தேவைப்படுகிறது எனத் தெரிந்துவிடும். எங்கே அதிகார குவியல், சொத்துக் குவியல் எனத் தெரிந்து விடும். சமுக நீதிக்கான மாற்று திட்டங்கள் கூட அதற்கேற்ப வரையவேண்டி வரலாம்.

இந்நூலை, திமுக 1967ல் ஆட்சி பிடித்த காட்சிகளைத் தருகிற நூல் எனலாம்..

19-3-2026

mar 21

எனது நூல்கள்

மார்க்ஸ்- மார்க்சியர்

1. ஹெகல் துவங்கி..

இந்நூலில் ஹெகல், மார்க்ஸ், எங்கெல்ஸ், பகுனின் குறித்த கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. தமிழில் மார்க்ஸ்- எங்கெல்ஸ் குறித்து ஏராளம் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் ஹெகல், பகுனின் குறித்து அறிமுக எழுத்துக்கள் அதிகமில்லை. ஹெகல் குறித்தும், பகுனின் குறித்தும் இந்நூலில் பெருங் கட்டுரைகள் அறிமுகம் என்கிற வகையில் எழுதப்பட்டுள்ளன. பயனளிக்கும்.

இந்நூலை பிரிண்டில் உ வே சா காரைக்குடி 2019ல் கொணர்ந்தனர். தொடர்பு எண் 9578078500

2. ரோசா லுக்சம்பர்க்

மார்க்சிய நெஞ்சுரம் கொண்ட ரோசாவின் தியாக வாழ்க்கையை- எழுத்துக்களை- கொடூர மரணத்தை விளக்கும் நூல். 2005ல் NCBH கொணர்ந்தனர். 1999ல் நான் எழுதிப் பார்த்தவை நூல் வடிவம் பெற்றது. தமிழில், ரோசா குறித்து அந்நேரத்தில் வந்த மூன்றாவது நூல்.

3. மார்க்சியத் தடங்கள்

நியு ஏஜ், சமூக விஞ்ஞானம், தாமரை, ஜனசக்தி, பிராண்டியர், மேடை, தமிழ் நேயம் போன்ற இதழ்களில்/ பத்திரிகைகளில் வந்த என் கட்டுரைகளின் தொகுப்பு நூல். NCBH 2006 ல் கொணர்ந்தனர். கோசாம்பி, ஞானி, நெய்ப்பால், லூகாக்ஸ் உள்ளிட்ட பலர் குறித்த அறிமுகம்- விவாதங்களை இந்நூல் முன் வைத்தது.

4. லெனின் நான்கு கட்டுரைகள்

இந்திய விடுதலைக்கு முன்னர் லெனின் குறித்த தாக்கம், சோவியத் புரட்சிக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த லெனின் சந்தித்த பிரச்சனைகள், லெனின் உறவினர்க்கு எழுதிய கடிதங்களின் சாரம் போன்றவற்றை சொல்கிற கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல். காரைக்குடி உ வே சா பிரிண்டில் கொணர்ந்தனர். இணையத்தில் கிடைக்கும்.

5. மாக்சிம் கார்க்கியின் அரசியல் வெளி

கார்க்கி என்றால் அவரது தாய் உள்ளிட்ட இலக்கிய படைப்புகளே பொதுவாக விதந்து பேசப்படும். இந்நூல் அவரது அரசியல்

வாழ்க்கையை, லெனின்- ஸ்டாலின் மற்றவருடனான உரையாடல்களை, ஏன் காந்தி பற்றி அவர் பேசியதைக் கூட சொல்கிற நூல். சென்னை நாற்கரம் நல்லு பிரிண்டில் கொணர்ந்தார். தொடர்பு எண் 9551065500

6. இந்திய கம்யூனிச இயக்க முன்னோடிகள்

2016-17 காலத்தில் இணையத்தில் 9 முன்னோடித் தலைவர்கள் பற்றிய அறிமுக கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல். ராய், டாங்கே, ஜோஷி, கோஷ், ரணதிவே, இ எம் எஸ், ராஜேஸ்வர் ராவ், ஹிரன், சர்க்கார் எனத் தோழர்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளனர். நாற்கரம் பிரிண்டில் கொணர்ந்தனர்.

7. மார்க்ஸ்- மார்க்சியர் சில குறிப்புகள்

அவ்வப்போது முகநூலில் அறிமுகப்படுத்திய 40க்கும் மேற்பட்ட இடுகைகளின் தொகுப்பு நூல். மார்க்சியம் குறித்து ஆர்வமுள்ளவர்க்கு பயன்படும். ஏராள நூல்கள் இந்த இடுகைகளில் சிறிய அறிமுகத்தையாவது பெற்றிருக்கும். பிரிண்டில் வரவில்லை.

8. டிராட்ஸ்கி

தோழர் டிராட்ஸ்கி குறித்து முகநூலில் எழுதிய சில இடுகைகள். இணையத்தில் கிடைக்கும் மின் பிரசுரம்

9. My posts on Left இந்திய இடதுசாரிகளின் வரலாறு , அரசியல் திசைவழி- திட்டம்- ஆளுமை- பிளவுகள் என பல்வேறு அம்சங்கள் குறித்து பேசும் தொகுப்பு. அவ்வப்போது முகநூலில் எழுதிய 90 இடுகைகள் இதில் இடம் பெற்றுள்ளன. அரசியல் ஆர்வமுள்ளோர்க்கு பயனளிக்கவே செய்யும். பிரிண்டில் வரவில்லை. இணையத்தில் கிடைக்கும்

10. ஜெயபிரகாஷ் நாரயண்

தோழர் ஜேபி யின் வாழ்க்கை மற்றும் எழுத்துலகை இந்நூல் அறிமுகப்படுத்துகிறது. ஜேபி குறித்து தமிழில் நூல்கள் குறைவு என்ற வகையில், இந்நூல் அவர் குறித்த அறிமுகத்திற்கு உதவக் கூடும். கிழக்கு பதிப்பகம் 2025ல் கொணர்ந்த நூல். பிரிண்டில் மட்டுமே கிடைக்கும் நூல்

மேற்கூறியவற்றில் பல நூல்கள் archive, freetamilebooks இணையங்களில் கிடைக்கும். மேற்கூறிய நூல்களை என் வாசிப்பின் வழி உழைப்பை தந்தும்,எழுத்தின் வழி கொஞ்சம் உழைப்பை தந்தும் செய்திட என்

retired life அருளியது. காலத்திற்கு நன்றி. என் உழைப்பிற்கு உந்து கோலாக மேற்கூறிய நூல்களில் சொல்லப்படும் நூற்றுக்கணக்கான நூல்களை எழுதிய அவ்வுழைப்பாசிரியத் தோழர்களுக்கும் என் நன்றி. எவருக்காவது பயன்பட்டால், என் உழைப்பு சற்று அமைதியுடன் புன்முறுவலை நன்றியாகத் தரும்..

21-3-2026

mar 22

அன்றே சொன்னார் அண்ணா..

எல்லோரும் இந்நாட்டு மன்னர்- அறிஞர் அண்ணா

" முடிஆட்சி, ஒரு அருள் பெற்ற குடும்பத்துக்கு மட்டுமே, ஆட்சி நடாத்தும் தகுதி வழிவழி கிடைத்திடும் என்ற நிலையை , நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

குடி அரசு முறையோ , கொல்லன் மகனாயினும், உழவனாயினும், சிறுகடை நடத்துவோனாயினும், செருப்பு தைப்போனாயினும்- ஆட்சி நடத்திடும் ஆற்றலைப் பெற்றிட இயலும், என்ற நம்பிக்கையும், அந்த உரிமை அவனுக்கு உண்டு என்ர நிலையையும், ஏற்படுத்தித் தருகிறது"

" மக்கள் ஓட் அளிக்கிறார்கள்; சீமான்கள் நோட் அளிக்கிறார்கள். ஓட் அளித்த மக்களுக்காக முற்போக்கான சட்டங்களை இயற்றுவோம். நோட் அளித்த சீமான்களுக்காக அந்த சட்டத்திலே, நிறைய சந்து பொந்துகளை ஏற்படுத்திக் கொடுப்போம். திடலில் தீவிரம் பேசுவோம்- அது மக்களுக்குத் தரும் தித்திப்பு! மாளிகைகளிலே சீமான்களிடம் வேண்டுகோள் விடுப்போம்- அது இலட்சங்கள் பெற!. இந்த முறையில் தானே தம்பி, காரியம் நடக்கிறது"

" ஆளவந்தார்கள் குழுக்களை அமைக்கிறார்கள்; குழுக்கள உலா வருகின்றன. உரையாடல்கள் உற்சாகத்துடன் தயாரித்து அளிக்கின்றனர். அந்த அறிக்கைகளோ குவிகின்றன.செயல்படவேண்டிய துரைத்தனமோ, துயில் கொண்டு விடுகிறது"

இந்த நூலின் (1961 ஆம் ஆண்டு பதிப்பு) பக் 29/84ல் அண்ணா கீழ்கண்ட முன்மொழிவை முதலமைச்சராக இருந்த காமராஜர்- காங்கிரஸ் நோக்கி வைத்திருப்பார்

" குடி அரசு முறை, இந்த நாட்டைப் பொறுத்த வரையில் உண்மையான மக்களாட்சி அமைய வழிகோல வேண்டுமானால், பொதுத் தேர்தலுக்கு ஆறு திங்களுக்கு முன்னாலாவது காங்கிரஸ் மந்திரிகள் பதவியை விட்டு விலகிச் சொந்த அறிவாற்றலைக் காட்டிக், கட்சி சாதித்தவைகளை எடுத்துக் கூறி ஓட்டு கேட்க வேண்டும்..ஆறு திங்களுக்கு முன்பு பதவி விலகி, வெறும் காமராஜராக, கர்மவீரர்

பச்சைத் தமிழர் காமராஜராக கிராமம் கிராமமாகச் சென்று...ஓட்டு வாங்கிவிடட்டும் பார்க்கலாம்!” 22-3-2026

mar 22

பெதிக்குக்கு காந்தி அனுப்பிய பாடல்

டெல்லி ‘பங்கி’ ஓரக்குடியிருப்புகளில் காந்தி இருந்தார். கேபினட் மிஷன் எனும் தூதுக்குழு பெதிக்லாரன்ஸ் தலைமையில் மார்ச் 1946 ல் வந்து தன் திட்டங்களை வைத்து விவாதித்துக்கொண்டிருந்தது. காந்திக்கு தனது விடுதலை இந்தியா குறித்த பெருங்கனவு இருந்தது.

மாலை வழிபாட்டு நேரத்தில் அங்கு பாடப்பட்ட பாடல் ஒன்று இப்படியான கனவை சுமந்து கொண்டிருந்தது. அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து பெதிக் லாரன்ஸ்க்கு அனுப்ப விழைந்தார் காந்தி. அவரே மொழி பெயர்த்தார். அப்படி அவர் எழுதி பெதிக் லாரன்ஸ்க்கு அனுப்பிய அந்தப் பாடலின் வரிகள்

We are inhabitants of a country

Where there is no sorrow and no suffering,

Where there is no illusion nor anguish,

No delusion nor desire,

Where flows the Ganges of love

And the whole creation is full of joy,

Where all minds flow in one direction,

And where there is no occasion for sense of time,

All have their wants satisfied,

Here all barter is just,

Here all are cast in the same mould,

Here is no lack nor care

No selfishness in any shape or form,

No high no low, no master no slave,

All is light, yet no burning heat,

That country is within you

It is Swaraj , Swadeshi,

The home within you

Victory victory victory

He realises it who longs for it.

இப்படி பெருங்கனவான ideal பாடல் ஏன் அதிகம் வெளிச்சொல்லப்படாமல் போனது எனத் தெரியவில்லை. இவ்வரிகள் தாகூரை நினைவு கூறலாம். பாரதியைக்கூட காணவைக்கலாம். காந்தி மானுடம் கண்ட practical idealist. ஒவ்வொரு வரியிலும் light yet no burning heat..என்ன அற்புத மனம் சிந்தனை கனவு.

கவிதையின் தமிழாக்கம் (Tamil Translation of the Poem)

நாம் ஓர் நாட்டின் குடிமக்கள்.

அங்கே துயரமும் இல்லை, துன்பமும் இல்லை,

அங்கே மாயையும் இல்லை, மனவேதனையும் இல்லை,

மோகமும் இல்லை, ஆசையும் இல்லை,

அங்கே அன்பெனும் கங்கை ஓடுகிறது,

மற்றும் முழுப் படைப்பும் மகிழ்ச்சியால் நிரம்பியுள்ளது.

அங்கே எல்லா மனங்களும் ஒரே திசையில் செல்கின்றன,

மற்றும் காலத்தின் உணர்ச்சிக்கு அங்கு இடமே இல்லை.

அனைவரின் தேவைகளும் நிறைவு செய்யப்படுகின்றன.

இங்கு நடக்கும் அனைத்துப் பண்டமாற்றுகளும் நேர்மையானவை.

இங்கே அனைவரும் ஒரே வார்ப்பில் வார்க்கப்பட்டவர்கள்.

இங்கே பற்றாக்குறையும் இல்லை, கவலையும் இல்லை,

எந்த வடிவத்திலும் சுயநலம் இல்லை.

உயர்ந்தவர் இல்லை, தாழ்ந்தவர் இல்லை, எஜமானர் இல்லை, அடிமை இல்லை.

எல்லாம் ஒளியே, இருந்தும் சுடும் வெப்பம் இல்லை.

அந்த நாடு உங்களுக்குள்ளேயே இருக்கிறது, அதுவே சுயராஜ்யம் (சுய ஆட்சி), சுதேசி (சுய நாடு), உங்களுக்குள்ளே இருக்கும் வீடு.

வெற்றி! வெற்றி! வெற்றி! எவன் அதை நாடுகிறானோ, அவனே அதை உணர்கிறான்.

- வேறு யார் காந்தியின் பல்வேறு காணவேண்டிய நுண்ணிய அம்சங்களை தருவார் , பியாரிலால்தான். மகாத்மா வால்யூம் 9 பகுதி 1 அத் 7

mar 23

காந்தியுடன்....

தினம் ஒரு மணி நேரம் காந்தியுடன் என்பது அவ்வப்போது அறுபட்டுப்போகிறது. டெண்டுல்கர் வால்யூம்கள், பியாரி- சுசிலா வால்யூம்கள் என இரண்டும் சேர்ந்து 19 தொகைகள் எவ்வித மாறுபாடும் காணாமல், தினமும் முன்னர் சென்றன.

காந்தியரில் பலர் ஏராளம் வாசித்து - அவரை அவரவர் அனுபவம், உள் வாங்கும் திறன், இன்னும் செயல்பாட்டு விழைவுகள் அடிப்படையில் காந்தி குறித்த எழுத்துக்களில் சென்றிருப்பர். காந்தி குறித்து நானும் கொஞ்சம் தெரிந்து கொண்டு வருகிறவர் பட்டியலில் இருப்பேன். அவரின் புகழ்பாடும், விமர்சனப் பாங்கில் அலசிப்பார்க்கும், கடும் விமர்சனங்களை மட்டுமே வைக்கும், தீம்களின்படி அவரை அணுகும் நூல்களுடன் ஓரளவிற்கு எனக்கும் பரிட்சயம் உண்டு எனலாம்.

அவரை வாசிக்காமலேயே கொண்டாடுபவர்களும் இருக்கலாம். எதையும் அறிந்துகொள்ளாமலேயே, பொதுவெளியில் கிடைக்கும் விமர்சனங்களில் சிலவற்றை அள்ளி வைத்துக்கொண்டு எடுத்தெறிபவர்களும் இருக்கலாம். காந்தி இலக்கியம்- கிடங்கு , மார்க்சிற்கு இருப்பது போலவே, லட்சக்கணக்கான பக்கங்களானது. அவரின் நூல்தொகை 100 மட்டுமே 50 ஆயிரம் பக்கங்களுக்கும் மேலானது. எனவே அவர் குறித்த பேச்சுக்கள், உரையாடல்கள் இருந்துகொண்டேதான் இருக்கும். அவர் பெருந் திறப்பாளர். அவரிடம் closures இருப்பதில்லை.

இன்னும் அவர் குறித்த தேடல்களுக்கான பரந்த வெளியும் இருக்கவே செய்யும். இதில் அவர் மீதான விமர்சன கண்ணோட்டத்தில் வரும் நூல்களும் இருக்கும். அவர் காலத்திலேயே ஜின்னா, அம்பேத்கர், கம்யூனிஸ்ட்கள், பிரிட்டிஷார், பெரியார் என அவர் மீதான கடும் விமர்சனங்களை எழுத்திலே கொணர்ந்தவர் ஏராளம். Gandhi and his adversaries என்பதற்கே நூல்கள் உண்டு.

அவருடன் உடன் சென்று, மாறுபாடு கொண்டவர்களும் உண்டு. நேரு, படேல், போஸ், கிருபளானி, ஆசாத், ஜேபி , லோகியா என இப்பட்டியல் நீளவே செய்யும். இன்னும் காந்தியின் சோதனை சிலவற்றில் தங்களை தள்ளி வைத்துக்கொண்ட வினோபா போன்றவரும் உண்டு. ஆனாலும் காந்தி காந்திதான் என்கிற காந்தப்புலனில் அவர்கள் கட்டுண்டு கிடக்கவும் செய்தனர்.

அருந்ததிராயின் டாக்டர் அண்ட் செயிண்ட் நூல் சில ஆண்டுகளுக்கு முன்னர் காந்தி குறித்த விமர்சன நூலாக பெரிதும் பேசப்பட்டது. ராஜ்மோகன் காந்தி அந்நூலுக்கு கொஞ்சம் பதில் சொல்லியிருப்பார். பின்னர் வந்த the stretcher bearer - தென் ஆப்ரிக்கா காந்தியின் உள்ளூர் ஜூலு கருப்பின மக்கள் இயக்கத்தின் பார்வை மீதான பெரும் விமர்சனங்களுடன் வந்த நூல். காந்தி racist பார்வை கொண்டவரா என்கிற விவாதத்தை மேற்கூறிய இரு நூல்களும் உருவாக்கின. ஆப்ரிக்காவில் காந்தியை சரியாக உணர்ந்து கொள்வோம்- அவரின் லிமிட்டேஷனுடன் - என்கிற பதிலை ராஜ்மோகன் தன் நூலிலும், நௌரியா தன் நூலிலும் தந்திருப்பார். Stretcher bearer நூலாசிரியர்களின் ஆய்வு உழைப்பை நான் குறைத்துச் சொல்லவில்லை. கடுமையாக ஆதாரங்களை, அவர்கள் தாங்கள் எடுத்துக்கொண்ட ஆய்விற்காக திரட்டி பாடுபட்டுள்ளனர்.

Brahmacharya Gandhi and His women Associates - Girja Kumar நூலும் மிகக் கவனமாக படிக்கப்பட வேண்டிய நூல். காந்தியின் வாழ்விலே உடன் நின்ற ஏராள பெண் Co- travellers , அவர்களின் உளவியல் சிக்கல்கள், கடிதப் போக்குவரத்துகள்- அதில் காணப்படும் வாசகங்களின் பொருள் விவரிப்புகள் என இந்நூல் போகும்.

காந்தி பெரும் 'பொது சொத்தாக' தொடர்ந்து வளர்ந்து உயர்ந்து கொண்டே போகப்போக, அவர் எனக்கு மட்டும்தான்- எனக்கே எனக்குத்தான்- அவரின் பூரண அன்பிற்கான பாத்திரம் தானே என பலரும் பட்ட அவஸ்தையை- காந்தியின் அவஸ்தையையும் சேர்த்தே இந்நூல் பேசும். உறவுகளின் உளவியல் போராட்டமாக- possess செய்துகொண்டு அவதிப்பட்டு, ஆராதித்து அன்பு பாராட்டி- மனம் குமைந்து வாடிய பெண்களின் மனச்சிக்கல் செடுக்குகள் - mental carbuncles குறித்த நூல். அவரின் பிரம்மச்சரிய சோதனைகள் குறித்து உடன் நின்ற பலர், வினோபா உட்பட, ஏற்காத நிலை. காந்தியின் சுய சோதனை போராட்டம் என கிர்ஜாகுமார் நூலை பின்னியிருப்பார். கிர்ஜாவும் ஆதாரங்களை கொடுக்காமல், பெரும் உழைப்பை நல்காமல், போகிற போக்கில் அவதூறு என்கிற பொறுப்பற்ற தனத்தை செய்யவில்லை. அவர் தான் எடுத்துக்கொண்ட 'தீம்' குறித்த ஆய்வு நேர்மைக்கு முன்னுரிமை கொடுத்துள்ளார் எனப் புரிந்துகொள்ளலாம்.

'காந்தியானா' எனச் சொல்லப்படும் - காந்தி குறித்த எழுத்துக் கிடங்கில் நுழையாமல், மேற்கூறிய நூல்களை மட்டும் படிப்போருக்கு காந்தி மீது கடும் கோபம் எழலாம். அவர்கள் தாட்சண்யமின்றி

காந்தியை விமர்சிக்கவே தலைப்படுவர். எந்த தலைவரையும் absolute எனப் பார்க்கும் போது கருத்துச் சிக்கல் எழலாம். வாக்கு அரசியல் பீடம் கட்டுவதற்கு காந்தி உகந்தவராக இல்லை. ஒவ்வொரு தனிமனிதரின் moral சோதனைகளுக்கு அவர் அழகான நேர்த்தியான உளங்காட்டும் கண்ணாடி. Turn searchlight inwards என்றால் காந்திதான் ஒளிவிளக்கு. Be an exemplary என்றால் காந்தி தான் அழியா சுவடு... காலம் இன்னும் அவரை வைத்துக்கொள்வது உகந்தது என்றே எனக்குத் தோன்றும்..

23-3-2026

mar 24

post caste capitalism

தமிழ்நாட்டின் அரசியல் பொருளாதாரம் பின் சாதி முதலாளித்துவம் - post caste capitalism என்கிற கட்டத்தில் இருக்கிறதா என்கிற பார்வை சார்ந்த விவாதமும் அவசியமாகிறது.

சமூகநீதி கோட்பாட்டு பின்புலத்தில் நலத்திட்டங்கள் என்கிற தொடர் அசைவும், அத்துடன் சாதி கட்டுமானத்தை காத்து -அதன் பின்புலத்தில் முதலீடுகள் நிலவும் தொழிற்துறை முதலாளித்துவ ஆதரவு என்கிற சேர்ந்திசையும் தமிழக பொருளாதார கட்டுமானத்தின் கலவையாக இருக்கின்றன.

கொங்கு மண்டலம் எனில் டெக்ஸ்டைல்ஸ், கோழிப்பண்ணை, நிதி மூலதனம்,

தென் பகுதி எனில் நிலம் சார்ந்த சொத்துக்கள்- நிதி சுழற்சி

வட பகுதி விவசாயம் மற்றும் சிறு தொழில்கள்

என்கிற சாதி சார் தொழில் முனைவோர் முன்னேற்றங்கள் தென்படுகின்றன. முன்னர் விடுதலைக்கால மேற்சாதியினர் தற்போது அய்டி, கல்விசார் , கார்ப்பரேட் புரொபஷனல் என நகரத்துவங்கியுள்ளனர். இடைநிலை சாதி மற்றும் தலித் பகுதியில் சிலராலும் இந்த துறைகளை நோக்கிய நகர்வுகளை செய்ய முடிந்துள்ளது.

தலித் குடும்பங்களில் பெரும்பான்மையினரும், மிகவும் பிற்பட்ட சாதியினரும் விவசாய கூலிகள், தொழிலாளர், அன்றாட தின சம்பள நிச்சயமற்ற தொழிலாளர், நகர்ப்புற கிக் தொழில்கள் என அல்லாடி வருகின்றனர்.

தமிழகத்தில் கோடிக்கணக்கான குடும்பங்கள் ஏதாவொரு நலத்திட்ட பயனாளிகளாக இருப்பர் என்பதை மறுக்கவியலாது. ஆனால் asset ownership என்ற நிலையோ, இப்பகுதியினரின் structural upward mobility என்பதோ மிக மிக slow pace and high intervals களில் நடப்பதாகவே உணரமுடிகிறது. நுகர்வுத்தன்மையில் சில மேம்பாடுகள் வந்திருக்கக்கூடும்- ஆனால் வர்க்கத்தன்மை, சாதிய மதிப்புகளில் பெரும் மாற்றங்கள் வந்துவிட்டதாக சொல்ல முடியவில்லை- consumption improved but not class position changed என்றே புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

மார்க்சியர் பார்வையில் சொன்னால்

தமிழ்நாட்டில் கடந்த பல ஆண்டுகளாக போடப்படும் பட்ஜெட்டின் தன்மை -வறுமை ஒழிப்பு அல்லது குறைப்பு என்கிற திசையில் பயணித்திருக்கிறது என்பதை ஏற்கும் அதே வேளையில், no transformation in capitalist structure and it's beneficiaries என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கும்.

எனவே தான் தமிழ்நாட்டில் (இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும்) சாதிவாரி கணக்கெடுப்பு என்பதுடன் சொத்துவாரி assets கணக்கெடுப்பும் தேவை என்று தோன்றுகிறது. தமிழகத்தின் அசமத்துவ விளைச்சலை தடுத்து சமத்துவ நிலப்பகுதியாக்கிட- உரியவர்க்கு உரிய திட்டங்கள் சென்றிட அந்த கணக்கெடுப்பு உதவலாம்.

தமிழ்நாட்டின் அரசியல் பொருளாதார முரண்களாக கீழ்கண்டவற்றை உணரலாம்..

More and more welfare schemes vs Fiscal prudence and stress

State drawn high revenue potential vs revenue deficit

High growth indicators vs low jobs

Strong political culture vs struggle for provincial autonomy

தமிழ்நாட்டில் இன்றைய அரசியல் சூழலில் புரட்சிகர நக்சலிச மாதிரி இயக்கங்களோ, தீவிர வர்க்கப் போராட்டங்களோ எழவில்லை. பெரும்பாலும் திமுக அல்லது அண்ணா திமுக ஒற்றை கட்சியின் வலுவான ஆட்சி அதிகாரம் என்கிற political climate தான் நிலவுகிறது. இருந்தால் Touch and go struggles தான் பொதுவாக ..

தமிழ் நாட்டின் பாரம்பரிய விவசாய வளர்ச்சியிலும் கூட slow growth என்பதே சொல்லப்படுகிறது. குடும்பங்களில் புதிய தலைமுறையினரின் விவசாய நாட்டம் கேள்விக்குரியதாக இருக்கிறது. தொழிற்துறையிலும் இந்தியா முழுமைக்குமான அதே trend ஆக , இங்கும் informal labour expansion என்பதே காணப்படுகிறது.

தமிழகம் வலுவான தொழிற்துறை வளர்ச்சி, தேர்ந்த சமூக குறியீடுகள் பெற்றிருந்தாலும், அரசின் பொருளாதாரம் டாஸ்மாக்கை அதிகம் சார்ந்தும் உள்ளது. பிற வருவாய் எனில் ஸ்டாம்ப் ட்யூட்டி, மோட்டார் வரிகள், ஜி எஸ் டி எனலாம். செலவு மிக அதிகமாக இருப்பதால் வருவாய் பற்றாக்குறை எப்போதும் இருக்கும் மாநிலமாகவும்

இருக்கிறது. மத்திய ஒதுக்கீடு என்பது குறித்த தொடர் போராட்டங்களும் இங்கே நடக்க வேண்டியுள்ளது.

பல்வேறு மாவட்டங்களின் ஏற்ற இறக்க வளர்ச்சி- மக்கள் வாழ்க்கை அசமத்துவமும் நிலவுகின்றன.

தமிழ்நாட்டில் பட்ஜெட்டில் காட்டப்படும் வருவாய் எனப்பார்த்தால் 3 லட்சம் கோடிக்கு சற்று கூட இருக்கும். செலவோ 4 லட்சம் கோடிக்கு மேல் என அமையும்.

எந்த அரசாங்கம் 2026 தேர்தலில் அமைந்தாலும், எப்படி வரவை மேம்படுத்தி, செலவை ஈடுகட்டலாம் என்றே சிந்திக்க வேண்டியிருக்கும். கட்சிகள் தேர்தலில் வாக்குகளைக் கவர செலவு items களையே பொதுவாக பட்டியலிடுவர். வரவு எப்படி என்பதை அவர்கள் யோசித்திருந்தாலும் சொல்வதில்லை.

தமிழ்நாட்டின் GSDP உற்பத்தி 30 லட்சம் கோடி என்கிறார்கள். இதைத்தான் டிரில்லியன் எகானமியாக மாற்றி உற்பத்தியை உயர்த்தப் போகிறோம் என்கின்றனர் ஆட்சியாளர். இதன் பொருள் GSDP மூன்று மடங்காக உயரவேண்டும். ஆண்டிற்கு 12 சத உயர்வு வேண்டும். இன்று 11.4 சதம் இருப்பதாக முதல்வர் சொல்லியுள்ளார்.

டிரில்லியன் டாலர் எகானமி ஆனாலும், அசமத்துவம் நீங்குமா- informal labour குறைந்து நிரந்தர வேலை வாய்ப்பு உருவாகுமா, நலத்திட்டங்கள் சார்பு ஏழை மக்கள் எண்ணிக்கை மட்டுப்படுமா என்பதற்கு பதில் இருப்பதாக தெரியவில்லை. கேட்டால் trickle down என்பது பதிலாகலாம்.

சாதி, மத மோதலற்ற பதட்டமில்லா சூழல் வளர்ச்சிக்கு மிக மிக அவசியம். தமிழக அரசியல் இதில் நல்ல கவனம் கொண்டுள்ளது பாராட்டத் தகுந்தது. ஆனால் வளர்ச்சி குறித்த, தமிழகத்தின் அரசியல் பொருளாதாரம் (பின்சாதி முதலாளித்துவம்) குறித்த உரையாடல்கள் போதுமான அளவு இல்லையோ எனத் தோன்றுகிறது..

அரசியலில் வாக்கு எனும் சம மதிப்பு வந்த இந்திய - தமிழக சமூகம் இன்றும் சமூக- பொருளாதார அசமத்துவ மதிப்புகளையே பெரும் சுமையாக வைத்துக்கொண்டு நகர்கிறது. காந்தி சொல்லிக்கொடுத்த moral revolution என்பது அறவே பொது வெளியில் பேசுபொருளாகா சூழலே நிலவுகிறது.

Post caste capitalism means

“Caste hierarchy weakens in public life, but capitalism reorganises inequality- often using caste based access to capital, networks, and opportunities..”

Class and capital goes together என்பது போலவே caste and capital goes எனச் சொல்லிவிட முடியுமா தெரியவில்லை.

30 ஆண்டுகளுக்கு முன்னர் Public Service International சார்பில் நடந்த செமினார் ஒன்றில் (சிவ இளங்கோ சங்கப் பொறுப்பில் நடந்த ஒன்று) பேப்பர் ஒன்றை நான் கொடுத்திருந்தேன். அதில் இந்தியாவில் clast - class plus caste இருக்கிறது எனச் சொல்லியிருந்தேன். தோழர் கி வெங்கட் ராமன் அப்போது CITu வில் இருந்தார். அதைப் படித்துவிட்டு பிரசுரமாக கொணர வற்புறுத்தியதும், பிரசுரம் வந்ததும் நினைவிற்கு வருகிறது..

24-3-2026

mar 25

நமது ராஜ்ய சபாவில்..

ராஜ்ய சபா எம்பிக்களில் 31 நபர்கள் பில்லியனர்கள். ஒரு பில்லியன் என்பது நூறுகோடி. இது மொத்தமுள்ளவர்களில் 14 சதம் மட்டுமே. இதில் பாஜக 6, காங்கிரஸ் 5, ysrcp 2, AAP 2, BRS 3, NCP 3 .

10 கோடிக்கு மேல் சொத்து எனக் காட்டியவர் 97எம்பிக்கள். 1 கோடிக்கு கீழே காட்டியவர் 23 நபர்கள்.

பாஜகாவில் இருக்கும் எம்பிக்களின் சராசரி சொத்து 28.29 கோடி, காங்கிரசில் சராசரி 128.61 கோடி, திரிணமுல் 17.70 கோடி, திமுக 11.90 கோடி, ஜெகன்மோகன் ஆந்திர கட்சி 522 கோடி, தெலங்கானா சந்திரசேகர் ராவ் கட்சி 399 கோடி.

மொத்தமுள்ள 229 ராஜ்ய சபா எம்பிக்களின் மொத்த சொத்த 27638 கோடி. இதில் பாஜக 99 நபர்களின் சொத்து 2800 கோடி, காங்கிரஸ் 28 நபர்களுக்கு 3601 கோடி, AAP 10 பேர்களுக்கு 5740 கோடி, 7 YSR கட்சி நபர்களுக்கு 3658 கோடி. இதில் மக்கள் நீதி மய்ய 1 எம்பிக்கு 305 கோடி. ராஜ்ய சபாவில் அதிக சொத்துக்களை உடைய எம்பிக்கள் கொண்ட முதல் 10 கட்சிகள் வரிசையில் மக்கள் நீதி மய்யம் ஒரே எம்பியுடன் 10 வதாக இருக்கிறது. 8 திமுக எம்பிக்களின் மொத்த சொத்து 95 கோடி, 5 அதிமுக சொத்து 105 கோடி, 1 பாமக சொத்து 68 கோடி, தேமுதிக 1 சொத்து 77 கோடி.

சிபிஎம் 3 பேர் சொத்து 4 கோடி, சிபிஅய் 2 பேர் சொத்து 2 கோடி

மாநிலங்கள் படி அதிக சொத்துக்களை வைத்திருக்கும் ராஜ்யசபா எம்பிக்கள் - முதல் 10 மாநிலங்கள் என்றால்

தெலங்கானா- 8310 கோடி, பஞ்சாப்- 5729 கோடி, ஆந்திரா- 3998 , உபி 3089, ஒரிஸ்ஸா 1246 கோடி, குஜராத் 1183 கோடி, மகராஷ்ட் ரா- 1172 கோடி, தமிழ்நாடு 851 கோடி, ஹரியானா 404 கோடி, கேரளா 287 கோடி

மிகக் குறைந்த சொத்து காட்டிய சிலரில்

பல்பீர் AAP 3 லட்சம், சனோஜோபா பாஜக மணிப்பூர் 5 லட்சம், சிவதாசன் சிபிஎம் 20 லட்சம், ரஹீம் கேரளா சிபிஎம் 11 லட்சம்

கல்வி என்றால் 181 பேர் பட்டதாரிகள், 39 பேர் 5 ஆம் வகுப்பிற்கு மேல், 8 பேர் டிப்ளமா

வயது என்றால் 80க்கு மேல் 3, 60க்கு மேல் 96, 40க்குள் 10 பேர்

பெண்கள் 36 பேர்கள் ராஜ்ய சபாவில்

25-3-2026

mar 26

தமிழ்நாடு சட்டமன்றம் 2021

கட்சிகள் காட்சிகள்

தமிழ்நாட்டின் கட்சிகள் 2026 தேர்தலை நோக்கி சுறுசுறுப்பாக நகர்ந்து வருகின்றன. 2021ல் அமைந்த சட்டமன்றத்தில், இன்றுள்ள நிலைமைப்படி கட்சிகளின் எம் எல் ஏக்கள்

திமுக-133, அதிமுக- 60, காங்- 17, பாஜக- 4, விசிக- 4, சிபிஅய் 2, சிபிஎம் 2, பாமக 3, பாமக ராமதாஸ் 2

189 உறுப்பினர்கள் கோடீஸ்வரர்கள். 218 எம் எல் ஏக்களின் மொத்த சொத்து மதிப்பாக தெரிய வந்துள்ளது 2729.87 கோடியாம். இருந்த எம் எல் ஏக்களின் சொத்து , சராசரி எனப் பார்த்தால் 12.14 கோடி.

கோடீஸ்வர 189 பேர்கள் கட்சிவாரியாக: திமுக 114, அதிமுக 53, காங் 13, பாஜக 3, விசிக 2, பாமக 3, சிபிஅய் 1.

126 திமுக எம் எல் ஏக்களின் மொத்த சொத்து 1653 கோடி, 60 அதிமுக 734 கோடி, 15 காங் 255 கோடி, 4 பாஜக 48 கோடி, 4 விசிக 20 கோடி, 5 பாமக- 10 கோடி, 2 சிபிஅய் 5 கோடி, 2 சிபிஎம் 24 லட்சம்...சேர்த்து பார்த்தால் மொத்த சொத்து 2729 கோடி.

திமுக எம் எல் ஏ எனில் சராசரி 13.12 கோடி, அதிமுக எனில் 12.24 கோடி, காங் 17.05 கோடி, பாஜக 12.14 கோடி, விசிக 5.05 கோடி, பாமக 1.64 கோடி, சிபிஅய் 2.61 கோடி, சிபிஎம் 12 லட்சம் என்கிற தகவல் கிடைக்கிறது.

20 கோடிக்கு மேல் சொத்து காட்டிய எம் எல் ஏக்கள் 30 பேர்- பெரும்பாலும் திமுக, அதிமுக. 10 கோடிக்கு மேல் 57 பேர்கள். 5 கோடிக்கு மேல் எனில் 101 எம் எல் ஏக்கள்

மிக அதிக சொத்து காட்டிய முதல் மூன்று எம் எல் ஏக்கள் எனில்

அதிமுக நெல்லை சுப்பையா- 246 கோடி, திமுக சென்னை அண்ணாநகர் மோகன் 211 கோடி, திமுக திருச்சி கதிரவன் 121 கோடி.

பிரமுகர்கள் என்று சிலரைப் பார்த்ததில் அவர்கள் காட்டிய சொத்து மதிப்பு.

திரு கே என் நேரு 3 கோடி, செந்தில் பாலாஜி 2 கோடி, கே கே எஸ் எஸ் ஆர் 4 கோடி,

நத்தம் விஸ்வநாதன் 4 கோடி, வேலுமணி 5 கோடி, எடப்பாடி 6 கோடி,

எம் கே ஸ்டாலின் 8 கோடி, வானதி 9 கோடி, தங்கம் தென்னரசு 11 கோடி, கேபி முனுசாமி 12 கோடி, பொன்முடி 17 கோடி,

எ வ வேலு 23 கோடி, நயினார் 26 கோடி, செல்வ பெருந்தகை 27 கோடி,

உதயநிதி 29 கோடி, துரைமுருகன் 30 கோடி, பழநிவேல் தியாகராஜன் 38 கோடி , டி ஆர் பி ராஜா 41 கோடி, விஜய பாஸ்கர் 61 கோடி

மிகக்குறைந்த சொத்துள்ள மூன்று எம் எல் ஏக்கள் என்றால்

மாரிமுத்து சிபிஅய்- 3 லட்சம், சிபிஎம் சின்னதுரை- 4 லட்சம், அப்துல் சமது திமுக- 10 லட்சம்

கல்வி எனப் பார்த்தால் 138 பேர்கள் பட்டதாரிகள், 5 டிப்ளமா, மீதி 5வது-12 வது வரை. 10 ஆம் வகுப்பிற்கு குறைவானவர் 53 பேர்.

பெண்கள் 12. இதில் திமுக 6, அதிமுக 3 , பாஜக 2, காங் 1. மொத்தம் எம் எல் ஏக்களில் 7 சதம் கூட பெண் எம் எல் ஏக்கள் இல்லை.

வயது எனப் பார்த்தால் 145 பேர்கள் 51-83 வயதில், மீதி 31-50ல்.

திமுகவில் 24 பேர் 65க்கு மேற்பட்டவர், அதிமுகவில் 12.

பொறுத்திருந்து பார்க்கலாம் , 2026ல் எப்படியான சொத்துள்ளவர்கள் , கல்வி பின்புலம் வயது உள்ளவர் எம் எல் ஏக்கள் ஆகப் போகின்றனர் என.. பெண்கள் கூடுவார்களா? ஓட்டுபோட பெண்கள், ஆள ஆண்கள் என்பது தொடருமா?

தேர்தல் சாதி மதம் சொத்து எனும் பெரும் விளையாட்டு மைதானத்தில் இந்திய தமிழக அரசியல்..

26-3 – 2026

mar 26

MY posts on Indian Left புதிய மின் நூல்

ஆர்க்கைவ் இணையத்தில் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்

இந்தத் தொகுப்பு இந்திய இடதுசாரிகள் குறித்து முகநூலில் எழுதியவற்றிலிருந்து அமைக்கப்பட்டுள்ளன. 325 பக்க அளவிற்கு கம்யூனிஸ்ட் இயக்கம் பற்றிய வரலாற்று செய்திகள், குறிப்புகள், சோவியத், மாவோயிசம்- நக்சலிசம், கட்சி ஆவணங்கள் குறித்து, நினைவிலிருந்து அனுபவச் செய்திகள் என 91 இடுகைகள் இத்திரட்டில் இடம் பெற்றுள்ளன. இடதுசாரிகளுக்கு மட்டுமல்ல, அரசியல் வாசிப்போர்க்கும் இந்த இடுகைகள் ஏராளம் சொல்லக்கூடும். உள்ளடக்கத்தை வாசிக்கும் போதே இடுகைகளின் விரிவை தேடலை உணர முடியும்

31-1-2025 - ஆர். பட்டாபிராமன்

My posts On Indian Left- உள்ளடக்கம்

15. டாங்கே 125 - இடுகை 2

16. தோழர் டாங்கேவின் 1947 சோவியத் சந்திப்பு

17. தொழிற்சங்கத் தலைவர்கள்

18. கோரிக்கைகள்- போராட்டங்கள்

19. தோழர் டாங்கேவின் நூல்

20. தொழிற்சங்கத் தோழர்களுக்கு- தோழர் டாங்கே

21. டாங்கேவின் அரசியல் பார்வையில்

22. தோழர் பிலிப் ஸ்ப்ராட்

23. பிலிப் ஸ்ப்ராட் Blowing Up India

24. Gandhism An Analysis - பிலிப் ஸ்ப்ராட்

25. காந்தியம்- பிலிப் ஸ்ப்ராட்

26. மாவோ மிக சுருக்க அறிமுகம்

27. Naxalbari a frontier anthology

28. சாரு மஜூம்தார்

29. சாருவும் லீலாவும்

30. சாரு காட்டிய பாதை

31. சாரு அமைப்பு உள்முரண்

32. சாருவின் இறுதிக்காலம்

33. தேவை விவாதம்

34. திபங்கர் பட்டாசார்யா சிபிஎம் எல் லிபரேஷன் - பேட்டி

35. ஆர் பி தத் (1896-1974) - இந்தியாவின் உற்ற தோழர்

36. ஜீவா – ஈரோட்டு பாதை குறித்து..

37. கம்யூனிச இயக்கத்தின் முப்பெரும் ஆளுமைகள்

38. கம்யூனிச இயக்க முன்னோடிகள்

39. தோழர் புபேஷ் பற்றி தோழர் கே எஸ்

40. EMS on Communists Contribution to the theory and practice of Indian Politics

41. Communism in Indian Politics

42. Leftism in India 1917-1947

43. சிபிஎம் நகல் தீர்மானம்- 24வது காங்கிரஸ்

44. சிபிஎம் அகில இந்திய காங்கிரஸ்

45. சிபிஅய் நகல் தீர்மானம்- 25வது காங்கிரஸ்

46. சிபிஅய் மகாத்மா ஒரு மதிப்பீடு நூல்

47. நாடாளுமன்றத்தில் பெண்கள்- முஸ்லீம்கள்

48. அலகிலா விளையாட்டு- AI உடன் political Fun making

49. கற்பது...

50. Theory & Practice: A Life's Contradiction

51. No bounds to practice - no end to theoretical innovation

52. சமூகவியலும் இலக்கியமும்

53. சோவியத் மற்றும் இந்திய அரசியல்

54. பார்ப்பனியத்தை விமர்சித்தல்

55. அத்வானியின் தகவல்

56. சோவியத்தில் போடப்பட்ட பட்ஜெட்

57. நினைவுச் சுழல் 2

58. லெனின் ஆட்சிக் காலத்தில்

59. ஷாகித் சித்திக்கின் சாட்சியம்

60. The Political Marx

61. மார்க்ஸ்- லெனின், காந்தி- காங்கிரஸ்

62. மாவோ- காந்தி

63. Moral Lessons of the 20th Century

64. நினைவுச் சுழல்- 3

65. கன்னிமாரா நூலகம்

66. மார்க்ஸ் எங்கெல்ஸ் தொகுப்பு நூல்கள்

67. இந்திய வரலாறு குறித்த கார்ல் மார்க்ஸ் குறிப்புகள்

68. இந்திய வரலாற்றில் மதம்

69. ஆதி சங்கரர் தத்துவம்- இ எம் எஸ்

70. The Marxist Sociology in India

71. மார்க்சின் மானிபெஸ்டோ

72. What is politics to Gandhi

73. அச்சுதமேனன் குறித்து கவிஞர் கண்ணதாசன்

74. தோழர் தா.பா வின் 'பொதுவுடைமையரின் வருங்காலம்'

75. A Fact Sheet on Communist movement

76. பீனிக்ஸ் தருணம்

77. இந்திய கம்யூனிசம்- எதிர்காலம்

78. தொழிலாளி வர்க்கம் மாற்றுமா?

79. 2019க்கு பின்னரான இடது அரசியல்

80. மார்க்சிற்காக- அல்தூசர்

81. TU Education Lecture Notes

82. India Vs RSS புத்தகம்

83. தோழர் பிரகாஷ் காரத்திற்கு..

84. Tribute To Com D Gnanaiah

85. புரட்சிகர பாதை- தோழர் ஹோசிமின்

86. பால் ஸ்வீசி நினைவில்..

87. டிராட்ஸ்கியின் வாழ்வில்..

88. லூயி பிஷரின் லெனின்

89. மானிபெஸ்டோ

90. பொதுவுடைமை இயக்கமும் சிங்காரவேலரும்

91. டாங்கேவின் பார்வையில்...

mar 27

திரு வி க இப்படி எழுதினார்..

நுண்ணுடல் ஆக்கத்துக்குப் பருவுடல் ஆக்கம் இன்றியமையாததே; ஆனால் என் நிலை வேறு விதமாகியது. பருவுடல் மெலிந்திருக்கிறது; நுண்ணுடல் வலிவு பெற்றிருக்கிறது. பருவுடலுக்கு ஆக்கந் தேடாமலேயே யான் காலங்கழித்து வருகிறேன்.

(பக் 352/ 433 வாழ்க்கைக் குறிப்புகள் 2)

தோழன் நமரியுடன் உரையாடியபோது அவன் எடுத்துக் காட்டிய ஒன்று நேருவின் மேற்கோள்

Thinking and action should be coordinated..

உடல் ஆரோக்கியம் என நாம் பேசும்போது, மூளை மன ஆரோக்கியம் என்றும் பேசுவதைக் கேட்டிருப்போம். ஒவ்வொன்றும் அதனதன் பயிற்சியைப் பொறுத்து அமையக்கூடும்.

மனிதன் விருப்பத் தேர்வுகளால் அழைக்கப்படுகிறான்- அலைக்கழிக்கப்படுகிறான். பழக்கம் அவனை அப்படியே கொண்டு செல்லவே விழையும். உந்தித் தள்ளும். செய்யாவிடில் எதையோ இழந்த உணர்வைத் தரும். தான் செய்யும், ஈடுபடும் ஒன்றின் மீது பற்று ஏற்படும். புனிதம் கூடி அது பக்தி நிலைக்கும் போகக் கூடும். ஒருவகை சாமியாட்டம்தான் அனைத்துவகை நம்பிக்கைகளும்.

தன் சாமியே உயர்ந்தது எனப் பேசத் தலைப்படும் போது அவன் முரணை உருவாக்குகிறான். தன் வளர்ச்சி தன் சாமி வளர்ச்சியில் என தளைப்பட்டு, முரணை தீவிரப்படுத்துகிறான். பிற சாமியாட்டங்கள் பற்றி கடுமையாக எதிர்வினை புரிகிறான். தான் எழுப்பிக்கொண்ட பீடமே தனக்கு காவல் என்ற நிலையிலிருந்து, அதை காவல் காக்கும் பைத்திய நிலைக்குச் செல்கிறான். தனது நம்பிக்கைக்காக இந்த உடலை அர்ப்பணம் செய்வதாக இரத்த சாட்சி செய்கிறான். குரல் உயர்த்தி கர்ஜிக்கிறான். தன்னைப் போல பல கூட்டாளிகளை உருவாக்கிக்கொள்கிறான். திடிரென சக கூட்டாளி மீது சந்தேகம் வந்து விடக்கூடும். அவனை பீடத் துரோகி என முத்திரையிடப் பார்க்கிறான்.

தன்னிடம் இருக்கும் ஆயுதத்திற்கு பூஜை செய்கிறான். பிற ஆயுதக்காரர்களை அடக்கி சிறை வைக்கிறான். தனது புல்லட்டை தேசபக்தி என்கிறான். பிறரது புல்லட்கள் அழிக்கப்பட வேண்டும் என்கிறான். தான் அழிக்கிற உயிர்கள் பெரும் நியாயத்திற்காக என்கிறான். இவனுக்கு தியாகி எனக் குறியீடும், அவனுக்கு துரோகி பயங்கரவாதி என்றும் சீல் வைக்கிறான்.

தன் உடலின் அசைவுகள் பெருங் காரியத்திற்காக என கதைத்தல் நடைபெறும். Physical fitness மிக உயர்வாக கருதப்பட்டு கூட்டாளிகளை இராணுவ மொழி கிடங்கிற்குள் தள்ளுவது நடந்தேறும். mental fitness என்பது தீய வார்த்தையாகும். Physical mobility பெருங் கம்பத்தில் பேனர்களாகும். mental sickness குறித்து எந்த விசாரமும் இருக்காது. உடல் தேக்கம் முடமாதல் போலவே, mind தேக்கம் முடமாதல் என்பது ஒருபோதும் பிரச்சனையே அல்ல போலும். இங்கு வெளித்தெரிவதற்கே மவுஸ்..அடங்கி இருப்பதன் ஆரோக்கியம் என்பது புலப்படா ஒன்று.

இங்கு உடல் முடக்கத்திற்கு rheumatologist doctor இருப்பர். Mental Rheumatology என்பது குறித்து பேச்சே இருக்காது. அதற்கும் பயிற்சி இருக்கலாம்...ஒருவேளை அதற்கான மருத்துவர் காந்தியாகக் கூட இருக்கலாம்.. அவரவர் புரிதலில் கூட சரி செய்து கொள்ளவும் முடியலாம்..

27-3-2026

march 28 காந்தி மார்க்கம்

Gandhi Marg மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வருகிற காலாண்டிதழ். காந்தியம் குறித்த உரத்த சிந்தனைகளுடன், செறிவான ஆய்வுப் பார்வையில் வெளிவந்துகொண்டிருக்கும் இதழ். 50 ஆண்டுகளுக்கும் மேலாக இதழ் ஒன்றை அதே உற்சாகத்துடன் , தரத்துடன் நடத்துவது என்பது எளிதான செயல் அல்ல.

ஒவ்வொரு இதழும் குறைந்தது 120 பக்க கட்டுமானத்தில்- 5,6 ஆய்வு கட்டுரைகள், குறிப்புகள், பேட்டி, புத்தக அறிமுகங்கள் என உள்ளடக்கம் கொண்டு வந்துகொண்டிருக்கிறது. இப்போது வருகிற இதழ்களில் கச்சிதமாக current topic குறித்த எடிட்டோரியல் குறிப்புகளை ஜான் மூலக்கட்டு தந்து கொண்டிருப்பதைக் காணலாம்.

இவ்விதழ் Gandhi Peace Foundation, டெல்லி சார்பில் வெளியிடப்படுகிறது. மார்ச்,ஜூன், செப்டம்பர், டிசம்பர் மாதங்களில் வெளியிடப்படுகிறது. சில நேரங்களில் இரண்டு இதழ்கள் சேர்ந்து கூட வரலாம். இம்முறை அப்படித்தான் அக்- டிச 2025 இதழும், ஜன- மார்ச் 2026 இதழும் சேர்ந்தே அனுப்பட்டுள்ளது. ஆண்டு சந்தா ரூ 300. ஆர்வம் உள்ளவர் செலுத்தி அவர்களின் ஆய்வுப் புலன் சார்ந்த சிந்தனைகளை உள்வாங்கலாம்.

மார்க்சியம் குறித்த ஆய்விதழ்கள் இளம் வயதிலேயே என் போன்றோர்க்கு அறிமுகமாயின. காந்தி மார்க் போன்ற ஆய்விதழ் , 60 வயதை கடந்த காலத்தில்தான் கண்ணில்பட்டது. தேடிப் போவதுதானே வரும். கிட்டே போனால் எட்டிப் போகும்- எட்டிப் போனால் கிட்டே வரும் என்கிற பழக்கப் பேச்சு தேடலுக்கு சரியாகுமா எனத் தெரியவில்லை. அமைப்பில் கூட அது எடுபடாது. தள்ளிப் போனால் எட்டப்போகும் குணமே அங்கு தொழிற்படும்.

தீவிர அகாடமிக் கட்டுரைகள் மார்க்சிய இதழ்களில் வருவது போலவே, காந்தி மார்க் இதழிலும் வருவதைக் காணமுடியும். இந்நிறுவனத்தார் சில நூல்களையும் வெளியிட்டுள்ளனர். பல ஆண்டுகளுக்கு முன்னர் ரசித்துப் படித்த கட்டுரையாளர்களில் ஒருவர் அஸ்கர் அலி இன்ஜினியர். மெயின்ஸ்ட் ரீம் இதழில் அவர் வகுப்பு வாதம், மத நல்லிணக்கம் பற்றி ஏராளம் எழுதி வந்தார். அஸ்கர் அலி அவர்களின் Gandhi and Communal Harmony யை இவர்கள் வெளியிட்டுள்ளனர். நான் , ஆர் ஆர் திவாகர் நூலை இவர்களிடம் வாங்கித்தான் படித்தேன். போரற்ற அமைதி குறித்த நூல்களைவெளியிட்டுள்ளனர்.

இம்முறை வந்த இந்த இரண்டு காலாண்டிதழ்களில் வந்துள்ள ஆய்வுக் கட்டுரைகளின் தலைப்புகளில் சிலவற்றை தந்துள்ளேன்.

Reclaiming Gandhi for Gender Equality

A Study of Gandhi's Casteless Khadi

Indian opinion: shaping Indian Identity in South Africa

Tracing Civil liberties in New Criminal code

Relevance of Gandhian Economics in the Neo liberal world

Gandhi and the paradox of Modern Democratic Freedom

Can Gandhi save China?

Gandhi and Art

Why AI needs Gandhi?

இம்முறை ஜன- மார்ச் 2026 எடிட்டோரியரில் மூலக்கட்டு இவ்வாறு எழுதியுள்ளார்

Gandhian political ethics emphasised dialogue over demonisation, decentralised authority, moral accountability, and the primacy of human dignity over partisan gain..

மேலே சொல்லப்பட்ட யாவுமே, இன்று இந்திய அரசியலில் இல்லாதப் போக்கைக் காண்கிறோம். அரசியல் கட்சிகள் காந்தியை வைத்துக்கொள்வதால் ஆகப் போவதென்ன? Moral accountability ஆவது ஒன்றாவது...

28-3-2026

mar 29 2026 தமிழ்நாடு தேர்தல்

தமிழ்நாடு தேர்தல் 2026 பல பிரிவினர்க்கு பலவித எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தும்.

தொழிற்துறை முதலாளிகளுக்கு நிலையான அரசாங்கம், குறைந்த கூலியில் தொழிலாளர், சாதகமான தொழில் உறவுகள்

தொழிலாளர்களுக்கு: உகந்த வேலைச் சூழல், கண்ணிய வாழ்விற்கான சம்பளம், தொழிலாளர் நலத்திட்டங்கள்- வேலை பாதுகாப்பு, போராடுவதற்குரிய ஜனநாயக சூழல்

வரக்கூடிய அரசாங்கம் இந்த முரண்களை வழக்கம் போல manage செய்யக்கூடிய ஒன்றாக இருக்குமா- அல்லது நீதியின் பக்கம் நின்று முரண்களை தீர்க்குமா?

திராவிட அரசியல் வர்க்கப் போராட்டத்தை சாதி சார்ந்த அம்சங்களில் உள்ளிழுத்து விட்டதா..absorbing class contradiction dominantly in caste contradiction- creating vociferous discourses in caste terms than in class terms even amongst the trade unionists..இது முக்கியமான விவாதப் பொருளும் கூட. அவரவர் நியாயப்படுத்தலை இக்கேள்வி மறுக்கப் போவதில்லை. Caste mobilisation and welfare distribution என்கிற தேர்தல் அரசியலில் containment of class politics நடந்தேறியுள்ளதா என்கிற பரிசீலனை தேவைப்படலாம். பதில்கள் பன்முகத் தன்மையுடன் அவரவர் நியாயப்படுத்தல்களை கொண்டு அமையலாம்.

இந்துத்துவா அரசியல் காங்கிரசின் லிபரல் அரசியலை முற்றிலுமாக சாய்த்து விட்டதா? இடது அரசியலை அது பொருட்படுத்தாமல் அலட்சியமாக்குகிறதா? இந்த தேர்தல் மாநில அளவில் பதிலைத் தரலாம். சாதிதாண்டிய கூடுகை என்கிற அரசியலில் இந்துத்துவா social engineering ஓரமானவர்களுடன் தன் விளையாட்டை நிகழ்த்தப் பார்க்கிறது. அதற்கு திராவிட அரசியலின் ஒரு சார்பு துணையாகவும் நிற்கிறது. தேசிய கட்சிகள்- வட்டார கட்சிகளின் உறவும் உரசலும் தமிழ்நாட்டு அரசியலில் தொடரும் கதையும் கூட என சேர்த்து பார்க்க வேண்டியுள்ளது. பெரும் சாதிகளின் அரசியல் பிளவும் இம்முறை அரசியல் சொக்கட்டான்களாக...

புதிய அரசியல் சக்தியாக எப்போதுமே apolitical downtrodden aspirational உதிரி வர்க்க சாதி சார் பிரிவுகள் உருவாகும். இம்முறை அச்சக்தியும் சோதனை ஓட்டத்தில் ..தன் அரசியலை சக்தியை ஸ்திரப்படுத்த

முயற்சிக்கலாம். புதிய அரசியல் படுத்தல் நடைபெறலாம். அபொலிட்டிகல் என்பதால் அவர்களை நிராகரித்துவிட முடியுமா ?

தமிழகத்தில் எவர் ஆட்சிக்கு வந்தாலும் நலத்திட்டங்களை மட்டுப்படுத்தாத முதலாளித்துவ வளர்ச்சியை தீவிரப்படுத்துதல் என்கிற திசைவழியையே எடுக்க வேண்டியிருக்கும். Capital accumulation தீவிரமாதல் இருக்கவே செய்யும்.

தேர்தல் முடிவுகள் வர்க்க அடிப்படை சார்ந்த ஒன்றாக அமையாமல், சாதி கூட்டணிகளின் ஏற்பாடு, கலவையை பொறுத்து அமையக்கூடும். இதில் சாதி ஒன்றே தொழிற்படும் காரணியாக அமைந்துவிடுவதில்லை என்கிற rider யையும் சேர்த்துப் பார்க்க வேண்டும். வர்க்கம் என்பதைத் தாண்டி சாதி, மதம் என்பன தூக்கலாகச் செயல்படலாம். பொருளாதாரப் பலன்கள் என்கிற எதிர்பார்ப்பு அனைத்தையும் விஞ்சிய ஒன்றாக தலைகாரணியாகிறதா எனப் புரிந்து கொள்ள என்னால் முடியவில்லை.

இருக்கிற வரவு- செலவை எப்படி திறமையாக, எவர் சிறப்பாக கையாள்வார் என்கிற கேள்விதான் மய்யமான கேள்வி- how efficiently in the same system..எவரால் வருவாயை பெருக்க முடியும்- செலவை உகந்த வகையில் ஒட்டுமொத்த சமூக முன்னேற்றத்திற்கான முதலீடு ஆக்க முடியும்- எவரால் சமூக நல்லிணக்கத்தைக் கொணரமுடியும், பதட்டமில்லா சூழலை உருவாக்க இயலும் போன்றவை பொருட்படுத்தப்பட வேண்டிய அம்சங்கள்.

சட்ட ஒழுங்கு, தனி நபர் ஒவ்வொருவரின் பொது ஒழுங்கு என்பதை உயர்த்தும் சமூகச் சூழல் நோக்கி தமிழர் நெடுந்தூரம் பயணிக்க வேண்டும் போல் இருக்கிறது. போதையில்லா சமூகம் பெருங்கனவு தானா? ஒவ்வொரு அமைப்பும் அதைச் சார்ந்தவர் நெறிசார் மேம்பாட்டிற்கு கொடுக்க வேண்டிய முன்னுரிமையை இன்றைய சூழல் மிக அதிகமாக கோருகிறது. எந்த அரசியல் சமூக பொருளாதார புரட்சியும் அத்துடன் moral revolution என்பதை அஜெந்தா ஆக்காமல் வெற்றி பெறுவதில்லை.

ஒவ்வொரு யூனிட்டும் அதன் அரசியல் தேர்ச்சி என்பதற்கு கொடுக்கும் முன்னுரிமையை விட பல மடங்கு ஒழுக்கத் தேர்ச்சி என்பதற்கு - moral code index குறித்து கவனப்படுத்திக்கொள்ள வேண்டியிருக்கலாம். ஒழுக்கத் தேர்ச்சி என்பதற்கான லிஸ்ட்களை தயாரித்து சரி பார்க்க வேண்டியிருக்கலாம்.

அரசியல் வெற்றிகளால் மட்டும் எந்த சமூகமும் முழுமையான மேம்பாட்டை அடையமுடிவதில்லை. பொருளாதார மேம்பாடு மிக அவசியமான ஒன்று. அதுவும் தேர்ந்த consumer society யை வேண்டுமானால் உருவாக்கக் கூடும். ஒவ்வொரு தனிநபரின் morality என்பது தேறாமல், சமூக கடைத்தேற்றம் சாத்தியமா ?

அரசியல் விடுதலை - சமூக நீதி, பொருளாதார விடுதலையை தந்துவிடும் என நம்பப் பட்டது. பொருளாதார மேம்பாடு கண்ணியமான மனிதர்களை சமூகத்தை உருவாக்கிவிடும் என நம்பப்படுகிறது. ஒவ்வொன்றும் மற்றவைகளை ஒத்திப்போட்டு ஒன்று மற்றதிற்கு பாதையாகும் என சோதனையாக்கப்பட்டது. இவை யாவும் ஒன்று மற்றதிற்காக ஒத்திப் போடமுடியா காரணிகள் என, விடுதலை இந்தியாவின் , தமிழகத்தின் வாழ்க்கை சோதனைகள் காட்டுகின்றன.

அரசியல் புரிதல் , சமூக நீதி, கண்ணிய மனிதர் வழி மேம்பட்ட சமூக கட்டமைப்பு என எல்லாவற்றிற்கான பயணமும் ஒன்று மற்றதிற்கான ஒத்திப்போடல்களில் அமுங்கிப் போவதைக் காண்கிறோம்.

Dignified life - dignified , peace loving , duty bound human beings என்கிற பெருங்கனவை இத்தேர்தல் கொணரமுடியாமல் போகலாம். ஆனால் அது திசையாக உருவெடுக்க வாக்காளர் மனப் பயிற்சி அமைந்தால் அது நற்பேறு..

29-3-2026

mar 30

The Dismantling of India’s Democracy

மதக் காவலர்கள் குண்டாந்தடிகளுடன் என்பது இந்திய அரசியல் பாரம்பரியத்தில் வரலாற்று காட்சியாகவே இருக்கும் ஒன்றா?

அசோகர் காலத்தில் Dhamma Mahamattas- religious police, Rajukas என்கிற புத்த தம்ம காவலர்கள் கிராமந்தோறும் அமர்த்தப்பட்டிருந்தனர். அசோகர் ஆட்சிக்கு வந்த 14 ஆம் ஆண்டிலிருந்து இந்நடைமுறை உருவாகியிருக்கக்கூடும். அடுத்து அவர் மேலும் 23 ஆண்டுகளாவது அரசாட்சி செய்திருப்பார். ஆரம்பத்தில் மக்களை நல்வழி பாதைக்கு அழைத்துச் செல்வது என்ற நோக்கில் தொடங்கப்பட்ட தம்ம மகாமட்டாஸ் முறை, காலப் போக்கில் அதிகார துஷ்பிரயோகம்- வற்புறுத்தல், தண்டனை கொடுமைகள் என்கிற வடிவத்தை எடுத்து, அடுத்த 50 ஆண்டுகளில் மௌரிய பேரரசின் வீழ்ச்சி எனச் சென்றதாம்.

மேற்கண்ட தகவலை The Dismantling of India’s Democracy 1947-2025 என்கிற நூலில் மூத்த எழுத்தாளர் பிரேம் சங்கர் ஜா தந்துள்ளார். பிரேம் சங்கர் என்றால் இந்துஸ்தான் டைம்ஸ், டைம்ஸ் ஆப் இந்தியாவில் அவரது எழுத்து பத்திகள் நினைவைக் கொணரும். இந்திய பாசிச வடிவம், ஜனநாயகத்திற்கு இந்துத்துவா அரசியல் ஏற்படுத்தும் அவலட்சண கோணல்களை ஜா இந்நூலில் விரிவாக அலசுகிறார். வாய்ப்பு கிட்டுமெனில் அவ்வப்போது இந்நூல் தரும் செய்திகள் சிலவற்றை பேச மனம் சொல்லுகிறது. மனம் போல் செயல் அமைந்தால் நடக்கலாம்.

370 பக்கங்களுக்கும் மேலான நூல்- இந்திய ஜனநாயகம் படும் பாடுபற்றி பேசுகிற இந்நூல். இந்திய ஜனநாயகத்தின் சிறப்புகளை பல நூல்கள் பேசியுள்ளன. பலவீனங்களை, தடுமாறி தோல்வியுற்ற இடங்களை குறிப்பிட்டு தான் பேச விரும்புவதாக ஜா சொல்லியிருப்பார். ஜாவின் விரிவான வாசிப்பு பயிற்சி, கருத்தமைத்துக் கொள்ளும் பாங்கு, எழுத்தில் pointed ஆக வைக்கும் திறனை, நான் படிக்கும் பக்கங்கங்களில் உணர்கிறேன்.

இந்நூல் 16 இயல்களால், பிற்சேர்க்கை ஒன்றுடன் பின்னப்பட்டுள்ளது. இயல்களின் தலைப்புகளே உள்ளடக்கத்தை கொஞ்சமாவது வெளித்தெரிய வைக்கும். உள்புகுந்து discern செய்ய வேண்டிய சிரமத்தை ஜா வாசகர்களுக்கு இந்நூலில் கொடுக்கவில்லை. சற்று plain writing but with advanced concepts என்கிற தன்மை என் வாசிப்பில் படுகிறது. இயல்கள்

A brief note on Rep Democracy

India’s unique achievement

Where did enchantment begin

Where did India take the wrong road

How did India criminalise its Democracy

Hindu nationalism to fascism

The economic roots of fascism

Gujarat where fascism was created

Fire in the Sabarmati Express

Gujarat 2002 to 2014

India’s lawless future

Haren Pandya murder

The maturing Indian Fascism

Fascist consolidation

A glimpse of electoral autocracy

Epilogue can democracy still be saved

நூலின் இயல்களே இந்தியாவில் பாசிசத்தின் தோற்றம் - கட்டமைத்து எப்படி வலுவாகி வருகிறது- குறித்த subject matter எனக் காட்டிவிடும்.

பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியர் எப்படி மெல்லமெல்ல in degrees- self governance சென்றனர்- இந்திய தேச கட்டுமானம் , அய்ரோப்பிய தேச கட்டுமானத்திலிருந்து எப்படி மாறுபட்ட ஒன்று என்பது குறித்து ஆரம்ப இயல்களில் ஜா சொல்கிறார். இந்தியாவில் ஏதோவொரு வகையான பேரரசு ஆட்சி கலாச்சார அரசியல் இருந்து வந்ததை வரலாறு நீள பார்க்க முடியுமென்பதை எடுத்து வைக்கிறார்.

இந்திய விடுதலை, அரசமைப்பு சட்ட ஏற்பாடு, மொழிவாரி மாநிலங்கள் வழியாக preserving ethnic heterogeneity என்கிற சிறப்பான தகவமைப்பை செய்துகொண்டதை ஜா வரவேற்று பேசுகிறார். Ethno linguistic diversity காத்திடும் வகையிலான பெடரலிசம் , அரசமைப்பு வழியில்.. இங்கு ஜா எழுதியிருப்பது

India wholly a new type of democracy a federation- not based upon geographical or administrative convenience but upon respect for the ethnic identity of the constituents of the empire states of the past..

இந்தப் பார்வை புரிதல் மிக அவசியமான ஒன்று. நிர்வாக வசதிக்கு 70 மாநிலங்கள் என்கிற ஜனசங்க பார்வைக்கு மாறான ஒன்று. Complex but flexible devolution of powers என்கிற பார்வை. மேலும் autonomous administrative council, பஞ்சாயத்து ராஜ் போன்ற சில குறைகள் கொண்ட அதிகார பகிர்வுகளும் நடந்துள்ளன.

1923ல் சாவர்க்கரின் Hindutva, RSS இயக்கத் தோற்றம்- transformation of hard Hindu nation states in the form of unitary euro states..என்பதை நூல் நீள விவாதிக்கிறார் ஜா.

இந்திய நீதிமன்றங்களில் தேங்கி நிற்கும் வழக்குகள் ஜனநாயக வெளியை எப்படி நீர்த்துப் போக செய்கின்றன என்பதும் பேசப்படுகிறது. வழக்கு தீர்விற்கு சராசரியாக 1430 நாட்கள் எடுப்பது சரியா என வினவுகிறார். சிங்கப்பூர் 150 நாட்களில் முடிக்க எடுத்துக்கொள்கிறதாம். சிங்கப்பூர் போன்ற சிறிய நாட்டை ஒப்பிடமுடியுமா, தெரியவில்லை..

உலகின் மிக மோசமான 25 அழுக்கு நிறை நகரங்களில் 18 இந்தியாவில் என்கிற செய்தி கிடைக்கிறது. Pollution free India ஜனங்களின் ஆரோக்கிய தேவையாகாதா? கங்கை, யமுனை சுத்தப்படுத்தல் தொடர் நிகழ்ச்சி நிரலில் மட்டும் தானா என்கிற கேள்வி நூலில்..

பார்க்கலாம் ஜாவின் ஜனநாயகத் தேடல் எப்படி செல்கிறதென..

30-3-2026

mar 31 கம்யூனிஸ்ட்கள் தேர்தலில்

திமுக அணியில் வலுவான கோட்பாட்டு பின்புல நம்பிக்கையை - இந்துத்துவா பாஜகஎதிர்ப்பை உறுதியாக வெளிப்படுத்திய கட்சிகளென சிபிஐ, சிபிஎம், விசிகஎனச் சொல்லலாம்.

கம்யூனிஸ்ட் கட்சிகளின் தேர்தல் striking rate குறித்து கொஞ்சம் பார்க்கத் தோன்றியது. காங்கிரஸ் மற்றும் பாஜகவின் நாடாளுமன்ற தேர்தல் வெற்றிகளை கணக்கில் கொள்வது , இந்திய அரசியல் உற்று நோக்கர்களுக்கு அவசியமானது. இப்போது சட்டமன்ற தேர்தல் என்பதால் திமுக, அதிமுக தேர்தல் வரலாற்று பாதைகள் பார்க்கப்படக் கூடும்.

தேர்தல் குறித்த தேர்ந்த விற்பன்னர்கள், ஒவ்வொரு தொகுதி குறித்தும்- அதில் விழக்கூடிய வாக்கு பின்னணியின் சமூகம் குறித்தும் தொடர்ந்து விவாதித்துக் கொண்டிருக்கின்றனர். என் ஆர்வத்தில் இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும் கடந்த பல தேர்தல்களில் பெற்ற இடங்களை சற்று தேடிப் பார்த்தேன்.

விடுதலை இந்தியாவில், தேர்தல் அரசியலில் பங்கேற்கும் முடிவை கம்யூனிஸ்ட்கள் எடுத்து முதல் தேர்தல் 1952 லேயே பங்கேற்றனர். தொடர்ந்து 75 ஆண்டுகள், அவர்களின் சக்திக்கேற்ற அனுபவங்களை அவர்கள் பெற்று வருவதை தமிழ்நாட்டில் காணமுடியும்.

1964ல் தான் கம்யூனிஸ்ட் இயக்கம் உடைவை சந்தித்து சிபிஎம் உருவானது. முந்திய தேர்தலில் ஒரே இயக்கமாக சிபிஅய் மட்டுமே நின்றது.

1952ல் 90 இடங்களில் நின்று 62 இடங்களைப் பெற்று (சென்ன ராஜதானி) , இந்திய அரசியல் நோக்கர்களை கட்சி திரும்ப பார்க்க வைத்தது.

1957ல் 60 இடங்களில் நின்று 16 ல் வென்றது. 1962ல் 50 இடங்களில் போட்டியிட்டு 4 இடங்களைப் பெற முடிந்தது. இக்கால கட்டத்தில் திமுக தேர்தல் களத்தில் இறங்கியது என்பதையும் மனங்கொள்ள வேண்டும். காங்கிரசிற்கு மாற்று கம்யூனிஸ்ட்கள் என்பதிலிருந்து, காங்கிரசிற்கு திமுக கூட மாற்றாக வரலாமே என்கிற சாய்வு அரசியல் உருவான காலமாக இதை புரிந்து கொள்ளலாம்..

1952ல் 10 சத வாக்குகள் என்பது சிபிஅய் பெற்றது. 1957 ல் காங் 45 சதம், திமுக ஆதரவு 13 சதம், சிபிஅய் 8 சதம். 1962ல் வாக்கு சதம் 46, 27, 6 என முறையே அமைந்ததைக் காணலாம்.

1967 தேர்தலில் சிபிஅய் 5 சதம், சிபிஎம் 4 , காங் 41, திமுக 40 என்கிற மாற்றம் உருவானது. 1971ல் இது முறையே 3, 5, 34, 48 என திமுகவின் பெரும் வளர்ச்சிக்கான சாலையானது.

1977 தேர்தல் திமுக உடைவில் உருவான அதிமுக பங்கேற்புடன் நடைபெற்றது. இதிலிருந்து தொடர்ந்த தேர்தல்களில் திமுக அதிமுக இரு துருவ அரசியல் நிலை ஏற்பட்டு, இடதுசாரிகள் 6 சதம் என்கிற அளவிலும், காங்கிரசோ அதிகமாக 20 plus to 4-5 சதம் என்கிற சரிவைக் காணத் தொடங்கியது. தேசிய கட்சிகள் இளைக்கலாயின. வட்டார கட்சிகளின் அரசியல் என்கிற வளர்ச்சி உருவாகலானது.

1967ல் சிபிஅய் 35 ல் போட்டியிட்டு 19 வென்றது. சிபிஎம் 25ல் போட்டியிட்டு 11 பெற்றது. இரு கட்சிகளும் முறையே 1971ல் 8/ 20, 11/ 20 , 1977ல் 12/ 20, 11/ 20 , 1980ல் 15க்கு 9, 15க்கு 11, 1984ல் 15க்கு 7, 15க்கு 5 என வென்றன.

சிபிஐ, சிபிஎம் 1989ல் 10க்கு 3, 20க்கு 15 , 1991ல் 10க்கு 1, 10க்கு 2, 1996ல் 10க்கு 8, 10க்கு 9, 2001ல் 8க்கு 8, 8 க்கு 6 என வென்றன.

இது 2006ல் 10க்கு 6, 13க்கு 9, 2011ல் 10க்கு 9 , 12க்கு 10 என்ற இடங்களாயின. 2016 புதிய சோதனையாக இரண்டு கட்சிகளும் 25ல் நின்று எந்த இடத்தையும் பெறமுடியவில்லை. 2021ல் சிபிஅய் 6க்கு 2, சிபிஎம் 6 க்கு 2 எனப் பெற முடிந்தது. இக்காலங்களில் திமுக அல்லது அதிமுக என்கிற அணிசேர்க்கை தேர்தல்களுக்கேற்ப அமைந்திருந்தன.

திமுக வுடன் இம்முறை 2026 லும் தொடர் பயணம் நடந்து வருகிறது. மிகுந்த நம்பிக்கையுடன் இரு கட்சிகளும் , தோழமை கட்சிகளின் வெற்றியுடன் தங்கள் 10 இடங்களின் வெற்றி நோக்கி களம் காண்கின்றன.

நல் வாழ்த்துகள்!

31-3-2026

April 2026 Posts

ap 1 கட்சி கணக்குகள்

தேர்தல் கமிஷனிடம் அங்கீகாரம் பெற்ற, பதிவு செய்த கட்சிகள் தங்களின் ஆண்டு வரவு செலவு அறிக்கையை தரவேண்டும்.

2024-25க்கான வரவு செலவு அறிக்கையை கடந்த அக் 2025க்குள் தேசிய கட்சிகள் செய்திருக்க வேண்டும். பாஜக, காங், சிபிஎம் போன்ற தேசிய கட்சிகள் காலதாமதாக, ஆனால் செய்துள்ளனர். பிஎஸ்பி, ஏ ஏ பி உரிய காலத்தில் செய்தனர். இந்த 5 தேசிய கட்சிகளின் வரவு செலவு அறிக்கை - அவர்கள் கொடுத்த விவரத்தின்படி பார்க்கக் கிடைத்தது.

சிபிஅய் சிபிஎம் கட்சிகள் தங்கள் கட்சி காங்கிரசில் ஸ்தாபன அறிக்கையை வைப்பர். கட்சியின் பலம் பலவீனம் உறுப்பினர் எண்ணிக்கை அதில் தெரிய வரும். வெகு காலம் பொது வெளிகளில் கம்யூனிஸ்ட்களின் org report கிடைக்கும்படி செய்யப்பட்டிருந்தது.

பாஜக கோடிக்கணக்கில் உறுப்பினர், உலகில் பெரிய கட்சி என்பர். வெளிப்படையாக ஒருமுறை கூட அதன் ஸ்தாபன அறிக்கையை பொதுவெளியில் எவரும் பார்த்திருக்க முடியாது. இந்தியாவின் பெருங்கட்சியாக 140 ஆண்டுகள் பாரம்பரியம் மிக்க காங் கட்சியும் தன் ஸ்தாபன அறிக்கையை பொது வெளியில் கிடைக்கச் செய்வதில்லை. மக்களிடம் தங்கள் கட்சி ஸ்தாபனம் குறித்த வெளிப்படைத் தன்மை என்பது moral விஷயமாக இல்லாமல் போய்க்கொண்டிருக்கும் காலமிது.

சரி. BJP, INC, CPM, BSP, AAP ஆகிய தேசிய கட்சிகளின் வரவு செலவு 2024-25 க்கு எவ்வளவு என அவரவர் தந்துள்ளதை கொஞ்சம் பார்க்கலாம்.

பாஜக

வரவு 6769.1498 கோடி. செலவு 3774.582 கோடி. அதாவது ஆண்டிற்கு இக்கட்சியின் வருவாய் 6789 கோடி, இதில் இக்கட்சி 56 சதத்தை செலவு செய்த செய்தியை தருகிறது. பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களை விஞ்சும் வருவாய். எந்த தொழிலோ உற்பத்தி சார் உழைப்போ இல்லாமல், கட்சி என்கிற நிறுவனத்திற்கு , பெரும் முதலாளிகள் அள்ளித் தரும் நன்கொடை இப்படி ஆயிரக்கணக்கான கோடி. அதன் ராட்சத கட்சி எந்திரத்தை புரிந்து கொள்ள , அக்கட்சி

பெறும் நிதி ஆதரவு சாட்சியாகலாம்.

தேர்தல் மற்றும் நிர்வாக செலவு என செலவை காட்டியுள்ளனர். அச்செலவோ 3700 கோடிக்கு மேல். இந்தியாவின் பல கிராம மக்களின் ஒட்டு மொத்த வாழ்க்கைச் செலவை இது விஞ்சக்கூடும்.

காங் இளைத்துப் போய், பெரும் முதலாளிகளின் பாரபட்சத்திற்கு உள்ளாகி வருகிறது போலும். அதன் வருவாய் 918.2865 கோடி, செலவு 1111.9496 கோடி. வருவாய் ரூ 100 எனில் செலவோ 121 என செய்துள்ளது. இருப்பிலிருந்து எடுத்து ஆண்டுச் செலவை- தேர்தல், கட்சி நிர்வாகச் செலவை பார்த்துள்ளது.

அடுத்த மூன்றும் சிறு தேசிய கட்சிகள். சிபிஎம் வரவு 172.63 கோடி, செலவு 173.86 கோடி. செலவு ஒரு கோடி கூடுதலாகியுள்ளது.

பிஎஸ்பி வரவு 58.58 கோடி, செலவு 106.30 கோடி. செலவை இரு மடங்குக்கு சற்று குறைவாக செய்துள்ளது. இன்னும் உபி யில் தாக்குப் பிடிப்பதே பெரிய கலைதான்.

ஏஏபி 39.28 கோடி வரவு, செலவு 36.46 கோடி

தேசிய கட்சிகளின் மொத்த வருவாய் 7960.99 கோடி. இதில் பாஜக 85 சதம் பெற்றது.

2023-24 யை ஒப்பிட்டால்

பாஜக வருவாய் 4340 கோடியிலிருந்து 6769 கோடிக்கும்

காங் வருவாய் 1225 கோடியிலிருந்து சரிந்து 918 கோடிக்கும்

சிபிஎம் வருவாய் 167 கோடியிலிருந்து 172 கோடிக்கும்

பிஎஸ்பி க்கு 64 கோடியிலிருந்து 58 கோடிக்கு சரிந்தும்

ஏஏபிக்கு 22 கோடியிலிருந்து 39 கோடிக்கு உயர்ந்தும் இருப்பதைக் காண்கிறோம்.

கட்சிகள் தங்களின் வரவு செலவு அறிக்கையை பொது வெளியில் வைக்கும் morality , இந்திய அரசியல் முறையில் உருவாகுமா?

இதே போல் வட்டார கட்சிகளின் வரவு செலவு அறிக்கைகளும் பார்க்கப்பட வேண்டியவை.

இந்திய தேர்தல், அரசியல் முறையில் பணம் மிக அதிக செல்வாக்கு கொண்ட காரணியாக மாறி ரொம்ப காலமாச்சு...

அதிக துட்டு அதிக வெற்றி என்கிற நேர்விகித தேர்தல் ஜனநாயகம் தொழிற்படும் சமூகமாகிவிட்டோம்..

1-4-2026 See less

ap 2 வி சி க அமைப்பு விதிகள்

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் அமைப்புவிதிகளை அதன் பொதுச்செயலரான தோழர் தொல் திருமாவளவன் ஒப்பமிட்டு தேர்தல் ஆணையத்திற்கு கடந்த 7-3-2026 அன்று அனுப்பியுள்ளனர். அதைப் பார்த்தபோது சொல்லத்தோன்றிய சில அம்சங்கள் கீழே..

VCK Constitution Rules and Regulations

art 1ல் 4 செக்சன்கள்- பெயர், எம்ப்ளம், கொடி- கொடி வர்ணனை

கொடி குறித்த விளக்கத்தில்

நீலம் பாட்டாளிகளின் விடுதலையை, சிவப்பு அரசமைப்பு உரிமை போராட்டத்தை, நட்சத்திரம் விடியலை- 5 நோக்கங்களுடன்

1. creating equality by abolishing caste

2. Eradication of Poverty by destroying class structure

3. protection of dignity by women's liberation

4. Fight for egalitarian society

5. Restoring livelihood rights by abolishing imperialism

அதேபோல் ஆர்ட்டிக்கிள் 3ல் 6 நோக்கங்கள் சொல்லப்பட்டுள்ளது. அவை

1. To organise the working, oppressed people in the path of Baba saheb Dr B R Ambedkar, and to develop them as a political force

2. To establish the leadership of Dalit or the casteless people in every sphere including the political, social, economic and cultural fields

3. To crusade against the disgraces and atrocities including untouchability imposed on the proletariat in the name of caste and religion, and to achieve the annihilation of caste

4. To mobilise the proletariat and to eradicate class oppression and exploitation that form the basis of feudalism and capitalism

5. To annihilate all types of oppression against women including patriarchy and establish gender equality

6. To strive for ensure egalitarian and socialistic pattern of society

art 12 ல் அடிப்படை யூனிட்டை கேம்ப் எனக் குறிக்கின்றனர். குறைந்தது 20 உறுப்பினர்களாவது வேண்டும். அதில் 5 ஆவது பெண்கள் வேண்டும்.

முன் பத்திகளில் மேல் அமைப்புகள் அதிகாரம் பற்றி சொல்லப்படுகிறது.

13. விங்ஸ் என கேடர் பிரிவுகள், லாயர் , டாக்டர், வகுப்பு இணக்கம் என்று..

14ல் செண்டர்கள் தத்துவ மய்யம், ஆவண மய்யம், வெளியீடுகள் மய்யம், பரப்புரை தகவல் மய்யம் என்கிற ஏற்பாடு

15ல் சகோதரி அமைப்புகளாக தொழிலாளர், விவசாய, பெண்கள், மீனவர், மாணவர், கலை இலக்கியம், அரசு ஊழியர், சிறுபான்மையினர், குழந்தைகள் விழிப்புணர்வு

16 ல் எவர் உறுப்பினர் ஆகலாம் எனச் சொல்கின்றனர்

Men and women who are not less than 18 years, do not belong to any other political party or caste organisation, and have accepted the aim and objectives of this party, its work programmes, its constitution, Rules ans regulations, and come forward to work in it shall become its members

ரூ 5 செலுத்தி அடிப்படை உறுப்பினராக ஓராண்டு..

ஆக்டிவ் உறுப்பினர் தகுதி பெற நிபந்தனைகளை போட்டுள்ளனர். கட்சிப் பணிகள், பயிற்சி, அம்பேத்கர் கோட்பாடுகள், பத்திரிகை, பெண்களுக்கு எதிரான குற்றமின்மை, போதை பழக்கமின்மை போன்றவை சொல்லப்பட்டுள்ளன.

மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பித்தல் நடைமுறை.

பின்னரான ஷரத்துக்களில் உறுப்பினர் உரிமை, கடமைகள், நீக்கம் பற்றி பேசப்பட்டுள்ளது.

வங்கிக் கணக்கு பொதுச் செயலர் பொறுப்பில், முழுநேர ஊழியர் நியமனம் பொதுச் செயலரால், ஒழுங்கு நடவடிக்கை எவை போன்றவை உள்ளிட்டு மொத்தம் 37 ஷரத்துகள் இருக்கின்றன.

2-4-2026

ap 3

அப்துல் காபர் கான்- எல்லை காந்தி

கடவுளின் சேவகர்கள் என்றால் விடுதலை வரலாற்றில் நினைவிற்கு வரும் பெயர் கான் அப்துல் காபர் கான். பள்ளிக்கூடம் அவரை எல்லைபுற காந்தி- frontier Gandhi எனச் சொல்லிக் கொடுத்திருக்கும்.

கான் சகோதரர்கள் குறித்து மகாதேவ தேசாய் எழுதியிருக்கிறார். டெண்டுல்கர் 600 பக்க அளவில் காபர் கான் பற்றி பெரிய நூல் எழுதியுள்ளார். இவை இணையத்தில் கிடைக்கும். கண்களில் பலமுள்ளவர்களால் பார்க்க படிக்க முடியலாம். கான் குறித்து பலர் எழுதியுள்ளனர்.

ராஜ்மோகன் காந்தி எழுதிய நூல் Ghaffar Khan Non Violent Badshah of the Pakhtuns- பெங்குவின் 2004ல் கொணர்ந்தனர். அமேசானில் ரூ 400 க்கு கிடைக்கும். 300 பக்க அளவிலான கச்சிதமான நூல்.

பக்தூன்களின் வரலாறு கலாச்சார பின்னணி, கான் பிறப்பு வளர்ப்பு- குடும்பப் பின்னணி, வடமேற்கு மாநிலங்களில் பிரிட்டிஷ் எதிர்ப்பில் பத்தான்களை அகிம்சை வழியில் திரட்டிய அரும் பெரும் சாதனை, காந்தி- நேரு, ஆசாத்- அன்சாரி, தாகூர் என சேர்ந்து செயல்படக் கிடைத்த வாய்ப்பு, சிறைவாச துன்பங்கள், நாட்டு பிரிவினைத் துயரம், பாகிஸ்தான் ஆட்சியாளர்களுடன் போராட்ட வாழ்க்கை என இந்நூல் சித்தரிப்புகளைச் செய்கிறது.

வழக்கம் போல, ராஜ்மோகன் எழுத்தில் கொணரும் சுவையான செய்திகள் இருக்கவே செய்கின்றன. கொஞ்சம் சொல்லப் பார்க்கிறேன்.

ஹசாரிபாக் சிறை என்றாலே கொடுமைதான் போலும். ஜெயப்பிரகாஷ் நாரயண் கூட அங்குதான் அவதிப்பட்டு, சாகச தப்பித்தலை செய்தார். கான் அப்படியல்ல. தனி கொட்டடி. எவர் முகமும் பார்க்க முடியா முதல் 6 மாதங்கள். வெளி உலகம் பற்றி முழு இருள். பின்னர் வெளிச்சம் வரலானது. அழகான தோட்ட பராமரிப்பு. பீகார் பிராம்மணர் ஒருவருக்கு, தன் கையால் பெறப்பட்ட பப்பையாவை கான் தருகிறார். கத்தி வேண்டுமே, கீறி சாப்பிட. உங்கள் கத்தி மாமிசம் பட்டதாக இருக்கும் வேண்டாம் என்கிறார் அந்த பிகாரி பிராம்மணன். கான் சிரித்துக்கொண்டே, நீங்கள் எப்படி சிறைக்கு என பேச்சு

கொடுக்கிறார். கொலை செய்ததால் வந்த விஷயம் அறிந்து பெரிதாக சிரிக்கிறார். மனிதக் கொலை கத்தி மாமிசம் அறியா போலும்...

கானின் குழந்தைகள் அப்போதுதான் லண்டனிலிருந்து வந்துள்ளனர். பிர்லாவும் அவரது துணைவி ஜானகிதேவியும் அழைத்துப் போய் உபசரிக்கிறார்கள். இன்னும் கான் அவர்களை பார்க்கவில்லை. வார்தாவில் காந்தியுடன் இருந்தார் கான். வழக்கம்போல விடியற்காலை எஸ்பி போலிஸ்களுடன் வந்தார், கானை அழைத்துச் செல்ல.

காந்தி, எஸ்பி யிடம், நீங்கள் அனுமதித்தால், கான் தன் குழந்தைகளை பிர்லா வீட்டில் பார்த்துவிட்டு, உங்களுடன் உடனேயே வந்துவிடுவார் என்கிறார். கான் எந்த வேண்டுகோளையும் வைக்கவில்லை. வேன்வரை காந்தி வந்து, குழந்தைகளை பார்த்துவிட்டு செல்லுங்கள் என்கிறார். குழந்தைகளை தழுவிவிட்டு, விடைபெறுகிறார் கான். ஜானகிதேவி விழி நிறைய கண்ணீர். கடவுளின் விருப்பம் உள்ளே இருக்க வைப்பது. சங்கடம் வேண்டாம் எனக் கான் தன் உயரத்துடன் , திடமான மனதையும் வெளிப்படுத்தி விடை பெறுகிறார்.

பத்தான்கள் என்றால் ஆயுத வழி பலம் என்கிற பண்பை, தன் பெரும் உழைப்பால் பக்குவமாக மாற்றியவர் காபர் கான். பிரிட்டிஷ் காரர்களுக்கோ எப்போதும் சந்தேகம். ஜாலியன் வாலாபாக் மைக்கேல் ஓ டயர், கான் பற்றி சந்தேகப் பார்வையை வெளியிட்டார். அவர் அகிம்சையை காந்தியுடன் சேர்ந்து கொண்டு வெளிப்பேச்சிற்கு செய்கிறார். ஆனால் அவரது நோக்கம் , வடமேற்கில் கம்யூனிஸ்ட் ராஜ்யம் கொணர்வதே என்றார் டயர். ‘அகிம்சை பேசும்’ இந்த பத்தானால், வாள் வீசும் பத்தான்களைவிட ஆபத்து அதிகம் என்று உளவுத்துறை குறிப்புகள் சென்றதாம்.

1934ல் வார்தாவில் கான் இருந்தபோது, ஏன் கான் காங் தலைவராக ஆகக் கூடாது என்ற விவாதமும் எழுந்தது. கான் வடமேற்கு என் எல்லை. அதற்கு முழுநேரப்பணி போதும். மேலும் என் இயல்பு soldierக்குரிய ஒன்று. நாங்கள் khudai khidamatgar- கடவுளின் சேவகர்கள் எனச் சொல்லி தலைமைப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தாராம்.

அந்த அமைப்பில் கூட தேர்ந்தெடுக்கப்படும் தலைவர் என்பவர் மன்னரல்ல, அந்த பாணி கூடாது என நினைத்தார் கான். மூன்று ஆண்டுக்கு செயலர் என்றால், மக்கள் விரும்பி திரும்ப தேர்ந்தெடுக்கட்டும். இதன் பொருள்வாழ்நாள் உரிமையல்ல

என்றாராம். எதன் பொருட்டு, எவ்வளவு காலம் பொறுப்பு என்பதறிதல் அவசியம் என அவர் உணர்த்தியுள்ளார்.

பாட்னா, கயா, அலகாபாத் என அவர் பேசிய கூட்டங்களில், பதான்கள் பற்றிய பேச்சு வந்தது. கான் அளித்த பதில் , அவர்கள் எவ்வளவு உறுதியாக விடுதலைப் போரில் நிற்க விரும்பினார்கள் என்பதைக் காட்டும். கான் பதிலில் “ slavery a curse, when a Pathan child saw an Englishman, it exclaimed, oh, you are still here” என்கிற உறுதியை அஞ்சாமையை காணலாம்.

பிரிட்டிஷ் லிபரல் கட்சி எம்பி ராபர்ட் பெர்னேஸ், பெஷாவரில் கானை சந்தித்து உரையாடும்போது கான் அவரிடம் தெளிவு படுத்திய வரிகளை ராஜ்மோகன் தந்துள்ளார்.

I do not hate British, I have received no money from Russia; I teach the Red shirts to love their neighbours and speak the truth; I am doing my best to teach the gospel of non violence to the Muslims

அவருடன் உரையாடிய பின்னர் அந்த லிபரல் எம்பியின் மனப்பதிவு

Khan a kindly gentle rather a lovable man..

இப்படியான உயர்ந்த மனிதர்களின் நினைவு கிடங்குதான் இந்திய விடுதலை இயக்க நாட்களும், moral politics ம்...

இந்நூலை தந்த ராஜ்மோகனுக்கு நன்றி..

3-4-2026

இளைஞர்களாக , பல்வேறு தொழிற்சங்கங்களிடையே , என் போன்றவர் பயணிக்கத் தொடங்கியபோது, மூத்த தோழர்களாக வேதையன், புலவர் அ ப பாலையன், மறைந்த பேரா வி ராமசாமி, வங்கித் தலைவர் நித்தியானந்தம் இருந்தனர்.

தோழர் வேதையன் AITUC தலைவர்களில் முக்கியமானவர். தோழர் ஏ எம் கோபு அவர் மீது மிகுந்த நேயத் தோழமை கொண்டிருந்தார். திருவிக எழுத்துக்களை தோழர் வேதையன் தான் அறிமுகப்படுத்தினார். என் மீது மிகுந்த கரிசனம் கொண்டவராக , தட்டிக்கொடுப்பவராக, எப்போதும் தோழர் வேதையன் இருந்தார். ஈழப் போராளி உமாமகேஸ்வரன் கூட்டத்தில், பெரும் தமிழறிஞர் அய்யா சரவணத் தமிழன் அவர்களுடன் உரையாற்ற எனக்கும் வாய்ப்பை தந்தவர். அவர்களின் TCMF கூட்டங்களுக்கு தவறாமல் என்னை அழைத்துக் கொண்டிருந்தார்.

புலவர் அ ப பா தொழிற்சங்கத் தோழமையுடன், கலை இலக்கிய தொண்டில் சிறப்பான பங்களித்துக்கொண்டிருந்தார். எப்போதும் அன்பு ததும்ப உற்சாகப் படுத்துவார். வ சோ ஆண்கள் பள்ளி நூலகத்தை பயன்படுத்த பெரும் உதவி செய்தவர் அ ப பா. கலை இலக்கிய முகாம்களை வாய்மை, பாரதிபித்தன் வைத்து நடத்தியவர். கம்யூனிஸ்ட் இயக்கம் மீது தீரா காதல் நிறைந்தவர். பல நூல்களை எழுதியவர்.

நித்தியானந்தம் வங்கி இயக்க முன்னோடி. ரகு போன்றவர்களுடன் இணைந்து தொழிலாளர் மத்தியில் புகழ் பெற்றவர். குழந்தை மனம் கொண்ட , அஞ்சாமல் நின்ற பெரும் போராளி. கூட்டுறவு இயக்கத்தின் முன்னோடி.

பேரா ராமசாமி அவ்வூரின் intellectual face ல் ஒருவர். தோழர் தா பாண்டியனுடன் நெருக்கமாக இருந்தவர். கல்லூரியில் மார்க்சிய நூல்கள் இடம் பெற செய்தவர். கல்லூரி நூலகத்தை எனக்கு திறந்து விட்டவர். பெரும் அன்புக்காரரர். இவர்கள் அனைவரும் CPI சார் தொழிற்சங்க , மத்திய வர்க்க முகங்களும் கூட.

தோழர் கி வெங்கட் சி அய் டி யுவின் முகமாக இருந்தார். தொழிற்சங்க கூட்டமைப்பு அவரின் பெரும் தோழமையுடன் தான் 1978-79ல் தொடங்கப்பட்டது. எனக்கு சிபிஎம் நூலகத்தை திறந்து கொடுத்தவருள் வெங்கட்டும் ஒருவர். கறாரான, ஆனால் மிக மிக தோழமை நேயம் கொண்ட முக்கியத் தலைவர் கி வெ.

சிவ இளங்கோ சங்கம் சார்ந்த தாசில்தார் சுப்பிரமண்யன் அப்போது மிக மூத்தவராக இருந்தார். இன்னும் பேரா அறிவழகன் திக சார்பு என மூத்தவர் பலர் இருந்து, இளம் தோழர்களை ஊக்குவித்தனர். 50க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்களை இணைக்க முதல் கையெழுத்து போட்டு அழைப்பு கொடுத்தவர் 25 வயதே நிரம்பிய , பொன்னிற பரோபகாரி தோழர் ராமதுரை. 46 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த தொடக்க கூட்டத்திற்கு வந்தவர்கள் புகழ் வாய்ந்த தொழிற்சங்கத் தலைவர்கள் ஆர் கே, கே எஸ் கே.

சரி. ஏன் இதெல்லாம் இன்று.. புலவர் அ ப பாலையன் எழுதிய ' பழந்தமிழில் புதிய பார்வை" என்கிற நூல் வாசிப்பு என்னுள் கிளர்த்திய பழம் நினைவுகள் 'பேராண்டி'. அ ப பா இந்நூலை அவர் வெளிவந்தவுடனேயே, 2007 ல் எனக்கு அளித்தார். அந்நூலை திரும்ப எடுத்து வாசிக்கும் போது, அவ்வூர் நினைவுகள் மிதக்கலாயின.

அ ப பா அவர்களின் இந்நூலில் 14 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. பொருள்முதல் பார்வையில் இலக்கியங்களை அணுகி பொருள் கொள்ள முடியாதா என்ற சோதனையை திறம்பட அவர் செய்திருப்பார். காலம் காட்டும் சமூகத்தன்மை, பழந்தமிழகத்தில் கல்வி அனைவருக்கும் இருந்ததா, பெண்டிர் நிலையென்ன, இலக்கியங்கள் பேசும் விழுமியங்கள், பொருள்முதல் சார்வாகர் கண்ணோட்டம், இல்வாழ்க்கை இயல்புகள் போன்ற பல 'தீம்களில்' அ ப பா எழுத்தும் கருத்தும் சென்றிருக்கும்.

குறுந்தொகைப் பாடல் 40- யாயும் ஞாயும், நற்றிணைப் பாடல் 45 இவளே கானல் நண்ணிய - இரண்டும் இனக்குழுவின் எச்ச சமூக காதல் உரிமையையும், பின் வந்த பிரபுத்துவ சமுதாய வர்க்க ஏற்ற இறக்கத்திற்கேற்ப மண முறைகளும் உருவானதை அ ப பா விளக்கித் தந்திருப்பார்.

உழவர் பெருமக்களை அரசன் வதைகளிலிருந்து காத்து நின்ற பாவலர்கள் வெள்ளைக்குடி நாகனார், ஆந்தையார் பற்றி பேசியிருப்பார்.

புறநானூற்றுப் பாடல்கள் நாத்திகம் பேசியுள்ளன. பக்குடுக்கை நண்கணியாரை சாருவாகர் கருத்தினராக அ ப பா சொல்கிறார்.

பழந்தமிழகத்தில் சங்க முற்காலம்- பிற்காலம் கல்வி வாய்ப்புகள் பற்றி ஆய்விட்டு, பாகுபாடின்றி கல்வி வாய்ப்பு இருந்ததாக உணரமுடியவில்லை என்கிற முடிவிற்கு வருகிறார்.

முன்னோர் போதித்த விழுமியங்களை பாடல்கள் வழி அ ப பா தருகிறார். பெண்டிர் நிலையிலும் ஏற்ற இறக்க- வளமை, வறுமை- இருந்த தன்மை குறித்து பேசும் பாடல்களை சுட்டிக் காட்டியுள்ளார். ஆணும் பெண்ணும் நிகர் என ஆணினம் மதிக்க கற்க வேண்டிய அவசியத்தை இக்கட்டுரையில் அ ப பா சொல்லப் பார்க்கிறார்.

பசுவும் பார்ப்பாரும் கட்டுரையில் வடமொழி நுழைவு, வடமொழிவாணர் செல்வாக்கு, நால் வர்ண கோட்பாடு, வேள்விகளின் செல்வாக்கு, பசு உயர்த்தப்படுதல் போன்றவை விவாதிக்கப்படுகிறது. புத்தமதத்தை ஓங்கச் செய்த அசோகர் கூட பசுவதை தடையை செய்யவில்லை என்பதை கோமாதா அரசியல் நூலிலிருந்து காட்டுகிறார் அ ப பா.

புறநானூறு தொடங்கி பாரதி வரை பொருள்முதவாத கருத்துக்கள் எவ்வாறு பாடல்களில் காணக்கிடைக்கின்றன என தனிக் கட்டுரையில் விவாதிக்கிறார்.

தேர்ந்த ஆய்வு கட்டுரைகளின் தொகுப்பான நூல்..அ ப பாவிற்கு என் அன்பும் நன்றியும்..

4-4-2026

ap 5 தமிழ்நாடு தொழில் வளர்ச்சி

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கண்ட மாநிலம் எனச் சொன்னால் மிகையாகாது. பெண் தொழிலாளர் பங்கேற்பும் குறிப்பிட்டு சொல்லப்படவேண்டிய ஒன்று.

மிக வளர்ந்த நிதி தலைநகரத்தைக் கொண்ட மராட்டிய மாநிலத்தைவிட இங்கு ஆலைகள் கூடுதலாக இருக்கிறது. தமிழ் நாட்டில் 31517 ஆலைகளில் 27.7 லட்சம் தொழிலாளர்கள் என்கிற விவரத்தை மாநில அரசாங்கம் தருகிறது. மகாராஷ்ட் ரத்தில் 20739 ஆலைகளில் 23.7 லட்சம் தொழிலாளர்கள், குஜராத்தில் 24811 ஆலைகளில் 23.3 லட்சம் தொழிலாளர் இருப்பதாக அறிகிறோம்.

தமிழ்நாட்டில் இந்த 31500 ஆலைகளில் 5000 தொழிலாளர்களுக்கு மேல் வேலை தரும் கம்பெனிகள் 255 தான். இது மகாராஷ்ட் ராவில் 48, குஜராத்தில் 57. கர்நாடகத்தில் 11390 கம்பெனிகளில் 151ல் 5000க்கும் மேல் வேலை என்பது கவனிக்கத் தகுந்த ஒன்று.

தமிழ்நாட்டில் 1000 பேருக்கு மேல் வேலை தருகிற ஆலைகள் 1576 தான். மகாராஷ்ட் ராவில் 648, குஜராத்தில் 629. இங்கும் கர்நாடகா விவரம் 629 என்பது பாராட்டிற்குரிய ஒன்று.

ஆட்டோமொபைல், கட்டுமானம், டெக்ஸ்டைல்ஸ், எலக்ட் ரானிக்ஸ், எம் எஸ் எம் இ சிறு தொழில்கள் என சில துறைகள் பன்னாட்டு கம்பெனிகள், உள்நாட்டு முதலாளிகள் முதலீடுகளால் நடத்தப்பெறுபவை. தமிழகத்தில் regional capital வலுவாக இருப்பதைக் காணலாம்.

இந்த 31000 ஆலைகளின் தொழிலாளர் நலன் எப்படி என விவரத்தை என்னால் அறிய முடியவில்லை. முதலீட்டாளர் சொல்லக்கூடிய கஷ்டங்கள் பற்றி தனியான அறிக்கை ஏதுமிருக்கிறதா எனத் தெரியவில்லை.புதிய ‘லேபர் கோடுகள் -சட்ட அம்சங்கள்’ பணிபுரியும் தொழிலாளர்களை எந்த எந்த வகையில் பாதிக்கும் என 1000க்கும் மேற்பட்டவர் வேலை பார்க்கும் அந்த 1500 கம்பெனிகளிலாவது ஆய்விருக்கிறதா எனத் தெரியவில்லை. பொதுவான பாதிப்புகள் பேசப்படுவதை கேட்டு வருகிறோம். தனித்த துறையில் , அங்கு இருக்கும் தொழிற்சங்கம் சொல்லக்கூடிய பாதிப்பு எவை, எவைகள் களையப்பட வாய்ப்பு இருக்கிறது என்ற specialised அணுகுமுறை உதவக்கூடும்.

ஊதிய முறைகள் எப்படி அமைகின்றன, நலன்கள் துறைவாரியாக எப்படி இருக்கின்றன போன்ற விவரங்களை அரசாங்கம் பொருட்படுத்தி தருவதில்லை. ஆங்காங்கே தேடிப் பார்த்து அறியும் வகையில் பார்த்தால்..

ஆட்டோமொபைல் தொழிலில் சங்கம் சார் நிரந்தர தொழிலாளர் 25000-45000 பெறுகிறார்கள், அதுவே ஒப்பந்த தொழிலாளர் என்றால் 12000-20000 வரைதான் கொடுக்கப்படுகிறது என்கிற செய்தி கிடைக்கிறது.

திருப்பூர் டெக்ஸ்டைல்ஸ் பகுதியில் பெண் தொழிலாளர் 8000-15000 வரை கொடுக்கப்பட்டு பெரும் சுரண்டலுக்கு உள்ளாக்கப்படுவதையும் அறிகிறோம்.

எலக்ட் ரானிக்ஸ் துறையும் 12000-18000 என்கிற அளவிலேயே நிற்கிறது. கட்டுமானத் தொழிலில் தினக்கூலி 600- 900/ 1000 என்ற அளவில் இருப்பதை அறியமுடிகிறது.

MSME முதலீட்டாளர் பெரும்பாலும் அதிருப்தியில் இருப்பவர்கள். அங்கு தொழிலாளர்க்கு வேலை உத்தரவாதம் நிச்சயமில்லா நிலைதான். தொழில் லாபச் சூழல் இருந்தால் மட்டுமே வேலை என்பதே நியதியாக இருக்கும். சிறு தொழில்களில் அப்படித்தான் இருக்கவும் முடியும். இப்பகுதியில் 10000-18000 என ஊதியம் கொடுக்கப்படுவதாக அறிகிறோம்.

ஒரே தொழிலில் ஒரே மாதிரி வேலைக்கு வெவ்வெறு வகை ஊதியம் என்பது தொடர்ந்து நிலவுகிறது. Informalisation of job market , குறைந்த சமூக பாதுகாப்பு என்பதும் பல ஆலைகளில் இருக்கின்ற நிலைதான்.

டிவிஎஸ், முருகப்பா, சன்மார், ரானே, எம் ஆர் எப், இந்தியா சிமெண்ட்ஸ், லஷ்மி மில்ஸ், கேஜி, சக்திவேல் எக்ஸ்போர்ட்ஸ், ராமசாமி பம்ப்ஸ், பாப்பி கார்மெண்ட், அசோக்லேலண்ட், சுந்தரம், பாரத்போர்ஜ், பிரேக்ஸ், வேம்பு, சிபுலால், ஹூண்டாய், பாக்ஸ்கான், ராம்கோ, எல் அண்ட் டி, சயிண்ட் கோபைன், பிரேக்ஸ் , கேடர்பில்லர், சிவகாசி பிரிண்ட்ஸ், வெல்லூர் லெதர் போன்ற 50 க்கும் மேற்பட்ட economic power houses இருப்பதாக தமிழக தொழில் சர்வேக்களில் பார்க்கிறோம். இங்கெல்லாம் தொழிற்சங்கம், தொழிலாளர் பிரச்சனை- அரசின் அணுகுமுறை எப்படி என தனித்து பார்க்க வேண்டியுள்ளது.

தமிழ்நாட்டில் crony capitalism visible ஆக இருக்கிறதா என்ற கேள்விக்கும் பதில் தேட வேண்டியுள்ளது. அரசியல் கட்சி தொழில் முதலாளிகள் nexus பற்றி.. பாஜக என்றால் அதானி, அம்பானி எனச் சொல்வது போல்,

இங்கு திமுக- அதிமுகவுடன் நேரடியாக எந்த கார்ப்பரேட் தொழிலகத்தையாவது சேர்த்து பேசமுடிகிறதா? ஏதாவது கொடுக்கல் வாங்கல் இருக்கிறதா? நன்கொடைகள் போகலாம்.

ஐடி துறை, எலக்ட் ரானிக்ஸ், சினிமாத்துறை, urban real estate வழக்கமாக ஆளுங்கட்சி விசுவாசத்தில் செயல்பட வேண்டியிருக்கலாம்.

Traditional industrial bases political neutrality தமிழ்நாட்டின் சிறப்பு எனச் சொல்லலாம். நன்கொடைகள் ஆளுங்கட்சிக்கு கூடுதலாக தரப்படலாம். ஒப்பந்த தொழில்கள் அரசியல் காற்று அடிக்கும் பக்கம்தான் செல்லும். அதில் பல லேயர்கள் சம்பாதித்யம் பார்ப்பர். வடக்கு முதலாளிகள், பெரும் கார்ப்பரேட்கள் பாஜக ஆதரவை விரும்பவே செய்வர். காங்கிரசிற்கு இன்னும் அதன் விடுதலைக்கால மரபை பேணும் old industrial houses support இல்லாமல் இல்லை.

இடது கட்சிகள் பெரும்பாலும் தொழிலாளர் தருவதில், சிறு நிறுவனங்களிடம் பழக்கத்தில் பெறக்கூடும்.

தமிழ்நாட்டின் இன்னுமொரு சிறப்பு இங்கு நிலவும் அரசியல் மோதல் not at all disrupting capital..திமுகவையோ அதிமுகவையோ பெரு முதலாளிகளின் கட்சி என வரையறுக்க முடியாது. அதேநேரத்தில் முதலாளிகளுக்கு எதிரான கட்சிகள் எனவும் வரையறுக்க முடிவதில்லை. இந்த balanceல் தான் தமிழ்நாட்டின் தொழில் உறவு கொள்கைகள் எவர் ஆட்சிக்கு வந்தாலும் அமைவதாக இருக்கும். எனவே பாஜக அல்லது காங் ஆட்சிக் கால எதிர்ப்பைப் போல, தொழிற்சங்கங்களின் தமிழ்நாட்டிற்கென பொது வேலைநிறுத்தங்கள் அமையாமல் போவதையும் காண்கிறோம்.

மத்திய அரசின் வழியில் தான் Ease of doing business concessions தொழில் முதலீட்டாளர்க்கு தமிழ்நாட்டிலும் தரப்பட்டு வருகின்றன. முதலீடுகளை இழுப்பதற்கான போட்டியில் மாநிலங்கள் இறங்க வேண்டியுள்ளது. மத்திய மாநில அரசுகளிடம் industrial policyல் பெரும் மாறுபாடுகள் இருப்பதில்லை. மாநில அரசுகள் மக்களிடம் தங்களின் நலத்திட்டங்கள் வழி நெருக்கமாக இருந்து சமாளிக்கின்றன. அவை good or bad economics என்பதில் பெரும் விவாதங்கள் நடைபெற்று வருகின்றன..

நலத்திட்டங்களுடன் கூடிய முதலாளித்துவ post caste capitalism என்கிற வகையில் தமிழ் சமூகம் போய்க் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது...

5-4-2026

ap 6 தமிழ்நாட்டில் நிலவுடைமை

தமிழ்நாட்டில் நிலவுடைமை குறித்து பார்க்கப்போனால், மிகுந்த அசமத்துவ சமூகமாக தெரியவரும்.

உடைமையாளர்களை Marginal, Small, Semi medium, medium, large என வகைப்படுத்தி சர்வே செய்கின்றனர். அதாவது ஒரு ஹெக்டேருக்கு கீழ், 1-2, 2க்கு மேல்-4 க்குள், 4-10 , 10 ஹெக்டேருக்கு மேல்.

நிலவுடைமையாளர்களில் 92.75 சதத்தினர் ஒரு ஹெக்டேருக்கு கீழ் வைத்திருப்பவர்கள். இவர்கள் எண்ணிக்கை (number of households) 90,61,000. இவர்கள் அனைவரும் மார்ஜினல் பிரிவில். சிறு விவசாயிகள் 4.93 சதத்தினர்- எண்ணிக்கையில் 4,81,300 குடும்பங்கள். செமி மீடியம் 1.71 சதத்தினர்- 1,67, 000 குடும்பங்கள். மீடியம் (4 ஹெக்டாருக்கு மேல்) 0.54 சதத்தினர்- 52400 குடும்பங்கள். பெரிய உடைமையாளர் 10 ஹெக்டாருக்கு மேல் 0.08 சதத்தினர்- 7700 குடும்பங்கள்.

இந்த உடைமை குடும்பங்களில் 30 சதத்தினர் SC பிரிவினர், 68 சதம் OBC பிரிவினர். இந்த சர்வே எடுக்கப்பட்டு 8 ஆண்டுகள் ஆகிறது. அதற்குப் பின்னர் சர்வே ஏதும் என் கண்ணில் படவில்லை.

நில உடைமையாளர்க்கு மாத வருவாய் எப்படி என்றும் அந்த சர்வே சொல்கிறது. 13000- 50000வரை உடைமைக்கேற்ப இது காட்டப்படுகிறது. அநேகமாக 70 சதம் உடைமையாளர் ஏதோவொருவகை கடன்காரர் பட்டியலில் இருப்பதாகவும் தெரிகிறது.

ஓபிசிக்களில் 4 அல்லது 5 ஆதிக்கசாதியாரிடம் உடைமை எண்ணிக்கை கூடுதலாகவுள்ளது. நடுத்தர, பெரிய அளவை இவர்கள் ஆதிக்கம் செய்வதால் அரசியல், சமூக, பொருளாதார செல்வாக்கும் அதற்கேற்ப அமைந்துள்ளது.

நிலவுடமை குறித்த அசமத்துவத்தை

Most households with very little land vs few control most valuable land என்பதிலிருந்து அறிய முடியும். Non equal that is unequal land society என்றாலும் முழு நிலபிரபுத்துவ சமுதாயம் (feudal society) என்கிற கெடுபிடி கொடுமைகள் குறைந்த (போராட்டத்தால்) - முதலாளித்துவ வளர்ச்சி நோக்கிய சமூகம் எனலாம். இன்னும் தமிழ்நாடு மேற்கு நாடுகள் போல் முழு முதலாளித்துவ சமூகமாகவும் மாறிவிடவில்லை என்கிற நோக்கும் மனங்கொள்ளத் தகுந்தது.

டெல்டா பகுதிகளை நிலச்சுவான் தார் சமூகமாக பார்த்தால், மேற்கு தமிழகம் பணக்கார விவசாயிகள்,வட தமிழகம் சாதிசார் நடுத்தர விவசாயிகள், தெற்கு தமிழகம் caste controlled rural land holdings என வகைப்படுத்தி சொல்லக்கூடும். இதில் வேறுபடுபவரும் இருக்கலாம்.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு 100 நிலவுடைமையாளர்களில் 93 பேர் குறு நில சொத்து, 6 பேர் நடுத்தர சொத்து, ஒருவர் அதிக சொத்து என்ற அசமத்துவம் இருப்பதைக் காண்கிறோம்.

மாவட்டங்களில் நெல் உற்பத்தி எனப்பார்த்தால் 6 லட்சம் டன்னுக்கு மேல் தஞ்சாவூர், திருவண்ணாமலை, திருவாரூர் தான் உள்ளன. ஏறத்தாழ 17 மாவட்டங்களில் ஒரு லட்சம் டன் கூட விளைச்சல் இல்லை. 50 ஆயிரம் டன்னுக்கு கீழ் 10 மாவட்டங்கள், நீலகிரி, சென்னை, கோவையில் 5000 டன் கூட இல்லை என்கிறார்கள். மொத்தமாக 70 லட்சம் டன் விளைச்சலில் 8 மாவட்டங்கள் பாதியை தந்துவிடுகின்றன.

Real estate எவர் கட்டுப்பாட்டில், கோயில் சொத்துக்கள் எப்படி, அரசாங்க கட்டுப்பாட்டு நிலங்கள் எப்படி , தொழிலதிபர் கட்டுப்பாடு எப்படி என்ன போன்ற பல அம்சங்களும் பார்க்கப்பட வேண்டியுள்ளது.

எனவே சாதி வாரி கணக்கெடுப்பு என்பதுடன் சொத்துவாரி கணக்கெடுப்பும் தமிழ் சமூகம், இந்திய சமூகம் பற்றிய புரிதலுக்கும், அரசாங்கம் எப்பகுதியினர்பாற் கூடுதல் கவனங்கொள்ளவேண்டும் என்பதற்கும் உகந்ததாக அமையும்.

6-4-2026

ap 8

எனது தொழிற்சங்க நூல்கள்..

1. திருவாரூர் தொழிற்சங்க கூட்டமைப்பு

அவ்வமைப்பின் 5 ஆம் ஆண்டின்போது , அதன் தோற்றம் வளர்ச்சி குறித்து சுருக்கமாக செய்யப்பட்ட பதிவு. கட்டுரை அளவிலான குறு நூல். 1983-84ல். அதன் பிரதி ஒன்று கூட தற்போது என்னிடமில்லை. தோழர் கி வெங்கட் உற்சாகப்படுத்தி எழுத வைத்தார்.

2. இந்திய தொழிற்சங்க இயக்க வரலாறு

அமெச்சூராக நான் எழுதி பார்த்த நூல். மறைந்த குடந்தை தோழர் ஜெயபால் அறிவானந்தர் அச்சகத்தில் முயற்சித்து கொணர்ந்த நூல். தோழர் முத்தியாலு அப்போது NFTE E3 மாநிலச் செயலர், அணிந்துரையை மே 1986ல் எழுதியுள்ளார். மே தின நூற்றாண்டு வெளியீடாக, தஞ்சை இதழான ஒற்றுமைக்குரல் வெளியிட்ட நூல்.

3. Challenge: The future of Indian Trade Union Movement

மே 1987ல் நடந்த சர்வதேச பொது ஊழியர் மாநாட்டில் வாசிக்கப்பட்ட ஆய்வுத்தாள். இதில் தான் class plus caste CLAST என்கிற கலைச்சொல்லை - கருத்தாக்கத்தை எடுத்தாண்டிருந்தேன். வங்கித் தலைவர் தோழர் ரகுபதி முன்னுரை எழுதினார். பெரும் விவாதமாக எடுத்துச் செல்ல வேண்டிய நூல் என்ற கருத்தை தோழர் வெங்கட் சொல்லியிருந்தார்.

4. (ராஜிவ் காலத்தில் வந்த) புதிய கல்விக் கொள்கை குறித்த விமர்சன குறிப்புகள்

மறைந்த பேரா வி இராமசாமியும், நானும் இணைந்து எழுதிய நூல். வெளிவந்த உடனேயே 1000 பிரதிகள் போன சிறு பிரசுரம். செந்தமிழ் அச்சக தோழர் செல்வமணி பதிப்புரை எழுதினார்.

5. தனியார்மயம் தடுத்திட

1991ல் LPG சீர்திருத்தங்கள் வந்தபோது, பல்வேறு பொதுத்துறைகள் மீது விழக்கூடிய ஆபத்துக்களை சுட்டி- defend expand democratise PSUs என எழுதப்பட்ட பிரசுரம். திருவாரூர் டெலிஏஜ் வெளியீடாக வந்து , உடன் 500 க்கும் மேற்பட்ட பிரதிகள் தொழிலாளர்களிடம் சென்று சேர்ந்தன

6. Selected Ideas of O P Gupta

லக்னோவில் நடந்த NFTE பெடரல் கவுன்சில் ஜூலை 1999ல் வந்த மிக முக்கிய ஆவண நூல் எனலாம். தோழர் குப்தாவின் எழுத்து களஞ்சியம் மிகப் பெரிது. அதை 1946-66 என தமிழில் தோழர் வீரபாண்டியனும், ஆங்கிலத்தில் 1966-99 என நானும் கொணர்ந்தோம். தோழர்கள் கே எஸ் கே, வீரபாண்டியன் அறிமுகம் எழுதினர். நூல்களை விற்றுக்கொடுத்து மாநிலச் செயலராக ஆர் கே பெரும் உதவி செய்தார். இன்றும் தொழிற்சங்கத்தில் பணிபுரிய வரும் பலருக்கும் உதவக் கூடிய நல் சாளரமாக இந்நூல் இருக்கிறது எனலாம்.

7. Trade Justice in Telecom

NFTE மைசூர் மாநாட்டையொட்டி இந்த ஆங்கில நூல் 2004ல் வெளியானது. சிபிஅய் கட்சியின் ஆங்கில வார இதழான நியுஏஜ் பத்திரிகையில் டெலிகாம் தொடர்பாக- மிக முக்கிய பிரச்சனைகள் குறித்து நான் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு நூல். தோழர்கள் கே எஸ் கே, வீரபாண்டியன் முன்னுரைகள் தந்தனர்.

8. Marxism and Trade Union- Activities in Telecom Sector

தோழர் குப்தாவால் தன்னுடைய தள்ளாத வயதிலும் டெல்லியில் பிரிண்ட் செய்து 2011ல் NFTE மாநில சங்க கட்டிட திறப்பு விழாவிற்கு எடுத்து வந்த நூல். விற்காமல் விடுபட்டுப் போன, ஆனால் மிக முக்கிய நூல். இதில் தோழர்கள் ஜோதிபாசு, ஞானையா, குப்தா, சிசிர் பட்டாசார்யா, ஜெகன், பட்டாபி கட்டுரைகள் இடம் பெற்றன. மத்திய தரவர்க்க ஊழியர்கள் இடதுசாரிகளாக தொழிற்சங்கத்தில் பணியாற்ற நல்ல சாளரம் இந்நூல்.

9. A Booklet on VRS

கோவையில் அக் 2011ல் நடந்த NFTE மத்திய செயற்குழுவின் போது வெளியான நூல். தோழர்கள் சேது, முருகேசன் முயற்சியில் தொகுக்கப்பட்ட நூல். தோழர்கள் குப்தா, மதிவாணன் , பட்டாபி கட்டுரைகள் இடம் பெற்றன. தோழர் எஸ் எஸ் ஜி நூலை பலருக்கும் வாங்கிக் கொடுத்தார்.

10. பென்சன் பிதாமகன் தோழர் குப்தா

தோழர் ஆர் கேவும் நானும் சேர்ந்து எழுதிய முக்கிய நூல். குப்தாவின் மகத்தான பங்களிப்பை பேச உதவும் நூல். தோழர்கள் முத்தியாலு, தமிழ்மணி, மாலி தங்கள் செய்திகளை இந்நூலில் தந்திருப்பர். மாநிலச் சங்கம் வெளியிடாக வந்த நூல். தோழர்கள் காமராஜ், முரளி, நடராஜன் துணை நின்றனர்.

11. தோழர் குப்தாவிடம் கற்றதும் பெற்றதும்

தோழர் குப்தா நூற்றாண்டில் நான் எழுதிய கட்டுரையை , தொழிற்சங்க கூட்டமைப்பில் சிறப்பாக பணியாற்றி வரும் கூடூர் குணா அவர்கள் பொறுப்பில், மைகிராபிக்ஸ் நண்பர்கள் பிரஸ்ஸில் கொணர்ந்த நூல். குப்தா பற்றி பேசுகிற நூல்

துணைநின்ற தோழமைகளுக்கு தலைவர்களுக்கு நன்றியும் வணக்கமும்..

8-4-2026

ap 9

The M’s of Indian Elections

இந்திய மக்கள் தொகை 140 கோடி என்பது பொது புத்தியில் ஏற்றப்பட்டுள்ளது. இந்தியாவில் எல்லோருமே ஏதோ ஒரு வகையில் மைனாரிட்டிகளே. அடையாள அரசியலில் மெஜாரிட்டி என்பதற்கான உருவாக்கம் நடைபெறுகிறது. எப்போதுமே எவரையாவது வந்தேறிகள்- அந்நியர்/ பிறர் எனக் காட்டாமல் இங்கு அரசியல் செய்ய முடிவதில்லை.

தேசத்தின் பெயரால், இனம், மொழி, மதம் இன்னும் சாதி என்கிற எந்த பெயரிலும் இப்படியொரு பெரும்பான்மை உருப்பெருக்கம் செய்திட இந்திய அரசியல் தன்னை prompt ஆக்கிக்கொண்டுள்ளது. இந்திய அரசியலில் ஓரமாக வெவ்வேறு வகை போராட்டங்கள் நடந்தாலும், அரசாங்க அதிகாரத்தை கைப்பற்ற உள்ள மய்ய பொதுவழியாக தேர்தல்கள் அமைகின்றன. எனவே தேர்தல் அரசியலுக்கு உகந்த மாடெல்கள் இங்கு என்ன என்பதே பெரும் தொழிற்பாட்டு போட்டியாகின்றன.

அரசியல் செய்ய வருபவர்களின் இலக்கே ஆட்சி அதிகாரம்தான். அரசமைப்பை ஏற்று தேர்தல் கமிஷனிடம் பதிவு பெற்றுத்தான் , கட்சிகள் தேர்தல் போரில் ஈடுபடுகின்றன. ஆர் எஸ் எஸ், தி க போன்றவையும் தங்களின் ஆதரவு அரசியல் நிலைபாட்டிற்கு வேலை செய்யாமல் இருக்க முடிவதில்லை. இங்கு மக்கள் செல்வாக்கை ஓர் அரசியல் கட்சி பெறுகிறதா என்பதற்கான சோதனையே அக்கட்சி தேர்தலில் பெறக்கூடிய சதவீதமாக அமைகிறது. அதிகாரம் வெற்றி தோல்வியைப் பொறுத்து அமைகிறது. எனவே தான் ஆட்சி அதிகாரத்திற்கு செல்ல முடியும் என்கிற கட்சிகளின் முண்டியடிப்புகள், சிறு கட்சிகளின் உளவியலிருந்து மாறுபடுகின்றன. தேர்தல்தான் இங்கு கட்சிகளின் இருப்பு வரிசையை நேர் செய்கின்றன.

இந்தியாவில் வயது வந்தோர் வாக்குரிமை , வயதைப் பார்த்து மட்டுமே அரசியல் சாசனத்தால் வழங்கப்பட்டுள்ளது. இப்படி வழங்கப்பட்ட வாக்குரிமையை தக்க வைத்துக்கொள்ளும் புதிய வகை அரசியலும் இப்போது பேர் உரு எடுத்துள்ளது. தான் வாக்காளர் என அவரவர் நிருபித்துக்கொள்ளும் போராட்டத்தை நடத்த வேண்டியுள்ளது. இதற்குக் கூட வட்டம், மாவட்டம் என சிபாரிசு- அல்லது பூத், வட்டம் என பொறுப்பாளர் வாக்காளர் பெயர் இருப்பை தக்கவைக்க போராட வேண்டியுள்ளது. வாக்காளர் ஆகிவிட்டாலும் வயதை தூர

வைத்துவிட்டு, சாதி- மதம்- பணம் என ஏதாவது குறுக்கே வந்து வா என அழைக்கப்பார்க்கிறது. அதையும் தாண்ட வேண்டும்..

இப்படியான காலத்தில் 2024 பொதுத்தேர்தலில் 96.8 கோடி பெயர்கள் வாக்காளர்களாக எப்படியோ முண்டியடித்து இடம் பெற்றுவிட்டார்கள். 2019 தேர்தலில் 89.6 கோடியாக வாக்காளர் இருந்தனர்.

2024ல் இந்த 97 கோடி வாக்களர்களில் வாக்கு செலுத்த வந்தவர்கள் எனப்பார்த்தால் , இதில் 66 சதவீதத்தினர். மீதி 34 சதம் பற்றி ஏன் எதற்கு வரவில்லை என்கிற டேட்டா தனி ஆய்வுக்குரியது. இப்படி வந்த 65 கோடி வாக்காளர்களில் , 543 தொகுதிகளில் எவர் எம்பி ஆகிறார் என்பதே இந்திய அரசியலின் மய்ய சரடாக உள்ளது.

2026 தமிழ்நாடு தேர்தலின் சித்திரம் , மே மாதம் நமக்கு கிடைத்துவிடக்கூடும்.

கட்சிகள் தோன்றிக்கொண்டேயிருக்கின்றன. அது ஜனநாயக நாட்டில் தவிர்க்கமுடியாத ஒன்று. படித்தவர்- படிக்காதவர், ஆண்- பெண், பணக்காரர்- ஏழை, சாதி- மதம் என எவராக எப்பிரிவில் இருந்தாலும் அவரது வாக்கு மதிப்பு சமமானது. அவரவர் அரசியல் பயிற்சி, விருப்பு- வெறுப்பு, விசுவாசம்- எதிர்ப்பு , பொருளாயத அரசியல் சமுதாய பலன்கள் என பல்வேறு அம்சங்களைப் பொறுத்து வாக்குப் போடுவோர் பூத்திற்கு பொதுவாகச் செல்வர். எதுவுமே தோணவில்லை- கண்ணில் பட்ட ஒன்றில் குத்தினேன் என அப்பாவியாக இருப்போரும் இருக்கலாம். தற்குறி என கேலி பேசுவோருக்கும், அவர்களது வாக்குகள் என்கிறபோது அவை அவசியமாகும்.

போராட்டச் சூழல் ஜனநாயக நாட்டில் எப்போதும் நிலவக்கூடிய ஒன்றுதான். போராட்டங்கள் ஆங்காங்கே வட்டார அளவில், அமைப்பளவில் கோபதாபங்களை நியாய நிலையை தெரிவிப்பவையாக இருக்கும். வாக்கு செலுத்தும் மனநிலையை சம்பந்தப்பட்டவர்க்கும்- சிறிய அளவில் சாலிடாரிட் டி- அனுதாப மட்டங்களிலும் அது வெளிப்படலாம். அகில இந்திய அளவு பெரும் போராட்டங்கள் சில நிர்ப்பந்தங்களை உருவாக்கலாம். அதுவே ஒரே காரணியாக செயல்படுமா என்பது விவாதத்திற்குரியதாகவும் உள்ளது. சம்பந்தப்பட்டவர்களின் திருப்தி index than influencing majority voters அதில் அதிகமாக தொழிற்படும். 2026 சட்டமன்ற தேர்தலிலும் இதுவே தான் நிலை. போராட்ட முரண்பாடுகளை சற்று மூடிவைத்துவிட்டுத்தான், அரசியல் தலையாய முரண்பாடு நோக்கி தேர்தல் அரசியல் திருப்பப்படும்.

அரசாங்கத்தில் ஆளவருவோர், தான் எதன் பொருட்டு போராளியான அடையாளங்களை உருபெருக்கினார்களோ அதை அஜெந்தாவாக்கி அமுல் படுத்த நினைப்பர். நிர்வாகியாக செயலாக்கத்தில் எழும் பல்வேறு அரசியல் சமூக பொருளாதார பிரச்சனைகளை அவர்கள் சற்று கடினமாக எதிர்கொள்வர். 'மாரல்' பழக்கம் இருப்பவர்க்கு நிர்வாகம் பெரும் சவாலாக மாறும். மன சாட்சியை மூடிவைப்பவர்களின் நிர்வாகம் எப்போதும் புல்டோசர் மாடலாக அமையும். 'புல்டோசர்கள் அழிப்பு வேலை' என்ற பொது புத்தியை, அவர்களின் அடையாள அரசியல் 'புதிய கட்டுமான வேலை' என விசுவாசிகளுக்கு புரிய வைத்து நியாயம் பேச வைக்கும்.

நிர்வாகியான அரசாங்க அதிகாரத்தார், வாக்கு அரசியல் உள்ள (பெயரளவு ஜனநாயகத்தில் கூட) மக்கள் வாக்கு சக்திக்கு முன்னர் அச்சப்படாமல் இருக்க முடியாது. எல்லா அதிகாரங்களும் பெருமிதங்கள்- தலைக்கனத்துடன்- அய்யத்தையும் அச்சத்தையும் சேர்ந்தே சுமக்கும். Ego- fear இரண்டும் நேர்விகிதத்தில் எப்போதும் தொழிற்படும். 'மிகை அதிகாரம்' எவரையும் நம்பாமல் சந்தேகத்துடன் பயணிக்கும் இயல்பு நிறைந்தது. ஜனநாயகரீதியாக பெறும் அதிகாரம் personality cult ஆகும் போது , அது ஜனநாயகத்துடன் எதிர் விகிதத்தில் பயணிக்கும்.

இந்திய பொதுத்தேர்தல் 2024ல் பாஜக 37 சதம் வாக்குகளை திரட்டியது. காங்கிரஸ் 21.4 சதம். மற்ற அனைத்து கட்சிகளும் 5 சதத்திற்கு கீழே வாக்கு சக்தி பெற்றன. பாஜக கூட்டணியில் 1 சதத்திற்கு கீழ் பெற்ற கட்சிகள் 20க்கும் மேற்பட்டவை. காங்கிரசுடன் பயணித்த கட்சிகளில் ஏறத்தாழ 17 கட்சிகள் ஒரு சதத்திற்கும் கீழே பெற்றன.

திமுக 1.82 சதம், சிபிஎம் 1.76, சிபிஅய் 0.49 சதம், சிபிஎமெல் 0.27 சதம், விசிக 0.15 , எம்டிஎம்கே 0.08 சதம் , பார்வார்ட் பிளாக் 0.04 சதம் என அகில இந்திய அளவில் பெற்றன. அதிமுக 1.39 சதம், நாம் தமிழர் 0.56 சதம் என தன் வாக்கு சக்தியை காட்டின.

நூற்றுக்கணக்கான கட்சிகள் தேர்தலில் நின்று ஜீரோ சதம் பெற்றன.

தேர்தல் விளையாட்டு அரசியல் பெரும் போராக்கப்பட்டுள்ளது. Money- muscle- Machine என பல எம் கள் அங்கே வேட்டையாட வருகின்றன.

இந்த சித்து விளையாட்டு தேர்தல் முறை சமூக பதட்டங்களை தணிக்காமல் உஷ்ணப்படுத்தி வருகிறது. வளர்ச்சியின் பெயரால் வாழ்க்கை சூறையாடல்களையும் செய்து வருகிறது. அதேநேரத்தில்

முற்றிலுமாக மக்களை துச்சமாக நினைக்க முடியாமல் ஏதாவது நலத்திட்டங்களை செய்ய வேண்டிய நிர்ப்பந்தங்களையும் உருவாக்கி வருகிறது..

இந்திய அரசியல் தெளிவைத் தருவது போல் இருந்தாலும், இருளுக்குள் துழாவும் புரியாத்தனத்தையும் அப்புகிறது. அரசியல், சமுக, பொருளாதார என்று புரட்சிகளுக்கு எல்லை வகுப்போர் moral revolution என்கிற திசையை மூடிவிட்டதாகப் படுகிறது. இந்த திறப்புகளால் விடுதலைக்கு முன்னர் செல்வாக்கு அதிகம் பெறா தலைவர்கள் இன்றுக்கான அரசியலில் உச்ச பீடமேற்றப்படும் நிகழ் கலைகள் நடந்துள்ளன. காந்தி பெரும்பாலும் மூடப்பட்டுள்ளார். மாரல் புரட்சி என்கிற திசைகாட்டியவர். திக்கு திசை காணோம்..

Groping in the dark..searching a stick to light…oh my foolishness

29-12-2025

ap 10

The Worrisome IDA Issue

Lakhs of PSU employees, specially the employees and Pensioners of BSNL have been suffering for non implementation of their due IDA for Jan 2026. Already 4 months have gone. The DPE- MOF did not officially communicate any order to freeze the said IDA, as they did during the time of Corona. I do not know why the unnecessary holding of the same…

The communication sent to the Ministries, from the DPE official signed on 27-2-2026, is causing the confusion because of the wordings crafted in that order through para 5. That OM did also get its approval of Govt Secretary of DPE. But certainly Govt Secretary of DPE cannot have powers to override the decisions of Cabinet which only approved 2nd PRC recommendations of 2007 and 3rd PRC recommendations of 2017.

The PSUs , as per the affordability clause of the respective guidelines- issued on the lines of Cabinet approval normally headed by PM of India - can able to implement the scheme of Pay and IDA of 2007 or 2017 as per their eligibility.

DOT and BSNL are implementing the scheme of 2007 Pay and IDA as per the affordability clause of the DPE guideline issued for the same. Here the implementation of IDA is part of the scheme, once affordability clause is there, it can be implemented. No other condition is attached in that cabinet approval or the DPE guidelines issued on that basis.

Similarly many Maharatna profit making PSUs are implementing 2017 scheme of Pay and IDA. Though IDA orders are need to be issued every 3 months by DPE, it does not alter the spirit/ conditions or schematic implementation of the Cabinet approval or the connected DPE OM. Unfortunately the recent DPE order did attach some riders to implement the IDA orders by the Ministries, making the ministries to check the burden , which is not at all a condition in the original OM on cabinet approval.

In the para 5 of DPE om of Feb 27, 2026 the following riders are attached

Before extending DA

-Verify applicability pay scales and corresponding IDA

-Ensure the updated Pay revision status on the PE Survey portal

-Note DPE is computing and notifying the DA rates as per the prescribed formula

But

-the extension and implementation in respect of Individual PSUs, including its financial implications, shall rest with the concerned Ministry

See here , confusion is created by framing the rider like ‘ including its financial implications shall rest with the concerned ministry’.

On seeing and clearing the affordability only 2007 or 2017 scheme of pay and the corresponding IDA is implemented in the respective PSUs. Even the PO by the Ministry is issued on that basis only. The scheme of ‘Pay - IDA’ is in toto implemented. IDA is not like the case of other allowances like HRA/ CCA etc. It is a part of a scheme as per the approval of the cabinet,the connected DPE OM and the respective PO from the Ministry. Why then again this condition of ‘financial implication’ now? It is against the spirit of the cabinet decision.

Moreover, the Cabinet decision dated 19-7-2017 - communicated by DPE regarding 3 rd PRC (I could not take for 2nd PRC) is having this condition already.

Para 4 is saying about the DPE OMs for 3 rd PRC implementation on the basis of cabinet decisions which very much having IDA scheme in that. The para 4 xii is speaking clearly

“ The expenditure on account of pay revision is to be entirely borne by the CPSEs out of their earnings and no budgetary support will be provided”

As per 2007 scheme BSNL has been implementing the Pay and the corresponding IDA formula of that after getting DOT’s approval only . BSNL has categorically communicated to DOT its readiness to implement the DPE order for Jan 2026 IDA . Even after that , it is difficult to understand why DOT is not endorsing the order to BSNL to implement to their employees.

The DR for BSNL pensioners is also guaranteed as per the same scheme of BSNL employees vide DOT’s Pension revision order dated 15 - 3 - 2011. Once DOT endorsed the DPE order of 27-2-2026 to the BSNL, then they can communicate the same to the respective CCAs for DR.

The delay is unfair and causing irritation amongst the young employees and the old pensioners. Hope better sense prevail at both the DPE MoF and DOT end to avoid street struggles by the Pensioners and employees of BSNL / PSU employees.

10-4-2026 R. Pattabiraman

ap 11

வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுக்கைப் பிதற்றல்- திரு வி க ஆகஸ்ட் 1953

சிந்தனை செய்க சிந்தனை செய்க

எந்தப் பொருளையும் சிந்தனை செய்க
சிந்தனை, ஆய்வை உந்துதல் உறுதி
ஆய்க ஆய்க எதையும் ஆய்க
எதையும் ஆய்க பதைபதைப்பின்றி;
விதையை ஆய்க விளைவை ஆய்க
முதலை ஆய்க முடிவை ஆய்க
கருவை ஆய்க உருவை ஆய்க
பருமையை ஆய்க நுண்மையை ஆய்க
அணுவை ஆய்க மலையை ஆய்க
அண்ட பிண்டம் அனைத்தையும் ஆய்க
ஆழ்ணந்ே ஆழ்ந்தே ஆய்ந்து தோய்க;
- மறையும்- பொருள்கள்
அழிவதிலை; ஒழிவதில்லை
மாறுதல் நிகழ்ச்சி தேறுதல் கூடும்
மாறுதல் வழியே வீறும் புதுமை
பழமை புதுமையாய்ப் பழகுதல் உண்மை
மாற்றம் புரியும் ஆற்றல் எதுவோ
சிந்தனை செய்க; சிந்தனை செய்க
....
வேட்டை நாட்டம் எங்கும் வேண்டாம்
உள்ளத்துள்ளே உள்ளது காடு
வேட்டை ஆடி ஓட்டுக விலங்கை
விலங்குக் கரணம் நலங்கிளர் பண்பாம்
....
போர்கள் பெருபெரும் போர்கள் நிகழ்ச்சி
ஆயிரம் ஆயிரம் ஆவிகள் நாசம்

பட்டினி, மரணம் முட்டும் கோரம்!
கோயில் மடங்களின்மாயிரு அமைப்பும்
நன்மை செய்யும் தனமையில் இல்லை
என்ன செய்வது என்ன செய்வது?
போரை ஒழிக்கப் போரில் இறங்கினோம்
குண்டைத் தொலைக்கக் குண்டை எறிந்தோம்
வாளை வீழ்த்த வாளை ஏந்தினோம்
விளைந்ததென்னை அளந்து பார்க்க
மூர்க்கம் வீறி மூண்டது கண்டோம்
மூர்க்கம் அற்ற மார்க்கம் தேவை....
ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
என்ற மொழியில் ஒன்றி ஒன்றி
எண்ணி எண்ணி நண்ணுக தவமே
கல்வியில் தொழிலில் செல்வ நிலையில்
பிறபிற நிலையில் அறநெறி யென்னும்
பொதுமை புகுத்திப் புதுமை செய்க
...
நல்ல ஆட்சியே அல்லல் களையும்
பெயரால் என்ன? செயலே தேவை
எந்த ஆட்சி வந்தால் என்ன
சோறு வேண்டும் ஊறு வேண்டா
என்று குடிசைகள் இன்றும் பேசும்...
மூர்க்கம் அற்ற மார்க்கம் நிற்பவர்
மார்க்ஸ்- காந்தி மார்க்கம் தெரிந்தவர்
அமைதி உலகம் அமைக்க வந்தவர்
அவர்தம் துணையால் அவனி காக்கும்

மன்னருள் பொதுமை மின்னல் வேண்டும்

வளர்ச்சித் தத்துவ உளத்தைப் பயில்க

மூர்க்க சக்தியின் ஆக்கம் குன்றும்..

ap 12 கிராக்கிப்படி அடிப்படை உரிமையா?

இந்த ஆண்டில் உச்சநீதிமன்றம் கிராக்கிப்படி தொடர்பான இரு தீர்ப்புகளை வழங்கியுள்ளது. ஒன்று மே வ அரசாங்க ஊழியர் தொடர்பான பிப் 5, 2026 தீர்ப்பு. மற்ற ஒன்று ஏப்ரல் 10, 2026ல் கேரளா போக்குவரத்து பென்சனர் தொடர்பான dearness relief தொடர்பான தீர்ப்பு.

மே வ தீர்ப்பில், கிராக்கிப்படி அடிப்படை உரிமையா என்ற கேள்வி மூடப்படாமல் திறந்து வைக்கப்பட்டுள்ளது- whether the question of DA is a fundamental right என்ற கேள்வியை- left open to be decided in an appropriate case என்று சொல்லி,அதேநேரத்தில் அழுத்தமாக DA a legally enforceable right என்ற நம்பிக்கையை ஊழியர்களுக்கு ஏற்படுத்தினர். கிராக்கிப்படி பெறுவது சட்டரீதியாக செல்லுபடியாகத் தகுந்த ஒன்று என்கிற புரிதலை தீர்ப்பு தந்தது.

கேரளா KSRTC Pensioners DR தீர்ப்பில் 'no rationale for different rates' DA for employees- DR for pensioners என்பது பேசப்பட்டுள்ளது. இரண்டு பகுதியினரையும் different classification எனச் சொல்லி பாரபட்ச rates என்கிற முடிவு நிராகரிக்கப்பட்டு, உயர்நீதிமன்றம் சொன்னது சரி என உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

The issue discussed in this case is- (பாரா 27ல்)

"not of entitlement to the benefit but of differential rates at which those benefits are provided..when those benefits serve a common purpose and are linked to inflation, and inflationary pressures do not discriminate between a serving employee and a pensioner, fixing different rates of enhancement of dearness allowance and dearness relief have no rational nexus to the object sought to be achieved and is clearly discriminatory as well as arbitrary "

இந்த கேரளா தீர்ப்பில் இந்த வரிகளும் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

Para 28

No doubt a financial crunch might be a guiding factor to defer disbursement of certain benefits or may justify separate dates for implementation of beneficial schemes.

மேற்கண்ட தீர்ப்புகள் சில புரிதல்களை தருவதாக நினைக்கின்றேன். கிராக்கிப்படி அடிப்படை உரிமையா என்ற கேள்வி open ஆகவே இன்றும் இருக்கிறது. ஆனால் legally enforceable என்பது தீர்ப்பாகியுள்ளது. அதே போல் பணவீக்கத்தை சமாளிக்க

ஊழியர்களுக்கும், பென்சனர்களுக்கும் கொடுக்கப்படும் வீதத்தில் - rates- பாரபட்சம் சரியல்ல என்பது வந்துள்ளது. ஊழியர்களுக்கு கொடுத்தால், அதே வீதம் கொடுக்க வேண்டும் என தீர்ப்பிடப்பட்டுள்ளது. அதே நேரத்தில் பலன் ஒன்றை நிதி சுமை காரணமாக தள்ளிப் போடுவது, அல்லது பலன்களை பயனாளிகளுக்கு வெவ்வெறு தேதி முதல் அமுலாக்குவது என்பது புரிந்து கொள்ளக்கூடிய நியாயம் போலவும் தீர்ப்பு பேசியுள்ளது.

நம் ஜனவரி IDA/ DR வழங்கப்படாமல் இழுத்தடிக்கும் நிலை தொடர்வதில் எந்த நியாயமும் இல்லை. DPE பிப் 2026 ஒ எம் குளறுபடியை உருவாக்கியுள்ளது. வெளிப்படையாக தள்ளிப்போட்டு வழங்குவதற்கு உத்தரவும் அதில் இல்லை. ஆனால் உத்தரவை சம்பந்தப்பட்ட பொதுத்துறைகளுக்கு அனுப்பாமல், நிர்வாக அமைச்சரகங்களுக்கு பொறுப்பை தள்ளிவிட்டுள்ளது DPE- MoF.

ஏப்ரல் 2026 கேரளா தீர்ப்பு வேறு வகையில் மத்திய அரசிற்கு உதவுவதாக அமையுமா என்ற கேள்வி எனக்குள் எழுந்தது. 8வது ஊதியக்குழுவிற்கு TOR ஊழியர்கள் தொடர்பாக மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. அதில் ஊழியர்க்கான பென்சன் என்பது சேர்க்கப்பட்டுள்ளது. பென்சனர்க்கான பென்சன் மாற்றம் இம்முறை பாஜக அரசாங்கத்தால் சேர்க்கப்படவில்லை. TOR amendment என்பது குறித்து அரசாங்கத்திடம் போதுமான அழுத்தம் கொடுக்கப்பட்டதாக என்னால் உணரமுடியவில்லை. அப்படியொருவேளை பென்சனர்களுக்கு பென்சன் மாற்றம் என்பது TORல் இடம் பெறாமல் போனால், பரிந்துரைகளில் இடம் பெறும் என எதிர்பார்க்க முடியாது.

நிதிப் பலன்களை தள்ளிப் போடுவது, வெவ்வேறு நாட்களிலிருந்து தருவது என்கிற நியாயத்தை உருவாக்க அரசாங்கம் முயற்சிக்கக்கூடும். அரசாங்கத்திடம், பயனாளிகளுக்கு வேறுபடுத்தி பலன்களை தருவதற்கு சட்ட அதிகாரமும் - நிதி சட்டம் 2025 படி இருக்கவும் செய்கிறது. பென்சனர்களை, ஊழியர்களை தொடர்ந்து பதட்ட போராட்ட சூழலுக்கு தள்ளக்கூடிய நிலையே கண்ணில் படுகிறது..

12-4-2026

ap 13

அரசியல் அதிகாரம் vs வர்க்க நலன்கள்

லெனின் - தொழிற்சங்கம்- இந்திய நிலையில் டாங்கே, குப்தா

NEP என்கிற புதிய பொருளாதார கொள்கை காலத்தில் தொழிற்சங்கங்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்கிற வழிகாட்டலை தோழர் லெனின் 1922 ஜனவரியில் தந்தார். ருஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியால், லெனின் குறிப்புகள் ஏற்கப்பட்டு பிராவ்தா ஜன 17, 1922ல் வெளியிடப்பட்டது.

தோழர் லெனின் தொழிற்சங்கங்களிடம் ஆட்சித்தலைவராக என்ன எதிர்பார்த்தார் என்பதை அதை படிப்பவர்கள் உணர்ந்து கொள்ள முடியும்.

பூர்ஷ்வா சொத்து முறை காக்கக் கூடிய அரசாங்க சூழலில் தொழிற்சங்கங்கள் பணி, அதுவே proletarian state என்கிற பாட்டாளி அரசாக மாறும் போது தொழிற்சங்கங்கள் பணி என்கிற வேறுபாட்டை லெனின் விளக்கியிருப்பார்.

சோசலிசத்திற்கு மாறுகிற கட்டத்தில், அரசாங்கமே தொழில்களை நடத்துகிற முறையை அவர் building state capitalism என ஏற்றிருப்பார். அப்படி பாட்டாளி அரசால் கட்டப்படும் 'அரசு முதலாளித்துவ' கட்டத்தில் ஒன்றாக NEP என்பதை அவர் சொல்வார். இந்த கட்டுமான சூழலில் இரு கடமைகளை தொழிற்சங்கங்கள், தொழிலாளி வர்க்கம் பெறுவதாக அவரது விளக்கம் இருக்கும்.

முதலாளித்துவ சமூகத்தில் போராடி அந்த கட்டுமானத்தை வீழ்த்துவது என்கிற ஒரே கடமையிருந்தால், தற்போது proletarian state building காலத்தில் இரு கடமைகள் என ஒப்பிட்டு சொல்லியிருப்பார். தொழிற்சங்கம் என்றாலே தொழிலாளி வர்க்கத்தின் நலன்களை காப்பதற்காக போராடுவது என்பதை விட்டுவிடமுடியாது. ஆலைகளில், கம்பெனி நிருவனங்களில் அதிகாரிகள் செய்யும் தவறை தட்டிக் கேட்டு சரி செய்வது- அதே நேரத்தில் மிக முக்கிய மற்றொரு கடமை என்கிற எல்லைக் கோட்டையும் தொழிற்சங்கங்கள் உணர வேண்டும். அதாவது பாட்டாளி அரசுக்கு பலவீனத்தை உருவாக்கிவிடாமல், அதை பலப்படுத்த உதவிட வேண்டும்.

இப்போது அவர்கள் தொழிற்சங்கத்தின் பிரதிநிதிகள் மட்டுமல்ல, உருவான பாட்டாளி அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் கூட என்கிற வழிகாட்டலை லெனின் செய்திருப்பார்.

முந்திய ஜார், கெரன்ஸ்கி ஆட்சியில் இருந்த தொழில்நுட்ப விற்பன்னர்கள், சிறந்த அறிவியலாளர்கள், நிர்வாக உயர் அதிகாரிகளை கொடுமைப்படுத்தி அவர்களை அப்புறப்படுத்திவிடுவது உற்பத்தி முறையேயே பாதித்துவிடக்கூடிய செயலாகிவிடும். அவர்கள் ருஷ்ய கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆதரவானவர்களாக இல்லாவிட்டாலும் அவர்களின் திறமை expertise காரணமாக உற்பத்தி உயர தேவைப்படுகிறவர்கள் என்ற புரிதல் தொழிற்சங்கங்களுக்கு வேண்டும் எனச் சொல்லியிருப்பார்.

The Economic struggle of the proletariat in a State which does not recognise private ownership of the land and industries- where political power in the hands of the proletariat என்பது மாறுபட்ட புதிய அனுபவம் என்கிற கருத்தை லெனின் அதில் சொல்ல வந்திருப்பார்.

இந்த போராட்டத்தில் ஏற்படும் தொழிற் தகராறுகளை , பிற தொழிலாளர் குழுவினர்க்கு பாதிப்பு உண்டாக்காமல் விரைந்து முடிக்கத் தெரியும் அளவு maturity வளரவேண்டும் என்கிற எதிர்பார்ப்பை லெனின் தந்திருப்பார். இந்த வரிகளை லெனின் இங்கு பயன்படுத்தியிருப்பார்.

One of the most important and infallible tests of the correctness and success of the activities of the trade unions is the degree to which they succeed in averting mass disputes in state enterprises by pursuing a far sighted policy with a view to effectively protecting the interests of the masses of the workers in all respects and to removing in time all causes of dispute.

ஆலை நிர்வாகம் - நிர்வாகிகள் கட்டுப்பாட்டில் உற்பத்தி, இலாபம் ஆகியவை பொறுத்து- ஊழியர்களுக்கு ஊதியம், ரேஷன், ஆலை வேலைக்கான உடைகள் தரப்படுவதில், தொழிற்சங்கங்கள் நேரடி தலையீடுகளை செய்யக்கூடாது. இதன் பொருள் உற்பத்தி பெருக்கத்திற்கோ, நிர்வாகத்தில் தொழிலாளர் பங்கோ இருக்கக்கூடாது என்பதல்ல என்கிற balanceயை லெனின் செய்திருப்பார்.

குட்டி முதலாளித்துவ உணர்வுகள் பற்றிவிடாமல் தொழிலாளி வர்க்கத்தை காக்க வேண்டும் என்ற செய்தியுடன் லெனின் குறிப்புகள் நிறைவு பெற்றிருக்கும்.

இந்தியாவில் நேருவிற்கும் இப்படியான சோதனைகள் ஏற்பட்டன. விடுதலையடைந்த உடனேயே, ஏவல் நாய் சர்க்காரை தூக்கியெறி- நாடு தழுவிய வேலை நிறுத்தம் என்கிற பி டி ஆர் லைன் இங்கு கம்யூனிஸ்ட்களால் மேற்கொள்ளப்பட்டது. அவரது ஆட்சியும் புதிய

தொழில் கொள்கைகளை அறிவித்தது. அவரின் பொதுத்துறை கட்டுமானத்தை பெரு முதலாளிகளுக்கு நில பிரபுத்துவத்திற்கு உதவும் கொள்கையா, அரசு முதலாளித்துவ கட்டுமானமா என புரிந்து கொள்வதற்கான உள் போராட்டங்கள் கம்யூனிஸ்ட்களிடம் நடந்தன. தோழர் டாங்கே இரு தூண் கொள்கை two pillar policy - save the worker, save the industry என்கிற முழக்கத்தை கொண்டு போனார். அவர் பூர்ஷ்வாவிற்கு வாலாக இருக்கிறார் என விமர்சனத்திற்கும் உள்ளானார்.

தோழர் குப்தாவிற்கு புதிய சோதனை ஏற்பட்டது. அரசாங்க ஊழியர்களை திரட்டி போராட வைக்கவும் வேண்டும், அவர்களின் வேலையையும் பாதுகாக்க வேண்டும். மெயின்ஸ்ட் ரீம் இதழில் மிக முக்கிய கட்டுரையை தோழர் குப்தா எழுதியிருந்தார்(பிரதியை தொலைத்து விட்டேன்) . Govt employees constraints என்பது தலைப்பு என நினைக்கிறேன். அவர்களுக்கு இரு கடமைகள் இருக்கின்றன. தொழிலாளி வர்க்கத்தின் பகுதியாக உரிமைகளைப் பெற போராடுதல்- அரசாங்கத்தின் துறையை காத்தல், அரசாங்க கொள்கைகளை மக்களிடம் கொண்டு சென்று அமுலாக்குதல்- தலமட்ட நிர்வாகம் செய்திடும் அடக்குமுறைகள் தவறுகளை களைய போராடுதல் என்கிற trishul கொள்கையை தோழர் குப்தா முன்னெடுத்தார். ஓர் அடியானாலும் அனைவருடன்- தன்னை வருத்திக்கொள்ளாமல் வேலை நிறுத்த அறிவிப்புக்களை தராமை என்கிற காந்திய முறைகளை அவர் சேர்த்துக்கொண்டார். Neither intoxication nor surrender- only issue to issue support or opposition to the government என்கிற balance சோதனையை அவர் நடத்தினார். தீர்வுகளை கொணரவே போராட்டம்- struggles to protect not mere protest sake என்கிற சோதனையை அவர் திறம்பட கையாண்டார். Consolidation of gains என்பதும் negotiation- if failed hitting என்பதையும் அவர் சொல்லித் தந்தார்.

தோழர் ஜோதிபாசு மே வ முதல்வராக இருந்தபோது, அங்கு தொழிற்சங்கங்களிடம் எவற்றை எதிர்பார்த்தார்- என்ன அறிவுரைகளை கூறினார் என்பதை இதழ்களில் தோழர் குப்தா வெளியிட்டு, Ginger group வாய் சவடால் தோழர்களை நிதானப்படுத்தினார்.

இந்தியாவிலும் , மாநிலங்களிலும் ஆட்சிக்கு எந்த கட்சி வருகிறதோ அந்த கட்சி சார்பு தொழிற்சங்கங்களுக்கு எப்போதும் சவால் இருந்து கொண்டே யிருக்கிறது. தன் கட்சி ஆட்சி நலனா அல்லது தொழிற்சங்க நலனா - இந்த முரணில் எங்கு நிற்பது? இது சவாலான கேள்விதான்.

Political power or class welfare which way to go என்கிற தடுமாற்றம் ஆட்சி சார் தொழிற்சங்களிடம் இருக்கிற எதார்த்தத்தைப் பார்க்கிறோம். அந்த தொழிற்சங்கங்களின் maturity பொறுத்து issue based ஆக நிற்பது என்கிற பாதையும் இந்தியாவில் சோதிக்கப்படவேண்டிய ஒன்று..

13-4-2026

ap 15

On 8th CPC

This time the BJP government has set up 8 th CPC only for the Central Govt employees. There is no reference about the existing pensioners. CG employees movement have sent their common memorandum to the 8 th CPC. Let them get their success.

In the BSNL, almost all the service unions and the pensioners' associations have been demanding ' delinking of pension revision from pay revision and parity to CG pensioners on the CPC method'.

It seems that GOI has given them some 'negative parity', by misplacing the CG pensioners also from the purview of CPC. Neither CG employees' unions nor CG pensioners' associations ever sounded the demand of 'delinking' to them, but GOI , done that of avoiding 'the revision of pension to the existing pensioners' (pre 2026 pensioners) in the TOR.

Unless pressure is mounted to amend the TOR for the inclusion of the demand of 'Pension revision', it may be a difficult phase for the existing CG pensioners to get their revision. This type of amendment was happened during Smt Indira Gandhi period during 4 th CPC time.

If not through CPC, then what is the method of pension revision, if at all any, is the serious question to be addressed by the CG pensioners associations. In the same analogy, if PRC is only for PSU employees (PRC is set up only for the employees) , then pension revision in BSNL through what methodology is also a derivative question to be thought of.

The second and an important issue of 8 th CPC is the question of date of effect. If it is 1-1-2026 then good, if not and if from a later date then it becomes an issue.

If it is 1-1-2026, then by the time of 8 th CPC implementation (after 18 months as reported by GOI), there would be new pensioners from the date 1-1-2026. The fixed pension as per 7 th CPC to them should be revised as per the accepted recommendations of 8 th CPC by GOI. In that case, what would be the fate of the existing 67 lakhs pensioners' revision? Now it is not automatic as there is no reference about them and so no OM need to be issued by DOPPW as that of DOE for employees. But DOPPw must issue OM for the post 2026 pensioners. That is no OM for pre 2026, but OM for post 2026 pensioners only by DOPPw.

If there is no reference of 'pension revision' (only reference is about pension in the 8 th CPC) , can the existing pensioners raise the issue of discrimination on the basis of CPC? Can that be legally forcible or possible in the court of law?

If amendment for pension revision in TOR is not brought , then what is the methodology of settling the issue of Pension Revision? A Committee of Secretaries on

whose scrutiny, the recommendations of CPC would be decided and approval of cabinet would be obtained. Whether GOI would send the issue separately to the COS to study the issue of pension revision to the existing pensioners and on that basis giving some relief from the same date or from a different date?

What GOI is contemplating, it is difficult to peep into. Are they going to take the wrath of 67 lakhs pensioners and force them to stand on the streets in their evening age?

Whatever this government plans that may be the procedures for the future, new normal in the coming years. One can understand , when the FM explained that they wished to take the 6 th CPC modified pay parity model instead of 7 th CPC complete pay matrix model for the revision of pension, during the debate of FA 2025. But exclusion of reference of pension revision, creates apprehensions in the minds of lakhs of CG pensioners.

I still hope, even a fascist govt or a govt having tendency of fascism, would take such a drastic decision of ‘no more pension revisions to the existing CG pensioners’. GOI may justify its stand of excluding a ref to the revision of pension to CPC, a pay revision commission, but it is difficult to justify, if it takes the position of ‘no pension revision’ even after pay revision in some methodology.

In order to avoid confusion, it is better for the CG pensioners’s associations to focus their entire energy on the issue of seeking amendment to the TOR for the inclusion of Revision of Pension. I have not written this piece for creating any fear psychosis , but only to express my understanding, that is all. The wisdom of associations may only decide things and take the course of their directions..

15-4-2026 R. pattabiraman

ap 16

மீண்டும் மாவோ கற்கை நெறியில் சீன இளைஞர்கள்..

தமிழ்நாட்டில் பெரியார், அம்பேத்கர் வாசிப்பு அதிகரித்துக்கொண்டே வருகிறது எனலாம். திலகர், லஜ்பத்ராய், சித்தரஞ்சன் தாஸ், பிபின்பால் வாசிப்பு இல்லை எனக் கூட சொல்லலாம். ஒரு வேளை மராத்தி, பஞ்சாப், வங்க வாசிப்பாளர்களிடம் அவர்கள் ஓரளவிற்கு நிலைத்து இருக்கலாம். நேருவிற்கு இப்போது உபியோ அலகபாத்தோ இருக்கிறதா?

மார்க்ஸ், லெனின், மாவோ, காந்தி போன்றவர்களுக்கு உலகளாவிய விவாத பரப்பு இன்னும் இருக்கிறது. தேய்ந்து இருக்கலாம்- ஆனால் அவர்கள் ஓயாமல் உரையாடக்கூடியவர்களாக இருப்பர்.

சீனாவில் மாவோ ஏற்ற இறக்கங்களை கண்டு வருகிறார் என்கிற சர்வேயுடன் கூடிய எழுத்தொன்றை வாசிக்க நேர்ந்தது. சீனப் பல்கலை நாஞ்சிங் பேரா யின்ஹாவோ ஜாங் A Spectre’s return என்கிற பொருளில் புகழ் வாய்ந்த மன்த்லி ரிவ்யூ இதழில் கட்டுரை எழுதியிருக்கிறார்.

மாவோவின் கலாச்சார புரட்சிக் காலம் குறித்து பெருமித எழுத்துக்களும், கடும் விமர்சன எழுத்துக்களும் ஏராளமிருக்கிறது. டெங்ஷியோ பிங் வந்த பின்னர், மாவோவின் எந்த எழுத்துக்கள் போக வேண்டும், எது பொதுவெளியில் காணப்படக்கூடாது என்பதில் கவனமாக இருந்தார். 1949 சீனப் புரட்சிக்கு முந்திய மாவோ வால்யூம்கள் பல்கலை நூலகங்களில், பொது நூலகங்களில், விற்பனைக்கு பரவலாக கிடைக்கப்பெற்றன. பின்னரான வால்யூம்கள் குறிப்பாக அவரின் கலாச்சார கால radical views உள்ள வால்யூம்கள் அப்புறப்படுத்தப்பட்டன.

சீன ஆய்வகங்கள் சில சேர்ந்து 1993ல் எடுத்த சர்வேயில் மாவோவின் merits vs faults என்பதில் , மூத்த குடிமக்களிடம் 10 சதம் கூட ஆதரவில்லை. அவரின் தவறுகளுக்கு 67 சதம் சர்வேயில் வாக்கு விழுந்திருந்தது. பல்கலை மற்றும் கல்லூரி மாணவர்களிடம் எடுத்த போது 40 சதம் அவர் தவறுகள் பற்றி அதிகம் பேசினர். மாவோ சீனாவின் நவீன கட்டுமானத்திற்கு உகந்த ஆளுமையல்ல என்ற எண்ணம் டெங்ஷியோ காலம் தொட்டு உருவானது.

பல்கலை நூலகங்களில் மாணவர்கள் எடுத்துச் செல்லும் முதல் 50 விருப்ப நூல்கள் பற்றிய சர்வேயை 2016ல் எடுத்தனர். இந்த library loan data படி மாவோ நூல்கள் முதல் 50ல் வரவில்லை எனப் பார்க்க

முடிகிறது. 2019 முதல் ‘மாவோ வாசிப்பு’ மாணவர்கள் மத்தியில் அதிகரிக்கத் தொடங்கியது. 2024ல் எடுத்த சர்வேயில் 80 பல்கலையில் top 13 பல்கலையில் அதிகம் எடுக்கப்பட்ட நூல்கள் வரிசையில் முதல் 10க்குள் மாவோ நூல்கள் வந்தன. மிகவும் அதிகம் எடுக்கப்பட்ட வால்யூமாக 5- அவரின் கலாச்சார கால தீவிரப் பேச்சுக்கள் அடங்கிய தொகுப்பு என்பதைக் கேட்க முடிகிறது. இதை Mao fever எனச் சொல்கின்றனர்.

மாவோவை , மாணவர்கள் தங்கள் உரையாடல்களில் ‘ஆசான்’ (teacher) எனக் குறிக்கின்றனர். சீன வரலாற்றில் தலைசிறந்த மனிதர் யார் எனக் கேட்டதற்கு, மாவோ என மாணவர்கள் பொங்கு வெள்ளமாக பதிலளித்துள்ளனர்.சீன மொழியில் Mao xuan என அவரது நூல் தொகைகளைச் சொல்கின்றனர்.

ஏன் இந்த மாவோ காதல் மீண்டும் என்கிற கேள்வி, சீன சமூகத்தின் பிரச்சனைகளை சுட்டுவதாக புரிந்து கொள்ளலாம். ஊழல் நிறைந்த, உல்லாச வசதி மோகம் கொண்ட ஆட்சிக்கு நெருக்கமான சிலர் என்கிற காட்சிகள் அச்சமூகத்தில் கண்ணில் படுகிறது. வேலையின்மை என்கிற பிரச்சனை உணரப்படுகிறது.

புரட்சிக்கு பிந்திய மாவோ ‘state managed show’ போலவே, டெங்ஷியோ கால மாவோ மறைப்பும் state managed ஆக இருந்தது. கடந்த 5 ஆண்டுகளான மாவோ வேகம் self driven not State managed என ஆட்சியாளர்கள் உணராமல் இருக்க முடியாது. அங்கு இளைஞர்கள் எழுச்சி நேபாள், இலங்கை, வங்க தேசம் போல் வர வாய்ப்பில்லை. முதலாளித்துவ நாடுகளை விட, அரசும், அரசாங்க அதிகாரமும் சீனாவில் மிக வலுவானவை. அரசு உதிர்ந்து போகும் என்கிற மார்க்சின் வாக்கியம் அங்கு சாத்தியமில்லை.

யின்ஹாவோ ஜாங் தன் ஆய்வில் வந்தடையும் குறிப்பு

The promise of social mobility through education and hard work- the cornerstone of reform era dream- now feels a cruel joke- they face a brutal job market. சீனா தனது பொருளாதார சீர்திருத்தங்களால் சோசலிசம் நோக்கிய பயணத்தை நடத்துகிறது என்பதை நடைமுறை வாழ்வில் அந்த இளைஞர்களால் உணரமுடியவில்லை.

2023 ஜூனின் சீனாவில் நகர்ப்புற வேலையின்மை 21 சதம் என்பது அதிர்ச்சி தரும் செய்தியாகவுள்ளது. மீண்டும் இளைஞர்கள் தங்கள் ஹீரோவை மாவோ வழியில் தேடுகிறார்களா..இல்லை மாவோ வழி

விளக்கங்களுக்கு மாவோவை தேடுகிறார்களா, தெரியவில்லை. மாவோ பேசிய bureaucratic capitalists போன்ற பதங்களின் உண்மை பொருளை அவர்கள் சமூக அரசியல் பொருளாதார வாழ்க்கையில் தரிசிக்கிறார்களா?

யின்ஹூவோ , இன்றைய சீன இளைஞர்கள் முன் உள்ள சவாலாக , அவர்கள் மறுகண்டுபிடிப்பிற்கானவைகளாக முன் வைப்பது

A necessary struggle against the new ruling class- challenging entrenched power, combating bureaucracy , failures of market system, dependency on west etc

சீனாவின் தேடு பொறிகளில் மீண்டும் மாவோ முதலிடத்தை பெறுகிறாராம். அமெரிக்க ஏகாதிபத்தியத்தை அவர் வர்ணித்த காகிதப்புலி , protracted war போன்ற சொல்லாடல்கள் எதிரொலிக்கப்படுகிறதாம். சீன இளைஞர்கள் புரட்சியின் நிகழ்ச்சி நிரல் இன்னும் முடிந்தபாடில்லை என நினைக்கிறார்களா?

இந்தியாவில் விடுதலைக்கு பின்னரான கட்டுமானத்தில், தன் கனவு வழியில் செயலாற்றிய நேரு வாசிப்பு இருக்கிறதா? தேர்தல்கள் காட்டும் பண பலத்தின் ஆட்சி, ஆட்சியாளர்களின் narrow cunning attitudes, divisive politics காந்தியின் தேவையைக் கோரவில்லையா? இங்கு பல்கலை கல்லூரி மாணவர்களிடம் மட்டுமின்றி , படித்தவர், கிராமம் வாழ்வோர் மத்தியில் காந்தி எடுபடுகிறாரா..அவர்களிடம் காந்தி, நேரு தேடல் இருக்கிறதா?

உரிமைசார் உலகில் பெரியார், அம்பேத்கர், மார்க்ஸ், லெனின், மாவோ போன்றவரே அதிகம் செல்ல முடியும். காந்தி அங்கே ஓரமாகிவிடலாம். கடமை சார் மனிதர்கள் காந்தியின் சிறு சிறு பிரதிபலிப்புகளாக மிளிரக்கூடும். அவர்கள் எப்போதும் மைனாரிட்டிகளாகவே இருக்கக்கூடும். Duty and morality என்பவற்றை முன்னுரிமையாக்கும் உலகிற்காக காந்தி காத்திருக்கக்கூடும்...

16-4-2026

ap 17

Assemblies

நாடாளுமன்றத்தை அவசரகதியில் கூட்டி, பாஜக அரசாங்கம் விரும்பக்கூடிய வகையில் அரசமைப்பு விதி திருத்தம்- எம்பி க்கள் எண்ணிக்கை உயர்வு, பெண்களுக்கான ஒதுக்கீடு, தொகுதி மறுவரையறை குறித்த விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அரசாங்கம் தான் கொணர்ந்த அரசமைப்பு திருத்தத்தைப் பெற cross alliance votes தேவைப்படும்.சமாளிக்கப் போகிறதா , எவரை வைத்து பார்க்கலாம்..

சரி. கேரளா தனது 15வது அசெம்பிளி காலமான 2021-2026 செயல்பாடுகளை முடித்துக்கொண்டு ஏப்ரல் 9ல், தனது 16வது அசெம்பிளி அமையப்பெற மக்களின் தீர்ப்பைக் கோரியது. மே மாதம் வாக்கு எண்ணிக்கையில் தெரிந்துவிடும், மக்கள் எவ்வாறு வாக்களித்துள்ளனர் என்று..

கேரளா 15 வது அசெம்பிளி இந்த 5 ஆண்டுகளில் 204 நாட்கள் கூடியது. வழக்கமாக அவை கூடினால் குறைந்தது 5 மணிநேரமாவது அலுவல் இருக்க வேண்டும். வெள்ளிக்கிழமையெனில் 3.5 மணி நேரம். இந்த 204 நாட்களில், சராசரி 6 மணிநேரம் அவர்கள் கூடியுள்ளனர். 50 நாட்களாவது 8 மணிநேரம் அமர்ந்துள்ளனர்.

கொணர்ந்த பில்களில் 84 சதமாவது கமிட்டிக்கு அனுப்பட்டு ஏற்கப்பட்டன. ஓரிரு நாட்களில் கமிட்டி தன் கருத்துக்களை தரக்கூடியதாக இருந்ததை அறிய முடிகிறது. 129 மசோதாக்கள் அவையால் ஏற்கப்படதென சொல்கிறார்கள். பில்கள் அவையில் வைக்கப்பட்ட 7 நாட்களுக்குள் 47 சத பில்கள் ஒப்புதலைப் பெற்றன. அங்கும் ஆளுநருடன் போராட்டம், வழக்கு இருந்தது.

ஆண்டுதோறும் பட்ஜெட் விவாதம் எனப் பார்த்தால்சராசரி 14 நாட்கள் நடந்துள்ளன. 285 கவன ஈர்ப்பு தீர்மானங்களில், போக்குவரத்து துறை அதிக கவனமானது. அடுத்து மருத்துவ சுகாதாரத்துறை.

சட்டமன்ற கமிட்டிகள் கொடுத்த அறிக்கைகள் 600 இருக்கலாம். சராசரியாக எம் எல் ஏ ஒருவர் எழுப்பிய வினாக்கள் 848 .

தமிழ்நாடு சட்டமன்றம் இக்காலத்தில் எப்படி செயலாற்றியது என சில செய்திகளைப் பார்ப்போம். தமிழ்நாடு 16 வது சட்டமன்றத்தை முடித்துக்கொண்டு, 17வதற்கான தேர்தலை ஏப்ரல் 23 அன்று சந்திக்கவுள்ளது. இந்த 2021-26 , 5 ஆண்டுகளில் 155 அமர்வுகளை

செய்துள்ளது. கேரளா 204 அமர்வுகள். தமிழ்நாடு அசெம்பிளி 725 மணிகள் அமர்ந்துள்ளது. கேரளா 1200 மணிகள்.

தமிழ்நாடு அசெம்பிளி ஆண்டிற்கு 32 நாட்கள் சராசரி கூடியுள்ளது. 1952லிருந்து பார்த்தால், இதுதான் மிகக் குறைவு என்கிறார்கள்.

பில்கள் எனப் பார்த்தால் 201 அறிமுகமாகி, 194 ஏற்கப்பட்டன. ஒரு பில் கூட கமிட்டிக்கு அனுப்பப்படவில்லை. கேரளாவில் 84 சத பில்கள் அனுப்பப்பட்டிருந்தன. சில பில்கள் முதல் நாள் அறிமுகப்படுத்தப்பட்டு மறு நாளே ஏற்கப்பட்டன. மூன்று நாட்களுக்கு முன்னர், சில ஒரு வாரத்திற்கு முன்னர் என அறிமுகத்தைப் பெற்றன.

16வது அசெம்பிளி காலம் , ஆளுநர் பிரச்சனைகள் அதிகம் இருந்த காலமும் கூட, நீதிமன்ற பிரச்சனையும் உருவானது. அதேநேரத்தில் 82 சத பில்கள் மூன்று மாத இடைவெளியில் received assent. சில பில்களுக்கு உச்சநீதிமன்றத்திற்கு போக நேர்ந்தது.

பட்ஜெட் பொது விவாதம் எனப் பார்த்தால், சராசரி 4 நாட்கள் மட்டுமே நடந்தன.அதே நேரத்தில் துறைவாரியான விவாதம் சராசரி 17 நாட்கள்நடந்துள்ளன. விவசாய பட்ஜெட் என்கிற நடைமுறை உருவாக்கப்பட்டுள்ளது.

சராசரியாக, எம் எல் ஏ ஒவ்வொருவரும் 3 starred questions எழுப்பியுள்ளனர். மத்திய அரசின் நிலைப்பாடுகளை எதிர்த்து சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. கவன ஈர்ப்பு தீர்மானங்கள் எண்ணிக்கை குறித்து தெரிந்து சொல்ல முடியவில்லை.

சரி. தேர்தலுக்கு சென்ற அசாம் அசெம்பிளி குறித்த சில செய்திகளைப் பார்க்கலாம். சராசரி ஆண்டிற்கு 20 நாட்கள் மட்டுமே, அதாவது 100 நாட்களே நடந்துள்ளது. தமிழ்நாடு 155 , கேரளா 204 நாட்கள். அசாமும் 15யை முடித்துக்கொண்டு, 16வது அவைக்கு காத்திருக்கிறது.

பில்களில் 84 சதத்தை ஒரே வாரத்தில் ஒப்புதல் பெற்றுள்ளனர். அன்றே அறிமுகப்படுத்தி ஏற்கப்பட்டவை 36 பில்களாம். மொத்தம் 240 பில்கள் அசெம்பிளியால் ஏற்கப்பட்டுள்ளன. ஆளுநரால் பெரும்பான்மை மசோதாக்கள் ஒரே மாதத்தில் assent பெற்றன.

அசாம் அவை அமர்ந்த நேரம், கேள்விகள், கவன ஈர்ப்பு போன்றவை குறித்து தெரிந்து கொள்ள முடியவில்லை.

மேலே மூன்று வகை கட்சிகளின் பின்புலத்தில் சட்டமன்ற செயல்பாட்டுத் தன்மை கொடுக்கப்பட்டுள்ளது. விவரங்களே

அக்கட்சிகள் சட்டமன்றத்தில் காட்டும் ஜனநாயகப் பண்பை சொல்லிவிடும்.

மேற்கூறிய விவரங்கள் பெற prsindia உதவியது. நன்றி..

17-4-2026

ap 19

So addressed Deshbandhu C R Das 1923 Gaya Cong

Majority rule tests on numbers; democracy rests on the well grounded assumption that society is not a collection of units, but a network of human relations.

Democracy is not worked out in polling booths; it is bringing forth a collective will- every single being express the whole at one point.

The essence of democracy is creation.

State itself is not a static unit. It is a process, a continual self modification to express it in different stages of growth..what is wanted is a human state, not a mechanical contrivance. The foundation of real democracy must be laid in small centers - a gradual integration of the practically autonomous small centers into one living harmonious whole.

I maintain that real swaraj can only be attained by vesting the power of government in these local centers.

Bureaucracy is bureaucracy, and I believe that the very idea of swaraj is inconsistent with the existence of a rule of bureaucracy.

My friends,if we are weak come and join us and make us stronger. If leaders are worthless, come and join to lead and the leaders will stand aside.

If you do not believe in the ideal, what is the use of criticizing us in the light of that ideal..we need no critic to tell us how far we have fallen short of that ideal..but inspite of our defects, weakness, human imperfection, I feel bold enough to say that our victory is assured

மார்க்சின் மூலதனம் வந்து ஏறத்தாழ 160 ஆண்டுகள் ஆகப்போகிறது. புத்தகமாக விற்பனைக்கு செப் 14, 1867ல் capital நூல் வந்தது. பல ஆண்டுகள் உழைப்பு , அவருக்கு 'மேலும் மேலும் கூடுதலாக- சரியாக' என்கிற தீராத தாகத்தை, உடல் நோவை கொடுத்து வந்த பெரும் ஆய்வுப் பிரதி.

1844 முதலே தனியார் சொத்துரிமை - வறுமை குறித்தெல்லாம் மார்க்ஸ் சிந்திக்க தொடங்கினாலும், 1857 நிதி நெருக்கடி அவரது தீரா தாகத்தை அதிகப்படுத்தியதெனலாம். சமூகத்தின் உழைப்பு உற்பத்தி முறைகளை பெரும் ஆய்வுப் பரப்பாக எடுத்துக்கொண்டு 8 வால்யூம்களாக அவரது Grundrisse அமைந்தது. இந்த கையெழுத்து பிரதிகளை நேர் செய்யாமல் பிரசுரிக்க முடியாது என அவர் கருதியிருக்கக்கூடும்.

1859ல் 'பணம்' என இயல் ஒன்றை அவர் கொணர்ந்தார். எங்கெல்ஸ் சரிபார்த்த பிறகு A contribution to the critique of political economy என்ற பெயரில் அப்பிரதி வந்தது. க்ரன்ரிஸ்ஸே குறிப்புகளை வைத்து குறைந்தது capital, property, wage labour, State, trade, global market போன்ற பல நூல்களையெல்லாம் கொணர வேண்டும் என அவர் விழைந்தார்.

வாழ்வின் வறுமை, அன்றாடத்திற்கே திண்டாட்டம், ரயில்வே எழுத்தர் வேலைக்குக் கூட விண்ணப்பம், உடல் முழுக்க கொப்புளங்கள் என்கிற அவதிச் சூழலும் அவரையும் குடும்பத்தையும் சவாலுக்கு அழைத்தன. எங்கெல்ஸ் என்கிற தோழனின் பரோபகாரம் இல்லாவிட்டால், எங்கே இந்த மூலதன நூல் என மார்க்சே சொன்னார். 1862ல் Capital என்ற தலைப்பில் எழுதி முடிப்போம் என்கிற முடிவிற்கு வருகிறார். 1864 தொழிலாளர்களின் சர்வதேச அமைப்பான அகிலத்தின் பணிகளையும் அவர் இழுத்துப் போட்டுக்கொள்கிறார்.

ஏறத்தாழ 20 ஆண்டுகளின் உழைப்பு மற்றும் தாகம் ஏப்ரல் 1867ல் நேர் செய்யப்பட்ட பிரதியாக மூலதனம் முதல் வால்யூமாக உருப்பெற்றது. மார்க்ஸ் குறிப்பிட்டார் - I hope the bourgeoisie will remember my carbuncles until their dying day.

மார்க்சின் கனவு the full and free development of each and every individual..பெருங்கனவு தான்..

எங்கெல்ஸ் தன்னை மார்க்சின் second fiddle என வர்ணித்துக்கொண்டாலும், அவர் தனித்த ஆளுமையும் கூட. மார்க்ஸ்

மறைவிற்குப் பின்னர் 12 ஆண்டுகள் வாழ்ந்து, மூலதன வால்யூம்கள் 2,3யைக் கொணர்ந்தார். 1845 முதல் அவரும் தனித்த நூல்கள் பலவற்றை எழுதினார். The principles of communism, Manifesto , Holy family, German ideology (with Marx), dialectics of nature, origins of family, private property, Anti Duhring போன்ற நூல்கள் தொடர்ந்து விவாதிக்கப்படுகின்றன- விமர்சிக்கவும்படுகின்றன.

காந்தி போலவே, அவருக்கு முன்பாகவே ஏராள கடிதப் போக்குவரத்துக்களை கொண்டவர்கள் மார்க்ஸ்- எங்கெல்ஸ். அவர்களை சுற்றி 10 ஆயிரம் கடிதப் போக்குவரத்துகள் இருக்கலாம் என மார்செல்லோ மஸ்டோ சொல்கிறார். மார்க்ஸ் எங்கெல்ஸ் இருவருக்கிடையேயும், அவர்களுக்கு வந்த விவாத கடிதங்களும் தேறிய வடிவில் 2500 அளவில் இருக்கலாம் என்கிறார்கள்.

இப்படியான பல சுவையான செய்திகளுடன் ஆகார் புத்தக நிறுவனத்தாரின் Ten Short Essays on Marxism by Marcello Musto 2025ல் நூலாக வந்துள்ளது. 130 பக்கங்கள் ரூ 395க்கு போட்டுள்ளனர். கண்டிப்பாக வாங்கி படியுங்கள் என என்னால் பரிந்துரைக்க முடியா பல குறைகளை நான் உணர்ந்தேன்.

கூறியது கூறலாகவே நூல் முழுதும் இருக்கலாகாது. ஆகார் தவறா, அல்லது மஸ்டோ செய்த தவறா தெரியவில்லை. Preface ம் Marx and return of alternative என்கிற இயலும் எப்படி ஒன்றாகவே இருக்க முடியும் எனத் தெரியவில்லை. எல்லா கட்டுரைகளும் மிகச் சிறிய கட்டுரைகளே. சிறு சிறு செய்திகள், விவரத் துண்டுகளின் தோரணமே. மார்க்ஸ் பெயரைக் கொண்டு நூல் வந்தால், வாங்க இந்தியாவில் 2000-5000 பேர்கள் இருப்பார்கள்- விற்றுவிடலாம் என்ற வியாபார உத்தியா..ஆகார் இப்படி நூல்களை மிக அதிக விலைக்கு கொணர்ந்தால் அதன் பெயரும் கெட்டுப் போவதுடன், புகழ் வாய்ந்த authors பெயர்களும் பாதிக்கப்படும் என்றே எனக்குத் தோன்றியது.

லூகாக்ஸ் மொழிபெயர்ப்பு நூல் வாங்கி நொந்து போனேன். அல்தூசரின் for Marx மொழிபெயர்ப்பும் கூட கஷ்டப்படுத்தாமல் இல்லை. இந்த மஸ்டோ நூலும் சற்று ஏமாற்றமே..

இந்த நூலில் ஒரே ஒரு பெரிய கட்டுரை என்றால் war and the left- ரஷ்யா- உக்ரைன் போர் வரை இதில் மஸ்டோ சிறிது பேசியுள்ளார். லெனின், ரோசா, குரோபோட்கின், மாவோ தொடங்கி குருஷேவ்- பிரஷ்னேவ் வரை பேசியவற்றை கொஞ்சம் தொட்டுக் காட்டியுள்ளார். மஸ்டோ இக்கட்டுரையில் இடதுசாரிகளுக்கு பரிந்துரைக்கும் பேனர் anti

militarism- no to war என்பதே. War cannot be the continuation of politics by other means என்கிறார்.

இந்த புரிதல் அவசியம் என வருகிறார் மஸ்டோ

Indeed wars disseminate an ideology of violence, often combined with the nationalist sentiments that have torn the workers' movement apart. Rarely favouring practices of self management and direct democracy, they increase the power of authoritarian institutions. இந்த பாடத்தை இடதுசாரிகள் மறக்க வேண்டாம் என்கிறார் மஸ்டோ.

எனக்கு உள்ளுக்குள் எழுந்த கேள்வி, authoritarianism தன்னை - அரசியல் மற்றும் தன் பொருளாதார ஆதிக்கத்தை - மேலும் வலுவாக்கிக்கொள்ள யுத்தப் பாதையை தேர்ந்தெடுக்கிறதா- யுத்தங்கள் ஏகபோக அதிகாரங்களை உருவாக்குகிறதா..இரண்டும் பிரிக்க முடியா இணை செயல்பாட்டு காரணிகளா? இன்றைய கால உலக நாடுகளின் அனுபவங்கள் நமக்கு சொல்வதென்ன?...

12-4-2026

ap 21

CG- PSUs- Bank pensioners

Amendment to the TOR of 8 th CPC is a serious issue that should dominate the CG pensioners' association. If they miss the bus of 8th CPC, to keep them out, then that will be the 'new normal' to them in the future years.

The question of simultaneous practice of 'Pay and Pension revision ' had been in vogue only in the Government employees sphere especially CG sphere only. The established CPCs all along had done that practice of recommending both Pay revision to the employees on a given date and pension Revision to the pensioners on the same given date. This practice is now put at stake by the 8th CPC Notification of the BJP govt.

This Govt may get a feeling why a privilege treatment to this section of CG pensioners alone , while other pensioners retiring from PSUs and Banks are not getting the same. The Banking associations of Pensioners have been fighting , citing the case of CG pensioners benefit of revision of pension, as and when Pay revision is decided by the CPCs. Now by keeping out the reference for revision of pension in the TOR, GOI is trying reverse parity on the question of revision of pension amongst these - CG, PSU, Banking pensioners

Unless the sought amendment is seriously pursued and pushed to the 8th CPC TOR, the existing CG pensioners may feel the heat on the issue of pension revision.

PSU employees and pensioners are having different rates of DA/ DR as per their PRC status. Banking employees are having their DA status as per the existing (now 12th) bipartite settlement. Banking pensioners are getting DR as per their retirement session of the corresponding bipartite. There are many DR rates for the banking pensioners like that of PSU rates. The same picture may arrive at in the sphere of CG also, if proper amendment to the TOR of 8th CPC or some methodology for the revision of pension is not found for the existing pensioners.

Like DPE is issuing the rates of DA/ DR for PSU employees and Retirees, IBA is issuing DA for Bank employees and different DR for pensioners.

IBA has recently issued , on Feb 6, 2026, orders for DA. For the base year 2016, as per 12th Bipartite the rate of DA for Feb- April 2026 is 25 %. If anybody in the 11th bipartite, then base year 1960 and the rate of DA is 59.08 % for Feb- AP 2026

There are 8 parts of different DR rates for the bank Retirees. Bank pensioners did not get , the same revision of pension as when the employees get pay revision vide bipartite. So different 8 rates of DR is there.

If the Retirees fell during the session of 12th Bipartite, then DR 25 % for Feb- AP as that of employees. If 11th Bipartite then 59.08%, 10th then 132.20%, 9th (between

Nov 2007- Oct 2012) then 258.45, for the period 2002 Nov- 2007 Oct 334.80 like that their different DR rates are there.

DPE is now under the control of MOF. They may started thinking why a special privilege to this OPS pensioners section alone, when no such pension updation in the sphere of PSUS and Banking sectors. Something fishy is going on. Government is not transparent.

FA 2025 though having power to distinguish CG pensioners retrospectively, did not take a single paisa availed from their pockets, but may help carefully to design 'not to fill more paise to their pockets in future'. GOI so ably crafted the TOR avoiding even referring the case of existing OPS pensioners' revision . Unless the issue is seriously discerned and focus is maintained for the single demand of inclusion of 'Revision of pension' to the existing 67 lakhs pensioners, they may miss the bus of 8 th CPC and suffer by going to the streets and Courts.

It is difficult to legally enforce GOI to include pension revision in the TOR or extension of 8th CPC benefits to the existing pensioners in the court rooms. Better start negotiations at the earliest demanding 'inclusion of revision of pension' in the TOR with the concerned DOE/ MoF/ Cabinet secretary/ GOI before 8 th CPC finalises its recommendations.

BSNL pensioners' case is different. The pensioners associations are disunited , some for PRC and some others for CPC. They are eagerly waiting for their Delhi HC court case, to sustain their favourable PBCAT judgement or favourable approval of DOT for PO to 3rd PRC. The Unions are awaiting for the signed agreement to get approved by the concerned ministry. It is difficult for me to guess which way the wind will be… or suffocation for some more days..

Hoping the best as tomorrows rest only on faiths..

08 hrs 21-4-2026 R. Pattabiraman

ap 21

M C Singla - bank Pensioners case

I have written a piece about 'CG - PSU- Bank Pensioners' this morning . Bank pensioners in lakhs are waiting with great expectations about M C Singla case that comes to the SC on AP 22,23 -2026.

Unfortunately the fighter Shri Singla was no more but the case is going on. Bank Retirees are having a long drawn grievances about non settlement of pension updation after the bipartite settlement. They have cited the cases of RBI pensioners then and there updation, CG pensioners as per CPCs. Their court case has a long history of 15 years.

The bipartite settlement of 1993 assured the employees that they would also have pension scheme on the lines of RBI. During 1995 Bank Employees Pension Regulations was notified.

M C Singla and other retired officials of Punjab National Bank filed a writ in the Punjab HC during 2010 and their case was dismissed during 2012. It was cleared by the HC that there was no contractual right for pension updation and so banks were not bound to do pension revision on the lines of RBI.

Further , SLP in the SC and the case had been there Upto 2022. M C Singla passed away but the case is converted as Civil Appeal in 2023 and continued by his legal representatives.

I come to know through press clippings, the SC on Feb 2026 directed the IBA and Banks to submit a detailed comparison chart , that is the actual pension paid to

Pre 1987 Retirees, 1987-2003 Retirees, post 2003 Retirees and also observed that Banks need to pay the pension as per regulations.

IBA is citing the Ex gratia understanding during 12th Bipartite. Pensioners side advocates cited that the Corpus fund position is somewhat 4.28 lakh crores, whereas yearly outgo is somewhere near to 33000 crores only. They demanded updation on the lines of RBI.

The retired bank pensioners are having grievances that periodical updation only solve their lower pension fixed for the scales of the earlier bipartite settlement. They quote even a scale one level lower officers of the later Bipartites are getting more pension than the senior scale 5 level Retirees.

I am writing this piece only to bring the notice of CG pensioners that updation of pension of various segments like Banks, PSU BsNL / MTNL are demanding their parity with CG pensioners mechanism of 'Pay revision and Pension revision form'.

It seems that GOI has been observing all these legal battles and shrewdly avoided this time 'inclusion of revision of pension' to the existing pensioners in the 8 th CPC.

There are lot of cases with all expectations like S 30 case and case against FA 2025 and this bank pensioners Singla case. BSNL pensioners are expecting Delhi HC case.

Hope things would give solace to the stake holders. CG pensioners should think about the environment and try to push their case of revision of pension to the TOR of 8th CPC.

14 hrs 21-4-2026 R. Pattabiraman

Note: Those interested, kindly read this piece with my other one placed this morning

ap 22

So wrote M N Srinivas in 1955 when discussing Mysore about Dominant Caste

" A caste may be said to be dominant when it preponderates numerically over other castes, and when it also wields preponderance economic political power.

A large and powerful caste group can more easily be dominant if its position in the local caste hierarchy is not too low"

As per MNS definition, dominant caste has 3 attributes.

Its numerical dominance

Economic and political dominance

Not too low in the rungs of caste hierarchy ladder

In a way (though not absolutely) democratic elections are reduced to a power sharing exercise of dominant castes ...ofcourse with the connivance of its alliance castes

The dominant political parties cannot remain contented with a single dominant caste, it should accommodate various shades to keep its profile above castes but allow discourses of that shades . This will be reflected in its office bearers list and if winning in the list of Ministers.

Politics In India is a wonderful book edited by Sudipta Kaviraj , analyzing Indian political sociology by various popular intellectuals like Kothari, Dumont, Dirks, Rudolph, Brass, Dipankar, Ashis Nandy, T N Madan, Bilgrami etc.

A book worth to read

22-4-2026

ap 22

ஏப்ரல் 22 நேபாள் கம்யூனிஸ்ட் கட்சி கல்கத்தாவில் 1949ல் தொடங்கப்பட்ட நாளும் கூட. நேபாள் கம்யூனிச இயக்கத்திற்கு 77 ஆண்டுகள் நீண்ட வரலாறுண்டு,பிளவுகள் இருந்தாலும்..

நேபாளில் இளைஞர்களின் எழுச்சி, சமூக வலைத்தளங்களின் activism, ஆட்சியாளர்களின் ஊழல்- அதிருப்தி, அங்கே புதிய அரசாங்கத்தைக் கொணர்ந்துள்ளதை அனைவரும் அறிவோம். ராஷ்ட் ரிய சுதந்திர கட்சி தனிப்பெரும்பான்மைப் பெற்று, பாலேந்திர ஷா ஆட்சி பொறுப்பேற்றுள்ளார். பாரம்பரிய கட்சிகளான நேபாளி காங்கிரஸ், கம்யூனிஸ்ட் மற்றும் மாவோ மய்யம் சரிவைக் கண்டன.

நேபாளில் 275 இடங்கள். இதில் நேரடி தேர்தலுக்குரியவை 165, மீதியுள்ள 110 இடங்கள் proportional representation க்குரியவை. ஆர் எஸ் பி கட்சி இளைஞர்களின் எழுச்சியான ஆதரவுடன் 125 இடங்களையும் , விகிதாச்சாரப்படி 57 இடங்களையும் ஆகக் கூடுதலாக 182 பெற்று ஆட்சி அமைத்தது. 2022 தேர்தலில் இக்கட்சி 21 மட்டுமே பெற்றிருந்தது.

2026 தேர்தலில் , நேபாளி காங் 38 (18+20), நேபாள் கம்யூனிஸ்ட் கட்சி 25 (9+16), மாவோ மய்யம் 17 (8+9) பெற்றனர். 2022 தேர்தலில் இக்கட்சிகள் முறையே 89, 78, 32 யை பெற்று பெரிய கட்சிகளாக அவையில் இருந்தன.

பாலேந்திர ஷா ஆட்சியில் பல சீர்திருத்தங்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. 5 வது வரை மாணவக் குழந்தைகளுக்கு தேர்வு இல்லையாம். Dewesternisation of Schools என்கின்றனர். பல்கலையில் கட்சி சார் மாணவர் அமைப்புகளுக்கு தடையாம்.

அரசியல்வாதிகள் அனைவரின் சொத்து கணக்கீடு, ஊழல் எனில் தண்டனைகள். இது கடந்த 2006-26 - 20 ஆண்டுகளுக்கான காலக் கணக்கீடாம். சிவில் சர்வீஸ்களில் அரசியல் மய்யம் தடுக்கப்படுமாம்.

தனியார் மருத்துவ மனைகளும் கட்டாயம் ஏழைகளுக்காக 10 சத படுக்கை ஒதுக்கீட்டை செய்ய வேண்டும். அதேநேரத்தில் தனியார் தொழில்களுக்கு அரசாங்கம் முழுமையாக உதவியாக இருக்குமாம்.

5 ஆண்டுகளில் வறுமை குறைப்பு குறைந்தது 10 சதமாவது இருக்கும் என்கிற உறுதிமொழி. நலத்திட்டங்கள் முழுமையாக டிஜிட்டல் மயமாக்கம். பயனாளிகள் எவர் என்பது கவனிக்கப்படும். இதில் அரசியல் தலையீடுகள் இருக்காது.

சமூக நீதி என்கிற அம்சத்தில் தலித் ஒடுக்கப்பட்டவர் சமூகத்திடம் அரசாங்கமே காலம் காலமான ஒடுக்குதலுக்கு அதிகார பூர்வ மன்னிப்பு. Recording State Apology publicly to Dalits with proper focus on the areas of structural injustices.. இந்த செயல் நடைமுறையில் நில விநியோகம், வேறு பொருளாதார சமூக சமத்துவ காட்சிகளை தருமா என பார்க்க நாம் காத்திருக்க வேண்டும்.

நேபாளிலிருந்து வேறு நாடுகளுக்கு தினம் 1500 நபர்களாவது வேலை தேடி செல்கிறார்கள் என்கிற செய்தி கிடைக்கிறது. இந்த migration அச்சமூகத்தின் மிக முக்கிய பிரச்சனை. வேலை வாய்ப்புகள் உருவாக்கம் 12 லட்சம் அளவிலாவது என்கிற அறிவிப்பே அங்கு பெரிதான எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது.

புதிய அரசாங்கம் , பொதுத்துறைகளில் party affiliated unionsகளுக்கு தடை என்கிறது. Our aim is removing party control over institutions என்கிறார்கள். காங், கம்யூனிஸ்ட் தொழிற்சங்களுக்கு தடை எனச் சொல்லி, வருகிற காலத்தில் தங்கள் ஆதரவாளர்களின் இயக்கத்தை வலுப்படுத்தும் செயலாகவே இவற்றை பார்க்க வேண்டியுள்ளது. Depoliticisation of work places- no party based activity in work places எனச் சொல்லி வருகின்றனர். இதை தொழிற்சங்கம் மீதான தாக்குதல் அல்ல, சீர்திருத்தங்களில் ஒன்று எனவும் சொல்லி வருகின்றனர்.

நேபாள் காங்கிரஸ் மக்களுக்கு பலன் தரும் சீர்திருத்தங்களை வரவேற்கிறோம்..ஆனால் அரசாங்கம் மய்யத்தில் அதிகார குவிப்புகளை செய்கிறது என விமர்சித்துள்ளது. நேபாளின் பன்முக அரசியல் தன்மையை ஒடுக்க அனுமதிக்க முடியாது என்கின்றனர்.

கம்யூனிஸ்ட்கள் கார்ப்பரேட்களுக்கு ஆதரவாக புதிய அரசாங்கம், Neo liberal reforms, not people’s reform - தொழிற்சங்கங்கள் மீதான தாக்குதல் சமூக பின்னடைவாக்கும் செயல் எனச் சொல்லியுள்ளனர். State apology just symbolic to Dalits எனவும் சொல்லியுள்ளனர். Without economic reform, apology is meaningless என்கின்றனர்.

பார்க்கலாம் ..இந்த ஜென் zக்கள் ஆதரவில் அமர்ந்த ஆட்சியை..

22-4-2026

இந்தியாவில்- குறிப்பாக தமிழகத்தில் தனித்து அரசியல் என்ற ஒற்றை சாளரம் வழியாக மட்டுமே பார்த்துவிடாமல், சமூகவியல்- சோசியாலஜி என்கிற சாளரமும் புரிதலுக்கு தேவைப்படுகிறது. எனவே தான் political என்பதையும் விட, political sociology என்கிற உராய்வு கருவியை ஆய்வாளர்கள் எடுத்துக்கொள்கின்றனர்.

என்ன நடக்கிறது- எப்படியான மாறுதல்களுடன் நடக்கின்றன- அவைகளின் நிலைத்தன்மையென்ன என பல்வேறு கோணங்களில் political sociology பேசப்பார்க்கிறது. அனைத்துமே மானிட முயற்சிகள்தான்- சரி/ தவறுக்குள், அவரவர் resources பொறுத்து என்பதையும் இதில் சேர்த்து பார்க்க வேண்டியுள்ளது.

மிக முக்கிய ஆய்வறிஞராக விளங்கி மறைந்த ஆந்த்ரு பெடய்லி, சீனிவாஸ் கேள்வியை தன் ஆய்வில் மீள எழுப்பினார். வயது வந்தோர் வாக்குரிமை, மாறுபட்ட வகையில் சாதியை வளர்த்துவிட்டதா? இல்லையெனில் சாதி கூட்டமைப்புகளை வைத்துக்கொண்டு அரசியல் தன் அதிகார சுற்றை நடத்துகிறதா?

இப்படி ஏராள கேள்விகள், பதில்களை தேடும் முயற்சிகள், கருத்தாக்கங்கள் நிறைந்த நூலாக Politics In India , தனது 37வது பதிப்பாக 2025ல் வந்துள்ளது. OUP paperback edition இது. 1997ல் சுதிப்தா கவிராஜ் எடிட் செய்து, புகழ் வாய்ந்த சோசியலாஜிஸ்ட் பலர் இதில் தங்கள் பங்களிப்பை செய்துள்ளனர். சில ஆய்வுத் தலைப்புகளையாவது இங்கு சொல்லவேண்டும் எனத் தோன்றுகிறது.

சுதிப்தா கவிராஜின் பெரும் அறிமுக கட்டுரையுடன், இந்நூல் 7 பகுதிகளை கொண்டுள்ளது.

Politics and Social Structure- இதில் லூயிஸ் டுமண்ட், ரஜ்னி கோத்தாரி, ஆந்த்ரே பெடய்லி, பார்த்தா சாட்டர்ஜி ஆகிய 4 பேர்களின் தனி ஆய்வுகள் இடம் பெற்றுள்ளன.

Historical Refigurations of Power என்பதில் சதிஷ் சபேர்வல், சுதிப்தா, நிக்கோலஸ் டிர்க்ஸ் ஆகியோரின் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

Caste and Class பகுதியில் லாயிட் ருடோல்ப் சூசன்னா ருடோல்ப், மார்க் கலந்தர், பால் பிராஸ் எழுதியுள்ளனர்

Sociology and Identity பிரிவில் திபங்கர் குப்தா, மைரான் வெய்னர் ஆகிய இருவரின் ஆய்வுகள் இருக்கின்றன

Sociology of Political Parties என்பதில் ஜேம்ஸ் மானர் கர்நாடகா குறித்தும், புருஸ் கிரஹாம் ஜனசங்கம் குறித்தும் கருத்தாய்வு தந்துள்ளனர்

Sociology of Religion என்பதில் பிபின் சந்த்ரா, ஞானந்திர பாண்டே, ஹர்ஜோட் ஒபராய், அஷிஷ் நந்தி, டி என் மதன், அகில் பில்கிராமி போன்ற புகழ் வாய்ந்தவர் எழுதியுள்ளனர்.

இறுதிப் பகுதியான Sociology of State Crisis என்பதில் பிராங்கல், அதுல் கோலி எழுதியிருக்கின்றனர்.

சுதிப்தாவின் அறிமுகம் சொல்கின்றவற்றிலிருந்து சில அம்சங்களை தரப்பார்க்கிறேன். அரசியல் சமூகவியல் ஏன் என விவாதிக்கிறார் சுதிப்தா.

To understand systematically the underlying social forces that determine the shapes and lines of movement in political life. இதில் எந்த வறட்டுவாதமும் இல்லாமல் ஆய்வை மேற்கொள்வது . மார்க்சியர்கள் பாரம்பரியமாக பார்த்து வந்த 'மேற்கட்டுமானம்- அடித்தளம்' இரட்டைத்தன்மை என்பதை தாண்டிச் செல்லல்- using the tools of both disciplines- politics and sociology

சாதிகள் தொழிற்படாமல் இருந்த பழங்குடிகளை சாதி அடையாள இந்து சமூகம் உள்ளிழுத்தல்

முஸ்லிம், கிறிஸ்துவ சமூகங்களும் quasi castes சமூகமாக தொழிற்படல்

செட்யூல்ட் பிரிவினர் என்கிற அரசமைப்பு பொலிட்டிகல் சொல்லாடலுடன் - a caste for others, constituting a caste for themselves- self conscious agent of modern political action

Manipulation of (by political class) the existing traditional identities in political practice- keeping the memory of identity of castes

Non Brahmin என்கிற பெருந் தொகுப்பின் அரசியல் அதிகார சுற்றோட்டம் BCக்கள் என்கிற பெரும் தொகுப்பு மய்யத்தில்- குறிப்பாக வட்டார dominant caste சுற்றி

பிராம்மணர்களின் பொருளாதார சமூக செல்வாக்கு

இருவகை ஆய்வுப்பார்வையை சுதிப்தா இதில் நகர்த்துகிறார். ஒன்று டி டாக்குவில்லே தந்த (நேரு காலத்திய ஆய்வில்)

India seemed to operate a democratic government in the absence of democratic society

பல அரசியல் அதிகார நகர்வுகள், தேர்தல் வெளிச்சங்கள் பார்த்து கிடைக்கும் வேறு ஒரு பார்வையையும் தருகிறார்.

Indian politics may have become more casteist, and Indian society less caste ridden

Electoral politics, instead of contributing to a fading away of castes, led to a reinforcement of identities in a startlingly non traditional way

The transition from caste to class is not a simple, linear, symmetrical transformation, so that the upper layers caste society move simply into the corresponding upper layers of a modern class order.

இன்னொன்றையும் சுதிப்தா இடது பார்வையில் முன் வைக்கிறார்

Historically, there has been a sort of class effect of caste, without caste being whittled down. Caste has taken over some of the political functions of class

காந்தி குறித்து சுதிப்தா இவ்வரிகளை சொல்கிறார்

..his doubts about both the desirability and feasibility of the structures of modern life could be given a very persuasive historical sociological form..modernists cannot ignore his judgement that western forms of politics would not work successfully, because those would go against the grammar of social power

சுதிப்தா , இந்நூலில் சில கட்டுரைகள் சாதி, மதம் என்கிற பாரம்பரிய சமூக கட்டுமானம், காலனிய அரசியல் அதிகார வெளியில் அடைந்து கொண்ட மாற்றங்கள்- unpredictable transformations through modernity, especially modern politics rather than the modern industrial or capitalist economy என்பதை பேசுமென்கிறார்.

இந்நூலில் இருக்கின்ற அனைத்து ஆய்வுத் தாள்களும் மிக கவனமான வாசிப்பு - புரிதல் உழைப்பைக் கோரக்கூடியன. பார்க்கலாம்..வாய்ப்பிருந்தால் சில கருத்தாக்கங்களையாவது நாளடைவில் பேச முடிகிறதா என்று...

24-4-2026

ap 25

டிராட்ஸ்கி சொன்னார் History gives nothing free of cost

எந்த அரசியல் கட்சியும் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் காட்டிய அதே புரட்சிகர அரசியல் உணர்வை, அதிகாரம் பெற்ற பின்னர் அப்படியே காட்டமுடியாது என்கிற அனுபவத்தைப் பெறுகின்றனர். இப்போது ஆட்சி அதிகாரம் அவர்களிடம் என்கிறபோது, அவர்களுக்கு எதிராக எங்காவது ஏதாவது எதிர்ப்புணர்வு நிலவுவதைக் கண்டால்- எதிர்ப்பாளர்களின் புரட்சிகர அரசியல் எழுந்தால் , அவர்கள் எதிர்கொண்டு அடக்கி சமாளிக்க வேண்டியிருக்கும்.

பிரிட்டிஷ் எதிர்ப்பில் இருந்த நேரு, பிரதம அமைச்சர் நேரு ஆனபோது வித்தியாசத்தை அவர் ஆட்சியின்போது உணர்ந்தார். ஜேபி போர்க்கொடி தூக்கியபோது, தொழிலாளர் போராட்டம் எழுந்த போது- then I was an agitator, now an administrator என்றே அவர் தன் நிலையை சொல்ல நேர்ந்தது.

லெனின். டிராட்ஸ்கி போன்ற அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் அதிகாரம் பெற்ற தலைவர்களுக்கும் ’இதே அன்றைய போராளிகள்- இன்றோ நிர்வாகத்தினர்’ என்ற அனுபவம் உருவானது.

இதற்கு முன்னர் ஓர் இடுகையில் லெனின் தனது புதிய பொருளாதாரக் கொள்கையை, தொழிற்சங்கங்கள்- பாட்டாளி வர்க்கம் எப்படி புரிந்து கொள்ள வேண்டும் எனப் பேசியதை சொல்லியிருந்தேன். ஆட்சி செய்யும் கட்சி சார்ந்த சங்கங்களுக்கு ’வர்க்க நலனா- கட்சியின் ஆட்சி அதிகாரத்தைக் காப்பாற்றும் நலனா’ என்கிற பிரச்சனை எழுகிறது. தன் கட்சியால்தான் பலன்கள் உருவாகும் என்கிற நம்பிக்கை அங்கு தொழிற்பட வேண்டியுள்ளது. தொழிற்சங்க பலத்தை விட ஆட்சி அதிகார பலம் பன்மடங்கு கூடுதலானது என்கிற புரிதலும் அவர்களிடத்தில் அனுபவத்தில் வந்தேறிக்கொள்கிறது. இதனால்தான் தொழிற்சங்க செயல்பாட்டாளர்களில் பலர் கட்சி சார் பணிகளில் கூடுதல் கவனமும் செலுத்துவதைக் காண்கிறோம். எங்குமே control area என்பது பலமாகப் பார்க்கப்படுகிறது.

தோழர் டிராட்ஸ்கி 1923ல் எழுதிய இரு முக்கிய கட்டுரைகளின் தாக்கத்தால் மேற்குறித்த செய்தியை எழுத நேர்ந்தது. 1923 நவம்பரில் டிராட்ஸ்கி தன் அறிவுரையை ‘ரெட் ஆர்மி’ மற்றும் தொழிலாளர்க்கு தரும் வகையில்

Man does not live by politics alone என்ற கட்டுரையை எழுதினார். அதில் அவர் தந்த மய்யச் செய்தி

We have got to learn to work well, punctually, neatly, economically. We need culture in work, culture in life, culture in our habits..What is needed here is a long process of self-education by the working class and the peasantry.

புரட்சிக்குப் பின்னரான ஆட்சி என்கிற உணர்வை பாட்டாளி மற்றும் ரெட் ஆர்மி வீரர்கள் பெற வேண்டும் என்கிற அவசரத்தை லெனினும், டிராட்ஸ்கியும் உணர்ந்தனர். அதற்கான கலாச்சார தேவைகளை உருவாக்க விழைந்தனர். இதை வலியுறுத்தும் முகத்தான் டிராட்ஸ்கி எழுதியது

We are compelled to recognise a radical change in our point of view with regard to Socialism. The radical change is this: formerly we laid emphasis – we were compelled to do so – on the political struggle, on revolution, and on the conquest of power; while now we must lay all our emphasis on peaceful organisation and on "cultural" work

புரட்சிக்குப் பின்னரான கட்டுமானத்திற்கான அமைதிச் சூழல் விழையப்பட்டது. நேருவும் இதைத்தான் இந்தியாவில் எதிர்பார்த்தார். ஆனால் அவருக்கு அது தரப்படவில்லை. இங்கு 1948 பி டி ஆர் லைன் தொழிற்பட்டு, பி சி ஜோஷி கால வளர்ச்சியை சரியச் செய்த அனுபவத்தைப் பார்த்தோம்.

டிராட்ஸ்கி, லெனின் சொன்ன அறிவுரை உணரப்பட வேண்டிய அரசியல் என எழுதுவதைக் காணலாம்

Even Lenin's advice – to transfer our attention from politics to culture – is political advice. When Lenin says, "A little less politics, a little more economics," he was taking "politics" in the narrow specialised sense என்று டிராட்ஸ்கி சொல்லியிருப்பார்.

படிக்காத ஆடு மேய்ப்பவர் கூட மெக்கானிக் ஆகப் போகும் மாற்றத்தை நாம் கொணரப்போகிறோம். பெரும் கல்வி சமூகமாக ரஷ்யா மாறும் என்பதை டிராட்ஸ்கி இதில் புரியத் தந்திருப்பார்.

இன்னொரு முக்கிய அறிவுரையை டிராட்ஸ்கி தந்திருப்பார். ஆலைகளில் பல தொழிலாளர்கள் கட்சி சாராமல் இருப்பர்- politically different ஆகவும் இருக்கலாம். நாம் பேசுவதைக் கேட்காமல் அலட்சியமாகக் கூட இருக்கலாம். ஆனால் அவர்களை நாம் அவர்களின் தொழில் நேர்த்தி, உற்பத்தியில் நேர்மை ஆகியவற்றைக் கொண்டு பார்க்க வேண்டும். நட்பாடவேண்டும்- எதிரியாக்கிவிடக்கூடாது என்றார் டிராட்ஸ்கி.

How can this be achieved? It is difficult to get in touch with this type of workman along the lines of pure politics. He has heard all we have to say. He is not interested. He thinks in terms of his work-place and he is not too pleased with all that is happening at present at his work-place in the shop, in the factory, in the Trust. These workers want to think things out for themselves, they often have a reserved, “shut-up” attitude; it is from this class of workers that self-taught inventors come.

We cannot approach them on the political side, or at least we cannot in that way touch them very profoundly, but we can and we must reach them through production itself and through technical skill.

ஆட்சி அதிகாரம் இருந்த சமூகத்திலேயே இப்படிச் சொன்னால், ஆட்சி அதிகாரம் இல்லா சமூகங்களில் இந்த அறிவுரை மேலும் கூடுதலாக கவனப்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகத் தெரிகிறது.

Non political workers என்பதால் traitors எனப் பார்க்காதீர்கள்- உற்பத்தியில் அவர்களின் ஈடுபாட்டைப் பாருங்கள் என டிராட்ஸ்கி தொடர்ந்து பிராவ்தா ஏட்டில் எழுதிக்கொண்டும் வந்தார்.

But being the Communist Party, we want these workers consciously to connect their individual productive work with the problems of socialist construction as a whole

July 10, 1923 பிராவ்தாவில் டிராட்ஸ்கி எழுதிய அறிவுரை

But how is this to be achieved? To approach this type of worker on purely political lines is very difficult. He has heard all the speeches that were spoken and does not care for more. He is not inclined to join the party. His thoughts are centred on his work, and he is not particularly satisfied with the present conditions in the workshop, in the factory, in the trust. Such workers generally try to get at the bottom of things themselves, they are not communicative, and are just the class which produces self-taught inventors. They are not responsive to politics—at least not whole-heartedly—but they might and should be approached on matters concerning production and technics.

இந்த அறிவுரைகள் பரவலான தொழிலாளர்களை அரவணைத்து செல்ல வேண்டிய அனைத்து தொழிற்சங்க அமைப்புகளுக்கும் தேவையானவை என்றே தோன்றுகிறது.

வரலாறு எதையும் சும்மா தந்துவிடுவதில்லை என்பார் டிராட்ஸ்கி. அவர் சொல்வதைப் பாருங்கள்

History gives nothing free of cost. Having made a reduction on one point—in politics, it makes us pay the more on another—in culture

25-4-2026

ap 25

எந்தச் சர்வாதிகாரமும் அதன் வெளித்தோற்றத்திற்கு ஏற்ற வகையில் உள்ளேயும் இயங்குவதில்லை. உள்ளே அதன் அதிகாரத்திற்கு முரணான பல எதிர் ஓட்டங்களும் எதிர் இயக்கங்களும் இருந்துகொண்டேயிருக்கும்.

(அமைப்புகளில் கூட்டங்களில்) கருத்து நிலையில் நிலைநாட்ட வேண்டிய ஒன்றை, உடல் பலத்தால் நிலைநாட்ட முயற்சி செய்வது என்றால் அது முழு வீழ்ச்சியையும் தொட்டுவிட்டது என்பதுதான் அர்த்தம்

தன் சக்தியையும் உருவத்தையும் விட மிகப் பெரிதான, அவற்றின் குறைகள் தெரியாத, யாருக்கும் பிடிபடாத நழுவலான ஒரு பெருநிழலை வளர்ப்பது...

- மு தளையசிங்கம்   ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி

Hemingway wrote so

As a writer I believe in the absolute minimum governance, owes no allegiance to any government. If he is a good writer he will never like the government he lives under. His hand should be against it and its hand will be always against him

(as quoted in the above book

ap 26 2026

சுதிப்தா கவிராஜ் பொறுப்பில் வந்த politics In India நூலை , முன்னொரு இடுகையில் சொல்லியிருந்தேன்.

400 பக்க அளவில் மிகவும் அடர்த்தியாக விவாத கருத்தாக்கங்களை கொண்ட நூல். அரசியல் சமூகவியல் மற்றும் வரலாற்று சமூகவியல் என்கிற துறைகளின் வளர்ச்சிப் போக்கை பெரிதும் சார்ந்து நின்று 7 பகுதிகளில் 20 அறிஞர்களின் ஆய்வுகள் இதில் இடம்பெற்றுள்ளன.

சென்ற இடுகையில் சுதிப்தாவின் நூல் பேசும் subject matter குறித்த அறிமுகப் பகுதியிலிருந்து கொஞ்சம் எழுதியிருந்தேன். இந்த இடுகையில் politics and Social Structure பகுதி சார்ந்து, என் புரிதலுக்கேற்ப சிலவற்றை இங்கு வைக்கப் பார்க்கிறேன்.

நவீன இந்திய அரசியல் குறித்த வரலாற்று கேள்வி ஒன்றை இப்பகுதி எழுப்புகிறது.

Would the State succeed in altering the practices of the society, or succumb to their pressure?

காலம்காலமான சமுக நடவடிக்கைகள் என்பவற்றை அரசால் முற்றிலுமாக மாற்ற முடிந்ததா? அல்லது சமுகத்திற்கு அஞ்சி அரசு பணிந்து நிற்கிறதா.. என் புரிதலில் ஆம் - இல்லை என்கிற இரு பதில்களும் இதில் சாத்தியமாகவே செய்யும்.

காலனிய மரபின் மீது எழுந்த அரசு தான் என்றாலும், விடுதலை இயக்க தாக்கத்தின் superimposing அது என்பதையும் கவனத்தில் கொள்ளாமல் விட முடியாது எனப் புரிந்து கொள்கிறேன். மராபார்ந்த சமுகத்தின் அனைத்து 'the so called மூட நம்பிக்கைகளையும்' அரசால் அடித்து வீழ்த்த முடியா திணறலையும் பார்க்கிறோம். அரசாங்கமே 'நம்பிக்கைகளை' - பகுத்தறிவு பெயரிலோ, புத்தாக்கம் பெயரிலோ , இன்னும் நீதிமன்ற வளாகத்திலோ கூட - கேள்விக்கு உட்படுத்த முடியாது என வக்காலத்து வாங்குவதைப் பார்க்க முடியும்.

அறிவியல் சாலைக்கான அந்தஸ்திற்கு புனிதம் கூட்டி, மரபு கட்டிக் காக்கும் புனிதங்களை சிதறவிடோம் என்கிற எதிர்மறை போராட்டங்களும் நடவாமல் இல்லை. 'நம்பிக்கை' உள்ளே வராதே என்ற குரல் இந்திய சமுகம் நெடுக கேட்பதைக் காண்கிறோம்.

அரசு உருவாக்கம் என்பதோ, மரபு உருவாக்கம் என்பதோ முடிந்த முடிவான ஒன்றல்ல- அனுசரித்து ஒத்துப்போதலும், மோதி சரி செய்ய

எத்தனிப்புகளும் நடக்கும் களமாகவும் அமைந்து வருவதை அவதானிக்க முடியும்.

நவீன அரசியலில் சாதி கோட்பாடு, அரசியல் பிளவுண்ட தன்மை கொண்டதாக இருந்தாலும், ஆட்சி அதிகார போராட்டத்தில் சேர்ந்திசை நகர்வுகளை சமரசங்களை செய்வதும் நடக்கிறது.

ரஜ்னி கோதாரி தனது caste and modern politicsல் ஒன்றை கவனப்படுத்துகிறார். நவீன சமுகம், இருக்கின்ற முந்தைய கட்டமைப்பிலிருந்து அதனுடன், குறிப்பாக ஜனநாயகம் சார்ந்த ஒன்று என்கிறபோது, ஊடாடி ஊடாடித்தான் தன்னை தகவமைத்துக்கொள்ள வேண்டும்.

..can proceed only by a conversation between the old and the new, fusion of elements, and a readiness on the part of both the moderns and the ancients to be flexible and accommodative.

இந்த Flexible and accommodative தன்மை இல்லா நிலையில், நவீனமோ மரபோ தன் நிலைப்பாட்டை உறுதியாக்கும் பிரிவினர் வழி சமூக பதட்டங்கள் உருவாவதை நாம் காண்கிறோம்.

நவீன சமுகம் என்பது கட்டி முடிக்கப்பட்ட இறுதி வடிவம் அல்ல..அது in process என்கிற புரிதலும் தேவையாகிறது. அது பழமை மரபிலிருந்து -நவீனம் நோக்கிய பாதையில் எனப் பார்க்க வேண்டியுள்ளது. இங்கு கோதாரி சொல்வார்

It simply moves from one threshold of integration and performance to another, in the process transforming both the indigenous structures and attitudes and newly introduced institutions and ideas.

இந்திய மக்களின் அரசியல் புரிதல் மற்றும் விருப்பங்களுக்கு ஏற்ப அமையும் அரசாங்கங்கள், இந்த மாற்றத்தை துரிதப்படுத்தி நவீன institutionsகளின் தன்மையை உயர்த்துகிறதா , அல்லது பிரேக் பிடித்து slow செய்கிறதா என்பதை நாம் அவ்வப்போது அனுபவிக்கிறோம்.

அரசியல்வாதிகளும் நவீன சட்டமன்ற, நாடாளுமன்ற அதிகாரத்தைப் பெற, மரபான caste institutionகளை சாமர்த்தியமாக பயன்படுத்த வேண்டியுள்ளது. அரசியலில் சாதி என்பதும், சாதியை அரசியல்மயமாக்குவது என்பதும் இங்கு ஊடாட வேண்டியுள்ளது. More and more politicisation of castes என்பதை நவீன அரசியல் மரபான சாதி நிறுவனங்களின் மீது செய்து வராமல் இல்லை. நவீன அரசியல் நிறுவனங்களை , சாதியாகிய என்னைப் பார்க்காமல் நீ இயங்க முடியாது எனவும் மரபு சொல்லாமல் இல்லை.

Mass based politics என்பது எங்கெல்லாம் மக்கள் திரளோ அங்கெல்லாம் நடைமுறையில் போக வைக்கும். Feudal aspects of democracy என்றும், அறிஞர் ருடோல்ப் சொன்னது போல the democratic incarnation of caste என்றும் புரிதல்கள் அரசியல் சமுகவியலில் இருப்பதைக் கேட்கலாம்.

சாதியின் identification and integration aspects பற்றி கோதாரி விவாதிக்கிறார்.

The caste system not only determines the individual's social station on the basis of the group to which he is born but also differentiates and assigns occupational and economic roles..

...the competitive Democratic politics involves not only distributive and conflictual aspects but also aspects of group actions..

இந்திய சமுகத்தில் caste - class mapping இருந்தாலும் அது அப்படியே முற்றிலுமாக இழுத்து map செய்யக்கூடிய fixity ஆகவும் இல்லை என புரிந்து கொள்கிறேன். அதில் நெகிழ்தல்கள் நடவாமல் இல்லை. இறுக்கம் இற்றுப்போகவில்லை.

கோதாரி சொல்லும் மற்றொரு அம்சம் , இந்திய சமுகம் மேற்குமயத்தையும், செக்யூலரிசத்தையும் மெல்ல மெல்லவே உள்வாங்கிக்கொள்ளும் சமுகமாக இருக்கிறது. இங்கு சுவையாக கோதாரி சொல்வது

..the integrative and ideological aspects of caste have provided a sophisticated and differentiated cultural background for receiving the modernist impacts and responding to them without either great disruption or great withdrawal or hostility..

சுருங்கச் சொன்னால் இந்திய சமுகம் இருவழிகளிலும் செல்லப் பார்க்கிறது..modernising the traditional society and traditionalisation of modernity… இங்கு பூமியில் தேரும் இழுக்க வேண்டும் அதற்கு இராட்சத எந்திரங்கள், வானில் ராக்கெட்டும் விடவேண்டும், அப்போது தேங்காயும் உடைக்க வேண்டும்..

26-4-2026

ap 27

இந்தியாவில் நடந்த பிரிட்டிஷ் ஆட்சியை இந்திய மக்களுக்கான legitimate அரசாங்கம் என ஏற்காத உரையாடல்களின் பெருக்கம்தான் விடுதலை போராட்டம் என்ற வடிவம் எடுத்தது. குவிட் இந்தியா என்கிற முழக்கமானது.

சரி. பிரிட்டிஷார் போனால் எவரின் ஆட்சி என்கிற கேள்வியும் அதன் வழி அக்கேள்வி எழுப்பியவர்கள் பெருக்கிக் கொண்ட உரையாடல்களும்,விடுதலை போராட்ட சூழலில் உடைவுகளை உருவாக்கின. இதில் ஜின்னா, அம்பேத்கர், பெரியார், வலதுசாரிகள், இடதுசாரிகள் என பல வண்ணங்கள் இருந்தன.

பிரிட்டிஷ் போனால் இந்துக்களின் ஆட்சி என்கிற அச்சம், முஸ்லீம்கள் தனிநாடு கோரிக்கையாகி பாகிஸ்தான் என்கிற realised தன்மை உருவானது. இந்துக்களின் ஆட்சி என்பதில் பிராம்மண பனியாக்களின் அதிகாரம் என்கிற உரையாடல் நீதி கட்சி- திராவிட இயக்கங்கள் வழியாகி அது 'திராவிடஸ்தான்' என்கிற முழக்கம்- மேப்- கொடி வரைவு வரை சென்றது. அது நடைமுறையாகவில்லை.

அம்பேத்கர் தலித்களின் உரிமைக்கு என்ன உத்தரவாதம் என்கிற உரையாடலை முன்னெடுத்தார். அரசமைப்பு வழி உரிமைகள், தனி வாக்காளர், ஒதுக்கீடு, தனி குடியேற்ற முறை போன்ற உரையாடல்கள் நடந்தன. பாகிஸ்தான் நீங்கிய இந்தியப் பகுதியில் அவரால் சாதிக்க முடிந்த அரசமைப்பு பாதுகாப்புகளை உருவாக்குவதில் வெற்றி பெற்றார்.

அனைவருக்கும் வாக்குரிமை அடிப்படையில் ஒன்றுபட்ட இந்தியாவில் அமையும் ஆட்சியை legitimate அரசாங்கம் என ஏற்க முடியுமா என்கிற சந்தேகமே ஜின்னாவை, பெரியாரை, அம்பேத்கரை வேறு வழிகளை- காந்தி, காங்கிரஸ் முன்னெடுத்த போராட்டங்களிலிருந்து மாறுபட்ட நிலைப்பாடுகளை எடுக்க வைத்தது.

வலது இந்து மகாசபா இந்துத்துவா பார்வை உரையாடல்களை மூஞ்சே, சாவர்க்கர் வழியில் பெருக்கியது. தந்தை நிலம்- புண்ணிய பூமி நிபந்தனைகளில் அனைவரையும் அடக்கப் பார்த்தது. அவர்களுக்கான ஆட்சி அதிகாரம் கிடைக்க பல ஆண்டுகள் காத்துக் கிடந்து ஜனசங்கம் - ஜனதா- பாஜக அரசாங்க சோதனைகள் நடக்கலாயின.

இடதுசாரிகள் 'பூர்ஷ்வா- பிரபுத்துவ அரசு' வரையறையை வைத்தனர். நாடாளுமன்ற ஜனநாயகத்தால் மக்கள் நல்வாழ்வு சாத்தியமாகுமா

என்கிற சந்தேகம் இருந்தது. சோசலிச, சோவியத் வகைப்பட்ட அரசாங்கம் என்கிற கனவு அவர்களிடம் இருந்தது. இந்திய விடுதலைக்குப் பின்னரான தேர்தல் முறைகளில் பங்கேற்று இடதுசாரிகளால் மாநில அரசாங்கங்களை அமைப்பது என்கிற சோதனைகளில் வெற்றிபெற முடிந்தது. மத்திய அரசில் பங்கேற்பது என்கிற சோதனையை சிபிஅய் செய்து பார்த்தது.

வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்கிற தேர்தல் முறையில் மக்களின் விருப்பத் தேர்வு நடைபெறும், அதனால் அமையும் அரசாங்கத்திற்கான legitimacy உருவாகும் என்பது இங்கு rupture ஆகவே தொழிற்பட்டு வருவதைக் காண்கிறோம்.

சாதி, மதம், பால், இனம் , ஏழை, பணக்காரர், நிறம் என அனைத்தையும் தாண்டி ஒரு மனிதர்- ஒரு வாக்கு என்கிற one value மதிப்பு அரசமைப்புப் படி தரப்பட்டாலும் - அந்த ஒரு மனிதர் என்பவர் individuating என்பதற்கு மேலாக கம்யூனிட்டி சாதி, மதம், இனம், பணம் , ரசிகத்தன்மை , இசம் என பல செல்வாக்கு ruptureகளில் சிக்க வைக்கப்பட்டு அவரது வாக்கை செலுத்தும் நிலைக்கு தள்ளப்படுகிறார். இதை அவர் மனம் உவந்து முழு ஏற்புடன் கூட செய்யக்கூடியவராக இருப்பதையும் காண்கிறோம். சமுக மனிதர் என்கிற வகையில்தான் அவர் வாக்களாரராகிறார்.

கடந்த ஆயிரம் ஆண்டு இந்திய சமுகம் தன் வாழ்நிலையில் அரசர்- அதிகாரம் என்பதிலிருந்து தள்ளியிருந்த சூழலிலிருந்து, விடுதலைக்குப் பின்னர் அரசாங்கத்துடன் நெருக்கமாக கட்டப்படுதல் என்கிற பெரிய மாற்றத்தைப் பார்த்து வருகிறது. Political power- social order என்பதற்கான தூரக் குறைப்புத்தான் பிரிட்டிஷ் வெளியேற்றம் - தேசிய கட்சிகள் ஆட்சி உருவாக்கம் என்கிற சோதனையை நடத்தி, மாநிலங்களில் இன்னும் நெருக்கம் என்கிற மாநில கட்சிகளின் ஆட்சி உருவாக்கத்தை ஏற்படுத்தியது.

Political power தன் முழு கட்டுப்பாட்டில் social order என்கிற போட்டியை வட்டார கட்சிகள் நடத்தி வருகின்றன. மக்களின் அன்றாடங்களில் அரசாங்கம் என்கிற தூரக் குறைப்பு வரமா சாபமா?

காந்தி இதைக் கண்டுதான் அஞ்சினார். அரசு எந்திரத்தை அவர் soulless machine எனப் பார்த்தார். மக்கள் அன்றாடங்களில் Depend ஆகாமல் அதிகாரவெளியிலிருந்து மிகத் தள்ளியிருப்பது உகந்தது என அவர் நினைத்தார். அதற்கான நிர்மாண வேலைகள் என்கிற சோதனைகளில்மக்களை ஈர்க்க முயற்சித்தார்.

இன்று அனைத்திற்கும் அரசாங்கம் என்கிற dependence அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது . மேம் ஹீன்னா (இந்தி தெரியாதுங்க சாரி) - நான் இருக்கேன் இல்லே அப்புறம் என்ன என்கிற பிம்ப அரசியல் உருப் பெருக்கம் அரங்கேறிவிட்டது. ஆட்சியாளர்களும் தங்களை - பெரும் காக்க வந்த கடவுளாக - கற்பனை செய்து மகிழ்ந்து அதை ஊக்கப்படுத்துவதும் நடந்தேறிவிட்டது.

ஆட்சியில் அமர்பவரும் தன் பெரும் பொறுப்பை உணரா, அரசியல் அசட்டுத்தனங்களுக்குப் பஞ்சமில்லா சமுகமாக மாறி வருகிறோமா?

27-4-2026

ap 27 2026

இந்திய ரயில்வேயில் மனிதவள சீரமைப்பு உத்தரவை அத்துறையின் போர்டு வெளியிட்டுள்ளது. 2 சதம் அனுமதிக்கப்பட்ட பதவிகள் மறு பங்கீடு சரண்டர் எனச் சொல்லியுள்ளனர். ரயில்வேயின் நிலைப்பாட்டை தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள் விமர்சித்து வருகின்றனர்.

இந்த rationalisation கடந்த சில ஆண்டுகளாகவே இரயில்வேயில் நடந்து வருகிறது. 2023ல் AIRF போன்ற முக்கிய சங்கங்கள் இது குறித்து விவாதித்து பதிலை நிர்வாகத்திடம் பெற்றன. இம்முறையும் அவர்கள் பிரச்சனைகளை சுட்டிக்காட்டி பதிலைப் பெறக்கூடும்.

நாங்கள் பணிபுரிந்த டெலிகாமில் இந்த சீரமைப்பு நடந்தது. வழக்கொழிந்த கேடர்கள் dying cadres எனக் காட்டப்பட்டு , அவர்கள் ஓய்வு பெறப் பெற அவர்களின் இடங்கள் ஆயிரக்கணக்கில் ஒழிக்கப்பட்டன. கேடர் சீரமைப்பு மூலம் பழைய கேடர்களுக்கு ஆளெடுப்பு நிறுத்தப்பட்டு, புதிய கேடர்களுக்கான விதிகளுடன் சிறிய அளவு ஆளெடுப்பு நடந்தது. பி எஸ் என் எல் ஆனவுடன் , டெலிகாம் அரசாங்க ஊழியர் 4 லட்சம் இடங்கள் ஒழிக்கப்பட்டன. எவரும் வேலையிழக்கவில்லை. ஒப்பந்த ஊழியர் உட்பட பொதுத்துறைக்கு சென்று அந்த rolll இடம் பெற முடிந்தது. தோழர் குப்தா இதில் தனித்த பங்கை செய்தார்.

ரயில்வேயில் sanctioned strength அளவிற்கு வேலை பார்க்கும் பணியாளர்கள் இருக்க மாட்டார்கள். Working strength எப்போதுமே பொதுவாக அரசாங்க துறைகளில் குறைவாகவே இருக்கும். ஓய்வு பெற்றவர் இடங்களுக்கு, உற்பத்தி பெருக்கம்- தொழில் விரிவாக்கம் காரணமான புதிய இடங்களுக்கு ஆளெடுப்பு மிக தாமதமாகவே நடக்கும் நடைமுறைகள் அங்கு தொழிற்படும். இதனால் sanction அதிகமாக இருந்தாலும், உண்மையில் இருப்போர் பற்றாக்குறையுடன் இருப்பர். சில இடங்களில் இதனால் அப்பணியாளர்களுக்கு வேலைப் பளு கூடும். அனுமதிக்கப்பட்ட இடம் அளவிற்கோ, சில நேரங்களில் மீறியும் கூட இருக்கும் இடங்களில் பளு குறைவாக இருக்கும்.

இரயில்வே போர்டின் ஏப் 24, 2026 தாக்கீது 2026-27க்கான Man power rationalisation Target பற்றி 'ஜோனல்' பொது மேலாளர்களுக்கு அறிவுறுத்தல். அதில் Man power redistribution plus Surrender of posts 2 சத இலக்கு - அதாவது அனுமதிக்கப்பட்ட 14,80,455 பதவிகளில் 29608 இடங்கள். இதில் ஏப்ரல் 1 , 2026 படியான working Strength

காட்டப்படவில்லை. எந்த அளவு சரண்டர் தேவைப்படும், எந்த அளவு மறு பங்கீடு தேவைப்படும் என்பதும் தெரிவிக்கப்படவில்லை. அந்த அந்த வட்டார மேலாளர் கொடுக்கப்பட்ட எண்ணிக்கைப்படி அதை நிறைவேற்ற வேண்டும் என பணிக்கப்பட்டுள்ளனர். மறு பங்கீட்டால் ஊழியர் இடமாற்றம் நடைபெற வாய்ப்புள்ளது. சிலர் புதிய வேலைகளை கற்க வேண்டியும் வரலாம்.

ரயில்வேயில் மார்ச் 2025 படி பணிபுரியக்கூடிய அனைத்து கேடர்களும் சேர்ந்து 12,28,992. இந்த ஓராண்டில் ஓய்வு பெற்றவர் எண்ணிக்கை இதில் போய்விடும். புதிதாக ரெக்ரூட் ஆனவர் சேர்ந்திருப்பர். ரயில்வேயில் ban on recruitment ஏதுமில்லை. அங்கும் கேடர் சீரமைப்பு நடந்துள்ளது. அவசியமான கேடர்களில் புதியவர் வருதல் என வைத்துள்ளனர். அங்கு attrition rate 2.5 to 3 % இருக்கலாம். ஆனால் ஆளெடுப்பு அந்த அளவு இருக்குமா எனத் தெரியவில்லை.

Sanctioned Strength என்பதில் Leave reserve என்பது சேர்த்தே கணக்கிடப்படுகிறது. Running Staff போன்ற பாதுகாப்பு தேவை மிகு பணியாளர் பகுதியில் இந்த விடுப்பு ரிசர்வ் 30 சதம் அளவு கூட ரயில்வேயில் இருந்த நினைவு. பிற non safety cadresல் 10-11 சதம் இருக்கலாம். எப்படி கணக்கிட்டாலும் 2.5 லட்சம் இடங்களாவது ரயில்வேயில் காலியிடங்களாக நிரப்பப்படாமல் இருக்கலாம்.

குறியீட்டளவான 29608 இடங்கள் காரணமாக எவரும் வேலையிழக்க மாட்டார்கள். இது பத்திரிகை செய்திகளில் தவறாகப் போடப்பட்டு வருகிறது. எவ்வளவு இதில் சரண்டர் ஆகிறதோ அந்த அளவு இடங்கள் ரெக்ருட்மெண்ட்க்கானதாக இருக்காது. இந்த காலியிடங்களில் (சரண்டர் 25 ஆயிரமாக ஒரு வேளை இருந்தால்) அது 10 சதத்தை குறைத்து விடும். இப்போது 2.5 லட்சம் காலியிடங்கள் என்றால், சரண்டர் 25 ஆயிரம் என்றால் அதில் 10 சதம் வீழ்ந்து விடும். அதாவது ரயில்வே சரண்டர் இடங்களுக்கு எதிர்காலத்தில் ஆளெடுப்பு செய்ய வேண்டியிருக்காது.

2017லேயே மனிதவள திட்டமிடல் குறித்து விரிவான சுற்றறிக்கையை ரயில்வே வெளியிட்டது. அப்போது அக்டோபர் 2017படி 14,46,367 sanctioned strength. Safety staff 7,86,229. ஆனால் உண்மையில் பணியில் 6,41,737 ஊழியரே இருந்தனர். இந்த மிக முக்கிய பகுதியில் மட்டும் அன்றே காலியிடங்கள் 18.3 சதம். இதேபோல் non safety பகுதியில் அன்று 15.2 சதமிருந்தது. 2017ல் working strength 12,05,148.

2017-2026 காலத்தில் அனுமதிக்கப்பட்ட பதவிகள் 34 ஆயிரம் மட்டுமே கூடியிருப்பதைப் பார்க்கிறோம். இந்த 9 ஆண்டுகளில் 25 சதமாவது ஓய்வு பெற்றிருப்பர். ஆளெடுப்பு எந்த அளவு நடந்தது என எனக்குத் தெரியவில்லை.

ரன்னிங் ஊழியர்கள் தொடர்ந்து , தொடர் பணிகளால் அலைக்கழிப்படுவதும்- அப்பகுதியில் கூட காலியிடங்கள் நிரப்பப்படாமல் போவதும் தொழிற்சங்களுக்கு சவாலான பிரச்சனை. ரயில்வே போன்ற- மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக இருக்கும் துறையிலேயே, ஆளெடுப்புக்குரிய இடங்கள் 2 லட்சத்திற்கு மேலாக இருந்தும் நிரப்பப்படா கொள்கை நிலையே பல ஆண்டுகளாக நிலவுகிறது.

மத்திய அரசு பதவிகள் மெதுவாக மெலிதாக்கப்படும் காட்சிகள்- அப்படியே வந்தோர்க்கும் அரசாங்க ஓய்வூதியம் என்பது இல்லாமல் - own your pension through contribution என்கிற மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன.

8 வது சிபிசி மனித வள மேம்பாட்டிற்கு என்ன சொல்லப்போகிறதோ..அதையெல்லாம் மனதில் வைத்து மத்திய அரசின் நகர்தல்களைக் கண்டு வருகிறோம்..

ரயில்வே ஊழியர் சங்கங்கள் அதிகாரபூர்வமாக, போர்டின் நிலைப்பாடு குறித்து என்ன கருத்து சொல்லி வருகின்றனர் என பொதுவெளியில் தெரியவில்லை. அவர்களின் சுற்றறிக்கை, எதிர்ப்பு இயக்கங்கள் என ஏதாவது வந்தால், கூடுதல் புரிதல் கிடைக்கலாம்.

27-4-2026

ap 28

சுதிப்தா கவிராஜ் -3

‘இந்தியாவில் அரசியல்’ என்ற நூல் குறித்து முன்னர் இரு இடுகைகள் செய்திருந்தேன். 7 பகுதிகளில் 20 அறிஞர்கள் தங்கள் சமுகவியல் ஆய்வுகளை வரலாறு மற்றும் அரசியல் சார்ந்து- political sociology, historical sociology துறைகளின் வழியே செய்திருக்கின்றனர். ஆய்வுலகில் கவனிக்கப்பட்ட நூல். ஆக்ஸ்போர்ட் இந்தியாவின் 37ஆம் பதிப்பு 2025ல் வந்தது.

சாதி- வர்க்கம் குறித்து ஏராள ஆய்வுகள் இருக்கின்றன. அறுதியிட்டு, இது இப்படித்தான் எனச் சொல்வதை ஒருவரால் ஏற்கமுடியாமல் போகலாம். உத்தேசமாக இப்படி இருந்திருக்கக்கூடும் என்கிற பார்வையை, கிடைத்த ஆதாரங்கள் அடிப்படையில் கொடுக்கும் விளக்கங்களை புரிதல் பரப்பில் அடுக்கிக் கொள்வது நலம்.

சாதி என்கிற சமுக மரபார்ந்த தன்மை, நவீன தொழில் சமுக கட்டமைப்பில் வர்க்கமாக எந்த அளவு உருமாற்றம் பெறுகிறது? In what ways in what extent is caste changing into class? Do caste groups change their self perceptions into class groups? வர்க்கமாக உருமாற்றம் என்பது taught concept வழியிலா- அது எந்த அளவு இயல்பானது (சாதியும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் taught concept வழி இறங்குகிற ஒன்று தான்)

இன்றும் பல்வேறு மத்தியதர தொழிற்சங்க அரங்குகளில் தனித்த SC ST, BC பிரிவு அமைப்புகள் (விடுதலைக்கு முன்னர் முஸ்லீம், பிராம்மணர் என்கிற பிரிவுகளும்) தொழிற்படுவதை எப்படி எடுத்துக்கொள்வது- as a class inseparable என்பதில் அங்கு உடைவுகள் வருகிறதா? Caste groups அப்படி அப்படியே இங்கு class groups mapping செய்து கொள்கிறதா?

சட்டத்தில் தீண்டாமை ஒழிப்பு என்பதை தீவிர அரசு நடவடிக்கை என சபாஷ் போடுவதா அல்லது சமுக சீர்திருத்த இயக்கங்களுக்கு அரசு கொடுத்த ஒத்துழைப்பு எனப் பார்ப்பதா ?

சமுகம் அரசியல்மயமாகிறது என்பதை பார்க்க வேண்டியது போலவே, அரசியல் கட்சிகளுக்குள் இருக்கும் சமுக நடவடிக்கைகள் யாவை- அதாவது internal sociology of political parties? சமுகத்தில் சாதி கணக்கெடுப்பு வந்தால், அரசியல் இயக்கங்களில் - இன்னும் தெளிவாக கட்சிகளுக்குள் அதன் தாக்கம் எப்படி அமையலாம்?

Peasantry- என்கிற விவசாயப் பிரிவில் சாதி- வர்க்க mapping எவ்வாறு தொழிற்படுகிறது? இன்று நிலச் சொத்து கணக்கெடுத்தால் சாதி-

வர்க்க map எப்படி இருக்கும்? பணக்கார விவசாயிகள், நடு- சிறு- குறு- தொழிலாளர் என்கிற வர்க்கப் பிரிவுகள் அங்கு எத்தகைய சாதிப் பிரிவில் map ஆகும்?

எந்த சாதி குழுக்கள் அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளை உருவாக்குகின்றன- அவை சாதி தன்மையால் மட்டுமா அல்லது சொத்து- வர்க்கம் சார்ந்து உருவாக்குகின்றனவா?

இந்தியாவில் தொழில் வளர்ச்சி- முதலாளி தொழிலாளி வர்க்க அசைவுகள் சாதியாட்டங்களில் அரிப்புகளை செய்துள்ளதா? அல்லது சமாதான சகவாழ்விற்கான அனுசரணைகளாக போய்விட்டனவா? இந்திய கார்ப்பரேட் பெரு முதலாளிகள் சாதி உணர்வில் தொழிற்படுகிறார்களா? இல்லை தொழில் இலாப கணக்கில் மட்டுமா?

இப்படி பல கேள்வி சிந்தனைகளை இந்நூல் கிளர்த்துகிறது.

நிக்கோலஸ் டிர்க்ஸ் செய்த புதுக்கோட்டை சமஸ்தான ஆய்வில் (17 ஆம் நூற்றாண்டு இறுதி- 1947) அங்கு கள்ளர்கள் சமஸ்தான மன்னர்களாக இருந்துள்ளனர். சமுகத்தில் முதல் மதிப்பு மன்னருக்கா, பிராமணருக்கா என்ற கேள்விக்கு மன்னருக்குத்தான்- ஆனாலும் இந்த கள்ளர் குல மன்னர்கள் பிராம்மணர்களை போஷித்தனர் என்கிற பதிலைக் காண்கிறோம். The study of State and Society என்கிற ஆய்வில் டிர்க்ஸ் இதைத் தருகிறார். அவர் வரக்கூடிய மதிப்பீடு

Caste and kinship were profoundly political in their operation and their conceptualisation. Caste was embedded in a political context of kingship.

டுமாண்ட் ஆய்வான purity pollution படியிலான சாதி படிநிலைகள் என்பதில்லாமல் kings exercised every conceivable kind of dominance and their social organisation reflects this fact. இதை இன்றுள்ள அரசியல் அதிகாரம் என்ற சூழலில் பொருத்திப் பார்க்க முடிகிறதா? ஆம் என்றால் பேசப்படும் narrativesகளை எப்படி உள்வாங்குவது?

டிர்க்ஸ் வேறு ஒன்றையும் தன் ஆய்வில் வைக்கிறார். The demise of kingship was accompanied by the steady ascendancy of Brahmins- Brahmins reached a new high under British colonialism என்கிறார். Non Brahmin movement , Muslim movement, வட்டமேசை நிகழ்வுகள் போன்றவை பிரிட்டிஷாரின் divide and rule policy என்கிற புரிதலை பின்னர் காங்கிரஸ் தரப்பு பேசியதையும் காண்கிறோம்.

சுதிப்தா எடிட் செய்துள்ள Politics in India இப்படி பல விவாதங்களின் களனாக இருப்பதை என் வாசிப்பில் உணர்கிறேன்..பார்க்கலாம்28-4-2026

ap 29

நகுலனின் நினைவுப் பாதையில்..

ஏன் எழுத வேண்டும்? எழுதாமல்?

எதைச் சொல்லி, எதைச் சொல்லாமல், எதைத் தெளிவித்து, எதை மறைத்து, எதை அழுத்தி, எதை அழுத்தாமல், எதை அப்பட்டமாகவும், எதை மென்மையான கோடுகளாலும் வரைந்து அனுபவம் மூலம் அனுபவத்தை அழிப்பது என்று எனக்கு இன்னும் தெரியவில்லை.

நாமெல்லோரும் வாசகரில்லாத எழுத்தாளர்கள்..என் புத்தகத்தை எவரும் வாசிப்பதில்லை

எழுதி எழுதித்தான் எழுத்து எழுத்து எடுக்கும். எழுதி எழுதித்தான் எழுத்தை எழுத தெரிந்துகொள்ள வேண்டும்

எழுதுவது என்பதே வார்த்தைகளால் வலை பின்னுதல் தானா? எழுத ஒன்றுமில்லை ஆனால் எழுதிக்கொண்டே இருக்கின்றேன்..எழுத எழுத எங்கு போகின்றோம் என்பதுதான் கேள்வி?

எனக்கே நான் எழுதியது ஒன்றும் அப்படி திருப்திகரமாக படவில்லை. பின் ஏன் எழுத வேண்டும் என்பது நியாயமான கேள்வி. எழுதாமல்?

என்னைப்பற்றி ஒரு தவறான அபிப்பிராயம்- நான் வேண்டுமென்றே புரியாத வகையில் எழுதுகிறேன் என்று...எழுதுபவனுக்கு எழுத்துதான் கதி

இனி எழுதவே கூடாது என்று இருந்தவன் இப்போது மறுபடியும் எழுதுகிறேன்

எழுத்தாளனாக அதிகம் படிக்காதே என்கின்றனர்..எனக்கு புத்தகங்களில் மத்தியில்தான் வாழமுடியும்

எல்லா அனுபவமும் தான் புளித்து விடுகிறது..ஒரு வகையில் ஒவ்வொரு அனுபவத்தையும் ஒதுக்கிக்கொண்டேதான் மனிதன் முன்னேறுகிறான்

மனிதன் அசைபோடும் மாடு

உனக்கு நீயே ஒரு முடிச்சு

நாம் முக்கியம் என்று நினைப்பதெல்லாம் அப்படி முக்கியமில்லை என்று நினைக்கக் கற்றுக்கொள்கிறோமோ அன்று நமது பிரச்சனைகளெல்லாம் பைசலாகிவிடும்

சுந்தர ராமசாமி பாஷையில் சொல்வதென்றால் மனிதனின் முக்கியமான பிரச்சனை சக மனிதர்களிடமிருந்து தப்புவது என்பதுதான்

மனிதருடன் ஒட்டாமல் இருந்தால் அவர்களும் நமக்கு எட்டாமல் போய்விடுவார்கள்

அன்று நான்குபேர் என்னைத் தெரியாமலேயே அலட்சியம் செய்தார்கள். இன்று நாலுபேர் என்னைத் தெரிந்து கொண்டே அலட்சியம் செய்கிறார்கள்

நீ எதை வெறுக்கிறாயோ, எது உனக்கு கைவராதோ, அதை நீ மதிப்பது போல் உதாசீனம் செய்கிறாய்

ஒன்றின் மீது ஸ்திரமாக இருக்க முடியாது. அப்படி ஸ்திரமாக ஒரு அளவிற்காவது இல்லாவிட்டால் ஒன்றும் முடியாது

எட்டுக்கால் பூச்சிக்கு எட்டுக்கால்கள் என்றால் மனதிற்கு எவ்வளவு சிந்தனைகள் உண்டோ அவ்வளவு கால்கள்

அரசியல் போக்கில் தனி மனிதன் ஏதாவது ஒரு கட்சியையோ கூட்டத்தையோ பின்பற்றினாலொழியத் தன் சுயத்தன்மையைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது என்ற நிலைமை

எந்த மனிதனும் உண்மையைப் பிரத்யட்சமாகப் பார்க்கப் பயப்படுகிறான். இந்த நிமிஷத்தில் உண்மை என நம்புவது அடுத்த நிமிஷத்தில் பொய்யாக இருக்கிறது. உண்மை என்று இல்லை என சாதிக்கவும் முடியவில்லை.

வார்த்தைகளே நீங்கள் என்னை எங்கே அழைத்துச் செல்கிறீர்கள்?

29-4-2026

ap 30

8th CPC NJCM staff side Brief

I happened to see the meeting brief of Standing Committee of NJCM staff side with 8th CPC chairperson and members. The first meeting held on AP 28, 2026. The brief is issued by Secretary staff side NJCM. Hope more meetings with NJCM staff side committee and various employees organisations would be held in the coming days. I wish them all the best.

I limit here , my observation on one issue regarding the issue of pension revision taking the 15th point placed in that brief. Also I take the point 3 from the response of the Chairperson of CPC as mentioned in the brief.

15. Pensioners demands (staff side)

"8th CPC cannot ignore the existing pensioners since they have served for the nation 30 to 40 years. Their pension needs to be revised and the concept of one rank one pension to the civilian employees may be recommended by the 8th CPC. Restoration of commutation after 11 years, enhancement of pension after every 5 years. Proposal of gratuity, rate of pension and family pension etc given by the staff side may be favourably considered."

Chairperson side response as given in the brief

3. The points raised by the staff side during their presentation are taken note of and the 8th CPC will dispassionately consider all those demands.

Fine. 67 lakh CG pensioners may thank the staff side for taking up the case of them also to the CPC - ' pension revision, OROP'. The future pensioners may also be happy about the demands pertaining their retirement benefits like commutation, gratuity, rate of pension, age related enhancement of pension etc. Commutation is also not in the TOR as that of revision of pension.

I feel that there are 3 options before 8 th CPC regarding the issue of revision of pension to the existing pensioners, as per their study and wisdom

1. They may accept the demand of staff side and recommend pension revision also

2. They may reject the demand of pension revision quoting 'that one' is beyond the TOR given to them by GOI

3. They may ignore the demand of 'revision of pension' as it is not the job assigned to them as per TOR

I am just stating things from my limited experiences in the telecom trade union movement. I may be wrong and happy if 8th CPC accepted the demand of Pension revision even without any TOR about that.

I wish to rewind here the earlier experience, taking 4 th CPC instance. DOE in its original resolution for 4th CPC on 29th July 1983 mentioned only emoluments structure, allowances, DCRG for employees etc. This was happened even after Nakara judgement. Only on 8th Nov, 1985 the required amendment for 'revision of pension' was given as TOR to the 4th CPC. That amendment issued on Nov 1985 after 2 years of original TOR spoke about 'proper structure of pension for both past and future'..

So taking the past experience, I feel that it is better to press for the required amendment for 'revision of pension' of the existing 67 lakh CG pensioners to the GOI.

The wisdom of CG pensioners associations is supreme, comparing my singing of a tune.

Regarding the existing bsnl pensioners, there is nothing in that as on date. Once CG pensioners case is included, then their prompt may act. It is better to join the mainstream of CG pensioners, though as on date the likelihood for the same is hard. They are all waiting eagerly for the case of Delhi HC to substantiate their claim of 7 th CPC pattern of revision. Employees are waiting pay revision as per 3rd PRC.

Hoping the best…wishes to all street and court fighters

- 9 hrs 30-4-2026 R. Pattabiraman

MAY 2026

may 1 மே தின நல்வாழ்த்துகள்

இந்நாளில் இரு செய்திகளை தரத்தோன்றியது.

ஒன்று நேருவின் மே தின உரை. 1955 மே தினத்தன்று நேருஜி அவர்கள் ஆற்றிய நீண்ட உரையது. ஆர்வமுள்ளோர் தெரிந்துகொள்ள வேண்டிய உரை. அவரின் ஆங்கில உரையையும், அதன் தமிழ் வடிவையும் தனித்தனி இடுகைகளாக தந்துள்ளேன்.

அடுத்த செய்தி- சீன தொழிற்சங்க பெடரேஷன் குறித்து. சீனாவில் மே தின விடுமுறைகள் குறைந்தது 5 நாட்களாவது கொடுக்கப்பட்டு வருகிறது. All China Federation of Trade Unions உலகின் பெரிய தொழிற்சங்க சம்மேளனம். அவர்கள் மே தினத்தன்று பெரும் கௌரவிப்பு நிகழ்வை நடத்துகிறார்கள். இவ்வாண்டு மே தினத்தில் 3000க்கும் மேற்பட்ட பல்வேறு துறைகளில் நாட்டிற்கு சிறந்த பங்களித்த தொழிலாளர்களை 'தேசிய லேபர் கௌரவம்' என அரிய விருதுகள் தந்து உற்சாகப்படுத்தவுள்ளனர்.

அவ்விருதிற்கு தேர்வான ஒரு தொழிலாளியின் செய்தியைப் பார்த்தேன். அவர் உணவு டெலிவரி துறைக்காரர். நாம் கிக் ஒர்க்கர்ஸ் எனச் சொல்லும் பகுதியது. அந்த தொழிலாளியின் பெயர் ஜாவோங்(சரியா தெரியவில்லை). 2008ல் இவர் பூகம்ப பகுதி ஒன்றில் உயிர் பிழைத்ததுடன், சக 150 மனிதர்களை காப்பாற்றியவரும் கூட. இப்போது food delivery துறையில் பணி செய்து வருகிறார். அவருக்கு national honourதரப்படுகிறது. ஒரு food delivery சாதாரண மனிதனாகிய என்னை நாடறிய இந்நாள் வைத்துவிட்டது. ஆனால் ஒன்று 'நாங்கள் சாதாரணமானவர்களாக இருக்கலாம் ஆனால் சராசரிகள் அல்லர்' என்பதை உலகிற்கு சொல்லமுடிகிறது என்று அத்தொழிலாளியின் செய்தி பேசுகிறது.

உழைப்போரின் கௌரவத்தை மதிக்கிற சமுகம் எழட்டும்! வாழ்த்துகள்!

1-5-2026

may 1

நேருவின் மே தின உரை – (1 மே 1955)

இன்று மே மாதம் முதல் தேதி — மே தினம் — உங்கள் அனைவரும், குறிப்பாக நமது தொழிற்சாலைத் தொழிலாளர்கள், இதைக் கொண்டாடுவதற்காக இங்கே கூடியிருக்கிறீர்கள். உங்களை மிகவும் நெருக்கமாகப் பாதிக்கும் சில விஷயங்களைப் பற்றி நான் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். உலகில் நடக்கும் அனைத்தும் உங்களை மிக நெருக்கமாகப் பாதிக்கின்றன என்பது உண்மைதான், ஏனெனில் நாம் அவற்றால் பாதிக்கப்படுகிறோம், நம்மால் தனித்து இருக்க முடியாது. உலகில் ஒரு பெரும் போர் ஏற்பட்டால், நாம் சந்தேகத்திற்கு இடமின்றி அதனால் பாதிக்கப்படுவோம். நாம் எந்தப் போரிலும் பங்கேற்க மாட்டோம் என்று உரக்கக் கூறி வருகிறோம், அந்த முடிவில் உறுதியாகவும் இருக்கிறோம். ஆனால் உலகில் போர் மூண்டால், அது நம்மைப் பாதிப்பது உறுதி. எனவே, உலகில் என்ன நடக்கிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்வது அவசியம். ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் அமெரிக்காவின் சிக்கலான பிரச்சனைகள் உங்களைப் பாதிக்காது என்றோ அல்லது உயர்கல்வி கற்றவர்களால் மட்டுமே அவற்றைப் புரிந்து கொள்ள முடியும் என்றோ நீங்கள் நினைக்கக்கூடாது. இது மக்கள் பெரும்பாலும் கொண்டிருக்கும் ஒரு தவறான கருத்து. ஒரு பிரச்சனை எவ்வளவு சிக்கலானதாக இருந்தாலும், அதன் அனைத்து நுணுக்கங்களையும் அனைவரும் அறிய முடியாவிட்டாலும், அதை ஓரளவாவது புரிந்து கொள்ள ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும்.

மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து ஆட்சி செய்யும் ஒரு சுதந்திர நாட்டில், ஜனநாயகத்தின் உண்மையான பலம் என்பது சிக்கலான உலக விவகாரங்களைப் பற்றிய மக்களின் புரிதலில் உள்ளது, குறிப்பாக இன்றைய புரட்சிகரமான உலகில் இது மிகவும் அவசியம். எனவே இந்த விஷயங்களை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். மற்ற முன்னேறிய நாடுகளை விடவும், இந்தியாவில் உள்ள சாதாரண மக்கள் உலக விவகாரங்களில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள் என்பது எனது கருத்து. இது ஒரு நல்ல விஷயம், ஏனெனில் இது நாட்டிற்கு அடிப்படை பலத்தைத் தருகிறது. மேலடுக்கில் உள்ள ஒரு சிலருக்கு மட்டுமே உலக விவகாரங்கள் புரிந்து, வெகுஜன மக்கள் அறியாமையில் இருக்கும் ஒரு தேசம் பலவீனமாகவே இருக்கும். நமது நாட்டில் நாம் உருவாக்க விரும்பும் பலம் என்பது, ஒரு

சில படித்த அல்லது புத்திசாலிகளின் பலம் மட்டுமல்ல; அவர்கள் எப்போதும் முக்கியமானவர்கள் என்றாலும், ஒரு தேசத்தின் அடிப்படை பலம் அதன் கோடிக்கணக்கான மக்களிடமிருந்தே வருகிறது.

பல முக்கியமான நிகழ்வுகள் நடந்து வருகின்றன. சமீபத்தில், இந்தோனேசியாவின் ஒரு சிறிய நகரமான பாண்டுங்கில் ஒரு மாநாடு நடைபெற்றது, இதில் ஆசிய மற்றும் ஆப்பிரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். பெரும்பாலும் பிரதமர்களே அங்கு வந்திருந்தனர், நாங்கள் அனைவரும் ஏழு அல்லது எட்டு நாட்கள் ஒன்றாக இருந்தோம். பல்வேறு நிறங்கள் மற்றும் பலவிதமான ஆடைகளை அணிந்த மக்களின் ஒரு அசாதாரணமான சந்திப்பு அது. ஆப்பிரிக்கா மற்றும் அரபு நாடுகளில் இருந்து வந்தவர்கள் போன்ற பலர், உலகின் இந்தப் பகுதிக்கு இதற்கு முன் வந்ததே இல்லை. அவர்களுக்கு இது ஒரு விசித்திரமான புதிய உலகமாக இருந்தது. உதாரணமாக, அரபு நாடுகளில் மழையே பெய்யாது, அங்கு பசுமையற்ற பெரிய பாலைவனங்களே உள்ளன. ஆண்டு முழுவதும் மழை பெய்யும், அடர்ந்த பசுமையான செடி கொடிகளைக் கொண்ட இந்தோனேசியாவைப் போன்ற ஒரு நாட்டில் திடீரென்று தங்களைக் கண்டபோது அவர்கள் வியந்தனர். அங்கே விதைப்பதற்கும் அறுவடை செய்வதற்கும் என்று குறிப்பிட்ட காலம் ஏதுமில்லை, இரண்டும் ஒரே நேரத்தில் நடப்பதைக் காண்பீர்கள். ஒரு சொட்டு நீர் கூட மிகவும் மதிப்புமிக்கது என்று கருதும் அரேபியர்களுக்கு, இது முற்றிலும் புதிய அனுபவமாக இருந்தது. உடைகளிலும் வாழ்க்கை முறைகளிலும் பல வேறுபாடுகள் இருந்தன.

நாங்கள் அனைவரும் பாண்டுங்கில் சந்தித்தோம். அனைத்து வேறுபாடுகளையும் மீறி, எங்களிடையே ஒரு பொதுவான பிணைப்பு இருந்தது. நாங்கள் ஏழு அல்லது எட்டு நாட்கள் ஒன்றாக இருந்தோம், பல நட்புகள் உருவாயின, ஒருவரையொருவர் பிரச்சனைகளைப் புரிந்து கொள்ளும் தன்மை வளர்ந்தது, ஒரு நெருக்கமான பிணைப்பை உருவாக்கினோம். பல பிரதிநிதிகள் இந்தோனேசியா செல்லும் வழியில் டெல்லி வழியாகச் சென்றனர், மற்றவர்கள் திரும்பும் வழியில் இங்கே தங்குவார்கள்.

பாண்டுங் மாநாடு ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவின் வரலாற்றில் ஒரு வரலாற்று மைல்கல் என்பதில் சந்தேகமில்லை. அதே நேரத்தில் இது நமது பொறுப்பை ஓரளவிற்கு அதிகரிக்கிறது. உலகின் பல நாடுகள் வழிகாட்டுதலுக்காக இந்தியாவை எதிர்நோக்குகின்றன. நமக்கு முன்னால் உள்ள பெரிய பிரச்சனைகளை நாம் எப்படித் தீர்க்கிறோம்,

எப்படி முன்னேறுகிறோம் என்பதைப் பார்க்க அவர்கள் ஆர்வமாக உள்ளனர். அவர்கள் நம்மிடமிருந்து கற்றுக்கொள்ள விரும்புகிறார்கள். இந்தியாவில் என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க எண்ணற்ற வெளிநாட்டினர் வருகிறார்கள். பக்ரா நங்கல், தாமோதர் பள்ளத்தாக்கு, சிந்துரியில் உள்ள உர ஆலை, ரயில் என்ஜின்களை உற்பத்தி செய்யும் சித்தரஞ்சன் தொழிற்சாலை, பெங்களூரில் உள்ள என்ஜின் மற்றும் விமான உற்பத்தி அலகுகள், நமது பெரிய அறிவியல் ஆய்வகங்கள் போன்ற நாடு முழுவதும் நாம் மேற்கொண்டுள்ள பெரிய திட்டங்களைப் பார்க்க அவர்கள் செல்கிறார்கள். ஆனால் அவர்கள் குறிப்பாக நமது கிராமப்புற மேம்பாட்டுத் திட்டங்களில் ஆர்வமாக உள்ளனர். சமூக மேம்பாட்டுத் திட்டங்களைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள், அவை பெரும் ஆர்வத்தைத் தூண்டுகின்றன. அது சரியானதுதான், ஏனெனில் அவை கிராமப்புறங்களில் வாழும் கோடிக்கணக்கான மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கின்றன. அவர்களின் சொந்த முயற்சிகள் மூலமே அவர்களை மேம்படுத்த நாம் முயற்சிக்கிறோம். இதே போன்ற நிலையில் உள்ள பிற நாடுகளும் இதைப் பின்பற்றலாம். ஜப்பான் தவிர மற்ற அனைத்து ஆசிய நாடுகளையும் ஏழ்மையான மற்றும் பின்தங்கிய நாடுகளின் பட்டியலில் நான் சேர்க்கிறேன். சீனா, இந்தியா, பர்மா, இந்தோனேசியா, எகிப்து என எந்த நாட்டை எடுத்துக்கொண்டாலும், இதுதான் ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவின் பொதுவான நிலை. அடிப்படை பிரச்சனைகள் அனைத்தும் ஒன்றுதான்.

கடந்த இருநூறு ஆண்டுகளில் ஆசிய நாடுகள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தபோது, அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் வேகமாக முன்னேறின. அவர்கள் பெரும் செல்வத்தை உற்பத்தி செய்தனர், மக்கள் வசதி பெற்றனர். அவர்கள் மிகவும் சக்திவாய்ந்தவர்களாக வளர்ந்து மற்ற நாடுகளை அடக்கத் தொடங்கினர். ஆனால், நாம் மற்றவர்களை அடக்குவதில் ஆர்வம் காட்டவில்லை. நாம் விரும்புவது நமது மக்களை வசதியாக வாழ வைப்பதும் உற்பத்தியை அதிகரிப்பதும் தான், ஏனெனில் இறுதியில் ஒரு நாட்டின் உண்மையான செல்வம் என்பது நிலத்திலிருந்தோ, தொழிற்சாலைகளிலிருந்தோ அல்லது குடிசைத் தொழில்களிலிருந்தோ உற்பத்தி செய்யப்படுவதே ஆகும். பல்வேறு வழிகளில் நாட்டை வலிமையாக்க நாம் முயற்சிக்கிறோம். இவைதான் அடிப்படை பிரச்சனைகள். ஐரோப்பாவும் அமெரிக்காவும் முன்னேற ஒரு நூற்றாண்டுக்கும் மேலான காலம் இருந்தது. மேலும், அவர்களின் முன்னேற்றம் அவர்களின் சொந்த முயற்சி மற்றும் கடின உழைப்பால்

ஏற்பட்டது என்றாலும், அவர்களின் காலனித்துவ நாடுகளின் மூலப்பொருட்களும் வளங்களும் அவர்களுக்குப் பெரிதும் உதவின. அதற்காக அவர்களைக் குறை கூற முடியாது, ஏனெனில் நமது சொந்த முட்டாள்தனமே அதற்குப் பொறுப்பு. மற்றவர்களிடமிருந்து பறிப்பதற்கோ அல்லது தேவையற்ற சாதகத்தைப் பெறுவதற்கோ நம்மிடம் வழிகள் இல்லை. நமக்கும் அந்த எண்ணம் இல்லை, அது சரியானது என்றும் நாம் நினைக்கவில்லை. அவர்கள் 100-150 ஆண்டுகளில் செய்ததை நாம் பத்து ஆண்டுகளில் சாதிக்க விரும்புகிறோம், இது மிகவும் கடினமானது. இதற்கு ஒரு பெரிய அளவிலான கடின உழைப்பு தேவை. நமது திட்டங்கள் அனைத்தும் இதை நோக்கியே உள்ளன.

மற்றவர்களிடமிருந்து பெறும் உதவியைக் கொண்டு எந்த நாடும் முன்னேற முடியும் என்பது எனது உறுதியான நம்பிக்கை. அது தனது சொந்த முயற்சி மற்றும் பலத்தால் மட்டுமே முன்னேற முடியும். ஒரு நாடு மற்றவர்களைச் சார்ந்திருக்கத் தொடங்கும் தருணத்தில், அது பலவீனமடைகிறது. பிறரிடம் உதவி பெறுவதில் தீங்கு ஏதுமில்லை. உண்மையில், ஒரு நாடு தன் சொந்தக் காலில் நிற்க முடியும் என்றால், பரஸ்பர உதவி என்பது ஒரு நல்ல விஷயம். நாமும் பிறரிடம் உதவி பெற்றிருக்கிறோம். நமக்குக் கிடைத்ததை நன்றியுடன் ஏற்றுக்கொண்டோம், ஆனால் நாம் யாரிடமும் உதவி கேட்கவில்லை. ஆனால் நாம் வெளியே இருந்து பெற்ற உதவி, நாம் செய்துள்ளவற்றில் மிகச்சிறிய சதவீதமே ஆகும். நாம் வெளிநாட்டு உதவியை அதிகமாகச் சார்ந்திருக்கத் தொடங்கினால், அது நமக்கு நன்மை செய்வதற்குப் பதிலாகத் தீங்கு விளைவிக்கக்கூடும். நாம் இனி நம்மையே நம்பி இருக்க மாட்டோம். வரலாற்றைப் படித்தால், நாடுகள் தற்சார்பு மற்றும் தன்னம்பிக்கையால் மட்டுமே வளரும் மற்றும் முன்னேறும் என்பதை நீங்கள் காண்பீர்கள். இறுதியில், ஒரு தேசத்தின் செல்வம் தங்கம் மற்றும் வெள்ளி அல்ல, அதன் மக்களே. மக்களிடம் தைரியம், ஒற்றுமை, புத்திசாலித்தனம் மற்றும் கடினமாக உழைக்கும் திறன் இருந்தால், அவர்கள் முன்னேறி தங்கள் உற்பத்தியை அதிகரிப்பார்கள். எனவே மற்றவர்களுடன் நட்பு உறவைப் பேணுவதும் ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பதும் சரி என்றாலும், மற்றவர்களை அதிகமாகச் சார்ந்திருப்பது நல்லதல்ல.

உங்களில் பலர் வேலை செய்யும் பல தொழிற்சாலைகள் இங்கே உள்ளன. உங்கள் தொழிற்சங்கங்களின் கொடிகளை நீங்கள் ஏந்தியிருக்கிறீர்கள். ஒரு தொழிற்சங்கம் என்றால் என்ன? இன்று புரிந்து கொள்ளப்படும் தொழிற்சங்கவாதம் (Trade unionism) நூறு

ஆண்டுகளுக்கு முன்பு சில ஐரோப்பிய நாடுகளில் தொடங்கியது. முன்னதாக பல்வேறு தொழில்களின் நலன்களைப் பாதுகாக்க கில்டுகள் (guilds) இருந்தன. ஆனால் தொழிற்சங்கவாதம் என்பது முற்றிலும் மாறுபட்ட ஒன்று, இது தொழில் புரட்சியின் விளைவாகும். இது 150 ஆண்டுகளுக்கு முன்பு தொழில் புரட்சி முதலில் தொடங்கிய இங்கிலாந்தில் தொடங்கியது. தொழிற்சங்க இயக்கம் தொடங்குவதற்கு முன்பு தொழிற்சாலைத் தொழிலாளர்களின் நிலை இதயத்தை உலுக்குவதாக இருந்தது. பயங்கரமான அநீதிகள் இழைக்கப்பட்டன. தொழிற்சங்கம் அமைப்பதே ஒரு குற்றமாகக் கருதப்பட்டது. ஐந்து தொழிலாளர்கள் கூடினால்கூட ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. கற்பனை செய்து பாருங்கள். நூற்றுக்கணக்கான மக்கள் தண்டிக்கப்பட்டு ஆஸ்திரேலியாவிற்கு ஆயுள் கைதிகளாக அனுப்பப்பட்டனர். அந்த நாட்களில் இங்கிலாந்திலிருந்து ஆஸ்திரேலியாவிற்குச் செல்ல ஆறு மாதங்கள் ஆகும். இப்படித்தான் தொழிற்சங்க இயக்கம் தொடக்கத்தில் கடுமையாக ஒடுக்கப்பட்டது. ஆனால் படிப்படியாக, அடுத்த சில தசாப்தங்களில் தொழிற்சங்கங்கள் உருவாகத் தொடங்கின.

தொழிற்சங்கம் எதைக் குறிக்கிறது? இது தொழிலாளர்கள் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்ளும் ஒரு அமைப்பாகும். ஒரு தொழிலாளி தனியாகப் பலவீனமானவர், ஆனால் ஒரு சங்கமாகச் சேரும்போது அவர் மிகவும் வலிமை பெறுகிறார். எனவே தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்க இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் பிற நாடுகளில் தொழிற்சங்கங்கள் உருவாகத் தொடங்கின, படிப்படியாக இந்த இயக்கம் மற்ற நாடுகளுக்கும் பரவியது. ஊதிய உயர்வு, வேலை நேரத்தை நிர்ணயித்தல் மற்றும் பிற விஷயங்களுக்காகத் தொழிற்சங்கங்கள் போராடத் தொடங்கின. முன்னதாக, தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு பதினான்கு மணி நேரம் வேலை செய்ய வேண்டியிருந்தது. அதை பன்னிரண்டு மணி நேரமாகக் குறைக்கக் கோரியபோது பெரும் அமளி ஏற்பட்டது. ஆனால் படிப்படியாக அடுத்த நூறு ஆண்டுகளில் வேலை நேரம் ஒரு நாளைக்கு எட்டு மணி நேரமாகக் குறைக்கப்பட்டது. சில நாடுகளில் இப்போதும் ஒன்பது மணி நேரம் உள்ளது, ஆனால் பொதுவாகத் தொழிலாளர்கள் எட்டு மணி நேரம் உழைக்க வேண்டும்.

சுருக்கமாகச் சொன்னால், தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களை ஒருங்கிணைப்பதன் மூலம் அவர்களின் நலன்களைப் பாதுகாக்கின்றன. அவை ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் ஒரு சக்தியாகும். இங்கிலாந்தில் தொழிற்சங்க இயக்கம் மிகவும் சக்தி

வாய்ந்தது, உண்மையில் அங்கு ஆட்சிக்கு வந்த தொழிலாளர் கட்சி (Labour government) அவர்களால் உருவாக்கப்பட்டதுதான். இந்த இயக்கத்தின் பின்னால் உள்ள யோசனை தொழிலாளர்களுக்கும் உரிமையாளர்களுக்கும் இடையிலான நலன் சார்ந்த மோதலிலிருந்து (Conflict of interest) பிறக்கிறது. இது 'வர்க்கப் போராட்டம்' (Class struggle) என்று அழைக்கப்படுகிறது. உரிமையாளர்கள் ஒரு வர்க்கமாகவும், தொழிலாளர்கள் மற்றொரு வர்க்கமாகவும் உள்ளனர், அவர்களுக்கு இடையே அடிப்படை நலன் சார்ந்த மோதல் இருப்பது வெளிப்படையானது. கூலி மிக அதிகமாக இருந்தால் உரிமையாளருக்கு நஷ்டம் ஏற்படும். இந்த வர்க்கப் போராட்டக் கோட்பாட்டிலிருந்து அனைத்து வகையான தத்துவங்களும் உருவாகியுள்ளன. கம்யூனிச மற்றும் சோசலிசக் கொள்கைகள் பல இந்தக் கோட்பாட்டின் அடிப்படையிலானவை. இதன் அடிப்படையில் பல பெரிய புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. அவற்றில் பல மிகச் சிறந்தவை. ஆனால் அவை எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் போதே உலகம் மாறிக் கொண்டிருந்தது. ஐம்பது அல்லது நூறு ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டதை நாம் அப்படியே வாசிப்பது விசித்திரமானது. அவை சந்தேகத்திற்கு இடமின்றி நல்லதாக இருந்தாலும், காலங்கள் மாறுகின்றன, புதிய பிரச்சனைகள் எழுகின்றன, சமூகங்கள் மாறுகின்றன என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். 100 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது இப்போது முழுமையாகப் பொருந்தாது. உலகம் மாறினாலும் மனித மனம் மாறாமல் இருப்பது விசித்திரமானது. மக்களின் சிந்தனை மாறும்போதுதான் உலகம் மாறுகிறது. அதே சமயம் மக்களின் மனம் மாறிவரும் உலகத்துடன் மாற மறுத்து பழைய பாடங்களையே திரும்பத் திரும்பச் சொல்வதும் உண்மைதான்.

இப்போது, இந்து திருமண மற்றும் சொத்துச் சட்டங்கள் தொடர்பாக லோக்சபாவில் சில மசோதாக்கள் உள்ளன. மனு மற்றும் யாஞ்ஞவல்கியர் எழுதிய மேற்கோள்களைக் காட்டி இந்து மகாசபாவினர் சிலர் அதை எதிர்க்கின்றனர். மனுவும் யாஞ்ஞவல்கியரும் சிறந்த ஆத்மாக்கள் என்பதில் சந்தேகமில்லை, அவர்களின் எழுத்துக்களை நாம் மரியாதையுடன் படிக்க வேண்டும். ஆனால் அவர்களின் காலத்து இந்தியா முற்றிலும் வேறுபட்டது. கடந்த இரண்டு மூவாயிரம் ஆண்டுகளில் உலகம் பெரிதும் மாறியுள்ளது, இந்தியா மாறியுள்ளது, நமது சமூகம் மாறியுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த சமூக அமைப்பு இப்போதும் சரியானது என்று யாராவது சொன்னால் அதை என்னால் ஏற்க முடியாது.

ஒரு சிறிய உதாரணத்தைச் சொல்கிறேன். பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்துகிறோம். முந்தைய மக்கள் தொகை என்னவாக இருந்திருக்கும் என்பதைக் கணக்கிட நம்மிடம் சில முறைகள் உள்ளன. தற்போது நமது மக்கள் தொகை 36 அல்லது 37 கோடி. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இது ஒரு கோடிக்கும் குறைவாக, அநேகமாக அரை கோடியாக இருந்திருக்கலாம். அதாவது, ஒரு பரந்த நாட்டில் ஐம்பது லட்சம் மக்கள் பரவி இருந்தனர், இது ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகிறது. அப்போது பெரிய நகரங்கள் இல்லை. மக்கள் வசதியாக வாழ்ந்தனர். நிலம் அதிகமாக இருந்தது. இப்போது மக்கள் தொகை 36 கோடியை எட்டியுள்ளது, ஆனால் நிலம் அதேதான். எனவே உணவுத் தட்டுப்பாடு மற்றும் பிற புதிய பிரச்சனைகள் எழுகின்றன.

சமூகம் என்பது வளர்ந்து வரும் மற்றும் மாறிவரும் ஒரு அமைப்பாகும். ஒரு வகையில் இது ஒரு குழந்தையைப் போன்றது. உடல் வளர்ச்சியடைய குழந்தை தன் ஆடைகளை விடப் பெரிதாக வளர்கிறது. உடல் வளர்ந்த பிறகும் அதே பழைய ஆடைகளை அணிவித்தால் அது வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும். குழந்தைக்குப் புதிய ஆடைகளைத் தைத்துக் கொண்டே இருக்க வேண்டும். அதேபோல் ஒரு சமூகத்தின் அமைப்பும் ஒரு ஆடை போன்றது, சமூகம் வளரும்போது அது மாற வேண்டும். இல்லையெனில் அது தேக்கமடையும். ஒரு சமூகம் பழைய ஆடைகளைக் கிழித்துவிட்டுப் புதிய ஆடையை உடுத்தும்போது அதை நாம் புரட்சி என்கிறோம். வன்முறையின்றி அமைப்பை மெதுவாக மாற்றுவதில்தான் புத்திசாலித்தனம் உள்ளது. டெல்லியின் நிர்வாக அமைப்பு ஒரு கிராமத்தைப் போல இருக்க வேண்டும் என்று யாராவது சொன்னால், அது சாத்தியமே இல்லை என்றுதான் நான் கூறுவேன். டெல்லியில் 20 லட்சம் மக்கள் உள்ளனர், ஒரு கிராமத்தில் 500 பேர் மட்டுமே இருக்கலாம். அமைப்பு கண்டிப்பாக வேறுபட்டுத்தான் இருக்க வேண்டும். லோக்சபாவில் உள்ள மசோதாக்கள் மிகவும் நல்லவை, அவை விரைவில் நிறைவேற்றப்பட வேண்டும். இரண்டாயிரம் ஆண்டுப் பழைய முறையையே கடைபிடிக்க வேண்டும் என்பது ஏற்புடைய வாதம் அல்ல.

நான் முன்னரே கூறியது போல, 200 ஆண்டுகளுக்கு முன்பு மேற்கில் தொழில் புரட்சி தொடங்கியது. பெரிய தொழிற்சாலைகள் உருவானபோது தொழிலாளர்களை அநீதியிலிருந்து பாதுகாக்கத் தொழிற்சங்கங்கள் உருவாயின. சில நாடுகளில் அவை இன்று மிகவும் சக்திவாய்ந்தவை. கேள்வி என்னவென்றால், மோதல்கள் மற்றும்

வன்முறையின்றி நமது சமூகத்தின் குறைகளை நீக்கி முன்னேற முடியாதா? ஏன் முடியாது? முதலில் சண்டையிட்டுவிட்டுப் பிறகு பேசுவது விசித்திரமானது. ஏன் முதலில் பேசிப் பிரச்சனைகளைத் தீர்க்கக்கூடாது? வன்முறையின்றிப் பிரச்சனைகளைத் தீர்க்க முடியும் என்று நான் நம்புகிறேன். இறுதியில், உரிமையாளர்களின் 'லாக்-அவுட்' (lockout) மற்றும் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் ஆகிய இரண்டுமே தங்களின் பலத்தைக் காட்டுவதற்கான வழிகள்தான். தொழிலாளர்கள் தங்கள் வேலைநிறுத்த உரிமையைக் கைவிட விரும்பமாட்டார்கள் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் நாட்டுக்குத் தீங்கு விளைவிக்கும் பலப் பரீட்சையை விடச் சிறந்த முறைகள் இருக்க வேண்டும். ஏனெனில் நாட்டின் முன்னேற்றம் உற்பத்தியைப் பொறுத்தது. அமெரிக்காவிடமிருந்தோ அல்லது வேறு இடத்திலிருந்தோ பணம் பெற்று நாம் வாழ முடியாது. நீங்கள் கடினமாக உழைத்து அதிக செல்வத்தை உற்பத்தி செய்தால் மட்டுமே வளம் பெற முடியும்.

தேசிய செல்வம் என்றால் என்ன? அது தங்கம் அல்லது வெள்ளி அல்ல. அமெரிக்கா ஒரு பணக்கார நாடு, ஏனெனில் அது அதிக அளவில் தொழில்மயமாகியுள்ளது. நிலத்திலிருந்தும் தொழிற்சாலைகளிலிருந்தும் அவர்கள் பெரும் பொருட்களை உற்பத்தி செய்கிறார்கள். நாமும் இதைச் செய்ய வேண்டும். உற்பத்தி பெருகி, அந்தச் செல்வம் மக்களிடையே சரியாக விநியோகிக்கப்படும் ஒரு அமைப்பு நமக்குத் தேவை. பொருட்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்படும்போது நாட்டின் செல்வம் அதிகரிக்கும். மக்கள் படிப்படியாக வசதி பெறுவார்கள், வேலையில்லாத் திண்டாட்டம் குறையும். உற்பத்திக்குத் தடையாக இருக்கும் எதுவும் நாட்டின் செழிப்பைத் தடுக்கும். அதே சமயம் மக்களின் சிரமங்களைத் தீர்க்க ஒரு வழியைக் கண்டறிய வேண்டும், இல்லையெனில் அதிருப்தி வன்முறைக்கு இட்டுச் செல்லும். எனவே ஒரு வழியைக் கண்டறிவது நம் கையில் உள்ளது. ஏழ்மையையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழிப்பது, வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவது, ஒவ்வொருவருக்கும் உணவு, உடை, இருப்பிடம், வேலை மற்றும் கல்வி ஆகிய அடிப்படைத் தேவைகளை உறுதி செய்வதுதான் இந்தியாவின் இன்றைய பெரும் பணி. இந்தியாவின் பிரச்சனைகளைப் புரிந்து கொள்ள விரும்பினால் 36 கோடி மக்கள் இதில் ஈடுபட்டுள்ளனர் என்பதை நினைவில் கொள்ளுங்கள். வெளிநாடுகளில் இந்தியாவின் பிரச்சனைகள் என்ன என்று என்னிடம் கேட்கப்பட்ட போதெல்லாம், 36 கோடிப் பிரச்சனைகள் உள்ளன என்று நான் பதிலளித்துள்ளேன். ஒவ்வொரு தனிமனிதனும்

ஒரு பிரச்சனைதான். இது மனிதர்களைப் பற்றிய விஷயம், வெறும் புள்ளிவிவரம் அல்ல.

நாம் நல்லிணக்கத்துடன் வாழ முயல வேண்டும். ஆனால் வர்க்கப் போராட்டம் இருப்பதை மறுப்பது முட்டாள்தனம். சமூக அமைப்பில் மோதல்கள் இயல்பானவை. கேள்வி என்னவென்றால் அவற்றை எப்படி முடிவுக்குக் கொண்டு வருவது? வன்முறையையா அல்லது அமைதியான வழியையா? வன்முறை மற்றும் குழப்பங்களுக்கான காலம் போய்விட்டது என்பது எனது கருத்து. 36 கோடி மக்களை அமைதியான முறையில் உயர்த்தும் ஒரு தனித்துவமான சோதனையில் நாம் ஈடுபட்டுள்ளோம். அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் முன்னேற 150 ஆண்டுகளுக்கு மேல் எடுத்துக்கொண்டன, ஆனால் நாம் அதை 10 அல்லது 15 ஆண்டுகளில் செய்ய விரும்புகிறோம். மேற்கத்திய நாடுகளுக்குக் காலனிகளின் உதவி இருந்தது, நமக்கு அது இல்லை.

மறுபுறம், சோவியத் யூனியன் போன்ற நாடுகளில் பெரிய புரட்சி ஏற்பட்டு, ரத்த ஆறுகள் ஓடி, லட்சக்கணக்கான மக்கள் உயிர்களை இழந்த பிறகு தற்போதைய ஆட்சி உருவானது. அது ஒரு வலிமையான அரசாங்கம், ஆனால் அது ஒரு ஜனநாயகம் அல்ல. நான் அதை விமர்சிக்கவில்லை. ஒவ்வொரு நாடும் தன் அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்கச் சுதந்திரம் உள்ளது. ஆனால் அவர்கள் அந்தப் புரட்சிக்காக ரத்தமும் கண்ணீருமாகப் பெரும் விலையைக் கொடுத்துள்ளனர். வன்முறைப் புரட்சி என்பது ஒரு விளையாட்டு என்று நினைக்காதீர்கள். அதற்கு நீங்கள் ரத்தமும் கண்ணீருமாக விலை கொடுக்க வேண்டும். சோவியத் யூனியன் பெரும் விலையைக் கொடுத்தது. அவர்கள் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளனர் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் பல ஆண்டுகள் அங்கே பெரும் குழப்பம் இருந்தது. நாமும் அதையே செய்ய வேண்டும் என்று யாராவது சொன்னால் அது புத்திசாலித்தனமாகத் தோன்றவில்லை. அவர்கள் உள்நாட்டுப் போரைத் தேடிப் போகவில்லை, அவர்கள் அதற்குத் தள்ளப்பட்டார்கள். எந்த நாடும் விரும்பித் துன்பத்தை ஏற்பதில்லை. ஆனால் அமைதி மற்றும் அஹிம்சையின் வழி திறந்திருக்கும்போது, உள்நாட்டுப் போரைத் தொடங்குவது புத்திசாலித்தனம் அல்ல. நமது சோதனை தனித்துவமானது, ஏனெனில் ஐரோப்பாவைப் போல நமக்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகள் இல்லை, சோவியத் யூனியனைப் போல வன்முறை வழியையும் நாம் நாடவில்லை. நாம் ஜனநாயக முறையில், அமைதியாக, மிகக் குறுகிய காலத்தில் சாதிக்க முயல்கிறோம். இது ஒரு பெரிய சவால்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் குறித்து விவாதித்து வருகிறோம். முதல் திட்டத்தின் மூன்றரை ஆண்டுகள் முடிந்துவிட்டன, இன்னும் 18 மாதங்கள் உள்ளன. நாம் வேகமாக முன்னேறவும், வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கவும், உற்பத்தி செய்யப்படும் செல்வம் ஒரு சிலரிடம் மட்டும் சேராமல் சமமாகப் பிரிக்கப்படுவதையும் உறுதி செய்ய வேண்டும். இது ஒரு சிக்கலான பணி, வெறும் கோஷங்களால் இதைச் செய்துவிட முடியாது. சரியான திட்டமிடல் மூலம் மட்டுமே இதைச் சாதிக்க முடியும். நமது திட்டம் நெகிழ்வானதாக இருக்கும். ஒரு கட்டிடத்தைக் கட்டுவது போல இது வெறும் செங்கல் மற்றும் காரையால் ஆனது அல்ல, 36 கோடி மக்களின் மன மற்றும் உடல் திறன், தைரியத்தைப் பொறுத்தது. எனவே அனுபவத்திலிருந்தும் தவறுகளிலிருந்தும் பாடம் கற்றுக்கொண்டு திட்டத்தில் மாற்றங்கள் செய்ய இடம் இருக்க வேண்டும்.

சோவியத் யூனியனின் அனுபவத்தை எடுத்துக்கொள்வோம். அவர்களின் முதல் திட்டத்தில் பல குறைகள் இருந்தன, ஆனால் அவர்கள் அனுபவத்திலிருந்து கற்றுக்கொண்டார்கள். அனுபவம் ஒரு சிறந்த ஆசிரியர். நாமும் அனுபவத்திலிருந்து கற்றுக்கொண்டு தன்னம்பிக்கையில் வளர்ந்து வருகிறோம். இரண்டாவது திட்டம் சிறப்பாக இருக்கும். திட்டமிடல் என்பது வெறும் அதிகாரப்பூர்வ ஆவணமாக இல்லாமல் கோடிக்கணக்கான மக்களின் மனதிலிருந்து வர வேண்டும்.

இன்னொரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். அவாடி காங்கிரஸ் மாநாட்டில் 'சோசலிச பாணி சமூகம்' என்பதை ஏற்க முடிவு செய்தோம். இது ஓட்டுகளைப் பெறுவதற்கான தந்திரம் என்று சிலர் விமர்சிக்கிறார்கள். காங்கிரஸ் போன்ற ஒரு பெரிய அமைப்பு தன் வார்த்தையிலிருந்து பின்வாங்காது. இம்பீரியல் வங்கியைத் தேசியமயமாக்கும் மசோதா லோக்சபாவில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது, இனி அது 'ஸ்டேட் வங்கி' (State Bank) என்று அழைக்கப்படும். கிராமப்புற மக்களுக்குக் கடன் உதவி வழங்கவும் வளர்ச்சிப் பணிகளுக்கு உதவவும் இது கிராமங்களுக்கு விரிவுபடுத்தப்படும். ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டுவிட்டதால் கிராம மக்களுக்குக் கடன் கொடுக்க ஆள் இல்லை. அந்த வெற்றிடத்தை நிரப்ப இது அவசியம். வங்கியைத் தேசியமயமாக்கும்போது நாம் இழப்பீடு வழங்குகிறோம். இழப்பீடு அதிகமாக இருப்பதாகச் சிலர் கூறுகிறார்கள், சிலர் இழப்பீடே தேவையில்லை என்கிறார்கள். சோசலிசத்தில் இவ்வளவு பெரிய இழப்பீடு தேவையில்லை என்று அவர்கள் நினைக்கிறார்கள். அத்தகையவர்கள் சோசலிசம் என்றால்

என்ன என்பதைப் புரிந்து கொள்ளவில்லை என்றே நான் கூறுவேன். சோசலிசம் என்பது மற்றவர்களின் சொத்துக்களைப் பறிப்பது அல்ல. சோசலிசம் என்பது நாட்டில் சமத்துவம் நிலவும் மற்றும் செல்வம் சிலரது கைகளில் மட்டும் சேராமல் சமமாகப் பிரிக்கப்படும் ஒரு அமைப்பாகும்.

சோசலிசம் பற்றி அதிகம் பேச இது நேரமல்ல. சோசலிசம் என்பது நாட்டு மக்களுக்கு அதிகபட்ச நன்மையை உறுதி செய்யும் ஒரு சமூக மற்றும் பொருளாதார அமைப்பாகும். அனைவரும் சம வாய்ப்புகளைப் பெற வேண்டும் என்பதே எமது நோக்கம். ஆனால் பொருளாதார நிலை மேம்பட உற்பத்தி அதிகரிக்க வேண்டும். நாம் இப்போது ஒரு ஏழை நாடு. ஒரு சில பணக்காரர்களின் சொத்தைப் பிடுங்கி விநியோகிப்பதன் மூலம் பெரிய மாற்றம் வந்துவிடாது. அது கோடிக்கணக்கான மக்களிடையே காணாமல் போய்விடும். நாம் உற்பத்தியை அதிகரித்துத் தொழில்மயமாக்க வேண்டும். உற்பத்தி அதிகரிக்காமல் ஏழ்மையைத்தான் விநியோகிக்க முடியும். ஏழ்மையில் சோசலிசம் இருக்க முடியாது.

மே தினம் என்பது தொழிலாளர்களுக்கு ஒரு சிறப்பு நாள். ஐரோப்பாவில் இதைக் கொண்டாடுவது ஒரு காலத்தில் குற்றமாகக் கருதப்பட்டது. தொழிலாளர் வர்க்கம் பல இன்னல்களைக் கடந்து வந்துள்ளது. இந்த நாளில் நீங்கள் உங்கள் பிரச்சனைகளை மட்டுமல்லாமல், உலகப் பிரச்சனைகளையும் எதிர்காலத்தைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். உலகில் அமைதி நிலவ வேண்டும். அணுசக்தி போன்ற புதிய ஆற்றல் மூலங்கள் நம்மை மேலும் வலிமையாக்கும். வறுமையை ஒழிக்கத் தேவையான உற்பத்தித் திறன் இன்று மனிதனிடம் உள்ளது. முறையான திட்டமிடலும் ஒத்துழைப்புமே அதற்குத் தேவை. தேவையற்ற சண்டைகளில் நமது ஆற்றலை வீணாக்கக் கூடாது.

உலகம் வேகமாக மாறி வருகிறது. பழைய வாக்குவாதங்கள் இனிப் பொருந்தாது. பிரிட்டிஷ் ஆட்சி அகற்றப்பட்டதும், 500-600 சமஸ்தானங்கள் மறைந்ததும் உங்களுக்குத் தெரியும். அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கி அமைதியான முறையில் மாற்றத்தைக் கொண்டு வந்தோம். மற்ற நாடுகளில் இது ரத்தக் களரியுடன் நடந்திருக்கும். ஜமீன்தாரி முறையையும் அமைதியாக ஒழித்தோம்.

நாம் படிப்படியாக, மகாத்மா காந்தியின் அடிச்சுவட்டில் அமைதியான முறையில் முன்னேறி வருகிறோம். இப்படித்தான் நாம் சோசலிசத்தைக் கொண்டு வருவோம். வன்முறைப் புரட்சிகள்

கட்டுமானத்தைத் தொடங்குவதற்கு முன்பு நீண்ட காலக் குழப்பத்தை உருவாக்கும்.

இந்த மகிழ்ச்சியான தருணத்தில் உங்களை வாழ்த்துகிறேன். வரலாறு இந்திய மக்களுக்கு ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்கியுள்ளது. தனித்துவமான முறையில் முன்னேறி உலகிற்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ வேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஜெய் ஹிந்த்.

தயவுசெய்து காத்திருங்கள். தேசிய கீதம் இசைக்கப்படும். தேசிய கீதம் பாடப்படும்போது மரியாதையுடனும் அமைதியாகவும் கவனிக்க வேண்டும். ஒரு வரியைச் சிறுமிகள் பாடுவார்கள், பிறகு அனைவரும் சேர்ந்து பாட வேண்டும்.

(with the help of AI)

1-5-2026

may 3

நாடுகளில் ஆட்சியாளர் மாறும்போது, சென்ற ஆட்சியினரின் ஊழல் மற்றும் தவறுகள் குறித்து கமிஷன்கள் அமைப்பர். அவை என்னவாகும் என்பது தனித்த பதில் தேடவேண்டிய கேள்வி.

நேபாள் இளைஞர்களின் எழுச்சி அங்கு புதிய ராஷ்ட் ரிய சுதந்திரா கட்சி(ஆர் எஸ் பி) ஆட்சியைக் கொணர்ந்தது. நடந்த தேர்தல், பாரம்பரிய கட்சிகளான காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள், ஆர் எஸ் பி ஆகியவை பெற்ற இடங்கள் குறித்து முன்னொரு இடுகை செய்திருந்தேன்.

வெற்றி வாய்ப்பை இழந்த கட்சிகளுக்குள் விவாதங்கள்- blame games பெருகியுள்ளன. 2022ல் பெரும்பான்மையுடன் ஆட்சி பிடித்த நேபாளி காங்கிரஸ் வீழ்ந்தது. ஆட்சி அதிகாரத்தை பார்த்த இரு முக்கிய கம்யூனிஸ்ட் கட்சிகளான CPN UML, NCP இடங்களும் காங்கிரசை விட குறைந்தன. இக்கட்சிகள் ஊர்தோறும் உறுப்பினர்களை தக்க வைத்தல், முடிந்த இடங்களில் அதிகமாக்கல் என்கிற வேலையை முன்னெடுத்துள்ளன. ஆர் எஸ் பி செய்தது போல், தனது வேட்பாளர் தேர்வில் ஊருக்குள் primary election என்கிற முறைக்குப் போக காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.

77 மாவட்டங்களில்- 165 தொகுதிகளிலும் உறுப்பினர் சேர்க்கை- நாடு தழுவிய கன்வென்சன் என காங்கிரஸ் தன்னைப் பலப்படுத்த முயற்சி செய்து வருகிறது. கம்யூனிஸ்ட்கள் வார்டு தோறும் தோல்விக்கான காரணத்தை ஆய்ந்து வருவதாக சொல்லியுள்ளனர். யு எம் எல் கம்யூனிஸ்ட் கட்சி தங்களிடம் 6.7 லட்சம் உறுப்பினர்கள் இருக்கின்றனர் எனச் சொல்லியுள்ளனர். நேபாளில் 2021 கணக்கெடுப்புப்படி 2.9 கோடி மக்கள் வாழ்கிறார்கள். அதை வைத்து பார்த்தால் 'கம்யூனிஸ்ட் பார்ட்டி நேபாள்' எவ்வளவு செல்வாக்கு பெற்ற, உறுப்பினர் உள்ள கட்சி என அறிய முடியும். இந்தியாவை ஒப்பிட்டும் இதை உணர முடியும். அவர்களின் முடிவு ஒன்றில் the party must undergo organisational transformation and operate in a transformed manner - , நேபாள் கம்யூனிஸ்ட் பார்ட்டி(என் சி பி) தன் முடிவில் we must develop concrete plans on policy, leadership and working style எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இப்படி ஆண்ட கட்சிகள் காலமான 2006முதல் ஆட்சியில் இருந்தவர் சொத்து கணக்கெடுப்பு நடத்த ஆர் எஸ் பி ஆட்சி கமிஷன் ஒன்றை அமைத்து கெசட் அறிவிக்கை வெளியிட்டுள்ளது. ஓய்வுபெற்ற அந்நாட்டின் உச்சநீதிமன்ற நீதிபதி ராஜேந்திர குமார் பண்டாரி

தலைமையில் ‘to examine the assets’க்கான கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது. உயர் ஆட்சியாளர், உயர் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், இப்போதும் பணியில் இருபவர்கள்- எவரெல்லாம் public officeல் இருந்தனரோ ஆக அனைவரின் சொத்துக்கள் பற்றி இக்கமிஷன் ஆய்வு செய்து தன் அறிக்கையைத் தர வேண்டும்.

குடும்ப உறுப்பினர்கள் வெளிநாடுகளில் இருந்தாலும் அவர்கள் குறித்தும் ஆய்வு இருக்கும். இதில் மாநில அரசுகளில், மாவட்ட பணிகளில் இருந்தோறும் அடங்குவர். நேபாள் அரசு வங்கி , பொதுத்துறை உள்ளிட்ட உயர் நிறுவனங்களில் இருந்தோர் சொத்தும் ஆராயப்படும். பிரசிடெண்ட், பிரதமர், மந்திரிமார் அமர்த்திக்கொண்ட உயர் ஆலோசகர்களின் சொத்துக்களும் இக்காலத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்படும்.

முதலில் 2006-2025க்கான காலமும்- அந்த அறிக்கை வந்த பின்னர், 1991-2005 காலமும் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும் எனச் சொல்லியுள்ளனர். நேபாளின் diplomatic missions சார்ந்தவரும் இதில் உள்ளடங்குவர் எனச் சொல்லியுள்ளனர். Gen Z எழுச்சியை சமாதானம் செய்யும் கண்துடைப்பா, இல்லை சமுகத்தை overhauling நடவடிக்கையா என அறிய நாம் காத்திருக்க வேண்டும்.

கடந்த மார்ச் இறுதியில் அரசமைப்பு மாற்றம் குறித்து அறிக்கை தர task force ஒன்றை பிரதமரின் ஆலோசகரான அசிம் ஷா தலைமையில் அமைத்துள்ளனர். பல்வேறு கட்சிகளும் தங்கள் பிரதிநிதிகளை இக்கமிட்டிக்கு தந்துள்ளனர். அக்கமிட்டி என்ன சொல்லப்போகிறது எனப் பார்க்க வேண்டும்.

பிரதமர் பாலேந்திர ஷாவிற்கே வயது 36 தான். அவரது அமைச்சர் பலர் 40க்கு குறைவான வயதுடையவர்கள். Generational shift in politics and administration எனச் சொல்கின்றனர். மொத்த நாடாளுமன்ற இடங்களான 275ல் 70 பேர்களாவது 40க்கு குறைவான வயதுடையவர்கள். கம்யூனிஸ்ட் இயக்க தலைவருள் ஒருவரான கர்னா மல்லா சொல்வது ‘ politics is defined less by generation than by perspective’ ஆகவே இந்த வயது குறைந்த ஆட்சியாளர் என்பதால் மாற்றம் ஏதும் பெரிதாக வந்துவிடாது . We need right kind of politics என்கிறார்.

காங்கிரஸ் தலைவரான சங்கர் திவாரி, இது எங்கள் எல்லோருக்கும் பெரும் சவால்தான்- எப்படி அடுத்த அடுத்த தலைமுறைகளை எதிர்கொள்வது என்கிற புதிய சவால் எழுந்துள்ளது என ஏற்கிறார்.

நேபாளி கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் யுவராஜ் சொன்னது- the debate should not be reduced to age alone- judging that only through age is misleading - இதன் பொருள் பாரம்பரிய கட்சிகள் தங்களிடமுள்ள நடுவாந்திர, இளம் வயதுடையோரை பொருட்படுத்தி பார்க்க வேண்டும் என்பதை புறக்கணித்தல் அல்ல.

எந்த அதிகாரமும் எப்போதும் அதிகார இலக்கணங்களை இழப்பதில்லை என்பதையும் சேர்த்தே இன்றுள்ள ஆர் எஸ் பி ஆட்சியையும் பார்க்க வேண்டியுள்ளது . போராட்டங்களைக் கூட எளிதாக கட்டமைத்து விடலாம். நிர்வாகம் என்பது அவ்வளவு எளிதானதல்ல. அது அருங்கலைப் போன்ற ஒன்றே.

3-5-2026

may 4

I just asked com Namari what is the single most important transformation, on his observation regarding Telecom Trade Union movement.

He coolly replied the transformation happened in the last 40 years since 1985- that is depeasantised and demazdoorised growth of lower middle class mostly small town based.

I thought if that observation was correct, then transforming the daily workers to the strata of middle class was one of the finest achievements of the telecom movement led by com O P Gupta.

Many amongst them did not even have the essential 10 years qualifying service to get pension from GOI when absorbed in the PSU. Today lakhs of this section is getting Govt pension on retiring from the bsnl PSU. From daily rated to monthly govt pension is really a grand transformation in any TU movement.

In each small area many in the telecom movement evinced keen interest in unionizing this section. Many leaders emerged from this neo middle class.

One of the finest experiments in the Telecom movement, ofcourse with the help of bureaucracy and the government of that period..

4-5-2026

may 5 மே 2026 தேர்தல் முடிவுகள்

மே 2026 தேர்தல் முடிவுகள் குறித்து ஏராள விவாதங்கள் உரையாடல்கள் நடந்து வருகின்றன. அனைத்து உரையாடல்களும் ஏதோ ஒன்றை சொல்ல வருகின்றன.

மூன்று முதல்வர்களின் ஆட்சி பரிசீலிக்கப்பட்டு, மாற்று கட்சிகள் வெற்றி பெற்றுள்ளன. இரு முதல்வர்களின் ஆட்சிக்கு மீண்டும் ஆதரவு கிடைத்துள்ளன. பாஜக தேர்தல் ராட்சத எந்திரம் இன்னும் பழுதாகவில்லை.

இடதுசாரிகளுக்கு இருந்த கேரளம் இம்முறை நழுவிப்போனது. துணிச்சலான தெருப்போராளி என அறியப்பட்ட 15 ஆண்டு பெண் முதல்வர் அகற்றப்பட்டுள்ளார். பாஜக எதிர்ப்பின் ஊசலாட்டமில்லா முகம், டெல்லிக்கு out of control என பொதுவெளிக்கு உணர்த்தி வந்த முதல்வர் தன் தொகுதியை இழந்துள்ளார்.

புதிய சக்தியின் எழுச்சியை தமிழகம் காண்கிறது. தலைமுறை இடைவெளி அரசியல் தொழிற்பட்டுள்ளது. தவெகவிற்கு simple majority கிடைக்கவில்லை. Magic fig 118 யை அவர்கள் நிருபிக்க வேண்டிய நிலையில் முடிவுகள் வந்துள்ளன. எவர் எவர் ஆதரவு தந்து , மீண்டும் தேர்தல் என்ற நிர்ப்பந்தத்தை தவிர்க்கப் போகிறார்கள் எனத் தெரியவில்லை.

தவெக ஆட்சிக்கு பெரும் சவால்கள் இருக்கவே செய்கின்றன. அனைவரும் புதியவர்கள். அதிகாரவர்க்கத்தை, போலீஸ் துறையை, பிற இலாகா நிர்வாகங்களை இனித்தான் அவர்கள் கற்று புரிந்துகொண்டு செயலாற்ற வேண்டும். நிர்வாகம் என்பது அருங்கலை. அதில் வித்தகராக - தொடர் பயிற்சி , sharpness , கடின உழைப்பு தேவைப்படும். அதற்கு அதன் தலைவர் முதல் சிலராவது தயாராக வேண்டும்.

வலுவான , ஆட்சியின் கஷ்ட நஷ்டங்களை தெரிந்த திமுக , அண்ணா திமுக உறுப்பினர்கள் அவையில் இருப்பர். அவர்களை திறமையாகவும், நட்புரீதியாகவும் எதிர் கொள்ளும் கலையும் அவையில் தேவைப்படும். பத்திரிகை, ஊடகங்கள், அதிகார வர்க்க, போலீஸ் ஒத்துழைப்பும் biasம் சேர்ந்தே இருக்கும் என்பதும் உணரப்பட வேண்டும்.

இருக்கிற நிதிக்குத்தான் பட்ஜெட். வாக்குறுதிகள் ஏராள செலவை வைக்கலாம். மக்களிடம் நன்மதிப்பைப் பெற சட்டம் ஒழுங்கு, பெண்களின் பாதுகாப்பு குறித்த பெரும் விழிப்புணர்வு தேவைப்படும்.

இதுவரை தவெக fan based ஆக செயல்பட்டிருக்கலாம். இப்போது அவர்கள் ஆட்சிக்கு வரத் தகுதியான அரசியல் சக்தி. அதற்குரிய political cadre based ஆக அது தன்னை வலுப் படுத்த வேண்டியிருக்கும். தனக்கென வெகுஜன துணை அமைப்புகளாக-தொழிற்சங்கம், விவசாய சங்கம், இளைஞர் மாணவர் பெண்கள் அமைப்புகள் கூட தேவைப்படலாம். சமுக வலைத்தள பெரும் தொண்டர்படையை விரிவு படுத்த வேண்டி வரலாம்.

தவெக நிர்வாகத்தில் , அரசியல் ஸ்தாபன வடிவில் தன்னை நிலைநிறுத்திக்கொள்ள வேண்டிய உடனடி கடமைகள் இருப்பதாக தோன்றுகிறது. பாஜக அரசியல் எதிர்ப்பு என்பதும், மத்திய மாநில அதிகாரம் மற்றும் நிர்வாக உறவுகள் என்பதையும் இனி தான் அக்கட்சி நடைமுறை சோதனைகள் வழி அறிய வேண்டியிருக்கும். எம்ஜிஆர் வழி pragmatism ஆரம்பத்தில் தேவைப்படலாம்.

எவர் ஆதரவு தருகிறாரோ அவர்களுக்கு அதிகாரத்தில் பங்கு என்பதுடன் அல்லாது, குறைந்தபட்ச செயல்திட்டம்- annual plan கருத்தொற்றுமை அடிப்படையில் உருவாக்க உத்தரவாதம் தரலாம்.இன்னும் எவ்வளவோ சவால்கள் அந்த இளம் கட்சிக்கு...

ஒருவேளை திரு ஸ்டாலின் வெற்றி பெற்று அவையில் இருந்திருந்தால் - மூத்தவர் , கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடிந்தவர் என்ற வகையில் திமுகவின் எதிர்ப்பும் , அவை நடத்த ஒத்துழைப்பும் balance ஆக இருக்கக்கூடும். திரு ஸ்டாலின் வெளியிலிருந்து கட்டுப்படுத்தும் போது அது எப்படி அமையுமோ, தெரியவில்லை.

பாஜக எதிர்ப்பு வாக்குகள் என்பதில் திமுக கூட்டணி வாக்குகள் மட்டுமல்ல, தவெக பெற்ற ஒன்றே முக்கால் கோடி வாக்குகளும் உள்ளன என்கிற அரசியல், திமுகவால் பார்க்கப்படுமா எனத் தெரியவில்லை. பார்த்தால் அதற்கேற்ற நகர்வுகள் இருக்கலாம். தமிழகம் எதிர் டெல்லி என்கிற அரசியலை, திமுக எதிர் அதிமுக அரசியலை, திமுக எதிர் தவெக என அவ்வணி மாற்றிக்கொள்ளுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அதிமுக எடப்பாடிக்கு உடனடியாக ஆபத்து வந்துவிடுமா தெரியவில்லை. பாஜகவால் சேர்ந்ததால்தான் வீழ்ச்சி என உள்

விவாதம் வரலாம். திரு ஸ்டாலின் அவர்களின் தொகுதி தோல்வியையும் கணக்கில் கொண்டால், எடப்பாடி மீதான விமர்சன உஷ்ணம் அதிகமாக இருக்காது என்றே தோன்றுகிறது. இனி அதிமுகவிற்கு முதல் எதிரி திமுக என்கிற அரசியல் என்னவாகும்- அதிமுக தவெக உறவா - போட்டி என்கிற பகையா எப்படி அரசியல் 5 ஆண்டுகளுக்கு செல்லும் எனத் தெரியவில்லை.

காங்கிரசால் மத்திய அரசியல் சூழலில் உடனடியாக திமுகவை விட்டு தள்ளிச் செல்ல முடியுமா எனத் தெரியவில்லை. காங்கிரஸ் தவெகாவை பாஜக பக்கம் தள்ளிவிடாமல் சற்று அனுசரிக்கும் அரசியலையும் இலாவகமாக செய்ய வேண்டி வரலாம். அடுத்த மத்திய பொதுத் தேர்தலுக்கு தவெக option என்பதும் திறக்கப்பட்டுள்ளது.

இடதுசாரிகள் , விசிக issue to issueஆதரவு மற்றும் எதிர்ப்பு நிலைப்பாட்டை அவரவர் கட்சி வளர்ச்சியையும் மனதில் கொண்டு செய்வார்களா எனத் தெரியவில்லை.

மக்கள் பிரச்சனைக்கு, அரசாங்கத்தை எதிர்த்த வலுவான போராட்டங்களை திமுக, அதிமுக கட்சிகளும் கட்டவே பார்ப்பர். அவர்கள் அணி அப்படியே இருக்குமா, அவரவர் சுதந்திர நிலைப்பாடுகளை issue based ஆக எடுப்பார்களா எனப் பார்க்க வேண்டும்.

அய்ந்து தேர்தல்களும் பல்வேறு செய்திகளை, அவரவர் பார்வை கோணத்தில் சொல்லக்கூடும்.

மக்கள் விழைவதெல்லாம் அமைதியான சூழலில் அவரவர் குடும்பத் தேவைகளின் நிறைவேற்றம் என்பதைத் தான். வேலை, கல்வி, சாலை, குடிநீர், விலைவாசி, கொலை கொள்ளை இல்லா பாதுகாப்பு, குழந்தைகள்- பெண்கள் பாதுகாப்பு, லஞ்சமில்லா நிர்வாகம், சாதி மத பதட்டமில்லா சூழல், மனித தோழமை கூடிய காவல்துறை- சுருக்கமாகச் சொன்னால் ‘மனித கௌரவம்’ நிலவும் சூழல் என்பதைத்தான்.

அரசியல் என்பது மானுட அக்கறை என்றில்லாமல் அதிகார ஆட்டம், சொத்து சம்பாதித்ய வாகனம் என்பதாகியுள்ளது. தேர்தல் முடிவுகள் அரசியல் நெறி நோக்கி நகர்ந்தது எனச் சொல்லத் தகுந்ததாக இல்லை என்பதை உணரமுடிகிறது.

Moral politics என்பது வெறும் கனவா...

5-5-2026 R. Pattabiraman

may 6 Preliminary Observations of Left Parties on election results

CPIM

The two major features of the assembly elections are the serious setback to the LDF in Keralam and the victory of the BJP in WB. The DMK led alliance also suffered a setback in TN, where the TVK led by Vijay emerged as a major force. The BJP was able to retain Assam along with NRC once again in Puducherry….

In WB, Assam, Puducherry the results show the ascendency of right wing communal forces led by the BJP, which is a matter of deep concern for all the secular, progressive and democratic forces..

CPIML Liberation

..elections have produced a string of shocking outcomes, especially in WB and TN. For the first time in the electoral history of WB, the BJP has come to power while TN witnessed a rise of a new party TVK under the leadership of filmastar Joseph Vijay Chandrasekar ending the alternating political domination of the DMK and AIADMk over the last six decades….

CPIML Red star

Results reveal a mixed picture reflecting the specificites of the states and underscore the ever present and intensifying fascist threats across the country….

The stunning and unexpected rise of TVK led by actor Vijay, facilitated by youth support has resulted a disruption on the general bipolar political situation in TN. Of course, though less discussed, it is the people's opposition to the neoliberal policies of Stalin led DMK Govt that led to its failure in a three cornered fight. ..it is Upto the anti fascist and non fascist parties who have representation in TN assembly to rise to the occasion and take an appropriate decision to keep the RSS BJP away from power in TN. And failure in this may give ample opportunities for the fascist forces, in view of Vijay's non ideological politics so far displayed by him….

(as viewed in their websites…placed only The extracts here)

6-5-2026

மே 7

Crisis of Governability…

சுதிப்தாவின் ‘ politics in India’ நூலில் இடம் பெற்ற சில ஆய்வு கட்டுரைகள் குறித்து சில இடுகைகள் செய்திருந்தேன். இன்று செய்யவுள்ள இடுகையுடன், இப்போதைக்கு நூல் குறித்த சிறு அறிமுகத்தை நிறுத்திக்கொள்கிறேன்.

Sociology of Religion இதில் முக்கிய பகுதிகளில் ஒன்று. அதில் எப்படி பல்வேறு வகுப்பு பிரிவினர் self recognition என்பதுடன் feeling of political agency ஆக மாறியுள்ளனர் என்பது விவாதிக்கப்படுகிறது. அரசியல் செக்யூலர் என்பது ‘சமுகம் செக்யூலர்’ என்கிற பின்புலத்தில்தான் தன்னை முழுமையாக சாத்தியப்படுத்த வாய்ப்பு அமையும் என்பது சொல்லப்படுகிறது. இதில் பிபின் சந்த்ரா, ‘பிறழ்வு மனநிலையாக’ கம்யூனலிசம் என்பதை ஆய்வு செய்கிறார். கியாநேந்திர பாண்டே ‘கம்யூனலிச கட்டுமானம்’ நடந்தேறுவதை விவாதிக்கிறார். பசு அரசியலை விரிவாகப் பேசுகிறார்.

ஹர்ஜோட் ஒபெராய் சீக்கியர் அடிப்படைவாதம் குறித்து தன் ஆய்வுத்தாளை வைத்துள்ளார். காலிஸ்தான் முழக்கங்கள் குறித்து சொல்கிறார். நாம் , பிறர் கட்டுமானங்கள் வழி வகுப்புவாத சக்திகள் தொழிற்படுவது விவாதிக்கப்படுகிறது.

அஷிஸ் நந்தியின் ‘the critique of modernist secularism’ மதம்- சமயப்பிரிவினர் எப்படி நம்பிக்கை- கோட்பாடு என்கிற இரு தளங்களில் செயல்படுகின்றனர். இதில் the modern state prefers to deal with religious ideologies rather than with faiths என்கிற அம்சத்தை விரிவாக விவாதிக்கிறார். அது ஏதோ நவீன அரசு கட்டுமானத்திற்கு எதிரி என்கிற கோணம் செயல்படுகிறது. பொது ஏரியாக்களில் மதத்திற்கு இடமில்லை என பேசப்படுதல் நடக்கிறது. அடுத்து அவர் எழுப்பும் கேள்வி why the ideology of secularism not working in India ?

புகழ் வாய்ந்த அறிஞர் டி என் மதனின் ‘secularism in its place’ கட்டுரை இதில் இடம் பெற்றுள்ளது. மதனும் what exactly does the failure of secular mean என்ற கேள்வியுடன் விவாதிக்கிறார். மார்க்சியர்கள் சொல்லும் பொருளாயத காரணி மட்டும் மதனுக்கு போதவில்லை. காந்தி, நேரு பேசிய பார்வையை எடுத்தும் மதன் விவாதிக்கிறார்.

அகில் பில்கிராமி two concepts of secularism என்கிற கட்டுரையை தந்துள்ளார். அவரும் நந்தி எழுப்பிய அதே கேள்வியை விசாரிக்கிறார்-

why is it that the Nehruvian vision of a secular India failed to take hold?. இந்திய அனுபவம் சமய அரசியல் என்கிற ஏணியில் ஏறிவிட்டு, செக்யூலரிசம் என்ற பெயரில் ஏணியை உதறுவதாக இருக்கிறதா என்கிற விவாதத்தையும் பில்கிராமி கொணர்கிறார். பில்கிராமி காட்டும் இன்னொரு முக்கிய புள்ளி, வகுப்புவாதத்திற்கு அறிவியல் பார்வையின்மை என்பதை ஏற்க முடியவில்லை- வகுப்புவாதம் அரசியல் பிராஜெக்ட் என மிக லாவகமாக scientific temper கொண்டே இயங்குகிறது என்பதாகவுள்ளது.

அடுத்து இந்நூல் விவாதிக்கும் அம்சம் sociology of state crisis என்பது குறித்து.. இதில் அதுல் கோலி எழுதியுள்ள crisis of Governability சுவையான ஆய்வுத்தாள். இந்திய அரசியல் personality வளர்ப்பா- institutional வளர்ச்சியா என்கிற முக்கிய விவாதப் பொருளை கோலி எடுத்து ஆய்வு செய்கிறார். அவர் வந்தடைகிற புள்ளிகளுள் ஒன்று -India's institutional capacity to deal with conflict and initiate solutions to pressing problems and its declined role - the declining capacity to govern..இதை மிக முக்கிய அனுபவமாக எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது.

Personalisation of power can of course, be either a cause or a consequence of weak institutional role. இந்திய அரசியலில் பெரும்பான்மை தலைவர்கள் தங்களின் அதிகார வெளி விரிவாக்கத்தில் மிக கவனமாக இருந்து, governmental institutions என்பதைவிட தங்கள் personal power என்பதில் focused ஆக இருந்ததை, இருப்பதை பார்த்து வருகிறோம்.

இந்திய அரசியல் institutions driven என்பதைவிட personality driven என்கிற சௌகரியத்தையே தேடுகிறது. இதனால் governability என்கிற நெருக்கடியை உணர்கிறோம். யார் வந்தாலும் ஒன்றும் நடக்காது என்கிற பொது புத்தி எழுவதைக் காண்கிறோம்...ஆனாலும் வாக்குரிமை பெற்ற மக்கள் புது புதுச் சோதனைகளை செய்யத் தவறுவதில்லை..leading the mass என்பதில்லாமல் learning from the mass என்பதும் நடக்கத்தானே செய்கிறது...who should lead என்பதின் ஓயாத சச்சரவாகவும் இந்திய அரசியல்.. conscious mass - lumpen mass என்கிற உரையாடலும் ஏதோ இன்று வந்த ஒன்றல்ல..

Sudipta Kaviraj எடிட் செய்துள்ள இந்நூல், இந்திய அரசியலின் நுட்பமான பகுதிகளிலும் வெளிச்சத்தை பாய்ச்சக்கூடியதாக இருப்பதை படிப்பவர் உணரலாம்..

7-5-2026 See less

மே 8

அரசும் கலாச்சாரமும்

அரசும் புரட்சியும் என்கிற புகழ் வாய்ந்த ஆக்கத்தை லெனின் எழுதியிருந்தார். State and Revolution இன்றும் பேசப்படுகிற ஆய்வு நூல். அது இந்திய இடது அரசியலுக்கு இன்று எவ்வளவு பொருத்தமானது என்பது விவாதத்திற்குரிய அம்சமாக இருக்கலாம்.

இங்கு நான் சொல்ல வருவது 'அரசும் கலாச்சாரமும்'- அவற்றின் ஊடாட்டம்- எது எதை கட்டுக்குள் வைக்கப் போராடுகிறது - எது எதனை கருவியாக்கிக் கொண்டு பலப்படுத்திக்கொள்ள விழைகிறது என்பதைக் குறித்த ஆக்கம் பற்றி..

நவீன அரசுவாதிகள் statists என அறியப்படுகிறார்கள். கலாச்சாரவாதிகளை culturalists என எடுத்துக்கொண்டால் அவர்களின் சந்திப்பு புள்ளிகள் ஏதேனும் இருக்கிறதா- அல்லது முழு மோதலாக அவர்கள் வலுவான 'nation state vs civilisational state' எதை கட்டப் போராடுகிறார்கள் என்கிற புரிதலை எட்ட முடியும். அரசுவாதிகள் கலாச்சாரம் குறித்து பேசாமல் இல்லை. கலாச்சாரவாதிகளும் அரசு தேவையை அறியாமல் இல்லை. அவர்களின் உரையாடலில் அவர்களின் primacy மொழியாடல் என்னவாக இருக்கிறது ? அறிவியலாளர்கள் நம்பிக்கையையும், நம்பிக்கையாளர் அறிவியல் ஏற்பாடுகளையும் கொள்ளாமல் இல்லை.

நவீன அரசு -நவீன சமுகம் அதன் உலக நாகரிகம் (மேற்கின் மாடலில்) என்கிற விவாதமும், பண்டைய பெருமித தனித்த கலாச்சாரம் அதற்கு பங்கமில்லா இணக்கமான அரசுருவாக்கம் என்கிற விவாதமும் இந்தியாவில் மட்டுமல்ல, உலகெங்கும் நடவாமல் இல்லை. இந்தியாவிலும் இதன் வீச்சை கடந்த 150 ஆண்டுகளுக்கு மேலாக கண்டு வருகிறோம். இதில் தான் மார்க்ஸ், காந்தி, நேரு, தாகூர், அம்பேத்கர், பெரியார் மட்டுமல்ல- விவேகானந்தர், பங்கிம் சந்திரர், ராம் மோகன் ராய், சாவர்க்கர் எனப் பலரும் அவரவர் புரிதல் உரையாடல்களுடன் வருகின்றனர். ஆதரவான தளங்களையும் பெறுகின்றனர் அல்லது இழந்து வருகின்றனர்.

Modern Statism within Christianity, Islam, Hinduism என்பது யதார்த்த உலகின் காட்சிகளாகவும் மாறியுள்ளன. State Engineering, Social Engineering, Cultural Engineering என பல சொல்லாடல்களின் புழக்கத்தை கேட்டு

வருகிறோம். மனிதனே engineered man- engineered Hindu, Muslim etc என ஆக்கப்பட்டுள்ள நிலை.

இங்கு கோட்சே போன்ற ultra conservatists நவீனத்தின் தேர்ந்த பிரநிதியான நேருவை விட காந்தியை தேர்ந்தெடுத்த நிகழ்வையும் பார்க்கிறோம். எனவே கலாச்சார போலீஸ்களுக்கும் இங்கு வலுவான நவீன அரசுருவாக்கம் தேவைப்படுகிறது. அவர்களுக்கு civilisation must use the state as an instrument and not become an instrument of the state என்கிற தேவையிருக்கிறது.

சுருக்கமாகச் சொல்லப் போனால் state sensitive polity and culture vs culture sensitive state and polity என்கிற விவாத முட்டுச் சந்தில் இந்திய சமூகம் இழுப்புகளுக்கு உள்ளாகி வருகிறது. அறிவியலின் சாகசங்களை பார்த்தாயா என்று ஒரு புறமும், நம்பிக்கைகள் மலையைக் கூட சாய்த்துவிடும் என்கிற மரபு உரையாடலும் நடமாடும் களமாக... மௌனி கேட்பது போல் எவரின் நடமாடும் நிழல்கள் நாம்.

மேலே எழுப்பிய உரையாடல்களை கனமாக பேசக்கூடிய நூல் தான் The Romance of the State by Ashis Nandy. இதில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் 2003ல் தொகுப்பாகி நூல் வடிவம் பெற்றன. ஆக்ஸ்போர்ட் பிரஸ் வெளியிட்டனர். 17வது பதிப்பு 2024ல் வெளியானது. அஷிஸ் நந்தி குறித்து அறிந்தவர்க்கு இந்நூலின் முக்கியத்துவம் தெரிந்திருக்கும்.

முதல் பகுதியில் The fate of a concept, culture state and the rediscovery of Indian politics என்கிற இரு கட்டுரைகள் உள்ளன. அடுத்த இரு பகுதிகளில் 8 கட்டுரைகளும் , ஆக 10 முக்கிய கட்டுரைகளின் தொகுப்பு நூல். கலாச்சாரம், அரசு, வரலாறு, வன்முறை, வளர்ச்சி , மாறுபடும் உரிமை என பல்வேறு கருத்தாக்கங்களைச் சுற்றி நூலின் ஆய்வு செல்கிறது.

பார்க்கலாம்..அஷிஸின் இந்நூல் குறித்து மேலும் ஏதாவது என்னால் சொல்ல முடிகிறதா என்று..

8-5-2026

may 9

தமிழ்நாட்டின் தேர்தல் முடிவுகள் தற்காலிக நிலையற்ற , மாறும் காட்சிகளை காண்பித்து வருகிறது.

தமிழக மக்கள் ஏகோபித்து ஒன்றை சொல்லியுள்ளதாகத் தெரிகிறது. நான்கு முனை போட்டியில் அவர்கள் மூன்று கட்சிகளை பெரும்பான்மையாக எடுத்து எடை போட்டுள்ளனர். பாரம்பரிய திமுக, அதிமுக இரு கட்சிகளையும் அப்படியே ஒரே தேர்தலில் அகற்றிவிட வேண்டாம்..அப்படி ஒரு தேவை உணரப்பட்டால் அது phased manner இருக்கட்டும் என வாக்காளர்கள் உணர்த்தியிருக்கலாம்.

அதேபோல் புதிய கட்சியான தவெகாவிற்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்கலாம். அதுவும் limited ஆக இருக்கட்டும். அவர்கள் தேறினால் phased mannerல் அவர்களே ஆளத்தகுந்த பெரும்பான்மையை காலப் போக்கில் தரலாம் என உணர்த்தியிருக்கலாம். வரவேற்பும் கைவிடலும் Phased mannerல் அமையட்டும் என மக்கள் தீர்ப்பை வழங்கியதாக நான் புரிந்து கொள்கிறேன்.

மற்றொரு முக்கியமான அம்சம், மத்தியில் ஆளக்கூடிய பாஜகவிற்கும், ஆண்ட காங்கிரசிற்கும், பாரம்பரிய கட்சிகளுடன் தேர்தல் உடன்பாடு கண்டு சிற்சில இடங்களில் நின்ற கட்சிகளுக்கும் - என்ன தருவது என்பதிலும் மக்கள் தங்கள் வாக்கு நியாயத்தை வழங்கியுள்ளனர். பாஜகவை அறவே நீக்காமல் ஒரே ஒரு இடம் என்ற அளவில் அதற்கான எல்லையை மக்கள் கோடிட்டுள்ளனர். அதேபோல் காங்கிரசிற்கும் அதன் striking rateல் பெருமை கொள்ள முடியாமல் வெற்றி இடங்களை சுருக்கிக் கொடுத்துள்ளனர். சிறிய கட்சிகளுக்கு அவரவர் வலுவான தள நிலைமைக்கேற்ப கொடுக்கப்பட்ட இடங்களில் வெற்றி தோல்வியை நிர்ணயித்துள்ளனர். தமாகா, நாதக போன்றவர்களுக்கு ஓர் இடம் கூட கிடைக்காமல் செய்தது ஏனோ?

பாஜகவிற்கு எதிரான தேர்தல் வெற்றி அவசியம் என்கிற narratives செய்தவர்கள், அரசியல் வெற்றி என்று எடுத்துக்கொள்ளும் அளவிற்கு மக்கள் தீர்ப்பை விளக்க முடிகிறது. திமுகவிற்கு முதலிடம் இல்லையென்றாலும், தவெகாவிற்கு முதல் இடம் கிடைத்திருந்தாலும் அவ்வெற்றியை அவ்வாறு விளக்க முடிகிறது.

குடியரசு தலைவர் ஆட்சி (மறைமுக மத்திய பாஜக ஆட்சி என்ற வகையில்) வந்துவிடாமல் தடுப்பது, மீண்டும் ஒரு தேர்தலை திணித்துவிடாமல், சில மாதங்களுக்காவது தமிழகத்தில் அரசாங்கம் ஒன்றை அமைப்பது என்கிற வகையில் இடதுசாரிகள் தங்கள்

கடமையை வெளிப்படுத்தி தவெகாவிற்கு ஆதரவு நிலைப்பாட்டை தெரிவித்துள்ளனர். இன்னும், ஆளுநர் ஆட்சி அமைக்க அழைப்பதில் , குழப்பம் நீடிக்க வைக்கப்படுகிறது.

திமுக எதிர்ப்பை மய்யப்படுத்திய தவெகா தமிழக அரசியலின் இழு திசைகள் பற்றிய அனுபவத்தை கற்க வெகுதூரம் பயணிக்க வேண்டியிருக்கும். திமுக எதிர்ப்பை மய்யப்படுத்திய அதிமுக மேலும் குறைவான இடங்களுக்கு போகவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதிமுகவை பயன்படுத்தி திமுகவை அகற்ற நினைத்த பாஜகவிற்கு தன் கனவு பலிக்கவில்லையே என்கிற நிலை ஏற்பட்டுள்ளது. காங்கிரசிற்கு , விசிகவிற்கு விருப்பமான நிலைப்பாடான ஆட்சியில் பங்கு கைகூடுமா எனத் தெரியவில்லை. கூடினால் வரவேற்கலாம்.

தேசிய கட்சிகளும் , பாரம்பரிய தமிழகத்தின் பெரிய கட்சிகளும் தங்கள் சாதுர்ய காய்களை, எதிரிக்கு எதிரி நண்பன் அரசியல் விளையாட்டுகளை செய்து வருகின்றனர். அரசாங்க அதிகாரம் எவ்வளவு மயக்கம் நிறைந்த ஒன்று என்பதில் இக்கட்சிகள் ஏராள அனுபவங்களை கொண்டவர்கள். தவெகாவிற்கு இனிதான் இந்த அதிகார மயக்கம் கிறக்கம் அனுபவ வாயிலாக ஏற்பட வேண்டும்.

அதிமுக -திமுக கூட்டணி சர்க்கார் என்பதை சோதித்தால் என்ன என்ற கேள்வி உருவாக்கும் அளவு மக்கள் தீர்ப்பு அமைந்துவிட்டது. பங்காளிகளை தேர்தல் பகையாளியாக்கிய 50 ஆண்டுகால பழைய தலைமுறை மெதுவாக நீங்கி வருகிறது. பங்காளிகளான அதிமுக , திமுகவுடன் சேர்ந்து ஆட்சி அமைத்தால் தவறில்லை என்பதை அக்கட்சியினர் ஏற்கத் தகுந்த புதிய சூழலை மக்கள் உருவாக்கிவிட்டனர். எல்லோருக்கும் existential crisis யை தேர்தல் உருவாக்கிவிட்டது.

திருமிகு கலைஞர், செல்வி ஜெயலலிதா காலத்தைவிட - அதிகார வர்க்கப் பிடி கூடி வரக்கூடிய காட்சிகளை தமிழக நிர்வாகம் பார்த்து வருகிறது. தவெக ஆட்சி ஒரு வேளை அமைந்தாலும் அதிகார வர்க்கத்தை பெரிதும் சார்ந்த ஆட்சியாகவே அது அமைய வேண்டி வரும். தமிழ்நாட்டிற்கு மக்கள் கொடுத்த தீர்ப்புப் படி அவர்களின் தேர்தல் முடிவை பிரதிபலிக்கக்கூடிய ஆட்சியாக தவெக ஆட்சி ஒன்றே இருக்க முடியும். வேறு சோதனைகள் அரசியல் தந்திரங்களாக வேண்டுமானால் அமையலாம். அவை பெரும்பான்மை மக்களின் விருப்பத்தை பிரதிபலிப்பதாக சொல்ல முடியுமா? பாஜகவும் மற்ற வட்டார பெரியவர்களும் மேலும் மக்களின் கோபத்திற்கு உள்ளாவர்களா ? அடுத்த தேர்தல் சில மாதங்களில் நோக்கி தமிழகம்

நகரப்போகிறதா ? காலம்தான் கேள்விகளுக்கு பதிலைச் சொல்லும். அதுவரை ஊகங்கள் என்கிற pleasurable job இருக்கவே செய்யும்..

9-5-2026

may 10

நல்வாழ்த்துகள்!

பெயரில் என்ன இருக்கிறது எனக் கேட்போர் உண்டு- பெயரில் நிறையவே இருக்கிறது எனச் சொல்வோரும் உண்டு. பெயரைச் சொன்னாலே இன்ன சாதி, இன்ன மதம் என்று பொது புத்தி உணரும் அளவிற்கு பெயர் ஒரு குறிப்பானாக இருந்து வருகிறது.

முதன்முறையாக பெயரில் 'தமிழக' என்பதைக் கொண்ட கட்சி ஒன்றின் அரசாங்கம் அமைய மக்கள் வாய்ப்பளித்துள்ளனர். இதற்கு முந்திய ஆட்சியாளர்கள் 'இந்திய', 'திராவிட' பெயரடைகளைக் கொண்டிருந்ததை பார்த்துள்ளோம். தமிழகம் என்கிற அடையாளத்திற்கான ' தமிழ் தேசியம்' சார் உரையாடல்கள் சில கட்சிகளாலும், சில குழுக்களாலும் பெருக்கப்பட்டு வருவதையும் கவனப்படுத்திக் கொள்ளலாம்.

புதிய தவெகா கட்சி அரசாங்கம் அமைய திமுக அணியில் நின்ற கட்சிகள் உதவியுள்ளன. அவையாவும் அரசமைப்பு மீதான மரியாதையை உயர்த்திப் பிடித்துள்ளன. பாஜக மற்றும் சிலரின் அரசியல் தந்திர விளையாட்டுக்களை இப்போதைக்காவது முறியடித்துள்ளன. பாராட்டும் வாழ்த்தும். காலத்தாற் பெறப்பட்ட உதவியை எண்ணி, தவெக இவர்களுடன் தோழமையை காப்பதும் அவசியம். இவர்கள் இடம் பெறும் உயர்நிலை கமிட்டி வழி மாதம் ஒருமுறையாவது, அல்லது தேவைப்படுகிற நேரங்களில் எல்லாம் ஆலோசனை கூட்டம் நடத்துவதும், செய்தி பரிமாற்றம் செய்து கொள்வதும் ஆரோக்கியமாக அமையலாம்.

முன் கை எடுத்த கட்சியான காங்கிரஸ் மீது கடுமையான விமர்சனங்கள் வரத் துவங்கியுள்ளன. காங்கிரசின் தோழமை தவெகாவிற்கு அரசியல்ரீதியாக , அனுபவ ரீதியாக தேவையும் கூட. தென் மாநிலங்களில் ஆந்திரா நீங்கலாக காங்கிரஸ் அரசாங்கங்களே என்கிற சூழலில், காங்கிரஸ் உடன் தோழமை கொண்ட தவெக அரசாங்கம் என்பது கூடுதல் வலு தோற்றத்தை காங்கிரசிற்கு நல்கும். தவெக தலைமைக்கும், தென் மாநில காங்கிரஸ் முதல்வர்களின் ஆசியும் தோழமையும், statesman சாலை பயணத்திற்கு சற்று உதவக் கூடும். தன் மென் இயல்புடன் , அரசியல் உறுதியான பார்வைக்கும், நிர்வாகம் தொடர்பான கடமை- உரிமை சார் பார்வைக்கும் அவை உதவக் கூடும்.

தவெகவில் முதலமைச்சர் ஆகும் அதன் தலைவரிலிருந்து அனைவரும் அரசியலுக்கு, ஆட்சி நிர்வாகத்திற்கு, பொது வெளி பழக்க வழக்கங்களுக்கு மிக மிக புதியவர்கள். அ ஆ கற்க வேண்டியிருக்கலாம். கற்றுத் தேற தயங்கினால் பெரும் சோகமாகும். அரசியல் தந்திர வலைப் பின்னல்களும் சூழ்ச்சிகள் நிறைந்ததுமாக மாறிவிட்ட சூழல். எவ்வளவு honest என தனி நபர் தன் மனசாட்சிப் படி நடந்தாலும், பார்த்தியா பார்த்தியா என பெரும் சப்தங்கள் எழுந்து விரல்கள் நீட்டப்பட்டுக் கொண்டேயிருக்கும்.

அரசியல் பழக சோம்பேறித்தனமும், சொகுசு தேவை சௌகரியங்களும் உதவா..உப்பரிகை காட்சிகள்- larger than life images எப்போதுமே கை கொடுத்து விடா. தரை இறங்க வேண்டியிருக்கும். மென்முகத்துடன் சங்கடங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். கேட்காமலேயே அவரவர் (இப்போ நான் சம்மன் இல்லாமல் ஆஜராகி சொல்லலையா) அறிவுரைகள், கண்டனங்கள் டன் கணக்கில் வந்து கொண்டேயிருக்கும். மக்களுடன் தொய்வில்லா connectக்கு அக்கட்சி ஏற்பாடுகளை தொடர்ந்து செய்து கொள்ள வேண்டியிருக்கும். முரட்டு தொண்டர்கள் எந்த அமைப்பிற்கு எவ்வளவோ பலம் சேர்ப்பார்களோ அவ்வளவு பலவீனத்தையும் அவப் பெயர்களையும் கொணர்ந்து சேர்ப்பார்கள். தொண்டர்களுக்கு தொடர் அரசியல் பயிற்சி, தங்கள் அரசாங்கம் தங்களால் அவப்பெயர் கூடாது என்கிற பொறுப்பை, விழிப்புணர்வை கொணர வேண்டும்.

இனி நீங்கள் முதல்வர்..உங்கள் கட்சியின் ஆட்சி... ஆட்சி அதிகார நிர்வாகம் மலர் படுக்கை மட்டுமல்ல- நெருப்பாறும் கூட...கவனமாக விழிப்புடன் ஒவ்வோர் அடியும் தேவைப்படும். அதிகாரம் பெரும் அபின்..கவனமாக மண்டைக்குள் ஏறாமல் இருக்கும் பயிற்சி வாய்க்குமா, தெரியவில்லை. எவ்வளவு நாட்கள் அல்லது மாதங்கள் அல்லது வருடங்கள் ஆட்சிக்கு வாய்ப்போ , இன்றே நிலவும் சூழலில் கணிக்கத் தெரியவில்லை. இருக்கும் காலத்தில் மக்கள் மெச்சும் ஆட்சியாக இருந்தால் நலம்..பார்க்கலாம்

நல் வாழ்த்துகள் திரு விஜய்!

7 am 10-5-2026 R. Pattabiraman

may 14

டாஸ்மாக் நிறுவனம் , கம்பெனி சட்டம் 1956 படி 1983ல் நிறுவப்பட்ட தமிழ்நாடு அரசாங்க பொதுத்துறை நிறுவனம். 2003லிருந்து சில்லறை வியாபாரத்தையும் செய்து வருகிறது.

டாஸ்மாக் 38 மாவட்ட அலுவலகங்கள், 43 டிப்போக்கள், 4787 கடைகள் (2362 பார் வசதி கடைகள்) கொண்ட நிறுவனம். மார்ச் 2025 படி மொத்தம் 23629 பணியாளர்கள் (சூப்பர்வைசர் 6567, விற்பனையில் 14636, உதவியாளர் 2426) ஒப்பந்த தொகுப்பு ஊதியத்தில் வேலை பார்க்கின்றனர். தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளுக்காக தொடர்ந்து போராடி வருகின்றனர்.

டைம்ஸ் ஆப் இந்தியா ரிபோர்ட் ஒன்றில், கடந்த 8 ஆண்டுகளாக அதன் annual report பொது வெளிக்கு வைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கிறது. கம்பெனிகள் தங்கள் வருடாந்திர அறிக்கைகளை பொதுவாக வெளியிட வேண்டும். பொதுவெளியில் டாஸ்மாக்கின் 34 வது வருடாந்திர அறிக்கைக்குப் பின்னர் எதையும் பார்க்க முடியவில்லை.

உள் -ஆயத்தீர்வை அமைச்சின் கொள்கை குறிப்பு, மதுவிலக்கு தடுப்பு- போதையில்லா தமிழகத்திற்கு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளைச் சொல்லும். அதில் சிறு பகுதியாக டாஸ்மாக் பற்றிய குறிப்பும் வைக்கப்பட்டிருக்கும்.

சுவையான செய்தி ஒன்று- கள்ளச் சாரய தடுப்பில் சிறப்பாக செயல்பட்ட இரு காவலர்களுக்கு ‘காந்தி விருதுகள்’ வழங்கப்பட்டதாக கடந்த கொள்கை குறிப்பில் சொல்லியுள்ளனர்.

பொதுவெளியில் கிடைக்கும் ஆண்டறிக்கை 27-12-2017 தேதியிட்ட 34வது அறிக்கைதான். அதில் காட்டப்பட்ட விற்பனை வருவாய் 31243 கோடி. அரசாங்கத்திற்கு விற்பனை வரியாக 14574 கோடி கிடைத்தது. பணியாளர் நல செலவுகள் என அவர்கள் 2017ல் காட்டியிருப்பது சுமார் 369 கோடியே 20 லட்சம். விற்பனை தொகையில் இது ஒரு சதத்திற்கு சற்று கூடுதல். அப்போது 26,679 ஊழியர்கள் இருந்ததைப் பார்க்க முடிகிறது.

2017ல் அவர்களின் நிலச் சொத்தில் விலை நிர்ணயம் செய்யப்படா நிலப் பட்டியல், பதிவே செய்யப்படா பட்டியலை சொல்லியுள்ளனர்.

கடந்த 2025ல் கடுமையாக போராட்டத்தின் விளைவாக ரூ 1000 கூடுதலாக தருவது என்கிற முடிவை டாஸ்மாக் போர்டு எடுத்ததைப்

பார்த்தோம். உதவியாளர்கள் அங்கே ரூ 10 ஆயிரம் கூட வாங்காத நிலைதான்.

புதிய தவெக அரசாங்கம் மே 12, 2026 அன்று 717 (வழிபாட்டு தலங்கள், கல்வி நிறுவனங்கள், பேருந்து நிலையங்கள் அருகாமை) கடைகளை மூடச் சொல்லி உத்தரவு கொடுத்த செய்தி வெளியிட்டுள்ளனர். பொதுவாக இது வரவேற்பை பெற்றுள்ளது. மூடப்படும் கடைகளில் பணி புரியும் தொழிலாளர்க்கு மாற்று வேலை என்கிற கோரிக்கையையும் தொழிற்சங்கம், இடதுசாரிகள் எழுப்பியுள்ளனர்.

புதிய அரசாங்கம் கணக்கில் கொண்டு, அவர்கள் சொன்னபடி எல்லோருக்குமான அரசால் எவர்கள் வாழ்வாதரமும் பாதிக்கப்படவில்லை என்ற நிலையை உருவாக்கினால் அதுவும் அனைவராலும் பாரட்டப்படும்.

அரசாங்கத்திடம் சம்பந்தப்பட்ட டாஸ்மாக் தொழிற்சங்கம், உரிய குறிப்பை வேண்டுகோளாக எழுத்து மூலம் தந்திருப்பார்கள்- (எங்கே எவ்வளவு பணியாளர்களை மாற்று வேலைக்கு எடுத்துக்கொள்ள முடியும்) என்று கருதுகிறேன். அரசு ஊழியர் சங்கங்களும் உரிய மாற்று இடங்களை அதிகாரிகளுக்கு சுட்டிக் காட்ட உதவக்கூடும். புதிய தொழிற்சங்க கோடு-விதிகள், இப்படி closures ஆல் பாதிக்கப்படும் தொழிலாளர்க்கு சொல்வதென்ன என மத்திய தொழிற்சங்கத் தலைவர்கள் எடுத்துக் காட்ட முடியும்.

பார்க்கலாம்..

14-5-2026

may 14

Downloadable E book

160 POSTS ON Gandhi

முன்னுரை

காந்தியானா பெருங்கடல். மூழ்கி முத்தெடுப்பது என்பது பெரும் உழைப்பைக் கோருகிற வேலை. எளிதானதல்ல. காந்தி குறித்த பேச்சுக்கு முற்றுப்புள்ளி என ஏதும் இல்லை. பேசப்பேச புரிதலுக்கான விரிதலை உணரமுடியும். காந்தி விமர்சனத்திற்கு அப்பாற்பட்ட பீடமல்ல- கருவிலே திரு கொண்டவருமல்ல அவர். வாழ்க்கை நீள அவர் சுயசோதனைகளின் வழித்தடம் பதித்துக்கொண்டவர். அவரின் 'மகாத்மா' தன்மையே தொடர் கற்றல் வழி நிற்றலில்தான் தன்னை தகவமைத்துக்கொண்டது.

காந்தி பேசியவை எளிய பொருள் கொண்டவை. அனுசரிப்புகளோ பெரும் சவால் நிறைந்தவை. அவரவர்க்கு கண்ணாடி காட்டுபவை. அவரவரின் உளப்பூர்வ உள் உரையாடல் இல்லாமல், காந்தியின் எளிய சிந்தனைகளை நடைமுறைக்கு - அனுசரிப்பிற்கு கொணர்தல் சாத்தியமில்லை. காந்தி வாசிப்பு என்பது தீவிரப்பட தீவிரப்பட, உள் கேள்விகளும் தீவிரமாகும். சுயம் குறித்த விமர்சனங்கள் அதிகமாகும். சிறு மாற்றங்கள் வாழ்வில் நேரக்கூடும். ஒருவர் தன் சிந்தனை, செயல் குறித்த தீவிர கண்காணிப்பிற்கு தன்னையே உட்படுத்திக்கொள்ள வேண்டியிருக்கும். இவற்றை மனசாட்சி சறுக்கலின்றி செய்ய முடியாமல் தப்பித்தல்களுக்கான வழியை மூளை நாடும். சவால்- பெரும் சவால்.

வாயடிப்புகள், வார்த்தை விளையாடல்கள் மீதெல்லாம் கேள்வி எழும். அவரவர் லிமிட்டேஷன் குறித்த விழிப்புணர்வு இல்லாமல், சுயம் ஏமாறுதலும்- சமூகம் ஏமாற்றப்படலும் புலப்படும். வேன்கார்டிசம் - தீர்வைக் குறித்த கவலையில்லா மனித பிரயத்தன செலவுகள் மீது கேள்வி எழும். இரட்டை நிலைப்பாடு குறித்து மனம் குத்திக்காட்டும். என்னால் நடந்து காட்ட முடிகிறதா- ஓரடியானாலும் என்கிற பார்வை தொந்தரவு செய்யும். இப்படியான மன அவஸ்தைகள் இல்லாமல், அவரவர் ஒழுக்க நெறிகள் மீதான சதா கவனப்பாடு இல்லாமல் காந்தியை நகர்த்த முடியாது.

காந்தி குறித்து எழுதிப் பார்ப்பதாலேயே, காந்தியர் என்கிற வகைப்பாட்டில் நான் வரவில்லை எனப் புரிந்தே, அவரை வாசித்து

உள்வாங்க முயற்சிக்கிறேன். அப்படி எழுதிப் பார்த்த சில நூல்கள் 'காந்தியை கண்டுணர்தல்', 'தோழர் காந்தி'. இந்த இரண்டுமே சோசலிஸ்ட்கள் , மார்க்சியர்கள் காந்தி குறித்தும், காந்தி சோசலிசம் குறித்தும் நடத்திய உரையாடல்களின் சாரமே. காந்தி போராட்டத்தை விலக்கிக் கொண்டதற்கு காரணமான் சௌரி சௌரா பற்றி, பெல்காம் காங்கிரஸ் நூற்றாண்டு பற்றி சிறு நூல்கள் எழுதினேன். இந்திய சுயராஜ்யம் குறித்த மேம்பட்ட சிறு நூல் ஒன்றும், காந்தி கல்வி நிலைய உரையை வைத்து எழுதினேன்.

இப்போது வருகிற மின் நூல் '160 POSTS ON GANDHI'. அவ்வப்போது காந்தி- காந்தியம் குறித்து முகநூலில் எழுதிய இடுகைகளின் சேர்க்கையாக காந்தி குறித்த 160 இடுகைகள் வருகிறது. அதன் உள்ளடக்கமே இடுகைகளின் தன்மை குறித்து பேசக்கூடும். வாசிக்க வருபவர்களிடம் இந்த இடுகைகள் ஏராளம் பேசக்கூடும். எவருக்காவது இந்த மின் நூல் பயனளித்தால், என் உழைப்பின் உள் மனம் சற்று ஆறுதலைப் பெறக்கூடும்.

வழக்கம் போல் இந்த மின் நூலும் archive இணையத்தில் கிடைக்கும். எனது மின் நூல்களை நூற்றுக்கணக்கானவர் தரவிறக்கம் செய்துள்ளதைக் காணமுடிகிறது. முகம் தெரியா அந்த அனைத்து நண்பர்களுக்கும் என் நன்றி. இந்நூலும் அவ்வாறே அமையும் எனில் மகிழ்ச்சி..

3-4-2026 - ஆர். பட்டாபிராமன்

நூலின் உள்ளே

10.வட்டமேஜை மாநாடு பற்றி நேரு

11. ராபர்ட் பேனேவின் காந்தி

12. காந்தி- அரபுலகம் நூலிலிருந்து

13. அனுபவத்தை சொல்லத்தான்..

14. கிருபளானி- காந்தி

15. கிருபளானி- கிலாபத் - காந்தி

16. காந்தியின் பக்குவம்

17. கு ப ராவின் ஆய்வில்

18. கிருபளானி- படேல்

19. R k Shanmugam chettiyar on Gandhi

20. காந்தி படுகொலையும் வெறுப்பரசியலும்

21. Integral Humanism Plus Gandhian Socialism

22. Ananya Essays

23. Dietmar Rothermund’s Mahatma Gandhi

24. D G Tendulkar - M K Gandhi

25. D G Tendulkar Volumes

26. காந்தி - பத்திரிகையாளர் சந்திப்பில்

27. Sweep your own house clean

28. காந்தி – இர்வின்

29. பகத்சிங் ராஜகுரு சுகதேவ்

30. அதிகாரத்தின் டி என் ஏ

31. Gandhi about Brahminism and Brahmins

32. காந்தி- பண்டிட் லால்நாத்

33. காந்தி -வர்க்கப்போராட்டம்

34. காந்தியம் என்றால்..

35. மித்னாபூரில்..

36. M k Gandhi on Education

37. Three voices in 1938

38. Gandhi seva Sangh Session

39. தனிநபர்- ஜனநாயகம்

40. காந்தி- மார்க்ஸ்

41. சோசலிஸ்ட்களுக்கு பதில்..

42. காந்தி- சியாங்காய்

43. சாமுவேலுக்கு காந்தி கடிதம்..

44. வேவல்- காந்தி

45. MKG during Bihar clashes March 1947

46. சோசலிஸ்ட்களிடம் காந்தி

47. Self rule- Self discipline

48. பஞ்சாயத்து ராஜ்யம்

49. Indian Ideas of Freedom

50. டெண்டுல்கரின் மகாத்மா

51. பியாரிலால்- சுசிலா வால்யூம்கள்

52. The Discovery of Satyagraha

53. பியாரிலால்- சுசீலா உழைப்பு

54. காந்தியவாதிகளா -அகிம்சாவாதிகளா

55. Inner sanction

56. satyagraha at Work

57. இயக்கத்தை நடத்துதல்...

58. ராம் சுந்தர் பண்டிட்

59. காந்தி- ஆண்ட் ருஸ்

60. India Awakened

61. Salt Satyagraha The Watershed

62. காந்தி- நேரு வேறுபாடு

63. Preparing for Swaraj

64. சாஸ்திர சம்பிரதாயங்கள்- காந்தியின் கேள்விகள்

65. காந்தியை அறியா ‘புதிய தலைமுறை’

66. காந்தியை கைவிடுவோம்..?

67. வாசிப்பு எனும் பழக்கம்

68. சுசிலா தரும் நேரு, அம்பேத்கர்

69. காந்தி - பிரிட்டன் -ஜப்பான்

70. வைஸ்ராய் லின்லித்கோ-வேவல்

71. பெதிக்குக்கு காந்தி அனுப்பிய பாடல்

72. Gandhi defends himself

73. Pyarelal wrote so

74. மனுபென்- மவுண்ட்பாட்டன்

75. ஆட்டோகிராப் எனில் ஐந்து ரூபாய்

76. பியாரிலால் -மார்க்ஸ் - காந்தி

77. What is politics to Gandhi?

78. தினம் ஒரு மணிநேரம்

79. ராகவனின் காந்தி

80. Let us not be in the same cry as the power seekers

81. Let the choice begin with the labouring class

82. Gandhi, Marx and India

83. Of course wrote so Gandhi in Jan 1921

84. Gandhi and O P Gupta

85. Life a fun with all seriousness

86. Gandhi and Management

87. Gandhi A Life in Three Campaigns

88. salt in the wound

89. Marx- Gandhi

90. Mahatma Gandhi His Life and Ideas

91. M K Gandhi dreamt so

92. கிருபளானி காட்டும் காந்தி

93. Gandhi His Life and Thought

94. மகாத்மா ஒரு மதிப்பீடு

95. Was Gandhi Modern?

96. Economist Gandhi

97. காந்தி- நியாய கோட்பாடு

98. முரண் தீர்வு- காந்தி வழி

99. காந்தியின் 'மனிதன் எனும் மதிப்பு'

100. Gandhi about Dadabhai Naoroji in 1910

101. So said MK Gandhi

102. profession teaches immorality

103. dialectics and development

104. கடமை சார் உரிமைகள்

105. Hiren Mukherjee wrote so

106. Gandhi to Nehru oct 5 1945

107. ரோலந்த் -காளிதாஸ் -காந்தி

108. ஜோசப் ஜான் டோக்கின் காந்தி

109. Comrade Gandhi said so about courts in 1909

110. காந்தி எனும் எழுத்தாளர்

111. மகாதேவ தேசாய்

112. Bapu is finished- is he ?

113. முஷிரில் ஹாசனின் Faith and Freedom

114. Roderick Matthews wrote so

115. Jinnah vs Gandhi

116. காந்தி- ஜின்னா எம் ஜே அக்பர்

117. காந்தி 70 ஆண்டுகள்

118. பில்கிராமியின் அந்நியமாகா பெருவாழ்வு..

119. வர்ணம், இந்து மதம் மற்றும் தீண்டாமை

120. Nationalism vs Internationalism

121. Gandhiji taught us and practised so

122. Gandhi’s India Unity in Diversity

123. சிகாகோ பல்கலை வட்டமேஜை

124. Gandhi and Revolution

125. Gandhi gave that seed text for decolonisation

126. Gandhi’s conflict management

127. M k Gandhi taught so in Hind Swaraj

128. காந்தி- அறம்- அறிவியல்

129. Gandhi and the Environment

130. திவாகர் சொல்லும் காந்தி

131. I am an Ordinary Man

132. காந்தியின் குறும்புகள்

133. Gandhi in his time and ours

134. Reflections and Recollections

135. My Dear Bapu

136. தாரா காந்தி பட்டாச்சார்ஜி

137. The Good Boatman -A portrait of Gandhi

138. Everyman his own master

139. கடவுளும் காந்தியும்

140. நேரு- திபோர் மெண்டே

141. Who cares for the nation today?

142. தீர்விற்கு நிற்றல்

143. காந்தியின் வாரிசு

144. அன்னா வர்கி

145. Digging is to aware understand and reconcile

146. நேருவின் டிஸ்கவரி

147. நேருவின் டிஸ்கவரியில் காந்தி

148. Gandhi In Our Lives

149. Freedom in Non Institutional Ways

150. சுயமும் - பிறரும் உறவுகளின் தேடல்

151. Love inspite of discord

152. Inheriting Gandhi

153. Fashioning Heroes out of clay

154. உரையாடல் குறித்து நீரா சந்தோக்

155. குஹாவின் காந்தி

156. அதிகாரத்தின் குணம்

157. A week with Gandhi by Louis Fischer

158. எல்லோருக்குமான காந்தி-அணிந்துரை

159. விமர்சன நூல்கள்

160. Gandhi Marg

14-5-2026

may 16

OF ஊழியர்களுக்கு நல்வாழ்த்துகள்!

மத்திய அரசாங்கம் , படைப்பிரிவு உற்பத்தி ஊழியர்களை (Ordnance Factories) 7 பொதுத்துறைகளுக்கு அனுப்பும் உத்தரவை அக்டோபர் 2021ல் வெளியிட்டது. 37 A பாதுகாப்பும் இவர்களுக்கு உறுதியளிக்கப்பட்டிருந்தது. இதற்கான வழிகாட்டல் OMயை Department of Defence Production இலாகா 24-9-2021ல் வெளியிட்டிருந்தது.

OF ஊழியர்களும் அதிகாரிகளும் ஒன்றாக நின்று உறுதியாக ஒரு முடிவை எடுத்தனர். எவரும் பொதுத்துறைக்கு option கொடுத்துவிடக் கூடாது என்பதுதான் அம்முடிவு. அரசாங்கம் , பாதுகாப்பு உற்பத்தி இலாகா, உருவான பொதுத்துறை நிர்வாகங்கள் என எவரின் நிர்பந்தங்களுக்கும் அசைந்து கொடுக்காமல், தொடர் போராட்டங்கள்- நீதிமன்ற உத்தரவாதங்கள் என ஊழியர் தரப்பு அனைத்து முயற்சிகளையும் எடுத்தனர். AIDEF பொதுச்செயலர் தோழர் ஸ்ரீகுமார் முன் கையெடுப்புகள் பலனைத் தரத்துவங்கியுள்ளன.

ஓ எப் ஊழியர்கள்- அதிகாரிகளுக்கு இருவேறு வகை அனுபவங்கள் கண்முன் நின்றன. ஒன்று , 2000ல் மிகப்பெரிய 4 லட்சத்திற்கும் மேலான தொலைத்தொடர்பு பணியாளர்கள் பி எஸ் என் எல்க்கு சென்ற அனுபவம். அந்த பொதுத்துறையின் நட்ட ஆண்டுகள்- ஊழியர்கள் இன்றளவும் உயர் அய் டி ஏ ஊதியத்தில் இருந்தாலும் , 3rd PRC பெறமுடியா சூழல்- ஓய்வூதியர் போராட்டங்கள் என்ற ஓர் அனுபவம். இவர்கள் பொதுத்துறை ஊழியர் ஆயினர். அரசாங்க பட்ஜெட்டிலிருந்து பென்சன் பெறுபவர்கள் என்கிற உத்தரவாதம் இவர்களுக்கு..

மற்றொன்று, குறைவான சில ஆயிரம் ஊழியர்களைக் கொண்ட பிரசார் பாரதி பொதுத்துறைக்கு அனுப்பப்பட்ட ஊழியர்கள் அனுபவம். பிரசார் பாரதி ஊழியர்கள் தொடர்ந்து போராடி 2011ல் பெரும் பாதுகாப்பு ஒன்றை தங்களுக்கு தேடிக்கொண்டனர். அவர்களில் அக் 5, 2007 வரை வந்த ஊழியர்கள் பிரசார் பாரதி பொதுத்துறையில் ‘deemed deputation லேயே ஒய்வு பெறும்வரை தொடர’ வாய்ப்பு கொடுக்கப்பட்டது. அவர்கள் பொதுத்துறையில் அரசாங்க ஊழியராக deputationல் இருந்து அரசாங்க ஊழியராகவே ஓய்வு பெறுவர். பி எஸ் என் எல் ஊழியர்களை விட குறைவான சி டி ஏ ஊதியம்- பென்சன் என்றாலும் , இவர்கள் மத்திய அரசு ஊழியர்- மத்திய அரசு பென்சனர் என்கிற மெயின்ஸ்ட் ரீம் பாதையை தக்க வைத்துக்கொண்டனர்.

ஓ எப் பகுதியில் பொதுத்துறை மாற்றம் வந்தபோது, பிரசார் பாரதி அனுபவமே உகந்தது- உத்தரவாதமானது என்கிற முடிவிற்கு அங்குள்ள அனைத்து தொழிற்சங்கங்களும் வந்தன. இணைந்து 'deemed deputation to PSU as Govt employees till retirement' என்ற கோரிக்கையில் ஒன்றாக நின்றனர்.

கடந்த மே 11, 2026ல் நடந்த NJCM கூட்டத்தில் தோழர் ஸ்ரீகுமார் உள்ளிட்ட ஊழியர் தரப்பு இப்பிரச்சனையை கேபினட் செயலர் மற்றும் அரசாங்க உயர் அதிகாரிகள் முன்னர் எழுப்பி உத்தரவாதம் ஒன்றை பெற்றுள்ளனர். AIDEF சுற்றறிக்கையில் பெற்ற உத்தரவாதம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ஊழியர் தரப்பு செயலர் தோழர் சிவ்கோபால் மிஸ்ரா அவர்களும் ஜேசிஎம் உறுப்பினர் சங்கங்களுக்கு அனுப்பிய அறிக்கையில் இதை குறிப்பிட்டு எழுதியுள்ளார். சிவ்கோபால் அவர்களின் அவ்வரிகள்

" considering the demand of the Defence Civilian Employees of Ordnance Factories, the matter was discussed in the meeting of the committee of Secretaries chaired by Cabinet Secretary and after considering all the aspects in consultation with the DOPT, DDP and Law Ministry, it has been decided to recommend to the Empowered Group of Ministers to extend the deemed deputation of the employees of OF in the 7 DPSUs till their retirement as CG employees/ Defence civilian employees. After the recommendation of the COS, the proposal will be submitted to the EGOM for approval and issuing notification "

இன்றைய பொதுத்துறைகள் சூழலில் ஓ எப் ஊழியர்கள் தேசிய கவுன்சிலில் கேபினட் செயலரிடமிருந்து பெற்றிருக்கும் இந்த உத்தரவாதம் பாராட்டுதலுக்குரிய ஒன்று. உறுதியாக நின்று வழிகாட்டிய தோழர் ஸ்ரீகுமார் மற்றும் ஓ எப் தொழிற்சங்க தலைவர்களுக்கு நல்வாழ்த்துகள்.

தலைமேல் தொங்கும் கத்தி போன்ற கடுமையான சூழலிருந்து 60 ஆயிரம் ஊழியர்கள் மீட்கப்பட்ட உணர்வை அத்தொழிற்சங்கங்களால் பெறமுடியும். விரைவில் EGOM முன்னர் செயலர்கள் கமிட்டி தன் பரிந்துரையை நல்கி, உரிய முடிவை எடுத்து அவ்வூழியர்க்கான ' ஓய்வுபெறும் வரை அரசாங்க ஊழியராகவே பொதுத்துறையில் பணி' என்கிற உத்தரவாதம் கிடைக்க செய்வர் என விழைகிறேன்.

நல் வாழ்த்துகள். தேசிய ஜே சி எம் உருவாக்கப்பட்ட 60 ஆண்டுகள் சூழலில் வந்திருக்கக் கூடிய நம்பிக்கையான முடிவு. NJCM 60 ஆண்டுகளுக்கும் வாழ்த்துகள்!

16-5-2026 R. pattabiraman

may 19 Just for a change

Just for a change, நிலவுக்கு முதலில் போன இரண்டு மனிதர்கள் என்கிற எச் ஜி வெல்ஸ் அறிவியல் புனைகதையை புரட்டினேன். 125 ஆண்டுகளுக்கு முன்னர் வெல்ஸ் எழுதிய நாவல்- The first Men in the Moon.

மார்க்சின் capital vol 3 யை கொஞ்சம் மல்லுக்கட்டி, செரிமானக் கோளாறு ஏற்பட்ட நிலையில் (மல்லுக்கட்டு தொடரும் என்கிற எச்சரிக்கையுடன்) வெல்சை பார்க்கலாம் என்று போனேன். அங்கும் அஜீரணம்தான். ஆனாலும் முடிக்க முடிந்தது.

என்னிடம் ஆழமான nuances கூடிய இலக்கிய வாசிப்பு ஏதுமில்லை. ரொம்ப raw ஆன வாசிப்பு பழக்கம்தான். நேர்த்தியான சினிமாக்கள் என்பதையும் அறியேன். மார்க்கெட்டில் கொடிகட்டிப் பறக்கும் சினிமாக்களே பார்த்த நிலை. சினிமாத்தனம், நாடகத்தனம், இலக்கியத்தனம், அரசியல்தனம், தத்துவத்தனம், இசைத்தனம், இசத்தனம் ஆகிய எல்லாமே மனிதமொழிகள் - யத்தனங்கள் என்ற அளவில் புரிதல் உண்டு. மானுட வாழ்க்கை சிறக்க என்றோ, அய்யோ போச்சே என்றோ பேசக்கூடியவை- நல்லது, கெட்டது என ஏதோ ஒன்றை வகைப்படுத்துபவை என்கிற புரிதல் உண்டு. அவரவர் எதில் துறை போகிறாரோ அந்த மொழி- நடை பாவனைகள் அவரிடம் வெளிப்படும். இதில் உசத்தி , தாழ்த்தி என்கிற அவரவர் பார்வை பேச்சும் இருக்கவே செய்யும். இலக்கியத்தனம் சினிமாத்தனத்தை பார்த்து சிரிக்கும். அரசியல் அதிகாரத்தனம் எல்லாவற்றையும் பார்த்து முறைக்கும். இப்படி ஈகோத்தனம் அவரவர் பயிற்சி துறை வழியே நடமாடும். ஒவ்வொரு தனத்திற்கும் வேறு ஏதோவொன்று தற்குறியாகும்.

சரி வெல்ஸ் விஷயத்திற்கு வருகிறேன். 1969ல் மனிதன் அறிவியல் சாதனையாக நிலவில் கால் பதித்தான். அதற்கு 68 ஆண்டுகளுக்கு முன்பாகவே வெல்சின் புனைவில் டாக்டர் காவர் என்கிற விஞ்ஞான சோதனைக்காரரும், பணமே வாழ்வியலாக நினைக்கும் பெட்போர்ட் என்பாரும் நிலவிற்கு சென்று இறங்கிவிடுகிறார்கள். இந்த இரு வேறு வாழ்க்கை குறித்த புரிதல் கொண்டவர்களை வைத்து, மனிதன் இல்லா வேறுவாசிகள்- ஏலியன்ஸ் வாழ் உலகை எதிர்கொள்ளல் என்பதாக இந்நாவல் செல்லும்.

இந்நூலில் எழுதப்பட்ட நிலவை, ‘நிலவு குறித்து’ வருகிற அறிவியல் வெளிச்சத்தில் பார்க்கக்கூடாது என இதில் துறைபோனவர்கள்

சொல்வர். அய்ரோப்பிய வியாபார மனம், பூமியை விட்டு சந்திரன் போனாலும் துட்டு தேறுமா- அதை காலனியாக்கி சுரண்ட முடியுமா என யோசிக்கும் என்பதைச் சொல்ல வெல்ஸ் முனைகிறார் என புரிந்துகொள்ள வேண்டும் என்கிற வாசிப்புமுறைதான் இந்நூல் குறித்து பரவலாக இருக்கிறது. வெறும் plain reading என்பதில் இலக்கியம் சுகம் தராமல் போகக்கூடும் என்கின்றனர் தேர்ந்தவர்கள்.

வெல்ஸ் தனது அன்றைய அய்ரோப்பிய சூழலில் தன் மனக்குதிரையை தட்டி, புதிய தொழில்நுட்பம்- adventure சாகசம், பூமிக்கு அப்பாற்பட்ட சந்திரனிலும் பொருள்சார் உலகை தங்கத்தை தேடல் என சிந்தித்த சிறப்பை கொஞ்சம் புரிந்து கொள்கிறேன். விமான சேவையே எழாத காலத்தில், ராக்கெட் தொழில் நுட்பம் இல்லா காலத்தில் வெல்சின் கற்பனையில் எந்திரம் ஒன்றின் மூலம் காவரும், பெட்போர்ட்டும் நிலவிற்கு சென்றுவிடுகின்றனர். அங்கு பூச்சி போன்ற (ஓர் இடத்தில் செலினைட்ஸ் என்பதை அவர் எறும்பு புற்று போல் எனச் சொல்கிறார்) selenitesகளை சந்திக்கின்றனர். பெட்போர்ட் தங்கத்தை எடுத்துக்கொண்டு பூமிக்கு வரும் முயற்சியில் இருந்தால், காவர் அந்த பூச்சி வகை வாழ் நிலவுக்காரர்களுடன் பூமி மனிதர்களின் ஆசை, நீதி, நிர்வாகம் போர் பற்றி உரையாடுகிறார். நிலவுவாழ் பூச்சிகளோ மிக ஒழுங்கான கட்டுப்பாடான வாழ்க்கை முறை கொண்டதாய் வெல்ஸ்க்கு. அவை காவர் சொல்வதைக் கேட்டு ஏன் ஒரே மாதிரியான மனிதர்கள் ஒருவரை ஒருவர் கொலை செய்து அழித்துக்கொள்கிறார்கள் என அப்பாவியாக ச்சூ கொட்டி பூமி கதையை கேட்கின்றன.

யார் காட்டுமிராண்டிகள்- அறிவியல் தொழில்நுட்பம் பேராசை கொள்ளை போர்கள் அழிவு கொண்ட பூமி புத்திரர்களா, தானுண்டு தன் உழைப்புண்டு வேறு அநீதி ஏதும் இழைத்துக்கொள்ளா நிலவின் செலினைட்ஸ்களா? என்ற கேள்வி எச் ஜி வெல்சை தொந்தரவு செய்திருக்கலாம்.. கொஞ்சம் தட்டுத் தடுமாறி 125 ஆண்டுகளுக்கு முன்னால் ஆன இந்நூலை வாசித்த எனக்கும்- எனக்கு முன்னர் இந்த 125 ஆண்டுகளில் வெல்சை வாசித்த ஆயிரக்கணக்கானவர்களிடமும் இக்கேள்வி கடத்தப்பட்டிருக்கலாம்..

அரசியல், சமுகம், பொருளாதாரம் எனப் பேசிக்கொள்ளும் உலகில் நெறி என்கிற ஒன்றை வண்டிக்கு முன் பூட்டிக்கொள்ள வேண்டாமா- அறிவியல், தொழில்நுட்பம், வளர்ச்சி என்பது நெறியற்று செல்ல வேண்டுமா என்கிற கேள்விகளையும் உருவாக்கிக் கொள்ளலாம்.

சிவிலிசேஷன் என்பது கடமைக்கான பாதை என ஹிந்த் சுயராஜ்யத்தில் 1909 லேயே காந்தி எழுதினார்...நாகரிகம் என்பது சிலருக்கான வளர்ச்சி சௌகரியம், அரசியல் அதிகாரம், பொருள்சேர்ப்பு என்பதாக நின்று போகக் கூடியதா? ஓர் அடியானாலும் பரவலாக பலருக்குமானதா? போட்டி பொறாமை உந்தினால் தான் வளர்ச்சி வாழ்வா? அன்றாட அலுப்பு நிறை வாழ்வு வாழ்வில்லையா?

மனித கௌரவம் - குறைந்தபட்ச dignified life என்பதற்கான பொது ஏற்பு வரையறைக்கான - common minimum programme என்பதில் அரசியலால் ஒத்த உணர்வுடன் LCM ஒன்றை உருவாக்கிக் கொள்ள முடியாதா?

19-5-2026

may 21

திலகர் குறித்து நிறையவே நூல்கள் இருக்கின்றன. சிறு வயதில் தஞ்சாவூரில் திலகர் திடல் என்ற பொதுக்கூட்ட மைதானம் வழியே தான் அவர் பெயரை கேள்விப்பட்டேன். சுதந்திரம் பிறப்புரிமை, பாடம் வழியே வந்தது. தஞ்சாவூர் திலகர் திடல் அரசியல் கூட்டங்களால் அப்போது வழியும்.இப்போது எப்படி எனத் தெரியவில்லை.

பின்னர் வாசிப்பு பழக்கம் உருவாகி வளர்ந்த பல பத்தாண்டுகளில், மார்க்ஸ், அம்பேத்கர், பெரியார், காந்தி என்கிற கிரமத்தில் வாசிப்பு பயிற்சி கொஞ்சம் கிடைத்தது. மார்க்ஸ் கிடங்கினுள் எவ்வளவு நுழைந்தாலும் இன்னும் புரிபடாமை உலகிலேயே நிற்பது போல இருக்கும். காந்தி பெருமளவு எளிதாக இருந்தாலும், அனுசரிப்பு பழக்கமோ மா கடினமானதாக உள்ளது.

தாகூர், நேரு, ஜேபி, லோகியா, நரேந்திரதேவா, லிமாயி, அசோகா, ஆசாத், எம் என் ராய் , கிருபளானி , அண்ணா என அவ்வப்போது எட்டிப்பார்க்கும் ஆளுமைகள். கோகலே, பிபின், திலகர் குறித்த சொற்ப வாசிப்பு சூழலே எனக்கு ஏற்பட்டது. இன்னும் மார்க்சியர் பலரை தேடி அவ்வப்போது சென்று திரும்புவது உண்டு.

அப்படி திலகர் வாசிப்பில் முக்கியமான ஒன்றாக, அவரின் authentic bio எனப்பார்க்கபடுகிற நூல் என் சி கேல்கர் மராத்தியில் எழுதிய நூல். திலகர் மறைவிற்கு பின்னர் அவர் குறித்து விரிவான பதிவை வருகிற தலைமுறைக்கு கொடுத்துவிட வேண்டும் என்கிற நன்முயற்சியில் 1923-24 களில் கேல்கர் எழுதலானார். இந்த எழுத்துக்கள் இந்தியாவின், உலகின் பிற பகுதிகளுக்கும் செல்ல வேண்டும் எனில் ஆங்கிலத்தில் வரவேண்டும் என நினைத்தனர். பெரும் உழைப்பை தந்து டி வி திவேகர், விறுவிறுப்பான, எளிய ஆங்கிலத்தில் 1928ல் இந்நூலைக் கொணர்ந்தார்.

Life and Times of Lokamanya Tilak என்கிற பெயரில் வந்த 560 பக்கங்களைக் கொண்ட ஆங்கில நூல். இதன் 2001 பதிப்பை டெல்லி ராதா பப்ளிகேஷன்ஸ் கொணர்ந்தனர். அதைத் தான் நான் வாசித்து வருகிறேன். வழக்கமான நேர்கோட்டு - கால வரிசைப்படியான பிறப்பு , ஊர்ச் சூழல், குடும்ப பின்னணி, கல்வி, பின் சமுக அரசியல் ஆர்வம், போராட்டம்- சிறை வாழ்க்கை துன்ப அனுபவிப்பு, புகழ் பெறுதல், மரித்தல், மக்கள் நெஞ்சில் வாழ்தல் என்கிற பாணியில்தான் நூல் பின்னப்பட்டுள்ளது. இருந்தால் என்ன, ஒவ்வொரு தனிநபரும் அவரளவிலாவது இருப்புசார் உணர்வு கொண்டு இயங்கி மடிபவர்

தானே..ஒருவர் பதிவாகலாம், கரைந்து காணாமல் பெயரழிந்து போகலாம். அவர் குறித்து எவரும் பேசாமல் போகலாம். ஆனால் அவருக்கான வாழ்க்கையையும் இந்த பூமி தந்துதானே அனுப்புகிறது. பூமிக்கு பாரம் என பூமியா பேசுகிறது?

குடும்ப வரலாறு தொடங்கி திலகர் வாழ்க்கையை 28 இயல்களில் இந்நூல் பேசுகிறது. அவருடைய கல்வி நிறுவனப் பணிகள், இதழியல் அனுபவங்கள், காங்கிரஸ் மோதல்கள், நட்பு வட்டம்- மோதல் வட்டம், விடுதலைப் போராட்ட உணர்வு, வழக்கு சிறை, தேசிய கணேச விழா, பஞ்ச காலம், வேத ரகசியங்களை விரித்தல் என நூல் பல காட்சிகளைத் தரும்.

அவர் காலத்து மராட்டிய பூமி மூத்தவர்கள் ரானடே உட்பட பலர் வருவர். திலகர் வரும் முன்னரே அங்கு பல்வேறு கம்யூனிட்டிகள் கல்விச் சூழல், பூலேயின் பங்களிப்பு எனவும் செய்திப் பதிவுகள். அப்பாவின் பிரிட்டிஷாருடனா வியாபார அனுபவங்கள், தினந்தோறும் குடும்ப கணக்கெழுதும் பழக்கம் என சிறு சிறு செய்திகளில் எனக்கு உவப்பு(நான் செய்வதில்லை). அக்குடும்பம் 1866ல் எழுதிய கணக்கில் ஆண்டின் ஆரம்பம் ரூ 250, பெற்ற வரவு 3900, ஆண்டு இறுதியில் சேமிப்பு ரூ 16 எனச் சென்றதைப் பார்த்தேன். Saw mill shareholder என்ற வகையில் 9 சத டிவிடண்ட் கிடைத்ததாம். பிரிட்டிஷ் கிராபோர்ட் நட்டம் எனச் சொல்லி அக்குடும்பத்திற்கும் போட்ட முதலுக்கு மோசம் உருவாக்கிய செய்தியும் இருக்கிறது.

1863ல் மராத்தி மண்ணின் பட்டதாரிகள் 3 பேர்தானாம். 1877ல் 40 ஆனது. இக்காலத்தில் மெட் ரிக் வரை தேறியவர் 1100. திலக் பட்டம் பெற்றபோது மொத்தம் 179 பட்டதாரிகளே இருந்தனராம். பம்பாய் மாகாணத்தில் 5000 பள்ளிகளில் 3 லட்சம் குழந்தைகள் இருந்துள்ளனர். இதில் பிராம்மண குழந்தைகள் 23 சதம், பிற சாதி இந்து குழந்தைகள் 59 சதம், முகம்மதியர் 10. தலித் வீட்டு குழந்தைகள் பற்றி தனியே இதில் கேல்கர் குறிப்பிடவில்லை. பெண் கல்வி மிகக் குறைவாக என்கிற செய்தி உள்ளது.

நியு ஸ்கூல் பணிகளில் சிப்லுங்கர் பற்றி விதந்து பேசப்படுகிறது. திலகர் அகர்கர் நட்பும் உடைவும் சொல்லப்படுகிறது. கேசரி, மராட்டா இதழியல் பணிகள் பதிவாகியுள்ளன. திலகர் இளம் ஆசிரியராக போதனை முறையை எப்படி கையாண்டர் என்பது சுருக்கமாக ஆனால் நேர்த்தியாக விவரிக்கப்பட்டுள்ளது. சிப்லுங்கர், அகர்கர் என அவரவர் போதனை மாதிரிகள் இருந்தன. அகர்கர் மாடல் சிறப்பானதாக பார்க்கப்பட்டுள்ளது.

பார்க்கலாம்..மேலும் இந்நூல் குறித்து தோன்றியதை சொல்ல இயலுகிறதா என..

திலகர் வாசிப்பு கொஞ்சமாவது கிடைத்ததே என்கிற ஆறுதல் எனக்கு மிஞ்சலாம்...வேறு ஒன்றும் அறியேன் பராபரமே...

21-5-2026

may 22

அதிகாரம் அரசியல் கட்சிகள் - Power Politics and Parties

எம் என் ராய் இந்திய அரசியல் சிந்தனையாளர்களில் தவிர்க்க முடியாத ஒருவர். அவர் குறித்த விமர்சனங்கள் ஏராளம் உண்டு என்றாலும்..

வங்கத்தில் பிறந்து, மெக்சிகோ சென்று அங்கு கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் பொதுச்செயலராகி(பெயரளவில் குறைந்த மனிதர்களுடன் என்றாலும்) , மாஸ்கோ சென்று சோவியத் தலைமை லெனின், டிராட்ஸ்கி, ஸ்டாலின், ஜினோவீவ் எனப் பலருடன் சில காலமாவது உறவாடியவர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை தாஷ்கண்டில் 1920ல் (பெயரளவில் குறைந்த தோழர்களுடன்) துவங்கிய வரலாற்றை உருவாக்கியவர். இந்தியாவில் பல்வேறு திக்குகளில் குழுக்களாக இயங்கிய இளம் கம்யூனிஸ்ட்களுக்கு 1920 களில் ஏராளம் எழுதி திசைகாட்டிக்கொண்டிருந்தவர். அவரின் India in Transition அக்காலத்தில் இந்த இளைஞர்களால் பெரிய வெளிச்சமாக பார்க்கப்பட்டது.

எம் என் ராய் அகிலத்துடன் முரண்பட்டு, நீக்கப்பட்டு, இந்தியா வந்து சிறைப்பட்டு, காங்கிரசில் செல்வாக்கு செலுத்தப்பார்த்து, பின் தனக்கென சீடர் சிலருடன் தனிப்பாதையை - அறிவுசார் வேலைகளை அமைத்துக்கொண்டவர். Radical Humanism என்கிற புரிதலில் ஏராளம் எழுதிச் சென்றவர். அவரின் ‘நியு ஹூமனிசம்’, ‘பியாண்ட் கம்யூனிசம்’ போன்ற பிற்கால எழுத்துக்கள் லிபரல் வட்டாரங்களில் விவாதிக்கப்பட்டவை. ‘நான் பார்த்த மனிதர்கள்’, ‘நினைவு குறிப்புகள்’, சிறை குறிப்புகள், புரட்சியின் மோக சுகங்கள் போன்ற ஏராள நூல்கள் ஆங்கிலத்தில் இணையத்தில் கிடைக்கின்றன.

டெலிகாம் நெல்லைத் தோழர் ஸ்ரீநிவாசன் (காலச்சுவடு தொடர்பு எழுத்தாளர்) ராயின் Men I Met என்கிற பெரிய நூலை என்னிடம் கொடுத்திருந்தார் (பின்னர் அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது). அந்நூலும் இணையத்தில் கிடைக்கும்.சில ஆண்டுகளுக்கு முன்னர் , விடுதலைக்கு முன்னர் எம் என் ராய் என்கிற சிறு பிரசுரம் ஒன்றை எழுதியிருந்தேன். விடுதலைக்குப் பின்னர் எம் என் ராய் வெகு ஆண்டுகள் வாழவில்லை. 1954ல் அவர் மறைந்தார்.

இங்கு நான் எழுத வந்தது அவரின் மறைவிற்கு பின்னர் அவரது மனைவி எவ்லின் எடிட் செய்து வெளியான மிக முக்கிய நூல் ஒன்றைப் பற்றி.. ராடிகல் இதழ் ஒன்றை புரட்டியபோது தான் இந்நூலிலிருந்து

கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்ததை வாசித்தேன். அக்கட்டுரை இந்நூலைத் தேடி போக வைத்தது.

Politics Power and Parties என்கிற அந்நூல், 20 ஆம் நூற்றாண்டின் அரசியல் அனுபவங்களிலிருந்து மக்களின் இறையாண்மைக்கான ஜனநாயக அரசியலை கட்சிகள்தாண்டி வளப்படுத்த முடியுமா என்கிற முயற்சி எனப் புரிந்து கொள்கிறேன். Partyless Democracy- grassroots democracy குறித்து பேசிய இந்திய அரசியல் சிந்தனையாளர்களில் இருவராக ஜேபியும், ராயும் பார்க்கப்படுகின்றனர். இதற்காக இருவரும் விமர்சிக்கப்படவும் செய்தனர்.

ராயின் 18 கட்டுரைகள் (சில உரைகள்) தொகுக்கப்பட்டு இந்நூல் 1960ல் வந்தது. இன்றும் கூட விவாத செறிவை கோட்பாட்டுரீதியில் கொண்ட நூலாக தோன்றுகிறது. நடைமுறையில் இந்நூலின் கருத்துக்கள் வெற்றிபெறவில்லை. இந்நூலில் இடம்பெற்ற கருத்துக்கள் 1947-50 கள் காலத்தில் பேசப்பட்டவை.

தத்துவத்தின் தோல்வி, தனிநபரும் சமூகமும், நெறியும் அரசியலும், நம் காலத்தின் அரசியல், அதிகாரமில்லா அரசியல், அதிகாரம் வேண்டா கட்சி, ஜனநாயகமும் கட்சி அரசியலும், கட்சியிலிருந்து இயக்கம் நோக்கி, மனிதாபிமான அரசியல், ஒருங்கிணைந்த மனிதநேயம் சமுக தத்துவம், மனித சுபாவமும் நடத்தையும், அரசியல் பொருளாதார பிரச்சனைகளுக்கான புதிய அணுகுமுறை, மனிதாபிமான தேர்தல் அணுகுமுறை, அதிகார பரவலாக்கம், ஜனநாயகத்தின் எதிர்காலம், சுதந்திரத்தின் அரசியல் என பல்வேறு கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

Power politics என்கிறோமே அப்படியெனில் அதிகாரமில்லா அரசியல் என ஒன்று இருக்க வேண்டுமல்லவா என்கிற கேள்வியை politics without power என்கிற 6 ஆம் கட்டுரையில் ராய் எழுப்பியிருப்பார்.

Whichever party possesses greater skill in election manoeuvres and means to maintain the largest machinery and organs of propaganda has the greatest chance of winning elections and capturing power என இதில் ராய் எழுதியிருப்பார். தமிழ்நாட்டின் 2026 தேர்தல் இதை கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது. தொடர்ந்து ஆட்சி என்பதற்கு தவெக machinery ஒருவேளை ராய் சொன்னதுபோல் தேவைப்படலாம்.

ராய் வேறு ஓர் இடத்தில் the ideal of stateless society is an absurd Utopia என்கிறார். The problem of democratic practice is in decentralisation..the main cause of concentration of power is party system என ராய் சொல்லுவார்.

Decentralisation thro people's committees என்று அவர் சொல்வார். Their sovereignty thro that committees என்பார்.

பெரிய திரள் நிறைஉறுப்பினர்கள் கட்சியாக உரிமை பாராட்டினாலும்(10 கோடி கட்சி என இந்தியாவில், ஒரு கோடி கட்சி என தமிழகத்தில்) they cannot embrace more than a small fraction of people என ராய் எழுதியிருப்பார். Party politics cannot be democratic politics in the true sense of the term-party politics by its very nature reduces demos to the status of camp followers என்பது ராய் வைக்கும் வாதம்.

The control of the state by one party claiming to be the sole custodian of popular interest is antagonistic to democracy- democracy will not be successful so long as the masses can be swayed by demagogy or appeal to emotions எனவும் ராய் சொல்கிறார்.

கட்சி அரசியலின் ஆபத்துகள் எனப் பேசும்போது அவர் சொல்லும் மாற்று கடினமான ஒன்றே. Education of the citizens and gradual building up of a new political structure from below are the only guarantees against these dangers of party system. அது சரி யார் குடிமகன்களை விழிப்படைய வைக்கும் வேலையைப் பார்ப்பது- ஒன்று சுய போதனை நடத்தை வழி அல்லது மக்கள் கமிட்டிகளில்..அது மட்டும் அதிகாரமில்லா அமைப்பு என எப்படி சோதிக்காமல் சான்றிட முடியும்..தெரியவில்லை ..ராய் அப்படி பேசுகிறார்.

அவர் ஆரம்பித்த ராடிகல் ஹுமனிச இயக்கம் என்பதை based on individual initiative, individual endeavour and individual freedom. Such a movement cannot be tied by rules and regulations. இப்படி நீட்சே பேசும் அதிமானுட தனிநபர்கள் புள்ளிக்கு ராயும் போகிறாரா என்கிற கேள்வி என்னுள்..

ராய் பேசிய humanist politics, எரிக் பிராம் பேசிய art of loving என்கிற அம்சங்கள் 20 ஆம் நூற்றாண்டு அதிர்வுகள் உருவாக்கிய அரசியல் அனுபவங்களிலிருந்து உருவான பிரதிகள் எனத் தோன்றுகிறது. மார்க்சை மனிதாபிமான கோணத்தில் பார்க்கச் சொல்லும் மார்க்சியர்கள் இருக்கவும் செய்கின்றனர்.

ராயின் இந்நூல் அரசியல் மீதான ஆய்வுக்கோண பார்வை கொண்டவர்களால் தவறாமல் வாசிக்கப்பட வேண்டிய ஒன்று என எனக்குத் தோன்றுகிறது...

22-5-2026 See less

may 23 GNP

பூட்டான் மன்னர் தன் சிறிய நாட்டிற்காக செய்து பார்த்த ஏற்பாடு Gross National Happiness Index- GDP அளப்பது என்பதைவிட GNP அளவீடு என அவர்கள் முயற்சி எடுத்தனர். அந்த முயற்சி உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்று தற்போது உலக மகிழ்ச்சி குறித்த அறிக்கை world Happiness Report வரத்துவங்கியுள்ளன. 2026 அறிக்கை 'மகிழ்ச்சிக்கு' சமுக ஊடகங்கள் ஏற்படுத்தும் பாதக சாதகங்களை அலசுவதாக வந்துள்ளது.

தொடர்ந்து பின்லாந்த், டென்மார்க் நாடுகள் தான் உலக மகிழ்ச்சி அறிக்கையில் முன்வரிசை பெறுகின்றன. இறுதி இடமாக ஆப்கானிஸ்தான் 147 ஆவது என அமர்த்தப்படுகிறது. இந்தியா சென்ற 2025 அறிக்கையில் 118 ஆம் இடத்தில்- 2026 அறிக்கையில் 116 என சிறிய முன்னேற்றம். நேபாள் 99, பாகிஸ்தான் 104, வங்கதேசம் 127, இலங்கை 134 என நம்மை சுற்றி மகிழ்ச்சிக்கான குறியீடுகளில் முன்னும் பின்னுமாக..

நாட்டின் மக்களுக்கான வருவாய் மட்டும் அளவீடாக இல்லாமல், சுதந்திர உரிமை, ஆரோக்கியம், மக்களிடம் சமூக ஒத்துழைப்பு, தாராள தயை மனப்பாங்கு, ஊழல் போன்ற பல காரணிகளை எடுத்து (இதை Cantril ladder எனச் சொல்கின்றனர்) அளவீட்டை உருவாக்கி அறிக்கை தருகின்றனர். ஆக்ஸ்போர்ட் பல்கலை well-being ஆய்வு மய்யம் அய் நா உதவியுடன் இவ்வறிக்கையை தயார் செய்து அளித்து வருகின்றனர். உலக மகிழ்ச்சி நாள் என மார்ச் 20 யை அய் நா அனுசரித்து வருகிறது.

சமுகத்தில் காணப்படும் trust, பகிர்வுத்தன்மை (உணவு உட்பட) , சமுக உறவு பேணல், கம்யூனிட்டி நல்லிணக்கம் போன்றவற்றையும் மகிழ்ச்சிக்கான காரணிகளாகப் பார்க்கின்றனர். பொருளாதாரரீதியாக வளர்ந்த வளரும் நாடுகளைவிட, பின்லாந்த், டென்மார்க், நார்வே போன்ற நாடுகள் இந்த மகிழ்ச்சி குறியீட்டில் முன் வரிசை எடுக்கின்றன. 2025 தீமே caring sharing என்பதாக இருந்து நாடுகள் அளக்கப்பட்டன.

2026 டிஜிட்டல் உலகு மகிழ்ச்சியை கெடுக்கிறதா என்பது குறித்து ஆய்வு செய்கிறது. அமெரிக்க அய்ரோப்பிய சமுக இளம் தலைமுறையினர் , 15 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த மகிழ்ச்சி அளவில் இப்போது இல்லை என்கிற குறிப்பை executive summary சுருக்கத்தில் பார்த்தேன்.

சமுகத்தில் ஒரு மனிதன் என்ன ஏற்பை பெறுகிறான்- குடும்பத்தில் அவன் எப்படி ஒட்டியுள்ளான் தள்ளிப் போகிறான்- பள்ளிச் சூழலில் மாணவனாக isolate ஆகிறானா- இப்படி ஒவ்வொரு பகுதியிலும் இருப்புசார் கேள்விகள் மகிழ்ச்சி நோக்கியா அல்லது அவனுக்கான unhappiness road ஆ என்பதை சொல்வதாக புரிந்து கொள்ள முடிகிறது. எரிக் பிராம் போன்ற சிந்தனையாளர்கள் இதை to have or to be என்கிற கேள்வியாக்கினர்.

நாம் விஞ்ஞான தொழில்நுட்ப சமுகத்தின் பெரும் பலன்களைபேசிக்கொண்டிருக்கிறோம். பெரும்பாலும் இந்த அறிவியல் தொழில்நுட்பத்தில் போருக்கான ஆயுதங்களை செய்து விற்கும் மரண வியாபாரிகளே அதிகப் பலனை அடைந்து வருகின்றனர் என்பதை பார்க்க முடிகிறது. தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் மனித மனதின் emotional connect என்பதற்கும் உள்ள தொடர்பை நேர் விகிதமாகவா அல்லது எதிர் எதிர் பயணமாகவா எப்படி புரிந்து மதிப்பிட்டுக்கொள்வது என்கிற கேள்விஎழாமல் இல்லை. மனித உறவுகளில் நம்பிக்கை மதிப்பீடுகள் சரிகின்றனவா- கை கொடுக்கும்போதே காலை பிடித்து தள்ளிவிட முடியுமா என்கிற எண்ணப் போக்கு அதிகரித்துள்ளதா?

டிஜிட்டல் உலகில் முகம் தெரியா பரிட்சயம் மட்டுமே உறவுத்தொடர்பா- online relationship என்பதற்கு முக்கியத்துவம் கூடுகிறதா- ஒரே வீட்டில் ஆளுக்கொரு மூலையில் அவரவர் செல்போன்களுடன் அவரவர்க்கான சமுக ஊடக ஊடாட்ட வாழ்க்கை மகிழ்ச்சிக்கு கேடாகியுள்ளதா என்கிற விவாதங்கள் நடைபெறுகின்றன. எனது இருப்பு என்பது 'டிஜிட்டல் இருப்பு' என்பதாகிவிட்டதா? இல்லையெனில் இன்மையா?

நீடித்த வளர்ச்சிக்கான குறியீடுகள், mental health, ethics, inequality, work area happiness, migration issues என பல தீம்களில் இவ்வறிக்கையை அவர்கள் கொணர்கின்றனர்...

மனித மனம் எங்கு எப்படி வாஞ்சையை, அன்பை, காதலை, அமைதியைத் தேடி அலைகிறது..எப்படி வஞ்சிக்கப்பட்டுசின்னா பின்னமாகிறது என்பது கவலையுடன் பார்த்துக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றே.. எங்கே நிம்மதி என அலைபாயும் மனம், போராட்டத்திலேயே நிம்மதி எனச் சொல்லும் மனம், நல்லதே நடக்கும் என ஆறப்போடும் மனம் இப்படி ஏராள மனங்களின் கூட்டுப்பயணமே வாழ்க்கை... நாளை என்பது நம்பிக்கைகளின் தொகுப்பும் கூட -அதில்

நிச்சயமற்ற , அவநம்பிக்கைகளின் கழிவுகளும் இல்லாமல் இருப்பதில்லை.. 23-5-2026

may 24

இந்தியா பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் நுழைகிறதா என்கிற விவாதங்கள் கூர்மையாகி வருகின்றன.

பிரதமர் கோவிட் கால வாழ்க்கை சூழலை வேண்டுகிறார். பெட் ரோல் டீசல் பயன்பாட்டை குறைத்தல், தங்கம் வாங்குவதை தவிர்த்தல், உணவுஎண்ணெய் பயன்பாட்டை குறைத்தல், வெளிநாட்டுபயணங்களை தவிர்த்தல், வீட்டிலிருந்து பணி செய்தல், வெளிநாட்டு பொருட்கள் வாங்குவதை தவிர்த்தல் போன்ற தவிர்த்தல்களை திரு மோடி பட்டியலிட்டு வருகிறார்.

அரசாங்கமும் தங்கம் வெள்ளி பிளாட்டினத்திற்கான கஸ்டம்ஸ் வரிகளை உயர்த்தியுள்ளது. கூடுதலாக செஸ் வரி உயர்த்தலையும் செய்துள்ளது. பெட் ரோல் டீசல் விலைகளும் தொடர்ந்து உயர்த்தப்பட்டு வருகின்றன. உலகின் பல நாடுகளை ஒப்பிடும்போது உயர்வு அதிகமில்லை என்கிற பதிலை அரசாங்கத் தரப்பு சொல்கிறது. டெல்லியில் சமையல் எரிவாயு கள்ளச் சந்தையில் ரூ 900 சிலிண்டர்- ரூ 3000க்கு விற்கப்பட்ட செய்திகள் வந்தன.

வெளிநாட்டு மூலதனம் வராமல் நின்றுபோனதை ஆர் பி அய் சொல்லி வருகிறது. உள்நாட்டு முதலீடுகளும் கை சுருக்கிக் கொண்டுள்ள நிலை இருப்பதாக இந்தியா டுடே பொருளாதார வட்டமேசை விவாதம் சொல்கிறது.

மோடி அவர்கள் காலத்தில் குருட் ஆயிலுக்கான வெளிநாட்டு இறக்குமதி 85-89 சதம் என்றே தொடர்ந்து நிற்கிறது. இந்த dependency இன்னும் அதிகமே ஆகும் என்கிறார் வர்ணா ஸ்ரீராமன். மோடி அரசாங்கம் வந்த முதல் இரண்டு ஆண்டுகளிலேயே excise duty 9 முறை ஏற்றப்பட்ட கதையை அவர் சொல்கிறார்.

மன்மோகன் சிங் காலத்தில் கடனே இல்லாமல், உபரியில் வாழ்ந்த ONGC , 2024 மோடி காலத்தில் நீண்டகால கடனாக 78000 கோடியில் நிற்கிறது என்கிற அதிர்ச்சியான செய்தி கிடைக்கிறது.

National Mission Edible Oil என்றெல்லாம் போடப்பட்டும் அரசாங்கம் மக்களிடம் நெருக்கடியைச் சொல்வதைக் காண்கிறோம். பாம் ஆயில் உற்பத்தியை பெருக்குவோம் என்று ஒதுக்கீடுகள் செய்யப்பட்டதாக பார்க்கமுடிகிறது. நவ 2025ல் இலக்கு என குறித்த 10 லட்சம் ஹெக்டேர் என்பதில் 6.20 லட்சம் மட்டுமே சாத்தியமானதாகச் சொல்கிறார்கள். இந்த மிஷன் முன்மொழிந்த இலக்கில் 22 மாநிலங்கள் 20 சதத்தைக் கூட எட்டவில்லை என அறிய முடிகிறது. கடந்த 10 ஆண்டுகளில் 432 oil seeds varieties சோதிக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். இந்த மிஷன் வருகிற 2030க்குள்நாட்டின் தேவையில் 70 சத உள்நாட்டு உற்பத்தி எனத் தொடங்கப்பட்ட ஒன்று.

தங்க இறக்குமதியால் foreign exchange drain என்பது உண்மைதான். மொத்த இறக்குமதியில் தங்கம் 9 சத இடத்தை எடுத்துக்கொள்கிறது என்கிறார்கள். UAE லிருந்து மட்டும் gold bar இறக்குமதி கடந்த 4 ஆண்டுகளில் 3 பில்லியன் டாலரிலிருந்து 16.5 பில்லியன் டாலராக உயர்ந்ததாம். 2024ல் ஆர் பி அய் தன் தங்க இருப்பை அதிகரிக்க 72.6 டன் வாங்கியதாம். அதன் இருப்பு 880 டன் என்கிறார்கள்.

இந்திய நகை வியாபாரிகள் மதிப்பீட்டின் படி மக்களிடம் 35000 டன் தங்க நகைகள் இருக்கலாம் என்கிற தகவல் கிடைக்கிறது. இவை formal economy எல்லைக்குள் இல்லை என்கிறார்கள். Gold monetisation program சரியாக நடைபெறவில்லை போலும்.

வெளிநாட்டு பயணம் இப்போது பேசுபொருளாகியுள்ளது. வெளிநாட்டு வாழ் குடும்ப மனிதர்கள் பராமரிப்பு போன்ற பல வெளிச்செல்லும் remittanceக்கு உச்சவரம்புண்டு. இப்படி 2024ல் போன டாலர் 31.7 பில்லியன் என கணக்கு. பயணச் செலவு எனப் பார்த்தால் 17 பில்லியன் டாலர் என்கிறார்கள். படிப்பு வகை கணக்கு 3.47 பில்லியன் டாலர். சுற்றுலா வியாபாரிகள் இனி நாங்கள் உள்நாட்டு சுற்றுலா மூலம்தான் தொழில் நடத்த வேண்டுமா என புலம்ப ஆரம்பித்துள்ளனர்.

2024ல் பதிவாகி வெளிவந்த 59000 பேருந்துகளில் 3600 தான் எலக்றிக் பேருந்துகள் என்கின்றனர். 2025ல் 50 பெரிய நகரங்களில் 10000 electric buses தான் ஓடுகின்றன என்கிறார்கள். 2028க்குள் 38000 இலக்காம். அன்று தேவைப்படும் பேருந்துகள் 16.5 லட்சமாம். 140 கோடி மக்களின் 75 சதமாவது பொது பேருந்தை நம்பியிருப்பார்கள் என வைத்துக்கொண்டால், இந்த 16 லட்சம் போதுமா?

மொத்த உழைப்போரில் 10-12 சதம்தான் work from வசதிக்கு வாய்ப்புடையவர். 80 சத அன்றாட உழைப்பாளர் physical presence

மூலமே வேலை வாய்ப்பை பெறும் சூழலே இந்தியாவில். இவர்கள் வாழ்வாதாரம் கோவிட் காலம் போல் என்னவாகும் என்கிற கேள்விக்கு பதில்தேட வேண்டியுள்ளது..

Buy Indian என்கிற முழக்கத்திற்குரிய கட்டுப்படியான உற்பத்தியில் வாங்கும் சக்திக்கு உகந்த பொருட்களின் supply side இருக்கிறதா என்கிற விவாதமும் நடந்து வருகிறது..

இரான் யுத்தம்- ஹோர்மஸ் நெருக்கடி எல்லாம் புரிந்து கொள்ளப்பட வேண்டியவைதான். 140 கோடி மக்களின் தேவைகளை உணர்ந்து நிறைவேற்றும் governance மிகக் கடினமான ஒன்றும் கூட... அதே நேரத்தில் மக்களிடம் வாக்குறுதி அளித்து policy planning prescription தருகிற அரசாங்கம் என்கிற வகையில் வெறும் rosy picture காட்டாமல், வெளிப்படையான மனம் திறந்த விவாதங்களை அரசாங்கம் ஊக்குவிக்க வேண்டுமென்கிற எதிர்பார்ப்பு ஜனநாயகமான ஒன்றுதானே.

பிரதமரின் வெளிநாட்டு பயணம் மீதான விமர்சனங்கள் வருத்தத்திற்குரிய ஒன்றுதான். ஆனால் அவை குறித்த accountability க்கு அரசாங்கத்திற்கு பொறுப்பில்லையா? பிப் 13 2026 நாடாளுமன்ற பதிலில் 2015-2025 பிரதமர் வெளிநாட்டு பயணச் செலவு 762 கோடிஎன்றார்கள். 2025 ல் மட்டும் 175 கோடிக்கு மேல். இது கேள்வியானால் , அப்பயணங்களால் விளைந்தபலன்கள் குறித்து வெள்ளை அறிக்கையோ அல்லது உரிய அறிக்கை ஒன்றைதரலாமே.

Transparency with the people என்பது மட்டுமே ஜனநாயகத்திற்கான அழகு. நெருக்கடிகள் உருவாவதே குற்றம் என்பதல்ல...அது குறித்த உரிய விவாதங்களை உருவாக்கி காது கொடுத்து கேட்டு தேவையானவற்றை எடுத்துக்கொண்டு தீர்வுகளுக்காக முயற்சிப்பதே ஜனநாயகத்தின் ஆரோக்கியம். அப்படி ஒரு robust democracy நோக்கி நமது political class அழைத்துச் செல்லுமா?

24-5-2026

(courtesy and thanks To varna for her article Six asks the policy ledger)

may 25

தமிழ்நாட்டில் தேர்தல் முடிந்தும் , அது குறித்த அலசல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. எவருக்கும் முழுமையாக புரிபடா சூழலை எதிர்கொண்ட உணர்வு. புதிய அரசாங்கம் புதியவர்களால் வந்து , அவர்களின் நிறை குறைகள் குறித்த பேச்சும் பெருக ஆரம்பித்துவிட்டன. நியுஸ் சானல்களின் சத்தமில்லா வீடுகளே இல்லையா என்கிற அளவு மக்களின் ஆர்வம் கூடியிருப்பதாகச் சொல்கின்றனர்- மார்கெட் கொண்ட விவாத பிரமுகர்கள்.

தோல்வி குறித்த உள்ளாய்வுகளின் நேர்மையை அவரவர்தான் அவரவர் கட்சியில் உணரமுடியும். சமாதானங்களும் நம்பிக்கைகளும் பொங்கவும் கூடும். வென்ற புதியவர்களுக்கும் நிர்வாகம் என்கிற திக்குத் தெரியா காட்டில் திசை புரியா தவிப்புகள் நிலவும். சில இடங்களில் கெத்து காட்ட இளம் உள்ளங்கள் துணியும். அனுபவம் பாடமாகலாம் அல்லது பாதகமும் ஆகலாம். நேற்று பேசியவை திரும்ப இரு மடங்கு உஷ்ணமாகத் திரும்ப வரும் என்பதை ஆட்சி மற்றும் கட்சி முன்னணியாளர்கள் உணர வேண்டியிருக்கும்.

தேர்தல் கமிஷன் கொடுத்துள்ள கட்சிவாரி சதவீதம் எனப் பார்த்தால்

தவெக - 34.92 சதம்

திமுக அணி பெற்றது 31.42 சதம். இதில்

திமுக- 24.19, காங்- 3.37, தேமுதிக - 1.20, வி சிக- 1.09, சிபிஅய்- 0.66, சிபிஎம்- 0.60, அய் யு எம் எல்- 0.29 . மதிமுக போன்றவர் திமுக சின்னத்தில் நின்றனர்.

அதிமுக அணி பெற்றது 24.18 சதம்

அதிமுக- 21.21 சதம், பாஜக- 2.97, பாமக 2.2 எனப் பார்க்கிறோம்.

திமுக 164 இடங்களில் நின்று 59ல் வென்றுள்ளது. காங் 28க்கு 5, தேமுதிக 10க்கு 1, விசிக 8க்கு 2, சிபிஅய் 5க்கு 2, சிபிஎம் 5க்கு 2, அய் யு எம் எல் 2க்கு 2.

234 தொகுதிகளில் இக்கட்சிகள் நின்ற இடங்களின் சதம் என்பது - அதாவது 234 ல் 164 என்று- திமுக 70 சத இடங்களில் நின்றது. காங் 12 சத இடங்களில், விசிக- 3 சதம், தேமுதிக- 4.3 சத இடங்கள், சிபிஅய்- 2.1 , சிபிஎம்- 2.1, அய் யு எம் எல்- 1 சத இடம் என கணக்கிடலாம்.

திமுக அணி வாங்கிய மொத்த வாக்கு சதவீதம் 31.42 சதத்தில் இந்த ஒவ்வொரு கட்சிக்கும் ஈவு பார்த்தால், அதாவது திமுகவிற்கு 31.42ல்

24.19 என்பது 77 சதம் கிடைக்கப்பெற்றது. காங் 10.7 சதம் கூட்டணி எடுத்ததில் தன் பங்காக பெற்றுள்ளது. தேமுதிக 3.8 , விசிக- 3.46, சிபிஅய்- 2.1, சிபிஎம்- 1.9 , அய் யு எம் எல் 0.9 சத கூட்டணி வாக்குப் பங்கையும் பெற்றன. திமுகவால் பிற கூட்டணி கட்சிகளும், பிற கூட்டணி கட்சிகளால் திமுகவும் வாக்கு பலம் பெற்றதை பார்க்க முடிகிறது. Mutually beneficial என்றே புரிந்து கொள்ளமுடிகிறது.

சிபிஅய் சிபிஎம் கூட்டணி இடங்களில் 2.1 சத இடங்களில் நின்று, கூட்டணி பெற்ற வாக்குகளில் 2.1, 1.9 சத பங்குகளைப் பெற்றன. காங் 12 சத இடங்களில் நின்று கூட்டணி வாக்கில் 10.7 சதத்தை மட்டுமே பெற்றது. திமுக 70 சத இடங்களில் நின்று கூட்டணி பெற்ற மொத்த வாக்குகளில் 77 சதத்தை எடுத்துக்கொண்டுள்ளது. விசிக 3 சத இடத்தில் நின்று 3.46 சத கூட்டணி வாக்கில் தன் பங்கை பெற்றுள்ளது.

நாம் தமிழர் 4 சதத்தை தனித்து நின்று பெற்றது.

அரசியலில் எதுவும் நடக்கலாம் என்கிற காட்சிகளையே திமுக அதிமுக இணைந்து ஆட்சியை எடுக்கலாம் என்ற பேச்சு மீண்டும் உணர்த்தியது. ஆரம்பத்தில் இது குறித்து அமைதி காத்த அனைவரும் பேசத்தொடங்கியுள்ளனர். விவாதத்திற்கு வரக்கூடிய திமுக நண்பர்கள் ஒரு கொடியில் பூத்த இருமலர்கள்- இணைந்து பூமாலையாவதில் என்ன தவறு எனப் பேசி வருவதையும் காண்கிறோம். வெளிப்படையாக திமுக அதிமுக இணைந்து பணியாற்ற நேரப்போகும் நிர்ப்பந்தங்கள், இந்த புதிய ஆட்சியின் நிர்வாகம் பொறுத்தும் அதற்கு கூடும் அல்லது குறையும் செல்வாக்கு பொறுத்து நேர் அல்லது எதிர் விகிதத்தில் அமையக் கூடும்.

தமிழ்நாடு தொடர்ந்து 4 முனை போட்டி (நாம் தமிழருக்கு உள்ள எனர்ஜி பொறுத்து) என்கிற திசையிலேயே நகரும் என்றாலும், திமுக அதிமுக பகைமை பூசல் மட்டுப்பட்டு , நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒத்துழைக்கும் அரசியல் உருவாகக் கூடும் என்கிற திசையும் இல்லாமல் இல்லை...பார்க்கலாம்..

25-5-2026

may 29

கர்நாடகா குறைந்தபட்ச ஊதிய அறிவிக்கை

மினிமம் வேஜ் 1948 சட்டப்படியான அறிவிக்கை ஒன்றை மே 22, 2026ல் கர்நாடகா அரசாங்கம் வெளியிட்டுள்ளது. 60 சதம் உயர்வு என தொழிலாளர் அமைச்சர் விளக்கமளித்துள்ளார்.

கர்நாடகாவின் பட்டியலின வேலைப்பகுதிகள் scheduled employmentகள் என 81 வகையினங்கள் சொல்லப்பட்டுள்ளது. ஒரு கோடி தொழிலாளர்களுக்கு மேல் பலன் அடைவர் என சொல்லப்படுகிறது. மூன்று மண்டலங்களில் 4 வகை தொழில் தேர்ச்சியாளர்களுக்கான ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தொடர் போராட்டங்கள், வழக்குகள் என பல படிகளையடுத்து தொழிலாளர்க்கு இந்த அறிவிக்கை போடப்பட்டுள்ளது.

Unskilled என்றால் ரூ 19319 , 21251.30, 23376.43 என சிற்றூர், மாவட்டம், பெங்களூர் மண்டலம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதேபோல். Semi skilled எனில் 21251.30, 23376.43, 25714.07

Skilled எனில் 23376.43, 25714.07, 28285.47, highly skilled எனில் 25714.07, 28285.47, 31114.02 நிர்ணயம் செய்துள்ளனர்.

கர்நாடகாவில் குறைந்தபட்ச ஊதியம் என்றால் 19319, 21251, 23376, 25714, 28285, 31114 என்கிற இந்த ஆறு ஊதிய நிலைதான். தொழிலாளர் தேர்ச்சி நிலை, வேலை ஊர் பொறுத்து இந்த 6 ஊதியத்தில் ஏதோவொரு நிலையில் அவர் இருப்பார். பெங்களூர் பெருநகரப் பகுதியெனில் தொழிலாளியின் தேர்ச்சிநிலை பொறுத்து அவர் 23376, 25714, 28285, 31114 என்கிற 4 ஊதிய நிலையில் ஒன்றில் இருப்பார்.

தாலூகா சிற்றூர், ஊராட்சி பகுதி எனில் தேர்ச்சி நிலைக்கேற்ப 19319, 21251, 23376, 25714 என்கிற 4ல் உரிய ஒன்றில் இருப்பர்.

மாவட்ட தலைநகர், மாநகர் எனில் 21251, 23376, 25714, 28285 என்கிற 4ல் ஒன்றைப் பெறுவர்.

ஆண்டிற்கு ஒருமுறை கிராக்கிப்படி பெறுவர் எனவும் சொல்லியுள்ளனர். இணையத்தில் கன்னடமொழி அறிவிக்கைதான் பொதுவாக காணக் கிடைக்கிறது. கெசட் இரு மொழிகளில் வெளியிடப்பட்டதாக செய்திகளைப் பார்க்கிறோம்.

தொழிற்சங்கங்கள் வரவேற்றுள்ளன. KEA என்கிற முதலாளிகளின் எம்ப்ளாயர் அமைப்பு கடுமையாக எதிர்த்துள்ளது. உயர்நீதிமன்ற

வழக்கிற்கு எதிரானது- மத்திய லேபர் கோட் வந்து ‘1948 MW சட்டத்தை ‘ நீக்கிய பின்னர் அதன்படி ‘செட்யூல்ட் வேலையினங்களுக்கு ‘ மட்டும் தருவது செல்லாது என அவர்கள் சத்தக்கொடி உயர்த்தியுள்ளனர். ESI சீலிங் 21000 என்கிறபோது, கோடிக்கணக்கான தொழிலாளர் அதன் பலனை இழப்பர், சிறு குறு தொழில்களால் இந்த ஊதியத்தை தர இயலாமல் தொழில் பாதிக்கும் என அவர்கள் சொல்லி வருகின்றனர்.

இ எஸ் அய் சீலிங்கை 30 ஆயிரமாக மத்திய அரசை உயர்த்தக் கோரியுள்ளோம் என மாநில அரசாங்கம் சொல்லியுள்ளது. இம்முறை உச்சநீதிமன்ற ரெப்டகாஸ் வழக்கின் வழிகாட்டல்களைக் கொண்டே ‘மினிமம் வேஜ்’ கணக்கீட்டை செய்துள்ளதாக கர்நாடகா அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மே 27 அன்று கர்நாடகா 11 தொழிற்சங்கங்கள் தங்கள் கவலையை தெரிவித்துள்ளனர். புதிய முதல்வர் பொறுப்பு சூழலில் எந்தவித roll backம் இருந்துவிடக்கூடாது என்று.. ஏற்கனவே சில அமைச்சர்கள் இதை எதிர்த்த செய்திகளும் வந்தன. உண்மையில் 60 சத உயர்வல்ல, அவர்கள் கடந்த 2016-17 மாற்றத்தை எடுத்துக்கொண்டு அப்படி சொல்கின்றனர் என தொழிற்சங்கங்கள் சொல்லியும் உள்ளனர்.

சித்தராமையா அவர்கள் சாதிவாரி கணக்கெடுப்பு, மினிமம் வேஜ் என்பதை பதவி விட்டு போகும் போது bomb போட்டு, அடுத்து வருகிறவர்க்கு சவாலை வைத்து ஆடிய political game என இதை சிலர் விமர்சிக்கவும் செய்துள்ளனர். எங்கள் டெலிகாமில் இப்படி ‘பொலிட்டிகல் கேம்’ பலவீனங்கள் சூழல்தான் தொழிலாளர்க்கு சில பலன்களை கொண்டு சேர்த்தது என்ற நினைவு எனக்கு வருகிறது...

பார்க்கலாம்...இந்த மே 22 உத்தரவில் கர்நாடக அரசாங்கம் எவ்வளவு உறுதியாக நிற்கப்போகிறது என... அமுலாக்கத்திற்கு நல் வாழ்த்துகள்!

29-5-2026

மே 31   தமிழ்த் தாய் வாழ்த்து

மனோன்மணீயம் பெ சுந்தரம் பிள்ளை அவர்கள் தன் நாடகத்தில் எழுதிய பாயிரத்திலிருந்து சில வரிகளை நீக்கி 1970ல் கலைஞர் மு கருணாநிதி ஆட்சியில் (G.O. Ms. No. 1246, 27.11.1970) தமிழ்த் தாய் வாழ்த்து நடைமுறை வந்தது.

பெ சுந்தரம் பிள்ளை குறித்த வாழ்க்கை வரலாற்றை ஈரோடு சார்ந்த ந வேலுசாமி 2001ல் சாகித்ய அகாதமிக்காக எழுதினார்.

தமிழ்த்தாய் வாழ்த்து, National Song vande Mataram, National Anthem Janagana இவற்றைப் பாடும் வரிசை தமிழ்நாட்டில் தொடர் சர்ச்சையாகி வருகிறது. பல மாநிலங்கள் தங்களுக்கான மாநில invocation song என ஏதும் கொண்டிருக்கவில்லை. தென் மாநிலங்களில் புதுச்சேரி, கர்நாடகா, ஆந்திரா, தமிழ்நாடு போன்றவை வைத்திருந்தாலும், கேரளம் state anthem வைத்திருப்பதாகத் தெரியவில்லை. சில ஆண்டுகளுக்கு முன்னர் தோழர் பினராயி முயற்சி எடுத்தார்.

ஆந்திராவில் 1975ல், கர்நாடகா 2004ல், ஒரிஸ்ஸா 2020ல் தங்களுக்கானதை ஏற்றதாகப் பார்க்க முடிகிறது. மே வ 2023, மகராஷ்ட்ரா 2023, மபி 2010, ஹரியானா 2025, குஜராத் 2013, சட்டிஷ்கர் 2019, மணிப்பூர் 2021, மேகாலயா 2024, பிகார் 2012 என பல மாநிலங்கள் அவரவர் பாடலை ஏற்றுள்ளன.

பிற மாநிலங்களில் எவ்வாறு வரிசை இருக்கிறது என எனக்குத் தெரியவில்லை. மாநில அரசாங்கம் அதை அறிய முடியும் எனக் கருதுகிறேன். அங்கெல்லாம் சர்ச்சை வந்திருந்தால் என்னவெனவும் கேட்டு அறியலாம்.

மத்திய அரசாங்கமும் தேசியப் பாடல், தேசிய கீதம் இசைக்க பாட வரிசைப்படுத்த ரூல் போட்டுள்ளது. தமிழ்நாட்டின் மரபு என்கிற உரிமையை எடுத்துச் சொல்லிக் கேட்டால் அதைப் புரிந்து கவர்னர்கள் நடந்துகொள்ளலாம். அவர்கள் பார்க்க வேண்டியது தேசிய பாடல், கீதம் இசைத்தல்- பாடல்- அதன் வரிசையைத்தான். அவ்வுத்தரவில் வேறு எந்தப் பாடலும் முன்னரோ பின்னரோ இசைப்பது பற்றி ஏதுமில்லை என அவ்வுத்தரவைப் படித்த சிலர் சொல்கின்றனர்.

தமிழ்த்தாய் வாழ்த்தும் , இப்பூமி அதில் பரத கண்டம்- தென்னாடு- திராவிடம்- தமிழ் என்றே செல்வதையும் காண்கிறோம்.

வேலுசாமி அவர்கள் தனது நூலின் பக் 37ல் இவ்வாறு சொல்லியிருப்பார்

" நீர் நிறைந்த கடற்பரப்பை ஆடையாக உடுத்திய நிலமகளின் திருமுகமாகப் பரதகண்டம் விளங்குகின்றது. தெக்கணமாகிய தென்னகம் திருமுக நெற்றியாகவும், தமிழகம் நெற்றிப் பொட்டாகவும், தமிழ்மொழி எத்திசையும் புகழ் மணக்கவும் உலகெங்கும் இன்புறவும் தக்க திலக நறுமணமாகவும் திகழ்கின்றன என்ற சுந்தரனார் பாடற்கருத்து எண்ணி எண்ணி இறும்பூதெய்த வைக்கின்றது"

பாடலின் மய்யக் கருத்தை வேலுசாமி அழகாக இதில் சொல்வதைக் காணமுடியும். இது போன்ற சர்ச்சைகளை கவர்னர்கள் உருவாக்காமல் வளர்க்காமல் இருந்தால் நலம்...

தோழன் நமரியிடம் விவாதித்துக்கொண்டிருந்த போது அவன் என்னிடம் ஒன்றைச் சொன்னான். இதப் பாரு.. நம் மக்களால் சடங்கையும் சயிண்டிஃபிக்காக செய்ய முடியும், சயின்ஸ் என சடங்காகவும் பேச முடியும். அவனிடம் அப்படியா என்று மட்டும் கேட்டுவிட்டு என் மனம் போனப் பக்கம் நகர்ந்து போனேன்..

31-5-2026

JUNE 2026

ஜுன் 1

Waiting to see Light

I happened to see the two sharp precise recitals of bsnl pensioners case at Delhi HC. Advocates pleading for the DOT/ Govt side and the Associations side , both have placed and narrated their 'case substance' by exhibiting their understanding and wisdom. The judgement is reserved. Let us hope for the best.

The sum and substance of the arguments and the counter arguments are on the expected lines only. It is Upto the Delhi HC judges to take the relevant judicial aspects and pronounce their wisdom, either to sustain the PBCAT favouring pensioners or to reject the same in favour of govt.

During the course of arguments, specifically at the time of Govt lawyer's arguments, one of the Judges even questioned about how many OMs you issue on a single day - 101 OMs?- what is this CDA IDA ? etc. DOT adv politely responded - I just quoted the issued 3 OMS and I have to stand on that limit only. Judges expressed their confused status during the time of arguments regarding the OMs and its interpretations . Let us see how they clear themselves their begotten confusion and pronounce the judgement.

Both sides quoted the relevant 37 A - its sub rules, the appropriate orders / OMs issued for availing the benefit of CPC recommendations regarding Gratuity increase, qualifying service, age related increase of pension etc.

Associations side relied upon the original cabinet note of 25-9-2000, rule 8 of 37 A, Civil service pension status as per CCS rules , and the earlier favourable Delhi PBCAT judgement etc. Why a bar on revision only, when extending other CPC benefits is the crucial question placed before the judges. The adv pleaded that these absorbed are statutorily protected regarding the issue of pension and so the benefit of 7 th CPC should be given 'for pension revision' also.

Govt side brought in its brief the 'FA 2025' power to distinguish thereby giving a chance to say that bsnl IDA pensioners are also within the ambit, which is contrary to a clause of FA 2025 (148 a- defines pensioner only those retired from govt service). They categorically stand in their explanation about Pro rata CDA pensioners , a distinct one comparing the combined IDA bsnl absorbed. Govt side emphatically saying that the CPC revision is only to those CDA pensioners not for these IDA pensioners . IDA pensioners revision is based on PRC pay revision. Different pension revision methodologies on the basis of different pay revision methodologies. The govt side desires to set aside the PBCAT judgement.

I just mentioned certain points that I felt relevant from both the sides. I am also waiting like thousands of pensioners ‘with hope’ on the issue of pension revision. It has to see its light though got delayed..

8 hrs 1-6-2026

ஜூன் 2 தோழர் தாரகேஸ்வர்

வங்கிப் பணியாளர் இயக்கத்தின் தலைவர் தோழர் தாரகேஸ்வர் நூற்றாண்டை , வங்கி ஊழியர்கள் மட்டுமல்லாமல், பல்வேறு தொழிற்சங்க இயக்கத்தினரும் நினைவு கூர்ந்து வருகின்றனர்.

AIBEA இயக்க 80 ஆண்டுகால வரலாற்றில் (1946 முதலான) தாரக் அவர்களுக்கும் மகத்தான பங்குண்டு. பிரபாத்கர், பர்வானா வரிசையில் இடம் பெறக்கூடிய தலைவர். அவ்வியக்கத்தின் பொதுச்செயலராக உயர்ந்து , இருதரப்பு ஒப்பந்தங்கள், வங்கி ஊழியர் ஒற்றுமை, தனியார்மய எதிர்ப்பு பிரச்னைகள், நரசிம்மம் கமிட்டி எதிர்ப்பு இயக்கங்கள் என பல திசையில் அவர் தம் உழைப்பை, உடல் நல வீழ்ச்சியிலும் செய்ய வேண்டியதாக இருந்தது. Defeat Denationalisation- defeat deunionisation என்கிற இரு முழக்கங்களை - தொழில் சார், தொழிலாளர் நலன் சார் முழக்கங்களை - அவர் முன்னெடுத்தார்.

பேச்சுவார்த்தைகளிலும், தொழிலாளர் அமர்வுகளிலும் அவரது அபார நினைவாற்றலை- யானை போல்- எனச் சொல்வர். 2003ல் மறைந்த அவரது நினைவைப் போற்றும் வகையில் இயக்கத்தினர் அவரது நினைவு சொற்பொழிவுகளை, நாட்டின் நன்மைக்கான topical lectures யை செய்து வருகின்றனர். இயக்கத் தலைவர்களின் குறிப்புகள் பகுதியில் தாரக் குறித்தும் மேம்பட்ட குறிப்பு ஒன்றை கொடுத்துள்ளனர். ஆர்வம் உள்ளவர் தேடி தெரிந்து கொள்ளலாம்.

தாரக்கின் முக்கிய பங்களிப்புகளில் இரு தரப்பு ஒப்பந்தத்துடன், மிகத் துணிச்சலாக 1993ல் அவர் உருவாக்கிய பென்சன் ஒப்பந்தம் என எனக்கு தோன்றுகிறது. பல்வேறு விமர்சனங்களையும் எதிர்கொண்டு, லட்சக்கணக்கான வங்கி ஊழியர்களின் ஓய்வுக்கால வாழ்க்கைக்கு தேர்ந்த உத்தரவாதமாக அவர் பென்சன் ஒப்பந்தத்தில் தலையாய பங்காற்றினார். pension as a second retirement benefit என்பதை அப்போது, திருவாரூர் போன்ற சிற்றூர்களில் கூட நாங்கள் பேசிக்கொண்டிருந்தது நினைவிற்கு வருகிறது.

நிர்வாகத்தின் பென்சன் பங்களிப்பு- கார்ப்பஸ் நிதியம், விலைவாசி ஈட்டுடன் கூடிய பென்சன் முறை, ஜனவரி 1, 1986 அன்று பணியில் இருந்தவர்- பின் பணிக்கு வந்தவர் என லட்சக்கணக்கான ஊழியர் வாழ்வில் நீண்ட நாளைய கோரிக்கையாக இருந்த பென்சன் என்பதை அவர் காலத்தில் தீர்க்க முடிந்தது. சிபிஎப் பெற்று 1993க்கு முன்னர் (1986-93) ஓய்வு பெற்றவரும் பெறத்தக்க வகையில் window opened.

மத்திய அரசின் CCS pension rules போலவே குறைந்த பட்ச 10 ஆண்டு சேவை எனில் பென்சன், ஓய்வின் போதான ஊதியத்தில் 50 சத பென்சன், அதற்கு dearness relief, VR ல் சென்றாலும் பென்சன், குடும்ப ஓய்வூதியம் என வங்கி ஊழியர்களால் பெற முடிந்தது.

இன்று 7 லட்சத்திற்கு மேலாக வங்கி ஓய்வூதியர்கள் இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் periodical wage revision போலவே ஓய்வூதிய திருத்தமும் வேண்டும் என்று போராடி வருகின்றனர். வங்கி ஓய்வூதியர்களின் புகழ் வாய்ந்த எம் சி சிங்களா வழக்கு இதற்காகவே நடந்து கொண்டிருக்கிறது. Automatic , perpetual pension updation என்கிற போராட்டம் வங்கி பென்சனர் மத்தியில் தீவிரமாகிவருகிறது.

மிடில் நிர்வாக அதிகாரிகளாக 2000க்கு முன்னர் ஓய்வு பெற்ற மானேஜர்கள் கூட வங்கியில் ரூ 10 ஆயிரம் தான் பென்சன் பெறுகிறார்கள். 2012க்கு முன்னர் ஓய்வு பெற்றவர் 21000 வரை பெறலாம் என அறிய முடிகிறது. 2018க்கு பின்னர் ஓய்வு பெறும் கடைநிலை ஊழியரால் ரூ 18000, எழுத்தரால் 22000 ஓய்வூதியம் என்ற வேறுபாட்டை வங்கி பென்சனர் இயக்கங்கள் சுட்டிக்காட்டி வருகின்றன. இந்நிலையில் தான் அவர்களின் சிங்களா வழக்கு பெரும் எதிர்பார்ப்புகளை உருவாக்கியுள்ளது.

1993 ல் பென்சன் உடன்பாட்டை உருவாக்கி, 1995ல் பென்சனுக்கான முறைப்படுத்தல் விதிகளை உருவாக்கி, இன்றைய போராட்டங்களுக்கு தாரக் போன்றவர் அடித்தளம் அமைத்து சென்றுள்ளனர்.

வங்கி ஊழியர் மட்டுமல்லாமல் வங்கி ஓய்வூதியர்களும் இதை உள்மனதில் வாங்கியே இருப்பர். நல் வாழ்த்துகள்!

2-6-2026

ஜுன் 4

7th CPC or not - the challenge before Delhi HC by BSNL pensioners' associations

I place hereby some of my interesting observations, (when I go through again) on the briefs of the Associations and Govt DOT through their lawyers. Those who have learned knowledge on these matters can easily discern , understand the fairness or unfairness of these arguments . But the wisdom of Judges are going to be the matter. Let us hope. Those interested can go thro all the 3 parts placed here.

1

Brief submitted by Smt Gauri Puri adv for AIBSNLREwA

Seeking parity

1.3 The respondents (pensioners) sought parity with their counterparts in govt service for revision of their pension as per the recommendations of 7 th CPC as was assured to them in BSNL/ MTNL by incorporation of 37 A of the CCS pension rules 1972…

Eligibility of 7 th CPC

1.7 Except for pension revision, all benefits of 7 th CPC have been extended and made applicable to the retired BSNL/ MTNL employees viz. Calculation of pension, additional pension with maturity of age, qualifying service for full pension, commutation, limit of gratuity, family pension, leave encashment amount

3.2 The respondents (pensioners) were extended the benefit of 6 th CPC as well and cannot arbitrarily be denied the benefits of the 7 th CPC by linking pension revision with pay revision, particularly since pay revision does not deal with pensioners/ FP governed under CCS Rules.

2

Brief submitted by Asmita Singh for AIBSNLPWA

Not to seek parity in status but of fitment formula

1.3 At the outset, it is pertinent to note that the present WP are premised on the misconceived basis that the Respondents were seeking parity with CG employees after giving up their status to their absorption in BSNL. Whereas the cause of action for filing the OA is not to seek parity in status with CG servants but merely revision in pension in accordance with the revision granted to CG pensioners in as much as the Respondents were promised the Govt’s scheme of pension and parity in this respect with CG pensioners at the time of their absorption in BSNL…the limited prayer made by the Respondents before the learned tribunal was revision of their pension in terms of the fitment formula applied to CG pensioners by the 7 th CPC. Parity in no other respect has been sought Granted Parity

3. the combined service pensioners of BSNL constitute a Sui Generis class of pensioners who have been consistently granted parity with CG pensioners as a consequence of 37 A

4. The Respondents are entitled to the benefit of the 7 th CPC as they are pensioners under CCS pension rules 1972. 5. IDA granted to the Respondents is an issue extrinsic and unrelated to the revision of pension

3

Brief submitted by Lavanya Kaushik Govt Pleader

A. Employees absorbed in BSNL/ MTNL ceased to be Govt servants under rule 37 A of CCS pension rules 1972.

B. 11 The petitioners (DOT GOI) respectfully submit that PSU absorbees fall into two distinct categories- Pro rata pensioners continue to draw CDA pension separately from the govt … Combined service pensioners under rule 37 A whose pension becomes payable only upon superannuation from the PSU and is calculated on the basis of combined govt and psu service. The respondents (bsnl pensioners) belong to this category. Their pension is calculated on IDA scales and they are therefore IDA pensioners.

C. Difference between initial fixation of pension and revision of pension

12. The Respondents (pensioners) have fundamentally conflated: the formula for initial fixation of pension at the time of retirement; and the framework governing revision of pension post retirement.

15.Rule 37 A only ensures parity in respect of the formula for computation of pension at the time of retirement and NOT revision of pension V. 7 th CPC The reliance placed by the Respondents on the OMS dated 4-8-2026 and 12-5-2017 is also misconceived… The resolution dated 4-8-2026, OM dated 4-8-2016 (ii) and OM dated 12-5-2017 together formed one composite scheme governing revision of pension of CG CDA pensioners pursuant to implementation of the 7 th CPC OM dated 16-3-2017- the reliance placed on the said OM by the respondents to claim the recommendations of 7 th CPC are applicable to them is once again misplaced… extends a change in the formula effected …towards gratuity. This is once again a reflection of the application of rule 37 A 8.

24. Significantly at the time of implementation of 2nd PRC, no demand was ever raised by BSNL absorbed pensioners seeking extension of the fitment factor applicable to CG pensioners under 6 th CPC framework…

28.it is further pertinent to note that even after implementation of 7 th CPC for CG employees, pension being drawn by bsnl absorbed IDA pensioners under 2nd PRC framework continues to be higher than the revised pension of CG CDA pensioners

29….Rule 37 A does not deal with revision of pension and as far as IDA pensioners are concerned, revision of pension takes place pursuant to the acceptance of the recommendations of the PRC and not on CPC that are applicable only to CDA pensioners.

32. Thus (FA 2025) , the present framework itself recognises the legality of maintaining separate pension revision structures for different classes of pensioners..

I have just given the interesting points that come across on my reading the above mentioned three briefs. Readings may differ according to requirements and experiences . We have to wait and see how the Judges are going to exhibit their judgement on their reading. It seems that the tug up war may continue even after Delhi HC ..Long live the systems and our desires..

9 hrs 4-6-2026 R. Pattabiraman

ஜூன் 5 Gandhi on Personal Leadership

I just started reading a book by Anand Kumarasamy (not Anand Coomarasamy) viz Gandhi on Personal Leadership- 39 Lessons

This Author a scholar on public relations and humanities. Jaico published this book 2006.

Those interested to learn the formulaic lessons can read this book. Gandhi is easy to read, not like Marx..but very difficult to practice in our day to day affairs.

I just quote a para from page 116/ 248 from this book. The topic of that lesson is The power of Conscience

" Many of us spend a lot of time with people who think in ways similar to us. This only reinforces our biases and prejudices, and from it we gain a false sense of certainty about our ideas and views, hence making them appear us as infallible.

There is a sense of safety in numbers and in the presence of like minded people, we are less likely to question the validity and correctness of our ideas and assumptions. There is a great price we pay for this- we stunt our growth and remain the proverbial frogs in the well who assume the well the whole world. What truly gives us an inner conviction is the questioning and examining of our paradigms , our assumptions and experiences, and trying to expand our horizons"

There are many topical lessons discussed in this book, like

Sense of purpose, the importance of character, the power of a dream, risking failure, sense of satisfaction, creative tension, channelizing the anger, the urge to serve, beyond competition, personal honesty etc.

5-6-2026

ஜூன் 5

உச்சநீதிமன்றத்தின் அருமையான தீர்ப்பு

கடந்த ஜூன் 1, 2026 அன்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் திருமிகு சஞ்சய் மற்றும் ஜார்ஜ் ஆகியோரின் தீர்ப்பு , இந்நாட்டின் ஏழை எளியவர்க்கும் நீதியின் பார்வை கிடைக்கும் என்பதை நிலைநாட்டியுள்ளது.

உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம், ட்ரிப்யூனல் என்றாலே ஆக உயர் அதிகாரம் படைத்தவர்க்கான மோதல் களம், பணச் செல்வாக்குக்காரர்களின் பஞ்சாயத்து, மத்தியதர வர்க்க அரசாங்க ஊழியர் மேலும் கூடுதலாக எதிர்பார்க்கும் இடம் என்பதிலிருந்து, இந்த தீர்ப்பு எவருக்கு தேவையோ அவர்பாற் காருண்யம் கொண்டு மத்திய அரசாங்கத்தை எதிர்த்து நீதி பெற வழிசெய்துள்ளது.

பிகானி தேவி , தற்காலிக அந்தஸ்து பெற்ற மறைந்த சூரஜ் ஷாக்கின் துணைவியார். அவருடன் வேறு இரு TSM Temp status Mazdoors பகுரு ஷாகு, பீதாம்பர் ஷா ஆகியோரும் இத்தீர்ப்பால் நியாயம் பெற்றுள்ளனர். இவர்கள் எல்லாம் மஸ்தூராக அஞ்சல் இலாகாவில் நுழைந்தவர்கள். பின்னர் வந்த நீதிமன்ற தீர்ப்பின் படி , இலாகா உருவாக்கிய TSM Scheme 1991 ன்படி தற்காலிக மஸ்தூர் அந்தஸ்தைப் பெற்று , குருப் டி நிரந்தர ஊழியர்களுக்கு இணையான பலன்களை அடைந்து வந்தனர்.

மோசமான அம்சம் என்னவெனில் அஞ்சலில் மேற்கூறிய மூவரும் 30 ஆண்டுகளுக்கு மேலாகியும் இரவு காவல் பணிபுரிந்து நிரந்தரம் இல்லாமலேயே பணி முடித்து அனுப்பப்பட்டுவிட்டனர். டெலிகாமில் இப்படி அந்தஸ்து பெற்ற லட்சக்கணக்கான டிஎஸ்எம்களை நிரந்தரப் படுத்தியது மட்டுமல்லாமல், அவர்கள் அனைவரையும் 10 ஆண்டுகள் சேவையில்லாமல் இருந்த போதும், பிற லட்சக்கணக்கான ஊழியர்களைப் போலவே பி எஸ் என் எல் பொதுத்துறைக்கு வந்தாலும் , அவர்களும் அரசாங்க பென்சனை பெற்றிட தோழர் குப்தாவால் செய்ய முடிந்தது.

அஞ்சலில் இப்படி வாழ்நாள் முழுதும் 60 வயதாகியும் நிரந்தரமாகாமல், வெளிவந்த இந்த அடித்தட்டு பீகார் தொழிலாளர்கள் துணிச்சலாக நீதி மன்றம் சென்றனர். கணவனை இழந்த பிகானி தேவி எனக்கு என்ன வழி- ஏன் குடும்ப ஓய்வூதியம் இல்லை என்ற நியாயக்கொடியை உயர்த்தினார். அவரது கணவர் சூரஜ் 2008ல் இலாகாவை விட்டு வந்தார். 2015ல் மறைந்து விட்டார். டி எச் எம் ஆகவே சென்ற மற்ற இருவரும் வழக்கில் உடன் நின்றனர்.

அஞ்சல் இலாகவோ, 'நீங்கள் நிரந்தரம் ஆனால் தானே உங்கள் டி எஸ் எம் சர்வீசை' (பாதியை) பென்சனுக்கு எடுத்துக்கொள்ள முடியும்- 'இலாகாவில் விதியில்லையே' என கைவிரித்து விட்டது. நீதிகேட்டு டிரிப்யூனல் சென்ற இவர்களுக்கு மார்ச் 2018ல் சாதகமான தீர்ப்பு கிடைத்தது. அஞ்சல் இலாகா உயர்நீதிமன்றம் சென்று தங்களுக்கு சாதகமான தீர்ப்பை பெற்றது.

இப்படி 2008ல் ஒய்வுபெற்று, 2015ல் கணவன் சூரஜை இழந்து வாழ்க்கைப் போராட்டத்தில் நின்ற பிகானி தேவி விடாமல் உச்சநீதிமன்றம் சென்று நியாயம் கோரினார். மற்ற இருவரும் சென்றனர். மூவருக்கும் சாதகமான தீர்ப்பைத்தான் நீதிமான்கள் சஞ்சயும் ஜார்ஜ் அவர்களும் தற்போது தந்துள்ளனர்.

உச்சநீதிமன்றம் எழுப்பிக்கொண்ட மிக முக்கிய கேள்வி

'Whether temporary status casual labourer, in the absence of a formal order of regularisation, would be entitled to pensionary benefits on

superannuation or not?' நிரந்தம் ஆகவில்லை என்பதால் இவர்களுக்கு பென்சன் பலன் கிடையாதா?

இத்தீர்ப்பு 54 பக்கங்கள்- 88 பாராக்களில் செல்கிறது. இதற்கான பதிலை தனது பாரா 76ல் அது தீர்க்கமாக தந்துவிடுகிறது

76. The question as framed in para 32 above stands answered as follows:

'A temporary status casual labourer would be entitled to pensionary benefits on superannuation even in the absence of

regularisation.'

டி எஸ் எம், நிரந்தரமாகமல் சென்றாலும் அவருக்கு பென்சன் பலன் CCS Temporary service Rules 1965 படி தர வேண்டும் என தெளிவுபடுத்திவிட்டது. இவர்களுக்கு தேவைப்படுகிற 10 ஆண்டுகள் தகுதிக்கு மேலாக பல ஆண்டுகள் இருக்கிறது - எனவே நிரந்தரமாகாவிட்டாலும் பென்சன் தரப்பட வேண்டும். திருமதி பிகானி தேவிக்கும் பேமிலி பென்சன் கனக்கிட்டு தர வேண்டும். நிலுவையைப் பற்றியும் இத்தீர்ப்பு வழிகாட்டியுள்ளது. டிரிப்யூனல் போன தேதியிலிருந்து (2008லிருந்து அல்ல) நிலுவை.. மூன்று மாதத்திற்குள் வழங்கவில்லையெனில் 6 சத வட்டி எனவும் சொல்லியுள்ளனர்.

81..the arrears thereof, wherever applicable, shall remain confined to the period of three years and two months preceding the date of filing of the respective Original

Applications before the Tribunal, consistent with settled principles governing service jurisprudence.

இத்தீர்ப்பு வலியுறுத்தும் சில சுவையான வரிகளையும் ஆர்வம் உள்ளவர்க்காக தந்துள்ளேன்

Once pension is recognised as a constitutional right in the nature of property, it cannot be taken away except by authority of law. A

statutory right cannot be rendered illusory on account of inaction of the employer, and such inaction cannot defeat or deny a constitutional right. It is in the light of this above discussed judicial approach of this Court over a period of time, the provisions of the Scheme and the subsequent applicable circulars must be read, understood and interpreted.

74. The argument founded upon financial burden is equally untenable. Pension is not a matter of grace dependent upon the financial convenience of the employer, but a deferred wage earned through long years of service. As already noticed hereinabove, this Court has recognised pension as a constitutional right in the nature of property protected under Article 300A of the Constitution of India as held in Jitendra Kumar Srivastava Case (supra) and it, therefore, cannot be denied on the plea of financial burden.

82. Consequently, Appellant, Bhikhani Devi, being the widow and legal representative of Late Suraj Sah, shall be entitled to pensionary benefits accrued to Late Suraj Sah, if any, together with admissible family pension. Similarly, Appellant, Bahuru Sahu shall be entitled to pensionary and consequential retiral benefits in accordance with law. However, the arrears payable to them shall remain confined to the period of three years and two months preceding the date of filing of the Original Application before the Tribunal.

85. The Respondents are accordingly directed to compute and release the pensionary and consequential retiral benefits payable to the Appellants in accordance with law within a period of three months from the date of this judgment. In case of default, interest @ 6% per annum from the date of accrual till disbursement shall be payable to the appellants.

இத்தீர்ப்பால் இம்மூவர் பலன் அடையக்கூடும். அஞ்சல் இலாகாவில், மத்திய அரசின் வேறு இலாகாக்களில் இப்படி எத்தனை பேர் நிரந்தரமில்லாமல் தற்காலிக அந்தச்து பெற்ற மஸ்தூர்களாக சென்றுள்ளனரோ, எனக்குத் தெரியவில்லை. அப்படி சிலர் சென்றிருந்தால் இத்தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு உரிய பொது உத்தரவை, வழிகாட்டலை மத்திய அரசாங்கம் செய்ய வேண்டும் என நினைக்கிறேன். சம்பந்தப்பட்ட அஞ்சல் மற்றும் மத்திய அரசாங்க ஊழியர் தொழிற்சங்கங்கள் குரல் எழுப்புவர் என கருதுகிறேன்.

வாழ்க்கைப் போராட்டத்தில் நின்ற அவசியமானவர்க்கு வந்துள்ள மிக நியாயமான தீர்ப்பு.. போராடிய , துணை நின்ற வழக்கறிஞர்கள் பாராட்டுக்குரியவர்கள்..

5-6- 2026 18 hrs

ஜூன் 6

Learning for learning sake or life sake என்பது ஒரு விவாதப் பொருள்தான். கலை கலைக்காக இல்லை மக்களுக்காக என்கிற விவாதம் ஓயாமல் நடந்து வருவதைக் காண்கிறோம். தோழன் நமரி சொல்வான் , ஆக்கலும் அழித்தலும் மனித காரியங்களே என்று.

மார்க்ஸ் வருங்கால சுபிட்சத்திற்காக தன் வாழ்நாள் எல்லாம் வருத்திக்கொண்ட learner. காந்திக்கோ ஒவ்வொரு நொடி கற்றலும் வாழ்க்கைக்கானது. கற்பது வேறு வாழ்க்கை வேறு என்கிற பிரிவு அவரிடம் இருக்கவில்லை.

நேற்று ஆனந்த குமாரசாமி எழுதிய Gandhi on Personal Leadership நூலை அறிமுகம் செய்திருந்தேன். இன்று இன்னும் கொஞ்சம் அதில்..

அயின்ஸ்டினிடம் உலகின் மிக முக்கிய கேள்வியாக எதைப் பார்க்கிறீர்கள் எனக் கேட்டபோது அவர் சொன்ன கேள்வி

Is the universe friendly?

ஆனந்த குமாரசாமியின் , இந்நூலின் , 20வது இயல் ஒன்றை சொல்லித்தருகிறது. நம்மில் பலர் அறிந்த ஒன்று தான்.

We sometimes mistakenly assume that there is only one way to know the world , that is thro science. Science alone, however, does not have the language or methodology to quench deeper yearning of the soul…

Is the universe compassionate, benevolent or hostile? Is there a purpose or meaning of life? What is love? What is death? These are the questions that cannot be adequately answered by science alone..that is why cultures, tales, arts, music, philosophy- spirituality…

நெல்சன் மண்டேலா சொன்னார்

Man’s goodness is a flame that can be hidden but never extinguished

இந்த உலகில் எதிர்பார்க்கும் அனைத்து மாற்றங்களையும் அவரவர் அவரவரிடமிருந்து தொடங்கி பார்ப்போமே என்று காந்தி சொல்லித்தந்தார். அவரின் புகழ் வாய்ந்த வாழ்க்கைப் பாடம் we must become the change we wish to see in the world- be the change என்றார்.

நான் என்னை மாற்றிக்கொள்ளாமல், உலகமே என் சௌகரியங்களுக்காக மாற்றிக்கொண்டு இயங்க வேண்டும் என்கிற எதிர்பார்ப்பை அவர் கேள்விக்கு உள்ளாக்கினார். அவரிடம்

அதேநேரத்தில் மனிதன் குறித்த பெரும் trust இருந்தது. அவன் அடிப்படையில் அற்புதமானவன் என்றே நம்பினார்.

An individual can adopt…without waiting for others to do so..and if an individual can do it, cannot whole groups of individuals? Whole nations? என்கிற நம்பிக்கை அவரிடம்.

என்னிடம் அதிகாரம் வந்தால் பொன்னுலகம் என ஒத்திப்போடுதலை அவர் ஏற்கவில்லை. இன்று கைகெட்டும் வேலையை எப்படி சிறக்க முடிந்த அளவு அனைவருக்கும் சாதகமாக்குதல் என்கிற one step at a time என்பதை அவர் கையாண்டார்.

'அவனை அப்படி இருக்கச் சொல், நான் இருக்கிறேன்' என்கிற சுட்டிக்காட்டலை, ஒத்திப்போடலை காந்தி நிராகரிக்கிறார். நான் எப்படி இருக்க வேண்டும்- எவர் எப்படியானாலும் இப்படித்தான் என்பதில் கவனம் வைக்கச் சொல்கிறார்.

ஆனந்த் எழுதுகிறார்

Gandhi did not wear any masks- he always displayed his self. With Gandhi , what you saw was what you get. But we act in one way , on the surface, when we are experiencing something else underneath. We act as though we know the answers when we clearly don't. A life filled with such pretence is like a slow poisoning of our true selves…

We are all prone to self deception, cover ups, finger pointing, and evasion of responsibility, eager to point out the faults of others, but remain blind to our faults and errors…

காந்தியை வாசிப்பது எளிதாக இருக்கலாம்...அனுசரிப்பதற்கு பெரும் பயிற்சியும் ஆன்மபலமும் துன்பப்பட்ட உறுதியும் வேண்டும்...

6-6-2026

ஜூன் 7

நம் வாழ்க்கை , சுகவீனங்களின் போதும் நமக்கு ஏதாவது சொல்லித் தரக்கூடும். படு பிசி என்பதில், அன்றாட பிசினெஸ் busy- ness என்பதில் நம்மை அறியாமையிலேயே பெருமிதத்தை வழிய விட்டுக்கொண்டிருப்போம்.

நமது busy actions என்ன பிரதிபலிப்புக்களை உருவாக்கின, உருவாக்கக்கூடும் என்பது குறித்து பொருட்படுத்தாத அளவு நாம் பிசியாக இருப்பதாக சமாதானம் பெறுவோம்.

The art of living என்பது போலவே the art of dying என்பதும் சிலரால் அழகாக விவாதிக்கப்பட்டே வருகிறது. அடைதல் ஒன்றுதல் என்பதற்கு மட்டும் புனிதம் ஏற்றப்பட்டு, விடுதல்- விலகுதல் என்பன தூற்றப்படுவதும் மனித பழக்கமாகியுள்ளது.

நாமே பழகிக்கொண்ட சில நிர்ப்பந்தங்களுக்காக, செக்குமாட்டு வழியிலே, செய்த ஒன்றையே , எந்த creative பார்வையும் இல்லாமல் செய்து கொண்டிருக்கும் addiction நம்மிடம் இருக்கலாம். அதில் நிறைவும் அடையக்கூடும். அவரவர் நிறைவு அவரவர்க்கு...

நாங்கள் 20 பேர்கள் அஞ்சலக வாயிலில் நின்றுகொண்டு மூக்கில் ரத்தம் வழியும் அளவு உஷ்ணப்பட்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்தை அவ்வூர் 50 feet ரோடில் சாய்க்க அவ்வளவு எமோஷனலாக இருந்த busy-ness என் நினைவிற்கு வருகிறது. ஏகாதிபத்தியத்தை விளாசி தள்ளிவிட்டு, சினிமாவிற்கோ அல்லது டீக்கடை அளாவல்களிலோ ஈடுபட்ட நாட்கள் அவை. பெரிய விஷயம் செய்த பின்னர் ஆசுவாசத்திற்கு தேவைப்படும் entertainment ... ‘செய்ததாக கருதிய’ அந்த பெரிய விஷயம் கூட இன்று நினைவு ஓடையில் entertainment ஆகவே படுகிறது.

கூட்டமாக நம்மைச் சுற்றி 10 பேர் இருக்கும்போது வரும் ‘கெத்து’ தனிப்போலும். அந்த கெத்து உணர்வை நம்மில் பலர் அடைந்திருக்கக்கூடும். தொடர்ந்து அடைந்து அவற்றை நம் வாழ்க்கையின் பெரும் சாதனை குறிப்பாக ஆக்கிக் கொள்ள விழையவும் கூடும்.

அவர் என்ன செய்தார், அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்கிற குற்றப் பத்திரிகை வாசிப்பு தான் எப்போதும் எங்களிடம்...நாம் செய்ய வேண்டியதென்ன - நமது செயல்களுக்கான reflections என்ன ஏன்

என்பன பல நேரம் கேள்விகளானதல்ல. என் இடத்தில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள் என்ற கேள்வியை பொருட்படுத்தாமல், அதெல்லாம் தெரியாதுங்க- இதை செய்யனும் என அடம் பிடித்த காட்சிகளும் என் மன நிழலில்..

மேற்கண்ட சிந்தனையோட்டம், ஆனந்த குமாரசாமியின் Gandhi on Personal Leadership நூலுடன் போய்க்கொண்டிருந்தபோது வந்தது. முன்னர் இரு பதிவுகளில் கொஞ்சம் அந்நூல் குறித்து சொல்லியிருந்தேன்.

ஜென் மாஸ்டர் ஒருவர் இப்படி சொன்னாராம்

If your mind is not clouded by unnecessary things, this is the best season of your life.

நம் சக்திக்கு உட்பட்ட செயல்களை புறந்தள்ளுவது, காணாமல் விடுவது, நம் சக்திக்கு அப்பாற்பட்ட செயல்களை அடைந்து விடும் பாவனைகளில் பெரும் வாயடிப்புகளைச் செய்வது- நம் 'லிமிட்டேஷன்' தெரியாமல் பேசுவது என்பது பெரும் பழக்கமாகவே மாறி வருகிறது. எவ்வளவு உரக்க ஆளை சாய்க்கும் சொல்லாடல் வருகிறதோ, அதற்கேற்ப 'புரட்சிகர ரேட்டிங்' என்கிற பாவனை பெருகியுள்ளது. வெறும் வம்பளப்புகளில் - காலத்தை கரைத்தலில் பெரும் இன்பம் அடைவது என்றாகியுள்ளது.

எப்போதும் frog in the well...அப்படி இருந்து வருகிறோம் எனக்கூட அறியாமலேயே..பாவம் தவளை பாவம் கிணறு..மனித குணங்களுக்கு அவற்றை இழுத்து சொல்லி வருகிறோம்.

ஆனந்த குமரசாமி இதில் காந்தியை வைத்து ஒன்றைச் சொல்கிறார். காந்தியிடம் வாழ்க்கைக்கான பாதைகள் என்ன என்பதைவிட, வாழ்க்கையே பாதை என்கிற நடைமுறை சோதனைதான் இருந்தது. இங்கு குமாரசாமி எழுதுவது

According to Gandhi, a commitment to truth, ethics and excellence is not just reserved for a few select areas of our life - it must be reflected in everything we say and do

ஆல்டஸ் ஹக்ஸ்லியுடன் , சிந்தனையாளர் ஜே கிருஷ்ணமூர்த்தி ஆரம்பித்த பள்ளி தன் முகப்பு வாசகத்தை லத்தீனில் Aun Aprendo அதாவது I am still learning என்று போட்டுக்கொண்டதாம். நாங்கள் தவறே செய்யாதவர் என்கிற உரிமை பாராட்டல் குறித்த விசாரணை அங்கங்கே அகங்களில் நடைபெற வேண்டியுள்ளது.

மார்க்ஸ் விடுதலை என்பது பிளவுபடாதது என்றார். காந்தி வாழ்க்கை பிளவுபடாதது என்றார். Life is one indivisible whole - one cannot do right in one area of life whilst he is occupied in doing wrong in another என்கிற முழுப் பார்வையின் பழக்கத்தை அவர் சோதித்தார்.

மேலும் ஒரு பாடத்தையும் ஆனந்த குமாரசாமி இதில் காந்திவழி வைக்கிறார். அது

Gandhi stated that Live as if were to die tomorrow and Learn as if to live for ever…

7-6-2026

ஜூன் 8

Talkative Man சதாபேசி என்று வைத்துக்கொள்வோமே.. எப்போதும் எவரைப் பார்த்தாலும் வளவள என்று பேசக்கூடிய பாத்திரம். இப்படி ஒரு பாத்திரத்துடன் வழக்கமான மால்குடி ஊரில் , ஆர் கே நாரயண் நாவல் ஒன்றை எழுதியிருக்கிறார்.

ஆர் கே நாரயண் படித்து அவரது சுவாரஸ்யங்களில் மகிழ்ந்தவர்களுக்கு, நான் சொல்வதில் ஏதுமிருக்காது.

இப்போ இளம் குழுவினர் நச நச என பேசுகிறவர்களை எதிர்த்து அரசியல் செய்து தற்காலிக வெற்றியை (தேர்தல் வெற்றி) பெற்றுள்ளனர்.

நம் ‘சதாபேசிக்கு’ நாவல் முழுக்க talkative man சுருக்கமாக TM என்றுதான் பெயர். நாவலின் கடைசியில்தான் அவருக்கு மது என்கிற பெயர் வரும். அதுவும் பால்ய நண்பன் அழைப்பால் தெரிய வரும். ஊர் முழுக்க நின்று பேசுவதுதான் நம் டிஎம்க்கு வாழ்க்கை.

அவரையே அலற விடுவது போல், அவ்வூரே விசித்திரமாகப் பார்க்கும், தன்னை டாக்டர் ரான் என அழைத்துக்கொள்ளும் ‘பல நாடு சுற்றி’ வந்து சேர்கிறார். நம்ம மணியூர் ரங்கன் தான் இப்படி டாக்டர் ரான் ஆகி உலகை எப்படியெல்லாம் நம்ப வைத்து ஏமாற்ற முடியுமோ அப்படி ஆகிறார். ருமேனியனா, ஜெர்மனா, ஹங்கேரியனா என நம் மது டி எம்மே குழம்பி போகும் அளவு டாக்டர் ரானின் தோற்றப் பந்தா, பேச்சு பந்தா .

நமது டாக்டர் ரான் டிம்பக்டோ என்கிற பகுதியிலிருந்து, பெரும் ஆராய்ச்சி நூல் எழுத மால்குடிக்கு வந்ததாக சொல்கிறார். ஆராய்ச்சிக்கு தடையில்லா அமைதியான இடத்தை நம் சதாபேசியிடம் கேட்கிறார். மால்குடி ரயில்வே ஸ்டேஷன் ஊழல் தயவில் மூட்டைப்பூச்சி வாசம் நிறைந்த old ugly retirement room கிடைக்கிறது. எவ்வளவு நாள் அங்கு முடியும்.. வீடு வேட்டையை ரானை அழைத்துக்கொண்டு நம் சதாபேசி செய்து சோர்ந்து போய், தான் தனியாக இருக்கும் வீட்டிலேயே ஓர் அறை தருகிறார். தாளிட்ட அறையில் நம் டிம்பெக்டோ ரான் செய்யும் சேட்டைகளை சதாபேசி துப்பறிந்து விட்டார்.

ஆனால் ஊரில் பெரும் சயிண்டிஸ்ட் எனப் பேர் பரவி, அவர் தன் ஆய்வை பேச டவுன் ஹாலில் கூட்ட ஏற்பாடுகளை ஊர் புள்ளிகள் செய்து விடுகின்றனர்.

நம் ‘சதாபேசி’ துப்பு துலக்கியதில் ரான் பெரும் பெண் பித்தன், ஏமாற்று மோசடிக்காரன் என, அவரைத்தேடி வந்த கன சரீர டெல்லி வாழ் மனைவி வழி அறிகிறான். தன் வீட்டில் தான் ரான் எனச் சொல்ல முடியா சூழல். ரான் மனைவி ஊர் திரும்பி விடுகிறாள்.

சதாபேசிக்கு அன்றாட வேலை , ஊர் சுற்றி விஷயம் சேகரித்து பத்திரிகைக்கு அனுப்புவது. பாவம் சதாபேசி அனுப்புவது எப்பயாவது ஒரு மூலையில் கண்ணுக்கே தெரியாமல் ஒரு பத்தி அளவில் வரும். அப்படி டிம்பெக்டோ ரான் பற்றி எழுதியது தான் அவர் மனைவியை ரயில்வே ஸ்டேஷனுக்கு வரவைத்தது.

ரான், வருகிற 3000 ஆண்டுகளில் பூமி முழுக்க கெட்டுப்போகும். குடிக்க நீர் இருக்காது. எல்லாம் விஷ மயமாகும் என ஆராய்ச்சி செய்து புத்தகம் எழுதுவதாக- futurologist எனச் சொல்லிக்கொள்கிறான்.டவுன்ஹால் கூட்டத்தில் அவன் இதை சொன்னவுடன், அங்கிருந்த பாட்டி அய்யய்யோ என் பேரப்பிள்ளைகள் என்னவாகும் என மயங்கி சாய்கிறார். இப்ப இல்லை பாட்டி, 3000 வருஷம் கழித்து..என சமாதானங்கள் அப்பாட்டியை தேற்றவில்லை. கற்கள் ரான் பக்கம் பறக்க ஆரம்பித்தன. நம் சாதாபேசியே ஓய் தப்பித்து போ என்கிறார்.

இதற்கிடையில் மால்குடி நூலக கிழவர் பேத்தியிடம் ரான் நெருங்குவதை எப்படியாவது தடுக்க வேண்டும் எனச் சொல்லி, டெல்லி மனைவியை நம் சதாபேசி வரவழைக்கிறார்.

கூட்டத்திற்கு வெளியே மனைவி ரானை கடத்தி டெல்லி அழைத்துப் போகிறாள். திடிரென ஒரு நாள் மீண்டும் ரானை காணவில்லை. தேடி அலைந்ததில் டெல்லி நர்ஸ் ஒருவருடன் அவர் வெளிநாடு தப்பிவிட்டார் என தெரிய வந்தது.

இந்த ரான் இப்படி பல பெயர்களில் பல பெண்களுடன் சுற்றியதை , நம் சதாபேசி கண்ட கதைதான் talkative man. நம் சதாபேசிக்கு பேச்சு ஜாஸ்தி என்றாலும் நியாயத்திற்கு பதறக்கூடியவர்தான்.

சற்று இலகுவான, சுவாரஸ்யமான கிண்டல் கேலியுடன் 1940-50 களின் மனிதர்களையும், தெருக்களையும், குணங்களையும், வாழ்க்கை முறையையும், வீட்டின் அமைப்பையும் நாரயண் நாவல்களில் நாம் காணலாம். Humour எளிய நடையில்..

இந்த டாக்கடிவ் மேனை 2016 ஆகஸ்டில் படித்ததாக அந்நூலில் என் குறிப்பு. இப்ப 2026ல் 10 ஆண்டுகள் கழித்து படித்தபோதும் புதிதாக

படிக்கிற சுவாரஸ்யமிருந்தது... எனக்கு எந்த humour clubலும் உறுப்பினர் அனுமதியில்லை என்பது என் ரகசியம்..

8-6-2026

ஜுன் 8

கேரளம் வெள்ளையறிக்கை

Keralam Fiscal Health status report 2026

(36000 crore DA DR arrears pending, considering retirement age from 56 years to 60 years)

கேரளத்தின் நிதி ஆரோக்கியம் குறித்த அறிக்கை ஒன்றை அரசாங்கம் அமைத்தவுடனேயே மாநில முதல் திரு சதீசன் வெளியிட்டுள்ளார். அவரே அம்மாநில நிதி அமைச்சராகவும் இருக்கிறார். அந்த நிதி நிலை வெள்ளை அறிக்கை 195 பக்கங்களில் பல்வேறு அம்சங்களை சுட்டிக்காட்டி செல்கிறது. வேகமாக புரட்டிப் பார்த்ததில் சொல்லத்தோன்றிய சில அம்சங்களை இங்கு எழுதியுள்ளேன்.

நிருவாகம் என்பதும் கடினமான கலையே. பல்வேறு மக்களின் விழைவுகளை நிறைவேற்ற வேண்டிய அழுத்தம் அங்கு எப்போதும் இருக்கும். அவரவர் அதிகாரப் பசி அல்லது பொறுப்புணர்வு நிதானம் சார்ந்து விளைவுகள் தென்படும். நிருவாகம் என்கிற வகையில் இவ்வளவு பிரச்சனைகளா என்ற கோணத்திலும் பார்க்கலாம். இல்லை இல்லை அரசியல் சாதக கோணத்தில் அறிக்கையைப் பார்க்க வேண்டும் என்றும் சொல்லலாம். சில facts சுட்டிக்காட்டப்படும் போது அதை எப்படி உள்வாங்கி புரிந்து கொள்வது என்கிற சவாலான கேள்வியையும் சந்திக்க வேண்டியிருக்கும்.

திரு சதீசன் அவர்கள் முன்வைத்த அறிக்கை , பல உயர் அதிகாரி பெரு மக்களால் தயாரிக்கப்பட்ட ஒன்றுதான். இந்த ஆட்சிக்கேற்ப அவர்கள் தாளகதி முன்வைப்புகள் மாறக்கூடும். இதற்கு முன்னர் இருந்த ஆட்சி எந்த அளவில் நிதி நிலையை வைத்துச் சென்றுள்ளது. இங்கு என்ன நடைமுறை இருந்து வருகிறது- அவை உருவாக்கிய ripple effects எவை போன்றவற்றை எடுத்துச் சொல்வதற்காக இவ்வறிக்கை உருவாக்கப்பட்டுள்ளது.

வருவாய் இனங்கள் என்ன, செலவு என்ன - எங்கே எப்படியாகிறது- மூலதன முதலீடுகள் செய்ய முடிகிறதா, பொதுச்சேவையான கல்வி, சுகாதாரம், மருத்துவம், சாலை, குடிநீர் போன்றவற்றிற்கு என்ன நிலை, அரசாங்க முதலீட்டில் நடைபெறும் பொதுத்துறைகள் எப்படி இருக்கின்றன போன்ற பல அம்சங்களை இவ்வறிக்கை விரிவாகப் பேசியுள்ளது. அறிக்கைக் காட்டும் கணக்கு ஒன்று

salaries (₹39,904 crore), pensions (₹27,885 crore), and

interest payments (₹29,138 crore) - totalled ₹96,927 crore, consuming 77.6 per cent of all revenue receipts. This is projected at 77 per cent in 2025-26 revised estimates.

தமிழகத்தின் முக்கிய அரசியல் ஆர்வலர், இன்னபிற பேச்சாளர்களாவது ஒருமுறை வாசித்து அவரவர் கோணத்தில் இந்த அறிக்கையை புரிந்துகொள்வது நலம். தமிழ்நாட்டு அரசாங்கமும் சட்டமன்றம் கூடும்போது வெள்ளையறிக்கை வைக்கக்கூடும். ஒப்பிட்டு பார்க்க உதவலாம்.

சதீசன் அறிக்கையில் நம்மூர் தொழிலாளர் கவனத்திற்கு வரவேண்டிய சில அம்சங்கள் எனத் தோன்றியதை மட்டுமே இங்கு சொல்ல வந்துள்ளேன். கூடுதலாக அறிய ஆர்வமுள்ளவர் 195 பக்கங்களை வாசித்துக்கொள்ளலாம்.

முதலிலேயே, முந்திய அரசாங்கங்களை விமர்சிக்க இவ்வறிக்கையை கொண்டுவரவில்லை எனச் சொல்லிவிட்டு, வைத்துவிட்டுப் போன லட்சணம் இதுதான் என மறைமுகமாக விமர்சித்துள்ளனர்.

செலவில் எதையாவது தள்ளிப்போடமுடியா என முந்திய அரசாங்கம் கிராக்கிப்படியை தள்ளி நிலுவையாக்கியது . அரசின் committed expenditure என்பது 77 சதமாக உள்ளது. அதாவது ஒவ்வொரு 100 வருவாய்க்கும் 77 ரூ இச்செலவு. ஊழியர் கிராக்கிப்படி நிலுவையாக 21670 கோடி, பென்சனருக்கு நிலுவையாக 14387 கோடியும் வைத்துவிட்டு, சென்ற அரசு செலவை சற்று தள்ளிவைத்துவிட்டு, இந்த அரசிற்கு சுமையை ஏற்றிச் சென்றதாக அறிக்கைச் சொல்கிறது. சென்ற பினராயி அரசாங்கமே தேர்தலுக்கு முன்னரான பட்ஜெட்டில் அடுத்த 4 ஆண்டுகளிலாவது இந்த நிலுவையை தந்துவிடலாம் என்று சொல்லவும் செய்தது.

இப்போது வந்துள்ள சதீசன் அரசாங்கம் வருகிற 4 ஆண்டுகளில்- 8 தவணைகளில் இந்த மொத்த கிராக்கிப்படி நிலுவையான ஏறத்தாழ 36000 கோடியை தர ஏற்பை தெரிவித்துள்ளது. அங்குள்ள பென்சனர் மற்றும் ஊழியர் இன்னும் 48 மாதங்களில் தான் தேங்கிப்போன இந்த நிலுவையை பெற இயலும். அவ்வப்போது என, தவணைகளில் பெற முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது.

அறிக்கைச் சொல்வது

The largest component - DA and DR arrears of ₹36,057 crore owed to serving employees, teachers, and pensioners - will be settled in eight instalments over four

years under a commitment formalised through G.O.(P) No.44/2026/FIN dated 06 March 2026.

காண்ட்ராக்டர் நிலுவை, எஸ்சி எஸ்டி திட்டச் செலவு நிலுவைகளை உடனடியாக ஏற்று கொடுத்துவிடுவது என முடிவெடுத்துள்ளனர்.

வட்டிக்காக பிற மாநிலங்களைவிட அதிகமாக தாங்கள் செலவு செய்வதாக அறிக்கைச் சொல்கிறது

Kerala's interest burden has risen from 16.1 per cent of revenue receipts in 2015-16 to 20.9 percent in 2025-26 - an increase of 4.8 percentage points - while the major states average has remained in the range of 11 to 12 per cent for most of the years.

அடுத்து முக்கியமான ஒன்று பொதுத்துறைகள் பற்றிய விரிவான ஆய்வை இவ்வறிக்கை தனி இயலாக வைத்துள்ளதைச் சொல்லலாம். இந்தியாவிலேயே மிக அதிகமாக, 132 மாநில பொதுத்துறைகளை கேரளம் வைத்துள்ளது. பினராயி காலத்தில் மிக அதிகமாக முதலீடுகள் அங்கு சென்றதையும் அறிக்கை குறிப்பிடுகிறது. 2021ல் ₹ 31,571 கோடி - ₹ 78,851 கோடியாக 2025ல் உயர்ந்ததைக் காண்கிறோம். ஆனால் தொடர் நட்டம் என்பது பிரச்சனையாகவுள்ளது. போக்குவரத்து, வாட்டர் போர்டு, மின்சாரம் என முக்கிய துறைகள் பல ஆண்டுகளாக நட்டத்தில்..

அரசாங்கத்தின் இவ்வறிக்கை வேறு ஒன்றையும் சுட்டிக்காட்டுகிறது. கடந்த 10 ஆண்டுகளில் ஊதிய பில் குறைந்து கொண்டே வந்தாலும், ஓய்வூதிய பில் கூடிக்கொண்டே போகிறது. கேரளாவில் அரசாங்க ஊழியர்க்கு ஓய்வு வயது 56. இதை 60 ஆக்க வேண்டும் என கோரிக்கைகள் இல்லாமல் இல்லை. இப்போது அப்படி ஒன்றை செய்யலாமா என்கிற சிந்தனையை இவ்வறிக்கை வெளிப்படுத்துகிறது. இதனால் ஓய்வூதியச் செலவு 4 ஆண்டுகளுக்காகவது கூடாமல் இருக்கலாம் என சதீசன் அரசாங்கம் கருதுவதாக தெரிகிறது. வேலை கொடுப்பது என்கிற பிரச்சனையை வேறு வழிகளில் தீர்க்கப்பார்க்கலாம் என யோசிக்கிறார்கள்.

அடுத்து அவ்வறிக்கை தனியார் முதலீடுகளை பெருமளவு ஊக்கப்படுத்துவது என்கிற திசையிலும் சிந்திக்கிறது.

இவ்வறிக்கை ஏற்றுள்ள சில புரிதல்களை என் வாசிப்புக்கேற்ப தந்துள்ளேன். அவரவர் அனுபவத்தின்படி வாசிப்புகள் மாறலாம்.

The committed expenditure burden and the capital expenditure deficit are not separate problems; they are two sides of the same fiscal constraint.

The true test of a government's finances is not what the budget says, but

what the treasury can actually pay - and when

A government whose committed expenditure consumes 77 paise in every

rupee of revenue will inevitably face chronic cash stress

A government that has run a revenue deficit in every single year - borrowing for current consumption throughout - will inevitably accumulate a debt burden that compounds its interest obligations in each subsequent year.

The fiscal impact of the operations of the PSEs is large and cannot be

ignored.

In view of the acute shortage of resources at the state level on account of high costs of administration, inadequate revenue and heavy debt burden, the State must create conditions for heavy private sector investments, a greater role for the co-operative sector to invest in development and job creation and make room for heavy investment by the Central public sector.

the State will save retirement benefits of about ₹ 6000 crore with each

increase in the age of retirement by one year. Another related suggestion

is to have pay commissions only once in ten years as in the Central

government.

Higher education can be the next hub of Kerala's growth story and we have to provide easy access to private universities, including foreign universities. Some of the estates now lying defunct and unused buildings can be deployed for setting up educational institutions

The heart of government is the Secretariat. Quick movement of files within the Secretariat is essential.

Reform is a continuous process. Liberalisation, which commenced in real

earnest in India in 1991, is still ongoing. This status paper is intended to generate new thinking, which, in turn, will bring a stream of reforms in its wake to build a new Keralam.

8-6-2026

June 9

75th Year of 1951 Programme of CPI

மக்கள் ஜனநாயக அரசாங்கம் என்ற பெருங்கனவின் 75 ஆண்டுகள்

விடுதலை இந்தியாவில் அப்போது பெற்ற பல்வேறு அனுபவங்களை ஒன்றாகத் திரட்டி , தங்கள் கட்சியின் திட்டம் ஒன்றை கல்கத்தா மாநாட்டில் சிபிஅய் தோழர்கள் நிறைவேற்றியிருந்தனர். 1951 திட்டம் என ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சி வரலாற்றில் இன்றளவும் பேசப்படும் முக்கிய மைல்கல் என அந்த ஆவணத்தை மதிப்பிடமுடியும்.

1948 பி டி ஆர் (லைன்) திசையிலிருந்து மாறுபட்டு புதிய பார்வைகளை ஏற்றுக்கொண்டாலும், முற்றிலும் விடுபடா எண்ண ஓட்டங்களையும் அந்த ஆவணம் பிரதிபலித்தது. 2026 அந்த ஆவணத்தின் 75 ஆம் ஆண்டு என்கிற பார்வையில், அது குறித்து கொஞ்சம் சொல்லப் பார்க்கிறேன். நேரு அரசாங்கத்தை நீக்கிவிட்டு- அதாவது முதலாளித்துவ நிலபிரபுத்துவ சமஸ்தானவாதிகளின் அரசாங்கத்தை நீக்கி- மக்கள் ஜனநாயக அரசாங்கம் என்ற திட்டத்தையும், கடமைகளையும் அன்று வைத்தனர். அக்கனவின் 75 ஆம் ஆண்டு இவ்வாண்டு.

காலவோட்டத்தில் மாறிவரும் அரசியல் சூழலுக்கேற்ப கருத்தோட்டமும் மாறி வருதல் இயல்பு என்பதையும் சேர்த்தே புரிந்து இந்த 1951 திட்டத்தை அணுக வேண்டும்.

சிபிஅய், சிபிஎம் என 1964ல் பிளவு ஏற்பட்ட சூழலில், இரு கட்சிகளும் தங்கள் வரலாற்று ஆவணங்களை தொகுத்துக் கொணரும் முயற்சியில் ஈடுபட்டனர். சிபிஅய்யின் வால்யூம் 8 என்பது 1951-56 கால முக்கிய ஆவணத்தொகுப்பாக வந்தது. சிபிஎம் வால்யூம் 6ல் 1949-51 கால ஆவணங்களையும், வால்யூம் 7ல் 1952-56 ஆவணங்களையும் பிரித்து இரு வால்யூம்களாக கொணர்ந்தனர். சிபிஅய் 1951-56யை 680 பக்கத்தில் (பிடிஎஃப்) கொணர்ந்தனர். சிபிஎம் இரு வால்யூம்களில் 1949-56 காலத்தை 1700 பக்கங்களுக்கு மேல் கொணர்ந்தனர். சிபிஅய் வால்யூமில் 16-33 பக்கங்களில் (பிடிஎஃப்) இந்த அறிக்கையை ஆர்வமுள்ளோர் படித்தறியலாம். சிபிஎம் வால்யூம் 6ல் 1949-51ல் பக் 577-592 ல் படிக்கலாம்.

இனி சாரம்சமாக என வாசிப்பில் பட்டவற்றை இந்த திட்ட ஆவணத்திலிருந்து கொஞ்சம் சொல்லப்பார்க்கிறேன்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சி முடிவுற்று, இந்தியா முழு சுதந்திர விடுதலை ஆட்சி பெற்றதாக மக்கள் நம்ப வைக்கப்பட்டுள்ளனர் என்ற

பார்வை இதில் சொல்லப்பட்டது. (the people were led to believe that the foreign imperialist rule was at an end, that India had achieved complete independence and freedom...)

நேருவின் 4 ஆண்டுகால ஆட்சி (1947-51யை) மக்களின் நம்பிக்கையை அனைத்து அம்சங்களிலும் கீழே போட்டுவிட்டது என்ற மதிப்பீட்டைக் காணலாம்.

மக்கள் தங்கள் அனுபவங்களால் இந்த பிரிட்டிஷை நம்பி இருக்கும், சமஸ்தானாதிபதிகள்- நிலபிரபுக்கள், நிதி திமிங்கல ஆட்சியை அவசியம் மாற்ற வேண்டும் என உணர ஆரம்பித்துவிட்டனர் என்கிற கணிப்பு இருந்தது

குடி அரசு என சொல்லிவிட்டு பிரிட்டிஷ் தொடர்புகளும் இருப்பதை, இந்தியை தேசிய மொழி எனச் சொல்வதை இந் த ஆவணம் விமர்சித்தது.

வயது வந்தோர் வாக்குரிமை இருக்கிறது என்பதாலேயே- தேர்தல் மூலமாகவே பூர்ஷ்வா நிலபிரபுத்துவ ஆட்சியை மாற்றிவிட முடியாது (பாரா 16ல்). பாரா 17ல் அரசமைப்பு சட்டம் மக்களுக்கு எவ்வித உரிமையையும் உத்தரவாதப்படுத்தவில்லை. வேலைநிறுத்த அடிப்படை உரிமையில்லை, வாழ்வூதியம் இல்லை. மாறாக நிலப்பிரபுக்கள், சமஸ்தான இளவரசர் உரிமைகளை அரசமைப்பு சட்டம் காக்கிறது என்ற மதிப்பீடு இருந்தது. இந்த ஆவணத்தில் பாரா 17 இந்த வரிகளுடன் முடிந்திருக்கும்

"The Constitution is not and cannot be called a truly democratic constitution but is a constitution of a landlord capitalist state, tied to foreign imperialist interests- mainly British."

மக்களுக்கு நடைமுறையில் சாத்தியமான , செய்யப்பட வேண்டிய முக்கிய கடமைகளை இத்திட்டம் முன் வைத்தது.

இன்றுள்ள நாட்டின் வளர்ச்சி சூழலில் கட்சி சோசலிச நிர்மாணம் என்பதை முன்வைக்கவில்லை (Communist Party is not demanding the establishment of Socialism in our country in the present stage of development)- இந்த அரசாங்கத்தை நீக்கி, மக்கள் ஜனநாயக அரசாங்கத்தைக் கொணர்வது என்பதை கட்சி முன் வைத்தது (replacing the present anti democratic and anti popular government by a new government of People's democracy created on the basis of a coalition of all democratic anti feudal and anti imperialist forces)

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சுப்ரீம் அதிகாரம். அவர்களை திரும்ப அழைக்கும் அதிகாரம் மக்களுக்கு இருக்கும்.

குடியரசு தலைவரின் உரிமைகள் வரம்புக்குள் இருக்கும். அவரை சட்ட அவைதான் தேர்ந்தெடுக்கும் (The President shall be elected by the legislature)

18 வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை. அசெம்பிளிகளில் கட்சிகளுக்கு விகிதாச்சார பிரதிநிதித்துவம்.

தல ஆட்சிக்கு அதிகாரம். மேலிருந்து அமர்த்தப்படும் கவர்னர், மாஜிஸ்ட்ரேட், கமிஷனர் போன்றவை ஒழிக்கப்படும்.

மதம், பேச்சு, எழுத்து , பத்திரிகை , தொழில், வசிப்பிட உரிமைகள் சொல்லப்பட்டிருக்கும்

பெண்களுக்கு எதிரான அனைத்து சமூக பலவீனங்களும் ஒழிக்கப்படும். சொத்துரிமை, மண உரிமை, வேலை, மண முறிவு என அனைத்திலும் ஆண்களுக்கு இணையான சம உரிமை

சாதி ஒடுக்குமுறைகள், மேல் சாதி -கீழ் சாதி என வேறுபாடுகள் ஒழிக்கப்படும். செட்யூல்ட் சாதியினர்க்கு மதம், வழக்கம், மரபு என்கிற பெயரில் செய்யப்படும் தடைகள் ஒழிக்கப்படும்.

சிறுபான்மையினர் மத சுதந்திரம் உறுதி செய்யப்படும்.

மாநிலங்களின் சுய நிர்ணய உரிமை. அனைவரின் ஏற்புடன் இந்திய ஒற்றுமை கட்டப்படும். மொழிவாரியாக மாநிலங்கள் சீரமைக்கப்படும். சமஸ்தானங்கள் மாநிலங்களுடன் இணைக்கப்படும். மாநிலங்களில் தாய்மொழி வழியில் நிர்வாகம். இந்தி கட்டாயமாக்கப்படாது.

14 வயதுவரை கட்டாய இலவச கல்வி

மக்கள் மருத்துவ சேவைகள் ஏற்படுத்துதல் உறுதியாக்கப்படும்

விவசாயி, விவசாயத் தொழிலாளர்க்கு நில விநியோகம். நிலபிரபுத்துவம் ஒழிக்கப்படும். விவ்சாயத் தொழிலாளர்க்கு மேம்பட்ட ஊதியம் வாழ்நிலை. கந்து வட்டி ரத்தாகும்.

planned economy, laws to protect national industires,

தொழிலாளர்க்கு 8 hrs work- 44 hrs a week, for mine workers 6 hrs a day, living wage, Tu recognition, Industrial courts, right to strike போன்றவை சொல்லப்பட்டது.

பிரிட்டனின் ஆதிக்கத்தை தடுத்தல், அவர்களது முதலீடுகளை பறிமுதல் செய்தல், தேச உடைமையாக்குதல், காமன்வெல்த்திலிருந்து வெளியேறி உண்மையான சுதந்திரத்தை நிலைநாட்டல், சமாதானம் போரற்ற சூழலுக்கு உகந்த வெளிநாட்டுக்கொள்கை பேசப்பட்டது.

திட்டத்தை மக்கள் அமுலாக்க முன்வர வேண்டுகோளும் நம்பிக்கையும் தெரிவிக்கப்பட்டது. மார்க்சிய லெனினிய வழிகாட்டல் சொல்லப்பட்டது.

The people of India led by its working class and CPI, guided by the teachings of Marx, Engels,Lenin and Stalin firmly allied with the million headed peasantry of our land will achive this programme என அப்போது எழுதிக்கொண்டதைக் காணலாம்.

Statement of Policy of the CPI என்ற ஆவணமும் இந்த திட்டத்தை சுட்டிக்காட்டி 1951ல் ஏற்கப்பட்டது.

இந் த 75 ஆண்டுகளின் புரிதலில் சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கவே செய்யும். இந்திய விடுதலை, அரசமைப்பு குறித்த பார்வைகள் தேர்தல் அரசியல் சூழலில் உகந்த வகையில் பார்வை மாற்றத்தைக் கொடுத்திருக்கக்கூடும். மக்கள் ஜனநாயக அரசின் செயல் திட்டம் என்கிற வகையில் 1951ல் சொல்லப்பட்டவை- உழைக்கின்ற கோடானுகோடி இந்தியர்க்கான அமைதியான ஆரோக்கியமான மேம்பட்ட நல்வாழ்க்கை கனவு என்றே சொல்லமுடியும். அவை அனைத்தும் நம் மக்களுக்கு வசப்பட வேண்டிய தேவைகள் இன்னும் இருக்கிறது. அந்த வகையில் 1951லேயே மேம்பட்ட இலட்சிய கனவுடன் இத்திட்டம் எழுதப்பட்டதாக புரிந்து கொள்ளலாம்.

9-6-2026

june 10

காங்கிரஸ் கட்சியின் ஆய்வுப் பிரிவு முக்கிய ஆவணம் ஒன்றை, பிரதமர் திரு மோடி அவர்களின் 12 ஆண்டுகள் கொண்டாட்ட சூழலில் வெளியிட்டுள்ளது. திரு மோடியின் சர்க்கார் பாராட்டிக்கொள்ளும் வளர்ச்சி குறித்த உரிமைகள் உண்மையில் எவ்வாறுள்ளன என்பதை promises vs reality என்கிற ஆவணமாக காங்கிரஸ் ரிசர்ச் விங் வெளியிட்டுள்ளது. அதில் சொல்லப்பட்டதிலிருந்து சில அம்சங்கள் ..விவரமாக அறிந்திட 90 பக்க ஆவணத்தை ஆர்வமுள்ளவர் பார்க்கலாம்.

இந்தியா 4 வது பெரிய பொருளாதாரம் என்பதிலிருந்து சரிந்து 6வது என்ற நிலைக்கு 2026ல் போயுள்ளது.

ரூபாயின் மதிப்பு டாலரில் ஒப்பிட்டால் படு வீழ்ச்சி பெற்றது

குடும்பங்களின் கடன் சூழல் அதிகரித்து ஜி டி பியில் 41 சதமாகியுள்ளது. அசமத்துவ வாழ்க்கைமுறை கூடிவிட்டது

இந்தியா dependable investment destination என்பது கேள்விக்குறியாகி, கடந்த 5 மாதங்களில் மட்டும் 2.1 லட்சம் கோடி முதலீடுகள் வெளியேறிவிட்டன. balance of payments நெருக்கடி நோக்கி இந்திய..

மார்ச் 2026ன் படி வேலைவாய்ப்பற்ற இளம் குழுவினர் 15 சதமாகவும், இதுவே நகர்ப்புறங்களில் 18 சதத்திற்கு மேலும் என்கிற நெருக்கடி. 40 சத பட்டதாரிகளின் வேலையின்மை என்கிற நிலை. ஆண்டிற்கு 7 சத பட்டதாரிகளால் மட்டுமே நிரந்தர வேலை மாத சம்பள வேலைக்கு போக முடிகிறது.

மகாத்மா ஊரக வேலை வாய்ப்பில் மனிதநாட்கள் 21.5 சதம் 25-26ல் வீழ்ச்சி. குடும்பங்கள்43-50 நாட்கள் இழப்பு. பதிவு செய்யப்பட்ட 15.46 கோடியில் 1.5 சதத்தினர் கூட முழுமையாக 100 நாட்களை பெற முடியவில்லை.

பெண்கள் வேலை வாய்ப்பிலும் நெருக்கடி. குளோபல் பாலின இடைவெளி அறிக்கைப்படி நாம் 131 ஆம் இடத்திற்கு இறங்கியுள்ளோம்.

மேற்காசிய நெருக்கடியில் நாம் energy sovereignty யை இழந்து விட்டோம். சீனாவுடன் வர்த்தக பற்றாக்குறை மிக அதிகமாகியுள்ளது.The claim of strategic autonomy has also weakened under US tariff pressure. அமெரிக்காவால் இந்தியா உதாசீனப்படுத்தப்படுகிறதா என்ற கேள்வி?

Indian deportees faced humiliating treatment in the US, while H-1B restrictions hurt Indian professionals and students.

India's visible tilt towards the U.S.-Israel axis weakened its traditional foreign policy balance across the globe.

Pakistan played the mediating role in the temporary U.S.-Iran ceasefire and India's role was limited to welcoming the ceasefire and calling for lasting peace.

அண்டை நாடுகளுடன் உறவும் சீராக இல்லை. Neighbourhood First increasingly became "Neighbourhood Lost".

வனப் பாதுகாப்பு என்பதில் கவனம் குறைந்துள்ளது.India lost around 2.19 lakh hectares of primary forest between 2014 and 2025. Over 1.73 lakh hectares of forest land were diverted for non-forest use between 2014-15

and 2023-24

காலநிலை மாற்றம் லட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தை பாதித்துள்ளது. இதன் விளைவாக 3.2 கோடி மக்கள் இடம் பெயர்ந்து அல்லாடுகின்றனர் (Around 3.2 crore people were displaced in India due to climate-related disasters between 2015 and 2024)

உர உற்பத்தி 24.6 சதம் வீழ்ந்துள்ளது. டி ஏ பி டன் ரூ 59000, 69000 என உயர்ந்து போர்ச் சூழலில் 89000 என..சல்பர் 86400, அம்மோனியா இரு மடங்காகி 86000 வரை உயர்ந்துள்ளது.

விவசாயிகள் சாவு மொத்த தற்கொலையில் 6 சதத்திற்கு மேலாகியுள்ளது. விவசாயிகளின் கடனோ 33.5 லட்சம் கோடி. சராசரி நில அளவோ 1.08 ஹெக்டாரிலிருந் து 0.74 ஹெக்டாரான வீழ்ச்சி.

• Average daily agricultural wage in April 2024-25 was Rs 414 for men and Rs 329 for women.

• Only 9.1% of agricultural households owned a tractor, 2.3% power tillers, 0.5% harvesters, 4.6% sprinkler irrigation and 3.9% drip irrigation.

• In 2024 alone, 10,546 farming sector workers died by suicide, including 4,633 farmers/cultivators and 5,913 agricultural labourers.

Only about 13% of operational landholdings are in women's names, limiting women farmers' access to MSP procurement.

MSME closures have risen steadily YoY, skyrocketing from 6,222 in FY22, to a peak of 37,467 in FY25 Out of the 1,337 stations identified for development, under Amrit Bharat Station Scheme, only 172 stations have been completed so far.

• Indian Railways operates on nearly 68,000 route km, while Kavach 4.0 coverage had crossed only around 1,300 route km by early 2026.

The Adani enterprise is currently operating and managing 8 airports across the country, making it the country's largest private air operator managing approximately 23% of India's air traffic.

More than 20% of India's ports capacity is controlled by the Adani Group, second only to the Government of India.

Though 10,000 e-buses were sanctioned across 116 cities, none had been operationalised as of December 2025

கடந் த 10 ஆண்டுகளில் நீட் தேர்வுகளில் 89 முறை தேர்வுத்தாள் கசிவுகள் நடந்துள்ளன. கல்விக்கு பட்ஜெட்டில் 2.9 சதம் மட்டுமே ஒத்துக்கீடு. பல்கலைகளில் 29 சத ஆசிரியர் இடங்கள் காலியாக உள்ளன.

பட்டினி குறியீட்டில் 123 நாடுகளில் 102 என்கிற மோசமான நிலை. சீரியஸ் ஹங்கர் காடகரி நாடாகியுள்ளது என்கின்றனர்.

placing it in the "serious" hunger category.

India ranks 110th out of 165 countries on Human Freedom Index 2025

Cybercrimes rose by 17.9% in 2024 according to the National Crime Records Bureau.

4,48,211 crimes against women were recorded in 2023 - the highest in a decade- Crimes against Scheduled Tribes surged 28.8% in 2023. 57,789 cases of crimes against SCs were reported, with the highest number of cases recorded in Uttar Pradesh (26%) recording the highest followed by Rajasthan (14.6%) followed by Madhya Pradesh (14%) and Bihar (12%)

நீளம் கருதி நிறுத்துகிறேன். ஆர்வமுள்ளவர் காங்கிரசின் இந்த ஆவணத்தை பார்த்து கூடுதலாக அறிந்து கொள்ளலாம்.

10-6-2026

june 11 The Dilemma of an Indian Liberal

குருசரண் தாஸ் மூத்த எழுத்தாளர். கார்ப்பரேட் பின்னணியிலிருந்து , இந்திய வர்த்தகத்தை, வளர்ச்சியை, கலாச்சார அம்சங்களை, இந்திய லிபரல் அரசியல் சாயல்களை எழுதி வரக்கூடிய மூத்தவர்.

@குருசரணின் நூல்களை வாங்கி வா என்றபோது, நிர்மல் 'குருசரண் பாக்ஸ்' ஒன்றை வாங்கி சில ஆண்டுகளுக்கு முன்னர் அனுப்பியிருந்தார். குருசரணின் India Unbound, Elephant Paradigm, The Difficulty of Being Good உட்பட பல நூல்கள் பேசப்பட்டவை.

@2024ல் வந்த அவரின் சுவையான நூல் The Dilemma of an Indian Liberal. இந்நூல் லிபரல் அரசியல் குறித்த விவாதத்துடன், குருசரணின் சொந்த வாழ்க்கை கட்ட துக்கடாக்களின், அதேநேரத்தில் மிக முக்கிய அனுபவ சாலைகளின் குறுக்குவெட்டு காட்சிகளும் நிறைந்த நூல்.

பிரிட்டிஷ் இந்தியப் பிரிவினைகளின் கதைகளும் காட்சிகளும் இன்னும் பல pathetic historyக்களுக்கான களமாகவே இருந்து வருகிறது. இடம் பெயர்ந்தோர் இருக்கும்வரை , அவர்கள் கண்ணார கண்ட துயர்கள் சொல்லப்பட்டுக்கொண்டேயிருக்கும். பின்னரும் கூட from the annals என அவரவர் கோணத்தில் இண்டு இடுக்குகளில் வெளிச்சம் காட்டப்பட்ட வரலாறாக வந்து கொண்டேயிருக்கும்.

@குருசரண் , பாவப்பட்டவர்களின் கதையை கேட்பீர் என வரலாறு எழுதவில்லை. அவர் குழந்தையாக இருந்தபோது, லாகூரிலிருந்து புறப்பட்ட குடும்பம், இந்திய பஞ்சாப் பகுதியில், டெல்லியில் கல்வி, அமெரிக்காவில் கல்வி எனச் சென்று விடுகிறார். இந்நூலில் Making of an Indian Liberal என்பது தான் மய்ய இயல். இந்நூலில் ஆன்மா. சொந்த அனுபவங்களின் வழியிலான கற்கைகள். அந்த இயல்தான் பெரிய இயலும் கூட. அதில் ஆகஸ்ட் 15, 1947 முதல், ஜன 2024 கால இடைவெளியில் அவரின் வாழ்க்கைப் பாதையின்- இந்திய அரசியல் பொருளாதார சமூக வரலாற்றுப் பாதையும் கூட- 28 மைல் கற்கள் வழி குருசரண் வாசகனை அழைத்துச் செல்கிறார். அவரின் மைல்கற்கள் மட்டுமல்ல, இந்திய லிபரல் அரசியலின் அல்லாடல்களும் நம் கண் முன் நிறுத்தப்படுவதை உணரலாம்.

முதல் mile stoneல் சிறுவன் குருசரண் பெற்றதாக பின்னர் உணர்ந்த பாடம்

To live in a free republic means that I will decide who,is to rule over me, and this is the moral basis of a liberal state

கல்லூரி காலத்தில் புகழ் வாய்ந்த ஜான் ராவ்ஸின் மாணவன். Theory of Justice நினைவிற்கு வருமல்லவா? பின்னர் விக்ஸ் வேப்ரப் கம்பெனியில் வேலை- உயர்ந்து பிராக்டர் அண்ட் காம்பிள் தலைமை அதிகாரி. நேருவின் லைசன்ஸ் ராஜ் பாதிப்பு, சோவியத் அனுபவம், சோவியத் வீழ்ச்சி, நரசிம்மராவ் மன்மோகன் தாராளமயம்- இந்தியாவின் growth story என பல்வேறு அம்சங்களை இந்நூல் தொட்டுச் செல்கிறது.

@குருசரணின் எளிய வளமான எழுத்து வசீகரிக்கும். அவரின் கருத்தாக்கங்களை ஒருவர் ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம். அது அவரவர் வாழ்க்கை மைல்ஸ்டோன்களின் அனுபவம் சார்ந்து அமையக்கூடும்.

இந்நூல் 205 பக்கங்களில் 7 இயல்களாக பின்னப்பட்டிருக்கும். மேலே மைல்ஸ்டோன் இயல் என்பது 5வது இயல். இந்நூலின் வரிசை

What is liberal?

A short history of modern idea

The Indian temper is liberal

The modern idea comes to India

The making of an Indian Liberal- 28 milestones

Liberalism’s shortcomings

The Dilemma of an Indian Liberal

எனச் செல்லும். சிறிய முன்னுரையும் இருக்கிறது.

முன்னுரையில் குருசரண் எழுப்பிக்கொள்ளும் கேள்விகள்

How to deal with a conflict between the liberal value of free speech and maintaining harmony in society?

How does a liberal deal with rising illiberalism?

Why liberalism failed? Is liberalism dead?

வேறு ஒரு இந்நூல் செல்திசை குறித்த கேள்வியையும் அவர் எழுப்பி பதிலை சொல்கிறார்.

Why my story?

Because I believe that one person’s journey through life, honestly narrated, is the true data of history.

During my journey I encountered many knotty dilemmas, and several of these are still unresolved. Wrestling with them has gone into the making of an Indian Liberal…..the sad truth is that the liberal is on a lonely road

இந்நூலில் லிபரல் குறித்த சித்தாந்த கோட்பாட்டு தேடல்களை பார்க்க முடியாது. பிரிவினையின் போது இடம் பெயர்ந்து விடுதலை இந்தியாவில் பாலகனாக வந்த மனிதனின் சமூக, பொருளாதார, அரசியல் இருப்பு போராட்டத்தின் ஊடே ஒரு புறம் சோசலிச நம்பிக்கையாளனாக புறப்பட்டு, கார்ப்பரேட் கலாச்சார பின்னணியில் அன்றைய அரசியல் சூழலில் போராடி, பின்னர் லிபரல் சாய்வு நெறிகளில் வளர்ந்த மனிதனின், இந்திய அரசியலின் கதை எனலாம்.

@பார்க்கலாம்...வேறு ஏதாவது இந்த லிபரல் மனிதரின் நூல் குறித்து சொல்ல முடிகிறதா என...

11-6-2026

june 13

Lest forget the basics

In any organisation, the duty of leaders is to boost the confidence of their members , achieving the demands that they have been striving. Sometimes reality may tell other tales also. One can understand and appreciate the desire to get something and the hard work of any organisation.

In the case of pension revision , specially the case of bsnl IDA pensioners, let us not miss some basic facts that stand all along. It does not mean, new light should not be thrown and new interpretation need not be given.

The basics with realities are ..

Pension is fixed on the basis of Pay- Pay scales of an employee on retiring (mostly from govt) service

Govt employees getting their pay revision through CPCs and Govt pensioners, because of TOR are also getting pension revision.

On a particular cut off date(date of effect), if two types of pensioners are there, there may be distinctions, one the post pensioners getting pay revision and thereby pension updation as per new scales- and the pre pensioners either as per some multiples (6th CPC,7 th CPC) or as per notional pay (7th CPC) getting their pension revised.

In CG pensioners case , no pension revision till this date without pay revision. Pension revision is done suiting with the new pay scales . Some connectivity is given with the new pay scales, like change in minimum pension, linking with the minimum of the respective pay scales or even notional pay fixation.

In the case of 8 th CPC, till this date we find no TOR for revision of pension to the CG pensioners. It seems that no one is giving importance in seeking amendment in the TOR for the inclusion of pension revision to the existing pensioners, retired Upto 31-12-2025. That is going to be a tough struggle in the coming days. Even in the recently concluded NJCM, in its minutes, One can find no mention of this ‘Pension revision’ to the existing pensioners.

In the case of bsnl absorbed pensioners, their case is different. They got their Pay revision (placing them in IDA road)on 1-10-2000, without waiting for 6 th CPC in 2006 , even after availing 5 th CPC on 1996. Within 4 years, again change of pay scales in IDA pattern from the CDA. No pensioners retired Upto 30-9-2000 inCDA got any pension revision as on 1-10-2000 and nobody raised that demand also. The distinction was reflected on that cut off date between CDA erstwhile pensioners and the absorbed new IDA pensioners. Nakara case spirit did not help here to compare these CDA and IDA pensioners , just because a change in pay scales happened on 1-10-2000.

The newly created 37 A rule was the best available route on that day for the lakhs of pensioners to give option for absorption to bsnl. The sub rule 8 is not a special rule

framed for BSNL alone like some special sub rules exempting bsnl absorbed employees. That 8 is common to any one absorbed from any department to any PSU on or after 1-10-2000.

Moreover that common sub rule 8 is assuring govt formula to not only bsnl absorbed getting pension from budgetary consolidated fund of India, but also to those who may get from any 'pension fund' of the PSU also. The formula is regarding benefits on retirement, nothing connected after retirement. Pension fixation 50 % of pay, qualifying service, gratuity ceiling, commutation- these are all the contents in that formula. All these are implemented as per rule 8 in the bsnl by extending the CPC recommendations to the absorbed employees retiring, note employees retiring from bsnl not already retired.

Our case is combined service pension case, which one is different from pro rata pension case of different PSUs where absorption held and optees there with pro rata . CPC recommendations for this Pro rata is confused and wrongly interpreted either by volition or out of ignorance , in bsnl IDA case.

BSNL absorbed employees on retirement getting their pension fixed as per their IDA pay scales , in accordance with the govt formula. During 2007 their pay revision was done as per 2nd PRC. After some struggle and demands , the pension revision was done to all pre 2007 IDA pensioners suiting the revision with the 2nd PRC scales. The age related pension enhancement was incorporated in this revision.

Employees are struggling and waiting , as affordability condition is there, for the implementation of 3 rd PRC.

Meanwhile some associations had gone to Delhi PBCAT and got a favourable direction for pension revision, analogous to 7th CPC. This direction is now contested by DOT at Delhi HC. After hectic arguments, the judgement is reserved now. Lakhs of absorbed pensioners are eagerly waiting to see the judgement early, and one can understand their expectations. I do not know how the Delhi bench is going to decide the case.

GOI on seeing 'hell a lot of court cases' , due to the new 12-5-2017 OM option methodology of 7 th CPC- wiping out distinctions in pay fixation of employees and pension revision of pensioners (even 7 th CPC has that distinction by 4-8-2016 OM) , brought FA 2025 and thereby got a power through an Act to distinguish the pensioners retiring from govt service .

It is incorrect to quote FA 2025 by GOI to the cases of bsnl IDA pensioners , after defining who is a pensioner as per this ACT in 148 a. As per this 148 a, only those retiring from govt service is the pensioner. Just because of bsnl IDA pensioners are getting pension from consolidated fund, that is not the sufficient condition to bring them also in the ambit of FA 2025.

Even otherwise GOI is all along have been doing this distinction amongst pensioners, amongst CG pensioners, amongst CG - bsnl pensioners, in pay revision - pension revision. In the case of bsnl pension for a different , distinction of pay scales and different date of implementation as per PRC not of CPC.

I am not here to place any of my judgement and I cannot also, as I know my limitation as a pensioner. I just placed the facts to lessen , if any disappointment , perhaps on its way. Nobody , neither the associations nor the GOI, may stop this legal battle whatever may the judgement .

BSNL pensioners learned the art of waiting and with all smile ready to fill the kitty's of advocates. Best wishes..

08 hrs 13-6-2026

june 15

கே பி ஜெயஸ்வாலின் Hindu Polity, பண்டைய இந்திய வரலாறு குறித்த ஆய்வு நூட்களில் குறிப்பிடத் தகுந்த ஒன்று.

காசி விஸ்வநாத் ஜெயஸ்வால் , நவம்பர் 1881ல் பிறந்து 56 வயது நிறைவிற்கு முன்னரே, பீகாரில் வாழ்ந்து ஆகஸ்ட் 1937ல் மறைந்தவர். வியாபார குடும்பம் என்பதால், லண்டன் சென்று கல்வி பெற வாய்ப்பு. பாரிஸ்டர் ஆனவர். பாரிஸ்டர் தொழிலில் கல்கத்தா, பாட்னாவில் புகழ் பெற முடிந்தது. பேராசிரியப் பணியும் செய்தவர்.

நீதிமன்ற வளாகத்தைவிட, இந்தியாவின் வரலாற்று தொன்மை குறித்த ஆய்வுகளிலேயே ஜெயஸ்வால் நாட்டம் சென்றது. தீரா தாகத்தின் துரத்தலால் , பிரிட்டிஷ் இந்தியா காலத்தில்- மேற்கின் scholarship க்கு பெரும் புலமை சவாலாக தன்னை ஜெயஸ்வாலால் நிலை நிறுத்துக்கொள்ள முடிந்தது. அவரின் ஓயா உழைப்பால் நாணயங்கள் குறித்த ஆய்வுக் கட்டுரைகள், தொல்லியல் தேடல் குறிப்புகள், இந்து சட்ட முறைகள்- அரசியல் ஆட்சி அதிகார முறைகள் குறித்து நூல்கள் கிடைத்தன.

1912-13ல் அரும்பிய Hindu Polity குறித்த கட்டுரைகள் விரிவாகி 600 பக்க அளவில் நூலாக 1924ல் வந்தது. அந்நூல் அன்றைய விடுதலை தலைவர்கள் பலராலும் விதந்து பேசப்பட்டது. குறிப்பாக லாலாஜியுடன் மிக நெருக்கமாக ஜெயஸ்வாலை சேர்த்தது. முன்னரே கூட ஜெயஸ்வாலின் இந்திய ancient history குறித்த ஆய்வுகளை திலகர், லாலாஜி பாராட்டி வந்தனர். இவர்களைக்கூட சார்பு நிலை கொண்டவர்கள் எனக் கருதிப் பார்த்தாலும், நேருவும் கூட ஜெயஸ்வால் நூலைத்தொட்டுப் பேசியதைப் பார்க்க முடிகிறது.

ஜெயஸ்வாலின் முக்கிய பங்களிப்பு decolonised national historiography எனச் சொல்கின்றனர். இந்தியர்களுக்கு ஆளும் அனுபவம் ஏதுமில்லை, civilisational deficiency என்கிற மேற்கின் கேள்விகளை ஜெயஸ்வால் தனது ஆய்வின் வழி செல்லாததாக்கினார். இந்தியாவில் ‘அவைகளின் ஆட்சிமுறை’ (some type of legislative bodies) பெரும் பேரரசுகளின் ஆட்சிக் காலத்திலும் இருந்தது என்பதைக் கொணர ஜெயஸ்வால் தன் உழைப்பை நல்கினார்.

ராஜேந்திர பிரசாத், ராகுல்ஜி , சுவாமி சிரத்தானந்தா போன்றவர்களின் நல்ல நட்பையும் ஜெயஸ்வால் பெற்றிருந்தார். லண்டனில் படித்த ஆண்டுகளிலேயே லாலாஜியுடன், ஷியாம்ஜி கிருஷ்ண வர்மாவுடன் தொடர்பில் இருந்தார். லண்டனில் ஷியாம்ஜி இந்தியா ஹவுஸில் தான்

சாவர்க்கர், வ வே சு, டாக்டர் ராஜன் போன்றோர் இருந்தனர். தென்னாப்பிரிக்காவில் இருந்த காந்தி , லண்டன் சென்றபோது இந்த இல்லம் சென்று அந்த மாணவர்களுடன் உரையாடியுள்ளார். ஜெயஸ்வால்- ஹர் தயாள், சாவர்க்கர் என எவருடனும் சேரவில்லை என்ற குறிப்பை அவர் குறித்து 1941ல் எழுதிய பனாரஸ் அம்பஸ்தா சொல்கிறார்.

புகழ்வாய்ந்த கல்கத்தா கல்வியாளர் அசுதோஷ் முகர்ஜியால் post graduate lecturer ஆனார் ஜெயஸ்வால். 1917ல் ஜெயஸ்வால் ஆற்றிய தாகூர் சட்ட உரைகள்தான் மனு- யஞ்கவல்கியர் என நூலானது. இன்றும் பண்டைய இந்திய சட்ட முறைகளுக்கு வழிகாட்டும் நூல் என ஜெயஸ்வால் பற்றி பேசுபவர்கள் குறிப்பிடுகின்றனர். மாடர்ன் ரிவ்யூ இதழில் தொடர்ந்து ஜெயஸ்வால் கட்டுரைகள் வெளியாயின. இந்தி சாகித்ய சம்மேளன பொறுப்பிலும் அவர் இருந்தார். நேபாள் அரசாங்கமும் அவரை ஆய்விற்கு அழைத்தது.

Hinduism vs Hindutva புரிதல் இருந்தால் ஜெயஸ்வாலை புரிந்து கொள்ள இயலும் என உணர்கிறேன். மார்க்சிய பார்வை கொண்ட வரலாற்றாய்வாளர்கள் கோசம்பி, ரொமிலா ஆகியோர் ஜெயஸ்வாலை ciritical ஆகவே பார்த்துள்ளனர். அவர் இந்து என மிக பொதுமைபடுத்தி அக்கால அரசியலை முன்வைத்தார். சமுக வேறுபாடுகளை அவர் காணத்தவறிவிட்டார் என்ற விமர்சனத்தை வைத்தனர். அய்ரோப்பிய ஆய்வாளர் மற்றும் நிர்வாகியானஎட்வர்ட் கெயிட் போன்றோர் ஜெயஸ்வாலின் பணிகளை ‘அஸ்திவார பங்களிப்பு’ எனப் புகழ்ந்தார். லண்டன் ராயல் ஏசியாடிக் சொசைட்டி அவரை உரைகள் நிகழ்த்த அழைத்தது.

கீழைத்தேய ஆய்வு மாநாடுகளில் ஜெயஸ்வால் பங்களிப்பு செய்தார். 1933 பரோடா மாநாட்டிற்கு அவரே தலைமையாக இருந்து நடத்தினார். Numismatic Society தலைவராகவும் அவர் இருந்தார். மௌரியர் நாணயங்கள் குறித்து எழுதினார். குப்தர்களுக்கு முன்னரான கட்டிடக் கலை, சிற்பக் கலை குறித்து ஆய்வுகள் செய்தவர் ஜெயஸ்வால். சீன மொழி, சமஸ்கிருத மொழி ஆளுமையையும் அவரிடம் இருந்தது என அறிய முடிகிறது.

சென்னை பல்கலையில் புகழ் வாய்ந்த புலமையாளர் வி ஆர் ராமச்சந்திர தீட்சிதர் 1941ல், ஜெயஸ்வால் குறித்து எழுதியபோது அவர் அடிப்படையில் பாரிஸ்டர் என்பதைவிட வரலாற்றாசிரியராகவே

வாழ்ந்தார் எனக் குறிப்பிடுகிறார். தீட்சிதர் இந்து பாலிட்டி நூல் குறித்து இவ்வாறு எழுதினார்.

" In this Hindu Polity book, Dr Jayaswal endeavoured to establish the thesis that parliamentary and democratic governments were in vogue in ancient India with representative assemblies such as PAuRa, JANaPada functioning in royal capital. This well written book attracted the serious attention of Oriental Scholars, East and West, and he soon got an unique place in the international world of orientalists "

ஜெயஸ்வாலுக்கு பாட்னா பல்கலை Doctor of Philosophy பட்டம் கொடுத்து 1936ல் சிறப்பித்தது. வரலாற்றாய்வாளர் வி ஏ ஸ்மித்தும் , டாக்டர் பண்டார்க்கரும் , ஜெயஸ்வாலின் பங்களிப்பைப் பாராட்டியுள்ளனர். அவர் கீழ்கண்ட பல்துறைசார் பங்களிப்புகளுக்காக வாழ்நாட்களை அர்ப்பணித்தார் என பல்கலை பாராட்டியது.

Hindu Law and Constitution, Political History, Sanskrit Lit, Prakritic vernaculars, Indian Art, Numismatics, Epigraphy ..

மார்க்சிய வரலாற்றாய்வாளர்கள் இன்றைக்கானஜனநாயக யுக சொல்லாடல்களை , பண்டைய அரசியலுக்கு ஜெயஸ்வால் பயன்படுத்தியதை ஏற்கவில்லை. அது வழு என்றனர். ஜெயஸ்வால் அவர் காலத்தின் சவாலை எதிர்கொண்டார். தேசியவாத வரலாறு எழுதும் இயல் சாத்தியமே என்கிற நம்பிக்கையை அவர் தந்தார்.

பண்டைய வராலாறு எழுதிய எந்த ஆசிரியரும் முற்று முழுதான நடந்தவைஇவையே என்கிற உண்மையை வைத்துவிட முடியாது. ஆதாரங்கள் , ஊக இணைப்புகளால் பின்னப்படவே செய்யும். இந்து என்கிற பொது அரசியல் திசையை ஜெயஸ்வால் உருவாக்கியது விடுதலை அரசியலின் பின்புலத்துடன் அணுகப்பட வேண்டியதாகவும் உள்ளது.

அப்போது லிபரலாக அறியப்பட்ட தேஜ்பகதூர் சாப்ரு, மோதிலால் போன்றவர் ஜெயஸ்வாலை வரவேற்கவே செய்துள்ளனர். அவர்கள் paura, Janapada- municipal and regional assemblies என்பதையும், இந்தியாவின் உள் சார் indigenous constitutional tradition என்கிற பார்வையையும் பாராட்டியுள்ளனர். அரவிந்தரும் பாராட்டியதாக அறிகிறோம். புத்த அரசுகளின் குடியரசு முறை குறித்து விதந்து பேசிய டாக்டர் அம்பேத்கர் , பண்டைய இந்திய அரசுகளில் ஜனநாயகம் என்பதாக romanticise செய்வதை ஏற்கவில்லை. அவர் வேதகால அரசு முறைகள் hierarchical and undemocratic என்றே கருதினார்.

ஜெயஸ்வால் 1922 கயா காங்கிரசில் பங்கேற்றார் என அறிய முடிகிறது. காந்தி பாட்னா வருகிறபோது, விவாதிக்கும் குழாமில் ஜெயஸ்வாலும் இருந்தார் எனவும் அறிகிறோம்.அவர் லாலாஜியுடன் நெருக்கமாக பயணித்தார் என அவர் குறித்து எழுதக்கூடியவர்கள் சொல்லியுள்ளனர். அவரை ஆரம்பத்தில் பிரிட்டிஷ் உளவுத்துறை அபாயகர புரட்சிக்காரர் பட்டியலில் வைத்திருந்தது. ஜெய்ஸ்வால் பண்டைய இந்து அரசியல்குறித்து விரிவாக எழுதினார் என்றாலும், அவர் லாலாஜியுடன் இருந்தாலும், ஹிந்து மகாசபா தொடர்புகொண்ட செய்தி எதையும் என்னளவில் பார்க்கமுடியவில்லை. காந்தி ஜெயஸ்வால் நூல்களை வாசித்தவரா என என்னால் அறியமுடியவில்லை.

ஜெயஸ்வாலின் மற்றொரு முக்கிய பங்களிப்பு என்றால், இந்து சட்டங்கள் தேங்கி உறைந்தவையல்ல- Hindu law evolutionary, not frozen in time- ancient jurisprudence had logic, rules of interpretation and legal principles என அவர் மேற்கிற்கு நிருபித்தார். இன்னும் கூடுதலாக ஜெயஸ்வால் சொல்ல வந்தது

By the time of Yajnavalkya , the concept of Vyavahara had evolved into a developed system of secular law

அக்கால பிரதிகளுக்கு, செக்யூலர் என்ற பதத்தை பயன்படுத்த முடியுமா எனத் தெரியவில்லை. சாட்சிய விசாரணை, தீர்ப்பு முறை இருந்தன என்பதை அவர் சொல்கிறார். Documentary evidence, witness testimony இருந்ததாகச் சொல்கிறார்.

ஜெயஸ்வால் போன்றோர் விடுதலைக்கு முன்பாகவே, 56 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்து மறைந்தாலும் இன்றும் பேசப்படக்கூடிய சில foundational texts என்பதை தொடர் விவாதங்களுக்கு விட்டுச் சென்றுள்ளார் என புரிந்து கொள்கிறேன்.

அவரின் Hindu Polity இணையத்தில் இருக்கிறது. அமேசான் வழி ரூ 900க்கு கிடைக்கிறது.

பார்க்கலாம்..மேலும் அவர் நூல் வழி ஏதாவது என்னால் சொல்ல முடிகிறதாஎன...

15-6-2026

june 17

WHITE PAPER : ON THE FISCAL MANAGEMENT OF TAMIL NADU

AN EXAMINATION OF PUBLIC FINANCES, 2021-22 TO 2025-26

என் வாசிப்பில் தமிழ்நாட்டின் வெள்ளை அறிக்கை

தமிழ்நாட்டின் அரசாங்கம் வெளியிட்டுள்ள நிதி குறித்த அறிக்கை மீது விவாதங்கள் நடந்து வருகின்றன. ஆங்கிலத்தில் 121 பக்கங்களும், தமிழில் 211 பக்கங்களாகவும் அறிக்கை 10 முக்கிய இயல்களில் அடுக்கப்பட்டுள்ளது. துறைசார் நிபுணர்கள் கருத்துக்களைச் சொல்லி வருகின்றனர். என் எளிய வாசிப்பில் நான் பார்த்து உணர்ந்தவற்றை கொஞ்சம் சொல்லியுள்ளேன்.

முதலில் நான் உணர்வது governance is different from political rhetoric. அடுத்து உணர்வது, இவ்வறிக்கை, ஆள வந்துள்ள அரசாங்கம் தனக்கு முந்தியிருந்த அரசாங்கத்தின் நிதிமேலாண்மை மீதான தன் விமர்சனப் பார்வையை மட்டும் கொண்டதல்ல (அவர்கள் விமர்சனத்திற்காக அல்ல என்று சொல்லியிருந்தாலும்), அதற்கும் மேலாக நிர்வாகம் என்றால் எவ்வளவு கடினமான ஒன்று என புதியவர்கள் பெறும் மலைப்பும் கூட. சில இடங்களில் கொஞ்சம் புலம்பலாகவும் உள்ளது. கேரளா அறிக்கை இன்னும் கொஞ்சம் confidence கொண்டதாக எனக்குப்பட்டது.

உண்மை உரைத்தல் என்பது எப்போதும் தன் தவறுகளையும் சேர்த்து உணர்தல் தெளிதல் என்பதுடன் மட்டுமே நிறைவைப் பெற முடியும். Telling truth should also has its bag of telling one's own errors or misunderstandings என்கிற புரிதலைப் பெறுதல்.

இவ்வறிக்கையில் அரசியலே இல்லை என்பதல்ல. அது காட்டும் நிதிநிலையையும், பொருளாதார நிலையையும் வாக்கு அரசியலைத்தாண்டி பார்க்க வேண்டியுள்ளது. இனி அறிக்கையில் பார்த்த சில அம்சங்கள் :

இருமடங்காக இக்காலத்தில் உயர்ந்த கடன் சுமைகள், வருவாய் பற்றாக்குறை, வருவாய் திரட்டுவதில் சரிவு. வருவாய் பற்றாக்குறை 46538 கோடியிலிருந்து 78 324 கோடியாக உயர்வு சொல்லப்பட்டுள்ளது . வரி திரட்டும் திறன் 5.93 சதத்திலிருந்து (மாநில ஜி டிபியில்) 5.45 ஆக வீழ்ந்துள்ளது.

கடன் பொறுப்புகள் 28.7 சதம் என்பது 28.3 சதமாக குறைந்து தான் உள்ளது. கமிட்டெட்- கண்டிப்பாக செய்ய வேண்டிய செலவுகள் 60.4

சதத்திலிருந்து 64.4 சதமாக உயர்வு (கேரளாவை ஒப்பிட்டால் குறைவு தான்). மூலதனச் செலவு 1.79 சதம் என்பது 1.44 ஆக வீழ்ந்துள்ளது.

கடன் இந்த 5 ஆண்டுகளில் 5 லட்சம் கோடி என்பது 10 லட்சம் கோடியானது. கடன் இல்லாமல் அரசாங்கங்கள் நடைபெறுவதில்லை. எதற்காக இக்கடன் வாங்கப்பட்டது- அதற்காக எவ்வளவு செலவிடப்பட்டது- மூலதன செலவு அல்லாமல் வேறு வகையில் ஏன் செலவிடப்பட்டது என்பன கேள்விகளாகலாம். ஆண்டு வட்டிச் சுமை 41564 கோடியிலிருந்து 67050 கோடியாக கூடியுள்ளது. இது மாநிலத்தின் சொந்த வருவாயில் 34.8 சதம். மொத்த வரி வரவில் 22.8 சதமாகும். குஜராத், மகாராஷ்ட்ராவை விட வட்டிச் சுமை இரு மடங்காகியுள்ளது.

வருவாய் பற்றாக்குறை 78324 கோடி என்பது மாநில வரலாற்றிலேயே இப்பொழுதுதான் அதிகம். சொத்துருவாக்கம் என்பது பாதிக்கப்பட்டு நுகர்வு செலவிற்கே கடன் செலவாதல் நிகழ்ந்துள்ளது. அறிக்கை சுட்டிக்காட்டுவது:

A defining structural feature of Tamil Nadu’s finances is the crossover

between interest payments and capital expenditure. Interest payments first

exceeded capital expenditure in 2017-18 and have remained higher in every year since — a now-entrenched structural imbalance. The post-COVID window has not reversed this; it has widened the gap.

A State that borrows heavily but invests little is consuming its future fiscal space without building the productive capacity that could generate the revenue to service the debt. This is the inter-generational transfer at its starkest: today’s generation benefits from the current consumption financed by borrowing, while the next generation inherits the debt without the offsetting infrastructure, industrial capacity, or public services

that productive capital expenditure would have provided.

சொந்த வருவாய் திறன்சரிவை பல இனங்களில் பார்க்க முடிகிறது

— the lowest in the State’s history and the steepest decline among the benchmarked

States. The decline is spread across all major tax heads — GST, petroleum VAT, state excise, stamp duty and motor vehicle tax — and is policy- and administration-driven, with the White Paper attributing a significant part to leakages and systemic corruption in revenue-collecting departments rather than to structural economic disadvantage.

அமைப்புசார் ஊழல் என அறிக்கை பேசுகிறது.

கண்டிப்பாக நடைபெற வேண்டிய செலவுகள் 1.25 லட்சம் கோடியிலிருந்து, 1.89 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளன. இதில்

ஊதியம், பென்சன், வட்டி ஆகியவை வருகின்றன. இதில் ஒவ்வொரு 100 ரூபாய்க்கும் 64.50 செலவானால், கர்நாடகா- மகராஷ்ட்ராவில் 50 தான் செலவாகிறது என அறிக்கைச் சொல்கிறது.

மின்சாரம், போக்குவரத்து,சிவில் சப்ளை பகுதிகளால் கடன் உத்தரவாத பொறுப்புகள் 3 மடங்கானது- 65659 கோடி என்பது 1,79,782 கோடியாக..மின் துறை கடன் மட்டும் 2.47 லட்சம் கோடி. அத்துறை மொத்த நட்டம் 1.82 லட்சம் கோடி.

மாநில டீசல் நுகர்வில் பெரும் மாற்றமில்லை. 750 கோடி லிட்டர் என்கிற அளவில்தான். பெட்ரோல் நுகர்வு 200 கோடி லிட்டர் அதிகரித்துள்ளது. முத்திரைத்தாள் துறையில் நிலவும் குறைகள், ஆயத்தீர்வை குறைகள் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளன. இங்கு வருவாய் திறன் வீழ்ச்சி பேசப்பட்டுள்ளது.

போக்குவரத்தில் கிமீ க்கு 52.84 இழப்பு வருகிறது. ஈட்டும் வருவாய் 25.97 எனில் செலவு 78.81 ரூபாய் என்கிறது அறிக்கை. நுகர்பொருள் கழகமோ தனக்கென தனி வருவாய் என ஏதுமில்லாமல் மானியங்கள் வழியே நடந்து வருகிறது. இந்த மானியச் செலவு கூடிக்கொண்டே போகிறது. 24000 கோடியை எட்டுகிறது. ஆனால் அது நலத்திட்ட அமைப்பு என்பதையும் அறிக்கை ஏற்கிறது.

குறைந்த வருவாயில் மாநிலத்தில் தொடர் நலத்திட்டங்கள் என்பதால் நிதிப் போக்கு இவ்வாறு ஆவதை அறிக்கை ஏற்கிறது. அதேநேரத்தில் இருந்த அரசாங்கத்தின் கொள்கை முடிவுகள் இதற்கு காரணம் எனவும் அறிக்கை விமர்சிக்கிறது. வருகிற ஆண்டிற்கான சவால்கள் குறித்து தனியாக இயல் 9ல் அறிக்கைப் பேசுகிறது.

The situation is therefore very bleak, in the short run this year, and also in the medium run in the next five year. However, it is not hopeless. Much can be achieved in increasing the revenues of the State by plugging the leakages and corruption in revenue collecting departments that have resulted in subduing the growth of revenue receipts in the last few years. A lot can be done in improving the delivery of services and works by reducing the costs of procuring goods and works by reducing leakage. It is going to take a long gruelling effort to do so.

ஆட்சிக்கு எந்த அரசாங்கம் வந்தாலும் கடன் தீர்க்கவே இன்னும் 20 ஆண்டுகள் ஆகும். உழைக்கும் வயது கொண்டோர் சுருங்கப்போகும் காலம் நோக்கி தமிழ்நாடு போகிறது என்கிற அபாய அறிவிக்கையை தந்துள்ளனர். நிதிநிலை சீர்குலைவிற்கு கொள்கை தேர்வுகளையும் நிர்வாக முடிவுகளையும் இவ்வறிக்கை காரணமாக்கியுள்ளது.

தமிழ்நாட்டில் முதியவர் எண்ணிக்கை வருகிற 2031ல் 18.2 சதமாகும் (2011ல் 10.6 சதம்). இதனால் சார் நிலை கூடும். பணிபுரிவோர் குறைய வரி வாய்ப்பும் குறையும். இதை கத்தரிக்கோல் விளைவு என்கின்றனர்

A shrinking working-age population narrows the tax base precisely as an expanding elderly population raises social-security and healthcare obligations — the “scissors effect” that drives a debt trap.

The State’s demographic dividend is the shortest among major States and is already closing, which means the period available for fiscal correction from a position of demographic strength is narrowing with each passing year — the danger of the State growing old before becoming rich.

இவ்வறிக்கை வெளிப்படுத்தும் முக்கிய ஆய்வுக்கொணங்கள் :

கடன் இருமடங்கானது பற்றி..

முதலீட்டிற்கான செலவை வட்டிகள் விழுங்குகின்றன குறித்து..

வருவாய் பற்றாக்குறை கட்டமைப்பு பிரச்சனையாகியுள்ளது (structural)

சொந்த வருவாய் ஈட்டும் திறன் சரிவு

Committed expenditure- கண்டிப்பாக செய்ய வேண்டிய செலவுகள் வளர்ச்சி வாய்ப்பை பாதிக்கின்றன

Contingent liabilities - அதாவது உத்தரவாத பொறுப்புகள் அதிகரிக்கும் கடன்

Erosion of Rule-Based Discipline

மத்திய அரசின் நிதி பகிர்வு குறித்த விமர்சனப் பார்வையை அறிக்கை வைத்துள்ளது

Central transfer trends have not favoured Tamil Nadu from the 14th Finance

Commission’s period. Central transfers are divided into two: Share in Central Taxes and Grants-in-Aid received from the Union Government for Centrally Sponsored Schemes. With regards to the Share in Central Taxes, Tamil Nadu’s share has declined across successive Union Finance Commission awards, from approximately 6.64 per cent under the Tenth Finance Commission to 4.097 per cent under the Sixteenth—a cumulative reduction of approximately 38 %

சம்பளச் செலவு இந்த 5 ஆண்டுகளில் 60.63 ஆயிரம் கோடியிலிருந்து 83.32 ஆயிரம் கோடியாகவும், ஓய்வூதிய செலவு 23.19 ஆயிரம் கோடியிலிருந்து 38.74 ஆயிரம் கோடியாகவும் உயர்ந் துள்ளது. வட்டிச் செலவு 41.56 ஆயிரம் கோடியிலிருந்து 67.05 ஆயிரம் கோடியாக..

புதிய திட்டம் எனில் புதிய கடன் மூலமே என்ற நிலை. பொருளாதார வளர்ச்சி நிதிச் சூழலை அதிகரிக்கவில்லை. வருவாய் ஈட்டும் துறைகளில் ஊழலைக் கட்டுப்படுத்துதல், வழிகாட்டும் மதிப்புகளை நியாயப்படுத்தல், மூலதன மற்றும் நலம் சார் செலவுகளில் சம்நிலை அவசியமாகிறது.

மீள என்ன வழி : அறிக்கை நம்பிக்கையை கீழ்கண்டவாறு தருகிறது.

சவால்கள் உள்ளன. ஆனாலும் சமாளிக்க சாத்தியப்பாடுகள் உள்ளன. மக்களுக்கு சுமையை ஏற்றாமல்,சரக்கு கொள்முதல் பணிகளுக்கான செலவைக் குறைத்தல்- ஊழலை கட்டுப்படுத்தல் மூலம் நிதியாதரங்களை திரட்டுதல்- plugging revenue loss and corruption in

revenue-collecting departments, reducing the cost of goods and

works, and mobilising additional resources without imposing fresh burdens on citizens.

-this will require sustained, disciplined effort across revenue

mobilisation, expenditure management, PSU reform and debt management —

together with clean, corruption-free governance — extending well beyond any single Budget cycle.

II

ஆங்கில அறிக்கையில் பிடித்த சில வாசகங்களை கீழே தந்துள்ளேன்.

The purpose of this document is singular and straightforward: to present an honest, transparent and evidence-based account of the State's public finances as they stand today. It is neither an exercise in retrospective blame nor a political statement. It is an analytical record of fiscal fact — of the present position, the path by which it was reached, and the risks that lie ahead.

Yet this is not a counsel of despair. Tamil Nadu possesses the economic strength, the institutional depth, and the human resources to restore its fiscal health. What is required is an accurate understanding of the problem and the resolve to address it through disciplined revenue mobilisation, prudent expenditure management, and clean, corruption-free governance. The first step in correcting any problem is to measure it honestly and to set it out in full before those to whom the Government is ultimately accountable — the people of Tamil Nadu.

The way forward identified by the White Paper is challenging but not hopeless: plugging revenue loss and corruption in revenue-collecting

departments, reducing the cost of goods and works, and mobilising additional resources without imposing fresh burdens on citizens.

As the immortal words of Ayyan Thiruvalluvar State: Stability lies not in the absolute size of revenue but in the discipline of aligning expenditure within it.

A democracy functions best when its citizens are informed.

The first step in correcting a problem is to measure it

accurately and present it honestly. That is the purpose of this White Paper.

17-6 - 2026

june 19

சட்டமன்றத்தில் ஆளுநர் திரு அர்லேகர் ஆற்றிய உரையில் (18-6-2026)

41 பக்கங்கள் கொண்ட அறிக்கையிலிருந்து...

இவ்வுரையில் மறைந்த பல ஆளுமைகளின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. முதல் பெயர் அண்ணா. அடுத்து அம்பேத்கர், பெரியார், காமராசர், வேலு நாச்சியார், அஞ்சலை அம்மாள், எம் ஜி ஆர்.

மேற்கோள்கள்:

-மக்களே நாட்டின் உண்மையான எஜமானர்கள்- (அண்ணா)

-சமத்துவம், சுதந்திரம் மற்றும் சகோதரத்துவம் மூன்றும் ஒன்றிணைந்ததே உண்மையான ஜனநாயகம்(அம்பேத்கர்)

- மாற்றம் ஒன்றே மாறாதது (மார்க்ஸ் எனச் சொல்லாமல்)

- மறுமலர்ச்சி என்பது மாண்புகளை மாய்த்திடும் நஞ்சு அல்ல. மாண்புகளை மாய்க்கும் நச்சுப் பூச்சிகளை அழித்திடும் முறை. (அண்ணா)

- பிறப்போக்கும் எல்லா உயிர்க்கும் (வள்ளுவர்)

பாதை/ வழி குறித்து:

-5 கொள்கைத் தலைவர்கள் வகுத்த கொள்கைகளைக் கட்டிக் காத்து, பேரறிஞர் அண்ணா மற்றும் புரட்சித் தலைவர் எம் ஜி ஆர் வழியில் ஜனநாயகத்தின் மேன்மையை மேம்படுத்த

- தடம் மாறிச் சென்ற வருவாய்களை அரசின் கணக்கிற்கு கொணர்தல்- முறைப்படுத்தல்- செலவு இழப்புகளை தடுத்தல்

- குற்றங்களை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்குதல், மகளிர், குழந்தைகள் பாதுகாப்பு முதன்மை இலட்சியம்

- கனிம வளங்கள் வருவாய் இழப்பு தடுப்பு, சட்ட விரோத தொழில் வரி ஏய்ப்பு தடுப்பு.

- வேளாண்துறை மறுமலர்ச்சி, வாழ்வாதாரம் மேம்படுத்தல், பாசன மேலாண்மை, விளைப் பொருட்களுக்கு உரிய இலாப விலை

- நிர்வாக ஊழலை அறுத்து, வெளிப்படையான தூய்மையான நிர்வாகம்

- ஒவ்வொரு சமூகத்திற்குமான பிரதிநிதித்துவம் என்பது அடிப்படைக்கொள்கை- சமூக நீதி கணக்காய்வு

- இருமொழிக் கொள்கை

செய்து காட்டியவை:

-கூட்டணி ஆட்சி தத்துவத்தின் இலக்கணமாக- ஆட்சியிலும் பங்கு அதிகாரத்திலும் பங்கு

- கடந்த அரசு கால நிதி நிலை வெள்ளையறிக்கை

- 200 யூனிட் இலவச மின்சாரம்(500 யூனிட்வரைக்கானவர்க்கு)

- சிங்கப்பெண் அதிரடிப் படை

- போதைப் பொருள் த்டுப்பு சிறப்புப் படை

- 717 மதுக்கடைகள் மூட உத்தரவு

- மண்பாண்ட தொழிலாளர்க்கு விலையில்லா வண்டல் மண். 18274 நீர்நிலைகளின் கொள்ளளவு உயர்த்தல்

- விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி (ரூ 75000வரை), பிறர்க்கு ரூ 35000

மத்திய அரசிடம் கோரிக்கைகள்:

- ஒசூரில் வான்வழி அமைப்பு மையம்

-மேகதாது அணை தடுத்தல் (19-6-2026ல் ஒரு மனதாக சட்டமன்ற தீர்மானம் - எதிர்கட்சித் தலைவர் திருத்ததுடன்)

-இலங்கை கைது செய்த மீனவர்களை மீட்பது

-தமிழ்நாட்டிற்கான நிதி- உரிய பகிர்வு

-நெடுஞ்சாலை கட்டமைப்பு

-கோவை, மதுரை, ஒசூர் மெட் ரோ

-தமிழ்நாட்டில் தேசிய முக்கிய கல்வி நிறுவனங்கள்

-சாதிவாரி கணக்கெடுப்பு

-சென்னையில் உச்சநீதிமன்றக் கிளை, உயர்நீதி மன்றத்தில் தமிழ் வழக்காடும் மொழி

-மும்மொழி கொள்கை என்றால்தான் 3548 கோடி என்பது ஏற்புடையதல்ல

-கல்வியை பொது பட்டியலிருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்றல் செய்ய விழைவு:

- வறுமை இல்லாத தமிழ்நாடு

-மத்தியிலிருந்து உரிய நிதி கிட்டாவிடில் உச்சநீதிமன்றத்தை அணுகுதல்- சட்ட வல்லுநர் குழு

-பாரபட்சம் இருந்தால் அவை அறிக்கையாக

-மாநில நலன், உரிமை, நலத்திட்டங்கள், புதிய கட்டமைப்புகளுக்கு ஒன்றிய அரசை வலியுறுத்தல்

- சமூக நீதி கணக்காய்வு

- ஆசிரியர் காலி இடங்களை திறமை, வெளிப்படைத் தன்மையுடன் நிரப்புதல், உலகத்தரம் வாய்ந்த உயர் கல்வி

- காலநிலை மாற்றம் எதிர் கொள்ளல், வனப்பரப்பு- பசுமைப் பரப்பு, சூழலியல் முக்கியத்துவம்

- நீர்நிலை காத்து, மழைநீர் சேகரிப்பு, தடுப்பணைகள்

- முல்லைப்பெரியார் பிரச்சனையில் தொடர் நடவடிக்கைகள்

- தமிழக நதி நீர் இணைப்பு, தென்னக நதி நீர் இணைப்பைக் கோருதல்

- தொல்லியல் துறை ஆய்வுகள், கீழடி- ஆதிச்ச நல்லூர்க்கு யுனஸ்கோ அங்கீகாரம் பெற முயற்சிகள், இப்பகுதிகளுக்கு கல்வி சுற்றுலா- தொழில்நுட்ப வசதியால் தமிழர் நாகரிக மீட்டுருவாக்கம்

- விரிவான சுற்றுலா கொள்கை

- 2036க்குள் 1.5 டிரில்லியன் பொருளாதாரம், தொழில் வளர்ச்சி- தொழிலாளர் வாழ்வு, ஒற்றைச் சாளர முறை அனுமதி- வேலை வாய்ப்புகள்

- புதிய தொழிற்கொள்கை- தொழில் தொடங்குதல் எளிதாக்கம்- முதலீட்டாஅர் ஊக்குவிப்பு ஆணையம்

- 5000 பேருக்கு வேலை வழங்கும் தொழில் எனில் விரைந்து அனுமதி

- 2031க்குள் தமிழ்நாட்டை நகர்ப்புற சிறப்பு முன்மாதிரி மாநிலமாக்குதல், தூய்மையான குடிநீர், பசுமைச் சூழல், டிஜிட்டல் நிர்வாகம்

- தேர்வாணையங்கள் மூலம் வெளிப்படையான காலி இடங்க!ஐ நிரப்புதல்

- உண்மையான மதச்சார்பற்ற சமுக நீதி அரசாக தொடர்தல்- 69 சத ஒதுக்கீட்டை காப்பாற்றுதல், ஆதிதிராவிடர்- பழங்குடிகளின் நலன் காக்கும் அரசாக திகழ்தல்

- மாற்றுத்திறனாளி நலன்கள், 4 சத இட ஒதுக்கீடு

- ஒலிம்பிக் உயர்திறன் மய்யம்

- திருநர் வாழ்க்கை மேம்பாடு, சுய உதவி குழுக்குள், வேலைவாய்ப்பு, வீட்டு வசதி

- கோயில் சொத்து, கணக்குகள் முறைமை, வெளிப்படைத்தன்மை, கணிணிமயமாக்கம், நிர்வாக முறைகேடுகள் களைதல்

- ஆசிரியர், அரசு ஊழியர், ஒய்வூதியதாரர் நலன், மருத்துவக் காப்பீடு

- வெற்றித் தமிழக 5 ஆண்டு திட்டம்

- நலத்திட்டங்கள் சென்றடைய, ஊழலற்ற நேர்மையான நிர்வாகம்

இவ்வறிக்கையில் இடம் பெற்றவற்றிலிருந்து மேலே கூறியவற்றை தொகுத்து கொடுத்துள்ளேன்..

19-6-2026

june 20

Gandhiji's four interesting observations on the eve of independence ..

May 31st 1947

We want neither Birlas nor the Nawab of Bhopal's Raj. There are many Birlas in the country. What is their power? They have to get their work done by labourers and they can get it done only when they pay for it . When the workers refuse to work, the millions would stuck with the rich…

...If the peasantry and the working class took the law into their hands, they would be striking at the root of their interests

June 12 ,1947

(Will) Hindustan imply that the country belongs to Hindus? And who among the Hindus? Only the caste Hindus?. But as I have said the caste Hindus- Brahmins, Kshatriyas and Vaishyas- are a small part of the population. The vast majority consists of untouchables and Adivasis. Will they be ruled by caste Hindus?

19th July ,1947

My humanity tells me that the whole world is my friend. Cutting each other's throat will not bring good to anyone. Friendship does not mean appeasement. A friend does not seek to appease another friend. If harsh words have to be said, they must be said…since I do not consider anyone my adversary why should I go out to appease anyone?

Jan 18 ,1947

Hindus and Mussalmans should not look to the Muslim League or Congress or Hindu Maha Sabha for the solution of their daily problems. For that they should look towards themselves..the political institutions might be left to deal with specifically political questions but how much did they know about the daily needs of individuals?

(as quoted by Manash Firaq in his Gandhi The End of Non Violence book)

20-6-2026

june 21

வாசிப்பின் விளைச்சல்கள்

எனது எழுத்துக்கள் பெரும்பாலும், என் வாசிப்பின் விளைச்சல்கள் என்றே சொல்லலாம். அவை ஓரளவிற்கு என் உழைப்பை சத்தமில்லாமல் சொல்லவும் செய்யும் (இப்போது சொல்வது சத்தமோ?) .

என் புரிதலின் (கொஞ்சம்) நிறைகளையும், பெரும் போதாமைகளையும் அவை வெளிப்படுத்தவும் கூடும். பன்முக வாசிப்பை நேசிக்கிற பயிற்சி என்னிடத்தில் என்பதை அவை காட்டக்கூடும். முடிந்தவரை ஆதார அடிப்படைகளில் சொல்லக்கூடியவன் என்கிற சுய நேர்மையை, இந்த விளைச்சல்கள் பொருட்படுத்தும். அவதூறுகள் போன்ற பதர்களை என் நிலம் தாங்காமல் இருக்கப் பார்க்கும்.

இப்படியான விளைச்சல்களில் வந்த சில நூல்கள் கீழே. வாசிக்கக் கூடியவர்க்கு அவை திசைகள் சிலவற்றை காட்டக்கூடும். சரியான திசையா என்கிற உரிமை கோரலை நான் எப்படி சொல்ல முடியும்? வாசிப்பனுவம், அனுபவ சிதறல்கள், கோட்பாடு மற்றும் கருத்துப் பயிற்சி சார்ந்து, உணர்தலின் அளவீடுகள் மாறும். எது எப்படியாயினும், என் உழைப்பின் விளைச்சல்கள் அவை. ஆம் அவ்வுழைப்பு இன்று dead labour வகைப்பட்டதுதான். ஆனாலும் living labour productivityக்கு அனுசரணையானதாக அவை இருக்கக்கூடும். இங்கு நான் 6 நூல்களை குறித்துள்ளேன். நூல் தலைப்புகள் ஆங்கிலத்தில் இருந்தாலும், நூல்களில் தமிழ் கட்டுரைகளே உள்ளன. எல்லாம் தரை இறங்கக்கூடியவையே...

160 POSTS On GANDHI

இந்நூலின் பெயரே இதில் 160 இடுகைகள் இருப்பதைச் சொல்லிவிடும். இந்த மின் நூல் pdf ல் 534 பக்கங்களைத் தொடும். முகநூலில் கடந்த சில ஆண்டுகளாக போடப்பட்ட இடுகைகளின் தொகுப்பு. காந்தி குறித்த வாசிப்புகளை சிமிழ்களில் அடைக்க முடியாது. விரிந்து விரிந்து செல்லக்கூடியவை அவை. இந்த 160 இடுகைகள் என் வாசிப்புகளை, அவற்றில் என் உணர்தல்களை சொல்லும்.

Marx- Marxists Some Books Some Notes

'மார்க்ஸ்- மார்க்சியர் சில நூல்கள் சில குறிப்புகள்' என்கிற இந்த மின் நூல் 44 இடுகைகளுடன் 275 பக்கங்களில் அடங்குகிறது. மார்க்ஸ்

வாசிப்பும் நீள அகலமானது. உலகளாவிய அளவில் விரிந்து பரந்தது. தீரா தாகத்துடன் இலட்சக்கணக்கானவர்களின் தொடர் உழைப்புகளைக் காணக்கூடியது. மேற் குறித்த நூலில் கொஞ்சம் மார்க்சிய வாசிப்பை பேசப்பார்த்துள்ளேன். என் போதாமைகளை இவை வெளிப்படுத்தவும் கூடும். இளம் மார்க்சிய வாசிப்பாளர்க்கு (இதில் வயது பொருட்டல்ல) சற்று உதவக் கூடும்.

My Posts on Left- observations, reflections, analysis

இந்த மின் நூலின் தலைப்பே அதன் subject matterகுறித்து சொல்லிவிடும். இந்நூலில் இந்திய இடதுசாரிகள் குறித்த வரலாற்றின் கூறுகள், அரசியல் திசைகள்- என் வாசிப்பின் வழி பேசப்பட்டுள்ளன. இந்நூலில் 91 இடுகைகள் 332 பக்கங்களில்... இடதுசாரி வாசிப்பாளர்களுக்கு மட்டுமின்றி, அரசியல் ஆர்வலர்களுக்கும் உதவக் கூடும்.

என் வாசிப்பில்

பன்முக வாசிப்பை இதில் உணரமுடியும். 388 பக்கங்களில் 63 கட்டுரைகள் இதில் இடம் பெற்றுள்ளன. இந்நூல் பிரிண்ட் வடிவமும் பெற்றது. மின் நூலாகவும் இருக்கிறது.

சாதி எனும் பிசாசு - சாதி குறித்த பன்முகக் குரல்கள்

ஏராள ஆய்வு நூல்களின் சாரம் 22 கட்டுரைகளாக இதில் இடம் பெற்றுள்ளன. 155 பக்கங்கள். சாதி குறித்த பார்வைகளின் சில அடிப்படைகளை இந்நூல் பேச முயலும். போதாமைகளும் இருக்கக்கூடும்.

திராவிட- திராவிடர் இயக்கம்

இந்த மின் நூலும் ஏராள ஆய்வாளர்களின் பார்வைகளை என் புரிதலில் வெளிப்படுத்தக்கூடிய ஒன்று. 38 கட்டுரைகள் 222 பக்கங்களில் விரியும்.

இது போன்ற என் நூல்கள் பல ‘ஆர்க்கைவ்’ இணையத்தில் தரவிறக்கம் செய்யக்கூடியவைகளே. நூற்றுக்கணக்கானவர்களால், ஒவ்வொரு நூலும் தரவிறக்கம் பெற்றுள்ளன எனப் பார்க்கும் போது மகிழ்ச்சிதான். அவர்களின் வாசிப்பனுவம் குறித்த பரிமாற்றங்கள் இல்லையெனினும் ...

வாழ்நாட்கள் தரும் அனுமதிக்காக பெரும் உழைப்பைக் கோருகின்ற ஏராள நூல்கள் (ஆய்வாளர் பலரின் பெரும் உள் உறை உழைப்புகள்)

என் அகோரப்பசிக்கு காத்து நிற்கின்றன...காலத்தின் கருணை எப்படியோ...பார்க்கலாம்..

எல்லாம்தான் படிச்சே என்ன பண்ணி கிழிச்சே என்கிற முழக்கமும் எப்போதும் என் செவிகளில் ரீங்காரம் இடாமல் இல்லை..

21-6-2026

june 22

மனாஷ் பிராக் பட்டாசார்ஜி, மனதிற்கு ஒவ்வாமை தரக்கூடிய அம்சங்களை விவாதிப்பதில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. அவரின் நேரு குறித்தும், தேசத்தை எதிர்பார்க்கிறேன் என்கிற நூல் குறித்தும் முன்னர் சில இடுகைகளை செய்துள்ளேன்.

காந்தி நிலைய தோழர் சரவணனுக்கு கொடுத்த வாக்கின்படி, இப்போது Gandhi The End of Non Violence என்கிற ஆழமும் அடர்த்தியும் கொண்ட நூலுடன் மணித்தியாலங்களை செய்து வருகிறேன். மனாஷ் எனக்கு ஏமாற்றங்களைத் தருவதில்லை. மேம்பட்ட திறப்புகளுக்கு உதவுகிறார். இந்நூலை அஷிஷ் நந்தி marvellous exploration என வர்ணித்தார். உண்மைதான்...ஆழமான ஆய்வுதான்.

காந்தி ஆய்வாளர் திரிதிப் சுக்ருத் மனாஷ் பற்றி

..his literary sensibility and philosophical inclination to this historically grounded study ..என்கிறார்.

1946-47 காலத்திய நவகாளி, பீகார்- பிரிவினையின் போது அகதிகளாக இரு பக்கங்களிலும் நகர்ந்த லட்சக்கணக்கானவர் துயரக் கதைகளின் ஊடே , காந்தியின் அறத்தொழிற்பாட்டை- அன்றாட அசைவுகளை, அவரின் அரசியல் புரிதலை, வன்முறையின் உளவியலை இந்நூல் decode செய்கிறது எனலாம். 500 பக்கங்களுக்கும் மேலான நூல். பக்கந்தோறும் தன் ஆய்வுக்கோணத்தை சோர்ந்து கீழே விட்டுவிடாத எழுத்து முறை- மானஷின் தீவிர அசரா உழைப்பைக் காட்டும் மற்றொரு முக்கிய நூல்.

ஆவணங்கள் வழி விரிவாக சொல்லவேண்டிய ஆதாரங்கள், ஓரிரு வரிகளில் நச்சென கருத்துருவாக்கம் என இந்நூல் பின்னப்பட்டுள்ளது. முன்னுரை- Rift in the Lute என்கிற வகையில் 120 பக்கங்கள், முதல் இயல் To die a beautiful death 150 பக்கங்கள் ஆகியவை தனி நூலுக்கான அடர்த்தி கொண்டவை. அடுத்த இயல்களாக Neither a Hindu nor a Muslim, The Kohinoor of India’s freedom, A short lived nine day wonder, A fist full of bones , notes, bibliography என அடுக்கப்பட்டுள்ளது. சென்ற 2025ல் வந்த நூல்.

வெறுப்பு எப்படி உருவாக்கப்பட்டு, வன்முறையாக மாறுகிறது. அது எப்போதும் நமக்கு முன்னர் போய் (டைம்) ஆஜார் ஆகிறது. எப்படி neighbourhood என்கிற அற்புதம் அழிந்து போகிறது என்கிற உளவியலை மனாஷ் பேசுகிறார். பிரிட்டிஷ் மட்டுமே எதிரியா, நாம் ஒருவருக்கொருவர் எதிரியாக்கிக் கொள்கிறோமா என்கிற கேள்வியை

வைக்கிறது. காந்தி இயன்றவரை politics of listening என்பதை எப்படி கையாண்டார் என்கிற மிக முக்கிய விவாதம் இந்நூலில் மய்ய சரடாக ஓடுகிறது. இன்று நாம் காணும் அரசியல் உலகு, அறிக்கை உலகு, மீடியா டிபேட் உலகு always passing judgements - அது வளவளவென பேசுவதிலும், நான் யார் தெரியுமா என் பாரம்பரியம் தெரியுமா என வெறும் வாயளப்புகளிலும் நிற்கும்போது, politics of listening என்பது பெரும் முக்கியத்துவம் பெறுகிறது எனத் தோன்றுகிறது

காந்தியின் அகிம்சை சோதனைகள் குறித்து ஏராள நூல்கள் வந்துள்ளன. அதேபோல் பிரிவினை குறித்தும் அவதிகள் குறித்தும் pathological history என ஏராளம் வந்துள்ளன. இலக்கிய ஆக்கங்களும் வந்துள்ளன.

சமீபத்தில் ஹைதராபாத் நிசாம் ஆட்சி, ரசாக்கர் கொடுமைகள் சூழலில் ஒரு entertainment cinema OTTல் பார்த்தேன். அசோகமித்திரன் நாவல் ஒன்றும் அச்சூழலில் வளர்ந்த மனிதனின் நினைவைப் பேசும். ஜிலானி பானுவின் அற்புதமான உருது நாவல் அய்வான் கசல்- கவிதாலயம் என்கிற பெயரில் தமிழில் வந்தது. நிசாம் சமஸ்தானம் இல்லாமல் ஆகி, இந்தியாவுடன் இணையும்- தெலங்கான புரட்சிகர சூழலில், வாழ்வாங்கு கஜல் கவிதை இலக்கியம் என வாழ்ந்த குடும்பம், அதன் பெண்கள் வீழ்கிற சோகத்தை வெளிப்படுத்தும் நாவல். குஷ்வந்த் சிங்கின் பாகிஸ்தான் போகும் ரயிலுடன், இந்த மூன்று ஆக்கங்களும் பல்வேறு வகைப்பட்ட வாசிப்பு அனுபவங்களை வாசகர்க்கு தரக்கூடும்.

கமலா மார்க்கண்டேயா, நயன் தாரா ஷகல் என இன்னும் பலரும் பிரிவினை குறித்து இலக்கிய சாட்சியங்களை கொடுத்துள்ளனர்.

நவகாளி குறித்தும் , மத வன்முறைகள் குறித்தும் கூட ஏராள நூல் பதிவுகள் வந்துள்ளன. சாவி கூட இரு நாட்கள் நவகாளி போய் 90 பக்க அளவில் அப்போது நூல் எழுதியுள்ளார்.

வெற்றி - தோல்வி என்பதல்ல, அதை எப்படி அடைகிறோம்- எப்படி எதிர்கொள்கிறோம்- எதைச் சொல்கிறோமோ அதை அடைந்தவுடன் என்னவாகிறோம் என்பன அரசியலிலும் தனிமனித வாழ்க்கை உறவுகளிலும் பொருட்படுத்தக் கூடிய கேள்விகள். இங்குதான் வழிமுறையும் இலக்கும் என்பதற்கான ஒப்பற்ற இசைவுகளை காந்தி முன் வைக்கிறார். சொந்த மனசாட்சியுடனும், சக மனிதரின் (see வேறு அடையாளங்களில் அடைக்காமல் சக மனிதரின்) மனசாட்சியுடனும்

சதாகாலமும் உரையாட முடியுமா என்கிற பெரும் சோதனைதான் காந்தி.

மானஷ் இன்று குறிப்பிடத்தகுந்த political theorist, poet, journalist என்கிற பன்முகத்துடன் அறியப்படுகிறார். மானுட நேயம் என்கிற இசைக்கருவியின் அவ்வப்போதான அபஸ்வரங்களாக வன்முறைகளைக் காண்கிறோம். அதில் பங்குதாரராகிறோம். பக்க நிலை எடுக்கிறோம், போன்ற பல அறக் கேள்விகளை மெய்யியல் பார்வையில் இந்நூல் அலசுகிறது.

பார்க்கலாம்..காந்தி நிலைய சரவணனும் நானும் ரகசியமாக பேசியுள்ளோம்... ஜூலை இறுதியில் இந்நூலை கொஞ்சம் பேசி பார்க்கலாம் என்ற காலநிலை உருவாகியுள்ளது. நல்லவேளை அக்னி நட்சத்திரம் முடிவடைந்து விட்டது..எச்சரிக்கை இந்த ரகசியம் காக்கப்பட வேண்டும்..

22-6-2026

june 23

நாடு சார்பாக கட்டப்படும் அனைத்து புனிதங்களும் taught concepts தான்.கற்பித மனவியல் எனலாம். மனித வாழ்க்கையின் பல கூறுகள் கற்பித பிடிமானங்கள்தான். நமக்கு நாமே திட்டம்தான்.

ஆட்சியாளர்கள் ,மக்களின் நம்பிக்கையை பெற்றவர்கள், தொடர்ந்து மக்கள் நம்பி அனுசரிக்க வேண்டிய ‘ஆசார சீலங்களை’ emotional ஆக கட்டமைக்கின்றனர். அதன் மீறல்களை விமர்சிக்கவும், இன்னும் ஒடுக்கவும் தலைப்படுகின்றனர். தொன்மமாகவும், ஆதி புனிதமாகவும், போற்ற வேண்டிய மரபாகவும் மாற்றுகின்றனர். பெரும் அடையாளமாக்கி அதன் பொந்துக்குள் அனைவரின் அடைக்கலத்தையும் ஏற்படுத்துகின்றனர். இதில் emotion, sentiment என்கிற கலவைகள் முலாமிடப்படும். இதனால் பெரும் பொங்குதல்கள் நடைபெறும். அல்லது அதற்கான ஏற்பாடு செய்யப்படும்.

நாட்டுப்பண், தமிழ் தாய் வாழ்த்து, இன்னும் வந்தே மாதரம்- எல்லாமே மனிதன் பிறந்தவுடன் கூடப் பிறந்தவையல்ல. ‘டெரிட்டரி’ சார்ந்து இங்கு பிறந்தவர்களால் இயற்றப்பட்டவை. பிரிட்டிஷ் இந்தியாவில் அவர்கள் கட்டுப்பாட்டில் இருந்த நிலப்பகுதியில், நிருவாகப் பகுதியில் இவை எழுதப்பட்டவை. எல்லாம் யுனிவர்சல் ஆக இருக்க வேண்டியதில்லை என்றாலும்...

நாட்டுப் பண் தாகூரின் ‘ஜனகனமன’ வும், பங்கிம் சட்டர்ஜியின் வந்தே மாதரமும், சுந்தரம் பிள்ளையின் மனோன்மணிய தமிழ்த் தாய் வாழ்த்து வரிகளும் பெரும் அரசியல் விவாதங்களை சந்தித்தவைதான். முதல் இரண்டும் அரசமைப்பு விவாத களனில் இடம் பெற்றவை. அரசாங்க நிகழ்வல்லாமல் , தனி அமைப்பு நிகழ்வுகளில் பாடப்பட்டு மக்களின் உணர்வுகளில் அவை மெல்ல இடம் பிடித்தன. பின்னர் சுதந்திர சூழலில், அரசமைப்பில் ஏற்பு பெற்று , ஜனவரி 1950ல், தாகூரின் பாடல் நாட்டுப்பண் அந்தஸ்தைப் பெற்றது. பொதுவாக நிகழ்வுகளின் இறுதியில் பாடவோ இசைக்கவோபெற்றது. மோடி அரசாங்க உள்துறை வந்தே மாதரம் முழுமையான வரிகள், நாட்டுப்பண் என்கிற வரிசையை executive order ஆக்கியது. இரு முறை பாடல் என்றாக்கியது.

தமிழகத்தில் தனி அமைப்புகளில் (கரந்தை தஞ்சை தமிழ் சங்க கூட்டங்கள்) பாடப்பட்ட மனோன்மணியப்பாடல், 1970ல் கலைஞர் அரசால் முதலில் பாடப்படுதல், பின்னர் ஸ்டாலின் அரசால் எழுந்து

நின்று மரியாதை உள்ளிட்ட வழிகாட்டு நெறிகள் வெளியாயின. தமிழ்நாடு அரசாங்க நிகழ்வில் இறுதியில் நாட்டுப்பண் என்கிற மரபு உருவானது.

தற்போதுள்ள விஜய் அரசாங்க சட்டமன்ற நிகழ்வில் இருமுறை நாட்டுப்பண், முன்னர் பதவி ஏற்பில் வந்தே மாதரம் உட்பட பாடப்பட்டது அரசியல் கட்சிகளால் ‘மரபு மீறல்’ என விமர்சிக்கப் பட்டு வருகிறது. பேரவைத் தலைவர் , இருமுறை நாட்டுப்பண் பாடுவதால் தவறு ஏதுமில்லை என விளக்கமளித்துள்ளார்.

தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலில் பொருத்தமான வரிகள், சர்ச்சைக்குரிய வரிகள் விடப்பட்டே பாடப்படட தமிழ்நாடு அரசாங்க கலைஞர் கால executive order இருக்கிறது. காந்தி -நேரு காலத்தில் வந்தே மாதரம் அப்படி இருந்த ஒன்றுதான். மோடி சர்க்கார் சர்ச்சைக்குரிய வரிகளையும் இணைத்த முழுப்பாடல் என executive order போட்டுள்ளது. பல மாநிலங்கள் தங்களுக்கென பாடல்களை இன்னும் முழுமையாக உருவாக்கிக் கொள்ளாத சூழலும் நிலவுகிறது.

இந்த executive orders களின் constitutional legality அல்லது morality குறித்து என்ன என்ன தீர்ப்பு உள்ளது என எனக்கு தெரியவில்லை.

என்னைப் போன்ற பலருக்கு முழுமையாக இப்பாடல்களை தனித்துப் பாடச்சொன்னால் பெரும் கஷ்டம் நேரக்கூடும். கூட்டத்தில் கொஞ்சம் அப்படி இப்படியாக வாய் அசைத்து ஒப்பேற்றம் செய்யக் கூடும்.

நாட்டுப்பண், தமிழ் தாய் வாழ்த்து என்பன போன்ற அம்சங்களில் உருவாக்கப்படும் அரசியல் அசைவுகள் மக்களிடம் எவ்வளவு sentiment, emotion ஆக கவ்விப் பிடிக்கும் என என்னால் ஊகிக்க முடியவில்லை.

தூய்மைப் பணியாளர் போன்ற மிக அடிமட்ட துயர் நிறை மக்களின் வாழ்வாதார பிரச்சனையே போகிற போக்கில் கடந்து செல்கிறதே? ஊரை சுத்தம் செய்பவர்களின் கோரிக்கைகளில் புனிதம் , எமோஷன் செண்டி எனஏதும் ஏற்றப்படாமல் வாழ்க்கை கடந்து போகிறதே?

தமிழ்த் தாய் வாழ்த்தில் முதலில் பரத கண்டம் தான் வருகிறது. ஜனகனமன விலும் திராவிடம் வருகிறது. இணக்கப் படுத்தி ஒத்திசைவு உருவாக்க அரசியல் சக்திகள் முயலலாம். தமிழ் தாய் வாழ்த்தையும் இருமுறை பாடுங்கள் என்கிற பஞ்சாயத்தும் சொல்லப்படுகிறது.. எல்லாவற்றையும் பார்க்க ரசிக்க கைதட்ட உஷ்ணப்படுவதைத் தவிர கோடானு கோடி மக்கள் வேறு என்ன செய்யக்கூடும்..

கற்பித புனிதங்களால் மனிதனின் கொண்டாட்டமும், திண்டாட்டமும் ஒருசேர வாழும் உலகில் … ‘நாம் எதிர் பிறர்’ என்கிற நம் வாழ்க்கை சூழலில் எங்கும் dissent என்பது பாடாய் படவே செய்யும்…அதற்கு போக்கிடம் என ஏதும் இருக்குமா? என்னிடம் இரு இல்லையேல் எதிரியாவாய் என்கிற எச்சரிக்கை சூழ் உலகு..

23-6-2026

மண்ணில் பொழிந்த மாமழை- பாவண்ணன் அவர்களின் கட்டுரைத் தொகுப்பு. 2021ல் சந்தியா பதிப்பகத்தார் கொணர்ந்த நூல்.

பாவாண்ணன் தமிழ் படைப்பாளிகள் சமூகத்தில் தனக்கென இடம் பிடித்தவர். இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்டவர்.இந்நூலில் அவர், 14 காந்திய ஆளுமைகளின் 'வாழ்வும் பணியும்' பற்றி மிகச் சுருக்கமாக- நேர்த்தியாக, மேலும் ஒவ்வொரு ஆளுமை குறித்தும் அறிந்து கொண்டோம் என்கிற உணர்தலை உருவாக்கும் அளவில் எழுதியிருக்கிறார்.

நூலின் 200 பக்கங்களை வாசிக்க அதிக நேரம் எடுக்காது. வாசிக்க தொந்தரவு செய்யாத எழுத்தாக இருக்கும். கிராம ராஜ்யம், சர்வோதயம் மலர்கிறது இதழ்களில் வந்தவை தொகுக்கப்பட்டு நூலாகின. இப்படி இன்னும் பல ஆளுமைகள் குறித்து தனது தேடலால், உழைப்பால் - தோழர் பாவண்ணன் சுருக்கக் குறிப்புகளை தமிழ் வாசகர்களுக்கு தந்துள்ளார். பி எஸ் என் எல் துறை சார்ந்த ஆளுமை அவர் என்பதில் கூடுதல் மகிழ்ச்சி. நல் வாழ்த்துகள்!

25-6-2026

june 27

Gandhi and Communal Harmony நூல்குறித்து

அஸ்கர் அலி இன்ஜினியர் எழுத்துக்களை கொஞ்சம் 1990களில் வாசிக்க முடிந்தது. ஆங்கில தினசரிகள், மெயின்ஸ்ட் ரிம் இதழில் அவரது கட்டுரைகள் வந்த வண்ணம் இருந்தன. 2013 வரை 74 ஆண்டுகள் வாழ்ந்த நல்ல அறிஞர். ஏராள நூல்களையும் அவர் தன் உழைப்பால் விட்டுச் சென்றவர்.

அஸ்கர் அலியின் இஸ்லாம் குறித்த அறிமுக நூல் முக்கியமானவற்றில் ஒன்று எனலாம். இந்து முஸ்லீம் நல்லிணக்கம், இஸ்லாமியர் மத்தியில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள், பெண் உரிமைகள், கல்வி பொருளாதார சமத்துவ வாய்ப்புகள், இஸ்லாமில் அகிம்சையின் கூறுகள், குரான் வாசிப்பு, விடுதலைப் போராட்டத்தில் சிறுபான்மையினர் பங்களிப்பு, மதக் கலவரங்கள், மதமும் விடுதலையும், இறையியல் சீரமைப்பு போன்ற பல்வேறு கோணங்களில் அவரது நூல்கள் வெளிவந்தன. இந்து முஸ்லீம் ஒற்றுமையில் காந்தியின் மகத்தான பங்களிப்பை சிறப்பித்து பேசியவர் அஸ்கர்.

Gandhi and Communal Harmony என்கிற அஸ்கர் எடிட் செய்த நூலை புரட்டிக்கொண்டிருந்த போது, அவரது எழுத்து நினைவுகள் எழுந்தன. இந்த நூல் Gandhi Peace Foundation 1997 வெளியீடு. அஸ்கர் முன் நின்று நடத்தி வந்த CSSS- centre for study of society and secularism அமைப்பின் சார்பில் காந்தி நூற்றாண்டை செமினார் ஒன்றின் மூலம் நடத்தினர். அதில் பங்கேற்று உரை நிகழ்த்தியவர்களின் தாள்களை தொகுத்து, காந்தி அமைதி அமைப்பினர் பின்னர் கொணர்ந்தனர்.

இதில் 16 ஆய்வாளர்கள் பல்வேறு கோணங்களில் காந்தியின் மத நல்லிணக்க செயல்பாட்டு திசைவழிகளை பேசியுள்ளனர். நூல் வந்து 30 ஆண்டுகள் என்ற நிலையிலும், இன்றும் எடுத்து சோதிக்க வேண்டிய நிலைப்பாடுகளை கட்டுரையாளர்கள் பேசியிருப்பதை உணரமுடியும்.

அஸ்கர் அலியுடன், எம் என் ஸ்ரீனிவாஸ், கோயல், சாதிக் அலி, இக்பால் அன்சாரி, ராகவேந்திர ராவ், ரகுராமராஜு, பிமல் குமார், மாதுரி சந்தானம், மீடா, அபிதா, அமரேஷ், கிஷன், சூசன், ஹரிஹரன் என பல அறிஞர்களின் ஆய்வுத்தாள்கள் இந்நூலில் காணக்கிடைக்கும்.

எம் என் ஸ்ரீனிவாசின் ‘காந்தியின் மதம்’ (Gandhi’s Religion) என்பதையாவது சுருக்கமாக அறிமுகப்படுத்தலாம் எனத் தோன்றியது.

காந்தி யங் இந்தியாவில், ஹரிஜன் இதழ்களில் எழுதிய சிலவற்றிலிருந்துதான் எம் என் எஸ் அவர்களும் எடுத்து பேசியிருக்கிறார். சாரம்சமாக சொன்னால்

இந்து மதமோ அல்லது வேறு எந்த சமயமோ அதன் நீடித்த இருப்பை சகிப்புத்தன்மை வழியே தான் , பல்சமய சமுகம் ஒன்றில், பெறமுடியும். காலம் காலமாக அச்சமுகம் பெற்று வரும் cultural assimilation யை புரிந்து கொள்ள வேண்டும்.

காந்தி அன்றாட வழிபாட்டு முறையில் சடங்கு, பூஜை புனஸ்காரம், அடையாள முக்கியத்துவம், தினசரி கோயில் செல்தல்,ஜோஸ்யம் பார்த்தல் என எதையும் கை கொள்ளவில்லை. அனுசரிக்கவில்லை. அவரது மாலைநேரம் சர்வமத பாடல்கள் சார்ந்தவை.

பெண்களின் முன்னேற்றமின்றி emancipation இன்றி விடுதலை சாத்தியமில்லை. சமுக தடைகளாக குழந்தை மணம், வரதட்சணை கொடுமை, கைம்பெண் பிரச்சனை , பாலின சமத்துவம் என பலவற்றை, மத வியாக்கியானங்களுக்குள் சிக்கவிடாமல் சமுக பிரச்சனையாக அவர் விளக்கி வந்தார்.

எது தன் நடைமுறை சோதனைக்கு உகந்ததோ அந்த சிந்தனையை அவர் நடைமுறையாக்க பயிற்சியாக்க முயன்றார். இங்கு எம் என் எஸ் எழுதுவது

When Gandhi considered an idea good, he tried to put it into practice..he was not one of those who were fascinated by ideas qua ideas and he saw praxis as the necessary completion of an idea.

காந்தியால் கீதை, குரான், பைபிள் வாசிப்புகளில் அகிம்சையை தேட முடிந்தது. கிருஷ்ணன், முகம்மது, ஜீசஸ் என எவரிடமும் exclusive divinity என்பதை அவர் பார்க்கவில்லை. ஒருவர் போலே மற்றவர் என்கிற புரிதல் இருந்தது. அதே நேரத்தில் அவரவர் பெற்ற மதத்திலிருந்து வேறு மதமாற்றம் என்பதை அவர் சந்தேகத்துடனேயே பார்த்தார்.

பைபிளில் love என்பதை எடுத்துக்கொண்டால், கீதையில் அபரிகிரஹா (non possession) சமபாவ equability என்பதை எடுத்துக்கொண்டார். குரானின் வாசிப்பில் அகிம்சையை அவரால் பார்க்க முடிந்தது- non violence is enjoined as duty, violence is permitted as a necessity என்கிற உள்வாங்கல் அவரிடம் இருந்தது. மிக முக்கிய புரிதலாக underlying unity in all religions என்பதையே அவர் சக மனிதர்களிடம் நகர்த்தினார். மதத்திற்கு ‘ செக்டேரியனிசம் அழகல்ல ‘ என்கிற புரிதல் அவரிடம் அன்றாடங்களில் வெளிப்பட்டது.

பி ஆர் நந்தா இதை

Gandhian religion was simply an ethical framework for the conduct of daily life என விளக்கினார்.

காந்தி தனக்கும் இறைக்குமான உறவு 'பிரேயர்' கணங்களில் மட்டுமல்ல, எல்லா நேரத்திற்குமானது என்கிற தன்மையை வெளிப்படுத்தினார்- since divinity is pervaded in everyone and everything என்கிற புரிதல் அவரிடம்.

அவர் இமயமலை சென்று ஆத்ம சோதனை செய்யும் துறவிகள் பார்வையைக் கொள்ளவில்லை. அவரின் 'renouncing' மக்களுடன் , அவர்கள் வாழ்க்கை சார்ந்த , மேம்பாடு சார்ந்த, ஒழுக்க நெறி சார்ந்த ஒன்று.

இந்நூலில் ஒவ்வொருவரின் கட்டுரையும் தனித்துவமானது. புகழ் வாய்ந்த சந்தானம் அவர்களின் மகள் மாதுரி சோந்தி கட்டுரை ஒன்றும் விரிவாக இதில் இடம் பெற்றுள்ளது.

கோயல் சொல்லும்போது

Gandhi never invoked any historical or mythological personage to obviate the need for human endeavour. The two premised he acted were- that human nature is essentially good, human goodness can be made to manifest itself through nonviolent collective action

கட்டுரையாளர் சாதிக் அலி காந்தியின் மிக முக்கியமான composite culture concept யை விளக்கியுள்ளார்.

Indian culture stands for synthesis of different cultures that have come to stay in India, that have influenced Indian life, in their turn, have themselves influenced by the spirit of the soil. This synthesis will naturally be of the swadeshi type where each culture is assured its legitimate place.

Indian culture is therefore Indian.It is neither Hindu nor Islamic nor any other wholly. It is fusion of all, essentially Eastern… ஆஹா எவ்வளவு மேம்பட்ட புரிதல் காந்தியிடம்..

அஸ்கர் எடிட் செய்துள்ள இந்நூல் இன்னும் பல விளக்கங்களை வாசிப்போருக்கு தரக்கூடும். நீள்வது குறித்து அஞ்சி நிறுத்துகிறேன்.. வணக்கம் அஸ்கர் அலி அவர்களே! 27-6-2026

june 28

தோழர் ராமதுரை- A Man For His Neighbours

அது ஒரு சிறிய அழகான பசுமை சூழ் கிராமம். மேலப்பாலையூர் , அங்கிருந்து வண்டிகட்டி குழந்தைகளை பெரியவர்கள் குடவாசல் பள்ளிக்கு அனுப்பிய காலமது. அப்படியான விவசாயம் சார்ந்த , படித்து முன்னேறவேண்டும் என்கிற எண்ணங்கொண்ட அக்குடும்பம், ராமதுரையை அவரது சகோதரரை திருச்சி செயிண்ட் ஜோசப் அனுப்பி படிக்க வைத்தது. அங்குதான், பி எஸ் என் எல்க்கு பின்னர் வந்த, திருச்சி மாத்ருவும் அப்போது படித்தவர்.

இளமையிலேயே திருமணம் செய்யப்பட்டு, திருவாரூர் தொலைத்தொடர்பில் வேலைக்கு சேர்ந்தவர் ராமதுரை. காலம், சில ஆண்டுகளிலேயே அவரை அவ்வூரின் பரோபகாரி, நாடி வந்தோர்க்கு ‘தலையை அடகு வைத்தாவது’ எனச் சொல்வார்களே , அப்படி உதவி செய்யும் பண்பு கொண்டவராக்கியது. அவ்வூரின் எம் ஜி ஆர் - முகராசி- தொட்டது துலங்கும் என்கிற அனுபவத்தை, அருகாமை மனிதர்களுக்கு அவரால் கொடுக்க முடிந்தது. ஏராளமானவர்க்கு அவர் ஏதாவது செய்திருப்பார்.

எங்களின் திருமணத்தை 41 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் நடத்திக்கொடுத்தார். ராமதுரை அம்மாவின் கழுத்து சங்கலி அடகு கடைக்கு போனது. அடுத்த வேளை குறித்த கவலையை தள்ளிவைத்து, கையில் வந்த காரியத்திற்கு ராமதுரை எப்போதும் முன்னுரிமை கொடுத்து வந்தவர்.

அருகாமை மனிதரை நேசி என்பது அவரின் இயல்பானது. Address the issues of Neighbours and stand with them by doing your best என்கிற காந்திய தரிசனம் எப்படியோ அவர் வாழ்வில் வசப்பட்டது. இன்றும் அவர் முடிந்த அளவு அப்படித்தான் வாழ்ந்து வருகிறார் எனக் கருதுகிறேன். நான் அவ்வூர் விட்டு வந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டது. அவ்வூர் தோழர்களின் அன்றாடங்களிலிருந்து, வெகுதூரத்தில் , அவுட் ஆப் கவரேஜ் ஏரியாவில் நான்.

ராமதுரையின் கையெழுத்து கண்ணில் ஒற்றிக்கொள்வது போல், சிறிதாக அழகாக இருக்கும். தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் நேர்த்தியான வார்த்தைகள் இடம்பெற்ற வாக்கிய அமைப்புகள் அவரிடம்..சிறப்பாக ‘டிராப்ட்’ செய்வார். தோழர் முகுந்தனும் அப்படித்தான். படு நேர்த்தி, கச்சிதம், சரியான பொருளில் வாக்கிய

அமைப்பு இருக்கும். அவர் குடும்பமே ‘கோல்ட் மெடலிஸ்ட்கள்’-குக்கிராமம் சத்திரகட்டளையிலிருந்து ‘மாஸ்டர் டிகிரிகளை டாப்பர்களாக’ பெற்ற குடும்பம். இந்தியிலும் முகுந்தனின் தேர்ச்சியை நான் பார்த்திருக்கிறேன்.

ராமதுரைக்கு நேர்த்தியான ‘டிக்ஷனும்’ அமைந்தது. முகுந்தன் 71 வயதிலும் வயலோர, தோட்டக்கார உழைப்பாளி என அறிய முடிகிறது. தொலைபேசித் துறையில் இத்தோழர்கள் பெரும் உழைப்பாளிகளாக இருந்தனர். இவர்களுடன் இணைந்து அக்காலத்தில் தொழிற்சங்க பணியாற்றி வந்தேன்.

ராமதுரைதான், கடந்த 47 ஆண்டுகளாக பல தோழர்களால் சிறப்பாக நடத்தப்பட்டுக்கொண்டிருக்கும், TTUC என்கிற ‘திருவாரூர் தொழிற்சங்க கூட்டமைப்பு’ என்பதின் அமைப்பு கூட்டத்திற்கு அவ்வூரின் 50 தொழிற்சங்கங்களுக்கு அழைப்பு கொடுத்தவர். தோழர் கி வெங்கட் ராமன் (CITu அன்று) , தோழர் ராமதுரை NFTE என்றுதான் தலைவர், செயலர் என முதலில் சொல்லப்பட்டது. மூத்த தொழிற்சங்கத் தலைவர்கள் ஆர் கே, கே எஸ் கே, ராமதுரைக்கு ‘over burden ‘ கூடாது என என் பெயரை செயலர்க்கு என்று மாற்றினர்.

அக்கூட்டமைப்பில்தான் பல புகழ் வாய்ந்த தலைவர்கள், தோழர்கள் வேதையன், பேரா ராமசாமி, பேரா அறிவழகன், சுப்பிரமணியன், பி எஸ் மாசிலாமணி, புலிகேசி, ரகுபதி, நித்யானந்தம், அழகிரி-சாமிநாதன், அழகிரி, கலிய பெருமாள், தர்மதாஸ், ராமலிங்கம், ராஜவேல், பேரா பழநி, கௌதமன், குரு சந்துரு, முருகானந்தம், கார்த்தி- நடராஜன், கூடூர் குணசேகரன், பாலதண்டாயுதம் இன்னும் இங்கு நான் பெயர் குறிப்பிடாமல் விட்டுப்போன (மன்னிக்கவும்) பலர் பெரும் பங்களிப்பை 1979 முதல் செய்து வந்தனர். அவ்வூரின் தொழிலாளர் மேடையது. வீதி நாடகம், புதிய வகை மேதின கொண்டாட்டங்கள், solidarity இயக்கங்கள் என பெரும் செயற்பாட்டுக் களமது.

ராமதுரைக்கு விவசாயி, சங்கீதப் பிரியர், கைங்கரிய சேவைக்காரர் என பன்முகத்தன்மையுண்டு. கர்நாடக இசையின் ராகங்களை சிலாகித்து பேசிய அக்கால இடது சிந்தனையாளர் அவர். உபந்யாசங்களின் நுணுக்கங்களை அறிந்தவர். சொந்த நிலத்தின் விவசாய தொழிலாளர்களிடம் பெரும் தோழமையை காட்டியவர். தொமுசியின் பாரதியும் ஷெல்லியும் என்பதை அவர் ரசித்து பேசியது

நினைவிற்கு வருகிறது. சுஜதா எழுத்துக்கள் மீது அவருக்கு தீராக் காதல் இருந்த நினைவு. தினசரி இந்து, எக்ஸ்பிரஸ், தினமணி போன்ற எதிலாவது கட்டுரைகளை ரசித்தால் சக தோழர்களிடம் சிலாகித்து கருத்துச் சொல்வார். வாரந்தர பத்திரிகைகளை சுடச்சுட படிப்பார். இப்போது அவர் ரசனை எப்படிச் செல்கிறது எனத் தெரியவில்லை. அவ்வூரின் அன்றாடங்கள் குறித்து எனக்கு இன்று தெளிவில்லை.

தனக்கு சரியெனப் படுவதை, சரியெனப் படுபவர்களை கொண்டாடி தீர்ப்பார் ராமதுரை. கோபம் எனில் தூக்கிப் போடத் தெரியாதவர் அல்ல. பரோபகாரம் அவரது தனிச் சிறப்பு. A man for his neighbours என்றே எனக்கு சொல்லத் தோன்றுகிறது. ஜூனில் அவர் பிறந்த நாள்.. நல்ல ஆரோக்கியத்திற்கான நல்வாழ்த்துகள்!

28-6-2026

june 29

Political life in moral matrix

K ராகவேந்திர ராவ் இந்திய அரசியல் ஆய்வாளர்களில் குறிப்பிடத் தகுந்தவர். அரசியல் போக்குகள், காந்திய ideals, அம்பேத்கர், லோகியா என கட்டுரைகள் / நூல்கள் எழுதியவர். கர்நாடகா தார்வார் கல்விப்புல பின்னணியிலிருந்து , அரசியல் ஆய்வாளராக சிம்லா மய்யத்திலும் செயல்பட்டவர். நிஜலிங்கப்பா குறித்து நூல் ஒன்றும் எழுதியவர் என நினைக்கிறேன். 90 வயது வாழ்ந்து மறைந்தவர் ராவ். ராகவேந்திர ராவ் மார்க்சின் மீது தீரா வேட்கை கொண்டவர் என்பதையும் சேர்த்துப் பார்த்து, அவரின் எழுத்துக்களை எடுத்துக்கொள்ள வேண்டும்.

ராவ் அவர்களின் 15 பக்க ஆய்வுத் தாள் ஒன்று அஸ்கர் அலியின் Gandhi and Communal Harmonyல் இடம் பெற்றுள்ளது. அந்த essay- Modern Society and Modern Secularism- A Gandhian Problematique என்பதாகும். இதில் ராகவேந்திர ராவ்,

செக்யூலரிசம் என்பதை காந்தி எப்படி புரிந்து கொண்டு கையாண்டார், மதம் குறித்த பார்வையை மதச் சார்பின்மையுடன் அவர் எப்படி இணைக்கப் பார்த்தார், சமுகம்- அரசு- மதம் இவற்றின் தொடர்புகள் எப்படி அமைய வேண்டும் என விழைந்தார், அவருடைய நவீன நாகரிகம் குறித்த விமர்சனங்கள் எப்படி அமைந்தன போன்ற விஷயங்களை பேசுகிறார்.

நான் இங்கு சொல்ல வந்தது காந்தி அரசியலை எப்படி புரிந்து கொண்டார், அரசியலை ஆன்மீகப்படுத்துவது- spiritualise politics என்பதை எப்படி விளக்கினார் என்கிற ராகவேந்திர ராவின் பகுதியை மட்டுமே.

மனித வாழ்க்கையில் reason, faith இரண்டும் தொழிற்பட்டு வருகின்றன. நம்பிக்கையாளன் பகுத்தறிவுடன் பேசவும் செய்யலாம்- பகுத்தறிவுவாதி ‘அது எனது நம்பிக்கை வேறு பேச்சில்லை’ என மூடவும் செய்யலாம். மார்க்சிய பயிற்சி கொண்ட ராவ், காந்தி reason என்பதை நிராகரிக்காமல் , நம்பிக்கைகளை அனுசரித்தவர் என்கிறார். Reason while essential to human living is not sufficient, when intellect fails, faith comes to man’s succour என்று சொல்கிறார்.

காந்திக்கு எந்த அம்சமும், மதம் உட்பட moral frameworkல் பொருந்த வேண்டும். மதத்தின் சாரமே மனிதனின் morally governed lifeக்காகவே என காந்தி புரிந்து கொண்டு அதை அன்றாட நடவடிக்கையாக்கிக்

கொண்டவர். அவருக்கு மதம் என்றாலே ethical religion தான். ஒவ்வொரு மதமும் நற்கூறுகளையும், கசடுகளையும் (perfect- imperfect aspects) கொண்டவைதான்.எனவே எதையும் உயர்வு தாழ்வு - hierarchical rankings தேவையில்லை , மத மாற்றமும் தேவையில்லை என அவர் நினைத்தார்- சொல்லிக் கொடுத்தார்.

Morally governed atheist என்றால் அவருக்கு அவர்களிடம் எந்த பிரச்சனையும் இல்லை. ஆனால் இறை- மதம்- உயர்வு தாழ்வு சாஸ்திரம் என ஜபித்துக்கொண்டு நெறியற்ற வாழ்க்கையாளர்களுடன் அவருக்கு பெரும் பிரச்சனை. அனைத்து தரப்பினருடன் அவருக்கு தொடர் உரையாடல் இருந்தது.

சரி. அரசியல் என்கிற உரையாடலுக்கு வந்து விடுகிறேன். காந்திக்கு அரசியல் என்பது, அரசு- அரசாங்கம்- கட்சிகள் - தேர்தல்- ஆட்சி அதிகாரம் என்கிற செயல்பாடுகளை மட்டும் சுற்றியதல்ல. அவருக்கு அரசியல் என்பது குறிப்பிட்ட சமுக கலாச்சார பொருளாதார பின்னணி கொண்ட மக்களின் செயல்பாடும் கூட. இந்த இரண்டையும் அவர் அரசியலாகவே பார்த்தார். ராவ் சொல்வது

Politics is understood, in the Gandhian framework, in terms of two opposing modes of articulation.

எங்களுக்கு ஓட்டுப் போடு, ஆட்சிக்கு வந்தால் இதெல்லாம் செய்வோம் என்பதும், ஓட்டு வாங்கி வந்துட்டேலே, சொன்னதை செய் இல்லையேல் வெளியேறு என்பதாக - நவீன அரசியல் - தேர்தல் அரசியலாக எப்படியோ சுருங்கிப் போய்விட்டது. ஒருவகை reductionism ஆக்கப்பட்டுவிட்டது.

ராவ் எழுதுகிறார், காந்திய புரிதலில் அரசியல் என்பது இதுவும் ஆகும் என்று

Politics may also mean an activity generating from and by the people within their socio cultural contexts to solve their own problems without the State or to pressurise the State to solve them.

இங்கு தனிநபருக்கான உரிமைகள் எதிர்பார்ப்புகள், அரசாங்கத்திற்கு இருக்கும் அதிகார உரிமைகள் எதிர்பார்ப்புகள் என்பதையும் விட, people’s politics என்பதில் அரசாங்கம்- சமுகம்- தனிநபர் என எல்லோருக்குமான கடமைகளை முன்வைத்து பேசுவது காந்தியின் அறமானது.

முதலில் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் - சோசலிசமாக்கம் - கம்யூனிச ஸ்டேஜ்- அரசு உதிர்ந்து போதல் என்கிற பேச்சுடன் அனார்க்கிஸ்ட்

பகுனின் முரண்பட்டார். அரசை நன்றாக அதிகாரத்துடன் கொழுக்க வைத்துவிட்டு, மக்களை முற்றிலும் அதைசார்ந்தவர்களாக ஆக்கிவிட்டு, அரசு உதிர்வது எப்படி என்கிற கேள்வி பகுனினுக்கு வந்தது. காந்திக்கு state a soulless machine என்கிற புரிதல் , மிக ஆரம்பத்திலேயே பிரிட்டிஷ் அரசாங்க அதிகாரங்களை, மேற்கின் statism சிந்தனைகளைப் பார்த்து வந்ததால் , அவர் மக்களை அரசாங்கத்திடமிருந்து எவ்வளவு தள்ளி அழைத்துப் போக முடியுமோ அந்த அளவிற்கு constructive plan and activities என நகர்த்தப் பார்த்தார். அது தான் மக்களுக்கான ஜனநாயக பாதையை அகலப்படுத்தும் என நினைத்தார்.

இதற்கு வேறு ஒரு rider போட்டார். அதை நான் spiritualise politics என்பதாக புரிந்து கொள்கிறேன். இங்கு ராவ் எழுதுவதும் புரிதலை மேம்படுத்த உதவும். காந்தி spiritualise politics எனச் சொன்னார்- அரசியலை இந்து மயமாக்கு, முஸ்லீமயமாக்கு, சீக்கியமயமாக்கு என தனி மதமாக்கல் பற்றி அறவே பேசவில்லை. அதை செய்பவர்களை அவர் ஏற்கவும் இல்லை. அரசை religious dogmatism கொண்ட நிருவனமாக மாற்ற அவர் ஏற்கவேயில்லை. அவர் சொன்னதெல்லாம் உங்கள் அரசியலை எக்கணமும் நெறிசார்ந்து வைத்துக்கொள்ள முயல்தல் குறித்தே.. அவர் 1915 லேயே குறிப்பிட்டது

The message is to spiritualise political life and the political institutions of this country.

ராவ் தருகிற விளக்கம் கூடுதல் புரிதலுக்கு பயன்படலாம் . அரசாங்கம், சமுகம் , தனிநபர் என்பதில் ஆன்மீக அரசியல் எனப்படுவது காந்தியப் புரிதலில் running ourselves according to the universal principle of love , truth and non violence which underlie all concrete religions- that is grounding of political life In a moral matrix.

எவ்வளவு அழகான புரிதல்- நடைமுறைக்கு பெருஞ் சோதனையாக நிற்பது எனினும்- grounding of political life in moral matrix…

29-6-2026

june 30 2026

அஸ்கர் அலி நூல்-3

மதமும் அரசியலும்- சாவர்க்கர்- காந்தி

அஸ்கர் அலி எடிட் செய்த Gandhi and Communal Harmony குறித்த 3 வது பதிவை இன்று செய்கிறேன். முதல் பதிவில் அஸ்கர் அலி பற்றியும், எம் என் ஸ்ரீனிவாஸ் பார்வையில் காந்தியும் மதமும் குறித்து கொஞ்சம் சொல்லியிருந்தேன். அது ஓரளவிற்கு கவனம் பெற்றது. இரண்டாவது பதிவு ஆழமான மார்க்சிய அறிஞர் கே ராகவேந்திர ராவ் குறித்த பதிவு. அது போய் சேர்ந்ததாக உணரமுடியவில்லை. இன்றைக்கான

மூன்றாவது பதிவும், நிலவும் இந்திய அரசியல் தட்பவெப்ப நிலையில் , ஆழமாக எடுத்துக்கொள்ளப்படவேண்டிய ஒன்று.

பேரா ரகுராமராஜு அவர்களின் Relation between Religion and Politics- சாவர்க்கர் - காந்தி பார்வைகளை ஒப்பிட்டு பேசக்கூடிய கட்டுரை. பேரா ராஜூ அவர்களின் மிக ஆழமான புரிதலை வெளிப்படுத்தும் கட்டுரை. ராஜூ அவர்கள் திருப்பதி சார்ந்து இயங்கிய தத்துவ அறிஞர். மேற்கு மற்றும் கீழைத்தேய தத்துவ, அரசியல் ஒப்பீடுகளை மேற்கொண்டவர். ரகுராமராஜூ அவர்கள் எடிட் செய்த Debating Gandhi மிக மிக ஆழமான நூல். அதை சில ஆண்டுகளுக்கு முன்னர் காந்தி கல்வி நிலையத்தில் ஒரு மணிநேரம் அறிமுகப்படுத்தி உரையாற்ற வாய்ப்பு கிடைத்தது.

ராஜூ அவர்கள் ஹிந்துத்துவா என்கிற அரசியலை மதம் சார்ந்து எவ்வாறு சாவர்க்கர் கட்டமைக்க விழைகிறார் என்பதுடன், தேசிய கலாச்சாரம் என்று சொல்லி மேற்கு தத்துவத்தை அவர் எப்படி அப்பிக்கொண்டார் என்பதை விளக்குகிறார். காந்தி எவ்வாறு இந்த பண்டைய கலாச்சாரம் என்கிற பெயரில் விளைந்த மதம் சார்ந்த தீங்குகளையும், மேற்கின் நாகரிக தீங்குகளையும் ஒருசேர எதிர்கொண்டு, இந்திய அரசியல் திசைவழியை நெறிப்படுத்த விழைந்தார் என்பதையும் பேசுகிறார். மூன்றாவது அம்சமாக , சில லிபரல்களும், முற்போக்காளர்களும் சாவர்க்கர், காந்தி பேசியவற்றை வெறும் religious reactionary அம்சங்களாக சுருக்கி புரிந்து கொள்கின்றனர் , என ராஜூ பேசுகிறார்.

பேரா ராஜூ சாவர்க்கரின் இந்துத்துவாவை சுருக்கமாக புரிய வைக்கிறார். மதத்தையும் அரசியலையும் பிரிப்பதை சாவர்க்கருமே ஏற்கவில்லை. அது தேசிய வலிமைக்கும் ஒற்றுமைக்குமான அரசியல்

கட்டுமான பாதை என சாவர்க்கர் சொல்வார். Hinduise all politics and militarise Hindudom என்றவர். காந்தியோ spiritualise political life and political institutions என்றவர். இந்த இரண்டிற்குமான வேறுபாட்டை உள்வாங்கினால் தான், இந்திய அரசியலின் தன்மையை செல்ல வேண்டிய திசையை புரிந்துகொள்ள இயலும்.

சாவர்க்கர், வேதங்களை இந்து ஏற்கிறானோ இல்லையோ- போர் ஆயுதங்களை ஏற்று பயிற்சி பெற்று மஸ்குலின் ஆக்க விழைந்தவர். பிரிட்டிஷ், இஸ்லாம் வருவதற்கு முந்திய வரலாற்றின் சொந்தக்காரர்களாக, ஏக இந்திய பரப்பிற்கும் அவ்வரலாறு பொதுமையானதாக இந்துத்துவா காட்ட விழையும். 1000 ஆண்டு விடுதலைப்போர் என்று கட்டுமானம் செய்திடும். Fatherland Holy land என்கிற நிபந்தனையை கட்டாயமாக்கும். பெரும்பான்மை இந்துக்களை அனுசரித்து வாழ்வதே சிறுபான்மை இஸ்லாமியர்க்கு ஆபத்தில்லா வாழ்க்கை முறை என அது concession போல் பேசும். Effective way to save themselves is to befriend the majority என அறிவுரை அல்லது எச்சரிக்கை நல்கும்.

சாவர்க்கர் பார்வையை பேரா ரகுராமராஜூ (இவர் ஆர் பி அய் - பொருளாதார ரகுராம் ராஜன் அல்ல) இவ்வாறு வைப்பார்

Opening passage between religion and politics, also, transporting political elements- power, militancy, closed unity solidarity into the domain of religion and masculinisation of religion. It is also a copy of modernity- totalitarianism, transforming symbols to display power- showing violent God.

ராஜூ அவர்கள் 4 அம்சங்களை லிஸ்ட் செய்கிறார்.

Savarkar repudiated the distinction between religion and politics

Copying west modernity to its use of religion for politics

His Hindutva follows western experience - absence of religious elements but relying on political elements

Injecting political militaristic element into the religion

காந்தி இதற்கு நேர்மாறாக, அரசியல் வாழ்க்கையை ஆன்மீகப்படுத்து என்றார்- நிருவனங்களை மனசாட்சியுடன் தூய்மையாக்கு என்றார். 'அதிகாரம்' நம்மை நாமே தொடர்ந்து சீர் செய்து கொள்ள ஏற்பாடு பாதை என புரிந்துகொள் என்றார். அதுவே பயணத்தின் முடிவல்ல. Political power a means to reform and not an end itself.

அவர் ராமா என்பார். ஆனால் அதில் வரலாற்று ஒளிவட்டம் பொருத்தி அல்ல. புராணக் கதைகள் சில ஆபத்தானவை. சிறந்த வாழ்க்கைக்கு அவை தேர்வுகளாகா என்றார் காந்தி. ஏன் பலிகள் சடங்கு சம்பிரதாயங்கள் என்றார். மானுட உறவுகள் தொழில் சார்ந்து இருக்கலாமே தவிர, உயர்வு தாழ்வு கற்பிதங்கள் ஏன் என்றார். அனுபவத்திற்கும் பகுத்தறிவிற்கும் புறம்பாக மனித உறவை சிதைக்கும் சாஸ்திரங்களை ஏற்க முடியாது என்றார். அதே நேரத்தில் மனித நேயத்தை பேசுகிற நம்பிக்கைகளை ஏற்றார். I do not hold that everything ancient is good because it is ancient, if inconsistent with morality, they fit to be banished from land என்றவர் காந்தி. இதனால்தான் காந்தியை critical traditionalist என அஷிஸ் நந்தி மதிப்பிட்டார்.

காந்தி political, religious, social, economic என அனைத்திலும் மாரல் என்கிற அம்சத்தை இணைத்து integrated approach - indivisible whole என்கிற பார்வையை நடைமுறையாக்க சோதனைகளாக்கினார்.

ராஜு பேசும் இன்னொரு முக்கிய அம்சம் வட இந்திய அனுபவங்கள்படி மட்டுமே 'கம்யூனலிச' புரிதல்கள் இருக்க வேண்டுமா? பல்வேறு மாநிலங்களில் 'கம்யூனலிசம்' எப்படி தொழிற்பட்டது அல்லது ஏற்பாடாகிறது என்கிற விரிவான புரிதல் இந்தியாவில் தேவை என்கிறார். இன்னொரு முக்கிய புரிதல் அவசியம் என்கிறார். அவர் கீழ்கண்ட conventional formulations ஏற்கத்தகுந்ததல்ல என்கிறார்.

Rejecting Gandhian discourse on the ground that it is religious

Portrayal of the ideology of Hindutva as predominantly religious இவை frozen formulations என்கிறார்.

ராஜுவின் ஆய்வில் அவர் பரிந்துரைப்பது- காந்தியின் பார்வைதான் மனிதர் சகவாழ்விற்கான framework. There is a fundamental difference between Gandhi and Savarkar. இங்கு அஷிஸ் நந்தியின் மதிப்பீடும் நின்று பேசக்கூடிய ஒன்று

Gandhi rejected the British as well as the Brahminic- Kshatriya equation between manhood and dominance, between masculinity and legitimate violence and between femininity and passive submissiveness..

பேரா ரகுராமராஜுவின் ஆய்வு மேம்பட்ட புரிதலை தரக்கூடும்...

30-6-2026

